# தமிழரசு

மே, ஜூன் 1985

SL
V..lim N85
N85.5
535..


தமிழரசு
1.5.1985 75 காசு



அண்ணல் அம்பேத்கார்

தோற்றம்: 14-4-1891 = மறைவு: 6-12-1956

# மே நாள் செய்தி



ஏன் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே !

உழைக்கும் வர்க்கத்திற்கே இவ்வுலகம் உரிமையானதென்பதை உணர்த்திய நாள்தான் மே முதல் நாள். அமெரிக்க நாட்டில் உள்ள சிக்காகோ நகரில் 1886 ஆம் ஆண்டுபல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஒன்று கூடி உரிமை முழக்கம் எழுப்பினர். தொழிலாளர் களின் உரிமை வாழ்விற்குத் தங்களுடைய செயற்கரிய தியாகத்தால் அடித்தளம் அமைத் தனர். ரத்தத்தை ஆறாக ஓடவிட்டு, உயிர் களைப் பலிகொடுத்து, ''உழைக்கும் மக்களே உலகின் உண்மையான உரிமையாளர்கள்'' எனும் தத்துவத்தை நிலைநாட்டினர்.

1889-ல் பாரிஸ் மாநகரில் கூடிய சர்வதேச சோஷலிஸ்ட் மாநாட்டில் மே முதல் நாளை உலகப் பாட்டாளி வர்க்கம் உரிமைத் திரு நாளாகக் கொண்டாட வேண்டுமென்று அழைப்பு விடுக்கப்பட்டது. அன்று தொடங்கி மே முதல் நாள் உழைக்கும் வர்க்கத்தின் தியாகத் திருநாளாக உலகெங்குமுள்ள தொழி லாளர்களால் நாடு, மொழி, இனம், மதம் ஆகிய பேதங்களைக் கடந்து கடைப்பிடிக்கப்பட்டு வரு கிறது.

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

''தொழிலாளர் ஸ்தாபனம் மனக்குறையின் மீதும், அதனால் இயற்கையாக ஏற்படக்கூடிய ஆத்திரத்தின் மீதும் ஏற்பட்டுவிடுவதுண்டு. இவை சரியான அடிப்படை அல்ல. ஒருவரின் உழைப்பின் மீது மற்றொருவரின் வாழ்வு அமைக்கப்படும் அநீதியை ஒழிப்போம் என்ற அடிப்படைகளின் மீது கட்டப்பட்டுள்ள தொழில் ஸ்தாபனங்கள் அந்த உன்னதமான லட்சியம் ஈடேற வேண்டுமென்ற நோக்கத்தை உறு துணையாகக் கொள்ள வேண்டும்'' என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலி யுறுத்தியிருக்கிறார்கள்.

தொழிலாளர்களின் ஒற்றுமை, தொழிற் சங்கங்களின் கூட்டு முயற்சி, வெளியாளர் தலையீடும், தலைமையுமில்லாத நிலையில் தொழிலாளர்கள் தாங்களே முன்வந்து நடத்தும் தொழிற்சங்க இயக்கம் இவற்றில் தொழிலா ளரின் பேரம் பேசும் சக்தி வலிவைப் பெறும். அந்த ஒற்றுமையின் வலிவு பேச்சு வார்த்தை களின் வாயிலாகவே கோரிக்கைகள் நிறைவேற உதவி செய்யும்.

நம்மை நாமே ஆண்டு கொள்கிற மக்க ளாட்சியின் வேலை நிறுத்தங்களால் ஏற்படும் இழப்புகள் இறுதியில் உழைக்கும் வர்க்கத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தொழிலாளர்களே! உழைக்கும் வர்க்க உடன்பிறப்புக்களே! உங்கள் ஒற்றுமைதான் உங்களின் வலிமை! உங்களின் போராட்டச் சக்தியைச் சிதறவிடாதீர்கள்! போராட்டச் சக்தியை ஒருமுகப் படுத்துங்கள்! அதைச் சரியான வழியில் பயன்படுத்துங்கள்! போராட்டம் இல்லாமலே வெற்றிகளைக் காண் பீர்கள்.

இன்றைய புதுயுகத் தொழிலாளர் களுக்குத் தங்களைத் தாங்களே தலைமை தாங்கி நடத்திச் செல்லக்கூடிய தகுதியும், திறமையும், அறிவும், ஆற்றலும், ஆண்மையும் உண்டு

சமத்துவச் சமுதாயம் காண்பதே உழைக் கும் வர்க்கத்தின் உண்மையான இலட்சியம் எனும் மூலக் கருத்திற்கு முதலிடம் தாருங்கள்! நம்மைக் காட்டிலும் நலிந்துள்ள நமது உடன் பிறப்புகளை முன்னேற்றக்கூடிய பொருளாதார மாற்றத்திற்கு அடிப்படை அமைத்திடுங்கள்! புதுயுகத்தின் ஈட்டி முனைகளாக, முன்னோடி களாக விளங்கிடுவீர்.

உழைப்போம்! உயர்வோம்! உழைப்பால் உலகை உயர்த்துவோம்! உழைக்கும் மக்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்பதை உலகிற்கு உணர்த்துவோம்! ஒற்றுமையைக் குலைக்கும் தீய சக்திகளை ஒதுக்குவோம்! சமுதாயச் சம தர்மச் சிற்பிகளாக உழைக்கும் வர்க்க உடன் பிறப்புகளே கடமையாற்ற முன்வருவீர்! உழைப்பின் மேன்மையை, உழைப்பாளரின் உயர்வை உலகம் உணரச் செய்வோம்!

உழைக்கும் கரங்கள்-நாளைய புது உலகை உருவாக்கும் கரங்கள் - ஆக்கும் சக்திகொண்ட கரங்கள் என்பதையே வரலாறாக எழுதிக்காட்ட உழைக்கும் வர்க்க உடன்பிறப்புக்கள் அனை வரையும் அழைக்கிறேன். உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் என் உளம் கனிந்த மே நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - சித்திரை 19
மலர் : 15 1-5-1985 இதழ் : 21



# திராவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

**பேரறிஞர் அண்ணா**

தியாகராயர் பெரிய செல்வந்தர்; பணம் படைத்தவர்; தியாகராயர் விரும்பியிருந்தால் வியாபாரத்தின் மூலம் பல இலட்சம் ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தியாகராயர் விரும்பியிருந்தால் சென்னையிலேயே பெரும்பாலான இடங்களை அவர் சொந்தமாக வாங்கியிருக்க இயலும். பணத்தின் மதிப்பு இன்றிருந்ததைவிட அன்று பலமடங்கு உயர்ந்திருந்தது. இன்றைய இலட்சம் அன்றைய ஆயிரம் ரூபாய்க்குச் சமமானது. அத்தகைய காலத்திலே பல இலட்சம் படைத்த அவர், நினைத்தால் சென்னை நகரையே தன் முதலீட்டுப் பணமாக ஆக்கியிருக்கலாம். அவர் கூப்பிட்ட நேரத்திலே பணியாற்ற பல ஆட்கள் அவரிடம் இருந்திருக்கக்கூடும். எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், ஜமீன்தார்கள் உண்டு களித்து உல்லாச வாழ்வு வாழ்ந்து, களியாட்டத்தில் காலத்தைக் கடத்திக்கொண்டு இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பதைப் போல தியாகராயரும் இருந்திருக்க முடியும்.

மேலும் தியாகராயர் விரும்பியிருந்தால், பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் வேலையிலோ, பளிங்கு மண்டபம் கட்டும் வேலையிலோ ஈடுபட்டிருக்கலாம். அவர் விரும்பியிருந்தால் தெற்கிலுள்ள பழனியைப்போல வடக்கே ஒரு பழனியை உண்டாக்கியிருக்கலாம். இவைகளை ஏற்படுத்துவதற்குரிய பணம் அவரிடம் ஏராளமாக இருந்தது. அவர் இவைகளையெல்லாம் பெரிதாக மதிக்கவில்லை. தன்னுடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார்.

திராவிட சமூகத்திலே ஒரு பெரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெறவேண்டுமென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தைவிட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் கருங்குழியும் நிரம்பிய பாதைவழி செல்லத் தொடங்கினார்.

சர் தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழி கோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத்தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.



நம்முடைய அடிப்படைக் கட்டிடம் பலமாக இருக்க வேண்டுமென்று அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். திராவிட இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்.

அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின் கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

எங்கு நோக்கினும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனை மிகுந்த காட்சியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்தமட்டும் அவருக்கு ஒரு குறையுமில்லை. மற்றபிரசாரங்களைவிட அறிவுப் பிரசாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப் போரைத் துவக்கினார். அந்த அறப்போர் இன்று வெற்றி பெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம். இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம்; அரசியல் வாழ்விலே பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விஷயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால் முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பிய பின்தான் மத விஷயத்திலே புக விரும்பினார். முதல் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்தே அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

தியாகராயர்தான் நாம் வெற்றிமேல் வெற்றி பெற வழி காட்டினார். இருட்டறைகளிலும் காட்டு நிலத்திலும் கூட்டம் கூடி இயேசுநாதர் உபதேசத்தைக் கேட்டு உலகம் உயர்ந்தது போல, தியாகராயரின் சொற்கள் தென்னாட்டில் மெள்ள மெள்ள ஏழை எளியோர் குடிசையில் குடிபுகுந்த பின்னர் மாளிகைகளிலெல்லாம் சென்று மக்கள் மன்றத்திலே புதியதோர் எழுச்சியை உண்டாக்கிவிட்டன.

சர். தியாகராயர் புதுமை பல செய்து காட்டினார், அதிலே தலைசிறந்த புதுமைதான் இந்தப் பார்ப்பனரல்லாதார் புரட்சி. அது அபூர்வமான வெற்றியைத் திராவிடருக்குத் தந்தது.

தியாகராயர் நம்மை விட்டுப் பிரிந்தார். ஆனால் அவரது ஞாபகம் நம்மைவிட்டுப் பிரியாது. சர். பி. தியாகராயர் அரும்பாடு பட்டுவளர்த்த கொள்கைகளைக் கடைப்பிடித்து அதனின்றும் வளர்ச்சிபெற்று உயர்ந்தோங்கி வந்திருக்கும் திராவிடர் இயக்கம் வெற்றிமேல் வெற்றி பெறும்.

**(30—6—1950 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தியாகராயர் நினைவுக் கூட்ட உரையிலிருந்து)**





# வெள்ளுடை வேந்தர் சர் பிட்டி தியாகராயர்

சர் தியாகராய செட்டி அவர்கள் 1852 ஏப்ரல் 27ஆம் தேதி பிறந்தார். இவர் தந்தையின் பெயர் திரு. அய்யப்ப செட்டி அவர்கள். அவர், புகழ் வாய்ந்த தோல் வியாபாரி.

1876ல் மாநிலக் கல்லூரியில் பட்டம் பெற்ற , பின் தன் தந்தையின் வியாபாரத்தில் ஈடுபட்டார் தியாகராயர்.

பேரறிஞரான டாக்டர் டி.எம் நாயரும், ஆற்றல்மிக்க பெருந்தகையாளர் சர்.பி. தியாகராய செட்டியாரும் நீதிக்கட்சியை 1916 ஆம் ஆண்டு தோற்றுவித்தனர். தென்னிந்திய நல உரிமைச்சங்கம் என்பதே கட்சியின் பெயர்.

அரசாங்கப்பிரதிநிதிகள், நியமனம் பெற்ற உறுப்பினர்கள் ஆகியோர் உதவியில்லாமலேயே அமைச்சரவை அமைக்கும் அளவிற்கு நல உரிமைச் சங்கம் பெரும்பான்மை பெற்றிருந்தது. சட்டமன்ற நல உரிமைச் சங்கத்திற்கு 'நீதிக்கட்சி' என்ற பெயர் வழங்கிற்று. அப்பெயரே கட்சிக்குக் கடைசிவரை நிலைத்து நின்றுவிட்டது.

நாட்டிலுள்ள எல்லா மாநிலச் சட்டமன்றங்களிலும் சென்னை மன்றம்தான் சிறந்த முறையில் நடைபெறுகின்றது என்று எல்லோராலும் புகழப்பெற்றது. அதனால் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்த பெருமக்களில் பலர், தில்லிப் பாராளுமன்றத்தைப் பார்வையிட்டு பின் சென்னை மன்றத்தையும் பார்வையிட வருவது வழக்கம்.

முழுநேரமும் கட்சி உறுப்பினர்கள் மன்றத்தில் இருக்க வேண்டும். இதிலிருந்து தலைவர் தியாகராய செட்டியாருக்கு மட்டும் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டது.

இவருக்கு முதல் மந்திரி பதவி கிடைக்க வாய்ப்பு இருந்தும் அதை அவர் நிராகரித்தார். அவருக்கு சம்பளம் வாங்க விருப்பமில்லாததும், உடல்நலம் காரணமாகவும் இந்தப் பதவியை நிராகரித்தார். பிறகு அவர் கௌரவத் தலைவராகச் சென்னை மாநகராட்சிக்கு நியமிக்கப்பட்டார்.

மாண்டேகு சீர்திருத்தத்தின்படி முதல்முதலாக மேல்சபையைத் தொடங்கிவைக்க காணாட் பிரபு சென்னைக்கு வந்தார். அப்பொழுது நீதிக்கட்சியின் தலைவர் திவான்பகதூர் பி.தியாகராய செட்டியார் சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்தார். சென்னைத் துறைமுகத்தில் காணாட் பிரபுவை வரவேற்க மாநகராட்சி ஏற்பாடு செய்திருந்தது. அக்காலத்தில் ஆங்கிலேயர் ஏற்படுத்தியிருந்த கட்டு திட்டங்களின்படி காணாட் பிரபுவை வரவேற்கத் துறைமுகத்திற்கு வருபவர்கள் குறிப்பிட்ட முறையில் உடைகள் அணிந்துவர வேண்டும். அதாவது ஒரு தலைப்பாகை, நீண்ட கறுப்புக்கோட்டு, வெள்ளைக் கால்சட்டைகளையே ஒவ்வொருவரும் அணியவேண்டுமென்று கூறினர். சர். தியாகராய செட்டியார் அதை விரும்பவில்லை. 'நான் வழக்கமாக அணியும் தூயவெள்ளை உடையைத்தான் அணிந்து வருவேன். அதுகூடாது என்றால் நான் விழாவில் கலந்து கொள்ள விரும்பவில்லை. துணைத்தலைவர் வரவேற்பார்'' என்று கூறிவிட்டார். அரசினர், அவர் விருப்பத்திற்குப் பணிய வேண்டியதாயிற்று.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை 1920ல் நடத்தப்பட்ட முதல் தேர்தலில் நீதிக்கட்சி ஈடுபட்டபோது காங்கிரஸ் ஈடுபடவில்லை. ஆனால் இதை எதிர்த்து சுயேச்சையாளர்கள் நின்றனர். நீதிக்கட்சி வாகை சூடி வெளிவந்தது.

தேர்தலில் அதிகப்படியான இடங்களைப் பெற்ற நீதிக்கட்சியின் தலைவர் என்ற முறையில் தியாகராசனாரை மந்திரிசபை அமைக்கச்சொல்லி, அப்பொழுது கவர்னராக இருந்த வெலிங்டன் பிரபு கேட்டுக்கொண்டார். தியாகராசனாரோ, தானே முதல் மந்திரியாகாமல், திவான்பகதூர் ஏ.சுப்புராயலு ரெட்டியாரை

**அட்டை சொல்லும் கட்டுரை**

**சர். பிட்டி தியாகராயரின் 134 - வது பிறந்த நாளையொட்டி இந்தக் கட்டுரை இடம் பெறுகிறது**



சர் தியாகராயர் கல்லூரி மாணவர் விடுதிநாள் கொண்டாடப் பட்டபோது (1964-65) கல்லூரி முதல்வர் திரு கே. ராஜ கோபாலன், கல்லூரி தாளாளரும் செயலாளருமான திரு பி.சி. முனிசாமி செட்டி (சர் தியாகராயரின் பேரன்) மற்றும் மாணவப் பிரதிநிதிகளுடன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

முதல் மந்திரியாகவும், ராஜராம ராய நியங்காரை (பனகல் அரசரை) இரண்டாவது மந்திரியாக

வும் ராவ்பகதூர் கே.வெங்கட ரெட்டி நாயுடுவை மூன்றாவது மந்திரியாகவும் சிபாரிசு செய்தார். அவர் கோரியபடி, கவர்னரும் மேற்படி மூன்று தலைவர்களையும் மந்திரிகளாக நியமித்தார். சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரும், ஏ.ராமசாமி முதலியாரும் பாரிஸ்டர் தங்கவேலு பிள்ளையும் அமைச்சர்கள் குழுவின் (கவுன்சில்) காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டனர். சர்.பி.இராஜ கோபாலாச்சாரியார் சட்ட சபைத் தலைவராக கவர்னர் அவர்களால் நியமிக்கப்பட்டார். பதவியேற்ற ஓராண்டுக்குள்ளேயே முதன் மந்திரியாக அமர்ந்த சுப்பராயலு ரெட்டியார் இயற்கை எய்திடவே, அடுத்த மந்திரிசபை, பனகல் அரசர் தலைமையில் அமைக்கப்பட்டது. சர் கே.வி.ரெட்டி இரண்டாவது மந்திரியாகவும், சர். ஏ.பி. பாத்ரோ மூன்றாவது மந்திரியாகவும் நியமிக்கப்பட்டனர்.

1923ல் இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்தது. இதிலும் நீதிக் கட்சி வெற்றி பெற்றது. முதல் மந்திரி சபையில் தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருந்து வந்ததை உணர்ந்த தியாகராசனார், இரண்டாவது மந்திரி சபையில் பனகல் அரசர் தலைமையில் சர்.ஏ.பி.பாத்ரோ இவர்களுடன் தமிழரான திவான்பகதூர் டி.என்.சிவஞானம் பிள்ளையையும் சேர்த்தார். சட்டமன்றத் தலைவராக எஸ்.டி.சுவாமிக் கண்ணுப் பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டார். சில மாதங்களில் இவர் இறந்துபோகவே, மன்றத் தலைவராகப் பேராசிரியர் இரத்தின சாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(நீதிக்கட்சி நூற்றாண்டு விழா மலரிலிருந்து)

எத்தனையோ முறை ஏமைகளுக்கு திருமணம் செய்து வைத்திருக்கிறார். 'ஒரு நேரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிறார்.

இவர் வெளிநாட்டு நண்பர்களுடனும், தேசியத் தலைவர்களுடனும் நமது மாநில முக்கிய தலைவர் சர். சி. குமாரசாமி சாஸ்திரி, கௌரவ கூட்டத்தலைவர் ஆகியவர்களிடம் நட்புக் கொண்டிருந்தார்.

''தாது'' வருடத்தில் அரசு ஏழை மக்களுக்கு பற்றாக்குறையின் காரணமாகக் 'கஞ்சி' கொடுத்தனர். அந்நேரத்தில் திரு. தியாகராயசெட்டி அவர்கள் முழுச் சாப்பாடு தினமும் ஏழை மக்களுக்கு அளித்தார். இவர் ஏழை மக்களுக்கு ஆயிரம் விளக்குப் பகுதியில் இலவச உணவு வழங்க மூன்று வருட காலத்திற்கு ஏற்பாடு செய்தார்.

இவரின் சேவையைப்பாராட்டி நமது இந்திய நாட்டின் கௌரவ விருதுகள் — ஆங்கிலேயர்களின் முன்னிலையில் வழங்கப்பட்ட விருதுகள் பல. 1909ல் ராவ் பகதூர் பட்டம் பெற்றார். 1918ல் திவான் பகதூர் பட்டம் பெற்றார். 1921ல் நைட்லுட் பட்டம் பெற்றார்.

சென்னை நகரின் அழகிற்கு இவர் ஒரு முக்கிய பிரதிநிதி. இவரது தொண்டுகளைப் பாராட்டி சென்னை மாநகர மக்களின் கோரிக்கையின்பேரில் இவரது பெயர் கௌரவமாக்கப்பட்டது. இவரது பெயர் கல்லூரிகளுக்கும், பூங்காவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

இவர் கடைசிவரை சென்னை மாநகருக்கு உழைத்ததின் காரணமாக சென்னை ரிப்பன் பில்டிங்கில் இவரது உருவச்சிலை வைக்கப்பட்டுள்ளது. இவர் 1925 ஏப்ரல் மாதம் உயிர் துறந்தார். கிழக்கு மாம்பலம் சென்னை மாநகரில் சேர்ந்ததால் இவரின் நினைவாக அதற்கு 'தியாகராய நகர்' என்றும் பனகல் பூங்காவிற்கு எதிரே உள்ள தெருவிற்கு தியாகராயர் ரோடு என்றும் பெயர் சூட்டப்பட்டது.



# டாக்டர் அம்பேத்கார்

ஆ. முத்துசாமி
வெளியீட்டு அலுவலர்,
செய்தி-மக்கள் தொடர்புத் துறை,

டாக்டர் அம்பேத்கார், தீண்டாமையை ஒழித்திடப் போராடி அவர்களுக்குச் சமுதாயத்தில் சம உரிமை அளிக்கப்பட வழிவகை செய்த சமுதாயச் சிற்பி.

முதன் முதலாகத் தன்னிச்சையான தொழிலாளர் கட்சியையும் பின்னர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பையும் உருவாக்கிய மாமனிதர்.

அரசியல் சுதந்தரம் கிட்டிய பின்னர் வயதுவந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியவர் அம்பேத்கார். சமய எழுச்சியும் சமுதாயச் சீர்திருத்தமும் அவரது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அருந்தொண்டாற்றிய பல்கலைத் திறன்கொண்ட பேரறிஞராகத் திகழ்ந்தவர் அவர்.

அறிவைத் தேடி ஆக்கம் பெறுவதிலும் புத்தகங்களை எப்போதும் படித்துப் பயன்பெறுவதிலும் சிந்தனை செய்து அறிவுத் தெளிவடைவதிலும் நிகரற்ற கல்விமானாகத் திகழ்ந்தார். வரலாறு, பொருளாதாரம், அரசியல், சட்டம், அரசியலமைப்பு ஆகிய துறைகளில் கற்றுத் துறைபோகிய வித்தகர் டாக்டர் அம்பேத்கார். வாழ்நாள் முழுவதும் நூல்களைப் பயில்வதில் காலம் கழித்ததுடன் பல்வேறு மொழிகளை அறிந்த பல்கலை வல்லுநராக வாழ்ந்தவர். சிறந்த நூல்நிலையத்தை நிர்வகித்ததுடன் அங்கேயே உண்டு உறங்கியும் நாட்களைக் கழித்தார். ''என்னைப் போன்ற சமுதாயத்தில் நிராகரிக்கப்பட்டவருக்கு, இப்புத்தகங்களே சீரிய நண்பர்கள்'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். புத்தகங்களே அவரது சீரிய நண்பர்கள். 1953ஆம் ஆண்டு உஸ்மானியா பல்கலைக் கழகம் அவருக்கு எல்.எல்.டி.பட்டம் வழங்கியபோது அவரைச் சிறப்பித்துக் கூறுகையில்,

''பேரறிவாளர்; சமுதாயத் தொண்டர்; சட்டவல்லுநர்களில் தலைசிறந்தவர்; புகழ்பெற்ற சட்டப் பேரவை உறுப்பினர்; இந்தியாவின் தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய மக்களின் நலன் காக்கும் ஒப்புயர்வற்ற சீராளர்'' என்று குறிப்பிட்டுள்ளது.



அம்பேத்காரின் பாட்டனார் மலோஜி சக்பால், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ரத்னகிரி மாவட்டத்தின் மஹார் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். இவரது மகன் ராம்ஜியும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவராவார். இவருக்குப் பதினான்கு குழந்தைகள். இறுதியாகப் பிறந்த குழந்தைதான் டாக்டர் அம்பேத்கார். 1891ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் பிறந்தார். இராணுவத்தில் சுபேதார் மேஜராகப் பணியாற்றி, இராணுவப் பள்ளியில் சுமார் 14 ஆண்டுகள் தலைமை ஆசிரியப் பொறுப்பில் இருந்தவர் இவரது தந்தையார் ராம்ஜி. 1891ஆம் ஆண்டில் ஓய்வு பெற்று மாதம் ரூ. 50 ஓய்வூதியம் பெற்று வந்தார். பின்னர் ரத்னகிரி மாவட்டம் டபோலியில் குடும்பத்தினருடன் வாழ்ந்தார். 1894ஆம் ஆண்டில் ரத்னகிரி பொதுப்பணித் துறையில் கிடங்குக் காப்பாளராக மீண்டும் பணியில் சேர்ந்தார்; பின்னர் சதாரா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டார். பதினான்காவது மகனாகப் பிறந்த பீம்ராவ், 1900ஆம் ஆண்டில் சதாராவில் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தார். பள்ளியில் இவரது பெயர், பீவராம்ஜி அம்பாவாடிகார். சதாரா உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போது அம்பேத்கார் என்னும் பெயருடைய ஆசிரியர் ஒருவர் பீம்ராவ்மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்த காரணத்தால், இந்த ஆசிரியருக்கு மரியாதையும் மதிப்பும் செலுத்தும் வகையில் பீம்ராவ், தனது பெயரையும் அம்பேத்கார் என்று மாற்றிக் கொண்டார்.

அம்பேத்கார் பள்ளிப் பருவத்திலேயே தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டார். பள்ளியில் தீண்டத்தகாதவர் வரிசையில் அமர்த்தப்பட்டார். பிற சாதி மாணவர்களுடன் கலந்து விளையாடவும் உண்ணவும் அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் சமஸ்கிருதம் கற்கத் தடை செய்யப்பட்டனர்; எனவே, பர்ஷியன் மொழியை இரண்டாவது மொழியாக அம்பேத்கார் பயின்றார்.

1904ல் சதாராவில் ராம்ஜி மேற்கொண்ட பணி முடிவுற்றமையால் பம்பாய் நகருக்குக் குடிவந்தார். பம்பாயில் எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் அம்பேத்கார் சேர்ந்து பயின்றார். 1907ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன்தேர்வில் தேர்ச்சி பெற்றார். இவர் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது அதாவது 14ஆம் வயது எய்தியபோது ராமாபாய் என்னும் ஒன்பது வயதுச் சிறுமியை மணந்தார்.

பரோடா மகாராஜா சயாஜி ராவ் முற்போக்கு எண்ணமுடையவர்; தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்த மாணவருக்கு மேற்படிப்புக்கு உதவிட முன் வந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அம்பேத்கார் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார். மாதம் ஒன்றுக்கு ரூ. 25 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்பட்டார்.

1912ஆம் ஆண்டில் பி.ஏ.,பட்டமும் பெற்றுத் தேர்ச்சி பெற்றார்.

# இந்தியாவை வளர்ச்சியுறச் செய்வோம்!



மாண்புமிகு இந்தியப் பிரதமர்

## திரு ராஜீவ் காந்தி

இன்று விவேகானந்தரின் 125-வது பிறந்த நாள். அவரது வாக்குகள் இன்றும் நமது இளைஞர்களுக்கும், நாட்டின் வலிமைக்கும், ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் பெரிதும் பயன் தருவனவாக உள்ளன. இன்று நமக்கு முன் உள்ள பொறுப்புகள் பற்பல ஆண்டுகளாக நமது நாட்டின் முன்னின்றவற்றைக் காட்டிலும் மிகுதி. உலகின் இன்றைய நிலைமையை நீங்கள் அறிவீர்கள். நமது நாட்டிற்குள் இருக்கும் சூழ்நிலைகளும் உங்களுக்குத் தெரியும். இவற்றைத் தாண்டி இந்தியாவை ஒற்றுமைப்படுத்த நாம் பாடுபட வேண்டும். பாரபட்சம், சாதி மத வேறுபாடுகள், மண்டல வேறுபாடுகள், மொழி வேறுபாடுகள் ஆகியவற்றிற்கு மேலாக ஒன்றுபட்ட வலிமைமிக்க இந்தியாவை உருவாக்க நாம் உயர வேண்டும்.

சமீப காலத்தில் இந்திய இளைஞர்களிடையே புதுமையான எழுச்சி தோன்றியுள்ளது. அது வலிமைப்படுத்தப்பட்டு முன்னணிக்கு இட்டுச் செல்லப்பட வேண்டும். இளைஞர்கள் எப்போதும் பொறுமையற்றவர்கள்; அதாவது உடனடியாக முடிவுகளை எதிர்நோக்குபவர்கள். நாம் கடுமையாக உழைத்து முடிவை அடைய வேண்டும். இந்தியா தனது வளர்ச்சியின் முதல் பகுதியைக் கடந்து விட்டது.

இப்போது நாம் இரண்டாவது கட்ட வளர்ச்சியைத் தொடங்கி இருக்கிறோம். நாம் நிறைவேற்றியுள்ளனவற்றை மதிப்பிட்டாக வேண்டும். நமது முன்னேற்றத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் செய்த தவறுகளைக் கண்டறிந்தாக வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் மேலும் முன்னேற நம்மை நாமே திருத்திக் கொள்ளமுடியும். இன்றைய நமது இளைஞர்கள் செயல் - முடிவுகளை எல்லாத் துறைகளிலும் எதிர்நோக்கிக் கடுமையாக உழைத்தாக வேண்டும். நமது இளைஞர்கள் வலிமையை ஒன்றுபடுத்த வேண்டும். இன்றைய இந்தியாவில் 71 சதவீத மக்கள் தொகை 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களாகும். இந்த இளைஞர்களின் இந்தியா, வளரும் வலிமைமிக்க நாடாக மிளிர அடுத்த நூற்றாண்டை எதிர்நோக்குகிறது. இன்றிலிருந்தே நாம் செயல்பட்டால் அடுத்த 10 அல்லது 15 ஆண்டுகளில் நாம் நமது குறிக்கோளை அடையத் தயாராகிவிடுவோம். நாம் உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்தியா நமது வழக்கமான வழிகளில் அன்று. அவை நம்மை பல்வேறு நடைமுறைகளிலும் இருத்துகின்றன. தலைக்குமேல் பெரும்பளுவைச் சுமத்துகின்றன. அவற்றை நாம் இனிமேலும் சுமந்து கொண்டு செல்ல முடியாது.

கடந்த சில வாரங்களில் நாட்டின் முன்னிற்கும் பல சிக்கல்களைப் பார்க்கிறேன். அவற்றில் தலையான பிரச்சினை ஒழுங்கு. தெருக்களிலும் சாலைகளிலும் ஒழுங்கு, பொது இடங்களில் ஒழுங்கு, உயர் நிலைகளில் ஒழுங்கு, மைய அரசு, மாநில அரசுத் துறைகளிலும் ஒழுங்கு, இப்படி எல்லாப் பகுதிகளிலும் எல்லா இடங்களிலும் ஒழுங்கில் நாம் கண்டிப்பாய் இருக்க வேண்டும். ஒழுங்கை நிலைநாட்ட நம்மால் முடியாவிட்டால், நம்மால் முன்னேறவே முடியாது.

தீட்டப்படும் நமது புதிய திட்டங்கள் இளைஞர்களை உருவாக்குவதாகவும், இந்தியப் பண்பாடு, இந்தியக் கலாச்சாரம், இந்திய உடைமைகள் ஆகியவற்றை உருவாக்கும் இளைஞர் பண்புகளை உருவாக்குவதாகவும் அமையும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். இளைஞர்களின் உடல் வலிமையும் உடல் நிலைமையும் முன்னேறுகின்றதா என்பதை கவனிக்க வேண்டும். விவேகானந்தர் சொன்னதுபோல உள்ளம் மட்டுமன்று; உரம் மிக்க உடல் துணையோடு கூடிய உள்ளம், அதுதான் இன்றியமையாதது. நமது இளைஞர்களின் உடல் திறத்தை எப்படி உருவாக்குவது? விளையாட்டாயிருந்தாலும் அல்லது எந்தத் துறையாயிருந்தாலும் நமது இளைஞர்கள் பங்குகொள்ளும் ஒவ்வொரு துறையிலும் அவர்களை எவ்வாறு வெற்றி பெறச் செய்வது? வெற்றி பெற வேண்டும் என்ற எழுச்சி தோன்றியாக வேண்டும். அது இன்றைய இளைஞர்களிடம் சற்றுக் குறைவாகவே உள்ளது. ஒரு குறிப்பிட்ட நிலைக்குவளர்ந்து விட்டால் 'நான் எனது பங்கைச் செய்துவிட்டேன்' என்ற சிந்தனையில் ஓய்வெடுக்கத் தொடங்கலாம். ஆனால், இறுதி நிலைமை அடைவதிலேயே மாற்றம் உள்ளது. இது இன்றைய இளைஞர்களிடம் இல்லை. சாதாரண நிலைக்கு மேல், சிறப்பு நிலைக்கு வர நாம் அவர்களை உயர்த்திவிட வேண்டும். தேவைப்படும் போதெல்லாம் நமது இளைஞர்கள் ஒன்றுபட்டு நிற்பதையும், தக்க தருணத்தில் எழுச்சி பெறுவதையும் நாம் பார்க்கிறோம். அவ்வாறு எழுச்சி பெற அவர்கள் தேவையான தகுதிகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். எந்த நாடும் ஏற்காததும், எந்த நாடும் நிறைவேற்றாததுமான அறைகூவல்களை நாம் ஏற்று, முடித்துள்ளதைக் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக நான் பார்க்கிறேன். இது நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அதற்கும் மேலாக நாம் அதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். ஒருமுறை செய்துவிட்டுப் பின்னர் ஐந்து ஆண்டுகளுக்கு ஓய்வெடுத்துக் கொள்வது அல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். தொடர்ந்து நாம் உயர்நிலை அடையப் பணி செய்தல் வேண்டும். அதற்கு இன்றைய இளைஞர்களின் பணி மிகவும் அவசியமானதாகும்.

நமக்கு முன்னர் நாட்டை ஒன்றுபடுத்துவது-நாட்டைச் செழுமையுடன் உருவாக்குவது போன்ற பணிகள் உள்ளன. நமது வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு நாட்டை உருவாக்கும் நேரம் இது. இளைஞர்கள் 21-வது நூற்றாண்டின் வளர்ச்சியை நோக்கி, இந்தியாவை உருவாக்கி அடுத்த நூற்றாண்டுக்குச் செல்லத் தயாராக வேண்டும்.

நீங்கள் நடத்தும் இரண்டு நாள் கருத்தரங்கிற்காக உங்களை வாழ்த்துகிறேன். இளைஞர்களுக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வருவோம். உங்களுடைய உரையாடல்களிலிருந்து மேலும் சில கருத்துக்கள் சில புதிய கருத்துக்கள்-கிடைக்கும். இந்தப் பன்னாட்டு இளைஞர் ஆண்டினை - இந்திய இளைஞர்களின் சுறுசுறுப்பான செயல்பாடு கொண்ட ஆண்டாக மேற்கொள்ள முயல்வோம்.

**(டெல்லியில் இளைஞர் ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு தேசிய அமைப்பை 12-1-85-ல் தொடக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து)**

**தமிழாக்கம் : இளைஞர் விவகாரம் பயிற்சித் துறை**

# மேதினியை விழிக்க வைத்த மே தினம்

—பேரறிஞர் அண்ணா



'வளமையினருகே வறுமை; பலத்தினருகே பயம், இது ஏன்? இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல, கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்கள் அனைவரையும் கதிகலங்க அடித்தது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் காலத்திலிருந்து கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்ஸ் காலத்தின் முன்வரை.

மக்களின் நல்வாழ்வுக்கான ஆராய்ச்சிகளனைத்தும் நம்பிக்கையான முடிவை அளிக்கவில்லை. பெரும்பகுதி வெறும் சொல்லாராய்ச்சியாகவும், வேதாந்த விசாரணையாகவும், சமாதானத்தை முறிக்காத சமரச கீதமாகவும், நாட்டுக்குதவாத ஏட்டுரையாகவும் முடிந்தது.

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை—அடிமை, உயர்ந்தவன்— தாழ்ந்தவன், மதகுரு — பக்தன், மிராசு — உழவன், பிரபு — பணியாள், முதலாளி — தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.

இந்தப் போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள் — முதலாளிகள் கொடுங்கோன்மை வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு, ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது. நலிவுற்ற உள்ளத்தைப் புலியுள்ளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக் கக்கின; மேதினி விழித்தது; மேதினம் பூத்தது.

ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டுதிட்டம் முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்று தொடங்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்!



சென்னை துறைமுகத்தில் ஆங்கர்கேட் கட்டடம் அருகே நிறுவப்பட்டுள்ள டாகடர் அம்பேதகார் முழு உருவச சிலையை மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர் வெங்கட்ராமன் அவர்கள் அம்பேத்காரின் 95-வது பிறந்த நாளான 14.4.85 அன்று திறந்து வைத்தார்.

படிப்பை முடித்ததும் பரோடா அரசுப் பணியில் சிறிதுகாலம் பணியாற்றி, அங்கு நிலவிய சூழ்நிலை மனநிறைவளிக்காமையால் அப்பணியிலிருந்து நீங்கினார்.

1913ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் நாள் அம்பேத்காரின் தந்தையார் மறைவு எய்தினார். இவருக்குப்பெரும் அதிர்ச்சியாக அமைந்தது. பரோடா மகாராஜா அம்பேத்காரை அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் உயர்படிப்பிற்கு அனுப்ப முடிவு செய்தார். 1913ம் ஆண்டு ஜூலை மூன்றாம் வாரம் அம்பேத்கார் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். புகழ்பெற்ற பொருளாதாரப் பேராசிரியர் செலிக்கேன் இவரது ஆசிரியராக இருந்தார். ''பண்டைய இந்திய வர்த்தகம்'' என்ற தலைப்பிட்ட ஆய்வுநூலுக்காக 1915ஆம் ஆண்டு எம்.ஏ., பட்டம் பெற்றார். அம்பேத்கார் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் இருந்த சமயம், அப்போது அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த லாலா லஜ்பத்ராய் அடிக்கடி கல்லூரி நூலகத்திற்கு வருவார். அம்பேத்காரும் அவரும் இந்திய சுதந்தரப் போராட்ட நடவடிக்கைகள் குறித்துப் பேசுவர்.

1916ஆம் ஆண்டில் அம்பேத்கார், கொலம்பியா பல்கலைக் கழகத்தை விட்டு லண்டனிலுள்ள பொருளாதார, அரசியல் பள்ளியில் சேர்ந்தார். படிப்பு முற்றுப் பெறாத நிலையில் அம்பேத்கார் இந்தியா வந்தார். 1917ஆம் ஆண்டில் பம்பாய் வந்து குடியேறினார். 1918ஆம் ஆண்டில் பம்பாய். சிடென்காம் கல்லூரியில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1920ஆம் ஆண்டில் இப்பதவியை விட்டு விலகி, லண்டனில் மீண்டும் சட்டம், பொருளாதாரம் படிக்கச் சென்றார்.

1920, ஜனவரி 31ஆம்நாள் அம்பேத்கார், மூக்நாயக் என்னும் வார இதழைத் தொடங்கி, இந்திய தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை, அவர்களுக்கு சமூகத்தில் இழைக்கப்படும் அநீதிகளைச் சாடினார். ''அதிகாரமும் கல்வி மேம்பாடும் இல்லாமல் பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் எந்த முன்னேற்றமும் அடைய முடியாது'' என்று தெளிவுபடுத்தினார்.

1920, செப்டம்பர் மாதம் லண்டன், பொருளாதார அரசியல் பள்ளியில் மீண்டும் சேர்ந்ததுடன் பாரிஸ்டராகப் பயின்று தேர்ச்சி பெறத் தொடங்கினார். 1922-23ல் ஜெர்மெனியிலுள்ள போன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் படிக்கச் சில காலம் தங்கியிருந்தார்.

டாக்டர் அம்பேத்கார், தனது வாழ்நாளில் மூன்று பெருமக்களை வழிகாட்டியாகக் கொண்டிருந்தார். கபீர், ஜோதிபாபோலி, புத்தர் ஆகியோரின் வழிநடந்து தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்க்க உறுதி பூண்டார். கபீர், அவரைப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தக் காரணமாயிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனிற்குப் பாடுபடும் உணர்வை, எழுச்சியை ஊட்டியவர். ஜோதிபா போலி. புத்த பெருமானின் அறிவுரைகள் அவரைப் பெரிதும் கவர்ந்ததுடன் பிற்காலத்தில் அவர் பௌத்த சமயத்தைத் தழுவுவதற்கும் வழி வகுத்தது.

அம்பேத்கார் மேற்கொண்ட சமூகநலப் போராட்டங்கள், தீண்டத்தகாதவர்களுக்கு, சமயம், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய அனைத்துத்துறைகளிலும் சமத்துவம், சமஉரிமை வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவை. தாழ்த்தப்பட்ட மக்கள், அம்பேத்காரின் தலைமையில் ஓரணியாகத் திரண்டு போராடத் தயாராயினர். தாழ்த்தப்பட்ட சமூகத்தினர், இந்துக்களிலும் வேறுபட்ட தனித்த சமூகத்தினராகக் கருதப்பட வேண்டுமென்று விரும்பினார். சட்டப் பேரவைகளிலும் பிற வகைகளிலும் அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென்று வலியுறுத்தினார்.

1930ஆம் ஆண்டில், இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனில் வட்டமேஜை மாநாட்டைக் கூட்டியது. மொத்தம் 89 உறுப்பினர்களில் 53 பேர் இந்தியாவிலிருந்து சென்ற உறுப்பினர்கள். அம்பேத்கார், ராவ்பகதூர் ஸ்ரீநிவாசன் ஆகிய இருவரும் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாகச் சென்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் போராடிய அம்பேத்கார், அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து அண்ணல் காந்தி அடிகளுடன் சில சமயம் கருத்து வேறுபாடு கொள்ள நேர்ந்தது. காந்தியடிகளை எரவாடா சிறையில் அம்பேத்கார் சந்தித்துத் தனது கருத்துக்களை வலியுறுத்தினார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பிரதிநிதித்துவம்குறித்து 1932, செப்டம்பர் 24ஆம் நாள் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதற்கு வரலாற்றுப் புகழ்மிக்க புனா ஒப்பந்தம் என்று பெயராகியது. தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக அம்பேத்கார் இதில் கையெழுத்திட்டார்.

இந்த ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் அரசும் ஒப்புக் கொண்டது.

புனா ஒப்பந்தத்திற்குப் பின்னர், 1932ல் அனைத்து இந்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினார். பின்னர், இதன் பெயர், ஹரிஜன் சேவக்சங்கமாக மாற்றப்பட்டது. 'ஹரிஜன்' என்ற வார இதழை காந்தியடிகள் தொடங்கினார்.

தாம் பிறந்த சமுதாயம் புறக்கணிக்கப்படுவதையும் ஒதுக்கி வைக்கப்படுவதையும் உணர்ந்த அம்பேத்கார் வீறு கொண்டெழுந்தார். சாதியொழிய வேண்டும் என்று அரும்பாடு பட்டார்.

சாதி ஒழிய வேண்டுமென்றால் கலப்புமணம் ஒன்றினால்தான் அது முடியும் என்று முதன் முதலாக மொழிந்தவர் அம்பேத்கார். அதற்கு எடுத்துக்காட்டாகவும் அவர் திகழ்ந்தார்..

1928ஆம் ஆண்டு பம்பாயிஷ் அரசினர் சட்டக் கல்லூரியின் முதல்வரானார்.

1942ல் கிரிப்ஸ் கமிஷன் இந்தியாவிற்கு வந்தபோது அம்பேத்கார், சர் ஸ்டேபோர்டு கிரிப்ஸ் அவர்களைச் சந்தித்துப் பேசினார். அம்பேத்கார், ராஜா ஆகியோர் கிரிப்ஸ் திட்டங்களினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தீங்கு விளையும் என்று எச்சரித்தனர்.

1942, ஜூலை 2ஆம் நாள் அம்பேத்காரின் பெயர், வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் சேர்க்கப்பட்டு இந்தியர்களின் பிரதிநிதித்துவம் 14ஆக உயர்ந்தது. இந்திய அரசின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராகத் தீண்டத்தக்காத இந்து ஒருவர் நியமிக்கப்பட்டது இந்திய வரலாற்றில் இதுவே முதலாவதாகும். 1942, ஜூலை 20ஆம் நாள், தொழிலாளர் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1946, மே மாத இறுதி வாரத்தில் வைஸ்ராயின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியை விட்டு விலகினார்.

இந்தியா விடுதலை பெற்று முதன் முதலாக மத்திய அமைச்சரவை அமைக்கப்பட்டபோது அம்பேத்கார் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். அரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றது சிறப்பு அம்சமாகக் கருதப்பட்ட காலம். விடுதலைக்குப் பின்னர், அம்பேத்கார் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான எண்ணத்தையும் காந்தியடிகளுக்கு எதிரான கருத்துக்களையும், மறந்து ஒத்துழைப்புத் தந்தார்.

வங்காளத்திலிருந்து அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் பிரிவினைக்குப் பின்னர் இந்த இடத்தை இழந்தார். பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கட்சியால் இப்பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அம்பேத்கார் பண்டித நேருவின் அமைச்சரவையிலிருந்து 1951 செப்டம்பர் மாதம் விலகினார். 1952, ஜனவரியில், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அம்பேத்கார் தோல்வியடைந்தார். மார்ச் மாதத்தில் மாநிலங்கள் அவைக்கு அம்பேத்கார் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமைச்சரவையிலிருந்து விலகிய பின்னர், அவர் எதிர்க்கட்சித் தலைவராகவே பணியாற்றினார்.

சமயம், மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவே கருதினார் அம்பேத்கார். ''மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை. அவனுக்கு மனம் உண்டு. மனத்தினால் சிந்தித்து உண்மை அறிகின்றான்''. ஆகவே, சமய வாழ்க்கையும் மனித வாழ்விற்கு அடிப்படையானதே என்ற கருத்தை வலியுறுத்தினார். 1950ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற முதலாவது பௌத்தர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார். 1954 டிசம்பரில் பௌத்தர்களின் மூன்றாவது உலக மாநாட்டில் கலந்து கொண்டார். இங்குதான் அவர், பௌத்த சமயத்தைத் தழுவும் எண்ணத்தை மேற்கொண்டார். 1956, மே, 24ஆம் நாள் புத்தர் பிறந்த நன்னாளில், தான் (1956 அக்டோபரில்) பௌத்த சமயத்தில் சேரப் போவதாக பம்பாயில் அறிவித்தார்.

1956 அக்டோபர் 15ஆம் நாள், நாகபுரி நகராட்சி மன்றம் அம்பேத்காருக்கு வரவேற்பு அளித்த போது, ''சமூக சீர்திருத்தவாதி, தத்துவஞானி, சிறந்த அரசியல் அமைப்பு நிபுணர்'' என்று பாராட்டுரை தெரிவித்துச் சிறப்பளித்தது. காட்மாண்டுவில் நடைபெற்ற உலக பௌத்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு.

பௌத்தம் சாதாரண சமயம் மட்டுமன்றி சமுதாய வாழ்க்கை முறைகளை வகுக்கும் சீரிய நெறியாகும் என்று அறிவித்தார். பின்னர் டில்லிக்குத் திரும்பி வந்து, தலைலாமாவிற்குச் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

டாக்டர் அம்பேத்கார், தனது பணிகளை மூன்று நிறுவனங்கள் மூலம் வகைப்படுத்திக் கொண்டார். 1945ல் தொடங்கப்பட்ட மக்கள் கல்விச் சங்கம், அதன் கல்லூரிகள் மூலமும், 1953ல் தொடங்கப்பட்ட இந்திய பௌத்த சங்கத்தின் மூலமும் இந்தியக்குடியரசுக் கட்சி மூலமும் தொண்டுகளை விரிவுபடுத்திக் கொண்டார்.

1956, டிசம்பர், 6ஆம் நாள் திருமதி அம்பேத்கார் வழக்கம் போல் எழுந்து பார்த்தபோது டாக்டர் அம்பேத்கார் மீளாத் துயிலில் இருந்தார். உறங்கும் போதே இயற்கை எய்திவிட்டார்.

டாக்டர் அம்பேத்கார் சிறந்த அரசியல் மேதையாகவும் அறிஞராகவும் திகழ்ந்தவர். இந்தியாவிற்குச் சட்ட அமைப்பு [illegible] துடன் மக்களுக்கு உரிமை [illegible] அடித்தளத்தை வகுத்துக் [illegible] தார். இந்திய அரசியல் எ[illegible] யின் வரலாற்றில் அவர[illegible] சியல் பணியும் எழுத்துப் பங்[illegible] யும் இரண்டறக்கலந்[illegible]

## அம்பேத்கார் எழுதிய நூல்கள்

1. ரூபாயின் சிக்கல்-அதன் தேக்கமும் தீர்வும்.
2. பிரிட்டிஷ் இந்தியாவில் மாநில நிதித் தோற்ற வளர்ச்சி
3. தீண்டாதோருக்கு காங்கிரஸ் செய்ய தென்ன?
4. சூத்திரர் யார்?
5. பாகிஸ்தான் அல்லது இந்தியாவின் பிரிவினை
6. மாநிலங்களும் சிறுபான்மையோரும்
7. தீண்டாதோர் யார்?
8. மகாராஷ்டிரம் மொழிவழி மாநிலம்.
9. மொழி வழி மாநிலங்கள் பற்றிய சிந்தனைகள்
10. புத்தரும் அவரது மதமும்
11. இந்து மாதர்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
12. தீண்டாதார் விடுதலை.





சிறந்த முதல் படத்திற்கு ரூ. 50 ஆயிரம், சிறந்த இரண்டாவது படத்திற்கு ரூ. 30 ஆயிரம், சிறந்த மூன்றாவது படத்திற்கு ரூ. 20 ஆயிரம் சிறப்புப் பரிசுக் காண சிறந்த படத்திற்கு ரூ. 25 ஆயிரம்,



சிறந்த குழந்தைகள் திரைப் படங்களுக்குரிய இரண்டாவது, மூன்றாவது பரிசுகளுக்கு தலா ரூ. 5 ஆயிரம், சிறந்த கருத்து விளக்கப் படத்திற்கு ரூ. 5 ஆயிரம், கலைஞர்கள் ஒவ்வொரு வருக்கும் ரூ. 5 ஆயிரம் வழங்கப் பட்டது. இராஜா சாண்டோ நினைவுப் பரிசு பெற்றவருக்கு ரூ. 25 ஆயிரம் வழங்கப்பட்டது.

புதியவர்கள், **காதல் ஓவியம்**, **உறங்காத நினைவுகள்** ஆகிய திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கு தலா ஒரு லட்ச ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

விருது வழங்கிய நிகழ்ச்சிக்குப் பின்னர் மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

''இந்த விழாவில் முதல்வர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று விரும்பிய நேரத்தில் மருத்துவர்கள் தடை விதித்தார்கள். கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில் கண்டிப்பாகக் கலந்து கொள்வேன். அதனால் எந்தக் கஷ்டம் வந்தாலும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன் என்று இங்கு வந்துள்ளார். முதல்வர் அவர்கள், இங்குவந்து ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. இனியும் அவரை இங்கு தங்க வைத்திருப்பது சரியில்லை என்பதால் இப்போது அவர் இந்த நிகழ்ச்சியிலிருந்து விடைபெற்றுச் செல்கிறார்'' என்று அறிவித்தார்.

சில விநாடிகளில் மாண்புமிகு முதல்வர் மேடையிலிருந்து புறப்பட்டார். அவர் சென்ற திசையை மக்கள் வெள்ளமும் கலைஞர் பெருமக்களும் பார்த்துக்கொண்டே இருந்தனர்.

அதன்பின்னர் திரு ஏ.வி.எம். சரவணன், திரு டி.ராமானுஜம் திரு சிவாஜிகணேசன் எம்.பி. ஆகியோ யோர் விருது பெற்றவர்களைப் பாராட்டிப் பேசினர். விருது பெற்றோர் சார்பில் படத் தயாரிப்பாளர் திரு பாளை சண்முகம், நகைச்சுவை நடிகர் திரு வி.கே. ராமசாமி, திரைப்பட இயக்குநர் திரு முக்தா சீனிவாசன், திரைப்பட நடிகர் திரு சிவகுமார் ஆகியோர் ஏற்புரை ஆற்றினர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், திரு நா. கிருஷ்ண பாரதி இ.ஆ.ப நன்றியுரை நவின்றார்.

கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா மக்களுக்கு விருந்து வழங்கும் விழா போல் அமைந்தது என்று குறிப்பிடுவது பொருந்தும்.

**நிகழ்ச்சித் தொகுப்பு**
**தமிழ்ப்பித்தன்**

**நடுப்பக்கத்தில்**

**திரைப்பட விருது வழங்கு விழா தொடர்பான வண்ணப் புகைப் படங்கள்.**





# விருது பெற்ற கலைஞர்கள் — திரைப்படங்கள்

**1982-83** ஆம் ஆண்டிற்கான மாநில விருதுத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட திரைப்படங்கள் மற்றும் கலைஞர் விவரம் :

| | | |
|---|---|---|
| சிறந்த முதல் படம் | : | எங்கேயோ கேட்ட குரல் |
| சிறந்த இரண்டாவது படம் | : | அக்னி சாட்சி |
| சிறந்த மூன்றாவது படம் | : | ஏழாவது மனிதன் |
| சிறப்புப் பரிசுக்கான சிறந்த படம் | : | மூன்று முகம் |
| சிறந்த திரைப்பட நடிகர் | : | திரு. சிவகுமார் (அக்னி சாட்சி) |
| சிறந்த திரைப்பட நடிகை | : | செல்வி சரிதா (அக்னி சாட்சி) |
| சிறந்த திரைப்பட இயக்குநர் | : | திரு. முக்தா சீனிவாசன் (பரீட்சைக்கு நேரமாச்சு) |
| சிறந்த கதாசிரியர் | : | திரு. அருண்மொழி (ஏழாவது மனிதன்) |
| சிறந்த உரையாடலாசிரியர் | : | திரு. பஞ்சு அருணாசலம் (எங்கேயோ கேட்ட குரல்) |
| சிறந்த இசையமைப்பாளர் | : | திரு. எம். எஸ். விஸ்வநாதன் (அக்னி சாட்சி) |
| சிறந்த ஒளிப்பதிவாளர் | : | திரு. சோமேந்திர ராய் (கண் சிவந்தால மண் சிவக்கும்) |
| சிறந்த பின்னணிப் பாடகர் | : | திரு. தீபன் சக்கரவர்த்தி (காதல் ஓவியம்) |
| சிறந்த பின்னணிப் பாடகி | : | திருமதி எஸ். ஜானகி (காதல் ஓவியம்) |
| சிறந்த பாடலாசிரியர் | : | திரு. சிதம்பரநாதன் (தூறல் நின்னு போச்சு) |
| சிறந்த நடிப்பிற்கான சிறப்புப் பரிசு (நடிகர்) | : | திரு. ரஜினிகாந்த் (மூன்று முகம்) |
| சிறந்த நடிப்பிற்கான சிறப்புப் பரிசு (நடிகை) | : | திருமதி சுஜாதா (பரீட்சைக்கு நேரமாச்சு) |
| சிறந்த படத் தொகுப்பாளர் | : | திரு. கிட்டு (அக்னி சாட்சி) |
| சிறந்த நகைச்சுவை நடிகர் | : | திரு. வி.கே. இராமசாமி (பாயும் புலி) |
| சிறந்த நகைச்சுவை நடிகை | : | திருமதி. மனோரமா (பாயும் புலி) |
| சிறந்த ஸ்டண்ட் இயக்குநர் | : | திரு என். சங்கர் (மூன்று முகம்) |

## சிறந்த குழந்தைகள் திரைப்படம்

| | | |
|---|---|---|
| இரண்டாவது பரிசு | : | எங்களாலும் முடியும் |
| மூன்றாவது பரிசு | : | பக்த துருவ மார்க்கண்டேயா |
| சிறந்த கருத்து விளக்கப்படம் | : | தள்ளிப் போட்ட கல்யாணம் |
| இராஜா சாண்டோ நினைவுப் பரிசு | : | திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி |



# திரையுலகுக்கு ஒரு திருவிழா

ஏப்ரல் 13 ஆம் நாள் வள்ளுவர் கோட்டத்தின் அரங்கம் மக்கள் கடலால் நிரம்பி வழிந்தது. சிறந்த திரைப் படங்களுக்கும் சிறந்த கலைஞர்களுக்கும் விருது வழங்கும் விழா தான் காரணம் என்றாலும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள். சிகிச்சை பெற்றுத் திரும்பிய பின்னர் கலந்துகொண்ட முதல் பொது நிகழ்ச்சி என்பதால் வழக்கத்தை விட அதிகமான அளவில் மக்கள் பேரார்வத்துடன் திரண்டிருந்தார்கள்.

திருப்பாற்கடல் சண்முக சுந்தரம் குழுவினரின் நாதஸ்வர நிகழ்ச்சிக்குப் பின்னர் விழா தொடங்கியது.

மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''1982-83ஆம் ஆண்டுக்கான சிறந்த படங்கள் - சிறந்த கலைஞர்கள் ஆகியோருக்கு விருது வழங்கும் விழா, சென்ற ஆண்டே நடந்திருக்க வேண்டும். கலைத்தாயின் தலைமகன் - புரட்சித் தலைவர் விருது வழங்க வேண்டும் என்ற காரணத்தால் நான்கு, ஐந்து மாதம் தள்ளிப் போட வேண்டி வந்து விட்டது. விரைவில் 1983-84, 1984-85 ஆண்டுகளுக்குரிய சிறந்த படங்களையும் கலைஞர்களையும் தேர்ந்தெடுத்து - பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாவின்போது விருது வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

''அத்துடன் சில புதிய பரிசுத் திட்டங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்குமாறு ஆணையிட்டுள்ளார்கள். குடும்பநலக் கருத்துக்கள் சிறந்த முறையில் புகுத்தப்படும் சிறந்த படங்களுக்குப் பரிசு வழங்கப்பட உள்ளது. முதற்பரிசு ரூ. 1 இலட்சம், 2வது பரிசு ரூ. 50 ஆயிரம், 3வது பரிசு ரூ. 25 ஆயிரம் வழங்கப்படும். இதே போல குடும்ப நலக் கருத்துகள் இடம் பெறும் சிறந்த நாடகத்திற்கு முதல் பரிசு ரூ. 15 ஆயிரம் 2ஆம் பரிசு ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.''



தலைமை வகித்த மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழகம் கலைக்கு எந்த நாளும் மிகச் சிறப்பான இடத்தை அளித்து வந்திருக்கிறது. அந்தப் பணியை இந்த அரசும் தொடர்ந்து செய்து வருகிறது. அது மேலும் செம்மையுற்று விளங்க - புரட்சித் தலைவர் ஊக்கம் அளித்து வருகிறார். மக்களின் அரவணைப்பையும் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று 3வது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள நமது முதல்வர் அரசியல் துறையில் சிறந்த இடத்தைப் பெற்றதோடு கலைத்துறையிலும் ஒப்பற்ற இடத்தைப் பெற்றிருக்கிறார்.

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்பவர்கள் கலை உள்ளம் படைத்தவர்களாக இருக்க வேண்டும் என்று பிளேட்டோ கூறினார். அவரது இலக்கியத்துக்கு ஏற்ற இலக்கணமாகப் புரட்சித் தலைவர் திகழ்கிறார்.

''தமிழகத்தில் மதுரை, காஞ்சி, பூம்புகார் போன்ற நகரங்கள் சங்ககாலத்திலேயே கலை மலி மூதூர், விழவு மலி மூதூர் என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

''அரசே கலைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்திருக்கின்றது. கலைஞர்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்ற வகையில் இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் கலைமாமணி பட்டம் வழங்கப்படுகிறது. இதுவரை



தமிழ்நாட்டில் 665 கலைஞர்கள் கலைமாமணி விருது பெற்றுள்ளனர். 133 கலைஞர்களுக்குப் பொற்கிழியும் பதக்கமும் வழங்கப்பட்டிருக்கின்றன. வருங்காலக் கலைஞர்களும் பொதுமக்களும் நினைத்துப் பாராட்டுவதற்காக- சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த 139 கலைஞர்களின் திரு உருவப்படங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

''புகழ் வீசி விளங்கிய கலைஞர்கள் நலிவுற்ற நிலையை எய்தும்போது அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மாதம் ரூ. 150 உதவித் தொகை அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த வகையில் 1726 கலைஞர்கள் மாத ஓய்வூதியம் பெறுகிறார்கள்.

''பேரறிஞர் அண்ணாவால் அடையாளம் காட்டப்பட்டவர் புரட்சித் தலைவர். நடிகர் திலகமும் அண்ணாவால் அறிமுகம் செய்யப்பட்டவர்தான். நடிகர்களை அரசியலில் பயன்படுத்திய திறமை அண்ணாவுக்கு உண்டு. கலை கலைக்காக மட்டுமல்ல— அதுபோல் நடிகர்கள் நடிகர்களுக்கு மட்டும் இருக்கக்கூடாது. அவர்கள் நாட்டுக்குப் பணிபுரிய வேண்டும்.

''மக்களை உருவாக்கச் சிறந்த சாதனம் திரைப்படம்தான். ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் நல்ல கோட்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு - பிரச்சாரம் செய்வதற்கு - மக்களிடம் ஆதரவு திரட்டுவதற்கு - திரைப்படங்களைப் பயன்படுத்துகின்றன.

''மையக் கருத்து-மையக் குறிக்கோள் மக்களின் உள்ளங்களை செம்மைப்படுத்த வேண்டும்— சீர்படுத்த வேண்டும் - வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும். குறிக்கோள் இல்லாத நாடகம், திரைப்படம் பயன்படமுடியாது. கலைஞன் என்பவன் மிக நுணுக்கமானவன். சாதாரண மனிதர்களில் இருந்து மாறுபட்டவன்; வேறுபட்டவன். மக்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பது-மக்களை இழுக்க வல்ல கருவி கலைதான். அதன் மூலம் நாட்டு மக்களின் தரத்தை உயர்த்த முடியும்.

''குடும்பநலக் கருத்துக்களை திரைப்படங்களில் புகுத்தவேண்டும். வலிந்து புகுத்தச் சொல்லவில்லை. எங்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கெல்லாம் புகுத்தலாம்''.

சிறந்த திரைப்படங்களையும் கலைஞர்களையும்தேர்ந்தெடுத்த பத்துப்பேர் கொண்ட குழுவின் தலைவரும் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியுமான திரு என். டி. சிங்காரவேலு தமது உரையில் தெரிவித்தார்:

''நாடகக்கலையின் மூலம் நாட்டின் கலையுணர்வையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள முடிகிறது. புராணங்கள், இலக்கியங்கள் படித்து ஓரளவு தெரிந்து கொள்ளலாம். ஆனால் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் சாதனம் திரைப்படமாகும்.

''சிறந்த படங்களைத் தேர்ந்தெடுக்கும் பணி கடினமானது. இதில் நாங்கள் விருப்பு வெறுப்பற்ற முறையில் பணியாற்றியிருக்கிறோம்.

''மாதர்களின் பெருமையை உணர்த்தும் வகையில் திரைப்படங்கள் தயாரிக்கப்படவேண்டும். நாமும் வாழ வேண்டும். நமது சமுதாயமும் வாழவேண்டும் என்ற கருத்துக்கள் திரைப்படங்களில் இடம் பெறவேண்டும்''.

சிறந்த படங்களுக்கு ஒரு லட்ச ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்படி படங்களைத் தேர்ந்தெடுத்த அறுவர் குழுவின் தலைவரான முன்னாள் நீதிபதி திரு பி. வேணுகோபால் தெரிவித்ததாவது:

''படங்கள் நல்ல கருத்தை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்; குறைந்த செலவில் படம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். புதியவர்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற விதிமுறைகளின் படி நாங்கள் திரைப்படங்களை ஆய்வு செய்து 3 படங்களைத் தேர்ந்தெடுத்தோம்.

''1978ஆம் ஆண்[illegible] இந்த நிதி உதவித் திட்[illegible] தமிழக அரசு செயல்ப[illegible] கிறது. மைய அரசு சிற[illegible] களுக்குப் பரிசு வழங்[illegible]. அண்டை மாநிலங்களிலும் [illegible] படங்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசு வழங்கப்படுகின்றது. ஆனால் சிறந்த படத்திற்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் தமிழ்நாடு ஒன்றில் தான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தமிழக முதல்வர் பரோபகார சிந்தையுள்ளவராக-வள்ளலாக இருப்பது தான் இதற்குக் காரணம்''.

அடுத்து, சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கும் சிறந்த கலைஞர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதக்கம் அணிவித்து-சான்றிதழை அளித்து - விருது வழங்கினார். ஒவ்வொரு கலைஞருக்கும் விருது அளிக்கும் போது மாண்புமிகு முதல்வர் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார். விருது பெற்ற கலைஞர்களில் மிகப்பலர் கலைத்தாயின் மூத்த புதல்வரான மாண்புமிகு முதல்வர் அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கிய காட்சி காண்போரை மெய் சிலிர்க்க வைத்தது.

# தொழிலாளர் குடும்பநலம்



**எஸ். ராஜாசுப்பிரமணியம்,**
**ஆணையர்,**
**தொழிலாளர் நலத்துறை.**

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாக்னசைட் பிராடக்ட்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களின் பணிக்கொடை தொடர்பான ஐந்து ஆண்டுக் காலப்பிரச்னைக்கு அண்மையில் ஒரு தீர்வு ஏற்பட்டது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க. ராஜாராம் மற்றும் தொழில் துறை அதிகாரிகள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள், கம்பெனியை வைத்திருந்த தனியார் நிறுவன நிர்வாகத்தினர் ஆகியோர் முன்னிலையில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போதே இந்த உடன்பாடு ஏற்பட்டது.

புதுடில்லியில் 1981 ஆம் ஆண்டு மே மோதம் தலைமைத் தொழிலாளர் கமிஷன் முன்பு ஏற்பட்ட உடன்பாட்டின்படி, தொழிலாளர்களின் பணிக்கொடையாகத் தனியார் நிறுவனம் 54 லட்சம் ரூபாய் தர ஒப்புக்கொண்டது. தற்போது முதல் தவணையாக 27 லட்சம் ரூபாயை 15 நாட்களிலும், இரண்டாவது தவணையை ஆறு மாத காலத்தில் தரவும் அது சம்மதித்துள்ளது.

மீனவர்களுக்குத் தமிழக அரசு அமல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கோவேந்தன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்கீழ்க்கண்டுள்ளவாறு தெரிவித்துள்ளார்:

1978ஆம் ஆண்டிலிருந்து மீனவர் துயர்துடைப்பு நிவாரண நிதி செயல் படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ், கடலில் மீன் பிடிக்கும் அல்லது சங்கு குளிக்கும் மீனவர் தொழிலில் ஈடுபட்டு இருக்கும்போது இறந்தால், அவர்கள் குடும்ப நிவாரணத்திற்கு ரூ. 5 ஆயிரம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

மேற்கூறப்பட்ட திட்டத்திற்குப் பதிலாக, மத்திய அரசு பரிந்துரைத்துள்ள ''மீனவர் விபத்துக் காப்பீடு'' திட்டத்தைத் தமிழக அரசு அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு ரூ. 15 ஆயிரம் வரையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக அவர்கள் செலுத்த வேண்டிய வருடாந்திர பகுதிக் கட்டணம் ரூபாய் 12 மட்டுமே. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர் ஒருவர் மரணமடைந்தால் அல்லது ஈடு செய்ய முடியாத உடல் ஊனம் ஏற்பட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ. 15,000 வழங்கப்படும்.

அவ்வாறின்றி அவரது உடலில் ஏதாவது ஒருபகுதியில் நிரந்தர ஊனம் ஏற்பட்டுவிட்டால் ரூ. 7,000 வழங்கப்படும். இத்திட்டத்தில் மீனவர்கள் வருடாந்திர பகுதிக் கட்டணமாகச் செலுத்தும் ரூ.12-ல் பாதிப் பணம் ரூ.6 மத்திய அரசும், மீதி ரூ. 6-ஐ மாநில அரசும் காப்பீடு செய்துள்ள மீனவர்களுக்காகச் சரிபாதியாக மேற்கொள்ளும்.

இத்திட்டத்தில் உள்நாட்டு மீனவர் மற்றும் கடல் மீனவர் சங்கத்தில் உறுப்பினராக உள்ள மீனவர் மட்டுமே சேரத் தகுதியுள்ளவர் ஆவார்கள். தமிழகத்தில் மீனவர் சங்கங்களின் இன்றைய நிலவரப்படி ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 264 மீனவர்கள் உறுப்பினராக உள்ளனர். இவர்களில் 37,666 மீனவர்கள் 1.1.84 முதல் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளார்கள். மீதமுள்ள 75,598 மீனவர்கள் 1.7.'84 முதல் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளார்கள்.

சிறுவிவசாயிகள், கைவினைஞர்களுக்கான இழப்பு ஈட்டுத் திட்ட விவரம்:

8.3.'85 அன்று சட்டசபை கூட்டுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் குரானா அவர்கள் அறிவிப்பு:

கடந்த ஆண்டில் உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோரது நலனுக்காக அளிக்கப்பட்ட இழப்பு ஈட்டுத் திட்டத்தின்படி அத்தொழிலாளர்கள் பணியில் ஈடுபடும்போது இறக்க நேரிட்டால் அளிக்கப்படும் இழப்பு ஈட்டுத்தொகை ரூ.5,000 லிருந்து ரூ.10,000 மாக உயர்த்தப்படும்.

1984 ஆகஸ்டு 15ஆம் நாள் நமது முதலமைச்சர் அறிவித்தபடி உழவுத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், சிறுஉழவர்கள் சொற்ப நில உழவர்கள், ஏனைய தொழிலாளர்கள் ஆகியோருக்கான காப்புறுதி ஓய்வு கால நலத்திட்டம் விரிவான அடிப்படையில் செயற்படுத்தப்படும்.

ஏற்கனவே இதற்கென்று 167 தனிவட்டாட்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக சந்தாத்தொகை வசூலிக்கப்படும். இதற்கென காலவரம்பும் நீட்டிக்கப்பட்டது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மைய அமைப்புகளாகப் பணியாற்றும் வகையில் வலுப்படுத்தப்பட்டு விரிவு படுத்தப்படும்.

மூடிக்கிடக்கும் கோவை காளிப்பட்டி பத்மா ஆலைத் தொழிலாளர்கள் 155 பேர்களுக்குத் தலா ரூ. 200, 1.3.'85ந் தேதி வழங்கப்பட்டது.

இதில் யாரையும்குறைசொல்ல முடியாது!

ஏன் இத்தனை தாமதம்? யார் இந்தத் தாமதத்திற்குப் பொறுப்பு?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்வதும் சற்றுச் சிரமம்தான். ஏனென்றால் பிரச்சினை அத்தகையது!

இன்று நேற்றல்ல-தொடர்ந்து பல ஆண்டுகளாக இருந்து வந்த பிரச்சினை!

# சைதை வட்டம் சாதனை படைக்கிறது



காணி நிலம் வேண்டும் என்று பாரதியார் பாடினார்.

கிராமப்புறத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இப்படிப் பாடியது சரி. ஆனால் நகர்ப்புறத்து மக்களுக்கு அல்லது நகரத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் சாதாரண மக்களுக்கு காணி நிலம் என்று சொன்னால் புரியாதது மட்டுமல்ல, கனவிலும் நடவாததும் ஆகும்.

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அல்லது தேவையெல்லாம் சின்னஞ்சிறியதாக வீடு கட்டிக் கொள்ளப் போதுமான ஒரு மனை தான். வாய்க்கும், வயிற்றுக்கும் போதாத வருவாய் உள்ளவர்களுக்கும் சரி, அல்லது வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி மாதா மாதம் ஐம்பது, நூறு என்று சேமிக்கும் அளவுக்கு சக்தி உள்ளவர்களுக்கும் சரி, ஒரு பெரிய லட்சியம் சொந்தமாக ஒரு வீடு. அதற்குத் தேவை ஒரு மனையோ-அரை மனையோ நிலம்.

இந்த மனையை வாங்குவதற்காக அவர்கள் எத்தகைய இன்னல்களையும் தாங்கிக் கொள்ளத் தயார்! சாப்பாட்டுச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். உடுத்துவதற்குத் துணிமணிகள் வாங்கிக் கொள்ள முடியாது. பொழுது போக்குக்கு ஒரு சினிமா-ஓய்வு நேரத்து உல்லாசம் இதற்கெல்லாம் வழியில்லை. இருப்பினும் அவர்களுக்கு அது லட்சியமில்லை.

அவர்களுக்குத் தேவை, ஒரு மனை.

சரி, எப்பாடுபட்டாவது மனையை வாங்கிவிட்டாலும் வீடு கட்டுவதற்குப் பணம்? செங்கலும், மணலும், சிமெண்ட்டும் செம்பொன்னின் விலையைப் போல நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரும் இந்த நாளில் சிறிதாக ஒரு அறை கட்டுவதென்றாலும் எத்தனையோ ஆயிரங்கள் தேவை. அதற்கு எங்கே போவது?

இதைப்பற்றியும் கூட அவர்களுக்குச் சிந்தனை இல்லை. மனையை முதலில் வாங்குவோம். மற்றவற்றைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

இந்த வேகத்தின் விளைவு?

செங்கை மாவட்டம் சைதை வட்டத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கிவிட்டது.

சென்னை நகரம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

அந்த வளர்ச்சி பெரும்பாலும் சைதை வட்டத்தில் அடங்கிய நகரச் சுற்றுப்புறத்தில் உள்ளது.

விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றம் செய்யப்பட்டு-விற்பனையாயின. அப்படி வீட்டு மனைகளாக மாற்றுவதற்கு என்னென்ன சட்டரீதியான -நில உடைமை சம்பந்தமான பணிகளைச் செய்ய வேண்டுமோ, அவற்றை உடைமையாளர்கள் செய்யவில்லை. விற்றவரைக்கும் வியாபாரம், கிடைத்தவரைக்கும் லாபம் என்ற அடிப்படையில் நிலங்களைக் கூறுபோட்டு மனைகளாக்கினார்கள்.

மனை வாங்கவேண்டுமென்று காத்திருந்தவர்களோ 'இந்தச் சமயம் விட்டால் மறு சமயம் வாய்ப்பதரிது' என்ற எண்ணத்தில் நில அளவுகள் -எல்லைகள் ஆகியவற்றைக் கூட முழுமையாகத் தெளிவுபடுத்தி நிர்ணயித்துக் கொள்ளாமல் பணத்தைக் கொடுத்து - பத்திரம் பதிந்து மனைக்குச் சொந்தக்காரர்களாக ஆவதிலேயே குறியாக இருந்துவிட்டார்கள்.

ஆனால் பத்திரம் பதிந்துவிட்டால் மட்டும் போதுமா?

நிச்சயமாக இல்லை.

பட்டா தான் முக்கியம். அது கைக்கு வந்தபிறகு தான் நிலமோ அல்லது வீட்டு மனையோ ஒருவருக்குச் சொந்தமாகிறது. அரசிடமிருந்தோ, அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தோ கடன் வாங்குவதென்றால் பட்டா

**டி. கே. டி. துரைராஜன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**



34 பேர் ஆளியாறு நகரிலும், 7 குடும்பத்தைச் சேர்ந்த 34 பேர் அவிநாசியிலுள்ள சிந்தாமணி திரையரங்கிலும் தங்கவைக்கப் பட்டிருக்கிறார்கள்.

மூன்றாவது கட்டமாக முப்பது குடும்பத்தைச் சேர்ந்த 120 நபர்கள் 10.3.85 அன்று கோவை மாவட்டத்திற்கு அழைத்து வரப்பட்டு, 16 குடும்பத்தைச் சேர்ந்த 59 பேர், கோவை சிவானந்தா காலனி சத்துணவு மையத்திலும் 8 குடும்பத்தைச் சார்ந்த 37 பேர் கடையாம் பாளையத்திலுள்ள ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்திலும், 6 குடும்பத்தைச் சேர்ந்த 24 பேர் அவிநாசியிலுள்ள சிந்தாமணி திரையரங்கிலும், தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்திற்கு மூன்று கட்டமாக 146 குடும்பத்தைச் சேர்ந்த 628 ஈழத்தமிழர்கள் அழைத்து வரப்பட்டு தகுந்த பாதுகாப்போடும், அனைத்து வசதிகளோடும் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கோவை மாவட்டத்திற்கு வந்த நாளன்று நல்ல விருந்து படைக்கப்பட்டது. மறுநாளிலிருந்து அவர்களே சமைத்துச் சாப்பிடுகின்ற வகையில் வசதிகள் செய்துதரப்பட்டுள்ளன.

மாதத்தில் 1-ந்தேதி, 16-ந்தேதி ஆகிய நாட்களில் குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்பப் பணமும், சலுகை விலையில் அரிசியும் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கியுள்ள இடத்தில் தண்ணீர் வசதி, கழிப்பிடவசதி, சுகாதார வசதிகள் செய்துதரப்பட்டதோடு, தகுந்த பாதுகாப்பும்தரப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்திலுள்ள நல்வாழ்வுத் துறை, மருத்துவத் துறை, மருத்துவக் கல்வித் துறை, பிற சேவை சங்கங்கள் இலவசமாக மருத்துவ ஆலோசனையும் மருத்துவ உதவிகளும் அளித்து வருகின்றன. இவர்கள் தங்கியுள்ள பகுதிகளுக்கு ஏராளமான மக்கள் நாள் தோறும் சென்று பார்த்து ஆறுதல் கூறி வருகிறார்கள். சேவைச் சங்கங்கள் பல இவர்களுக்கு உணவினையும், ஆடைகளையும் இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கின்றன. மருத்துவ முகாம்களையும் சேவைச் சங்கங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றன. இங்கு வந்துள்ள ஈழத்தமிழர்கள் மிகுந்த உற்சாகத்தோடு காணப்படுகிறார்கள்.

கோவை மாவட்டத்திற்கு வந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரமாக வீடுகள் கட்டித் தருவதற்கு 15 ஏக்கர் நிலம் உடுமலை வட்டத்திலுள்ள திருமூர்த்தி நகரில் தேர்வு செய்யப்பட்டு ரூ. 64 லட்சம் செலவில் 910 வீடுகள் கட்டுவதற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஆணைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சி வட்டத்தில் ஆளியாறு நகரில் உள்ள 35 வீடுகளைப் பழுதுபார்ப்பதற்காக ரூ. 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்வதற்காக அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது. மேலும் ஈழத்திலிருந்து வரும் தமிழர்கட்கு எந்தெந்த வகையில் உதவி செய்யலாம் என்பது குறித்துத் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஆணைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஈழத்திலிருந்து அகதிகளாகத் தப்பிவரும் தமிழர்களுக்குப் பரிவோடு அனைத்து உதவிகளையும் அரசு செய்து வருகிறது. அரசு அலுவலர்களும், பொதுமக்களும், ஈழத்தமிழர்களுக்கு மிகுந்த ஆர்வத்தோடு உதவி செய்கிறார்கள்.

ஈழ மக்கள் கண்ணீர் விரைவில் வற்றும், அவர்கள் மறுவாழ்வு பெற்று மகிழ்ச்சி ஆற்றில் நீந்துவர் என்று நம்புவோமாக!

## தமிழ்நாடு தேயிலைத்தோட்டக் கழகம்

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1984 ஆம் ஆண்டு நவம்பர் முடிய 2419.86 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிட்டுள்ளது.

இந்தக் கழகத்தில் மொத்தம் கட்டப்பட வேண்டிய 2383 தொழிலாளர் குடியிருப்புகளில் (1985 பிப்ரவரி வரை) 2201 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளைக் கட்டி முடிக்கத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிப்ரவரி மாதத்தில் மட்டும் 11,93,309 கி. கி. தேயிலைக் கொழுந்து உற்பத்தி ஆகியிருக்கிறது.



# தமிழரின் கோயிற் கலைகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து நடத்திவரும் 'தமிழரின் மரபுச் செல்வம்' (Heritage of the Tamils) பற்றிய கருத்தரங்கு வரிசையில் இந்த ஆண்டு தமிழரின் கோயிற் கலைகள் பற்றிய மூன்று நாள் கருத்தரங்கினை மார்ச்சு மாதம் 29, 30, 31 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாக நடத்தியது.

தமிழரின் பண்பாடு, இலக்கியம், மொழி மற்றும் இலக்கணம், கலை, வரலாறு, தத்துவம், சித்த மருத்துவம் ஆகிய ஏழு கருத்தரங்குகளைத் தொடர்ந்து எட்டாவது ஆண்டாக இந்த ஆண்டு இக்கருத்தரங்கு நடத்தப் பெற்றது.



தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை. நடராஜன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் கலந்துகொண்டு, கருத்தரங்க நூலினை வெளியிட்டு, விழாத் தொடக்கவுரை ஆற்றினார். மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் - செயலர் திரு அ. கொ. விஜயபானு, இ.ஆ.ப., அவர்கள் அரியதொரு சிறப்புரையாற்றினார். இவ்விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் வரவேற்று நிறுவனப் பணிகளை விளக்கினார்.

தமிழரின் மரபுச் செல்வம் பற்றி மட்டும் இதுவரை எட்டுக் கருத்தரங்குகளை இந்நிறுவனம் நடத்தியுள்ளமைக்கும், தமிழிலும் ஆங்கிலத்திலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வு நூல்களைப் பல புதிய கோணங்களில் வெளியிட்டு வருகின்றமைக்கும் பாராட்டு வழங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், தமிழ் ஆராய்ச்சிக்கு இது போன்ற நூல்களின் தேவையை மிகவும் வலியுறுத்திப் பேசினார்.

தமிழரின் மரபு, பண்பாடு மற்றும் கலை ஆகியவை பற்றிய கருத்துக்களைத் தொகுத்து 200 அல்லது 300 பக்க அளவில் தமிழிலும் ஆங்கிலத்திலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நூலாக விரைவில் வெளியிட வேண்டுமென்று தம் ஆவலையும் அவர் அப்போது வெளியிட்டார்.

வெளிநாட்டவர்களுக்கு நம்முடைய கலை மற்றும் பண்பாடுகளை எடுத்துக் கூறவும் அயல் நாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள் தம் நாகரிகத்தையும் பண்பாட்டையும் மற்றவர்களுக்கு விளக்கவும் இத்தகைய நூல்கள் பெரிதும் துணை புரியும் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் விளக்கினார்.

தமிழரின் நாகரிகம் மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளிலிருந்து கோயில்கள் பிரிக்க இயலாதவை. தமிழரின் கலை நுட்ப அறிவிற்கு எடுத்துக் காட்டாக உள்ள தமிழகக் கோயிற்கலைகள் பற்றிய ஆய்வு மிகவும் இன்றியமையாததாகும். தஞ்சை, மாமல்லபுரம் போன்ற பலவிடங்களிலுள்ள கோயில்களைப் பார்க்கும்போது அவை எந்த அளவிற்குத் தொழில் நுட்பம் வாய்ந்தவையாக உள்ளன என்பது தெரிய வருகிறது. அந்த அளவிற்கு இருந்த நம்முடைய நுட்ப அறிவியலும் கலை நுட்பமும் அருகி வருவதற்கான காரணங்களை ஆராய வேண்டும் என்றும் மாண்புமிகு கல்வி அமைச்சர் வலியுறுத்திப் பேசினார். இத்தகைய வளர்ச்சிக்குத் தற்கால அறிவு வளர்ச்சிகளையும் இளைய சமுதாயத்தினரையும் ஊக்குவிக்க வேண்டியது அனைவரின் கடமை என்றும் அவர் கூறினார்.

விழாவிற்குத் தலைமை வகித்த டாக்டர் அவ்வை. நடராசன் அவர்கள், "தமிழகத்தில் 33,620 கோயில்களுக்கு மேல் உள்ளன என்றும், அவை ஒவ்வொன்றிலும் ஏராளமான கலை நுட்பங்கள் பொதிந்துள்ளன என்றும், இவை யாவும் தமிழரின் கலை உள்ளத்தை உலகிற்குக் காட்டுவன என்றும் தமிழரின் கோயிற்கலைச் சிறப்புக்களை எடுத்துரைத்தார்.

தமிழகக் கோயில்களின் சிறப்பியல்புகள் பற்றிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றினை, திரு அ. கொ. விஜயபானு, இ.ஆ.ப. அவர்கள் சிறப்புரையாக வழங்கினார். 'உலகப் பண்பாடு மற்றும் உலகநாகரிகத்துடன் நம்முடைய தமிழ்ப் பண்பாடுகளை இணைத்துப் பார்க்குமிடத்து நம் வளர்ச்சி மேலும் விரிவடையும்' என்பதை அவர் தம் உரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றுநாள் கருத்தரங்கில், தமிழகக் கோயிற்கலை பற்றி 26 கட்டுரைகளைப் பல்வேறு அறிஞர்கள் படித்தனர். இவற்றுள் இருபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஆங்கிலத்திலும் அமைந்தவை. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து கலந்து கொண்ட இக் கருத்தரங்கிற்கு டாக்டர் ஏ.வி. ஜெயச்சந்திரன் அவர்கள் பொதுக்கருத்தரங்குத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கோயிற்கலை பற்றி அரிய பல நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார்.




# அண்ணாவின் இதயக் கனி!

முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைக் குறித்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பற்பல சந்தர்ப்பங்களையொட்டித் தெரிவித்த தத்துவப் பொன்மொழிகளை எல்லாம் புகழ் பெற்ற எழுத்தாளர் திரு ஆர். சீனிவாச மூர்த்தி தொகுத்து, **'எம்.ஜி.ஆர். என் இதயக்கனி'** என்ற தலைப்பிட்டு, நூலாக உலா வரச் செய்திருக்கிறார். அதன் வெளியீட்டு விழா மார்ச் 21ஆம் நாளன்று ராஜாஜி மண்டபத்தில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையாற்றிய சைதை துரைசாமிஎம்.எல்.ஏ., ''அண்ணா அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களை எப்படி எப்படியெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள உதவும் நூல் இது'' என்று குறிப்பிட்டார்.



அடுத்து அறிமுக உரையாற்றிய திரு ஜேப்பியார் எம்.எல்.சி., 'நமது முதல்வர் - அண்ணாவின் இதயக்கனியாக விளங்கிய புரட்சித் தலைவர் அறிமுகப்படுத்திய குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தை இன்று வளமான நாடுகள் ஆய்வு செய்து வருகின்றன. இந்த அரிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகப் புரட்சித் தலைவருக்கு நோபல் பரிசு கிடைத்தாலும் வியப்புக் கிடையாது'' எனத் தெரிவித்தார்.

நூலின் முதல் பிரதியை மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட, அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி அவர்கள் 1000 ரூபாய் கொடுத்துப் பெற்றுக் கொண்டார். அவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''நமது முதல்வர் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே அண்ணாமலைப் பல்கலைக் கழக அறக்கட்டளைக்கு 35 ஆயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். அவர் பெருங் கொடை வள்ளல். சிலர் உதவி கேட்டால் தான் வழங்குவார்கள். ஆனால் நமது முதல்வர் தானே தேடிச் சென்று பிறருக்கு உதவி அளிப்பார்.''

மணவழகர் மன்றத் தலைவர் திரு ஆர். வீரமணி தமது உரையில் தெரிவித்ததாவது:

'சரித்திரத்தில் இடம் பெறும் பெருமை பெற்றது இந்நூல். நமது முதல்வர் முன்பொரு முறை 1967-ல் மருத்துவமனையில் இருந்தவாறே தேர்தலில் வெற்றி பெற்றார். கற்போது 1984-ல் மீண்டும் அமெரிக்க நாட்டு மருத்துவ மனையிலே இருந்தவாறு வெற்றி பெற்றிருக்கிறார்.''

அடுத்து உரையாற்றிய திரு. சிலம்பொலி செல்லப்பன் குறிப்பிட்டார்:

"இது சிறிய நூல் எனினும் அரிய நூல். பேரறிஞர் அண்ணா 1954ஆம் ஆண்டு முதல், 1968-ஆம் ஆண்டு வரை 14 ஆண்டுகளில் நமது முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களைக் குறித்துச் சொல்லிய பாராட்டுரைகள் 14 பகுதிகளாக இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன."

அடுத்து உரையாற்றிய டாக்டர் அவ்வை நடராசன் தெரிவித்தார்:

''இதயக் கனி என்று பேரறிஞர் அண்ணா சொல்லிய இந்தச் சொல்லைப் போல வேறெவரும் சொல்லவில்லை. இலக்கியங்களில் கூட 'மனமலர்' - 'நெஞ்சப்பூ' என்ற வார்த்தைகள்தான் உள்ளன. அவற்றைவிடச் சிறப்பான சொல் 'இதயக்கனி' ஆகும்.

''பல நூல்களை எழுதுவதற்கு ஆதாரமாக அமைந்திருக்கிறது இந்நூல். அண்ணா நமது முதல்வர் அவர்களுக்கு எத்தனை வகையான புகழாரங்களைச் சூட்டியிருக்கிறார் என்பதை இந்நூல் தொகுத்துத் தருகிறது''

எழுத்தாளர் சிவசங்கரி, ''இந்நூலில் அண்ணா கூறியுள்ள கருத்துக்களைப் படித்தபோது மெய் சிலிர்த்தது. புகைப்படம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையைச் சொல்கிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ண சாமி அவர்கள் தெரிவித்தார்:

''திரமிக்க வரலாற்றுக்குச் சொந்தக்காரரான சீனிவாச மூர்த்தி தொகுத்த இந்நூல், எந்

இருந்தாக வேண்டும். வீடு கட்டுவதற்கான வரைபடம் ஒப்புதல் பெறுவதற்குப் பட்டாவேண்டும்.

பட்டா இல்லாத பத்திரம் வெறும் காகிதத்துக்குச் சமம்.

ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து மனையை வாங்கியவர்கள் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்தார்கள்.

ஆனால் விண்ணப்பித்தவுடன் பட்டா கொடுத்து விடுவதற்கில்லை. ஏனெனில் நில அளவையாளர்கள் மனைகளைச் சரியாக அளந்தெடுத்து, அவற்றின் நான்கு எல்லைகளையும் நிர்ணயித்து, அந்த நிலத்தின் மீது ஏதேனும் வில்லங்கம் இருக்கிறதா என்று அலசி ஆராய்ந்து பார்த்து அதற்குப் பிறகுதான் பட்டா வழங்க வேண்டும்.

இந்தப் பணியைமேற்கொண்ட போதுதான் நில அளவையாளர்களுக்குப் பல குழப்பங்கள் வந்தன.

பெரும்பாலான மனைகளுக்கு நில அளவைகள் சரியாக வரையறுக்கப்படவில்லை. நான்கு எல்லைகளும் ஒத்து வரவில்லை. அள்ளித் தெளித்த அவசரக்கோலமாக இந்த விற்பனை நடைபெற்றதால் பட்டா வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இதன் விளைவாக கடந்த பிப்ரவரி மாதம் முடிய சுமார் 4,440 பட்டா மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் தீர்வு காணப்படாமல் இருந்தன.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்த வருவாயும் நடுத்தர வருவாயும் உள்ள மக்கள். ஆசையாய் மனைகள் வாங்கியவர்கள், பட்டாவுக்காக அலைமோதினார்கள்.

மாவட்ட நிர்வாகம், மக்களின் இந்தத் தவிப்பினை உடனடியாக களைந்திட வேண்டுமென்று முடிவு செய்தது.

'ஒவ்வொரு குடும்பத்துக்கும்' ஒரு வீடு'

இதுவே மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனதில் பூத்திட்ட லட்சியக் கனவு.

அதற்கு முதல் கட்டமாக, பணம் கொடுத்து மனை வாங்கியவர்களுக்குப் பட்டா வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.எ.மாத்யூ அவர்களின் அன்றாட கண்காணிப்பின் கீழ், மார்ச் (85) மாத இறுதிக்குள் 4.440 விண்ணப்பதாரர்களுக்கும் பட்டா வழங்குவதற்கான பணி தொடங்கப்பட்டது.

வருவாய் மற்றும் நில அளவைப் பதிவேட்டுத் துறையைச்சார்ந்த 140 அலுவலர்கள் இரவு பகலாக இந்தப் பணியில் ஈடுபட்டார்கள். 4,440 க்கும் மேற்பட்ட பட்டா மாறுதல் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, நில அளவைகள், நான்கு எல்லைகள் சரிபார்த்து நிர்ணயிக்கப்பட்டு, பட்டாக்கள் தயாரிக்கப்பட்டன.

ஏப்ரல் முதல் நாளன்று தாம்பரத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு நிதிஅமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் சுமார் ஆயிரம் பேருக்குப் பட்டாக்கள் வழங்கினார்கள். இதற்கு முன்னதாக மார்ச் 29ஆம் நாளன்று அம்பத்தூரில் நடைபெற்ற விழாவில் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு ஆ.பத்மநாபன் அவர்கள் 1000 பேருக்குப்பட்டா வழங்கினார். ஏனைய பட்டாக்கள் அனைத்தும் ஏப்ரல் இரண்டாம் நாளன்று சைதை வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்டன.

ஒரு மாத காலத்தில் 4,440 பேருக்கு மாற்று மனைப் பட்டா வழங்கி, தமிழக வருவாய்த்துறை வரலாற்றில் சைதை வட்டம் சாதனை படைத்துவிட்டது.

## டான்சியின் பெருமை சொல்லவும் பெரிதே!

விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்குத் தேவைப்படும் ஆன்டெனா இருக்கையை உருவாக்கும் பணியில் தமிழ்நாடு அரசைச் சேர்ந்த டான்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்காக இந்த ஆன்டெனா இருக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

டான்சி நிறுவனத்தின் தொழில் நுணுக்கத் திறமையில் முழு நம்பிக்கை கொண்டு இந்தப் பணியை விண்வெளி ஆய்வுத் துறை, டான்சி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. ஆகஸ்டு மாத வாக்கில் பூர்த்தியாகி, விநியோகிக்கப் பெறும் இரண்டு ஆன்டெனா இருக்கைகளின் மொத்த மதிப்பு ரூ. 18 இலட்சத்து 40 ஆயிரம்.

இந்த ஆன்டெனா இருக்கை எல்லாத் திசைகளிலும் [illegible] அமைந்தது. உலகைச் சுற்றிவரும் செயற்கைக் கோளின் இருப்பிடத்தை இதன் மூலம் எளிதில் கண்டு கொள்ள இயலும்.

விண்வெளி [illegible] சிறு சிறு [illegible] டான்சி [illegible] ஏற்கெனவே செய்து தந்திருக்கிறது.

திருவனந்தபுரத்தில் இயங்கிவரும் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்துக்குத் தேவைப்படும் [illegible] 9 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் டான்சி நிறுவனம் செய்துதர உள்ளது.




# கோவை மாவட்டத்தில் இலங்கைத் தமிழர்கள்

பொன். சுப்பையா
செய்தி மக்கள் தொடர்பு
அலுவலர்

**இலங்கையில் அவதிக்கு ஆட்பட்டு தமிழகத்தை நோக்கி வரும் இலங்கைத் தமிழர்கள், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர். கோவை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு, தமிழக அரசு செயதுவரும் உதவிப் பணிகள் இங்கே தெரிவிக்கப்படுகின்றன**

கோவை மாவட்டத்திற்கு முதல்கட்டமாக 66 குடும்பங்களைச் சேர்ந்த 275பேர் அனுப்பி வைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் சேரன் போககுவரத்துக் கழகப் பேருந்துகளில் அழைத்து , வரப்பட்டார்கள்! இவர்களில் 21 குடும்பத்தைச் சேர்ந்த 89 பேர், கோவை நகரில் ,நேரு விளையாட்டரங்கத்திற்கு எதிரில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் சத்துணவ மையக் கட்டிடத்திலும், 29 குடும்பத்தை சேர்ந்த 110 பேர், திருப்பூரிலுள்ள நகராட்சி (நகர் மன்றத்திலும்) டவுன் ஹாலிலும் 10 குடும்பத்தைச் சேர்ந்த 40 பேர் பொள்ளாச்சி நகரத்திற்கு அருகிலுள்ள ஆளியாறு நகர்க் கட்டிடத்திலும், 10 குடும்பத்தைச் சேர்ந்த 36 பேர், உடுமலைப் பேட்டை திருமூர்த்தி நகருக்கு அருகில் கட்டப்பட்டுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்திலும் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

2வது கட்டமாக 50 குடும்பங்களைச் சார்ந்த 233 பேர் 1.3.85 அன்று 3 பேருந்துகளில் கோவை மாவட்டத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். இவர்களில் 16 குடும்பத்தைச் சேர்ந்த 78 பேர், திருப்பூரிலுள்ள நகராட்சி டவுன் ஹாலிலும், 16 குடும்பங்களைச் சேர்ந்த 87 பேர் திருமுர்த்தி நகரிலும், 10 குடும்பத்தைச் சேர்ந்த



தக்காலத்திலும் நிலைத்து நிற்கக் கூடிய பெருமை படைத்தது''

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது தலைமையுரையில் தெரிவித்தார்:

''புரட்சித்தலைவர் அவர்களின் பெருமையைச் சொல்வதற்கு எழுந்த நூல் இது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பலநேரத்தில் புரட்சித் தலைவர் அவர்களைக் குறித்து எழுதியவற்றையும் பேசியவற்றையும்தொகுத்துத் தந்திருக்கிறார் தொகுப்பாசிரியர். இந்நூல், பாதுகாக்கப்பட வேண்டிய பெட்டகமாகத் திகழ்கிறது. இதில் 'இடம் பெற்றுள்ள புகைப்படங்கள் வரலாற்றுச் சிறப்புப்பெற்றவை ஆகும்.

''அண்ணா அவர்கள் தந்தை பெரியாரைப் பாராட்டியது அதிகம். அதைவிட அதிகம்-அவர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டியது! பெரியாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து வந்தபோதிலும் அவரிடம் பாசம் குறையாதிருந்தார் அண்ணா .புரட்சித் தலைவர் அவர்களிடம் அண்ணா பாசம் வைத்திருந்தது மட்டுமல்ல-அவரைத் தமது இதயத்திலே கனியாக எடுத்து வைத்துக் கொண்டார்.

''அண்ணா அரசியல் வாதியாக மட்டுமல்ல, மாபெரும் மனிதாபிமானியாகவும் திகழ்ந்தார். அந்த அரசியல்வாதியின் மனத்திலே புரட்சித் தலைவர் இருந்தார். ஏழைகளுக்கு உதவவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்டிருந்தார் அண்ணா. அதற்குச் செயல்வடிவம் தந்தார் புரட்சித் தலைவர். ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளாக மண்ணுக்குள் புதைந்து கிடந்து, மெருகேற்றப்பட்ட ஒளி மிக்க வைரம் புரட்சித்தலைவர்.

''ஏழைக்கு உதவவேண்டும் என்று அண்ணா சொல்லிய கருத்தை ஏற்றுத்தான் 30 ஆயிரம் ரூபாய் செலவில் ரிக்ஷாக் காரர்களுக்கு மழைக்கோட்டுகளை வாங்கித் தந்தார் புரட்சித் தலைவர்.

''ஏழைகள் குடியிருக்க, தீப்பிடிக்காத வீடுகளை உருவாக்க வேண்டும் என்று அண்ணா திட்டமிட்டபோது ஒரு லட்ச ரூபாயை வழங்கித்திட்டத்தைத் தொடங்கி வைத்தார் புரட்சித் தலைவர்.

''எதிர்காலத்தில் அரசியலில் நுழைந்தாலும் எம்.ஜி.ஆர். சிறப்புப் பெறுவார் என்று அன்றே தீர்க்க தரிசனமாகச் சொல்லிச் சென்றிருக்கிறார் அண்ணா''.

### புதிய தொழில் நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் 1985 மார்ச் திங்கள் வரை 4 கோடியே 20 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் முதலீட்டுடன், 8 பொது நிறுவனங்களும், 7 கோடியே 67 இலட்சத்து 35 ஆயிர ரூபாய் முதலீட்டுடன் 72 தனியார் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றில் 50 இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் முதலீடு கொண்ட 7 நிறுவனங்கள் மிகப் பெரும் தொழில் நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் உரையாற்றுகையில் தெரிவித்தார்:

''பேரறிஞர் அண்ணா எழுதிய எழுத்துக்கள் எல்லாம் இலக்கியங்கள் தாம். சிலரிடம் சில ஆதாயங்களை எதிர்பார்த்துச் சிலர் பாராட்டுவது உண்டு. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை உள்ளன்போடு பாராட்டியிருக்கிறார்.

''யார், யாரால் பாராட்டப் பெறுகின்றார்கள் என்பது முக்கியம். பாராட்டியது யார்? அண்ணா! பாராட்டுப் பெற்றவர் யார்? புரட்சித் தலைவர்-பொன்மனச் செம்மல்! ஆகவே அண்ணா பாராட்டிய வாசகங்களை எல்லாம் இங்கு தொகுத்துத் தந்திருக்கிறார் நண்பர் சீனிவாசமூர்த்தி.

''தொகுக்கப்பட்ட இலக்கியங்கள்தாம் தமிழில் கிடைத்த சிறந்த இலக்கியங்களாகத் திகழ்கின்றன. தொகுப்பாசிரியர்கள் இல்லாவிட்டால் தமிழில் இலக்கியங்களே இல்லாமற் போயிருக்கும்.

''திருக்குறளே தொகுக்கப் பெற்ற நூல்தான்! வள்ளுவர் எழுதியிருக்கலாம். ஆனால் அவரே தனது நூலுக்கு 'திரு' என்று அடைமொழி சேர்த்துப் பெயர் சூட்டியிருப்பாரா? அவர் 1330 செய்யுள்களைத் தானா எழுதியிருப்பார்? வள்ளுவர் ஆயிரக்கணக்கான குறள் பாக்களை யாத்திருப்பார்! தொகுத்த ஆசிரியர் 1330 குறள்களைத் தான் தேர்ந்தெடுத்தார். அல்லது வள்ளுவர் எழுதியவற்றுள் 1330 தான் கிடைத்திருக்கும். தொகுத்தவரே அதிகாரம் வகுத்திருப்பார்.

''புறநானூறு, நாலடியார், அகநானூறு இப்படி உள்ள இலக்கியங்கள் அனைத்தும் தொகுக்கப் பெற்றனவே! ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, நற்றிணை, பத்துப்பாட்டு, யாவும் தொகுப்பு நூல்கள்தான். இவ்வளவு ஏன், தேவாரம் தொகுப்பு நூல் தான். சமய குரவர்கள் எங்கே போனாலும் பாடிக்கொண்டே போயிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் நிருபர்களா இருந்திருக்கிறார்கள்? யாரோ ஒருவர் அவர்களது பாடல்களை எல்லாம் தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.

''ராமலிங்க சுவாமிகள் பாடியவற்றையும் யாரோ ஒருவர் தொகுத்துத் தந்திருக்கிறார். தாயுமானார் பாடல்களும் அப்படியே! பாரதியார் பாடலும் அப்படித்தான். பாரதிதாசன் பாடல்களைக் குத்தூசி குருசாமி தொகுத்து நூலாகத் தந்திருக்காவிட்டால் பாரதிதாசன் கவிதைகள் நமக்குக் கிடைத்திருக்காது.

''அண்ணாவின் எழுத்துக்கள் எல்லாம் வன்மை பெற்றவை. தந்தை பெரியாரைக் குறித்துச் சொல்ல முனைந்த அவர் 'என் வாழ்நாளில் நான் கண்ட தலைவரும் கொண்ட தலைவரும் பெரியார் ஒருவரேதான்' என்று சொன்னார். ஒருமுறை ''ஓட்டு முறையில்தான் எங்களுக்கு நம்பிக்கை, வேட்டு முறையிலல்ல'' என்று ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

கபிலர், பரணரைப் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்; பரணர், கபிலரைப் புகழ்ந்திருக்கிறார். அதைப்போல மனிதப் பண்புடைய மாண்பான தலைவர் அண்ணா மனிதப் பண்புடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரை இதயத்துள் வைத்துப் போற்றியிருக்கிறார். அவரது போற்றுதல்களை எல்லாம் தொகுத்து நூலாக உருவாக்கியிருப்பது போற்றுதலுக்குரிய பணி ஆகும்.'

இறுதியாக ஏற்புரை நிகழ்த்திய தொகுப்பாசிரியர், திரு சீனிவாசமூர்த்தி, ''இந்த அரிய நூலைத் தொகுக்கும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணிப் பெருமை கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

தொகுப்பு த.பி.














# ஒரு இந்திய மருந்துவரின் புதிய கண்டுபிடிப்புகள்

இரத்தத்தின் சிவப்பு அணுக்களைப் பற்றி முழுமையாக ஆராய்ந்தால் 'கான்சா' என்று சொல்லப்படும் புற்றுநோயைத் தவிர்க்கலாம், குணப்படுத்தலாம் என்று அமெரிக்காவில் வாழும் ஒரு இளம் இந்தியர் கண்டுபிடித்திருக்கிறார். அவர்தான் ஹோவர்டு பல்கலைக் கழகத்தில் மருத்துவத் துறைத் துணைப் பேராசிரியராகவும், 'எண்டோக்ரிமினாலஜி' என்ற மருத்துவத் துறைச் சோதனைக்கூட இயக்குநராகவும் பணிபுரியும் டாக்டர் கன்வால் கம்பீர்.

உடலின் வலுவும் நலிவும் இரத்தத்தின் சிவப்பு அணுக்களையே சார்ந்திருக்கிறது. மேலும் உடலில் 'இன்சுலின்' என்ற சத்தைச் சீராக வைத்திருப்பதற்கும் சிவப்பு அணுக்கள் உதவுகின்றன என்று கண்டறிந்துள்ள இவர், உடல் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதே இந்த இன்சுலின்தான் என்கிறார்.

இரத்தத்தில் 'கான்சர்' கூறுகளுடன் இன்சுலினுக்கு உள்ள தொடர்பு என்ன என்பதை இவர் ஆராய்ந்து வருகிறார். வேறு எவரும் ஆய்வு செய்திடாத புதிய துறை இது. குறிப்பிட்ட செல்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தினால் கான்சர் செல்களின் வளர்ச்சியைத் தடுக்கலாம் என்கிறார் இவர்.

இன்சுலினைத் தடுக்கும் 'என்ஸைம்' என்ற செரிமானப் பொருளைத் தனியே பிரித்தெடுத்தார் டாக்டர் கம்பீர். மருத்துவத் துறையில் இது மகத்தான வெற்றி என்று சொல்லப்படுகிறது. ஒன்றைத் தனித்து எடுக்க முடிந்தால் அதன் வளர்ச்சியையும் கட்டுப்படுத்த நம்மால் இயலாதா என்று சிந்தித்தார் அவர்.

கருவுற்ற பெண்களிடையே நீரிழிவு நோயினால் தாக்கப்பட்டவர்கள், தாக்கப்படாதவர்கள் என்ற இருதிறத்தாரின் இன்சுலின் ஏற்பு செல்களைத் தனித்தனியே 1980-ல் கம்பீர் ஆராய்ந்தார். உடலிலுள்ள பிராணவாயு அளவை ஒழுங்குபடுத்துவது இன்சுலின் என்று கண்டறிந்தார் கருவுற்ற பெண்களில் ஐந்தில் ஒரு பங்கினருக்கு கருவுற்ற காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுகிறது என்றும், இன்சுலின் ஏற்புச் செல்கள் சரிவரப் பணியாற்றாவிட்டால் அவர்கள் தொடர்ந்து நீரிழிவு நோயினால் தாக்கப்படுகிறார்கள் என்ற உண்மையும் இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்தது. அதுமட்டுமல்ல, நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் வழியும் இதனால் பிறந்தது. தக்க சமயத்தில் இதைப் பற்றித் தெரிந்து கொண்டு நீரிழிவு நோயை முற்றிலும் தவிர்த்துக் கொள்ளவும் வழி பிறந்துள்ளது. இரத்தத்தின் சிவப்பு அணுக்களில் எந்த வகை, இன்சுலின் கூறுகளை இயக்குகிறது என்பதையும் கம்பீர் கண்டறிந்தார். இதனால் இதய நோய்கள், கான்சர் முதலிய நலிவுகளைப் போக்க முடியும் என்று சொல்லும் இந்த இந்திய டாக்டர், அமெரிக்காவில் இது குறித்து இன்னும் தீவிரமாக ஆராய்ச்சி செய்து வருகிறார்.

இவரது முனைவுகளையும் முடிவுகளையும் பாராட்டிப் பலவிதப் பரிசுப் பொருட்கள் குவிந்துள்ளன.

பல்கலைக் கழகங்களும் மருத்துவ நிலையங்களுமாக 125க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தம் பணியில் அவரது ஆலோசனையையும், ஒத்துழைப்பையும் வேண்டி இவருக்கு ஏராளமான கடிதங்கள் எழுதுகின்றன.

எல்லாக் கடிதங்களிலும் இவருக்கு மிக மிக மகிழ்ச்சி தருவது தென் டகோடா மாநிலத்தின் பிஸ்மார்க் நகரிலிருந்து ஒரு எட்டாவது வகுப்பு மாணவி எழுதிய கடிதமே! 'டயாபெடிஸ்' என்ற இதழில் கம்பீர் எழுதிய கட்டுரையைப் படித்த அந்த மாணவி, தான் அடுத்துக் கலந்து கொள்ளப் போகும் விஞ்ஞானக் கண்காட்சியில் இன்சுலின் பற்றிய விளக்கக் காட்சியை அமைக்கப் போவதாகவும், அதைச்சிறப்புறச் செய்ய ஒரு சோதனை முறையைச் சொல்லித் தரச் சொல்லிக் கேட்ட கடிதமே அது.

கம்பீர் தாமதிக்காமல் ஆசிரியர்களுக்கு எந்தவித ஆய்வுக் கட்டுரைகள்-பொருட்களைத் தருவாரோ அதை அந்த மாணவிக்கு அனுப்பி, தன்னுடைய தொலைபேசி எண்ணையும் தெரியப்படுத்தி இருந்தார்.

''நானும் ஒரு மனிதனாக வாழ்ந்தேன்'' என்பதற்கான ஆதாரங்களே இந்தக் கடிதங்கள் என்று சுட்டிக் காட்டுகிறார் கம்பீர்-தம் பெயருக்கேற்ற சும்பீரத்துடன்!

1975ல்ஹோவர்டு பல்கலைக் கழகத்தில் மருத்துவத்துறையில் ஆசிரியப் பணி புரிய ஆரம்பித்த அவர், 'எண்டோகிரிமினாலஜி'' துறைக்கான சோதனைக் கூடத்தை உருவாக்கினார். அங்கிருந்துதான் கம்பீர் மருத்துவத் துறைக்கு இன்று அரும்பணி ஆற்றி வருகிறார்.

''என்னுடைய ஆய்வுப் பணிகளுக்குப் பெரிதும் துணை நிற்பது என் மனைவியே. அவள் இல்லாவிட்டால் நான் இந்தத் துறையில் இவ்வளவு செய்திருக்க முடியாது'' என்றும்,''என்னுடைய கட்டுப்பாடான வாழ்க்கைக்குக் காரணம் என் அன்னைதான். என் பெற்றோருக்கு இறைவன் மீது பக்தி அதிகம். கடவுளை அடைய மனித குலத்திற்கு உழைக்க வேண்டும்; மனிதன் உண்பதும் உழைப்பதும் கடவுளுக்காகவே என்று அவர் எனக்கு உணர்த்தினார்'' என்றும் சொல்கிறார் கம்பீர்.

''எங்கிருந்தாலும் என்னால் மனித குலத்திற்குப் பணியாற்ற முடியும்'' என்று சொல்லும் இவர், ''நான் இந்தத் துறையில் இன்னும் அறிய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. என் வாழ்நாளில் அது முடியுமா என்று சொல்ல முடியவில்லை'' என்கிறார். ஆனால் இவருடன் பணியாற்றுபவர்களோ இவரால் மேலும் புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியும் என்று சொல்கிறார்கள்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்






சேலம் மாவட்டத்தில்

# ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.
சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினர் எண்ணிக்கை 1971ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 3.11 இலட்சம். தற்போது தோராயமாக 4 இலட்சம் இருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது. பழங்குடி மக்களில் அநேகமாக அனைவரும் மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களாகவும், கல்வி பெறாதவர்களாகவும் சமூகப் பொருளாதாரத் துறையில் மிகவும் பின் தங்கியவர்களாவும் சுகாதாரம் முதலிய வாழ்க்கைவசதிகள்இன்னதென்று அறியாதவர்களாகவும் இருப்பதைக் கண்டு மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை இவர்களின் முன்னேற்றத்திற்கு 1976-77ஆம் ஆண்டிலிருந்து செயல் படுத்தத்தொடங்கின. அதன்படி இந்தத் திட்டம் சேலம் மாவட்டத்தில் ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சமலை, அரநூத்துமலைஆகிய 5 மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் பழங்குடியினர்களுக்குக் கல்வி வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி, மருத்துவவசதி, விவசாயத் திட்டம், கால்நடைத் திட்டம், சமூக நலம், பட்டு வளர்ப்பு, சிறு தொழில்கள், சாலை வசதி, மின் வசதி போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த 5 மலைகளிலும் உள்ள பழங்குடியினர் தொகை பின் வருமாறு:

| | |
|---|---|
| கொல்லிமலை | 30,665 |
| ஏர்க்காடு | 21,676 |
| கல்ராயன் மலை | 20,665 |
| அரநூத்துமலை | 6,694 |
| பச்சமலை | 6,583 |

1983-84ம் ஆண்டில் இந்த 5 மலைப் பகுதிகளிலும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த ரூ. 169 இலட்சம் அரசால் செலவிடப்பட்டுள்ளது.

1984-85ஆம் ஆண்டில் 188 இலட்சம் ரூபாய் பழங்குடியினர் முன்னேற்றத்திற்குச் செலவிடப்படுகிறது. பழங்குடிமக்களின் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானவற்றில், விவசாயம் ஒன்றாகும். இதைக் கருத்தில் கொண்டு விவசாயத் திட்டம் மூலம் பழங்குடியினர்களுக்கு 50 சதவிகித மானியத்தில் விதைகள் உரம், பூச்சி மருந்துகள், பழக் கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன. விவசாயத் திட்டத்தில் நவீன முறைகளைக் கையாளச் செயல் விளக்கத் திட்டங்களும் மண் வளப் பாதுகாப்புத் திட்டமும், விவசாயிகளுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பழங்குடியினர் குடும்ப வருமானத்தைப் பெருக்கக் கறவை மாடுகள், கோழிகள், ஆடுகள், பன்றிகள் முதலியவை 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்யப்படுகின்றன. சிறுதொழில் திட்டத்தின் மூலம் தேன் பெட்டிகள் விநியோகம் செய்யப்படுகின்றன. பட்டு வளர்ப்புத் திட்டம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. கல்வி வசதியைப் பெருக்க, குழந்தைகளுக்கு பாலர் பள்ளிகளும் மாணவ மாணவியர்களுக்கு உண்டு உறைவிடப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. மருத்துவ வசதி அளிக்க 5 மலைப் பகுதிகளிலும் அரசு மருத்துவ மனைகள் தொடங்கப்பட்டுள்ளன. கால் நடைகளுக்கு வைத்திய வசதி கிடைக்க 5 மலைகளிலும் கால் நடை மருத்துவ நிலையங்களும் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகளும் தொடங்கப்பட்டுள்ளன.

விவசாயத்திற்கு அடிப்படைத் தேவையான நீர் வசதியினைக் கருத்தில் கொண்டு சிறிய அணைகள், குளங்கள், நீர் ஊற்றுக் குட்டைகள் கட்டப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதியை அளிக்கக் குழாய்க் கிணறுகள் போடப்பட்டு வருகின்றன.

பழங்குடியினர்கள், தனிப்பட்ட வியாபாரிகள் மற்றும் கந்து லேவாதேவிக்காரர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் பெறுவதைத் தவிர்க்க, பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டு அதன் மூலம் விவசாயிகளுக்குக்குறைந்த வட்டியில் குறுகிய கால, மத்திய கால,

நீண்ட காலக் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. மேலும்அன் றாடம் தேவைப்படும் அத்தியா வசியப் பொருட்களை நியாய மான விலையில் பெற்றுக் கொள்ள கிராம அங்காடிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. 4 சதவிகித வட்டியில்பயிர்க்கடன் ரூ. 500 வரை நுகர் கடனாக வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் சிறப்பு அம்ச மானதாகக் கருதப்படுவன, கல் ராயன் மலையில் 1000 ஏக்கரில் ரூ. 45- இலட்சத்தில் மாபெரும் பழப் பண்ணை அமைக்கும் திட் டமும், 250 ஏக்கரில் ரூ. 25 இலட்சத்தில் மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கும் திட்டமும் ஆகும். இந்த இரண்டு திட்டங் கள் மூலம் தற்போது சராசரி நாள் ஒன்றுக்கு 150 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இந்தத் திட்டங் கள் முழுமையாகச் செயல் படுத் தப்பட்ட பின்னர் தினம் சராசரி 300 குடும்பங்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக் கிடைக்கும். 9.1.'85 அன்று 50 குடும்பங் களுக்கு நிலப்பட்டா, வீட்டு மனைப்பட்டா, குடும்ப அட்டை கள் மற்றும் 75 பழங்குடியினருக்கு பழக்கன்றுகள், விதைகள், தனி நபர் பழத் தோட்டம் அமைக்கக் கூடங்கள், கடப் பாரை, மம்பட்டி போன்ற கருவி கள் விநியோகம் செய்யப்பட்டன.

கொல்லிமலை மற்றும் கல் ராயன் மலையில் தேயிலை விளை விக்க முடியுமா என்பதை ஆய்வு செய்ய, மாதிரித் தேயிலைத் தோட்டம் போடப்பட்டுள்ளது. இது வெற்றி அடைந்தால் 1,000 ஏக்கரில் தேயிலை பயிர் செய்யப் படவுள்ளது.

மின்சாரம் மூலம் மின் வசதி அளிக்க முடியாத கிராமங்களுக்கு சூரிய வெப்பம் மூலம் மின் வசதி அளிக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டுக்குரிய இலக்கான 10கிரா மங்களுக்கு இதுவரை சூரிய வெப் பம் மூலம் மின் வசதி அளிக்கப் பட்டு விட்டது.

வெளி உலக நிகழ்ச்சிகளைப் பழங்குடியினரும் தெரிந்து கொள்ள 5 மலைப் பகுதிகளுக்கு 10 தொலைக் காட்சிப் பெட்டி கள் வழங்கப்படவுள்ளன.

கொல்லிமலையில் பல வகை யான பழங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே பழங்கள் பதப்படுத்தும் கூடம் அமைக்க அரசு ரூ. 9 இலட்சம் அனுமதித்துள்ளது. இந் தத்திட்டம் தற்போது செயலாக் கப்பட்டு வருகிறது. இது அமைக் கப்பட்டு விட்டால் பழங்குடி யினர்கள் நிரந்தரவேலை வாய்ப் புப் பெறவும், அவர்கள் விளை பொருட்களை நியாய விலையில் விற்கவும் வசதி ஏற்படும்.



சூரிய வெப்பம் மூலம் மின்வசதி அளிக்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்.

கொல்லிமலையில் மிகப்பழமை வாய்ந்த அறப்பளீசுவரர் ஆலயம் உள்ளது. இதற்கு 7 கி. மீட்டர் தொலைவில் அருவி ஒன்றுள்ளது. இதைக்கண்டு களிக்கவும், கோவி லைப் பார்க்கவும் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வரு கின்றனர். எனவே கொல்லிமலை யைச் சுற்றுலாத் தலமாக்க கோயில் அபிவிருத்திப் பணியும் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் கோவிலிலிருந்து அருவி வரை தார்ச்சாலை அமைக்கும் பணியும் தற்போது நடைபெற்று வருகின் றன. இளைஞர் ஒய்வு இல்லம் கட்ட, அரசு ரூ. 2 இலட்சம், நடப்பு ஆண்டுக்கு அனுமதித்துள் ளது.

மேலும் பழங்குடியினர்களுக்கு 54 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ரூ. 2.61 இலட் சம் அனுமதித்துள்ளது. இன்னும் இரண்டு மாதங்களில் வீடுகள் அனைத்தும் கட்டிமுடிக்கப்படும். நடப்பு ஆண்டில் (1984-85ல்) பெரிய கல்ராயன் மலையில்உள்ள பழங்குடியினரைப் பண்டைய பழங்குடியினர் என மத்திய அரசு அங்கீகரித்துள்ளது. இவர்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த 100 குடும்பங்களுக்கு 1000 தேன் பெட்டிகள் விநியோ கம் செய்ய மாநில அரசு,ரூபாய் ஒரு இலட்சம் அனுமதித்துள்ளது.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மாதம் ஒரு முறை என்று ஒவ்வொரு மலைப் பகுதிக் கும் சென்று பழங்குடியினர் நலத் திட்டப் பணிகளை நேரில் ஆய்வு செய்து வருகிறார்.

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்கள் இம்மாவட்டத்தில் சமூக சேவா சங்கங்களின் ஒத்து ழைப்புடன் செயல்படுத்தப்படு கின்றன. குறிப்பாக கல்ராயன் மலையில், கல்ராயன் பெண்கள் மேம்பாட்டுச் சங்கம் இம்மலை யில்உள்ள பழங்குடியினர்களுக்குச் சிறந்த ஒத்துழைப்பை அளித்து வருவது குறிப்பிடத் தக்க அம்ச மாகும். இந்தப் பழங்குடியினர் ஒளி மயமான எதிர் காலத்தை விரைவில் நிச்சயம் அடைவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.





இந்தப்படத்திலே, இரண்டாவது வரிசையிலே இடமிருந்து ஐந்தா வதாக உட்கார்ந்திருக்கும் மூதாட்டியின் குடும்பம் தான் இது; அந்த மூதாட்டிக்கு வயது 100. ஆனால் இன்னமும் உற்சாகத்தோடு நல்ல தேக ஆரோக்கியத்தோடும் இருக்கிறார்; ரஷ்யாவைச் சார்ந்த இவர் பெயர் சியூல்யாந்தம் அல்லாகைரோவா.

## தூங்கும் டிரைவரை எழுப்பும் கருவி

ஓர் எஞ்சின் டிரைவர் தூங்கி விடுவாரா னால் அவரால் நூற்றுக்கணக்கான பயணி களின் உயிருக்கு அபாயம் ஏற்படக் கூடும். இப்படி நிகழாமல் தடுப்பதற்கான ஒரு தானி யங்கிச் சாதனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனமானது, மனித உடல் சருமத்தின் எதிர்ப்புச் சக்தியை அடிப்படை யாகக் கொண்டு செயல்படுகிறது. எஞ்சின் டிரைவர் இரு உலோக வளையங்களை விரல் களில் அணிகிறார். அவர் தூங்கிவிட்டால், இந்த வளையங்களிலிருந்து மின்விசை பாயத் தொடங்கி ஓர் ஒலிக் கருவியை ஒலிக்கச் செய்கிறது. டிரைவர் விழித்துக் கொண்டு ஒரு பொத்தானை அழுத்தினால் ஒலி நின்று விடும். ஐந்து வினாடிகளுக்குள் பொத்தான் அழுத்தப்படவில்லையானால் ஒலி மீண்டும் கேட்கும். அப்போதும் டிரைவர் விழித்துக் கொள்ளாவிட்டால் 6 அல்லது 8 வினாடி களுக்குள் ரெயில் வண்டியை ஓடச் செய்யும் மின்விசை ஓட்டத்தை இந்தச் சாதனம் துண்டித்து, வண்டியை நிறுத்திவிடும்!

சோவியத் ரயில்வே அமைச்சகப் புனை வரைவுப் பிரிவும், மாஸ்கோ இரயில்வே பொறியியலாளர் கழகமும் சேர்ந்து இதைத் தயாரித்துள்ளன.

# உலகம் போற்ற வாழ்வோம்!

உலகம் போற்ற வாழ்வோம்—நாம்
ஒன்று பட்டே உயர்வோம்
உண்மையே என்றும் சொல்வோம்
நன்மையே அனைவர்க்கும் செய்வோம்!

உடையில் எளிமை கொள்வோம்
ஒழுங்காய் நாமும் வாழ்வோம்
நடையில் அமைதி சேர்ப்போம்
நாளை உலகை ஆள்வோம்

சான்றோர் நெறிகள் உணர்வோம்
சாதிக் கொடுமைகள் தகர்ப்போம்
ஆன்றோர் மொழியைக் காப்போம்
அருட்சமு தாயம் காண்போம்

அ. பழனிச்சாமி
மேனிலை முதலாம் ஆண்டு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
அந்தியூர்-638 501.







வளரும் தமிழகம்

# மெத்த வளரும் மதுரை மாவட்டம்





இரா. வரதராஜுலு இ.ஆ.ப.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர்


வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த மதுரை மாவட்டம் வேளாண்மைத் துறையில் நாட்டம் செலுத்தி வருகிறது.

வேளாண்மைத் துறையின் முனைப்புத் திட்டத்தின் கீழ், துங்ரோ மற்றும் மஞ்சள் நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரூ. 2,37,000 செலவில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 50% மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டு, நோய்கள் நீங்குவதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

துங்ரோ மற்றும் மஞ்சள் நோயால் பாதிக்கப்பட்ட நிலங்களை வருவாய்த்துறை அலுவலர்கள் புலத்தணிக்கை செய்து 1394 பசலிக்கு நிலவரி ரத்து செய்ய நடவடிக்கைமேற்கோள்ளப்பட்டு வருகின்றது. உத்தேசமாக ரூ. 23,17,177.62 மதிப்பில் நிலவரி ரத்து செய்ய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கோடைப் பருவத்தில் கிணறு உள்ள விவசாயிகள் தண்ணீர் அதிகம் தேவைப்படும் நெற்பயிர் பயிரிடாமல், நீர்குறைவாகத் தேவைப்படும் சிறு தானியங்கள், பருத்தி, பயறு வகைகள் 88,400 எக்டேர் பரப்பளவில் பயிரிடச் சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்புக் கோடைத் திட்டத்திற்கான கூடுதல் உற்பத்தித் திட்டத்தின் கீழ் தேவையான உரம், பூச்சி மருந்து மற்றும் விதைகள் ஆகியன எல்லா வேளாண்மைக் கோட்டங்களிலும், வேளாண் மைக் கிடங்குகளிலும் கூட்டுறவு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

பாசனப்பகுதி அல்லாத நெல் சாகுபடிப் பரப்பில் 15,616 எக்டேர் குறைவான பகுதிக்கு 54,656 மெட்ரிக் டன் உற்பத்தி இம்மாவட்டத்தில் குறைவானாலும், கோடைப் பருவத்திட்டத்தின்கீழ் சிறுதானியம் 45,900 எக்டேர் பயிரிட்டு, 1,00,945 மெட்ரிக் டன் உற்பத்தி செய்திடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு; செயலாக்கப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வாண்டு கோடைப் பருவத்தில் 10,000 எக்டேர் பரப்பில் இறவைப் பருத்தியும்32,500 எக்டேர் பரப்பில் நெல் தரிசில் உளுந்து மற்றும் பாசிப்பயறும் பயிரிடத் திட்டமிடப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர்த் திட்டப்பணிகள் :**

நடப்பு நிதியாண்டில் ரூ 4 கோடி 70 லட்சத்து 91 ஆயிரம் மதிப்பில் குடிநீர்த் திட்டப்பணிகள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கிராம குடிநீர்த் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் 227 குடியிருப்புகளுக்கு ரூ 2 கோடி 8 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனவரி 85 முடிய 186 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் சுமார் ரூ. 75 லட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 41 குடியிருப்புகளுக்கு ரூ 1 கோடியே 33 லட்சம் செலவில் ' ணிகள் நடப்பு நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

மதுரை மாநகராட்சி மேம்பாட்டு குடிநீர்த்திட்டம் மற்றும் வடிகால் திட்டங்களுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 52 லட்சத்து 85 ஆயிரம் ஒதுக்கப்பட்டு, ஜனவரி மாதம் வரை ரூ. 38 லட்சத்து 39 ஆயிரம் கொடுக்கப்பட்டுள்ளது. பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும் மணலூர் மற்றும் திருப்புவனம் தலைமைப் பணியிடங்களிலிருந்து மதுரை மாநகருக்கு முன்னோடி வளர்ச்சிக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 20 நகரங்களில் (நகராட்சி மற்றும்பேரூராட்சிகள்) பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் மற்றும் மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 2 கோடியே 9 லட்சத்து 56 ஆயிரம் ஒதுக்கப்பட்டு, ஜனவரி மாதம் வரை ரூ 1 கோடியே 1 லட்சத்து 57 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும் திருமங்கலம் மற்றும் அம்மைநாயக்கனூர் நகரங்களுக்கு முன்னோடி குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டு,பயன் அளித்து வருகிறது. ஆயக்குடி நகரத்திற்கு முன்னோடி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் நகராட்சிக்கு கோடை காலத்தின் குடிநீர்த் தட்டுப்பாடு நிலைமையை உத்தேசித்து 50 ஆழ்குழாய்க் கிணறுகள் நகராட்சி எல்லைக்குள் போட உத்தேசிக்கப்பட்டுள்ளது.




**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினை இம் மாவட்டத்தில் 34 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்த ரூ 27 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 20,400 குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும்.

இதுவரை ரூ 637.73 லட்சம் வழங்கப்பட்டு 19,940 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. இத்தொகையில் ரூ.205.06 லட்சம் மானியமாகவும் ரூ. 432 67 லட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. பயன்பெற்றுள்ள குடும்பங்களில் 9765 குடும்பங்கள் ஆதிதிராவிடர்கள் ஆவர்.

நடப்பு நிதியாண்டுக் குறியீட்டளவில் 98 சதவிகிதம் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகள் 1827. 28.2.'85 முடிய 906 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. நிதி ஒதுக்கீடு ரூ. 257.73 லட்சத்தில், இதுவரை ரூ 235.74 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள நிலமற்ற உழைக்கும் சக்தி கொண்டோருக்கு வேலை வாய்ப்புஅளிப்பதற்காக ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டில் 1835 வேலைகள் ரூ.1208.29 லட்சம் மதிப்பீட்டில், ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுத்தல், பாசனக் கால்வாய்கள்-ஏரிக்கரை சீரமைத்தல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், சாலை அமைப்பு ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வேலை செய்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1 கிலோ அரிசியும், மற்றும் பணமாகவும், மொத்தம் ரூ. 8 கூலியாக வழங்கப்படுகிறது.

**சாலை அமைத்தல் :**

இத்திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 25 ஊரக சாலைகள் ரூ.109.94 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை ரூ. 63.72 லட்சம் செலவினமும் 394.134 மெட்ரிக் டன் அரிசி கூலியாகவும்வழங்கப்பட்டுள்ளது. இதில் 2 வேலைகள் முடிவுற்றும் மீதமுள்ள 23 வேலைகள் முன்னேற்றத்திலும் உள்ளன. நெடுஞ்சாலை கிராமப் பணி மற்றும் கிராமச் சாலைத் துறையினரால் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு மற்றும் பாசன ஏரிகள் சீர் செய்தல் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் 150 வேலைகள் ரூ 725.53 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 90.09 லட்சம் செலவினமாகவும், 346.138 மெட்ரிக் டன் அரிசி கூலியாகவும் வழங்கப்பட்டுள்ளது. இதில் 40 வேலைகள் முடிவு பெற்றுள்ளன. மீதமுள்ள வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகள் பொதுப் பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 1984-85 ஆம் ஆண்டில் 280 வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வேலைகள் வேளாண்மைப்பொறியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மொத்த மதிப்பீடு ரூ. 290 லட்சம் ஆகும். கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தால், மண் அரிப்பு தடுக்கப்படுவதோடு நிலத்தடி நீர் வளம் பெருகி, விவசாய உற்பத்தியும் பெருகும். வேளாண்மைப்பொறியியல் துறையினர் இதுவரை 220 வேலைகளை மேற்கொண்டுள்ளனர். ரூபாய் 139.20 லட்சம் செலவாகவும், 471.370 மெ. டன் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. 66 வேலைகள் முடிவுற்றன. மீதமுள்ள வேலைகள்தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

**ஆதிதிராவிட பழங்குடி மக்கள் குடியிருப்பு**

இத்திட்டத்தின் கீழ் ஏழை ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 6000 செலவளிக்கப்படுகிறது. மலைப் பகுதியாயின் ரூ. 9,000 செலவாகிறது. இது முழுவதும் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக 1984 ஜூலை மாதத்தில் 690 வீடுகள் மதுரை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் 680 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய வீடுகள் முடியும் தறுவாயில் உள்ளன. இரண்டாவது கட்டமாக மேலும் 690 வீடுகள் கட்டும்பணி அக்டோபர் 84ல் துவங்கப்பட்டுள்ளது. 126 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகள் முடியும் தறுவாயில் உள்ளன.

விவசாயிகள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க உதவி செய்யும் வகையில் நிலக் கிணறு வெட்டுதல், கிணறுகள் தூர்எடுத்தல், ஆயில் எஞ்சின்கள் வாங்குதல், நீர்ப்பாசனக் குழாய்கள் அமைத்தல், பம்பு ரூம் கட்டுதல் ஆகிய விவசாயத் தொடர்பான பணிகளுக்காக மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது.

வேளாண்மை உற்பத்திப் பெருக்கப்பேருதவித்திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் இதுவரையில் ரூ. 165.84 லட்சம் 2,935 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.55.84 லட்சம் மானியமாகவும் ரூ.110 லட்சம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. பயன்பெற்றுள்ள விவசாயிகளில் 2120 சிறு விவசாயிகளும், 815 மிகச்சிறு விவசாயிகளும் ஆவார்கள்.

விவசாயத் தொடர்புடைய பணிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**சுயவேலைவாய்ப்புத் திட்டம்**

நடப்பு நிதியாண்டில் இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2691 பேர்களுக்கு ரூ.511.31 லட்சம் கடன் உதவி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இலக்கு முடிக்கப்பட்டுள்ளது மீண்டும் 2500 பேர்களுக்குக் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தினால் 102 ஆதிதிராவிட இளைஞர்கள் பயன் பெற்றுள்ளனர். பயன்பெற்றுள்ள மகளிர் 728 பேர்

நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி திங்கள் முடிய 23,784 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாவும், 767 நபர்களுக்கு நிலப் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளன.

1984-85 ஆம் ஆண்டிற்கான குறியீடு 54,200 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். இதுவரை 37,840 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்திற்கு 1984-85ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியீடு ரூ. 759 லட்சம். இதுவரை சிறுசேமிப்புத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 531 லட்சமாகும்.

''தாட்கோ'' திட்டத்தின் மூலம் ரூ. 6,000 மதிப்பில் 201 சதுர அடி பரப்பளவு உள்ள வீடுகள், 'காண்ட்ராக்ட்' முறையில் அல்லாமல் அதன் சொந்தக்காரர்களால் கட்டப்படுகின்றன.

இதுவரை 891 வீடுகள் ரூ. 53 லட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் நடப்பு நிதியாண்டில் 346 வீடுகள் ரூ.20 லட்சத்து 76 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்காகும் செலவுகள் அனைத்தும் அரசு மானியமாகக் கொடுக்கிறது.

**தந்தை பெரியார் கால்வாய்**

பெரியாறு அணைக்கட்டு தண்ணீர்ப் பாளையம் பெருவு கால்வாய் வழியாக கருங்கட்டான் குளம், பி.டி.ஆர். கால்வாய், தந்தை பெரியார் கால்வாய் முதலியவற்றிற்குச் செல்கிறது.

உத்தமபாளையம், பெரியகுளம் தாலுக்காக்களில் சுமார் 5649 ஏக்கர் நிலம் இதன் மூலம் பயன்பெறுகிறது. தங்குதடையின்றித் தண்ணீர் செல்வதற்கு வசதியாக இந்தக் கால்வாய்க்கு காங்கிரீட் தளம் அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, இத்திட்டத்தை ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. 13.4 கி.மீ நீளத்திற்கான கால்வாய் ரூ. 159.22 லட்சம் திட்ட மதிப்பீட்டில் காங்கிரீட் தளம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரை இந்தக் கால்வாயில் சாதாரணமாகப் பாசனத்திற்குத் தண்ணீர் விடப்படுவதில்லை.

அகதிகளாக வந்துள்ள குடும்பத்தினருக்கு கீழ்க்கண்டவாறு அரசின் சார்பில் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு பெரிய நபர் கொண்ட குடும்பத்திற்கு ரூ. 110 (உதவித் தொகை மாதத்திற்கு).

இரண்டு பெரிய நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு ரூ.110+ 82.50. மொத்தம் ரூ. 192.50 (மாதத்திற்கு.)

அ) குடும்பத்திலுளள முதல் குழந்தைக்கு ரூ. 55(மாதத்திற்கு)



ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வருச நாட்டில் மனுநீதி நாளின்போது-இலவச வீட்டு மனைப் பட்டாக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு இ. ஆ. ப. 26.3.85 ல் வழங்கினார்.

இந்தக் காலத்தில் காங்கிரீட் அமைக்கும் பணியை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மதுரை மாவட்டத்தில் இலங்கை அகதிகள்**

முதல் கட்டமாக 19.2.'85 அன்று இம்மாவட்டத்திற்கு 100 இலங்கை அகதிகள் குடும்பத்தினர் அனுப்பப்பட்டனர்.

தொடர்ந்து 2.3.85 அன்று 40 குடும்பங்களும் 4.3.85 அன்று 50 குடும்பங்களும் மதுரை மாவட்டத்திற்கு இதுவரை 200 குடும்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 200 குடும்பங்களில் உள்ள மொத்த நபர்கள் 939 பேர். இவர்கள் மதுரை, உசிலம்பட்டி, திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய நான்கு கோட்டப்பகுதிகளில், ஒவ்வொரு கோட்டத்திற்கும் 50 குடும்பங்கள் வீதம் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆ) குடும்பத்திலுள்ள அடுத்த குழந்தைக்கு ரூ. 27.50 (மாதத்திற்கு)

**மானிய விலையில் அரிசி**

அகதிகள் குடும்பத்தினருக்கு நியாய விலைக் கடைகள் மூலம் மானிய விலையில் அரிசி வழங்கப்படுகிறது. குடும்பத்திலுள்ள பெரியவர்களுக்கு 400 கிராம் வீதம் அரிசியும், குழந்தைகளுக்கு 200 கிராம் வீதமும், கிலோ அரிசி 57 காசு விலையிலும் கொடுக்கப்படுகிறது.

**அகதிகள் குடும்பத்தினருக்கு வீடுகள் :**

அகதிகள் குடும்பத்தினருக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க திருவாதவூர், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

# பொருளாதாரமும் மக்கள் பெருக்கமும்

**ஆதிரை**

பொருளாதாரம் மக்கள் பெருக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. விரைவான மக்கள் தொகைப் பெருக்கம் பொருளாதாரச் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். ஒரு நாட்டின் ஒரு ஆண்டில் நாட்டு வருமானம் 10% உயர்கிறது என வைத்துக்கொள்வோம். அதே ஆண்டில் மக்கள்பெருக்கமும் 10% உயர்கிறது இந்நிலையில் அந்த 10 நாட்டு வருமானம்அந்த 10% மக்கள் தொகைக்குச் சரியாகி விடுகிறது. ஆகையால் திரும்ப மக்களிடம் பற்றாக்குறைதான் நிலவுகிறது. இதுவே ஒரு தனி மனிதனின் வாழ்க்கையிலும் பிரதிபலிக்கிறது. ஒருவனுக்கு அவனது அலுவலகத்திலிருந்து வருகிற மாதம் ரூ. 200 (இடைக்கால நிவாரணம்) அதிகம் கிடைக்கிறது என வைத்துக்கொள்வோம். ஆனால் அவனுக்கு இப்போது ஒரு புதிய குழந்தை பிறக்கிறது என வைத்துக் கொள்வோம். அந்த 200 ரூபாய்க்கு அந்த சின்னஞ்சிறு குழந்தைக்கு உணவு அமுல், பேரக்ஸ், மருந்து விளையாட்டுப் பொருட்கள் வாங்கச் சரியாக இருக்கிறது. எனவே அந்த அதிக ஊதியத்தை அவனால் சேமித்து வைத்துக் கொள்ள முடிவதில்லை.

வால்ரஸ் என்ற புள்ளியியல் நிபுணரது கணக்குப்படி 4 குழந்தைகளைப் பெறப்போகும் திருமண நிகழ்ச்சி 1213 ஆண்டுகளுக்குப் பிறகு 4120 லட்சம் மக்களைப் பெருக்கும்திறன்பெற்றது.

இயற்கையில் மனித உணவின் உற்பத்தி மெதுவாக கூட்டெண் விகிதத்தில் (2 + 2 + 2) பெருகும் போது மக்கள் தொகைப்பெருக்கம் ( 2X2X2 ) என்ற மதிப்பெண் விகிதத்தில் அதிகரிக்கிறது. இதை 1798ஆம் ஆண்டு தாமஸ் ராபர்ட் மால்தஸ் என்ற அறிஞர் தமது மக்கள் தொகைக் கோட்பாட்டில் விளக்கி எழுதியுள்ளார்.

அதாவது உணவு உற்பத்தி 1, 2, 3, 4, 5, 6, 7, 8, என்ற விகிதத்திலும், மக்கள்பெருக்கம் 1, 2, 4, 8, 16, 32, 64, 128 மதிப்பெண் விகிதத்திலும் அமைகின்றன. இவ்விகிதங்களின்படி கணக்கிட்டால் 200 ஆண்டுகளில் மக்கள் தொகைக்கும் உணவு உற்பத்திக்கும் உள்ள வீதம் 256.9 ஆகவும் 300 ஆண்டுகளில் 4069.13 ஆகவும் பெருகும். பல்வேறு காரணங்களால் மக்கள் தொகையின் விரைவான பெருக்கத்திற்கேற்ப உணவுப் பொருள்களின் உற்பத்தி வேகம் அமைவதில்லை. 100 ஆண்டுகளில் மக்கள் தொகை 16 மடங்கு பெருகும் போது உணவு உற்பத்தி 5 மடங்கு மட்டுமே அதிகரிக்கும்.

பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் மக்களிடம் பஞ்சம், பட்டினி, கொள்ளை நோய்கள், தலைவிரித்தாடுகின்றன. இதையே இயல்புத்தடை என்று சொல்கிறோம். இவ்வியல்புத் தடையில் விளைவாக மக்கள் தொகைப் பெருக்கம் சம நிலை அடையுமென மால்தஸ் கூறுகிறார். இச்சீர்கேடுகளைத் தவிர்க்க மனிதன் திருமணம் செய்யாதிருத்தல் திருமணத்தை ஒத்தி வைத்தல் - திருமணத்திற்குப்பின் புலனடக்கம் கடைபிடித்தல், ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற தவிர்ப்புத் தடைகளைப் பின்பற்ற வேண்டும்.

மக்கள் பெருக்கம் மனிதனால் தவிர்ப்புத் தடைகளால் கட்டுப்படுத்தப்படாவிடில் இயற்கைதனது இயல்புத் தடைகளால் அதைக் கட்டுப்படுத்திவிடும். தவிர்க்க முடியாத காரணங்களால் மனிதன் இன விருத்தியைக் கட்டுப்படுத்தத் தவிர்ப்புத்தடைகளைப் பின்பற்ற வேண்டும் என மார்ஷல் கூறுகிறார்.

ஜப்பானிலும் அமெரிக்காவிலும் பொருளாதாரம் வெகுவாக உயர்ந்திருக்கிறது. காரணம் அதன் குறைவான மக்கள் தொகையே. சீனாவில் ஒரு குழந்தையேபெற்றுக் கொள்ள வேண்டுமென அரசு நிபந்தனை விதித்துள்ளது. உணவு உற்பத்திப் பெருக்க வீதத்தைவிட மக்கள் பெருக்க வீதம் அதிகமாக இருக்கும் நிலை, வளரும் ஆசிய நாடுகள் பலவற்றில் அமைந்துள்ளது.

மால்தஸிற்கு எதிராக கேனன் என்பவர் ஒரு கோட்பாட்டைக் கூறுகிறார். உச்சநிலை தலா வருமானத்தை அளிக்கவல்ல மக்கள் தொகை உத்தம மக்கள் தொகை எனக் கூறுகிறார். மக்கள் தொகை இதற்குக் குறைவாக இருந்தால் ஆகும். இத்தகைய போதா மக்கள் தொகை இருந்தால் நாட்டு வளங்கள் அனைத்தையும் உற்பத்தியைப் பெருக்கப் பயன்படுத்த முடியாது. நாட்டு வருமானமும் தலா வருமானமும் குறையும் என்கிறார். இவர் மேலும், பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் 2 கை கால்களோடு தானே பிறந்துள்ளன எனக் கூறுகிறார். மால்தஸ் ஆதரவாளர்கள் அந்தக் குழந்தைக்கு 20 வயது ஆகும் வரை அதனைப் பாதுகாக்க வேண்டியிருக்கிறதே அப்போது அதற்காகும் செலவுகள் என்ன என்று எதிர்க்கேள்வியே கேட்கின்றனர்.

அதிக மக்கள் தொகை, மக்களின் வறுமை, தாழ்வான வாழ்க்கைத்தரம், உணவுப்பற்றாக்குறை அதிக அளவு மக்கள் வேளாண்மையைச் சார்ந்திருத்தல், உயர்ந்த பிறப்பு வீதம் ஆகியவை இந்தியா அதிக மக்கள் தொகை



யைக் கொண்ட நாடு என்பதை உணர்த்துகின்றன.

உலக நாடுகளிடையே சீனாவிற்கு அடுத்து இந்தியாதான் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடாகும். 1971ல் சீனாவில் மக்கள் தொகை சுமார் 60 கோடியாகவும் இந்தியாவில் சுமார் 55 கோடியாகவும் இருந்தது. 1985ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி இந்தியா மக்கள்தொகை 61,58,43,000 ஆகும். உலக மக்களில் 7ல் ஒருவர் இந்தியரே.

இந்தியாவின் எல்லா வளங்களையும் முற்றிலுமாகப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினால்தான் மக்களது வாழ்க்கைத் தரம் உயரும். சுமார் 80% மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். 70% மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். திருமணம் செய்யாமலிருக்கும் பெண்கள் சுமார் 1 சதவீதத்தினரே. ஆனால் நாட்டில் 3ல் ஒருவர் 35 வயது ஆன பிறகு கூடத் திருமணம் செய்து கொள்வதில்லை.

**இந்தியத் துணைக்கண்டத்தில் விரைவான மக்கள் பெருக்கம் இருக்கக் காரணங்கள்:**

நம் நாட்டில்தான் ''எல்லாம் அவன் செயல்'' எல்லாம் அவன் கொடுத்தது என்று பல குழந்தைகளைக் கொண்ட பெற்றோர் இறைவன் மீது பழியையும், பாரத்தையும் சுமத்துகிறார்கள். ஒரு ஆண் குழந்தையாவது பெற்றுவிட வேண்டுமென்ற முயற்சியில் தோல்வியுற்று, தொடர்ச்சியாகப் பல பெண் குழந்தைகளையே பெற்றுக் கொண்டிருக்கும் நம்பிக்கை நோக்குக் கொண்ட பெற்றோர்களையும் காண்கிறோம்.

குறைவான வருமானம் வறுமைக்குக் காரணமாகவும் விளைவாகவும் அமைகிறது. பிற நாடுகளோடு ஒப்பிடும் போது இந்தியாவில் தலா வருமானம் மிகக் குறைவாக உள்ளது. (ரூ. 360) வறிய நிலைமையிலுள்ள இந்தியர்களுக்கு ஒரே பொழுதுபோக்கு விளையாட்டு— குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது.

இந்தியாவில் நாளொன்றுக்கு சுமார் 60,000 குழந்தைகள் பிறக்கின்றன. இறப்பு வீதம் குறைக்கப்பட்டதால் பிறப்பு வீதம் உயர்ந்துள்ளது.

**விரைவான மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வுகள்:**

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கலாம்.

தொழில் துறை ஆக்கத்தை அதிகரிக்கலாம்.

வேலை வாய்ப்புகளைப்பெருக்கலாம்.

வளங்களை முழுமையாகப் பயன்படுத்துதல்

அவசியப் பொருள்களைச்சிறப்பாகப் பங்கிடுதல்.

மக்களை எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுதல்.

திருமண வயதை உயர்த்துதல்.

மக்களது வாழ்க்கைத் தரத்தைக் கூட்டுதல்.

முதலீட்டின் அளவைக் கூட்டுதல்.

மக்களது மூட நம்பிக்கையை ஒழித்தல்.

குடும்ப நலத்திற்காகக் கருத்தடை முறைகளைத் தீவிரமாகச் செயல்படுத்துதல்.

அதிக குழந்தைகளைப் பெறுவதால் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் ஏற்படும் சுமைகளை கிராம மக்கள் உணருமாறு செய்தல்.

திட்டமிடுதலால் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் மக்கள் அனைவருக்கும் சமமாகக்கிடைக்கச் செய்தல்.

வாணிகத்தின் மூலம் தரகர்கள் உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் சுரண்டும் நிலையை நீக்குதல்.

அவசியப் பண்டங்களைச் சலுகை விலையில் கிடைக்கச் செய்யலாம். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்.

செல்வப் பங்கீட்டிலும் வருமானத்திலும் உள்ள ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்.

சமூக நலப்பணிகளைப் பெருக்குதல்.

உண்மையான சமதர்மத்தைப் பொதுவுடைமை முறையின் மூலம் கிடைக்கச் செய்தல்.

குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளையும், பின்தங்கிய நாடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு முக்கிய வேறுபாட்டை அறியலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்ததுபோல் பிறப்பு வீதமும் வீழ்ச்சியடைந்தது. காரணம் மக்களின்கல்வி அறிவு, வாழ்க்கைத் தர உயர்வு, குடும்பத்தில் குழந்தைகளைப் பெருக்குவதை விட வாழ்க்கையின் இதர சுகங்களைப் பெருக்குவதிலே ஆர்வம் கொண்டுள்ளன. ஆனால் பின்தங்கிய நாட்டில் இதற்கு நேர் மாறாக உள்ளது.

அமெரிக்க நாட்டில் ஒருவனிடம் உனக்குக் கார்வேண்டுமா, குழந்தை வேண்டுமா என்று கேட்டால் 'கார்தான் வேண்டும்' என்பான். ஆக அத்தகைய வாழ்க்கைச் சுகங்களிலே அதிக ஆர்வத்தைக் காட்டுகின்றனர். அமெரிக்காவில் ஒரு சாதாரண மனிதர் கூட ஒரு கார் வைத்துள்ளார். காரணம் அவர்களது உயர்ந்த பொருளாதாரம் தான்.

உலகத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் இப்படிப் பெருகிக் கொண்டே போனால் கி.பி.2000 வருடத்தில் உலக மக்கள் தொகை 640 கோடியை எட்டிப் பிடிக்கும்.

நம் இந்தியாவில் மக்கள் தொகைப் பெருக்கத்தைவிட உணவு உற்பத்திப் பெருக்கம் வெகுவாகக்குறைந்துள்ளது. இது பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிப்பதாக உள்ளது. இதனால் எத்தகைய பொருளாதாரத் திட்டங்கள் வரைந்தாலும் பொருளாதாரத் தரத்தை உயர்த்த முடிவதில்லை. இந்நிலை நீடித்தால் நாட்டில் உணவு உற்பத்தி, மக்கள் தொகைக்கு ஏற்றவாறு இருக்காது. அதனால் உணவுப் பிரச்சினை இருந்து கொண்டே இருக்கும். ஆனால் கிராமங்களிலும் அதிக அளவு குடும்பநலப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். ஆண்டவன் கொடுத்தான் என்ற எண்ணத்தை கிராம மக்களிடமிருந்து மாற்றியமைக்க வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டின் வளத்தையே அழிக்கும் என்ற உண்மையை கிராமத்துத் தாய்மார்களின் உள்ளங்களில், பதியச் செய்ய வேண்டும்

## அமெரிக்காவில் காந்தி மையம்



அண்ணல் காந்தியின் கொள்கைகள் அமெரிக்கர்களையும் கவர்ந்துள்ளன. 'மோகன் தாஸ் கே. காந்தி அஹிம்சை மையம்" என்ற ஓர் அமைப்பு, நியூயார்க்கில் தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சமுதாய மையம் ஸ்டேடன் தீவில் உள்ள ஒரு முன்னாள் மெதாடிஸ்ட் கிறிஸ்துவ ஆலயத்தில் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. "காந்தி மெமோரியல் இண்டர் நேஷனல் ஃபவுண்டேஷன்" என்ற அமைப்பினால் நடத்தப்படும் இந்தசமுதாய மையத்தில் கருத்தரங்குகள், கல்வி நிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள், ஊட்ட உணவு, உடல்நலம், மருத்துவம், மற்றும் சட்ட நுணுக்க உதவி ஆகியனவும் வழங்கப்படும். இம்மையம் ஒரு தத்துவக் கூடமாகவும் திகழ்கிறது.

அமெரிக்கத் தகவல் நிலையம்



# கம்பர் புகழ் பாடும் கலைக் கோட்டம்

இரெ. மகாலிங்கம் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு), தஞ்சாவூர்.

தமிழ் வளர்த்த பெரியோர்களையும், முத்தமிழ்த் துறையில் சிறந்து விளங்கிய மேதைகளையும் போற்றிப் பாராட்டும் தமிழக அரசு, வளமார் தமிழுக்கு வளம் சேர்த்த அந்தப்பெரு மக்களின் நினைவு இந்த வையத்தில் நின்று நிலைத்திடும் வகையில் நினைவுச் சின்னங்கள் எழுப்பி வருகின்றது.

கடந்த காலத்தில் வாழ்ந்திருந்த தமிழ்த் தொண்டர்களின் பெருமையை நிகழ்காலத்திற்கும், எதிர்காலத் தலைமுறையினருக்கும் எடுத்துரைக்கும் வகையில் அரசு அமைத்து வரும் அந்தச் சின்னங்கள் அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்று கம்பர் கலைக் கோட்டம் அமைந்திருக்கிறது. அதுவும் அந்த மகாகவி பிறந்த மண்ணில் உருவாக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்குத் தென்மேற்கே 10 கல் தொலைவிலுள்ள சிற்றூர், தேரெழுந்தூர். இவ்வூருக்கு எத்தனையோ இலக்கிய, புராணச் சிறப்புகளுண்டு. கம்பன் பிறந்த ஊர் என்பதுதான் அச்சிறப்புகளில் முதன்மையானது ஆகும்.

தன் அவைக்கு வந்த பெண்ணொருத்தியிடம் 'நீ எந்த ஊர்?' என்று சோழ மன்னன் வினவினானாம்.

''கம்பன் பிறந்தவூர்
காவிரி தங்குமூர்
கும்பமுனி சாபம்
குலைந்தவூர் செம்பதுமத்
தாதகத்து நான்முகனும்
தாதையும் தேடிக்காணா
ஓதகத் தார்வாழும் அழுந்தூர்

என்று அதற்கு அவள் பதிலளித்தாளாம்.

''புலவர் புராணம்'' என்னும் நூலில் ''ஈரார் தரும் சோழ நாடதனின்'' என்று தொடங்கும் பகுதியில் காணப்படும் பாடல் இதுவாகும். இந்தப் பாடலில் இருந்து கம்பர் பிறந்ததனால் அழுந்தூர் (தெரெழுந்தூர்) பெற்ற பெருமையை நம்மால் உணர்ந்திட முடிகிறது. நாடும் ஏடும் போற்றும் இந்த அழுந்தூரில்தான்-தேரெழுந்தூரில்தான் கம்பர் கோட்டம் எழுந்துள்ளது.

காலத்தால் அழியாத கவிதைகள் படைத்துத் தமிழுக்குப் புத்தெழுச்சி தந்த கவியரசனின் பெருமை கூறும் கலைக்கோயிலாக 'பாவியலின் பண்பையெல்லாம் பண்ணப்பில் தான்படைத்த காவியத்தின் ஜீவியத்தில் காட்டிவிட்ட'' கவிஞரின் புகழ்பரப்பும் நிலையமாக இக்கோட்டம் அமைந்துள்ளது.

காண்போரின் கருத்தையும், கவனத்தையும் ஈர்த்துக் கம்பனின் புகழை நிலைநிறுத்தும் இக்கோட்டத்திற்குள் நுழைந்தவுடன் நம் கண்களில் படுவது கம்பனின் அழகிய திருவுருவச் சிலை தான். 24'x24' என்ற அளவில் சதுர வடிவில் கட்டப்பட்டுள்ள அழகிய மண்டபத்தின் நடுமையத்தில் 7½' உயரம்கொண்ட இச்சிலை வைக்கப்பட்டுள்ளது.

நாடு தழைக்க -நற்றமிழ்செழிக்க ஏடெடுத்துக் கவிபாடியவன் கம்பநாடன். அதனால்தான் அவனது கரங்களில் ஓலைச் சுவடிகள் தவழ்கின்றனபோலும்.

கம்பர் சிலைக்கு எதிரே-மண்டபத்திற்கு முன்பாக இரண்டு பெரிய குத்துவிளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. விளக்கின் ஒளி, சிலையின் மீது விழும்போது சிற்பியின் கைவண்ணம் நன்கு தெரிகின்றது.

சிலை மண்டபத்தை அடுத்து அரங்கம் ஒன்று அமைந்துள்ளது. 110 அடி நீளம் 50 அடி அகலம் உடைய இந்த நீண்ட அரங்கத்திற்கு இருபுறமும் சுவர்கள் இல்லை. குறைந்த எண்ணிக்கையிலான தூண்களே இந்த அரங்கத்தைத் தாங்கி நிற்கின்றன. மேடையில் நடக்கும் நிகழ்ச்சியை மக்கள் அரங்கத்திற்கு வெளியே இருந்தும் பார்ப்பதற்கு ஏதுவாக இதன் அமைப்பு, சிறப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கானோர் அமர்ந்து நிகழ்ச்சியைக் காணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இவ்வரங்கம் முடியுமிடத்தில் கம்பர் மணிமண்டபம் அமைந்துள்ளது. 46 அடிக்கு 46 அடி என்ற அளவில் சதுர வடிவில் அமைந்த இந்த மணி மண்டபம் ஒருங்கிணைந்த காங்கிரீட் சித்திரங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது. சிற்ப வேலைகள் அனைத்தும் அருகிலுள்ள அருள்மிகு ஆமருவியப்பன் ஆலயத்திலுள்ள அமைப்பில் வடிக்கப்பட்டுள்ளன. தஞ்சை மாவட்டத்திலேயே இப்படி ஓர் அரங்கு இல்லை என்று சொல்லத் தக்க வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது என்றால் மிகையாகாது. மணி மண்டபத்தின் கூரையும் முன்புற அரங்கத்தின் கூரையும் எதிரொலி எழாத வண்ணம் ஒரேமட்டத்தில் கட்டப்பட்டுள்ளன.

நாடக அரங்கு - நடனமங்கையர் -வண்ண விளக்குகள் -மத்தள முழக்கம் - திரைச் சீலைகள்- இன்னிசை கீதம் - பார்வையாளர் கூட்டம் - நாடகத் தலைமை எப்படி இருக்கவேண்டும் என்பது பற்றியெல்லாம் தனது காவியத்தில் வர்ணித்தவன் கம்பன்.



'தண்டலை மயில்கள் ஆட
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற்றிருக்கும் மாதோ!

என்று எழுதி இயற்கை எழிலை நாடக அரங்காக மாற்றிக்காட்டியவன் மகாகவி கம்பன்.

அதனால்தான் அவன் புகழ் பாடும் கலைக் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அரங்கு, அனைத்து வசதிகளோடு உருவாக்கப்பட்டுள்ளது.

அரங்கின் பின்புறம் 18க்கு 18 அடி சதுர வடிவில் இரண்டு ஓய்வு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாபெரும் நாடகங்கள் நடத்தப்பெறும்போது ஒப்பனை அறைகளாகப் பயன்படும் வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

அரங்கின் இரு மருங்கிலும் இரண்டு அறைகள் உள்ளன. 26க்கு 26 அடி என்ற அளவில் சதுரவடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த அறைகள், நடுவில் சுவரில்லாமல் அகலமான கூரைத்தளம் கொண்டவைகளாக உருவாக்கட்






''கடந்த முறை நான் சென்னைக்கு வந்தபோது தமிழ்ப்புத்தாண்டு அன்று விமான நிலையத்தைத் திறக்கும்படி கூறியிருந்தேன். அதன்படி இன்று திறப்பு விழா நடைபெறுகிறது. விரைவாகஇதைக்கட்டிமுடித்ததுபற்றி மகிழ்ச்சியடைகின்றேன். தமிழக அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''புதிய நூற்றாண்டின் தேவையைக் கருதி இதுபோன்ற பணிகள் செய்யப்படுகின்றன. இது போன்ற விமான நிலையங்களை ஏற்படுத்தும்போது அப்பகுதியில் உள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்க வேண்டும் என்ற யோசனை, சென்னையில் நல்லமுறையில் கட்டப்பட்டுள்ள இந்த விமான நிலைய வடிவமைப்பில் பின்பற்றப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். தமிழக மின்துறை அமைச்சர் கூறிய கருத்துக்களை மைய அரசு பரிசீலனை செய்யும்''.

விழா இறுதியில் சென்னை விமான நிலையப் பொது மேலாளர் திரு பி.ஆர். எஸ்.ராவ் நன்றி கூறினார்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி வைஜயந்திமாலா பாலி பேசுகையில், ''இந் நிலையம் அமைவதால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி பெருகும்' என்றார்.

அ மருதவிநாயகம்

- சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வெளிநாட்டு, உள்நாட்டு விமானங்கள் வந்துபோனதால் பயணிகளுக்கு மிகுந்த சிரமங்கள் இருந்து வந்தன. அவற்றைப் போக்கவும், இட நெருக்கடியைத் தவிர்க்கவும் புதிதாக உள்நாட்டு விமான நிலையம் உருவாக்கப்பட்டது. டெல்லி, பம்பாய், ஐதராபாத், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருவனந்தபுரம், கொச்சி, திருப்பதி, கல்கத்தா ஆகிய பல பகுதிகளிலிருந்தும் சென்னைக்கு வரும் விமானங்கள் அனைத்தும் இந்த உள்நாட்டு விமான நிலையத்தில்வந்து இறங்கும். அதுபோலவே மேற்சொன்ன ஊர்களுக்கு இந்த விமான நிலையத்திலிருந்து விமானங்கள் புறப்படும்.
- இந்தப் புதிய விமான நிலையம் மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.
- விமான நிலையக் கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டது. விமான நிலையக் கட்டடம் முழுவதும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ளது.
- விமானப் பயணிகளின் நலனைக் கருதி தானே நகரும் படிகள் (எஸ்கலேட்டர்) அமைக்கப்பட்டுள்ளன.
- இந்த விமான நிலைய வருகைக் கூடத்தில் 1,200 பயணிகள் வசதிக்காக அனைத்து நவீன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.
- இருபது உள் கண்காணிப்பு கவுண்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமைகளை எடுத்துச் செல்ல 250 டிராலி வண்டிகள் உள்ளன.
- புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட விமான நிலையத்தின் கட்டடப் பணிகள் 1982இல் தொடங்கப்பட்டது. இதன் மொத்தச் செலவு ரூ 16 கோடியாகும். இதன் பரப்பளவு 160 ஏக்கர் ஆகும்.
- புதிய விமான நிலையத்திலிருந்து மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும், சென்னையின் பல பகுதிக்கும் பல்லவன் பேருந்து வசதி உள்ளது.



# பாரதி நூற்பாலை
## சில சிந்தனைகள்

நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப.
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை

**1981** டிசம்பர் 11ஆம் தேதி முதற்கொண்டு 1982 டிசம்பர் 11ஆம் தேதி வரை ஓராண்டுக் காலம் மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு மிகவும் விமரிசையாகக் கொண்டாடியதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

பாரதி நூற்றாண்டு விழாவின் போது, அம் மகாகவிக்குப் பல விதங்களில் அரசுச் சார்பில் சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1981 டிசம்பரில் நூற்றாண்டு ஆரம்ப விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மகாகவி பாரதிக்கு அரசு மேற்கொள்ளவிருக்கும் பற்பல சிறப்புத் திட்டங்களை அறிவித்தார்கள். அவற்றில் ஒன்று, பாரதியின் பெயரால் எட்டயபுரத்தில் நூற்பாலை ஏற்படுத்தும் திட்டம் ஆகும்.

1981 டிசம்பரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி 1985 ஏப்ரல் 5ந் தேதியன்று சீரும் சிறப்புடனும் நூற்பாலை செயல்படத் தொடங்கியுள்ளது.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னே பிறந்து, தம் கவித்திறத்தால் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டிய மகாகவி பாரதியின் பெயரால் நூற்பாலை அமைந்ததால் அம்மகாகவியின் பெயர் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

இன்றைய தினம், பாரதியின் பெயரால் நூற்பாலை செயற்படத் தொடங்கியது பெருமைப்படத்தக்க நிகழ்ச்சி என்பதை நினைக்கும்போது, இதன் பின்னணி வரலாற்றைச் சற்றே எண்ணிப் பார்ப்பதும் வேண்டுவதே!

பாரதியின் தந்தை சின்னச்சாமி ஐயர் எட்டயபுரத்தில் ஜமீனில் வேலை பார்த்து வந்தார். அப்பகுதியில் அவருக்கு நல்ல செல்வாக்கு உண்டு.

மேலை நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணம், அவற்றின் தொழில் நுட்ப முன்னேற்றங்களே என்பதை நன்றாக உணர்ந்த சின்னச்சாமி ஐயர் தாம் வாழும் பகுதியையும் தொழில் ரீதியில் முன்னேற்றம் செய்ய விரும்பினார்.

அதனால், அவர் எட்டயபுரத்தை அடுத்துள்ள பிதப்புரத்தில் (பித்தராஜபுரம்) பருத்தி அரைக்கும் இயந்திர மனையை 1892 பிப்ரவரி 6ந்தேதி நிறுவினார்.

சின்னச்சாமி ஐயர் தம்முடைய தொழில் முயற்சிக்குத் தேவைப்பட்ட தொகையை எளிதில் சேகரித்தார். பங்கு ஒன்றுக்கு ரூ.100 எனக் கணக்கிட்டு, 200 பங்குகளால் ரூ.20,000-ஐ மூலதனமாகத் திரட்டத்திட்டமிட்டார்.

சின்னச்சாமி ஐயரின் சுதேசியத் தொழில் முயற்சியில் அக்கறை கொண்டவர்கள் மட்டுமே பங்குகளை வாங்கிக் கொண்டனர். இதில் எட்டயபுர ஜமீன்தாரே 50 பங்குகள் எடுத்திருந்தார். 189 பங்குகள் விற்பனையாகி, ரூ. 19,800 கைக்குக் கிடைத்தது.

இயந்திரச் சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் பம்பாயிலிருந்து வரவழைக்கப்பட்டன. இதற்காகச் சின்னச்சாமி ஐயர் சுமார் ரூ.8,000 வரை கடனும் வாங்கினார். இயந்திரங்களைப் பூட்டி, ஓட்டுவதற்குரிய வல்லுநர்களையும் அவர் பம்பாயிலிருந்து தருவிக்க ஏற்பாடுகளும் செய்தார். ஆனால், இயந்திர வல்லுநர்கள் பம்பாயிலிருந்து எட்டயபுரம் வரத் தாமதப்பட்டது.

மேலும், பெரும் அளவில் கடன் வாங்கினார். தொழிற்சாலைக்கான இடத்தைக் கையகப்படுத்தி, கட்டடம் கட்டினார். இதனால், பிப்ரவரியில் பதிவு செய்யப்பெற்ற நிறுவனம் டிசம்பர் வரை வேலை செய்யவில்லை. செலவினங்கள் மட்டும் கூடிக் கொண்டே சென்றன.

1892ஆம் வருடம் டிசம்பர் மாதம் சின்னச்சாமி வெளியிட்ட கணக்கு விவரத்தில் இயந்திரங்களுக்கான செலவுத் தொகை மட்டும் ரூ. 17,758-13-4 எனக் காணப்படுகிறது.

1893, 1984ஆம் வருடங்களிலும் நிறுவனத்தின் பணி தொடர்ந்து நடைபெற்றாலும், லாபம் ஏதுமில்லை.

இத்தனைக்கும் மேலாக, சுதேச முயற்சிகளை நசுக்கும் கொள்கையைப் பிரிட்டிஷ் அரசு கைக் கொண்டது. தவிரவும், இம்மாதிரியான முயற்சிக்கு அக்காலத்தில் பொதுமக்கள் ஆதரவு வெளிப்படையாகஇருக்கவில்லை. இவை போன்ற பல காரணங்களால், 1895ல் கம்பெனியை மூட வேண்டிய நிலைக்கு ஆளானார் சின்னச்சாமி ஐயர்.

கடன் வாங்கியும், கைம் முதலைப் போட்டும், பங்குகள்சேர்த்தும், 1892இல் தொடங்கிய தொழிற்சாலையை 1895ல் சின்னச்சாமி ஐயர் மூட வேண்டிய நிர்ப்பந்த —அவல நிலைக்குஆளானார்.

அன்று 1895இல் ''ஊர் செய்த சதி''யால் மூடப்பட்ட ஆலைக்கு இன்று 1985 ஏப்ரல் 5இல் தமிழக அரசு புத்துயிர் அளித்து மகாகவி பாரதியின் பெயராலேயே அமைத்தது வரலாற்றுப்புகழ் பூத்த செய்தியாகும்.






# புதுயுகக் கவிஞன் பெயரால் புதிய நூற்பாலை

*'ஆலைகள் வைப்போம்— கல்விச் சாலைகள் வைப்போம்'*

என தென்தமிழ்நாட்டின் கரிசல் மண்ணிலிருந்து ஒரு குரல் எழுந்தது. அந்த மகாகவி உதிர்த்த கவிதை வரிகள் காற்றில் மிதந்து, காலந்தோறும் கடந்து, புரட்சித் தலைவர் ஆட்சியில், ஒரு நனவாக, அந்தக் கவி பிறந்த மண்ணிலே 'ஆலையாக' இன்று மலர்ந்திருக்கிறது.

31.10.ஏக்கர் நிலத்தில் ரூ. 5.10 கோடி செலவில், பாரதியார் கூட்டுறவு நூற்பாலை எழுந்து நிற்கிறது. மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 4.5.1985 அன்று குத்துவிளக்கை ஏற்றி வைத்து, நூற்பாலை திறப்பு விழா நடத்தி, தொழிலாளர்களுக்கும் அப்பகுதி மக்களுக்கும் நம்பிக்கை ஒளிவிளக்கை ஏற்றிவைத்தார்கள்.

மாண்புமிகு கைத்தறி துணிநூல் அமைச்சர் திரு வி.வி.சாமிநாதன் அவர்கள் தலைமையேற்க, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைக்க, பாரதியார் கூட்டுறவு நூற்பாலை, தனது பயணத்தைத் தொடங்கியது. சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு என். சௌந்தரராசன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் திரு கடம்பூர் சனார்த்தனம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஆர்.ரங்கசாமி, திருபாளைநாராயணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஆர்.கே. பெருமாள், திரு அழகிரிசாமி, எட்டயபுரம் பாரதி சங்கத் தலைவர் திரு சாமிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வ.இராமதாஸ் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நல்கினார்.

கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு இரா.ஆறுமுகம் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் ''ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் அளவுக்கு ஆலையில் உற்பத்தி நடைபெறும். இங்கே பணியாற்றும் 300 தொழிலாளர்களுக்கும் ஆண்டொன்றுக்கு ஊதியமாக மட்டும் 55 லட்சம் ரூபாய் வழங்கப்படும்'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு கைத்தறித் துணிநூல் அமைச்சர் அவர்கள் தமது தலைமை உரையில், ''இந்தக் கூட்டுறவு நூற்பாலையில் உற்பத்தி செய்யப்படும் நூலுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது. இத்தகைய ஆலைகள் வந்தபின்னும், காலத்தை வென்று நிற்கும் 'இடம்' கைத்தறிக்கு இருக்கிறது. கைத்தறித் துணிகள் மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ.450 கோடி ஏற்றுமதியாகிறது. இங்கே நெசவுக்குத்தேவையானது தவிர அதிகமான நூல் நமது கூட்டுறவு நூற்பாலைகளில் தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. பம்பாய்க்கும் மற்ற இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. விரைவில் கைத்தறிக்குத் தேவையான நூலையும், இதுபோன்ற கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தயாரிக்க இருக்கிறோம்'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர், திரு: இராம. வீரப்பன் அவர்கள் தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:

'உலகப் புகழ்பெற்ற மக்கள் கவிஞன் பாரதி பிறந்த இம்மண்ணில் அவனுடைய நினைவாக பாரதி கூட்டுறவு நூற்பாலையைத் தமிழகத்தினுடைய தளநாயகன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுடைய கருணை உள்ளத்தினாலும் சிறந்த நிர்வாகத் திறமையினாலும்- இந்தப் பகுதிக்குக் கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில் வாராது வந்த மாமணியாக உருவாக்கப் பெற்றிருக்கின்ற இந்த நூற்பாலையை இன்றைக்கு நாம் தொடங்கி வைத்துக் கொண்டிருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய பெருமக்கள் இந்த நூற்பாலை வரவேண்டுமென்று எவ்வளவு காலம் இந்தப் பகுதி மக்கள் காத்துக் கிடந்தார்கள் என்பதையும் அது நடைபெறுமா என்று ஏங்கிய ஏக்கத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

இந்த நூற்பாலை மட்டுமல்ல, இந்த எட்டயபுரம் பகுதிக்கு மட்டுமல்ல தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடக்கின்ற கிராமப்புறப் பகுதியிலே வாழுகின்ற மக்கள் தங்களுக்கென்று திட்டங்கள் நிறைவேற்றப்படுமா, அடிப்படை வசதிகள் அளிக்கப்படுமா என்று ஆண்டாண்டுக் காலமாக ஏங்கிக் கிடந்த காலத்திலேதான், காலத்தின் தூதுவனாக, கருணை மறவனாக நமது புரட்சித் தலைவர் அவர்கள் இம்மாநிலத்தினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஏழரை ஆண்டுக் காலத்தில் வியத்தகு சாதனைகளைச்செய்து கொண்டு வருகிறார்கள்.

1981ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் பதின்மூன்றாம் நாள் மகாகவி பாரதியினுடைய நூற்றாண்டு விழாவை தமிழகம் மாத்திரமல்ல, இந்தியத் துணைக் கண்டமே பார்த்து வியக்கின்ற அளவுக்குத் தமிழக அரசின் சார்பிலே கொண்டாடிய அந்த நேரத்திலேதான் பல்வேறு திட்டங்களுக்கு பாரதியினுடைய நினைவாக அடிக்கல் நாட்டப்பெற்றன. பெண்களுக்காக ஒரு தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரி; பெண்கள் உயர்நிலைப்பள்ளி; பாரதியின் நினைவாக ஒரு நூற்பாலை, நினைவு உமறுப்புலவருடைய நினைவு மண்டபம் ஆகிய இத்தனைக்கும் அன்று அடித்தளக்கல் நாட்டப்பட்டது. நீண்டகாலமாக இந்தப் பகுதி மக்கள் தங்கள் கோரிக்கையாக வைத்து வந்த மருத்துவமனை விஸ்தரிப்புத் திட்டத்திற்கும் அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. இன்றைக்கு, அடிக்கல் நாட்டப்பட்ட அத்துணை திட்டங்களும் உருப்பெற்றுவிட்டன, இந்த மூன்றாண்டுக் காலத்திலே என்பதை நான் இங்கே பெருமையோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பாரதியைப் பெற்றெடுத்த தந்தையார் அவர் காலத்திலே இங்கே ஒரு நூற்பாலையை நடத்த வேண்டுமென்று முயற்சி செய்தார். பஞ்சைப் பதனிடு கின்ற ஒரு ஆலையாகத் தொடங்கி, வெள்ளைக்காரர்களுடைய எதிர்ப்பை முறியடிக்க முடியாமல் அதனால் நட்டமடைந்து அநேக சொத்துக்களை இழந்தார். இன்றைக்கும் எட்டையபுரம் பகுதியிலே அந்த ஆலை தொடங்கப்பட்ட பகுதி இடிந்து போன சுவர்களோடு சின்னமாக நின்று நினைவுச் கொண்டிருக்கிறது. ஆகவேதான் எட்டையபுரத்திலே பாரதியின் நினைவாக ஒரு கூட்டுறவு நூற்பாலை தொடங்க வேண்டுமென்ற அந்த லட்சியத்தையும் புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்தார்கள்.

5 கோடி ரூபாய் செலவில் சுமார் 300 நபர் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்கின்றது இந்த நூற்பாலை. இதில் 12500 கதிர்கள்தான் இருக்கின்றன. அது லாபகரமாக இருக்காது, 25000மாக உயர்த்தவேண்டும் என்கிற அந்தக் கருத்தையும் நமது சட்ட மன்ற உறுப்பினர் தொழிற்சங்கத் தலைவர் திரு.ரெங்கசாமி அவர்கள் தெரிவித்தார்கள். அது 25000 கதிர்கள் உள்ள ஒரு நூற்பாலையாக உயர்த்தப்படும் என்ற உறுதிமொழியை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் உடனேயே வழங்கியிருக்கிறார்கள்.

இதுதான் புரட்சித்தலைவர் ஆட்சியினுடைய சீர்மிகு இலக்கணம் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆற்றல்மிக்க தலைவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவருடைய காலத்திலேதான் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே, தமிழ்நாட்டில் ஐந்து நூற்பாலைகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஐந்து ஐந்தாண்டு திட்டக்காலத்திலே மட்டும்

பட்டுள்ளன. இந்த இரண்டு அறைகளில் ஒன்று நூலகமாகச் செயல்படவிருக்கிறது. மற்றொன்று அரும்பொருட்காட்சியகமாகத்திகழவிருக்கிறது. தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டெடுத்த பொருட்கள் அனைத்தும் அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்படவிருக்கின்றன.

கம்பன் நூல்களோடுகம்பனைப் பற்றிய நூல்கள் அனைத்தும் நூலகத்தில இடம் பெறவிருக்கின்றன. இந்த நூலகமும் அரும்பொருட்காட்சியகமும்கம்பனைப் பற்றி - கம்ப இராமாயணத்தைப் பற்றி ஆய்வு செய்வோருக்கு உறுதுணை புரியும் ஆராய்ச்சி மையமாக விளங்கவிருக்கின்றது. 1ஏக்கர் 10 செண்ட் பரப்புள்ள இடத்தில் ரூ. 20 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கம்பர் கோட்டம், தமிழறிஞர்களின் நீண்ட காலக் கனவாகும். எத்தனையோ ஆண்டுகளாகப் பலர் முயன்றும் முடியாத காரியமாகும். கம்பனுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப எண்ணி 10.10.1954ல் அடிக்கல் நாட்டப்பட்டது. 30 ஆண்டுக் காலத்திற்குப் பின்னும் அது அடிக்கல்லாக இருந்ததே தவிர கட்டடமாக உருமாறவில்லை — உயரவில்லை.

''எதற்கும் ஒரு காலம் வர வேண்டும்'' என்ற கருத்திற்கேற்ப, தன்னலம் மறந்து தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கு உழைக்கும் தகைமையாளர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதல்வராகத் திகழும் கால கட்டத்தில் கம்பர் கோட்டம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது.

கம்பர் கோட்டத்திற்குக் கால்கோள் நிகழ்ச்சி 18.3.1984-இல் நடந்தது. கட்டடம் கட்டும் பணி ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்டது. எழில்மிகு தோற்றமுடைய இந்தக் கோட்டத்தை எழுப்பப் போர்க்கால அடிப்படையில் பணி நிகழ்ந்தது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 50 தொழில் நுட்ப வல்லுநர்களையும், 90 தொழிலாளர்களையும் அமர்த்தி,140 வேலை நாட்களில் இக் கலைக்கோட்டம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நவீனதளவாடங்களையும் புதிய உத்திகளையும் கையாண்டு உருவாக்கப்பட்ட இக்கோட்டத்தைக் கட்டி முடிக்கச் சுமார் 340 டன் சிமெண்ட்டும், 115 டன் உருக்குக் கம்பியும் பயன்பட்டுள்ளன.

ஐந்து திங்களில் அழகே உருவான இக் கோட்டத்தின் திறப்பு விழா 10.12.1984இல் நடந்தது. கால்கோள் விழா நிகழ்ச்சியில் பங்கேற்ற மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கம்பர் கோட்டத்தைத் திறந்து வைத்தார்கள். கம்பர் பிறந்த மண்ணில் கோட்டம் அமைந்திட உந்து சக்தியாக இருந்த அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் தலைமை வகித்தார்கள்.

எத்தனையோ இடர்ப்பாடுகள். இயற்கை விளைவித்த சோதனைகள் ஏராளம்! ஆனால் தமிழக அரசின் சீரிய வழிகாட்டுதலில் - கட்டுமானக் கழகத்தின் கைவண்ணத்தால்-சிற்பிகளின் கலை நுட்பத்தால் -கம்பன் புகழ்பாடும் கலைக் கோட்டம் காவிரிக் கரையில் உருவாகி இருக்கின்றது.

''காலமெனும் ஆழியிலும்
காற்றுமழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு''

என்றுரைத்தார், கவிஞர் கண்ணதாசன்.

சாகாத கவிதையின் மூலம் மக்கள் நெஞ்சில் நிலைபெற்று வாழும் அந்தக் கம்பனுக்கு அழியாத நினைவுச் சின்னத்தை எழுப்பி இருக்கின்றது தமிழக அரசு.

உலக மகாகவிகளின் வரிசையில் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுவிட்ட ஒருகவிஞனின் நினைவைப் போற்ற அவன் பிறந்த ஊரில் கம்பர் மேடும், காளி கோயிலும் ஆமருவியப்பன் ஆலயத்தில் உள்ள சிறிய சிலையும் தான்இருக்கின்றன என்ற அவல நிலையை மாற்றிட, கம்பர் கோட்டம் எனும் கலைக்கோயிலைத் தமிழக அரசு உருவாக்கி இருக்கின்றது.

கம்பனின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் இராமாயணத்தைப் போல்-தமிழக அரசின் தமிழ்ப்பணிக்கும் கம்பர் கோட்டம் சிறந்ததோர் எடுத்துக் காட்டாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

''பொதியமலைப் பிறந்தமொழி
வாழ்வறியும்
காலமெலாம் புலவோர்வாயில்
துதியறிவாய் அவர் நெஞ்சின்
வாழ்த்தறிவாய்''

என்று தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களைப் பாரதியார் வாழ்த்தியதைப் போலத் தமிழ் நெஞ்சங்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கின்றன.






# உயர்ந்தோங்கும் சென்னையில் உள்நாட்டு விமான நிலையம்

சென்னை தேசிய விமானப் பயண முனையத்தின் திறப்பு விழா ஏப்ரல் 12ஆம் நாள் (1985) நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசிய அனைத்து நாட்டுவிமான நிலைய ஆணைக் குழுவின் இந்தியத் தலைவர் ஏர் மார்ஷல் பி.எஸ். திரே, 'தமது ஆணைக்குழு ஆண்டொன்றுக்கு ரூ.20 கோடி அளவிற்கு மைய அரசிற்கு வரியாகச் செலுத்துவதைச் சுட்டிக் காட்டினார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு என்.இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

'புதிய விமான நிலையம் சென்னை நகரின் பெருமையை மேலும் உயர்த்தும் விதத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. புதிய விமான நிலையத்தின் அருகேயே அனைத்து நாட்டு விமானப் போக்குவரத்திற்காக மற்றொரு புதிய விமான நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். ஏற்கெனவே உள்ள மீனம்பாக்கம் விமான நிலையத்தைவெளிநாட்டுவிமான சர்வீஸ்கள் சிறிது நேரம் தங்கி எரிபொருட்களை நிரப்பிச்செல்ல வசதியுள்ள நிலையமாகவும், நவீன வசதிகள்கொண்ட சரக்குப் பகுதியாகவும் மாற்ற வேண்டும்.

''புதிய விமான நிலையம் அருகே உள்ள 12 ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்தி மேலும் விரிவுபடுத்தலாம்.

''சென்னைக்கு அதிக அளவில் (சார்ட்டர்ட் பிளேன்கள்) ஒப்பந்த விமானங்கள் வந்துபோக மைய அரசு ஆவன செய்யவேண்டும்.

''உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, தமிழ்நாட்டில் சோழவரம் (செங்கல்பட்டு மாவட்டம்),உளுந்தூர்ப்பேட்டை (தென் ஆர்க்காடு மாவட்டம்) வல்லம் (தஞ்சை மாவட்டம்), கயத்தாறு (திருநெல்வேலிமாவட்டம்), வேலூர் (வட ஆர்க்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் பயன்படுத்தாமல் இருக்கும் விமான தளங்களைப் பயன்படுத்தி சிறிய விமானங்களை விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

''குறிப்பாக தூத்துக்குடி, சேலம்,உளுந்தூர்ப்பேட்டைஆகிய இடங்களை இணைத்துச் செயல்படும் வகையில் உடனடியாகச் சிறிய விமானங்களை விடவேண்டும். இதனால் மைய அரசுக்கு வருமானம் கிடைக்கும். சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் பெருகும். இந்திய ஒருமைப்பாடு சிறந்து விளங்கப் பயன்படும்.

''இப்போது உள்ள மீனம்பாக்கம் மின்சார ரயில் நிலையம் புதிய விமான நிலையத்துக்கு வெகு தொலைவில் உள்ளது. அருகேயே புதிய ரயில் நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

''சென்னையிலிருந்து தாம்பரம் வரை போக்குவரத்து அதிகமாக இருப்பதால்விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் அதிக சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். வெளியூரில் இருந்து வரும் வாகனங்களை வேளச்சேரி வழியாகத் திருப்பிவிட வேண்டும்.''

புதிய விமான நிலையத்தைத் திறந்து வைத்து மைய அரசின் மாண்புமிகு சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையின் இணை அமைச்சர் திரு அசோக் கெலாட் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது;



தோற்றுவிக்கப்பட்ட நூற்பாலைகள் ஐந்து. மதுரை மாவட்டத்திலே தேனியிலும், முகவை மாவட்டத்திலே கமுதியிலும், புதுக்கோட்டை மாவட்டத்திலே அறந்தாங்கியிலும், தர்மபுரி மாவட்டத்திலே ஊத்தங்கரையிலும், இன்றைக்கு நெல்லை மாவட்டத்திலே எட்டையபுரத்திலும் ஐந்து நூற்பாலைகள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியிலே உருவாக்கியிருக்கிறோம்.

இங்கே இவ்வளவு பெரிய காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நீங்கள் பெண்களை வேலைக்கு வைக்கவில்லை என்று சொன்னதன் மூலம் பெண்களை வேலைக்கு வைக்க வேண்டும் என்று ஊக்குவிக்கிறீர்கள். ஆனால் இங்கே 300 பேர்கள்-தொழிலாளர்களும் பணியாள்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 180 பேர் ஆதிதிராவிடர்கள். தயவு செய்து எண்ணிப்பாருங்கள். மகாகவி பாரதி, 'எந்த ஆதிதிராவிட இளைஞனை சமுதாயம் ஏற்றுக் கொள்ள மறுத்ததோ, யாரை நீங்கள் உயர்ந்த சாதி இல்லை என்று மறுக்கிறீர்களோ, ஒதுக்கித் தள்ளுகிறீர்களோ, மூடர்களே இதற்கு அடையாளம் போட்டால்தான் ஏற்றுக் கொள்ளுவீர்களா' என்று அந்த ஆதிதிராவிட இளைஞரை அழைத்து வந்து பூணூலைப் போட்டு 'இதோ பிராமணனாக்கி விட்டேன்,' இப்பொழுது என்ன சொல்லுகிறாய், பார்?' என்று கேட்டார் – அந்த சமுதாயப் புரட்சிவாதி! அந்த ஆதிதிராவிடர் 180 பேர் இந்த வறண்ட பாலைவனம் போன்ற பகுதியிலே இன்றைக்கு பாரதி பெயராலே அமைக்கப்பட்டிருக்கின்ற நூற்பாலையிலே வேலை பெற்றிருக்கிறார்கள்.

12500 ஐ 25000 மாக உயர்த்துகிறேன் என்று சொன்னார்களே நமது அமைச்சர், நான் அவர்களுக்கு, பரிசீலனைக்காக வைக்கிறேன். இயக்குநர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராக இருக்கிறார். அவருக்கும் தெரிவிக்கிறேன். இனிமேல் விரிவாக்கம் செய்கிறபோது எடுக்கப்படுகின்ற அந்தத் தொழிலாளர்கள் பெண்களாகவே இருக்க முடியுமா என்பதை அருள்கூர்ந்து பரிசீலியுங்கள். முதல் உரிமை, முன்னுரிமை பெண்களுக்குத்தான் தரப்படும் அதுவும் பாரதியார் பெயரால நடைபெறுகின்ற ஒரு நூற்பாலை முழுமையாக பெண்களே நடத்துகின்ற ஒரு நூற்பாலையாக நடத்தப்படும் என்று வழிகாட்டுகின்ற முறையில்!

இந்த நாட்டினுடைய ஒற்றுமையைப் பாடினான் பாரதி. இன்றைக்குக்கூட மத்திய அரசு 'ஜனகனமன அதி நாயக ஜயகே' என்ற வங்காள மொழி கீதத்தை நம் நாட்டினுடைய தேசியகீதமாக வைத்திருக்கிறார்கள். இதை விட மிகச் சிறந்த கருத்தை எங்களுடைய பாரதி பாடியிருக்கிறானே! பஞ்சாபிலே விளைகிற கோதுமைக்கு காவிரி வெற்றிலையை மாறுகொள்ளுவோம் என்று பாடினானே, கிழக்கே பாய்கிற நதிகளுக்கு அணை கட்டி மத்திய இந்தியாவுக்குக் கொண்டு வருவோம் என்று பாடினானே! எங்கே நிறைவேற்றினோம்? சந்திர மண்டலத்து இயல் கண்டு தெளிவோம்' என்று பாடினானே 75 ஆண்டுகளுக்கு முன்னாலே! சந்திரனுக்கு மனிதன் செல்ல முடியும் என்று உலகத்திலே எவனும் சிந்திக்காத காலத்திலேயே பாரதி பாடினான்!

அவன் பாடாத பிரச்சினைகள் என்ன? சொல்லாத திட்டங்கள் என்ன? இங்கே துர்ப்பாக்கியமாக தமிழகத்திலே பிறந்தான். இன்னும் துரதிர்ஷ்டவசமாக தமிழகத்தினுடைய தெற்குப் பகுதியிலே பிறந்தான். இன்னும் துரதிர்ஷ்டவசமாக இந்தக் கரிசல் காட்டிலே பிறந்தான். அதனாலேயே அவன் பெருமையும் கரிசல் மண்ணோடு கரைந்து போய்விடுமா?

இன்றைக்கு இந்தியா ஒற்றுமையை நாடிக் கொண்டிருக்கிறது தமிழ் இந்த உலகத்திலே ஒற்றுமையைப் பரப்பிய மொழி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மறைந்த பிரதமர் அன்னை இந்திரா காந்தி ஐக்கிய நாடுகள் அவையிலே முழங்கினார்களே, அது தமிழ்த்தாய் கொடுத்த பாட்டல்லவா?

இந்திய ஒருமைப்பாட்டுக்கு அடி எடுத்துக் கொடுத்தவன்-வழி வகுத்துக் கொடுத்தவன்– திட்டங்களை உருவாக்கியவன் மகாகவி பாரதி அல்லவா? அவனுடைய பெயர், அவனுடைய கருத்துக்கள் வடபுலங்களிலே இன்னும் பரப்பப்பட வில்லை. அதனாலே தான் பாரதி நூற்றாண்டு விழாவிற்கு பஞ்சாபிலிருந்து முதல்வர் தர்பாராசிங்கை அழைத்தோம்.







கர்நாடகா முதல்வர் குண்டுராவை அழைத்தோம். பிறமாநில ஆளுநர்களையெல்லாம் அழைத்தோம். மத்திய அமைச்சர்களை அழைத்தோம். எங்களுடைய பாரதியின் பெருமையை உங்களிடத்தில் சொல்வதற்காக அல்ல இந்த நாட்டினுடைய மகாகவி தேசிய கவி- தீர்க்கதரிசனத்தோடு இந்த நாட்டினுடைய பொருளாதார திட்டங்களை .... வகுத்துத் தந்த கவி என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதற்காக அழைத்தோம்.

14 சதவிதம்தான் தொழிலாளரின் ஊதியத்திற்காகச்செலவழிக்கப்பட வேண்டும். ஆனால் நம்முடைய அரசு கூட்டுறவு நூற்பாலைகளிலே 24 சதவிதத்திற்கு மேல் சம்பளத்திற்காகவே செலவழிக்கிறது, என்கிற புள்ளி விவரத்தை கைத்தறி இயக்குநர் தந்தார்கள். தொழிலாளிகள் உரிமையைக் கேட்கக்கூடாது என்று இன்றைக்கு யாரும் சொல்ல முடியாது. தொழிலாளர்கள் வாழ்ந்தால்தான் நாடு வாழும். ஆனால் தொழிலாளர்கள் எங்கே இருந்து வாழ்வார்கள்? அதைத்தான் நாம் அடிப்படையாக சிந்தித்தாக வேண்டும். 5 கோடி முதலீடு செய்து, அரசாங்கப் பணத்தையும் போட்டு வெளிநாடுகளிருந்து கடனாகவும் பெற்றுத் தொடங்கி இருக்கின்றோம்! இதற்கு வட்டி கட்டியாக வேண்டும். இது லாபகரமாக இயங்கவில்லை யானால் இதை எப்படித் தொடர்ந்து நடத்த முடியும்? அதை எப்படி விரிவாக்கம் செய்ய முடியும்? எப்படி 25000 கதிர்களாக மாற்ற முடியும்? அதைத்தான் நாம் சிந்தித்தாக வேண்டும் எல்லோரும் சேர்ந்து உழைப்போம். எல்லோரும் உயரத்திற்கு போனபிறகு அந்தக் காற்றை அனுபவிப்போம். புழுக்கத்திலே மண்ணுக்கு அடியிலே உழன்று கொண்டிருக்கும் போது நல்ல காற்று எங்கே கிடைக்கும்? மேலே போனதற்குப் பிறகுதான் காற்றையே நாம் பெற முடியும்! சுவாசிக்க முடியும். மேலே போவதற்கு, எல்லோரும் சேர்ந்து முயற்சி செய்யவில்லையானால் எப்படிக் காற்று வரும்? அதுதானே இன்றைக்கு இருக்கின்ற அடிப்படைப் பொருளாதாரதத்துவம்! தொழில் தத்துவம். அதை அருமை நண்பர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதுதான் இந்த பாரதியினுடைய நினைவாக எழுப்பப்படுகின்ற இந்த நூற்பாலையினுடைய தொடக்க விழாவிலே நான் வைக்கிற வேண்டுகோள்.

பாரதியார் கலைக்கூடம் அமைப்பதுபற்றி, இங்கே பேசினார்கள். கலைக்கூடத்தை மிகப் பெரிய திட்டமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு ஒரு சில லட்சங்கள் அல்ல. அத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுமானால் சில கோடி ரூபாய்கள் தேவைப்படும். அது வெறும் கண்காட்சிக்கூடமாக-கலைக்கூடமாக மாத்திரம் இருந்து பயனில்லை. பாரதியாருடைய வாழ்க்கை மாத்திரமல்ல அங்கே அமையப்போவது, தமிழ்நாட்டினுடைய தேசியத் தலைவர்கள், தேசத்திற்காக தங்களுடைய உயிரைத் தந்தவர்கள், வாழ்க்கையைத் தந்தவர்கள், குடும்பத்தைத் தந்தவர்கள், கைகால்களைக் கொடுத்தவர்கள், அத்தகைய தியாக சீலர்களின் நினைவாக அமையும்! அதனாலேதான் இன்றைக்கு நாம் விடுதலை பெற்ற நாட்டிலே, விடுதலை பெற்ற குடிமக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்த விடுதலை வீரர்களின் வரலாறு தமிழகத்திற்குத் தெரிந்தாக வேண்டும். அது மகாகவி பாரதியின் பெயராலே ஏற்படுத்தப்பட்டிருக்கிற-அந்த மகாகவிஞன், தேசிய கவிஞன், புரட்சிக் கவிஞன் கலைக்கூடத்திலே வைக்கப்பட்டாக வேண்டும். இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தின் வரலாறு அங்கே தொகுக்கப்பட்டாக வேண்டும். புரட்சித்தலைவர் எதையும் சிறப்பாகச் செய்தே பழக்கப் பட்டவர். இதையும் சிறப்பாகச் செய்வதற்கு திட்டங்கள் தீட்டியுள்ளார்." —**பாண்டியராஜன்**

திராவிட மக்கள் பணிக்குச் சென்றார்கள் என்ற காரணத்தினால் சென்னை மாநகரில் சேரிகள் தாக்கப்பட்டன. புளியந்தோப்பு என்ற சேரி அடியோடு எரிந்து சாம்பலாக்கப்பட்டது. 1922 ஜனவரியில் இளவரசர் ஏழாம் எட்வர்ட் சென்னைக்கு வந்தபோது இதுபோன்ற தாக்குதல் நடந்தது. கலவரங்களை ஒடுக்க சர். பிட்டி தியாகராயர் ஒரு படையைத் தோற்றுவித்து டி. சுந்தர்ராவ் நாயுடு அவர்களை அதன் கேப்டனாக நியமித்து, கலகக்காரர்களை அடக்கி ஒடுக்கினார். சேரிப் பகுதிகள் எரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த ''மாடல் லைன்ஸ்'' என்ற திட்டத்தைக் கொண்டு வந்து சென்னை மாநகராட்சித் திட்டத்தில் ஒன்றாக்கினார். ஆசிர்வாதபுரம், சிமெண்ட் ரோடு போன்ற பகுதிகளில் வரிசை வரிசையாகக் கல் இல்லங்களை இத்திட்டத்தின்படி கட்டிக் கொடுத்தார். அவர் காலத்திற்குப் பிறகும் டி. சுந்தர்ராவ் நாயுடு அவர்கள் இத்திட்டத்தின்படி எழும்பூரில் இவ்வில்லங்களைக் கட்டிக் கொடுத்தார்.

மேலும் ஏழை எளிய சேரி வாழ் மக்கள், இல்லங்கள் கட்டிக் கொள்வதற்கும் வண்டி, மாடுகள் வாங்கவும் ஆங்காங்கே கூட்டுறவு நாணயச் சங்கங்களும் அமைக்கப் பட்டன.



## தியாகராயரும் செய்தித்தாள்களும்

சர் பிட்டி தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித்தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.

ஜஸ்டிஸ் என்ற பெயரில் ஆங்கில செய்தித்தாளை 26 பிப்ரவரி 1917 செவ்வாய்க்கிழமை சர். பிட்டி. தியாகராயர் அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1263. 'ஜஸ்டிஸ்' என்ற ஆங்கில இதழின் பெயரின் காரணமாக சௌத் இந்தியன் லிபரெல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் "ஜஸ்டிஸ் பார்ட்டி" என்றும் தமிழில் அது "நீதிக்கட்சி" என்றும் அழைக்கப் படலாயிற்று.

1885இல் ரெவரன்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி "திராவிட பாண்டியன்'' என்ற ஒரு தமிழ் செய்தித்தாளை வெளியிட்டார். அதே நோக்கில்தான் சர். பிட்டி. தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி 1, ஜூன் 1917 சனிக்கிழமை "திராவிடன்'' என்ற பெயரில் தமிழ் தினச் செய்தித்தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1279.

1885இல் தெலுங்கு மொழியில் 'ஆந்திர பிரகாசிகா' என்ற செய்தித்தாள் வெளிவந்தது. சர். பிட்டி. தியாகராயர் அதே தெலுங்கு செய்தித்தாளை 10 ஜூன் 1917 திங்கட்கிழமையிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித்தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண். எம். 1280.




கல்வி அறிவைப் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. ஒவ்வொருவரும் ஏதாவது தொழிலை இளம் வயதிலிருந்தே கல்வியுடன் கற்க வேண்டுமென்று சட்டப்பேரவையில் பேசியுள்ளார். அதன்படி பள்ளி மாணவர்களுக்கு ஒருவேளை படிப்பும் மறுவேளை தொழிலும் ஒரு சில பள்ளிகளில் கற்பிக்கப்பட்டன.

இவர் காலத்தில் தான் மக்களின் வாக்கெடுப்பில் தாழ்த்தப்பட்ட மக்கள் பல இழிவான சொற்களால் அழைக்கப்படுவதைத் தவிர்த்து, மக்கள் கணக்கெடுப்பில் ஆதிதிராவிடர்கள் என்று குறிக்கப்பட்டனர்.

ஆதிதிராவிடர்களுக்கு மற்றவர்களைப் போலவே சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற பேரவா கொண்டு இருந்தார். அவரது விருப்பத்திற்கேற்ப 'தாழ்த்தப்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் பொது ரஸ்தாக்கள், கிணறுகள், பொது இடங்கள், கட்டடங்கள் முதலியவைகளை உபயோகிக்கலாம் என்ற அரசு உத்தரவு, போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட் 1 ஏ 25-9-1924, 27-1-1925, 28-4-1925, 2660 எல் & எம் போடப்பட்டது. இவ்வாணையைப் பிறப்பித்ததும் முதல் மந்திரி பனகல் அரசர் சர் பிட்டி தியாகராயர் இல்லத்திற்குச் சென்று அறிவித்தார். அதே நாளில் 28 ஏப்ரல் 1925 செவ்வாய்க்கிழமை இரவு 9.45 மணிக்கு அந்த இனிய செய்தியைக்கேட்டு இன்புற்ற வண்ணம் தன் இன்னுயிரை நீத்தார்.

செய்ந்நன்றிமறவாத சென்னை வாழ் மக்கள் தியாகராயரின் ஈடில்லாச் சேவையை எண்ணி தியாகராயருக்கு சென்னை மாநகராட்சிக் கட்டடத்தின் முகப்பிலே 1931 அக்டோபர் 31 அன்று ஆளுநர் பெரடரிக் ஸ்டேலினைக் கொண்டு தியாகராயரது முழுஉருவச் சிலையை அமைத்தனர் என்பது எண்ணி எண்ணி இறும்பூது எய்தவேண்டிய செய்தியாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



குழந்தைகள் முதலில் கற்பது — அ ஆ இ

குடும்பத்தை என்றும் காப்பதும் — அ ஆ இ

அஞ்சலக

ஆயுள்

இன்சூரன்ஸ்

POSTAL LIFE INSURANCE

सुरक्षा के लिए डाक जीवन बीमा
POSTAL LIFE INSURANCE FOR PROTECTION
स्था.1884 ESTD.-1884

குறைந்த பிரிமியம் செலுத்தி அதிக போனஸ் பெறுவீர்!
மத்திய மாநில அரசு ஊழியர்கள், அரசுடைமை வங்கி ஊழியர்கள், கல்வி நிலைய ஊழியர்கள், நகராட்சி, ஊராட்சி ஊழியர்கள் போன்றவர்களுக்கு

சிறந்த இன்சூரன்ஸ் திட்டம்
அஞ்சலக ஆயுள் இன்சூரன்ஸ்

ப்ரீமியம் மாதா மாதம் சம்பளத்திலேயே பிடித்தம் செய்ய வசதி உள்ளது.

திட்டத்தில் போனஸ் எவ்வாறு உயர்ந்துகொண்டே வந்துள்ளது என்பதைக் கவனியுங்கள்

எண்டோவ்மெண்ட் பாலிசி

| 67-69 | 69-72 | 72-75 | 75-78 | 78-81 |
|---|---|---|---|---|
| 22 | 24 | 25 | 31 | 35 |

முழு ஆயுள் பாலிசி

| 67-69 | 69-72 | 72-75 | 75-78 | 78-81 |
|---|---|---|---|---|
| 28 | 32 | 33 | 40 | 44 |

PLI பாதுகாப்பிற்கும் செழிப்புக்கும்

விவரங்களுக்கு: போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்
சென்னை-600 002
தொலைபேசி
எண்கள்: 841619
843949
843138

# தமிழரசு

ஆணையர்
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
23 MAY 1985
ஆவணக்காப்பகம்
-8.





இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மாநிலப் போக்குவரத்துத் துறையின் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு நிகோலஸ் ரிட்லே மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை அவரது இல்லத்தில் (15.4.85) சந்தித்தார்.

துருக்கி நாட்டுத் தூதுவர் திரு டிவான்லியோகு மாண்புமிகு முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் (27.4.85) சந்தித்தார்.





# இலங்கைத் தமிழர் நலம் காக்க...

அட்டை சொல்லும் செய்தி

மீனவர்களின் நலனைப் பாதுகாக்க இந்தியக் கடற்படையின் ரோந்துப் படையை வலுப்படுத்தியும், இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து நமது மீன்பிடி படகுகளைத் தாக்கிய இலங்கைக் கடற்படையினரைக் கைது செய்தும் மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகளை அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் இந்தக் கூட்டம் பாராட்டுகிறது.

இலங்கைக் கடற்படையும் இந்தியக் கடற்படையும் ஒருங்கிணைந்து ரோந்து காவல் செய்ய வேண்டும்'' என்ற இலங்கை அரசின் விபரீத யோசனையை ஏற்றுக் கொள்ளாததை இந்தக் கூட்டம் வரவேற்கிறது.

இலங்கையில் குடிபெயர்ந்து இந்தியா வந்துள்ளோரின் மறுவாழ்வுக்காக ஓரளவு நிதியினை மத்திய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியதை அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் இந்தக் கூட்டம் பாராட்டுகிறது.

இருந்தபோதிலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது தொடர்ந்து நடைபெறுகிற நிகழ்ச்சியாக இருக்கிறது என்பதை இந்தக் குழு மாண்புமிகு பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

இருநாட்டுப் பிரதம அமைச்சர்களும் 1974ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் மிகக் கவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஷரத்துகள் 5 மற்றும் 6 கச்சத்தீவுக்கு இந்திய மீனவர்கள் செல்வதற்கும் திருவிழாக் கொண்டாடுவதற்கும் கச்சத்தீவுக்கு அருகிலுள்ள இருபக்கக் கடலில் இரு நாடுகளின் படகுகள் தொன்று தொட்டுப் புழங்கி வரும் வழக்கத்தின்படி செல்வதற்கும் உரிமைகளை வலியுறுத்தியுள்ளன.

இவற்றை இலங்கைக் கடற்படை மதிக்காததன் காரணமாகவே, இந்துக் கடல் வழியாக இந்திய மீனவர்கள் பாக் நீர்ச்சந்திப்புக்குச் சென்று மீன்பிடிக்க இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் மேற்கண்ட உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கும் வகையில் இலங்கை அரசு இந்த ஒப்பந்தத்தை முழுவதுமாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். தொடர்ந்து பல ஆண்டுகளாக இலங்கைத்தமிழர்களின் குடியுரிமை மற்றும் மொழி உரிமை மறுக்கப்பட்டு அரசின் கல்வி, வேலை வாய்ப்பு அறவே புறக்கணிக்கப்பட்டு வந்தது. மட்டுமல்லாமல், இப்பொழுது அங்கே தமிழர்கள் வாழ்வுரிமையே கேள்விக் குறியாக உள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையில் நடந்த வன்முறைக்குத் தனி நபர்கள் மட்டுமே காரணம் என்ற நிலைமை மாறி இன்று இலங்கை அரசின் ராணுவமும் காவல் துறையுமே, நிராதரவான இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப் படுத்து வருகின்றன.

இந்நிலையில் உயிருக்கும் மானத்துக்கும் அஞ்சி, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பூர்வீகம் தொட்டு அவர்கள வாழ்ந்து வந்த தாயகத்தையும், செய்து வந்த தொழிலையும் விட்டு இந்தியாவிற்கு அகதிகளாக வந்த வண்ணம உள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் சுமார் 20,000 பேர் ஆதரவற்ற அகதிகளாக இந்தியாவிற்கு வந்துள்ளனர். 1983 ஜூலை மாதத்தில் இருந்து இதுவரை இந்தியாவுக்கு வந்த அகதிகளின மொத்தத் தொகை ஏறத்தாழ 90,000 ஆகும். மென்மேலும் அவர்கள் வருவதை உடனடியாக நிறுத்தும் வகையில்



# மே நாள் வாழ்க!

கவிஞர் காமிபழனியப்பன்

தீன்மானக் கொள்கை சொல்லித்
தமிழரின் இனமா னத்தை
நன்றுற வளர்த்த தந்தை
நந்தமிழ் நாட்டி லெங்கும்
இன்புறும் மேதி னத்தை
இனிதுகொண் டாடு கென்றே
அன்புடன் அறிக்கை விட்டார்
ஐந்துபத் தாண்டு முன்னே!

தந்தையின் வழியில் நின்று
தமிழர்க்கு வாழ்வ ளித்த
சிந்தனை இமயம் அண்ணா
திருநாட்டின் ஆட்சி பெற்றார்;
செந்தமிழ் நாட்டில் மேநாள்
விடுமுறைத் திருநாள் என்றார்
இந்நாற் பெருமை பெற்ற
இன்பநாள் மேநாள் வாழ்க!

எத்துணை வேறு பாடு
இருப்பினும் உழைப்போ ரெல்லாம்
மொத்தமாய்க் கூடி, பெற்ற
வெற்றியை — எதிர்கா லத்தில்
இத்தரைக் காற்றத் தக்க
ஏற்றதோர் பணியை எண்ணிச்
சித்தத்தில் உறுதி ஏற்கும்
திருநாளாம் மேநாள் வாழ்க!

உழைப்பவர் சிந்தும் வியர்வைத்
துளிகளால் உலகில் இன்பம்
தழைத்திடும் மேன்மை தன்னைத்
தாரணிக் குணர்த்து தற்கும்
உழைப்பவர் தமக்கே இந்த
உலகிடம் சொந்த மென்னும்
எழிற்கருத் துணர்த்து தற்கும்
எழுந்ததோர் மேநாள் வாழ்க!

உழைப்பவர் மேன்மை இந்த
உலகினில் ஓங்கு தற்கும்
உழைப்பவர் உரிமை காக்கும்
உன்னத நோக்கத் தோடும்
விழைந்துயிர் நீத்த தியாக
மேலவர் தமைநி னைந்து
தழைத்திடும் அன்பால் நன்றி
சாற்றிடும் மேநாள் வாழ்க!



# பார்த்தோம் படித்தோம்

வளரும் தமிழகம் வரிசையில் திருச்சியினைப் பற்றிய விவரங்களைப் படித்தறியும் வேளையில் நான் திருச்சியிலேயே வாழ்ந்தாலும், இன்னும் திருச்சி நகரைப் பற்றி அறியா விவரங்கள் உண்டென்பதைத் தங்களின் கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

—மதுரை. வீ.ஹரிகிருஷ்ணன்
திருச்சி-2.

எங்கள் என்.எஸ்.எஸ்.முகாம் பற்றி மாணவர் பக்கத்தில் வெளியிட்டதற்கு எங்கள் அனைவரின் உளங்கனிந்த நன்றி.

—சி.கே.ஹரிகிருஷ்ணன்,
பெரம்பூர்.

1.4.85 இதழில் ''இங்கே கொஞ்சம் ...பல்லைக் காட்டலாம்'' கட்டுரை அனைவருக்கும் பயனுடையதாக இருந்தது. 1985-86ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

—அசூர்.ரெ.கமலக்கண்ணன்

16.3.85 தமிழரசு இதழில் வெளியான 'உயர் விளைச்சல் உழைப்பாளர்கள்' என்ற தலைப்பில் எழுதிய வேளாண்மைக் கருத்துக்கள் அருமை.

—மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்(வ.ஆ)

ப்ரீட்மென்னுக்கு அளித்த நன்றியறிவிப்புச் செய்தியையும், புகைப்படங்களையும் அருமையாகவும் அழகாகவும் வெளியிட்டதன் மூலம் எங்களோடு 'தமிழரசும்' நன்றிகளைத் தெரிவித்து விட்டது.

—இரா.செல்வமணி,
பாப்பாக்குடி-627 602.

பல்கலையும் மிக்கதொரு பெட்டகமாம் 'தமிழரசில்' இல்லாததொன்றில்லை; எல்லாமே இதிலுண்டு! புதுப்பகுதி; 'அறிவியல் சாளரம்' பலே! — தொடரட்டும்!

**கவிஞர் அ. சுப்பையன்,**
செட்டிக்குறிச்சி.

தமிழக அரசின் சிறப்பான பணிகளையும், திட்டங்களையும் எடுத்தியம்பும் ஒரே பத்திரிகை, 'தமிழரசு' இதழ்தான். சிந்தை கவரும் கட்டுரைகள் அனைத்தும் சிறப்பானவை.

**எஸ்.கே. விஜயகுமார்,**
குழிவிளை.



# புதுமைகள் செய்த புரட்சியாளர்

**என். ஏ. கருணாகரன்**

சர். பிட்டி.தியாகராயர் சென்னையில் பழைய வண்ணாரப் பேட்டையில் 1852 ஏப்ரல் 27 இல் பிறந்து, மாநிலக்கல்லூரியில் படித்து 1876 பி. ஏ. பட்டம் பெற்று 1882 இல் சென்னை நகராட்சி மன்ற உறுப்பினரானார்.

1887இல் முதல் முறையாக சென்னையில் நடந்த மூன்றாவது இந்திய தேசிய காங்கிரசிற்கு அவரது முழு ஒத்துழைப்புடன் 200 ரூபாய் நிதியும் வழங்கினார். 1914 வரை சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளின் முழுப்பொறுப்பையும் ஏற்றார்.

1887 இல் பச்சையப்பன் அறக் கட்டளையின் (Charities) தரும கர்த்தாவாக (Trustee) நியமிக்கப்பட்டார். அன்று முதல் இறுதிக்காலம் வரையில் அதன் தர்ம கர்த்தாவாக விளங்கினார்.

1909இல் பச்சையப்பன் அறக் கட்டளையின் தலைவராக்கப் பட்டார். பச்சையப்பன் கல்லூரியில் அவரது 71வது ஆண்டில் அவரது பவளவிழாவை 23 ஏப்ரல் 1923இல் கொண்டாடினர். ஆளுநர் லார்டு வெலிங்டன் சர். பிட்டி தியாகராயரது திருஉருவப் படத்தைக் கல்லூரியின் கூடத்தில் திறந்து வைத்துச் சொற்பொழிவு ஆற்றினார்.

1909இல் சென்னையில் நடந்த தேறிய அகில இந்திய கைத்தறிப் போட்டியில் சர்.பிட்டி தியாகராயரது ஆலையில் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளே மிக நேர்த்தியானதும், மிகச் சிறந்ததும் ஆகும் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகளைப் பெற்றன.

1909 ஆம் ஆண்டில் சர்.பிட்டி தியாகராயர்க்கு ''ராவ்பகதூர்'' என்ற பட்டத்தை அரசு வழங்கியது. அதனை அடுத்து 1918இல் அவருக்கு திவான்பகதூர் என்ற பட்டத்தையும், 1921இல் சர் Knight Hood என்ற மிக உயர்ந்த பட்டத்தையும் அரசு வழங்கியது.

1909 இல் லார்டு ரிப்பன் பிரபு காலமானார். அவரது நினைவாக அன்னாருக்குச் சென்னையில் ஒரு சிலை அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டார். அவரது முயற்சியின் காரணமாக 1911 இல் மௌண்ட் ரோட்டில் ரிப்பன் பிரபுவுக்கு சிலை அமைக்கப்பட்டது.1913இல் பூந்தமல்லி சாலையில் கட்டப்பட்ட மாநகராட்சிக் கட்டிடத்திற்கு ரிப்பன் மாளிகை எனப் பெயரிடப்பட்டதற்கும் சர். பிட்டி.தியாகராயரே காரணம்.

1919 இல் சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் கௌரவ அரசு சார்பற்ற தலைவரானார். 1923 வரை அப்பதவியை அவர் வகித்தார். 1920-1923 இல் நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தபோது அவரை முதல்மந்திரி பதவி வகிக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக்கொள்ள, அப்பதவியை ஏற்க மறுத்தார். ஊதியம் வாங்கும் முதல்வர் பதவியை விட கௌரவ பதவியான மாநகராட்சித் தலைவர் பதவியை வகிப்பதையே தான் விரும்புவதாகக் கூறினார்.

**தியாகராயரும் மதிய உணவுத் திட்டமும்:**

சென்னை மாநகராட்சியின் கல்விக் குழுவின் தலைவரான டி. வரதராஜுலு நாயுடுவும், சர். பிட்டி. தியாகராயரும் ஆயிரம் விளக்குப் பகுதியில் 1920ல் முதன் முதலாவதாக ஒரு மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்து செயல்படுத்தினர். பின்னர் 1921இல் மேலும் நான்கு பள்ளியிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தினர். ஆதிதிராவிட மகாஜனசபையின் அலுவலகம் ஆயிரம் விளக்குப் பகுதியில் இருந்தபடியால் ஆதிதிராவிடருடைய பிள்ளைகளின் நலனைக் கருதியே இத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

**தியாகராயரும்-குடிசை மாற்றுத் திட்டமும்:**

1921 சென்னையில் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், சர்க்கரை செட்டியார், செல்வபதி செட்டியார், ராமானுஜுலு நாயுடு போன்ற பெருமக்கள் தொழிலாளிகளை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுத்தினர். ஆதிதிராவிட மகாஜன சபையும், நீதிக்கட்சியும் அவர்களது செயலுக்குத் துணை போகவில்லை. வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு எதிராக ஆதி

தமிழர்கள் வாழும் வடக்குப் பகுதி, கிழக்குப் பகுதி ஆகியவற்றிலிருந்து ராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். ஆயுதப் பயிற்சியும், ஆயுதமும் கொடுத்து சிங்கள வன்முறையாளர்களைத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் குடியமர்த்துவதை உடனடியாக நிறுத்தவும் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்குக் கரையோரப் பகுதிகளில், இலங்கைத் தமிழ் மீனவர்கள் மீன் பிடித்து வாழ்க்கை நடத்துவதற்கு இடையூறாக, தடை செய்யப்பட்ட நேரங்கள், தடை செய்யப்பட்ட பகுதிகள் என்று பலவிதமான தடைகள் இருப்பதை உடனடியாக அகற்றவும் வேண்டும்.

இவற்றுக்கு இலங்கை அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கடந்த 35 ஆண்டுகளாகத்தொடர்ந்து இலங்கை அரசு மேற்கொண்ட நேரிடை நடவடிக்கைகளின் காரணமாக, அங்குள்ள சிறுபான்மைத் தமிழின மக்கள் தங்கள் அரசியல் உரிமைகள், மொழி உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பறிக்கப்பட்ட போதிலும் தங்கள் உரிமைகளுக்காக அவர்கள் சாத்வீகமான முறையிலேயே போராடி வந்திருக்கிறார்கள்.

இலங்கை அரசின் காவல்துறையும், ராணுவமும், நேர்முகமாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்ட வன்முறையும், இழைத்த கொடுமைகளுமே இலங்கைத் தமிழர் போராட்டம் தீவிரமடைவதற்குக் காரணம்.

சிங்கள ராணுவம் எவ்வளவோ வெறித்தனமான தாக்குதல்கள் நடத்தியும், ஒரு சிங்களக் குடிமகன் கூட இலங்கைத் தமிழர்களால் தாக்கப்படவில்லை என்ற உண்மை நினைவில் கொள்ளப்படவேண்டும்.

இலங்கை அரசின் ராணுவம் கையாளும் அடக்குமுறை நடவடிக்கைகளோடு இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்தை ஒப்பிட்டு இரண்டையும் பொதுவாக வன்முறை எனக்கூறுவது சரியல்ல.

மேலும் போராடும் தமிழர்களை மட்டும் பயங்கரவாதிகள் எனப்பெயர் சூட்டித் தாங்கள் கையாளும் வன்முறையை மறைத்து, இலங்கை, அரசு உலக அரங்கில் பேசி வருவதைத் தெளிவுபடுத்தும் வகையில் உலகநாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும்(வேண்டுமானால் தூதுக்குழு ஒன்றினை அனுப்புவதோடு சேர்த்து) இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தொடர்ந்து இலங்கை அரசுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்திய அரசு, நேரு-கொத்தலவாலே ஒப்பந்தம் முதல் சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்திலிருந்து கடந்த காலத்து இந்திரா காந்தி-சிரிமாவோ கச்சத் தீவு ஒப்பந்தம் வரை இந்திய அரசு நிதானமான அணுகுமுறையையே கடைப்பிடித்து இருநாடுகளுக்கும் உள்ள நட்புறவை வளர்த்து வந்திருக்கிறது.

இலங்கைக் கடற்படை இந்தியக் கடலில் புகுந்து இராமேஸ்வரம் மீனவர்களைச் சுட்டுக்கொன்றும், துன்புறுத்தியும் படகுகளைப் பறித்தும், சிறையில் அடைத்தும், தொடர்ந்து தொழில் செய்ய இயலாத நிலைமையைத் தோற்றுவித்த போதும், இந்திய அரசு அத்து மீறிய இலங்கைக் கடற்படை ரோந்துப் படகைப் பிடித்துத் திருப்பித்தந்தும், இலங்கைக்கு ஆயுதம் ஏற்றிச் சென்ற விமானம் திருவனந்தபுரத்தில் இறங்கியபோது திருப்பி அனுப்பியும் தனது நல்லெண்ணத்தைத் தாராளமாகக் காட்டி வந்துள்ளது.

எனினும்இலங்கை அரசு, இந்தியாவுக்கு எதிராகப் பேசுவதும் இஸ்ரேல் போன்ற நாட்டின் துணைகொண்டு ராணுவ காவல்துறைக்குப் பயிற்சி தருவதும், அமைதியான இந்துமாக்கடலில் குழப்பம் விளைவிக்கும் வகையில் அந்நிய ராணுவங்களுக்கு அழைப்பு விடுப்பதும் என இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் தொடர்ந்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில் ராணுவம் மூலம் தீர்வுகாணும் முயற்சியை விட்டு விட்டு, இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதியிலிருந்து ராணுவத்தைத் திரும்பப் பெறுவதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும்.

இதன் மூலம் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதுடன், இலங்கைத் தமிழ் மக்களுக்கு முழு உரிமையும் சமவாய்ப்பும் பாதுகாப்பும் தரப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையிலே அரசியல் தீர்வு காணும் முயற்சியில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவாகள் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனேயைச் சந்தித்துப் பேசுவது போன்ற நேரடிப்பேச்சு வார்த்தை உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும் என்றும், மேலும் காலம் தாழ்த்தினால் இருநாடுகளின் நலன்களுக்கும் எதிராக அமையும் என்றும் இந்தக் குழு வலியுறுத்திக் கூறுகிறது.

**(மாண்புமிகு முதல்வர் டாகடர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தூதுக்குழு டெல்லிக்குச் சென்று இலங்கைத் தமிழர், இந்திய மீனவர் ஆகியோர் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடம் 23.4.85 அன்று அளித்த மனு.)**



# கோடையில் குடிநீர்

**மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்**

## டாக்டர் கா. காளிமுத்து

வடகிழக்குப் பருவ மழை 1984-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு, சென்னை, பெரியார், நீலகிரி மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் குறைவாக இருந்தது. 1985 சனவரியில் மழை பெய்தது. ஆயினும் வறட்சி நிலையை எதிர்நோக்கி முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றன.

இதுகுறித்து தலைமைச் செயலாளர் இரண்டு கூட்டங்கள் கூட்டினார். தமிழ் நாட்டில் நிலத்தடி நீர் இருக்கும் நிலையைப் பற்றி விரிவான ஆய்வு நடத்தப்பெற்றது. அதன் மூலம் கரூர், குளித்தலை, மணப்பாறை, முசிறி, சேலம், திருச்செங்கோடு, நாமக்கல், சங்ககிரி, ராசிபுரம், வேடசந்தூர், திண்டுக்கல் மற்றும் பல்லடம் ஆகிய வட்டங்கள் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டது.

வற்றிய அல்லது இனி வற்றும் நிலையில் உள்ள குடிநீர்க் கிணறுகளைத் தூர் எடுத்து, ஆழப்படுத்திப் பயன்படுத்த ஒரு கோடி ரூபாய் உடனடியாக அரசினால் அனுமதித்து வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டின் மூலம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வட்டங்களில் உள்ள குடிநீர்ப் பற்றாக் குறையுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் பணிகள் செயற்படுத்தப் பெற்று வருகின்றன.

மேலும், குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பெற்று வருகின்றன:

ஏற்கெனவே உள்ள கையிறைப்பான் மற்றும் விசையிறைப்பான்களின் செயற்பாட்டைக் குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவற்றின் பராமரிப்பைப் பற்றிய ஆய்வு கோட்ட அளவில் வாரா வாரமும் - மாவட்ட அளவில் இருவாரத்துக்கொருமுறையும் நடைபெறுகிறது.

பழுதுபார்க்கத் தேவையான உதிரி பாகங்களை முன்னதாகவே வேண்டுமளவுக்குக் கொள்முதல் செய்து வைத்துக் கொள்ள மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பெற்றுள்ளது.

பழுதுபார்க்கும் வேலையின் தேவைக்குத் தக்கவாறு கூடுதல் பொருத்துநர்களை நியமிக்க அனுமதியும் வழங்கப் பெற்றுள்ளது.

தண்ணீர் வற்றி, செயல்படாமல் உள்ள கையிறைப்பான்களுக்குப் பதிலாக மாற்று நீர் ஆதாரங்கள் ஏற்படுத்தித் தரப்படும்.

வருவாய்த்துறை ஆணையாளர் மற்றும் நிலச்சீர்திருத்தத்துறை ஆணையாளர் இருவரும் வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டங்களுக்கு நேரில் சென்று நிலைமையைத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

மேலும் குடிநீர்ப் பற்றாக் குறையால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் புதிதாக சுமார் 250 ஆழ்துளைக் கிணறுகள் உத்தேசமாக 70 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கும் பணி தொடங்கப்பெற்று விட்டது. மேலும் தேவைக்கேற்ப, பாதிக்கப்பட்டுள்ள இதே வட்டங்களில் இன்னும் 240 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றுள்ளன. குடிநீர் வறட்சி நிலையைத் தக்கவாறு சமாளிக்க வாரியத்தில் உள்ள ஆழ்துளைக் கருவிகளுடன் அரசின் மற்ற துறையில் உள்ள ஆழ்துளைக் கருவிகளையும் தந்துதவ ஆணையிடப்பட்டுள்ளது.

வறட்சி நிலையைச் சமாளிக்க எடுக்கும் தனி நடவடிக்கைகளைத் தவிர 1985-86ஆம்

## இந்திரா காந்திக்கு பி.சி. ராய் விருது

**மருத்துவத் துறையில் சிறந்த பணியாற்றி வரும் டாக்டர்களுக்கு ஆண்டுதோறும் பி.சி. ராய் விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு, அரசியல் தலைமைக்காக மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு பி.சி. ராய் விருது வழங்கப்பட்டுள்ளது. 50.000 ரூபாய் ரொக்கமும் நற்சான்றிதழும் கொண்ட இவ்விருதை டெல்லியில் நடைபெற்ற விழாவில் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி பெற்றுக் கொண்டார்.**

# திருத்தணி ஆலயத்தில் கும்பாபிஷேகம்



து. மருதவிநாயகம்

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி கோவிலில் *1948, 1969* ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இப்பொழுது மூன்றாவது முறையாக முருகனுக்கு ஜூன் 27 ஆம் நாள் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இதையொட்டி, கோவிலில் பல்வேறு பணிகள் நடைபெற உள்ளன.

கோயில் கோபுர விமானங்கள்போன்ற 32 திருப்பணிகட்கு ரூ.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

வெள்ளிக்கதவுகள், விமானங்கள் செய்ய *100* கிலோ வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.4 இலட்சம் ஆகும்.

*7* கிலோ தங்கத்தில் கோவிலின் துவஜஸ்தம்பங்களுக்குத் தங்க முலாம் பூசப்படும்.

கோவிலின் ஆண்டு வருமானம் சமீப காலங்களில் *50* இலட்சம் ஆக இருந்தது. தற்பொழுது ரூ.1 கோடியை எட்டியுள்ளது.

இக்கோவிலின் அலுவலர் பதவி, உதவி ஆணையர் பதவியிலிருந்து துணை ஆணையர் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கு ரூ.4 இலட்சம் செலவிடப்படும். இவ்விழாவிற்கு 5 இலட்சம் பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்கட்கு எல்லாவித வசதிகளும் செய்ய முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழும் இக்கோயில் கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

கோவில் திருப்பணிக்கு நன்கொடை வழங்கும் பக்தர்கட்கு வருமானவரி விலக்கு அனுமதி, கோவில் நிர்வாகத்தால் வாங்கிவைக்கப்பட்டுள்ளது.

கோவில் பகுதியில் தடுப்புச்சுவர் கட்டப்படுவதற்கு ரூ.5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இராசகோபுரம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. கும்பாபிஷேக விழாவில் பல அறிஞர்கள், சமயச் சான்றோர்கள், அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.





# கைத்தறிப் பெருமை

நாட்டில் வேளாண்மைக்கு அடுதத தொழிலாகத் திகழ்வது நெசவுத் தொழில்தான் இந்தத் தொழிலை வளர்க்க மைய அரசும் மாநில அரசுகளும் தீவிர முயற்சிகள் எடுத்து வருகின்றன.

தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சியில் நெசவுத் தொழிலுக்கு என்று ஒரு அமைச்சரே நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு தனித் துறையும் உருவாக்கப்பட்டுள்ளது.

கைத்தறியின் வளர்ச்சிக்குத் தமிழக அரசு பற்பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. 1980-81ல் 1187 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. தற்போது 1588 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 5½ இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவின் கீழ் கொண்டுவரப்பட்டு பாதுகாப்பாக இயங்கி வருகின்றன. கைத்தறித் தொழிலில் 13 இலட்சத்து 94 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். மொத்தம் 30 இலட்சம் பேர் இந்தத் தொழிலை நம்பி உள்ளனர்.

72 கோடி ருபாயாக இருந்த கைத்தறித் துணி உற்பத்தி 113 கோடி ருபாயாகவும், 75 கோடி ருபாயாக இருந்த விற்பனை 125 கோடி ருபாயாகவும் உயர்ந்திருக்கிறது.

தமிழ்நாடு 60 சதவிகிதம் கைத்தறித் துணியை உற்பத்தி செய்யவேண்டும் என்று மைய அரசு இலக்கு நிர்ணயித்து இருக்கிறது. ஆனால் அந்த அளவையும் மீறி மொத்தம் 68 சதவிகிதம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலதனமும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

நூற்பாலைகள் செய்ய முடியாத நெசவுகளை, புது ரகங்களைக் கைத்தறி செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் கைத்தறியில் பருத்தி நூல் ரகங்கள் மட்டுமின்றி, செயற்கை நூல் ரகங்களும் உற்பத்தியாகின்றன.

ஆலைகளில் தயாராகும் துணிகளைவிட 4 மடங்கு அதிகமாகக் கைத்தறித் துணிகள் தயாரிக்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கும் உடைகளுக்கு 8 கோடி ரூபாய் அளவுக்கு கைத்தறித் துணிகளை வாங்கி உள்ளது தமிழக அரசு. கண்காட்சியில் 32 கோடி ரூபாய்க்கான துணிகள் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[சென்னை எழும்பூரில் 25.4.85ல் நடைபெற்ற 31-வது கைத்தறிக் கண்காட்சி திறப்பு விழா நிகழ்ச்சியிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள்]



## சிறப்பிடம் பெறும் தமிழகம்

*இந்தியாவில் தமிழகம் தான் கைத்தறித் துணி உற்பத்தியில் சிறப்பான இடத்தை வகிக்கிறது.*

*மத்திய அரசின் உதவியோடு தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகள் மூலம் நூல்கள் தட்டுப்பாடு இல்லாமல் நெசவாளர்களுக்கு வழங்குவதிலும் அதேபோல் துணிகளை ஏற்றுமதி செய்வதிலும் சிறப்பாகச் செயல்படுகிறது.*

—திரு சந்திரசேகர சிங்
மத்திய விநியோகம் மற்றும் ஜவுளித்துறை துணை அமைச்சர்

(31-வது கைத்தறிக் கண்காட்சி விழா 8.5.85 உரையிலிருந்து)



# எழில் துள்ளிவரும் கொல்லி மலைச் சூழல்

### பேரறிஞர் அண்ணா

''தம்பீ! கொல்லி மலைச்சாரலிலே, கொஞ்சும் சதங்கை எழுப்பியபடி ஆடிவரும் அருவிக்கருகே, வழவழப்பான கற்குவியலின் மீதமர்ந்து உன்னை நினைத்துக் கொண்டேன். என்னை அகமகிழவைக்க தோழர்கள் மலை வளம் காண அழைத்தனர். கோடி கோடியாகச் கொட்டிச் செலவிட்டாலும், செய்து காட்ட இயலாத காட்சியன்றோ மலைவளம், தம்பீ, அதிலும் தமிழகத்தின் தன்னிகரில்லா வரலாற்றுச் சிறப்பினுக்கு உள்ள சான்றுகளிலே ஒன்றன்றோ, கொல்லி மலை! அது திருச்சி மாவட்டத்துக்கும் சேலம் மாவட்டத்துக்கும் நடுவே இயற்கை அமைத்துள்ள எழில்மிகு திரை என்று கூறலாம்; அதிலே விளைந்திடும் பலாவும் வாழையும் கொய்யாக் கனிகளும் வகை வகையான பொருள்களை மலைவாழ் மக்கள் சுமந்தபடி, ஒற்றையடிப்பாதை வழியாக இறங்கி வந்த வண்ணம் இருந்தனர் சாரை சாரையாக, இரைச்சல் குறைவு, இயற்கை அமைத்தளித்த எழிலோ மிகுதி! கட்டுடல் இருக்கிறது, மலைவாழ் மக்களிடம். ஆயினும் அவர்கள் மனதைக் குடைந்திடும் எண்ணம் யாதோ? அறிந்திட இயலவில்லை. ஆயினும் இயற்கையுடன் போராடி, காடுகளில் இருந்துகொண்டு காலமெல்லாம் கஷ்டப்படுகிறோமே, நல்ல பாதை, புதிய வாழ்வு எப்போதுதான் கிடைத்திடுமோ என்று எண்ணி ஏக்கமடைகின்றனரோ என்னவோ! மலைவாழ் மக்கள் தமிழைத்தான் பேசுகின்றனர். நான் மலைத்திடும் அளவுக்கு மளமளவென்று மலைபடு பொருள்களின் பட்டியலைக் கூறினர், இவையாவும் வெளிநாட்டினர் விரும்பிப் பெற்று, பொருளினை நமக்கு அளித்திடும் செல்வப் பொருள்கள். மேனாடுகள் பலவற்றினுக்குச் சுவையும் மணமும் இத்தகு பொருள்கள் மூலமே கிடைக்கின்றன. செல்வப் பொருட்களினை ஈந்திடும் கொல்லி மலையில் வளத்தைத் திட்டமிட்டுப் பெற்றிடத்தக்க ஏற்பாடுகளை துரைத்தனம் மேற்கொண்டு இருந்திருக்குமானால் கொல்லி மலையின் கொடைத்திறன் பன்மடங்காகி இருக்கும்.

திருச்சி மாவட்டம் முழுவதும் இந்த மலைபடு பொருள் ஈட்டித் தரும் செல்வத்தைக் கொண்டே ஏற்றம் பெற்றிட இயலும். இப்போது கொல்லி மலையிலே கிடைப்பவை திட்டமிட்டுப் பெறப்படுபவை அல்ல. பன்னெடுங்காலமாக இருந்து வரும் தருக்கள். பாய்ந்தோடி வரும் அருவி! வழவழப்பாகிப் போன பாறைகள், உருளைக் கற்கள் மரக்கிளைகளிலே மந்திகள்; பண்பல எழுப்பி வட்டமிட்டுத் திரிந்திடும் புள்ளினங்கள்! சீறிடும் சிறுத்தைகளும், சிறுநரிகளும்! உச்சி செல்லச் செல்ல கரடிக் கூட்டமும் உண்டு.

இவைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்துக் கொண்டு வாழ்கின்றனர் மலை மக்கள்! தம்பி, அவர்கள் ஓட்டர்களும் கூட! அதாவது அவர்களும் நம்மைப்போல இந்நாட்டு மன்னர்!

கொல்லிமலையை வளமாக்கத் தொகை ஒதுக்கச் சொன்னால் ஆயிரத்தெட்டு ஐயப்பாடுகள் அவிழ்த்து விடுகின்றனர். பழமுதிர் சோலையாக்கலாம் கொல்லி மலையை - சில கோடி ரூபாய்,பயன்தரும் முறையில் செலவிட்டால்! சந்தனக்காடு காணலாம். அருவி அழகும்

அடவி அழகும் காணச் செல்வோர் சிந்துபாடி மகிழ்ந்திடும் உல்லாசக் கூடமாக்கலாம். கொல்லிமலையோ மகன் வரவுக்காக சுவைமிகு உணவினைச் சமைத்துவிட்டு அது சில்லிட்டுப் போகும் நிலையிலும், மகன் வீடு வராதிருந்தால், ஏக்கத்துடன், வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் தாய் போல இருந்து வரக் காண்கிறேன்.

கொல்லி மலைச்சாரலிலே அமர்ந்திருந்த போது, வேறோர் யோசனையும் எழத்தான் செய்கிறது. தேரும், திருவிழாவும் காணச் சென்று இடிபட்டு மிதிபட்டு வருந்தும் நம் மக்கள் ஓய்வு நாட்களைக் கொல்லிமலை போன்ற இடங்களைச் சென்று காண்பதற்குச் செலவிட்டால் மனத் தூய்மையும், தெம்பும் ஏற்படுமல்லவா? எங்கே செல்கிறார்கள்! கானிடைச் சென்று தங்கி இருக்கும்போது அங்கு வீசும் காற்றுமன்றோ கானமாகி வருகிறது!

''அமெரிக்கக் குடியரசுத் தலைவர் இருந்தாரே ரூசுவெல்ட் அவருக்கு ஒரு பழக்கமாம்- பொழுது புலரும் வேளையிலே புள்ளினங்கள் மிகுந்துள்ள சிறுகானிடைச் சென்று தங்குவாராம். ஒவ்வோர் வகையான புள்ளினமும் ஒவ்வொரு வகையான பண் எழுப்புமன்றோ! அந்தப் பண்ணினைக் கேட்பதிலே அவருக்குத் தனிச் சுவையாம்! பண்ணின் வகையினைக் கேட்டு அது இன்ன புள்ளினத்தின் பண் என்று கூறுவாராம்.

தம்பி, இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச் சுவை இருக்கிறது. அது உள்ளத்துக்குத் தூய்மை தர வல்லது என்பதை மலைவளம், கானின் கவர்ச்சி ஆகியவற்றைக் காணும்போது நிச்சயமாக உணர முடிகிறது. இயற்கையின் அன்பழைப்பாக காற்றினால் அசைவு பெறும் செடியும் கொடியும் எனக்குத் தென்பட்டன. நம் தமிழ் மக்களும் தம்பி,...மாற்றார் முன் மண்டியிடாத நாட்களிலே இயற்கையின் எழிலைக் காண்பதிலே தனிச்சுவை பெற்றிருந்தனர். ●

23.10.1960 திராவிட நாடு இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்திலிருந்து...





# கொல்லி மலையில முப்பெரும் விழா!

சேலம் மாவட்டம் கொல்லி மலையில், கோடைவிழா, வல்வில் ஓரிவிழா, அறப்பளீசுவரர் கோவில் கும்பாபிஷேக விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் கொல்லிமலை கோவிலூரில் நடைபெற்றது.

பழங்காலத்தில் கொல்லிமலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்து வந்த மன்னன் வல்வில் ஓரி. அந்த மன்னன் நினைவாகக் கொல்லி மலையில் ஆண்டுதோறும் ஓரி விழா நடத்தப்பட்டு வருகிறது. அதற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் இந்த ஆண்டு கோடை விழாவும் நடத்தப்பட்டது.

இந்த முப்பெரும் விழா மூன்று நாட்கள் நடைபெற்றது.

முப்பெரும் விழாவின் முதல் நிகழ்ச்சியாக அறப்பளீசுவரர் கோவில் கும்பாபிஷேகம் 1-5-85 அன்று காலையில் நடைபெற்றது. வந்திருந்தோரை இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு.கு.ஆளுடையபிள்ளை,இ.ஆ.ப. வரவேற்றார். பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மாவட்டங்களிலிருந்து வந்திருந்து சிறப்புச் செய்தனர்.



மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கும்பாபிஷேக நிகழ்ச்சிக்குத்தலைமைதாங்கியும் திருச்சி உறையூர் பசிப்பிணி மருத்துவர் அருணாசல முதலியாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தும்,சென்னையைச் சேர்ந்த கவிஞர்திரு. தாமோதரன் இயற்றிய ''அறப்பளீசுவரர் சுவாமி அந்தாதி வெண்பா '' நூலை வெளியிட்டும் உரையாற்றினார். நூலை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

திருவேற்காடு கருமாரியம்மன் கோவில் அய்யப்ப சுவாமிகள், கும்பாபிஷேக விழாவிற்கான ஏற்பாடுகளை முன்னின்று சிறப்புறச் செய்தார்.

சித்பவானந்த சுவாமிகள்,சுந்தர சுவாமிகள்,இராமசாமி அடிகளார் மற்றும் பலர் சிறப்புரையாற்றினார்கள்.

சேலம் மாவட்ட அறநிலைய உதவிஆணையாளர் திரு. சொர்ணம் நன்றி கூறினார்.

கொல்லிமலை கோவிலூரில் சிறப்புக் கூட்டமும் பல்வேறு பணிகள் துவக்கி வைக்கும் விழாவும் நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு வை. பழனிச்சாமி இ.ஆ.ப. வரவேற்றார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். சிவப்பிரகாசம் அவர்கள் முன்னிலை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:

''புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்ட பிறகுதான் இப்பகுதி மக்களுக்கு சாலை வசதியும், மின் வசதியும் மலைவாழ் மக்களுக்கு மேம்பாட்டுத் திட்டங்களும் பல கோடி ரூபாய்க்குச் செய்யப்பட்டுள்ளன''.

வாழவந்தி நாடு ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தைத்திறந்துவைத்து மாண்புமிகு வீட்டுவசதித் துறைஅமைச்சர் திரு ந. நல்லுசாமி அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''தன்னிறைவுத் திட்டங்கள் மூலமும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமும் இந்த அரசுதான் இப்பகுதி மக்களுக்குச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.''



பல்துறைப் பணி விளக்கப் பொருட்காட்சியைத் துவக்கி வைத்தும், பயணியர் ஓய்வு விடுதிக்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இப்பொருட்காட்சியில் அரசின் பணிகள் பற்றிச் சிறப்பாக விளக்கி வைக்கப்பட்டுள்ளது.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பிச்சாவரத்திற்கு ஆளுநரை அழைத்து வந்து அதன் சிறப்பைப் பற்றிக் காண்பித்தார். அண்ணா சுற்றுலா பற்றி நினைத்ததை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது''.



அறப்பளீசுவரர் ஆலயத்தி லிருந்து ஆகாசகங்கைக்குப்புதிய சாலை அமைக்கும் பணியைத் துவக்கி வைத்தும், புதியபேருந்து வழித்தடங்களைத் துவக்கி வைத்தும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திருஎஸ்.முத்து சாமி அவர்கள் பேசுகையில் கூறிய தாவது:

"ஆகாச கங்கை அருவிக்குச் செல்ல, சாலை போடும் பணி முடிவுற்றவுடன் பேருந்து விடப் படும். இங்கு அண்ணா போக்கு வரத்துக் கழகப் பணிமனை அமைதது நகரப் பேருந்துகள் விடப்படும். இங்கு பணிமனை அமைக்க ரூ 12 இலட்சம் செல வாகும்.

"கட்டண உயர்வு மூலம் கிடைக் கும் பணத்தில் இருந்துதான் பேருந்து வசதி இல்லாத மக் களுக்குப் போக்குவரத்து வசதி செய்து தரமுடியும்.

"கொல்லிமலையில் கிராமங் களை இணைக்க, சாலை வசதிக் காக ரூ. 3.5 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டது. அதில் ரூ. 1.5 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

"நாங்கள் எங்களை விளம்பரப் படுத்திக் கொள்ள விழா எடுக்க வில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் அரசு செய்யும் நன்மை களை மக்களுக்கு எடுத்துச் சொல்லவே இதுபோன்ற விழாக் களைக் கொண்டாடுகிறோம்."



மலர் மற்றும் தோட்டக்கலைக் கண்காட்சியைத் துவக்கி வைத்தும், பழம் பதனிடும் தொழில் கூடத்திற்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் உரையாற்றுகையில் கூறியதாவது:

"இப்பகுதியின் அடிவாரத்தில் உள்ள பேளுக்குறிச்சியில்தான் என்னுடைய பாட்டனார் வாழ்ந் தார்கள்.

"இப்பகுதி மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துத் தங்களது விளைபொருட்களை அவற்றின் மூலம் விற்பனை செய்ய வேண் டும்.

"நிலங்களை மற்றவர்கட்குக் கொடுக்காமல் நீங்களே பயன் படுத்த வேண்டும்.

"இப்பகுதி மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று விரும்பு கிறேன்"

விழாவிற்குத் தலைமை தாங்கி கொல்லிமலை, கோடை விழா மற்றும் வல்வில் ஓரி விழாக் களைத் துவக்கி வைத்து, இளை ஞர் விடுதிக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றுகையில் மாண்பு மிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் கூறிய தாவது:

"கொல்லிமலையைச் சுற்றுலா மையமாக மாற்றவும், பொது மக்கள் இப்பகுதிக்கு வந்து போக பலவசதிகளைச் செய்து கொடுக்கவும் ரூ. 60 இலட்சம் செலவில் முதல் கட்டமாகப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

"இதற்கு முன்னர் ஆட்சி செய்த வர்கள் செய்ய முடியாத சாதனை களைப் புரட்சித் தலைவர் அரசு பேரறிஞர் அண்ணா இங்கே இருக்கிற இந்த அருவிப் பக்கத் திலேயே இருந்து எழுதிய கட்டு ரையில் கூறியவற்றை இன்று செய்து வருகிறார்

"இங்கே உள்ள ஆகாச கங்கைக் குச் சாலை வசதி போடப்பட்டு விட்டால் இது இரண்டாவது குற்றாலமாக அமையும்.

"ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரலாற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள அறப்பளீசு வரர் ஆலயத்துக்குத் திருப்பணி நிறைவேற்றி குடமுழுக்கு நடத் தப்பட்டுள்ளது. இப்பகுதியில் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பேசும் மொழி தமிழ்.

"இன்று முதல்தான் இவர்கள் உற்பத்தி செய்த பொருள்களைத் தலையில் சுமக்கும் கொடுமை யிலிருந்து மாறிப் பேருந்தில் எடுத்துச் செல்லும் வசதி பெறு கிறார்கள்.



"நேற்று நான் இப்பகுதியில் உள்ள கிராமத்திற்குச் சென்று மக்கள் வசதி பற்றி விசாரித் தேன். மின்வசதி இல்லாத காரணத்தினால் ஜெனரேட்டர் வைத்து புரட்சித் தலைவர் அரசு மின்வசதி வழங்கும் நிலையைக் கண்டேன்.

"நாளை இங்கு என்ன விழா நடக்கிறது தெரியுமா என்று கேட்டேன், அங்கிருந்த பெண்கள் "நாளை எங்கள் ஊருக்குப் பஸ் விடப்போகிறார்கள்" என் றார்கள்.

"ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு பகுதிகளில் ஆங்கி லேயர்கள் குடியேறினார்கள். இப் பகுதியில் தமிழ் மக்கள்தான் ஆதியிலிருந்து வாழ்ந்து வரு கிறார்கள்."

விழாவில் சட்டமன்ற உறுப் பினர்களும், நாடாளுமன்ற உறுப் பினர்களும் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

விழா இறுதியில் செய்தி- மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.





# கொல்லிமலையின் வளர்ச்சிப் பணிகள்

**கொல்லிமலையில் பொருளாதார மேம்பாடு !**

இங்கு வாழும் "மலையாளிகள்" என்ற ழைக்கப்படும் மலைவாழ் மக்களின் வாழ்க் கைத்தரம் உயரவும், பொருளாதாரம் மேம் பாடடையவும் அரசு தனிக் கவனம் செலுத்தி "மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட் டம்" தேசிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டம், டேனிடா, தேசிய வேலைவாய்ப் புத் திட்டம், மாவட்ட உலாத் தலத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது.

மாவட்ட உலாத் தலத் திட்டத்தின்கீழ் சோளக்காடு பயணியர் விடுதி வளாகத்தினுள் சுமார் 1 லட்சம் மதிப்பில் "தொலைநோக்கி இல்லம்" கட்டுவதற்கான கட்டுமானப் பணி கள் நடைபெற்று வருகின்றன. அருள்மிகு அறப்பளீசுவரர் ஆலயம் அருகில் சுமார் ரூ 5. லட்சம் மதிப்பீட்டில் உணவுச் சாலையோடு கூடிய இளைஞர் ஆண்டு தங்கும் விடுதி ஒன்றும் கட்டப்பட உள்ளது.

இங்கு பழ வகைகளைக் கொண்டு பழம் பதனிடும் தொழிற்கூடம் ரூ. 10 இலட்சம் செலவில் ஒன்று கட்டப்பட உள்ளது.

இங்குள்ள சிறு கிராமங்களை முக்கிய கிராமங்களோடு இணைப்பதற்கான பாதை வசதிகள் "மலைவாழ் மக்களின் மேம்பாட் டுத் திட்டத்தின்" கீழ் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத் தின் கீழ் மலைவாழ் மக்களுக்கு நவீன குடி யிருப்புகளும், சமுதாயக் கூடங்களும் ரூ. 5 லட்சம் நிதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இங்கு சுமார் 13 ஏக்கர் நிலப்பரப்பில் அரசு பட்டுப்பண்ணை அமைத்து பட்டுப்புழு வளர்ப்பினை நடத்துகிறது. இங்கு அயல் நாட்டு விதைநாற்றுகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

பட்டுத் தொழிலால் 1,500 க்கும் மேற் பட்ட மக்கள் நேரடியான வேலைவாய்ப்பி னைப் பெறுகிறார்கள்.

மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத் தின் கீழ் இங்கு வனத்துறை மூலம் 10 எக்டேர் நிலப்பரப்பில் சில்வர் ஓக் மரத் தோட்டம் ஏற் படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரி யத்தின் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 190 நபர்களுக்கு 1,900 தேனீ வளர்ப்புப் பெட்டி கள் ரூ.1,67,500 மானியத்துடன் வழங்கப் பட உள்ளது. இதுதவிர கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூலம் நடப்பு ஆண் டிற்கு ரூ.20 லட்சம் மதிப்பில் முன்னேற்றப் பணிகள் செயல்படுத்தப் பட உள்ளன.

**மலைகளின் மாணிக்கம் !**

சேலம் மாவட்டத்தில் ஏறத்தாழ ஒரே உயரமும், சம சீதோஷ்ண நிலையும் பெற்ற இரு மலை வாசஸ்தலங்களான ஏர்க்காடும், கொல்லிமலையும் அரிய, அழகான, பசுமை நிறைந்த சுற்றுலாத் தலங்கள் ஆகும். இப் போது கொல்லிமலை 'மலைகளின் மாணிக்கம்' என்ற சிறப்புத் தகுதியைப் பெற்று, தமிழகச் சுற்றுலா வரைபடத்தில் பொறிக்கப்படுகிறது.



கொல்லிமலையில் 25 கி.மீ. மலைச்சாலை யில் வளைந்து, நெளிந்து, பசுமைவளங்களைப் பார்த்தவண்ணம் ஒரு சாலைப் பயணத்தை நிகழ்த்த 70 குறுகிய வளைவுகளுடன் கூடிய சாலையும், புதுப்பிக்கப்பட்ட புராதனச் சிறப்புப் பெற்ற புண்ணியத் திருக்கோயிலும் 200 அடி உயரத்திலிருந்து ஆர்ப்பரிக்கும் ஆகாச கங்கை அருவியும், ஆண்டு முழுவதும் இதமான தட்பவெப்பமும், மணம் கமழும் மலைப்பழ வகைகளும் கொல்லியை ஒரு சுற் றுலாத் தலமாக ஆக்குகின்றன.

இப்பகுதியில் முறையான வசதிகள் ஏற் படுத்தப்பட்டால், எல்லாத் தரப்பு மக்களும் வந்து தங்கி இன்புறும் இதமான சுற்றுலா வாசஸ்தலமாக ஆகும் என்பதை அறிந்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கொல்லிமலையை மாவட்ட உலாமையத்தில் இணைத்து ஆணை இட்டதைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட வளர்ச் சிப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஆண்டில் முறையான நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக எடுக்கப்பெற்று வருகின்றன. 1985-86ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் ரூ. 24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஊரகக் குடிநீர் விரைவுத் திட்டத்தின்கீழ் குறைந்த பட்சம் ரூ. 18 கோடி மத்திய அரசு வழங்குமென்று எதிர்பார்க்கப் பெறுகிறது. ஊரகக் குடிநீர்த் திட்டத்தை நன்முறையில் செயலாக்கியதற்கு ஊக்கத் தொகையும் இவ்வரசுக்குக் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகிறது. மேலும் 1985-86ல் இருபத்து ஐந்து இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2,000 குடியிருப்புக் களுக்குக் குடிநீர் வழங்கப்பெறும்.

### சென்னைக் குடிநீர்

சென்னை நகருக்கு, நாள் தோறும் 52 மில்லியன் காலன் குடிநீர் வழங்கப்படுகிறது. இதில் நாள் ஒன்றுக்குப் புழலேரியிலிருந்து வழங்கும் 47 மில்லியன் காலனும், தாமரைப் பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர் ஆகிய பகுதி களிலிருந்து வழங்கும் 5 மில்லியன் காலனும் அடங்கும்.

இவை தவிர-பெசன்ட் நகர், இந்திரா நகர், திருவான்மியூர் பகுதிகளுக்கு ஆங் காங்கே உள்ள நிலத்தடி நீர் குடிநீராக வழங்கப்படுகிறது.

தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதி களுக்கும், தண்ணீர்க் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளுக்கும் 560 தொட்டிகளில் 21 லாரிகள் மூலம் இப்போது குடிநீர் வழங் கப்படுகிறது. இவை தவிர, மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்ட மையங் களில் 511 தொட்டிகள் வைக்கப்பட்டு, இவற் றிற்கு—மேலும் 21 லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. குடிப்பதற்குத் தவிர மற்ற தேவைகளுக்கு உதவ 3621 குழாய்க் கிணறுகளும், 1136 இந்தியா மார்க்-2 ஆழ் துளைக் கிணறுகளும் அமைக்கப்பட்டு 1983 லிருந்து பொது மக்களின் உபயோகத்தில் உள்ளன.

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழலேரி ஆகிய நீர்த் தேக்கங்களில் கீழ்க்கண்ட அளவு தண்ணீர் உள்ளது.

| | மொத்தக் கொள்ளளவு | 1-4-85 அன்றைய கொள்ளளவு |
|---|---|---|
| | மில்லியன் கன அடி | |
| பூண்டி | 2752 | 443 |
| சோழவரம் | 881 | 176 |
| புழலேரி | 2850 | 2298 |
| மொத்தம் | 6483 | 2917 |

தற்போது வழங்கப்படும் குடிநீர் அளவு சென்னை நகருக்குத் தொடர்ந்து வழங்கப் பட்டால் ஏரிகளிலுள்ள தண்ணீரைக்கொண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் வரை தட்டுப்பாடின்றிக் குடிநீர் வழங்க இயலும். கோடை மழை ஜூன், ஜூலை மாதங்களில் பெய்து ஏரிகளுக்கு நீர் கிடைத்தால் நிலைமை முன்னேற்றம் அடையும். பருவ மழை அக் டோபர் மாதத்தில் ஆரம்பிக்கும்.

இந்த நிலைமையில் பொது மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிலத்தடி நீரை அதிக அளவு உபயோகிக்க வேண்டும். இந்த அடிப்படையில் தமிழக அரசின் ஆலோசனைப் படி சென்னைக் குடி நீர் வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:

சென்னை நகரில் 2,000 இடங்களில் குழாய்க் கிணறுகள் புதுப்பிக்கப்படுவதன் மூலமும் புதிதாக அமைக்கப்படுவதன் மூலமும் அதிக அளவு நிலத்தடி நீர் உபயோகிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

தண்ணீர் வராத 40 இடங்களில் இந்தியா மார்க்-2 பம்புகள் அமைக்கப்படும். இப்பணிகள் ஏற்கனவே நடந்து கொண்டிருக் கின்றன.

தேவையான இடங்களில் அதிக அளவு இந்தியா மார்க்-2 பம்புகள் அமைக்கப்படும்.

தாமரைப்பாக்கம் முதலிய நிலத்தடி நீர்ப் பகுதிகளில் அதிக அளவு தண்ணீர் இறைத்து, சென்னை நகருக்கு வழங்கப்புதிய ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு அவற்றிற்குப் புதிய மின்சார பம்புகள் பொருத்தப்படும்.

சென்னை குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர், சென்னை சட்டமன்றத்தொகுதி களை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டு மக் களின் பிரச்னைகளை நேரில் கண்டு குறை நீக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளார்.

(20-4-85அன்று, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து)

## மீன் உற்பத்தியில் இந்தியாவுக்கு எட்டாவது இடம்

மீன் பிடிப்புத் தொழிலில் இந்தியா குறிப் பிடத்தக்க இடத்தைப் பெற்றிருக்கிறது. காமன் வெல்த் உறவு நாடுகளில் முதலிடத்தை யும் உலகத்தில் எட்டாவது இடத்தையும் மீன்பிடி தொழிலில் இந்தியா பெற்றுள்ளது.

1983-84ல் 26 லட்சத்து 84 ஆயிரம் டன் மீன் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் 16 லட்சத்து 4 ஆயிரம் டன் மீன்கள் கடலிலிருந் தும் 10 லட்சம் டன் மீன்கள் உள்நாட்டு நீர் நிலைகளிலிருந்தும் பிடிக்கப்பட்டன.





# மத்திய அரசின் பரிசு பெற தமிழகம் வீறுநடை!

மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் எச். வி. ஹண்டே.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்கும் இரண்டரைக் கோடி ரூபாய் பரிசைப் பெற, தமிழக அரசு முனைப் பாகச் செயல்பட்டு வருகிறது.

குடும்பக் கட்டுப்பாடு அவசியம் பற்றி பெண்களிடம் விளக்கி அவர்களை இணங்க வைப்பதுடன், அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அவர்களைச் சிறப்பாகக் கவனிப்பது அவசியம்.

சிகிச்சை செய்ய விரும்பும் பெண்களை இன்முகத்துடன் வரவேற்று அறுவைச் சிகிச் சைக்குப் பிறகு இரண்டு அல்லது மூன்று நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருக்கும் போது அவர்களுக்குப் போதிய உணவு, சிகிச்சை மற்றும் பாதுகாப்புத் தருவது மிகவும் அவசியம்.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு மருத்துவமனையில் இருக்கும் பெண்களைப் பராமரிக்கும் பணி மற்றும் அவர்களை நேரில் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வது போன்ற பொதுச் சேவை களை அரிமா சங்கங்களைச் சேர்ந்த பெண்கள் செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

விவரம் தெரிந்த, படித்த, முற்போக்கு எண்ணங்கள் கொண்ட பெண்கள் இல்லை என்றால், இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியாது. தங்கள் அலுவல் களிடையே இந்தப் பொதுச் சேவையைச் செய்ய வந்துள்ள அரிமா பெண்களைப் பாராட்டுகிறேன்.

ஸ்டெல்லா சவுந்தரராஜன் ஐந்தாண்டு களுக்கு முன்பு ஆராய்ச்சி செய்து எழுதிய ஒரு நூலில், 'பட்டப் படிப்புப் படித்தவர்கள் வீட்டில் அதிகபட்சம் இரண்டு குழந்தைகளும் எஸ். எஸ். எல். சி. வரை படித்தவர்கள் வீட்டில் நான்கு குழந்தைகளும், எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளவர் வீட்டில் ஆறு குழந்தைகளும் உள்ளதாகத் தெரிய வந் துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்கான மத்திய அரசின் இரண்டரைக் கோடி ரூபாய் பரிசு, கடந்த ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது.

இந்த ஆண்டு இந்தப் பரிசு தமிழகத் திற்குக் கிடைக்கும் வகையில் முனைப்பாகச் செயல்பட வேண்டும்.

குடும்பநலத் திட்டம் கடந்த 1979-80 இல் 59.9 சதவிகிதம் செயல்படுத்தப்பட்டது.

1984-85இல் 105 சதவிகிதம் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

**(எழும்பூர் தாய் சேய் மருத்துவமனை மற்றும் அரிமா சங்கங்கள் சார்பில், குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண்கள் பராமரிப்புத் திட்டத்தை 22-4-85 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து).**



## புதிய முறையில் குடும்ப நலப் பிரச்சாரம்!

குடும்பநலத் திட்டம் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்ல தமிழக அரசு குடும்ப நலத் துறை புதிய முறை ஒன்றை மேற்கொண்டுள் ளது. முக்கிய நெடுஞ்சாலைகளில் மக்களின் கண்களுக்குப் பளிச்சென்று தெரியும் விதத்தில், கான்கிரீட் பலகையில் பலவண்ணங்களில் தீட்டப் பட்ட குடும்பநலத் திட்டம் பற்றிய விளம்பரம் இடம் பெற்றுள்ளது.

சென்னை நகரில் மட்டும் இதேபோன்ற குடும்பநலத் திட்ட விளம்பரங்கள் சுமார் 150 உள்ளன. சாலையில் முக்கிய இடங்களில் இதுவரை சுமார் 393 சிமெண்ட் கான்கிரீட் தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விளம் பரப் பணிக்காக ரூ. 8 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. இதற்கான நிதியை மைய அரசு அங்கீகரித்துள்ளது.

சோளக்காடு பயணிகள் விடுதி வளாகத்தில் தொலைநோக்கி இல்லம்.



கோவிலருகில் உணவுச்சாலையுடன் கூடிய இளைஞர் விடுதி.

அதன் அருகே இன்னொரு ஓய்வு விடுதி

கோவில் அருகிலிருந்து ஆகாச கங்கை நீர் விழ்ச்சிவரை புதிய சாலை.



சிறுவர் பூங்கா, மற்றும் பழத்தோட்டம்.

**அண்ணா போக்குவரத்துக் கழகம் துவக்கமும் வளர்ச்சியும்:**

மலைவாழ் மக்களுக்கும், குக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்து மக்கள் சேவையில் நாளும் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபடுவதன் காரணமாக இன்று 774 பேருந்துகளைக் கொண்டு இயங்குகிறது.

அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சுமார் 5,316 குடும்பங்கள் வாழ்வு பெற்றுள்ளன.



கொல்லிமலையில் செம்மேடு என்னும் கிராமத்தில் இருந்து நடுக்கொம்பை, சோளக்காடு உட்பட பல கிராமங்களுக்குச் சென்று திரும்ப செம்மேட்டிற்கு வரும் பேருந்தும், நாமக்கல்லிலிருந்து செம்மேட்டிற்குச் செல்லும் பேருந்தும் இந்தப் புதிய வழித்தடங்களில் 1-5-85 முதல் செல்கிறது.

**கொல்லிமலையின் வன வளம்!**

செயற்கை முறையில் ஆண்டுதோறும் காடுகள் உற்பத்தி செய்யப்பட்டு இக்காடுகள் உற்பத்தி செய்யும் பணிகளில் மலைவாழ் மக்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று வருவாயை உயர்த்திக் கொள்கிறார்கள். உற்பத்தியாகும் தைல மரங்கள் பள்ளிப்பாளையம் காகித ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்டுஅரசுக்கு வருமானம் தருகிறது. இம்மலையில் சேலூர் நாடு, திண்ணூர் நாடு, அரியூர் நாடு பகுதிகளிலும் அலுமினியம் தயாரிக்கப்பயன்படும் பாக்சைட் எனும் மூலப்பொருள் கிடைக்கிறது. இதனை வெட்டி எடுப்பதன் மூலம் மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வாய்ப்புள்ளது.

அரசு தரப்பில் காடுகளில் உற்பத்தியாகும், புளி, கடுக்காய், நெல்லிக்காய், சிகைக்காய், ஏலம், லவங்கப்பட்டை போன்ற பொருள்கள் மலைவாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு (லேம்ப் சொசைட்டிக்கு) வழங்கப்படுகின்றன. இதில் கிடைக்கும் லாபம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



**2.5.1985 அன்று வல்வில் ஓரி விழாவில் பள்ளி மாணவ மாணவியர் கலைநிகழ்சியும், கவியரங்கமும், சிறப்புக் கூட்டமும் அறிஞர் பெருமக்களைக் கொண்டு நடத்தப்பட்டன.**

**3.5.1985 அன்று கோடை விழாவில் பட்டிமன்றமும், மலைவாழ் மக்களின் கலை நிகழ்ச்சியும், நாடகமும், அறிஞர் பெருமக்களைக் கொண்டு நடத்தப்பட்டன.**

—மருது



# கொல்லிமலை குவிக்கும் செய்திகள்

## கொல்லிமலைத் தாவரங்கள்

கடையெழு வள்ளல்களில் ஒருவனான வல்வில் ஓரி கோலோச்சியதால் வரலாற்றுச் சிறப்பும், குறுந்தொகை, நற்றிணை, அகம், புறநானூறுகளில் பாடப்பட்டதால் இலக்கியச் சிறப்பும் பெற்றதான கொல்லிமலை, சேலம் வனப் பிரிவின் தென்பகுதியைச் சேர்ந்தது. இம் மலைத் தொடர்களுக்கு மழை கொணரும் பருவக் காற்று வீசும் திசைக்கு இணைப்போக்காக இம் மலைத் தொடர் அமைந்திருக்கின்றது. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 3,000 அடி முதல் 4,350 அடி உயரம் வரை வானளாவ நிற்கும் இம்மலை, 224.83 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. மலையில் மிகவுயர்ந்த இடமான குழிவளைவு என்ற இடம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,368 அடி உயரம் உள்ளது. இம்மலையில் உற்பத்தியாகும் பெரியகோம்பை, ஐயூர் சிற்றாறுகள் திருச்சி மாவட்டத்திலுள்ள முசிறி தாலுக்காவைச் சேர்ந்த கிராமங்களின் பாசனத்திற்குப் பயன்படுகின்றன.

கொல்லிமலைப் பரப்பில் 14 'நாடுகள்' உள்ளன. இவற்றில் 246 சிறு கிராமங்கள் அடங்கியுள்ளன. இம்மலைவாழ் மக்கள் 'மலையாளிகள்' என அழைக்கப்படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை இருபத்தைந்தாயிரத்திற்கும் அதிகம்.

இங்கு வாழும் மக்களின் முக்கியத் தொழில் விவசாயமும்கால் நடை பராமரித்தலுமாகும். வேட்டையாடுவதிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். **விவசாயத்தில் பழைய முறைகளையே பின்பற்றும் இம்மக்களிடம், நவீன முறைகளைப் பின்பற்றி, தீவிர விவசாயத்தில் ஈடுபடும் நிலை இன்னும் காணப்படவில்லை.**

பொது விவகாரங்களை ஊர் மக்கள் எல்லாரும் சேர்ந்து விவாதித்து முடிவெடுப்பது இம்மக்களின் குறிப்பிடத்தக்க பழக்க வழக்கங்களில் ஒன்றாகும்.

**புலால் உண்ணும் தாவரங்கள்**

**தாவரங்கள் கூடப் புலால் உண்பது பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் இது உண்மை. பூச்சிகளைப் பிடித்து அதன் புலாலை உண்டு சுவைக்கின்ற தாவரங்களான ட்ரோசீரா (Drosera), உட்ரிகுலேரியா (Utricularia) ஆகியவை கொல்லி** மலையில் ஈரமிக்க புல் பரப்புகளில் காணப்படுகின்றன. பூச்சிகளைப் பிடிப்பதற்கேற்றவாறு தக்க அமைப்புகள் இத்தாவரங்களில் காணப்படுகின்றன. இரையைச் செரிக்கச் செய்யும்செரிப்பு நீர்களைச் சுரக்கும் (Enzymes) சுரப்பிகளை இவை பெற்றிருக்கின்றன. இளஞ்சிவப்பு வண்ணத்தில் மின்னிக் கொண்டிருக்கும் சிறிய ட்ரோசீரா மிகவும் எழில் நிரம்பியது.

இவ் விந்தைமிகு தாவரங்கள் அன்றி, கொல்லிமலைகளில் பல்வேறு இடங்களில் காணப்படும் இன்னொரு சிறந்த காட்சி என்னவெனில் சில ஆல்வகை மரங்கள் வளர்ந்திருக்கும் வகையாகும். இம்மரங்களின் அடிப்பகுதி பிற மரங்களின் அடிப்பகுதியைச் சுற்றி வளர்ந்து ஒரு வலை போன்ற காட்சியைத் தருவதும், இவற்றின் விழுதுகள் பாறைப் பரப்புகளில் படிந்து அவற்றைத் தழுவுவது போல் தோற்றமளிப்பதும் கண்கவர் காட்சியேயாகும்.

**சந்தனம்:**

கொல்லிமலையில் அரியூர் சோலை, சேலூர் ஆகிய இடங்களில் வனத்துறையினரின் பாதுகாப்புக்குட்பட்ட சந்தன மரக் காடுகள் உண்டு. இம்மரங்கள் திருப்பத்தூர் அல்லது கோவை மாவட்டம் சத்தியமங்கலத்திலுள்ள விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

**ஏலம்:**

உயர்ந்த மலைச் சரிவுகளில் பெரும் மரங்களின் நிழலில் ஏலச்செடி வளர்கின்றது. உதிர்ந்து மட்கும் இலைச்சருகுகளுக் கிடையே தோன்றியது போல் தோற்றமளிக்கும் இத்தாவரத்தின் வெண் பூங்கொத்து எடுப்பான தோற்றமுடையது.

**பழங்கள்:**

**பலவகையான பழங்களின் உற்பத்திக்குக் கொல்லிமலை** பெயர் பெற்றது. முக்கனிகளில் பலாவும், வாழையும் இங்கு ஏராளம், ஆடி, ஆவணி மாதங்களில் தீஞ்சுவைப் பலவின் கனி மிக அதிகமாகக் கிடைக்கிறது. இதேகாலத்தில் அன்னாசிப் பழம் மிக அதிகமாக விளைகின்றது. பலாப் பருவம் முடிந்ததும் கொய்யாப் பருவம் ஆரம்பமாகின்றது. கொடை ஆரஞ்சு, கமலா ஆரஞ்சு என இருவகையான ஆரஞ்சுகளும் இம்மலைகளில் ஏராளமாக உற்பத்தியாகின்றன. நாரத்தை, எலுமிச்சை ஆகியனவும் இங்கு விளையும் கனிகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

**வனவிலங்குகள்:**

கொல்லிமலையில் காடுகள் தொடர்ச்சியாக இல்லாமல் ஆங்காங்கு அமைந்துள்ள சரிவுகளில் சிறுசிறு பகுதிகளாக அமைந்திருப்பதாலும், போதுமான அளவு உணவு, நீர், உறையுள் கிடைக்காததாலும் பெரும் வனவிலங்குகளான யானை, புலி, காட்டெருமை போன்றவை இங்கு இல்லை. முள்ளம்பன்றி, முயல், காட்டு நாய்கள் அதிகம் காணப்படுகின்றன. அடர்ந்த காடுகளில் கரடிகள் உண்டு.

**கனிவளம்:**

அலுமினியத்தின் தாதுப் பொருளான 'பாக்சைட்' கொல்லிமலையில் கிடைக்கின்றது.

## பயங்கெழு கொல்லி

**அமைப்பு**

கொல்லிமலை தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில், நாமக்கல் ஆத்தூர் வட்டங்களில் உள்ள குன்றுத் தொடர். இவ்வழகிய தொடர், தென்வடலாகப் பதினெட்டுக் கல்லும், கிழமேற்காகப் பன்னிரெண்டு கல்லும் நீளமுடையது.



"புத்தகம், பத்திரிகை, திரைப் படம், சுவரொட்டி, சிறு சிறு வெளியீடுகள் ஆகியவற்றின் மூலம் வளர்ச்சிப்பணிகள் குறித்து மக்களுக்கு எடுத்துரைத்து வருகிறது அரசு. அதேபோல், பொருட்காட்சியின் மூலமும் வளர்ச்சிப் பணிகளை மக்களுக்கு எடுத்துரைக்கிறது. மக்கள் பொழுதுபோக்குவதற்காக இங்கே குழந்தைகளுடனும் குடும்பத்துடனும் வந்து செல்கிறார்கள். பல விஷயங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பும் பெறுகிறார்கள். மக்கள் தரும் பெருத்த ஆதரவில்தான் இந்தப் பொருட்காட்சியின் வெற்றி அமைந்திருக்கிறது.

"இங்கே ஒரு பக்கத்தில் அறிவுக்கு விருந்து, மற்றொரு பக்கத்தில் பொழுதுபொக்கு அம்சம்; மற்றொரு பக்கத்தில் கலைநிகழ்ச்சிகள், மற்றொரு பக்கம் அரசின் திட்டங்களின் விளக்கம் இப்படி பல்வகை விருந்துகள் கிடைக்கின்றன."

இறுதியில் மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு ப.சாமிநாதன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு
—தமிழ்ப்பித்தன்

## அரசு சித்திரைப் பொருட்காட்சி 1985 - சில தகவல்கள்

- மதுரையில் சித்திரைத் திருவிழாவையொட்டி தமுக்கம் மைதானத்தில் பல்லாண்டுக் காலமாகப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக அரசின் செய்தித் துறையே பொருட்காட்சியை ஏற்று நடத்தி வருகிறது.
- 1980ல் ரூ. 4 லட்சத்து 39 ஆயிரம், 1982ல் ரூ. 4 இலட்சதது 98 ஆயிரம், 1984ல் ரூ. 5 லட்சத்து 85 ஆயிரம் இந்தப் பொருட்காட்சியின் மூலம் அரசுக்கு லாபம் கிட்டியுள்ளது. இந்த ஆண்டு (1985) லாபம் ரூ.7 இலட்சம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மாநில அரசுத் துறைகள் 17, அரசுச் சார்பு நிறுவனங்கள் 8, மத்திய அரசுத்துறை 1, மத்திய அரசு நிறுவனங்கள் 2, தனியார் துறை அரங்குகள் 11, பொருட்காட்சியில் இந்த ஆண்டு இடம் பெற்றிருக்கின்றன. அன்றாடத் தேவைக்குரிய பொருள்களை விற்கும் அங்காடிகள் 60, தனி உரிமை வகைக் கடைகள் 16 அமைந்துள்ளன.
- 1978 முதல் அரசு தமிழ்நாட்டில் பல ஊர்களில் பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. அந்த வகையில், 28.4.85ல் தொடங்கப் பெற்ற சித்திரைப் பொருட்காட்சி 26வது பொருட்காட்சியாகும்.
- சிறுவர் ரயில், ராட்சத ராட்டினம், இலவச திரைப்படக் காட்சி அனைத்தும் இதில் உண்டு.
- 40 நாட்களுக்கு மேல் இப்பொருட்காட்சி நடைபெறும்.





# சிந்து வெளி நாகரிகக் கருத்தரங்கு



சிந்து வெளி நாகரிகக் கருத்தரங்கு மாநாடு கடந்த மார்ச்சு மாதம் 3ஆம் தேதி சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

தென் கலை வளர்ச்சி மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இம் மாநாட்டிற்கு, தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு.சாலை. இளந்திரையன் தலைமை ஏற்றார்.

இம் மாநாட்டை இந்தியத் தொல்லியல் அளவை நிறுவனம், சென்னைப் பிரிவைச் சேர்ந்த துணைக் கண்காணிப்புத் தொல்லியல் அதிகாரி திரு பி. நாராயணபாபு தொடங்கி வைத்தார். சென்னைப்பல்கலைக் கழக மரபுவழி பண்பாடுகள் நிறுவனத்தின் இயக்குநரும், முன்னாள் சமஸ்கிருதப் பேராசிரியருமான திரு ப. திருஞானசம்பந்தன் பாராட்டுரை வழங்கினார். தென்கலை வளர்ச்சி மன்றத் தலைவர் முன்னாள் மேயர் திரு கே.என். சீனிவாசன், செயலர் திரு மா.சு. சம்பந்தன் ஆகியோர் கருத்தரங்கு வெற்றி பெற அரும்பாடு பட்டனர்.

மாநாட்டுத் தலைவரும் ஆய்வாளர்களும் படித்த கட்டுரைகளிலிருந்து பல அரிய செய்திகள் நமக்கு கிடைத்துள்ளன. அவை வருமாறு:

"சிந்து ஆறு பாய்ந்தோடிய சமவெளியில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் மக்கள் சிற்றூர்களையும் பேரூர்களையும் நகரங்களையும் அமைத்துச் சிறப்புற்று வாழ்ந்துள்ளனர். இவர்கள் நிலங்களைப் பயன்படுத்திப் பயிரிட்டனர். வீடுகளையும் பொதுக் கட்டிடங்களையும் உறுதியான கடைக்காலிட்டு, சுட்ட செங்கற்களால் கட்டினர். வீட்டின் மேல் தளம் மரத்தைக் கொண்டு அமைக்கப்பட்டது. வீடுகளில் குளிக்கும் அறைகளை அமைத்தும் கிணறு, குளங்களை எடுப்பித்தும், அவற்றிலிருந்து குளிக்கும் அறைகளுக்குத் தண்ணீர் வரத் தனிக்குழாய்களைப் பொருத்தியும், கழிவு நீர்க்கால்வாய்களைத் திறந்த முறையிலும் மூடிய வகையிலும் ஏற்படுத்தியும், திட்டமிட்டுக் கட்டடம் அமைப்பதிலும் நகரம் அமைப்பதிலும் சிறந்து விளங்கினர். தாம் வாழும் இடத்தை மிகத் துப்புரவாக வைத்துக் கொள்வதில் கண்ணுங்கருத்துமாக இருந்துள்ளனர்.

"இவர்கள் மண்பாண்டங்களை அழகுற உண்டாக்கியும், வெள்ளி, தந்தம், பொன் அணிவகைகளை அணிந்தும், எடைக் கற்களைப் பயன்படுத்தியும், பலவகையான ஆடைகளை பருத்தியிலும், நாரிலும், கம்பளியிலும் நெய்தும், மேன்மையான நாகரிக மிக்க வாழ்வை வாழ்ந்துள்ளனர்.

"இவர்களது குழந்தைகள் பயன்படுத்திய விளையாட்டுப் பொருள்கள்-சலவைக் கற்களாலும், சுட்ட மண்ணாலும் செம்பாலும் ஆனவை.

"சிந்துவெளி நாகரிக மக்கள் தங்கள் வாணிகத்தை நிலவழியில் கோவேறு கழுதை, எருது மூலமாகவும், நீர்வழியில் படகு மூலமாகவும் நடத்தி வந்தனர். இவர்கள், தம் விற்பனைப் பொருள்கள் மீதும் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த வீடுகளிலும் முத்திரைகளைப் பொறித்தனர். இம் முத்திரைகள் களிமண், செம்பு ஆகியவற்றால் ஆனவை.

"சிந்துவெளி எழுத்துக்களாகக் கருதப்படுபவை, மீன், நாய், கோழி, வாத்து, மனித உருவம் போன்றவடிவங்களைக்கொண்ட, ஓவியக் குறியீடுகளேயாகும். இப்பட உருவ எழுத்துகளே பின் ஒலிவடிவ எழுத்துகளாயின. சிந்து வெளி எழுத்துகளைச் சோதித்துப் பார்த்தவர்கள், அவைகளில் தெளிவான வேறுபட்ட 234 எழுத்துக் குறியீடுகள் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளனர். சிந்துவெளி நாகரிகத்தில் காணப்படும் செய்திகள், இக்காலத் தமிழர்களின் ஏற்றத்திற்கும் அடிப்படையாக உள்ளன.

"சிந்து ஆற்றில் அடிக்கடி பெரு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணமாகவும், நில அதிர்வு முதலிய இயற்கையால் ஏற்பட்ட விளைவுகளாலும், இத்தொன்மை வாய்ந்த நாகரிக மக்கள் கண்ட நகரங்கள், பலமுறை அழிவுற்று, அடுக்குக்கு மேல் அடுக்காக மண் மேடுற்றுப் போயின. இவ்வகையில் 400 நகரங்களுக்கு மேல் அழிவுற்றுள்ளன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுச் சொல்லியுள்ளனர்.

"மொகஞ்சதாரோ என்றால் மண் மேடுற்ற நகரம் என்று பொருள் கூறப்படுகிறது. இம் மண்மேடுற்ற மொகஞ்சதாரோ என்னும் நகரம் 1922இல் தான் அகழ்வாராய்ச்சியாளர்களால் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மொகஞ்சதாரோ என்னும் இடம், கராச்சிக்கு 400 கிலோ மீட்டர் தொலைவில், இன்றைய பாகிஸ்

ஊ. ஜெயராமன்

### மலையாளிகள்

மலையாளிகள் என்று சொல்லக்கூடிய இவ்வினத்தார் சேர்வராயன் மலை, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சைமலை, சித்தேரி மலை ஆகியவற்றில் வாழும் பழங்குடி மக்கள். சமவெளியில் வாழும் மக்களொடு அதிகத் தொடர்பு கொண்டிராத காரணத்தால் இவர்களுடைய பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் சிறிது வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவர்கள் பேசும் மொழி தமிழே! என்றாலும் சற்றுத் சிதைத்துப் பேசுகின்றனர். கொல்லிமலையில் உள்ள கரிராமன், அறப்பளீசுவரன், பேய்ப்பெருமாள், அரங்கட்டப்பன் என்பவை இவர்கள் வழிபடு கடவுள்கள். இவர்கள் மணவாழ்க்கை முறை, மணவிலக்கு முறை, நீதி வழங்கும் முறை, மக்கட் பகுப்புகள், நாட்டாண்மை யாவும் கேட்கச் சுவையான செய்திகள், இவர்கள் இப்போது சமவெளி மக்களின் தொடர்பால் நாகரிகம் பெற்று வருகின்றனர்.

### நீர்வீழ்ச்சி

அறப்பளீசுவரர் கோவிலுக்கு வடபுறத்தில் ஐய்யாறு ஓடுகிறது. இந்த ஆற்றில் வண்ண வண்ண வகையான மீன்கள் நிறைய உண்டு. பெருமான், மீன் வடிவமாக ஆற்றில் உள்ளார் என்பது நம்பிக்கை. வழிபாட்டிற்கு முன் சோறு, தின்பண்டங்கள் மீன்களுக்குப் போட்டபின்தான் கோவில் வழிபாடு செய்வது வழக்கம். ஆற்றிலுள்ள மீன்களைக் கையிலேயே பிடிக்க இயலும். ஆனால் யாரும் பிடிக்கக்கூடாதெனக் கட்டுப்பாடும் உண்டு. ஆடி மாதம் 18ஆம் பெருக்கு அன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். மீனைப்பிடித்து மூக்குக் குத்தியும் விடுவார்கள்.

ஆறு, கோவிலின் வடகிழக்குப் புறமாகச் சென்று 2 கி. மீட்டர் தூரத்தில் ஒரு பெரிய நீர்வீழ்ச்சியாக மாறுகிறது. உயரம் 150 அடி இருக்கும். அந்நீர் வீழ்ச்சி வரும்போது புகையாக மாறும். நீராடினால் உடல் வலியும் நீங்கும். நீர்வீழ்ச்சி மலையிலிருந்து இறங்கி, துறையூர், முசிறி வழியாகக் காவிரியில் கலக்கிறது. இந் நீர்வீழ்ச்சி திருக்குற்றால நீர் வீழ்ச்சியைவிட மிகமிகச் சிறந்தது என்று காண்போர் கூறுகின்றனர்.

வரலாற்றுச் சிறப்பும், வன்மையும் நிறைந்த இக்கொல்லிமலையினில் சுமார் 1000 வருடத்திற்கும் முற்பட்ட, கல்லினால் செய்த சில கருவிகள் காணப்படுகின்றன; அறப்பளீசுவரர் கோயிலை அடுத்து சுமார் 7 கி. மீட்டர் தொலைவிலுள்ள மலையின் அடிவாரத்தில் பித்திக் கிழவங்கு என ஒரு இடம் காணப்படுகிறது. அதன் அருகில் மலையிலிருந்து ஒரு நீர்வீழ்ச்சி விழுகிறது. இது இரண்டாகப் பிரிந்து சிறிது தூரத்திற்கப்பால் ஒன்றாகக் கூடுகின்றது. இவ்விடத்திற்குக் கூட்டாறு என்று பெயர். இவ்விடத்தில் மூன்று துளைகளைக் கொண்ட 'சமதை' (கேழ்வரகு அரைக்கும் கல்) ஒன்று உள்ளது. இதில் குச்சி பொருத்தப்படும் துளையைத் தவிர இரண்டு துளைகள் காணப்படுகின்றன. இவ்விரண்டு துளைகளிலும் கேழ்வரகை நிரப்பி அரைப்பது முற்காலத்தில் இங்கு வழக்கத்திலிருந்து வந்தது போலும். இம்முறை விரைவாகக் கேழ்வரகை அரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மேலும், அம்மி, ஆட்டுக்கல் போன்றவைகளும் காணப்படுகின்றன. இவை சுமார் 1,000 வருடங்களுக்கு முன்பிருந்தே இவ்விடத்தில் உள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

### கொல்லிமலை மக்களின் திருமண முறை

கொல்லிமலையில் திருமணம் செய்வதற்குப் பெண் கேட்க கவுண்டன், கரைகாரன், முதலி முதலானவர்களுடன் இருவர் சேர்ந்து ஐந்து பேர் செல்வார்கள். பெண் கொடுக்கிறேன் என்று பெண் வீட்டில் தெரிவித்தால் அங்கு சென்றவர்கள் சாப்பிடுவார்கள். இல்லையென்றால் சாப்பிட மாட்டார்கள். பெண் கொடுக்கிறேன் என்று உறுதியானதற்கு அடையாளமாக முதல்மடை நெல் என்று சொல்லி 12 வள்ளம் கேழ்வரகு, திணை, சாமை, நெல் போன்றவைகளில் ஏதாவதொன்று பெண் வீட்டில் போட்டுவிட்டு வருவார்கள். நிச்சயம் செய்யும்போது பரிசப் பணம் என்று ரூ. 5, வெள்ளிப் பணமாகவோ சில்லறையாகவோ தான் கொடுக்க வேண்டும். அதன் பிறகு முகூர்த்தம் வைப்பார்கள் பெரும்பாலும் திருமணம் அனைத்தும் காலை 10 மணிக்கு மேல் தான் நடைபெறும்.

பெண்ணுக்கு 10 முழத்தில் சிகப்புச் சீலை மார்புக்கு மேலாகக் கட்டுவார்கள். காதில் கடுக்கண் தான் அணிவார்கள். கையில் வெள்ளியால் ஆன தண்டை போடுவார்கள். காலில் காப்பு, மிஞ்சி, கெட்டிக்கொலுசு முதலிய நகைகளைப் போடுவார்கள்.



கொல்லிமலையில் நிறுவப்பட்டுள்ள வல்வில் ஓரி சிலை





# சிந்தை கவரும் சித்திரைப் பொருட்காட்சி

ஏப்ரல் 29 ஆம் நாள். மதுரையில் அரசு சித்திரைப் பொருட்காட்சி தொடக்கம் ஆகியது.

பகலெல்லாம் கடுமையான வெயில் காட்சியளித்த போதிலும், மாலையில், பொருட்காட்சியின் தொடக்க நேரத்தில் மந்தாரமான சூழ்நிலை ஏற்பட்டது. மழை பொழியுமோ என்ற அச்சம் கூட உருவாகியது. மழைக்குக் கட்டியம் கூற வந்தது போல, வானத்தில் கொடி மின்னல் கீற்றுகள் தோன்றித் தோன்றி பயமுறுத்திக் கொண்டிருந்தன. ஒரு வகையாக வெப்பம் தணிந்து குளுமை அங்கே கொலுவோச்சியது. நல்ல வேளையாக வான் மழை அங்கே வரவில்லை; ஆனால் திரு ஏ.கே.சி.நடராஜன் அவர்கள் குழுவினரின் கிளாரினெட் இசை மழை, பார்வையாளர்கள் அனைவரையும் பரவச வெள்ளத்தில் ஆழ்த்தியது.

பொருட்காட்சி தொடக்க விழாவிற்கு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், திரு நா.கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. தலைமை ஏற்றார்.

ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி இணை இயக்குநர் (பொருட்காட்சிப் பொறுப்பு) வரவேற்புரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''பத்தாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற பொருட்காட்சிகளுக்கும் தற்போது நடைபெறும் பொருட்காட்சிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை மக்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

பார்வையாளர்களின் காசை வீணாக்கும் வகையிலே முன்பெல்லாம் பொருட்காட்சி நடைபெற்றது. தற்போது அப்படி இல்லை. கருத்துக்கு விருந்து தரும் அளவிலே அமைந்திருக்கிறது''.

சோளவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சந்திரசேகரன், ''மக்களுக்குச் சிறந்த முறையில் நல்ல செய்திகளைத் தருகிறது அரசுப் பொருட்காட்சி'' என்று குறிப்பிட்டார்.

திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மாரிமுத்து,

"இந்தப் பொருட்காட்சியைக் கண்ணுறுவதற்கு பெரும்பான்மையான மக்கள் கிராமங்களில் இருந்து வருகின்றனர். அதனால் ஏதாவது ஒரு ஒன்றியத்தைதத்து எடுத்து, இந்தப் பொருட்காட்சியின் வருமானத்தில் ஒரு பகுதியை அந்த ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிட்டால் இந்தப் பொருட்காட்சியின் பெருமை உயரும்.'' என்று தெரிவித்தார்.

பொருட்காட்சியைத் திறந்து வைத்த மாவட்ட ஆட்சியாளர் திரு இரா.வரதராஜுலு இ.ஆ.ப. தமது உரையில் தெரிவித்தார்:

''இத்தகைய பொருட்காட்சிகள் மக்களுக்குப் பயன்படுகின்றன. அதே நேரத்தில் லாபகரமானதாகவும் விளங்குகின்றன.

"வெளிநாடுகளில் பொருட்காட்சிகள் அறிவுதரும் சாதனங்களாக விளங்குகின்றன.

"நான் ஜப்பானுக்குச் சென்றபோது அங்கு சின்குவே என்ற இடத்தில் ஒரு பொருட்காட்சியைக் காணும் வாய்ப்புப் பெற்றேன்.

"கி.பி.2000ல் மனித சமுதாயம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து அங்கே காட்சியாக்கி வைத்திருக்கிறார்கள். கி.பி.2000 ஆண்டில், தொலைபேசியில், பேசுபவரின் முகம் கூடத் தெரியும்.

"எதிர்காலத்தில் மனிதன் வாழ்வதற்கு நிலவுலகம் போதாது என்றும் அதனால் அவன் நீருக்குள் வசிக்க நேரும் என்றும் தெரிவித்து, கடலுக்குள் ஒரு நகரத்தை நிர்மாணிக்கவேண்டியிருக்கும் என்றும், மீன்போல உடையணிந்துகொண்டு மனிதன் போய் வருவான் என்றும் கற்பனை செய்திருக்கிறார்கள்.

"கடலில் வாழும் மனிதனுக்குப் பாதுகாப்பாக இருக்கவும் செய்திகளைத் தருவதற்கும் டால்ஃபின் என்ற மீனைப் பயன்படுத்தலாம் என்றும் அவற்றிற்கு சில code words கற்றுத் தரவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

''நமது முன்னோர்கள் முன்னேற்றமாக வாழ்ந்திருந்தார்கள். நமது முன்னேற்றம் போதாது. இனிவரும் இளைஞர்கள் தன்னம்பிக்கை உடையவர்களாக விளங்குவார்கள். இளைஞர்கள் நம்மை விடக் கெட்டிக்காரர்களாக-ஆர்வலராக இருக்கிறார்கள்''.

தலைமை ஏற்ற செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மக்கள் அரசுடன் தோளோடு தோள் நின்று ஒத்துழைக்க வேண்டும் என்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது இந்தப் பொருட்காட்சி.

"நல்ல கருத்துக்களை மக்களின் உள்ளத்தில் நல்ல வகையில் பதிய வைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுவருகிறது பொருட்காட்சியின் மூலம்.

"சென்ற ஆண்டு அரங்குகள் அமைத்த துறைகள்-இந்த ஆண்டு மேலும் வளர்ச்சியுற்றிருக்கின்றன.



தானிலுள்ள சிந்துமாகாணத்தில், சிந்து ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

"40 'எக்டர்' நிலப்பரப்பளவில் பரவியுள்ள மொகஞ்சதாரோ இடத்தில், தற்போது அதில் மூன்றில் ஒரு பாகமே அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. இன்னும் மூன்றில் இரண்டு பாகம் அகழ்வாராய்ச்சி செய்யப்பட வேண்டியுள்ளது!"

திரு சு. த. திருநாவுக்கரசு, செல்வி. மங்கையர்க்கரசி, திரு நடனகாசிநாதன், திரு வேங்கடாசலம், திரு இரா. முத்துக்குமாரசாமி, திரு கோ. இராமச்சந்திரன், திரு ப. தண்டபாணி, திரு எம். கே. மௌலானா, [illegible] மோ. இசரயில் [illegible] உரையாற்றினர்.

பேராசிரியை சாலினி இளந்திரையன் தமது இணைப்புரையை மிக நல்ல முறையில் தொகுத்துக் கூறினார். கருத்தரங்கின் மதிப்பீட்டை பொன். கோதண்டராமன் மிக நுட்பமாகவும் தெளிவாகவும் துலாக்கோலில் இட்டு மதிப்புரை செய்தார்.

தமிழக அரசு தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை து. நடராசன் அவர்கள், "நாகரிகங்கள் அன்றும் இன்றும்" எனும் பொருள் பற்றி சொற்பொழிவு ஆற்றினார்.

இம்மாநாட்டிற்கு முடிமணியாகத் திகழ்ந்தது, தமிழக அரசின் நிதி அமைச்சர் மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "உலக நாகரிகங்கள் வழங்கும் பாடம்" எனும் பொருள் பற்றிப் பேசிய விழுமிய உரையாகும்.

சிந்துவெளி நாகரிகத்தில் இருந்த ஈடுபாடும், ஈராஸ் பாதிரியார் எழுதிய நூல்களும் அவரை நேரில் சந்தித்த நினைவுகளும், உலக நாகரிகம் தனது சுவடுகளை ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஆழப் பதித்துவிட்டுச் சென்றுள்ள பாங்கும், நாவலர் எடுத்துரைத்த விதமும், கருத்து மழையாக வெளிப்பட்டுவிட்டன!

இச்சமயத்தில், தமிழக அரசின் சார்பில், இக்கருத்தரங்கு மாநாட்டிற்காக வேண்டி, ரூபாய் நான்காயிரம் உதவித் தொகையாகக் கிடைக்கச் செய்த பெருமையும் நாவலரையே சாரும் என்பது இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

மொகஞ்சதாரோவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் காணப்படும் கட்டிடங்களின் கடைகாலும், செய்குளமும், பெண் குளிக்கும் அறைகளைக் காட்டும் பகுதியும், கால்வாய் அமைப்பும், அம்மக்கள் பயன்படுத்திய அழகிய பொருள்களும் ஓவியர் செங்கம்பெருமாள்சாமி அவர்களால் அழகான படங்களாக எழுதப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்டு, மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரின் கருத்தையும் கவர்ந்தன.





# ஒரு ஏக்கரில் ஒரு லட்சரூபாய்

**கே. எம். இராமானுஜம்**

**வேளாண்மை இணை இயக்குநர், திருச்சி**

ஒரு ஏக்கரில் ஒரு இலட்ச ரூபாய்!!

என்ன ஆச்சரியமாக உள்ளதா? திருச்சி மாவட்டத்தில் நச்சலூர் கிராமத்திற்கு அருகே, எர்த்காடு பண்ணைக்குச் சென்று பார்த்தால் உண்மை புரியும். எங்கு பார்த்தாலும், "சூபாபுல்" மரங்களைப் பார்க்கலாம். அங்கு வளம் குன்றிய வயல்களிலும் சூபாபுல் நெடிதுயர்ந்து வளர்ந்து நிற்கின்றது. சுமார் 10 ஏக்கரில் கே.28 என்ற இரகம் வளர்க்கப்பட்டுள்ளது. நடவு செய்த 4 வருடத்தில் ஏக்கருக்கு சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைத்து வருகின்றதைக் கண்கூடாகக்காணமுடியும். இதுபோல வருவாய் பெற வேண்டாமா? அதற்கு உதவும் திட்டம் தான், 'வேளாண்மைக் காடுகள்'

**வளமான நாட்டிற்குத் தேவை 1/3 பங்கு காடுகள்**

நம் நாட்டில் சென்ற 30 ஆண்டுகளில் மட்டும் 43 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் அமைந்திருந்த வளம் மிக்க காடுகள் பல காரணங்களினால் அழிக்கப்பட்டு விட்டன. கோடிக்கணக்கான மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன. நிலத்தின் வளம் குறைந்து விட்டது. வளமான ஒரு நாட்டில் 1/3 பங்கு காடுகள் இருக்க வேண்டும். ஆனால் தமிழ் நாட்டில் 16%நிலப்பகுதிகளில் மட்டுமே காடுகள் இருக்கின்றன. நமக்கு அன்றாடம் தேவைப்படும் தைலம், பழங்கள், எரிபொருட்கள், எழுது தாள்கள், தீவனப் பசுந்தாள் தழைகள் போன்றவைகளை மரங்களிலிருந்து தான் பெற வேண்டும். எனவே காடுகளின் பரப்பளவை அதிகப்படுத்துவது மிகவும் அவசியம்.

**வேளாண்மைக் காடுகளினால் உழவர்களுக்கு விளையும் பயன்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏராளமான மானாவாரி நிலங்கள் இருக்கின்றன. மானாவாரி நிலங்களில்மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குத் தான் சாகுபடி செய்ய முடியும். மேலும் மானாவாரிச் சாகுபடியில் கிடைக்கும் வருவாய் பல காரணங்களினால் குறைவாக உள்ளது. பயிர்க்காலத்திற்குப் பிறகு நிலங்கள் தரிசாகவே உள்ளன. பருவ மழை தவறும் காலங்களில் சாகுபடி செய்ய இயலவில்லை. இக்காரணங்களினால் மானாவாரி நிலங்களையே நம்பி வாழும் உழவர்களின் வருவாய் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது. எனவே மானாவாரி நிலங்களில், பயிர்கள் சாகுபடி செய்வதோடு, பலன் தரும் மரங்களை நடவு செய்து வளர்ப்பதால், உழவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும். ஆகையால் மானாவாரி நிலங்களிலும் இறைவை நிலங்களிலும், சாகுபடி செய்யும் பயிர்களோடு, மரப் பயிர்களை வளர்க்க உழவர்களுக்கு "வேளாண்மைக் காடுகள்" திட்டம் உதவுகிறது.

**உழவர்களுக்கு அளிக்கப்படும் உதவிகள்**

வேளாண்மைக் காடுகள்திட்டத்தின் கீழ் சிறு, குறு உழவர்களுக்கு இலவசமாக யூகலிப்டஸ், சூபாபுல், இலவம், புளி, சவுக்கு, வேலிக் கருவை, வாகை, வேம்பு போன்ற கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மானிய விலையில் பலா, முந்திரி, எலுமிச்சை, மாதுளைக் கன்றுகள் சலுகை விலையில் வழங்கப்படுகின்றன.

உழவர்களின் பண்ணையிலேயே கொண்டு கொடுக்கப்படுகின்றன.

மரப் பயிர்கள் வளர்க்க, பயிற்சிவழித் தொடர்புத் திட்டப் பணியாளர்கள் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

வரும் ஆண்டுகளிலும் கன்றுகள் விநியோகிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

1984-85ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ்,

7 இலட்சம் பழக்கன்றுகள், 515 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இன்றைய மரம் நாளைய செல்வம்.

மரம் நடுவோம்' மழை பெறுவோம்!

மழை பெறுவோம் பயிர் வளர்ப்போம்!

பயிர் வளர்ப்போம் உயிர் காப்போம்!

## கோதுமை ஏற்றுமதி

சோவியத் யூனியனுடன் [illegible]
ஒப்பந்தம் செய்துள்ளது [illegible]
வெளிநாட்டுக்கு [illegible]
70 லட்சம் டன் [illegible]



வளரும் தமிழகம்

# சிறுசேமிப்பில் முதலிடம் பெறும் பெரியார் மாவட்டம்

எம். இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர்

**1979** செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் கோவை மாவட்டத்திலிருந்து 8170 ச.கி.மீ. பரப்பளவையும் 20 லட்சத்து 68 ஆயிரம் மக்களையும் கொண்ட பகுதிகளைப் பிரித்து, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டைத் தலைநகராக்கி உருவாக்கப்பட்டதுதான் பெரியார் மாவட்டம்.

3996 குக்கிராமங்களையும் 510 வருவாய்க் கிராமங்களையும் 20 ஊராட்சி ஒன்றியங்களையும் 5 நகராட்சிகளையும், 7 வட்டங்களையும், 343 ஊராட்சிகளையும் 60 பேரூராட்சிகளையும் 20 ஊராட்சி ஒன்றியங்களையும், 1 நகரியத்தையும் உள்ளடக்கியது தான் பெரியார் மாவட்டம்.

மாவட்டம் தொடங்கி 5 ஆண்டுகள்தான் முழுமையாக முடிவுற்றாலும் வளர்ச்சிப் பணிகள் பிற மாவட்டங்களைக் காட்டிலும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

நெசவாளர்கள் நிறைந்த மாவட்டம் இது. இந்தியாவிலேயே கைத்தறித் துணிக்குச் சந்தை நடைபெறும் இடம் ஈரோடுதான். ஈரோட்டில் மட்டும் வாரத்திற்கு ரூ.2 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகின்றன. மேலும் மெழுகை உபயோகித்து வண்ண வண்ண லுங்கிகள் தயார் செய்யப்படுவதும், ஸ்கிரீன் பிரிண்டிங் என்ற வண்ண வேலைகள் நிரம்பப் பெற்ற புடவைகள், லுங்கி அதிகமாக உற்பத்தியாவதும் இம்மாவட்டத்தின் தனிச் சிறப்பாகும்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் வட்டத்தில் அதிகமான பகுதி வனவிலங்குகளும், சந்தன மரங்களும் நிறைந்த வனப்பகுதி, இயற்கை அழகு நிறைந்த பகுதி.

இம்மாவட்டத்திற்கென்று பல்வேறு சிறப்புகள் உண்டு. மஞ்சள் அதிகமாக விளைவது, இந்திய அளவில் கடலெண்ணெய் விலையை நிர்ணயம் செய்வது, கடலை எண்ணெய் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவது, உழவர் பெருமக்களையும் பார்ப்போர் அனைவரையும் கவரக் கூடிய 'காங்கேயம்' காளைகளை நிரம்பப்பெற்றது என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

**தன்னிறைவுத் திட்டம்**

20 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 2809 வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ. 835 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புதிதாக 886 சாலைப் போக்குவரத்துகள் போடப்பட்டுள்ளன. 1592 சிறு பாலங்கள். கட்டப்பட்டுள்ளன. பள்ளிக்கட்டடங்கள் 231, கிராமிய மருந்தகங்கள் 11, மகப்பேறு நிலையங்கள் 48, கழிவுநீர்க் கால்வாய்கள் 15, பொதுக் கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளன.

மேலும் 2 சிறுபாசனக் குட்டைகளும் ஆதிதிராவிடர் மயானங்களுக்கு 9 பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**நீர்ப்பாசனம்**

இம்மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஆறுகள் மூலம் பாசனம் பெறும் பகுதி பல. புதிதாக இம்மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம், கெம்பநாய்க்கன் பாளையம் பகுதியில் உள்ள பெரும்பள்ளம் ஓடையில் அணையொன்று கட்டப்பட்டு வருகிறது. இதற்கு அரசு ரூ. 3.75 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**சத்துணவுத் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் 2705 மையங்களின் மூலம் ஒரு லட்சத்து 88 ஆயிரம் குழந்தைகளுக்குச் சத்துணவு நாள்தோறும் வழங்கப்படுகின்றது. இது தவிர வாழ வழியற்ற முதியோர் 6252 நபர்களுக்கும் சத்துணவு வழங்கப்படுகின்றது.





**வெண்மைப் புரட்சி**

இம்மாவட்டம் துவங்கியதற்குப் பின் ரூ. 3 கோடியில் ஈரோட்டிற்கு அருகில் உள்ள பத்தோட்டில் பால் குளிரூட்டும் நிலையமும், பால் சம்பந்தப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையமும் பால் பதனிடும் தொழிற்கூடமும் கட்டி முடிக்கப்பட்டுச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

**ராயர் பாளையம்**

பெரியார் மாவட்டம் கோபிச்செட்டிபாளையத்திலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சின்னஞ்சிறு கிராமம்தான் ராயர்பாளையம். இக்கிராமத்தில் 270 சீர்மரபினர் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் வாழ வழியற்று வறுமையில் வாடி வந்தனர். இக்கிராமத்தைக் கண்ட, மாவட்ட ஆட்சியர் இவர்களுக்குப் புதுவாழ்வு கொடுக்க யெண்ணி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இக்கிராமத்தைத் தத்தெடுத்து அரசின் பல்வேறு நல உதவிகள் கடன் வசதிகள் அளித்து, திருந்திய முறையில் நலமுடன் வாழ வழி வகுக்கப்பட்டுள்ளது.

**பெரியார் மாவட்டம் சிறுசேமிப்பில் மூன்று ஆண்டுகளாக மாநிலத்தில் முதலிடம் வகித்து வருகிறது. இவ்வாண்டு கொடிநாள் வசூலில் இம்மாவட்டம் ரூ. 7 லட்சத்து 79 ஆயிரம் வசூல் செய்து மாநிலத்தில் முதலிடம் வகிக்கின்றது.**

**சாண எரிவாயுத் திட்டம்**

20 அம்சத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சாண எரிவாயுத் திட்டத்தை இம்மாவட்டம் மற்ற மாவட்டங்களைவிடச் சிறப்புறச் செயல்படுத்தி வருகிறது.



# படமும் செய்தியும்



மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு வி.வி.சாமிநாதன் அவர்கள் முன்னிலையில் 25.4.85 அன்று சென்னை எழும்பூரில் 31வது கைத்தறிக் கண்காட்சியினை மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கி வைத்தார்.



உத்தரப்பிரதேச மாநில பஞ்சாயத்து ராஜ்ய கிராமப்புற நிதிக் குழு உறுப்பினர்கள் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்களை 9.4.85 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர்.



செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த இஞ்சப்பாக்கத்தில் நடைபெற்ற விழாவில், (23.4.85) சமுதாய நலத் தொண்டர்களுக்கு சுகாதாரக் கருவிகளை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் வழங்கினார்.





சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில் குடிநீர்க்குழாய்கள் செய்யும் பணியை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்ச டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் 20.4.85 அன்று பார்வையிட்டார்.

மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு எம்.ஆர். கோவேந்தன் அவர்கள், இராயபுரம், திருவொற்றியூர் பகுதிகளில் கடல் அரிப்பு மற்றும் மீன் பிடிப்பு துறைமுகப் பகுதிகளைப் பார்வையிட்டார். (16.4.85)





**ச**க்தி மனோகர் கோயம்புத்தூரைச் சேர்ந்த இளம் விவசாயி ஆவார். இவரது பெற்றோர்களான ரங்கசாமி-சரஸ்வதி அம்மாள் விஞ்ஞான பூர்வ விவசாயத்தைக் கடைபிடித்து அதன்மூலம் முன்னேற்றமடைந்துள்ள விவசாயிகள் ஆவர். சரஸ்வதி அம்மாள் வானொலி வேளாண்மை மன்றத்தின் குறிப்பிடத்தக்க அமைப்பாளரும் ஆவார்.

சக்தி மனோகர் கரும்பு விளைச்சலில் அதிக மகசூலைப் பெறுவதற்காக விஞ்ஞானிகளின் உதவியை நாடினார். அவர்களது ஆலோசனையின் பேரில் CO 62175 என்ற புதிய ரகக் கரும்பைச் சாகுபடி செய்தார். இதன் மூலம் ஏக்கருக்கு 7 குவிண்டால் வெல்லத்தைப் பெற்றார், முன்பு அவர் CO 410 ரகக் கரும்பைப் பயிரிட்டபோது ஏக்கருக்கு 4 குவிண்டால்தான் சர்க்கரை கிடைத்து வந்தது.

புதிய அனுபவத்தின் மூலம் பெருமகிழ்ச்சியில் திளைக்கும் சக்தி மனோகர்-தனது ஊர்ப் பகுதியில் உள்ள விவசாய நண்பர்களிடமெல்லாம் தான் பயிரிட்ட கரும்பு ரகத்தின் புகழ்ச் சரிதத்தை எடுத்துச் சொல்லி வருகின்றார்.

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு கரும்பில் அதிக விளைச்சலுக்கும், அதன் சர்க்கரைச் சக்தியை அதிகமாக்குவதற்கும் உதவியாக இருப்பதுடன், கோவை நகரின் சுற்றுப்புறங்களில் உள்ள வேளாண் பெருமக்களுக்குப் பெருத்த மகிழ்ச்சியையும் உண்டாக்கியிருக்கிறது.

# மகிழ்ச்சியில் திளைக்கும் விவசாயப் பெருமகன்





# வாழ்க்கை இனிக்க....

**ரா.பொன்ராசன்**



அறுபதுபேர் பயணம் செய்யும்
அழகுக் காரிலே—ஓர்
ஐம்பதுபேர் பயணம் செய்தால்
வசதி சேரலாம்!
அறுபதுபேர் பயணம் செய்யும்
அதே காரிலே—நூற்(று)
இருபதுபேர் செல்ல நேர்ந்தால்
ஆபத் தாகுமே!

இருபதுபேர் உண்பதற்கே
இருக்கும் உணவையே—உண்ண
இரண்டொருவர் குறைந்திருந்தால்
சிறப்பு எய்தலாம்!
இருபதுபேர் உண்பதற்கே
இருக்கும் உணவையே—இங்கே
எழுபதுபேர் உண்ண நேர்ந்தால்
பஞ்சம் சேருமே!



பஞ்சைக்கூட அளவு மீறிப்
பாரம் ஏற்றினால்—அந்தப்
பார வண்டி அச்சு முறிந்து
போக நேரலாம்!
இரும்பைக் கூட அளவி னோடும்
ஏற்றி வைத்திடில்—மிகவும்
இலகு வாகச் சிரம மின்றி
இழுத்துச் செல்லலாம்!

மக்கள்தொகை குறையக் குறைய
மகிழ்ச்சி பெருகுமே—நாட்டில்
மக்கள்தொகை பெருகி விட்டால்
துயரம் அதிகமே!
சொர்க்கத் தையே நரகம் ஆக்கும்
மக்கள் பெருக்கமே—உணர்ந்தோர்
சொல்லுவதைப் புரிந்து கொண்டால்
வாழ்க்கை இனிக்குமே!

# உரத்தைப் பயன்படுத்துவதில் புதிய முறை



யூரியா உயர் விளைச்சலைக் கொடுப்பதற்கு உதவும் உரம் என்பதும் அது தண்ணீரில் மிக விரைவில் கரையும் தன்மை படைத்தது என்பதும், நெல் வயலில் அதனைத் தெளித்தால், அந்த உரத்தில் கணிசமான அளவு தண்ணீரில் கரைந்து வீணாகி வயலைவிட்டு வெளியே சென்று விடுகிறது என்பதும் விவசாயப் பெருமக்களுக்கு நன்கு தெரியும். ஆனால், யூரியா மெதுவாகக் கரைவதற்கும், அதன் உயிர்ச்சத்து நல்ல முறையிலே பயன்படுத்தப்பட்டு, உயர் விளைச்சல் காண்பதற்கும் ஒரு புதிய வழி முறையைத் தமிழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தூளாக்கப்பட்ட வேப்பம் பிண்ணாக்கு, யூரியாவுடன் 1:5 என்ற விகிதத்தில் கலக்கப்பட்டு அத்துடன் ஒரு கிலோ கிராம் வேப்பம் பிண்ணாக்குக்கு 10 மில்லி லிட்டர் என்ற விகிதத்தில் கிரோசினும் கலக்கப்பட்டு, இந்தக் கலவை 24 மணி நேரத்திற்கும் அதற்கு மேலும் வைக்கப்பட்டிருக்கும்போது, யூரியாவின் மீது பழுப்பு வண்ணப்பூச்சு உருவாகும். இந்தப் பூச்சு, யூரியா தண்ணீரில் வேகமாகக் கரைவதைத் தடுத்து விடுகிறது.

இந்தப் புதிய பரிசோதனை, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சிவபிரகாசம் என்பவரால் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையின் மூலம் ஐ. ஆர். 20 நெல் சாகுபடியில் அவர் சற்றும் எதிர்பாராத - முன் எப்போதும் ஏற்பட்டிராத விளைச்சலைக் கண்டிருக்கிறார். அது மட்டுமல்ல, விவசாயச் செலவுகளில் 20 சதவிகிதத் தொகையும் மிச்சமாகியிருக்கிறது. வீணாகும் யூரியாவைத் தடுத்து நிறுத்த உதவிய விஞ்ஞானிகளுக்கு அவர் நன்றி தெரிவிக்கிறார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள், விவசாயிகளுக்குப் பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு நல்கி உயர்விளைச்சலை அவர்கள் அறுவடை செய்து கொள்வதற்கு உதவி செய்கின்றனர்.

—இந்திய அரசு பத்திரிகைத் தகவல் அலுவலகம்.

# செங்கை மாவட்டத்தின் சீரிய பணிகள்




ஜே. ஏ. மாத்யூ, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்
செங்கல்பட்டு மாவட்டம்.


கடந்த நிதியாண்டில் (1984-85) செங்கல்பட்டு மாவட்டம் சில துறைகளில் குறியீட்டு இலக்குகளுக்கு அதிகமாகவும், சில துறைகளில் குறியீட்டு இலக்குகளை பூர்த்தி செய்தும் சாதனை படைத்துள்ளது.

**தமிழ்நாட்டில் முதலிடம்:**

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன்களை அளிப்பதில் செங்கல்பட்டு மாவட்டம் தமிழகத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டில் 2,795 பேருக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் 3,278 பேருக்கு வங்கிகள் ரூபாய் 635.70 இலட்சம் கடனுதவி வழங்கி, தமிழ்நாட்டில் முதலாவது இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. இது தவிர, கூடிய விரைவில் மேற்கொண்டு 150 பேருக்குக் கடனுதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக நிர்வாகிகளிடமிருந்து தகவல்கள் வந்துள்ளன. இதையும் சேர்த்தால் வங்கிக் கடன் பெறும் மொத்த நபர்களின் எண்ணிக்கை 3,428 ஆகும்.

கிராமப்புறங்களில் தொழில் தொடங்குபவர்களுக்கு கடந்த ஆண்டில் முன்பணமாக ரூபாய் 3 இலட்சம் வரை வழங்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சி:**

ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சி திட்டத்தின் கீழ் 16,200 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் ரூபாய் 209 இலட்சம் கடனாகவும் மான்யமாகவும் வழங்கப்பட வேண்டும் என்பது இலக்கு. ஆனால் 21,225 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் ரூபாய் 227 இலட்சம் கடனாகவும் மான்யமாகவும் வழங்கப்பட்டு இலக்கைவிட அதிக அளவு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் 25.89 இல்ட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற இலக்குக்குப் பதிலாக 25.90 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கென ரூபாய் 318 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோருக்கான வேலை உத்திரவாதத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூபாய் 320 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. (1) கிராம இணைப்புச் சாலைகள் அமைத்தல். (2) சிறுபாசனத் திட்டம், (3) நில அபிவிருத்திப் பணி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் குடியிருப்புக் கட்டுதல் ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 1,200 குடியிருப்புகள் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

**பட்டா வழங்குதல்:**

கடந்த ஆண்டில் இம்மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சார்ந்த 3,500 பேருக்கு இலவச மனைப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 3,605 பேருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**மின் வசதி:**

இம்மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 5,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் கூடுதலாக 2,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு, மொத்தம் 7,000 குடிசைகள் மின் ஒளி பெற்றுள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள எல்லா ஆதி திராவிடர் காலனிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது.

1984-85ஆம் ஆண்டில் 49,600 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட வேண்டும் என்பது இலக்கு. ஆனால், 53,790 அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதிலும்சாதனை இலக்கு விஞ்சப்பட்டுள்ளது.

**சிறு சேமிப்பு:**

கடந்த நிதியாண்டில் ரூபாய் 788 இலட்சம் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் திரட்டப்பட வேண்டும் என்னும் இலக்கினை விஞ்சி, மொத்தம் ரூ. 910 இலட்சம் நிதி திரட்டப்பட்டுள்ளது.

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் கீழ்க் காணும் அம்சங்களில் (1984-85) குறியீட்டளவு மிஞ்சப்பட்டுள்ளது.

| திட்டத்தின் பெயர் | 1984-85ம் ஆண்டின் குறியீடு | அடைந்த முன்னேற்றம் (31-3-85 முடிய) |
|---|---|---|
| பாசன சக்தியினை மேம்படுத்தல் | 3517 எக்டேர் | 8699 எக்டேர் |
| நிலஉச்சவரம்பின் மூலம் பெறப்பட்ட நிலங்கள் வழங்குதல் | 100 ஏக்கர் | .409 ஏக்கர் |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு தொழில் உதவி அளிப்பது | 9787 | 18395 |
| நிலப்பட்டா வழங்குதல் | 5500 | 6122 |
| பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது | 233 | 2050 |
| மரங்கள் வளர்ப்பது (இலட்சத்தில்) | 102 இலட்சம் | 189.63 இலட்சம் |
| 6-14 வயது கொண்ட சிறுவர்களுக்கு கல்வி புகட்டுவது | 16800 | 24674 |
| முதியோர்க்கு கல்வி போதித்தல் | 42600 | 48966 |

# நூல் நயம்

## தென்னக இசையியல்

ஆசிரியர்: சே.ச. செல்லந்துரை

வெளியீடு: வைகறைப் பதிப்பகம்
திண்டுக்கல்-624004.

விலை ரூ. 30 பக்கம் 412

தமிழிசை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே புகழ் பெற்று விளங்கியிருக்கிறது. பழம்பெரும் இசை நூல்களில்பல தமிழ்மொழியில் இருந்திருக்கின்றன.

அந்த இசையின் பெருமை-அது தோன்றிய விதம்-ராக வகைகள்-ராக வகைகளுக்கும் பழம் பண்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், தாளவகைகள், 72மேளகர்த்தாக்களின் அமைப்பு இப்படி இசை குறித்துப் பல்வேறு தகவல்களை இந்நூலாசிரியர் சுவையாகத் தெரிவித்திருக்கிறார்.

இசைக்கலை மணிப் பாடத் திட்டத்திற்கு ஏற்ற வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டிருப்பதால்-இது படிப்பு நூலாகவும் பயிற்சிநூலாகவும் விளங்குகிறது.

ராகங்களின் ஆரோகணம், அவரோகணம் ஆகியவற்றை விளக்கமாக எழுதியிருப்பதனால் இசை பாட வல்லவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்தரும் என்பது உறுதி. இந்நூலைப் படித்து முடிக்கும் ஒருவர்-சரியான குரல்வளம் பெற்றவராக இருந்தால் துணிந்து மேடையில் ஏறிவிடலாம், இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு!

அறிவனார், இளங்கோவடிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் முதல் தஞ்சை பொன்னையா பிள்ளை வரை சாகித்ய கர்த்தாக்கள் பலரின் வாழ்க்கை வரலாற்றையும், தொண்டுகளையும் இந்நூலில் தொகுத்துத் தந்திருப்பது பாராட்டுக்குரியது. பண்டை இசையில் தொடங்கி இன்றைய திரைப்பாடல் இசை வரை எடுத்துக் கூறுவது சிறப்பம்சமாகும்.

இசையை நல்ல முறையில் வளர்ப்பதற்கு அரிய யோசனைகளை எல்லாம் எடுத்துச் சொல்லியுள்ள நூலாசிரியர். இசையில் பழமையும் வேண்டும், புதுமையும் வேண்டும் என்று நூலை முடிப்பது-போற்றத்தக்கது.

மொத்தத்தில் இந்நூல் படிப்பு நூலாக-பயிற்சிமுறை நூலாக-அறிவியல் நூலாக -ஆய்வு நூலாகத் திகழ்கிறது.

—தமிழ்ப்பித்தன்

## கண்ணிலே நீர் எதற்கு?

ஆசிரியர் ; நெல்லை செல்வம்,
வெளியீடு: செல்ல பாப்பா
பதிப்பகம்,
19, சன்னதி தெரு,
அனகாபுத்தூர்,
சென்னை-600079

பக்கம்.64 விலை ரூ. 2.50

எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். முதற்கதை-'கண்ணிலே நீர் எதற்கு'? வெளிவேடத்தைக் கண்டு மயங்கி, வெற்று ஆரவாரச் சொல்லுக்கு அகமகிழ்ந்து, பெற்றோரையும் மற்றோரையும் நொடியில் உதறி தள்ளிவிடும் பெண்களுக்கோர் சாட்டையடி.

'மனிதனை மனிதனாக வாழ விடு' என்ற சிறுகதை, படித்தும் வறுமையில் வாடும் மாணவர்கள் நிலையை - படித்த பட்டதாரிகளின் பெருந் துன்பத்தை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'ஒரு காக்கிச் சட்டையின் இதயம் பேசுகிறது' தத்ரூபமாக அமைந்துள்ளது. மனச்சாட்சியுடன், ஒரு காக்கிச்சட்டையும் கூடச் செயல்பட முடியும் என்பதை விளக்குகின்றது.

சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சாடி, அவற்றைச் சீர்படுத்த விரும்புகின்றார் ஆசிரியர். இக்கதைகளின் மூலம். கருத்துச் செறிவுடைய நூல் இது.

— டாக்டர் சிவஅரசி

## மாணவ மணிகளுக்கு அன்னை இந்திரா

ஆசிரியர் : எல்லார்

வெளியீடு: சோமு புத்தக
நிலையம்,
42, அப்பர் சாமி
கோவில் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

பக்கம்: 60 விலை ரூ. 5

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் வாழ்க்கை வரலாறு-மாணவர்களுக்கு உதவும் வண்ணம் சுருக்கமான முறையிலே இந்நூலில் தரப்பட்டுள்ளது. முக்கியமான செய்தி எதுவும் விட்டுப் போகாமல் இந்நூலை உருவாக்கியிருக்கிறார் ஆசிரியர்.

அன்னை இந்திராவின் தனிச் சிறப்பு இந்நூலில் தக்கவகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இருந்து கடிதம் எழுதிய எட்டு வயது இந்தியச் சிறுமியையும் மதித்து அன்னை இந்திரா பதில் கடிதம் எழுதிய நிகழ்ச்சி - நமது இதயத்தைத் தொட்டுவிடுகிறது. இந்திராவின் இனிய பண்பை இந்நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. சரளமான நடை, சுவையான தகவல்கள் இந்நூலுக்குச்சிறப்புச்சேர்க்கின்றன.

## யமுனாவின் 48 மணி நேரம்

ஆசிரியர் : ராஜேஷ்குமார்
வெளியீடு : மயிலவன் பதிப்பகம்
7. எம். கே. அம்மன் கோயில்
தெரு, மயிலாப்பூர்,
சென்னை-600 004.
விலை ரூ 9.50 பக்கம் 136

யமுனாவும் அவள் சிநேகிதி சுவர்ணாவும் இரவுநேரத் திரைப் படக்காட்சிக்குச் சென்று திரும்பியபோது சந்தித்த ஆபத்துகளை மையமாக வைத்துக் கதை தொடர்கிறது. அவர்களைக் காப்பாற்றிய தீபனின் மாளிகைக்கு யமுனா அவனுடன் செல்ல-அங்கே எதிர்பாராத விதத்தில் தீபன் கொலைசெய்யப்பட-பிணத்தைக் கண்டு யமுனா அஞ்சி நடுங்க-கொலையை அவள்தான் செய்திருக்க வேண்டும் என்று காவல் துறை தீர்மானிக்க - நிரபராதியான யமுனா மாட்டிக் கொண்டு தவிக்க - இறுதியில் உண்மை புலனாகிறது. இவ்வளவு நிகழ்ச்சிகளும் 48 மணி நேரத்தில் நடந்து முடிந்திருக்கிறது.

திகில் - திகைப்பு - விறுவிறுப்பு-ஆர்வ நிலை அனைத்தும் இந்த நவீனத்தில் உண்டு. சரளமான நடையும் சம்பவக் கோவையும் நூலின் சிறப்பம்சம். பாத்திரப் படைப்பு அருமை. ஒரே மூச்சில் படிக்கத் தூண்டுவது இதன் பெருமை.

—சுந்தர்



## எம்.ஆர்.எல். ஆலையில் புதிய பிரிவில் உற்பத்தி



சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் எப்.சி.சி. பிரிவு சமீபத்தில் உற்பத்தியைத் தொடங்கியது. விரிவாக்கத் திட்டத்தை முதன் முதலாகக் குறிப்பிட்ட காலததிற்குள் பூர்த்தி செய்துள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. ரூ 170 கோடி விரிவாக்கப் பணிக்குச் செலவிடப் பட்டுள்ளது. இதனால் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் வருடாந்திர மொத்த உற்பத்திச் சக்தி 28 இலட்சம் டன்னிலிருந்து 56 இலட்சம் டன்னாக உயரும். இதன் பயனாகச் சமையல் எரிவாயு உற்பத்தி 3 மடங்காக உயரும்.

சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடுவதைக் குறைக்கவும், ஆலையில் பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவைக் குறைக்கவும், இந்த எப்.சி.சி பிரிவில் தனி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மிகச் சிறந்த தரகச் செயல்பட முடியும். கம்ப்யூட்டர் உதவியுடன் இயங்கும் நவீன கண்காணிப்பு அறையினால் இந்தப் பிரிவு இயக்கப்படுகிறது.

## வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்கள்

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் காளாஞ்சிப்பட்டியிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிறு மலையில் பழங்கால ஓவியங்கள் இருப்பதைத் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது. அளங்கல்தேரி என்றழைக்கப்படும் மலைப் பகுதியில் உள்ள இயற்கையான குகையின் சுவர்ப் பகுதிகளில் இந்த ஓவியங்கள் காணப்படுகின்றன.



இரண்டு அடுக்குகளாக ஓவியங்கள் இருக்கின்றன. கீழ் அடுக்கில் உள்ள ஓவியங்கள் சிவப்பு (காவி) வண்ணத்திலும் மேலேயுள்ள ஓவியங்கள் வெண்மை நிறத்திலும் வரையப் பெற்றுள்ளன. வெண்மை ஓவியங்கள் சில மாதங்களுக்கு முன்னர் இம்மலையின் மற்றொரு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஓவியங்களைப் போன்றே காட்சியளிக்கின்றன.

இவ்வோவியங்களில் விலங்குகளைப் பலர் கூடி வேட்டையாடும் காட்சி சிறப்பிடம் பெறுகிறது. பெரும்பாலும் கலைமான்களே உள்ளன. ஒரு மானுக்குக் கிளைத்த கொம்புகள் தீட்டப் பட்டுள்ளது, முன்கால்களை மடித்து அமர்ந்த பெண்ணின் உருவம் ஒன்றும் உளது. இடுப்பில் கை வைத்து நின்ற நிலையில் சில மனித உருவங்கள் உள்ளன.

சூரியன், ஏணி ஆகியவையும் வரையப்பட்டுள்ளன. பெருங்கற்காலப் பானையோடுகளில் காணப்படும் குறியீட்டினை ஒத்த நிலையில் சூரியனின் உருவம் வரையப்பட்டுள்ளது. கீழடுக்கில் உள்ள ஓவியத்தில் மனித உருவங்கள் அலகு போன்ற மூக்குடையதாய்க் காட்டப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் இங்கு அமைந்திருப்பதன் மூலம் தமிழகத்தின் தெற்குப் பகுதியிலும் தொல் பழங்கால மனிதன் வாழ்ந்திருக்கிறான் என்று அறிய முடிகிறது. இன்னும் சுற்றுப்புற இடங்களைத் தொல்பொருள் துறையினர் ஆய்வு செய்தால் பல அரிய கண்டுபிடிப்புகளைக் காணலாம் எனத் தெரிகிறது.

# சென்னை மாநகராட்சி வரவு செலவுத்திட்டம்

சென்னை மாநகராட்சியின் 1983-84 ஆம் ஆண்டு வருவாய் 30.70 கோடியாக இருந்தது. 1984-85 ஆம் ஆண்டின் திருத்தப் பட்ட திட்ட மதிப்பீட்டின்படி மாநகராட்சியின் வருவாய் ரூ. 34.72 கோடியாகும். 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மாநகராட்சியின் வருவாய் ரூ.38.12 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டில் மாநகராட்சிக்கு ரூ. 38.39 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டின் செலவு ரூ.37.06 கோடியாக இருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் மாநகராட்சிக்கு ஆன செலவு ரூ.31.02 கோடி ஆகும்.

1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மூலதனப் பணிகளுக்காக ரூ.17.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு(1984-85) திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ.18.09 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது.

1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்படி நடப்பு ஆண்டில் ரூ.7.96 கோடி வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1984-85ஆம்ஆண்டு திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டின்படி வருவாய் ரூ.7.23 கோடியாக இருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 6.27 கோடியாகும். 1985-86ஆம் ஆண்டில் ரூ.9.45 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட திட்ட மதிப்பீட்டின் செலவு ரூ.8.81 கோடியாக இருந்தது. 1983-84 ஆம் ஆண்டில் இதற்கான செலவு ரூ.6.99 கோடி.

மாநகராட்சியின் நிதி நிலைக்கேற்றவாறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. நிதிப் பற்றாக் குறைகள் இருந்த போதிலும் 1984-85 ஆம் ஆண்டில் எல்லா வகைப் பணிகளிலும் சீரான முன்னேற்றம் காணப்பட்டது. புதிய கட்டடங்களுக்கும் கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டடங்களுக்கும் வரி விதிப்பதன் வாயிலாக சொத்துவரி வசூல் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

தொழில் உரிமம், கட்டட உரிமம் ஆகியவைகளுக்கான கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளபடியால் 1984-85 ஆம் ஆண்டில் இதன் மூலம் கிடைக்கும் வருவாய் இருமடங்காக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தொழில் வரி, கம்பெனி வரி ஆகியவற்றை வசூல் செய்வதற்குப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபடியால் வசூல் உயர்ந்துள்ளது. எனினும் இவ்வகையில்கிடைக்கும் வருவாய், பராமரிப்புப் பணிகளுக்கே செலவாகிவிடுகிறது.

மூலதனப் பணிகளுக்கு அரசின் உதவியையே மாநகராட்சி முழுவதுமாகச் சார்ந்துள்ளது. இந்நிலை தொடர்ந்து நீடித்து வருகின்றது. 1984-85 ஆம் ஆண்டில் 113 பேருந்து வழித்தடச் சாலைகளும் 928 உட்புறச்சாலைகளும் புதுப்பிக்கப்பட்டன.

நகரில் 1580 புதிய மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 486 விளக்குகள்,சோடியம் ஆவிவிளக்குகளாகும். பெரும்பான்மையான பேருந்து வழித்தடச்சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

துப்புரவுப் பணிகளை அபிவிருத்தி செய்யும் வகையில் பழைய லாரிகளுக்குப் பதிலாக 34 புதிய லாரிகள் வாங்கப்பட்டுள்ளன.

பொதுக் கழிப்பிடங்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 200 பொதுக் கழிப்பிடங்களில் தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளும் மின்வசதியும் செய்யப்பட்டு வருகின்றன. 150 பொதுக் கழிப்பிடங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்தில் உள்ள இடையூறுகள் நீக்கப்படுவதற்காகச் சாலையின்மத்தியில் தடங்கல்பகுதிகள் அமைக்கப்படுகின்றன. முக்கியமான சாலைச் சந்திப்புகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சிப் பணிகள் பற்றியும் திடக்கழிவு மேலாளுகை குறித்தும், ஆலோசனை வழங்குவதற்காக அமைப்பு நியமிக்கப்பட்டுள்ளது. சொத்து வரியைச் சீரமைத்துச் சிறந்த முறையில் வசூல் செய்வது குறித்து ஆலோசனை வழங்குவதற்காகவும் ஓர் அமைப்பு நியமிக்கப்பட்டுள்ளது. இவைபற்றிய முதற் கட்டப் பணிகள் முடிந்துள்ளன. 1985-86 ஆம் ஆண்டிற்குள் இப்பணிகள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துவரி, கணக்குகள், சம்பளம் ஆகியவற்றை கம்ப்யூட்டர் மயமாக்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. சொத்துவரி மற்றும் கணக்குகள் வடிவமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

சென்னை மாநகராட்சியின் பிரச்சினைகளை ஆராய்ந்து மூலதனப் பணிகளுக்காக மாநகராட்சிக்கு உதவியளிப்பது பற்றி அரசுக்குப்பரிந்துரைகள்வழங்குவதற்காகஅரசுத்தலைமைச் செயலர் தலைமையில் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

**1985-86- ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்.**

37 பேருந்துவழித்தடச் சாலைகளும் 654 உட்புறச் சாலைகளும் புதுப்பிக்கப்படவிருக்கின்றன.

700 சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்படவிருக்கின்றன.

குப்பைகளை விரைவில் அகற்றுவதற்காக 30 புதிய லாரிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கோட்டத்திலும் சிறுவர்களுக்காகக் கழிப்பிடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

காந்தியக் கொள்கைகளின் அடிப்படையில் நடத்தப்படும் 'சுலாப் இண்டர் நேஷனல்' என்னும் நிறுவனத்தின் மூலம் 8 பொதுக் கழிப்பிடங்கள் பாட்னாவில் உள்ளதுபோல் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அண்ணாநகர் இரண்டாவது மெயின் ரோடையும் நியூ ஆவடி ரோடையும் இணைக்கும் வகையில் ஓட்டேரி நல்லாவில் பாலம் கட்டுதல், மணியகார் சத்திர சாலையில் சுரங்கப்பாதை கட்டுதல் ஆகியஇருபணிகளையும் 1985-86ஆம் ஆண்டில் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# வள்ளுவர் வாக்கு



உலகமே போற்றும் ஒப்பற்ற நூலாகத் திகழ்வது திருக்குறள் என்பதை நாமறிவோம்.

வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி காட்டியாக விளங்கும். வள்ளுவர் வாய்மொழி இன்று எங்கும் பரவி வருகின்றது.

வள்ளுவனை வானளாவப் புகழ்ந்துரைத்த பாரதியும், 'தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று கனவு கண்டார். அந்தக் கனவு இன்று நனவாகிக் கொண்டிருக்கிற நற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

வள்ளுவன் புகழ் பாடும் மன்றங்கள், சங்கங்கள், படிப்பு கங்கள் முதலானவை இன்று தமிழகத்தில் மட்டுமின்றி, பிற மாநிலங்களிலும், உலக நாடுகளிலும் இயங்கி, தமிழ் வளரப் பாடுபட்டு வருகின்றன.

அந்த வகையில், தமிழ்நாடு அரசு திருக்குறள் நெறிபரப்பு மையமும், பொதுமறையின் பெருமையைப்பேசி வருகின்றது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தொடங்கிய திருக்குறள் நெறிபரப்பு மையம், வடசென்னையிலும் தொடங்கப் பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகின்றது.



இயக்ககம்-தமிழ்நாடு அரசு திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர் திருக்குறளார் திரு. வீ. முனிசாமி அவர்கள். இவ் வகுப்பு சிறப்புற நடந்து வருகின்றது.

தென் சென்னையில் 'தெய்வ நூல்' ஒலிப்பது போல், வட சென்னையிலும் 'வாயுறை வாழ்த்து' ஒலிக்கின்றது.

வடசென்னை சர் தியாகராயர் கல்லூரி அரங்கில், திருக்குறள் வகுப்புத் தொடக்க விழா 23.2.85 அன்று நடந்தது. திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்கள்வகுப்பினைத்தொடங்கி வைத்தார். அப்போது அவர் சொன்ன கருத்துக்கள்:

"திருக்குறள் வகுப்பு தொடங்கப்பட்ட நோக்கம், உரைகளை ஆய்வது மட்டுமல்ல; ஒழுக்க நெறிகளை நாட்டில் பரப்புவது பற்றியதே. மனிதன் குறைகளைப் போக்கிக் குணங்களைக் கொள்ள வேண்டும்".

இதே விழாவில் தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், திரு அரு. சங்கர், கல்லூரி நிறுவனத்தலைவர் திரு வி. எம். ஜி. இராமச்சன்னன் மற்றும் பலர் திருக்குறளின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறினார்கள்.

திருக்குறள் வகுப்பைக் காணச் சென்றோம்.

சிலர் நகரின் பல பகுதிகளிலிருந்து வந்தும் கலந்து கொள்வது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

திருக்குறள் நெறிபரப்பும்பணியில் அறுபெரும் புலவர்கள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் எல்லாரும் பள்ளி-கல்லூரிகளில் தமிழ்த் துறையில் பணியாற்றியவர்கள். அந்தப் புலவர் பெருமக்கள்: திரு. க. பழநி பாலசுந்தரனார், திரு செ. அமலநாதன், திரு கோ. இரா. மணியன், திரு ப. சிவராமன், கணபதி, திரு ஏ. தாமோதரன்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6.30 மணியிலிருந்து 8.30 மணிவரை இந்த வகுப்பு நடைபெறுகிறது. மாணவர், மகளிர் உட்பட சுமார் 50 பேர் இவ்வகுப்பில் கலந்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு வகுப்பிலும் பத்துக் குறள்களுக்கு விளக்கம் தரப்படுகிறது. இதுவரை ஒன்பது அதிகாரங்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

எல்லாக் குறள்களுக்கும் விளக்கம் தந்தபிறகு, ஆய்வு நோக்கில் வகுப்பு நடைபெறும்.

மாணவ மணிகளுக்கு இவ்வகுப்பு பெரிதும் பயனைத் தருமாதலால், தவறாமல் கலந்து கொள்ள முன்வரவேண்டும். பொதுமக்களும் இதற்கென நேரத்தை ஒதுக்கி வைத்து, திருக்குறள் மணம் பெறச்செல வேண்டும்.

வடசென்னையில் ஒலிக்கும் வள்ளுவர் வாக்குப்போல, தமிழகமெங்கணும் ஒலிக்க வேண்டும்; ஏன், உலகம் முழுவதும் ஒலிக்க வேண்டும்; ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும்.

— பீ. வி. கிரி



வள்ளுவர் கோட்டத்தில்வாரந்தோறும்வெள்ளிக்கிழமை அன்று திருக்குறள் வகுப்பைத்தொடங்கி வைத்தவர், தமிழ்ப் பழங்கலை

வடசென்னையில் பல பகுதிகளிலும் இருந்து வந்தவர்கள், ''வகுப்பு எப்போது தொடங்கும்?'' என்று ஆர்வமுடன் விசாரிப்பதைப் பார்க்கிறோம்.

அவர்கள் 'வள்ளல் தன்மை' என்னும் தலைப்பில் பேசும் போது ''திராவிட இயக்கத்தின் மிகப் பெரும் வள்ளல்'' என்று புகழ்ந்துரைத்தார்.

திருமதி பி.பி. இராஜராஜேசுவரி அவர்கள் 'பண்பு நலம்' என்பது பற்றிப் பேசுகையில், 'தமிழர்கள் மிக விழிப்போடு இருந்து, நம்மை நாமே காத்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.



செல்வி பி. சரசு அவர்கள் 'கல்வித் தொண்டு' என்பது பற்றிப் பேசுகையில், 'தொழிற் கல்வி தான் சிறந்தது என்பதை எடுத்துக் காட்டியவர் தியாகராயர்'' என்றார்.



திரு. தில்லை வில்லாளன் அவர்கள் 'நகரத் தந்தை'என்னும் தலைப்பில் பேசும்போது, ''திராவிட இன உணர்ச்சியை ஏற்படுத்திய முதல் தலைவர்; அவர் போட்ட விதை இன்று வளர்ந்திருக்கிறது. தியாகராயரின் அந்த உணர்ச்சிக் கனல் வளரவேண்டும்'' என்றார்.

திரு டி. கே. சீனிவாசன் அவர்கள் 'சமுதாயத் தொண்டு' என்னும் தலைப்பில் பேசுகையில், ''அவர் ஆட்சித் தலைமை ஏற்கவில்லை, கட்சித் தலைமை ஏற்றார். தியாகராயர் மனித உணர்வுள்ள தலைவர்; வெள்ளையருக்கு அவர் அடிமையாகவில்லை'' என்றார்.

சென்னை மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கு. கோவிந்தராஜு நன்றி நவின்றார்.

அன்று மாலை நாயன இசையும், திரு டி. கே. எஸ். கலைவாணன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் அனைவரையும் கவர்ந்தன.

## சிறப்புக் கூட்டம்

அன்று மாலை சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.



விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்று திரு அனகாபுத்தூர் சி. இராமலிங்கம் எம். எல். சி. அவர்கள்பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''வெள்ளை ஆட்சியை எதிர்த்துப் போராடியவர் தியாகராயர். மகாத்மா காந்தியடிகள் தியாகராயரைச் சந்தித்து அவரது இல்லத்தில் சில காலம் தங்கியுள்ளார். நெசவாளப் பெருமக்கள் நீதிக்கட்சிக்கு உதவி புரிந்துள்ளனர். தியாகராயர் வழியில் அண்ணா இருமொழிக் கொள்கையை வலியுறுத்தினார்'' என்றார்.

விழாவைத் தொடங்கிவைத்து மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சமுதாயத்தில் சமத்துவம் வேண்டும் என்று உரைத்த முதல் தலைவன். தென் இந்தியர் நலச் சங்கம் அமைத்தவர். 3-வது காங்கிரஸ் மகாசபை சென்னையில் நடைபெற்றது. அதற்கு ரூ. 200 நிதி கொடுத்தார்.

''சென்னை காஸ்மாபாலிடன் கிளப்பின் துணைத் தலைவராக இருந்தபோது மகாத்மா காந்தி அவர்கட்கு வரவேற்புக்கொடுத்தார் தியாகராயர்.

''தேர்தல் முறையில் பிரசிடெண்டாக ஆன முதல் இந்தியர் தியாகராயர். முதலமைச்சர் பதவியை மற்றவர்கட்குக் கொடுத்தார். தியாகத்திற்கு 'ராஜா' என்றார் திரு.வி.க. தியாகராயர் வீட்டை அரசு நினைவுச் சின்னமாக்க வேண்டும். வேல்ஸ் அரசர் சென்னைக்கு வருகை தந்தபோது தியாகராயர் வீடு தாக்கப்பட்டது. மகாத்மா காந்தி மிகவும் வருந்தினார்.



திரு பி. எஸ். பெருமாள் செட்டியார் அவர்கள் பேசுகையில், ''திராவிட இயக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டார். ராஜாஜி ஹாலிலும், சட்டமன்றத்திலும் அவரது உருவப் படம் வைக்க வேண்டும். சென்னையைப் பிரித்து வடசென்னைப் பகுதிக்குத் தியாகராயர் மாவட்டம் என்று பெயரிட வேண்டும்'' என்றார்.



திரு டி.. என். கே. இராஜகோபால் செட்டியார் அவர்கள் பேசுகையில், 'தமிழக முதல்வர் நிதி திரட்டி, தியாகராயர் கல்லூரிக்கு உதவிபுரிந்துள்ளார். தியாகராயர் எல்லாத் தரப்பிலும் நேசிக்கப்பட்டவர். தேசிய மகானாகவும் விளங்கினார்'' என்றார்.



திரு நல். முருகேச முதலியார் அவர்கள் பேசுகையில், 'நாட்டின் முக்கிய கட்டங்களில் சிறப்பான பணிகள் ஆற்றியுள்ளார். அவரது பணி வரலாற்றுச்சிறப்புமிக்கது'' என்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் பேசுகையில், ''தியாகராயர் மாமேதை. சமுதாய மக்களுக்கு எழுச்சியூட்டியவர். நாணயமான நேர்மைக்கு எடுத்துக் காட்டு வெள்ளையாகும். அத



னால் வெள்ளுடைவேந்தர் என்று அழைக்கப்பட்டார் எனலாம்'' என்றார்.



முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பேசுகையில் தெரிவித்தார்: 'முன்னேற்றம் அடைந்த சமூகத்தினர் பிற்பட்ட மக்களைத் தம்முடன் முன்னேற அனுமதிக்கவில்லை. அதனால்தான் நீதிக்கட்சியைத் தொடங்கி இன்று பிற்பட்ட மக்களுக்கு வாழ்வு கிடைக்கச் செய்தார்.

''நீதிக்கட்சி தோன்றியபோது 9.5 சதம் பேர்தான் படித்தார்கள். அதில் 7.5 சதம் பிராமணர்கள், பள்ளத்திலே உள்ள மக்களை மேலேகொண்டு வரவேண்டும் என்று பாடுபட்டார் தியாகராயர். உழைக்க ஒரு கூட்டம், உண்ண ஒரு கூட்டம் என்பதை மக்களுக்குத் தெரிவிக்கவே நீதிக் கட்சி தோன்றியது. இன்று உயர் பதவியில் சிலபேர் இருப்பதற்குக் காரணம் தியாகராயர் என்றால் மிகையாகாது.

''அன்றைக்கு மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு சமஸ்கிருத பாடத்தில் மார்க் தேவை இருந்தது. அதை நீக்கியவர் தியாகராயர். தமிழகம் உள்ளவரை தியாகராயர் புகழ் நிலைத்து நிற்கும்''



திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் பேசுகையில், ''கட்சி வித்தியாசம் இல்லாமல் அரசு விழா எடுப்பதற்குப் பாராட்டுகிறேன். உயர்ந்த சாதியின் ஆதிக்கத்தை அழிக்கவும், அந்நியர் ஆதிக்கத்தை ஒழிக்கவும் பாடுபட்டார். தியாகராயர் செல்வம் படைத்தவர் என்றாலும் மக்கள் மத்தியில் செல்வாக்கும் பெற்றவர். தியாகராயரின் ஒழுக்கம், நாணயம் என்ற பாதையில் சிறப்புடன் வாழ்வோம்'' என்றார்.



சென்னைப் பலகலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் பேசுகையில், ''தியாகராயரின் சமூகநீதிகளைப் பரப்பிஅனைத்து மக்களுக்கும் அரசாங்க வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீடு, உரிய பங்கு ஆகியவை கிடைக்க அரசு முயற்சி செய்ய வேண்டும்.

''ஒப்பற்ற தமிழருக்கு நன்றி செலுத்துகிறேன். அவர் இல்லை என்றால் நாங்கள் இல்லை. திரு. வி. க. வின் எதிரி தியாகராயர் ஆவார். திரு.வி.க.வை நாடு கடத்த அரசு திட்டமிட்ட பொழுது அதை எதிர்த்துப் போராடிய்வர் தியாகராயர்''என்றார்.



முன்னாள் நீதிபதி திரு. பி. வேணுகோபால் அவர்கள் பேசுகையில், ''தியாகராயருக்கு மரியாதை செலுத்த இன்றைய தமிழ்ச் சமுதாயம் விரும்பினால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவிகிதம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை உறுதிப் படுத்தவேண்டும். இதற்காக உயர் நீதிமன்றத்தில் பிற்பட்ட மக்களுக்கு ஆதரவாகத் தமிழக அரசு கருத்துக்கூற வேண்டும்.'' என்றார்.

சர். பிட்டி. தியாகராயர் திருவுருவப் படத்தைத் திறந்து



வைத்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க.இராசாராம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''தியாகத்தின் திருவுருவாய்த் திகழ்ந்தவர் தியாகராயர். தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் தொழிற்கல்வியைப் பயில வேண்டும் என்ற நிலையை உருவாக்கியவர் தியாகராயர்.

"தொழில் தொடங்கவும், நெசவுத் தொழில் சிறப்புடன் செயல்படவும் பாடுபட்டார் தியாகராயர்.

''அண்ணா கடற்கரைக் கூட்டத்தில் பேசும்போது முதல் மேயர் (அ. பொ. அரசு) தியாகராயர் சிலைக்கு மாலை அணிவித்துச் செல்வார் என்று கூறினார். அண்ணா தியாகராயரைப் போற்றி மதித்தவர்.

''தியாகராயரின் மாநகராட்சி, சட்டமன்ற, சட்டமேலவைப் பணி பற்றி சர். சி. பி. இராமசாமி பாராட்டினார். காந்தியடிகளுக்கு மேல் இவரைப் பாராட்டுகிறேன் என்றார்.''

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''வெள்ளுடை வேந்தர், வீழ்ந்துவிட்ட சமுதாயத்தை உருவாக்க மாபெரும் இயக்கம் கண்டவர்.

''இந்த ஆட்சியில்தான் மறைந்த தமிழகத் தலைவர்களின் நினைவு நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இதன் மூலம் அவர்களது தியாக வாழ்வும் சிந்தனைகளும் இன்றைய இளைய தலைமுறையினருக்குப் பயன்பட வேண்டும் என்பது முதல்வரின் விருப்பம் ஆகும். இனி வரும்ஆண்டுகளிலும் அரசே தியாகராயரின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும். வரலாறு தெரியாத சிலர்




# தியாகராயர் ஏற்றிய தீபம் அணையாது!

**வெ**ள்ளுடை வேந்தர்!

முதன் முதலில் மதிய உணவு வழங்கிய வள்ளல்!

இன உணர்ச்சிக் கனலை எழுப்பிய ஏந்தல்!

—என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் 134வது பிறந்த நாள் விழா மிகச் சிறப்புமாக நடந்தது.

17-4-85 அன்று காலை சென்னை கலைவாணர் அரங்கில் விழாத் தொடங்கியது.

தியாகராயரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படத் தொகுப்பும் அரங்கிலே இடம் பெற்றிருந்தது.

சர். பிட்டி. தியாகராயரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை இன்னிசையுடன் வில்லுப்பாட்டிலே தொடுத்துச் சொன்னார் கவிஞர் ...பு ஆறுமுகம்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ. ஆ. ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், தியாகராயருக்குப் புகழ்மாலை சூட்டினார். ''கைத்தறி வளர்ச்சிக்கும், நெசவாளர் முன்னேற்றத்துக்கும் பாடுபட்டவர்'' என்றார் அவர்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்,

''சமுதாயக் கொடுமைகள் காரணமாக, மேல் சாதி கீழ்சாதி எனும் ஏற்றத்தாழ்வை எதிர்த்து காங்கிரஸ் இயக்கத்தைவிட்டு வெளியேறியவர்கள் இருவர். ஒருவர் தந்தை பெரியார். மற்றவர் சர். பிட்டி. தியாகராயர். தந்தை பெரியார் கண்டித்தது கொள்கையைத் தவிர, தனி மனிதனை அல்ல. தியாகராயரும் அப்படியேதான்.

''காந்தியடிகள் இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தார், தியாகராயர் திராவிட இனத்துக்கே விடுதலை வாங்கித் தந்தவர். திராவிட இனத்துக்காகப் பாடுபட்ட மூத்த தலைவர், முதல் தலைவர்.'' என்று குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள். ''தி. நகர் என்பதை தியாகராயநகர் என்று மாற்ற வேண்டும்; கடிதங்கள் எழுதும் போது குறிப்பிட வேண்டும் என்றும், திராவிட இன வரலாறு எழுதப்பட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

பிறகு நடந்த கருத்தரங்கிற்கு, திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை விழிப்படையச் செய்தவர் தியாகராயர். முதன் முதலில் மதிய-உணவு-அதுவும் ஆயிரம் விளக்குப் பகுதியில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில், தாழ்த்தப்பட்ட குழந்தைகள் படிக்கின்ற பள்ளியில்தான் அமலானது'' என்றார்.

திரு வலம்புரிஜான் எம்.பி., அவர்கள், 'அரசியல் பணி' என்னும் தலைப்பில் பேசும்போது, ''காந்தியடிகளுக்குப் பிறகு ஒரு தூய்மையான மனிதராகத் திகழ்ந்தவர் சர். பிட்டி. தியாகராயர்தான். இளைஞர்களுக்கு அவரது அரசியல் வழி காட்டும்'' என்றார்.

திரு ஏ.பி. சனார்த்தனம்



# பொறுமையின் பெருமை

—கே எஸ். நாகராஜன்

பொறுமை காப்பது நன்று—தம்பி
புரிந்து கொள்வாய் இன்று
அறிவை வளர்த்திடு என்று—நமது
ஆன்றோர் சொன்னார் அன்று!

ஆத்திரம் அறிவைக் கெடுக்கும்—பின்னர்
அல்லல் பலவும் கொடுக்கும்
பாத்திரம் அறிந்திடல் வேண்டும்—உயர்ந்த
பண்பினில் ஒழுகுதல் வேண்டும்!

வன்முறைச் செயலால் கேடு—பற்பல
வந்து சேர்ந்திடும் பாரு
நன்முறை கொண்டு வாழு—நாளும்
நல்லவர் அறிவுரை கேளு!

பொறுத்தார் பூமி ஆள்வார்—நல்ல
வெற்றிக் கனிகளைக் கொய்வார்
அறத்தால் நன்மைகள் காண்பார்—அவரே
அவனியில் பெரும்புகழ் சேர்ப்பார்!



## மாணவர்கள் படைத்த இயந்திர மனிதன்!

**சி**தம்பரம் முத்தையா தொழில் நுட்பக் கல்லூரி இயந்திரவியல் பகுதி நேர இறுதியாண்டு மாணவர்கள், எம். ஜி. பன்னீர்செல்வம் தலைமையில் 10 பேர் அடங்கிய குழு ஒன்று அமைத்து ஆசிரியர் வி. லட்சுமி நாராயணன உதவியால் தானாக இயங்குகின்ற 'இயந்திர மனிதன்' ஒன்றை உருவாக்கிச் சாதனை புரிந்துள்ளனர்.

இந்த 'இயந்திர மனிதன்' மின்சார மோட்டாரால் இயங்குபவன். இந்த 'இயந்திர மனிதன்' உடலையும் கையையும் அசைத்து ஓர் இடத்தில் இருக்கும் மாலையை எடுத்து வந்து, வருகின்ற முக்கிய விருந்தினர்களுக்குப் போடும் திறனுடையவன்! அதே நேரத்தில் இதில் இணைக்கப் பட்டிருக்கும் சிறிய 'டேப் ரிகார்டர்' மூலமாக வரவேற்பு உரையையும் தன்னைப்பற்றிய சிறிய விளக்க உரையையும் அளிக்கக் கூடியவன்!

இந்த 'இயந்திர மனிதனை' உருவாக்க ரூ. 3,000 மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் இயக்கங்கள் பெரும்பாலும் ஸ்கூட்டரில் உள்ளது போன்ற அமைப்பைப் பெற்றிருக்கின்றன.

## மோகஞ்சதாரோ ஜெர்மனிக்குச் செல்லுகிறது

மொகஞ்சதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட புதையுண்ட நகரம் இப்போது தண்ணீரில் மூழ்கி வருகிறது. அதனால் அந்த நினைவுச் சின்னத்தைப் பாதுகாப்பதற்காக அனைத்து நாடுகளின் உதவியுடன் மேற்கு ஜெர்மனி உதவுவதற்கு முன்வந்துள்ளது. மொகஞ்சதாரோ நினைவுச் சின்னங்கள், மேற்கு ஜெர்மனியில் அரசுக் கண்காட்சியில் இடம் பெறுவதற்காக எடுத்துச் செல்லப்படுகின்றன.

**மாணவர் பக்கம்**

## இது உங்கள் பக்கம்

மாணவ மணிகளே!
இது உங்கள் பக்கம்
பள்ளி – கல்லூரி மாணவர்கள்
இப்பகுதிக்கு எழுதலாம்.

கதை, கட்டுரை, கவிதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பொது அறிவுக் கட்டுரைகள், துணுக்குகளுக்கு ஆதாரம் குறிப்பிட வேண்டும். பள்ளிப் படிப்போடு பிற துறைகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய சிறுகுறிப்புடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்துத் தலைமை ஆசிரியர் கையெழுத்துடன் அனுப்பி வைக்கலாம்.

— ஆசிரியர்

வெள்ளையனுக்கு வால் பிடித்தவர் என்பார்கள். தன்னை முதலமைச்சர் பதவி நாடி வந்தபோது அதை வேண்டாம் என்று மறுத்தவர் தியாகராயர்.

''இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற,பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்துக்காக என்னையும் அகால மரணமடைந்த என் அருமை சகத்தலைவர் டாக்டர் டி. எம். நாயரையும் வெள்ளையனின் வால் பிடிப்பவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும் அவர்களுடைய பத்திரிகைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம்விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்க மாட்டேன். மன்னிக்க வேண்டும்.'' **என்று ஆளுநரிடம் கூறினார் தியாகராயர்.**

''தியாகராயரை ஒரு சமுதாயத்திற்கு எதிரானவர் என்று சிலர் தவறாகப் பிரச்சாரம் செய்தனர். ஆனால் தியாகராயர் சிலரைத் தாழ்ந்தவர்களாகக் கருதி சமுதாயத்தின்கீழே மிதித்து அழிக்கும் ஆதிக்கக்காரர்களுக்கு எதிராகத்தான் எனது போராட்டம் என்றார்.



''திரு பி. தியாகராய செட்டியார் உறுதியான கொள்கைப் பற்றும் பழக்க வழக்கங்களும் கொண்டவர். அவர் தமது எண்ணங்களை மறைத்துப் பசப்பாமல், தெளிவுடனும் திடமுடனும் உரைத்திடும திண்மை பெற்றவர். நண்டகாலம் அவர் சமயப்பற்று மிக்க இந்துவாக இருந்தார்.





**மனைவி சின்ன வள்ளியம்மாளுடன் தியாகராயர்.**

''நாட்டிற்காகப் பாடுபட்ட தியாகராயரை அடையாளம் கண்டு அரசு சிறப்பித்து விழா எடுத்துள்ளது''.

விழா நிறைவுரையாற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்,

''தமிழக வரலாற்றில் ஒப்புயர்வற்ற தலைவராகத் திகழ்ந்தவர் தியாகராயர். எல்லா அரசியல் தலைவர்கட்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

''மன்னர் ஆட்சியைப் பற்றி இன்றைய மக்களுக்குத் தெரியாது. மக்கள் ஆட்சி தியாகராயர் காலத்தில்தான் தெரிந்தது.. அவர் இட்ட வித்துதான் இன்று செடியாகி, மரமாகி, பூத்துக் காய்த்து,கனியாகி,மணம் வ்சிக் கொண்டிருக்கிறது.

''முற்போக்கான கொள்கை படைத்தவர். பல துறைகளில் சிறப்புப் பெற்றார். வெள்ளை உள்ளம் படைத்தவர். வெள்ளை மாளிகையில் வாழ்ந்தவர்.

''இவரது உழைப்பினாலும் தியாகத்தினாலும்தான் இன்று 64 சதவிகித பிற்படுத்தப்பட்டவர் அரசுப் பணிகளில் அமர முடிந்தது.

''வெள்ளுடை வேந்தர் பற்றி எவ்வளவோ பேசலாம். அந்த அளவிற்குப் புகழும் பெருமையும் படைத்தவர். அறியாமை இருளை அகற்றி, அறிவு வெளிச்சத்தைக் காட்டியவர். அவர் ஏற்றி வைத்த ஒளியை கிராமம், நகரம் என்று சென்று பரப்பியவர் தந்தை பெரியார். அந்த ஒளியை அண்ணாவும் அண்ணாவிற்குப் பின் புரட்சித் தலைவரும் காத்து வருகின்றனர்.

'அந்த ஒளிச்சுடரை அணைக்க யாராலும் முடியாது.

''அறிஞர்கட்கு விழாவை அரசு ஏற்று நடத்துகிறது. இந்த நிலை மாறி மக்களே இதுயாதிரியான விழாக்களை உற்சாகத்துடன் கொண்டாடும் நிலை வரவேண்டும்'' என்றார்.



**விழா இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் அவர்கள் நன்றி கூறினார்.**

நிகழ்ச்சித் தொகுப்பு:
**அ. மருதவிநாயகம்**
**பி. வி. கிரி**






# வளம் பெருக்கும் வட ஆர்க்காடு மாவட்டம்

வளரும் தமிழகம்

**வட ஆர்க்காடு மாவட்டத்தில் செவ்வனே நடைபெற்று வரும் சீர்மிகு பணிகளை விளக்குகிறது இக்கட்டுரை**

வரலாற்றுச் சிறப்புமிக்க வட ஆர்க்காடு மாவட்டம், வறட்சியின் பிடியில் ஆட்பட்ட போதும், வளமான வாழ்வுக்கு வழி கோலும் வகையில், வளர்ச்சிப் பாதையை நோக்கி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

12265 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இம்மாவட்டத்தின் மக்கள்தொகை 44 இலட்சத்து 2 ஆயிரம் ஆகும். 36 ஊராட்சி ஒன்றியங்கள் 13 வட்டங்கள், 12 நகராட்சிகள் இம்மாவட்டத்தில் உள்ளன.

**முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்**

இம்மாவட்டத்தில் பள்ளிகள் 3410, குழந்தைகள் காப்பகங்கள் 3410, உயர்நிலைப் பள்ளிகள்/மேல் நிலைப் பள்ளிகள் 311 உள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக, 8 லட்சத்து 97 ஆயிரம் குழந்தைகளும், 19359 முதியோர்களும், முன்னாள் படைவீரர் 9

## இ. எஸ். டேனியல் குணாநிதி இ.ஆ.ப.

**மாவட்ட ஆட்சித் தலைவர் வட ஆர்க்காடு மாவட்டம்.**

பேரும் பயன்பெறுகின்றனர். 6 லட்சத்து 50 ஆயிரம் குழந்தைகளுக்கு இலவசப்பல்பொடி வழங்கப்படுகிறது. சத்துணவு மையங்களில் வேலை வாய்ப்புப் பெற்றோர் 20700 பேர்: இவர்களில் 4099 பேர் இளம் விதவைகள் ஆவர்.

**தன்னிறைவுத் திட்டம்**

1982-83ல் 9 ஊராட்சிகளில் ரூ. 38.251 இலட்சமும், 1983-84ல் 14 ஊராட்சிகளில் ரூ. 42.990 இலட்சமும், 1984-85ல் 13 ஊராட்சிகளில் ரூ. 11.410 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

**சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

படித்து வேலையற்றோர்களுக்கு பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1983-84-ல் 2941 நபருக்கு ரூ. 528.33 இலட்சம் கடனுதவியும், 1984-85-ல் 1596 நபருக்கு ரூ. 365.30 இலட்சம் கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளது.

**குடிநீர்த் திட்டம்**

27-7-84-அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், தெள்ளாறு கூட்டுக் குடிநீர்த்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

திட்ட மதிப்பீடு ரூ. 257 இலட்சம்; பயன்பெறும் கிராமங்கள் 88, பேரூராட்சி 1 (தெள்ளாறு) உச்ச கட்டத்தில் பயன்பெறும் மக்கள் 76330 பேர்

**மாநிலத்திலேயே அதிக அளவில் விவசாய பம்புசெட்டுகள் இயங்கிவரும் மாவட்டம் வட ஆர்க்காடு மாவட்டமாகும். இங்கு இலட்சத்திற்கு மேற்பட்ட பம்பு செட்டுகள் இயங்கி வருகின்றன**

தோல் பொருட்கள் உற்பத்தியில் அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டித்தரும் மாவட்டம் இது. இம்மாவட்டம் மட்டும் 75 சதம் தரமான பொருட்களை உற்பத்தி செய்து இந்தியத் துணைக் கண்டத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

சந்தன மர உற்பத்தியில் உலகில்

வேறெந்த நாடும் பெற்றிடாத உன்னதமான இடத்தை வட ஆர்க்காடு மாவட்டம் பெற்றுள்ளது. அரசுத்துறை மூலம் சந்தன எண்ணெய் உற்பத்தி ஆலை ரூ. 75 இலட்சம் செலவில் துவக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1984-85-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 21406 பேர் பயன் பெற்றுள்ளனர். இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 244.13 இலட்சம்.



**தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம்**

1984-85-ஆம் ஆண்டு ரூ. 717.46 இலட்சம் மதிப்புள்ள 1843 நிலுவை மற்றும் 3945 புதிய வேலைகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 15-1-85 வரை 1697 நிலுவை வேலைகளையும் 974 புதிய வேலைகளையும் முடித்து ரூ. 47.21 இலட்சம் மதிப்புள்ள 2407 டன் அரிசியும் ரூ. 163.25 இலட்சம் கூலியாகவும் ரூ. 2.27 இலட்சம் வேலையாட்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூ. 71.87 இலட்சம் கட்டுமானப் பொருள்களுக்குச் செலவிடப்பட்டுள்ளது.

இதுவரை நடைபெற்ற வேலையின் மதிப்பு ரூ. 282.33 இலட்சமாகும். 275 சத்துணவுக்கூடக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 6606 எக்டேரில் ரூ. 35.10லட்சம் செலவிடப்பட்டு சமூகக்காடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ. 93.34 இலட்சம் மதிப்பில் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு 800 வீடுகளும், கழிவுநீர்க் கால்வாய்கள், இணைப்புச் சாலைகள் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 4.24 இலட்சம் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ்மக்கள் பயனடைந்துள்ளனர்.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்**

1984-85-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 7 கோடியே 61 இலட்சத்து 12 ஆயிரம் மதிப்பீட்டில் 802 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை ஆதி திராவிடர் மற்றும் மலைசாதியினருக்கு 955 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 645 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன:

வளர்ந்துவரும் தொழில் முன்னேற்றத்திற்கேற்ப இராணிப்பேட்டையில் 'பெல்' நிறுவனம், 'சிப்காட்' நிறுவனங்களும் அரக்கோணத்தில் எஃகுத் தொழிற்சாலையும் இயங்கி வருகின்றன:

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் சாத்தனூர் அணையும், ஜவ்வாது, ஏலகிரி மலையும் உள்ளன.

சாத்தனூர் அணைக்கட்டினால் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் 45 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பயன்பெறுகிறது. இந்த அணைக்கட்டின் கொள்ளளவு 8100 மில்லியன் கன அடி தண்ணீர்.

இம்மாவட்டத்தில் இலவச வீட்டு மனைப்பட்டா 1984' நடப்பு நிதியாண்டில் மொத்தம் 10,888 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

**இருபது அம்சத்திட்டம்.**

சமூக நீதியையும் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்தும் நோக்கத்தில் பாரதப் பிரதமர் அவர்கள் 1982-ஆம் ஆண்டு ஜனவரி 14-ம் நாள் நாட்டுக்குப் புதிய இருபது அம்சத் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டம் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கையை மேம்படுத்தும் குறிக்கோளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் சீரிய முறையில் வடார்க்காடு மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் (31-12-84 முடிய) திட்டத்தினை செயல்படுத்துவதில் முதன்மையிடம் வகிப்பதாக அரசு ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 31-1-85 முடிய 22281 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. வீட்டு மனைப்பட்டா 13757 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 7331 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. பல அம்சங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு மேல் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.

**குடும்பநலத் திட்டம்.**

குடும்பநலத் திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டம் நல்ல சாதனை காட்டி தமிழகத்தில் முதல் இடம் பெற்றுள்ளது. 1984-85 ஆம் ஆண்டிற்கு அரசு நிர்ணயித்த இலக்கான 53,200-ல் 1-4-84-முதல் 31-1-85 வரை 40107 நபர்களுக்கு குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து சாதனை காட்டப்பட்டுள்ளது. இதில் ஆண்களுக்கான அறுவைச் சிகிச்சை 2756- பெண்களுக்கான அறுவைச் சிகிச்சை 37351 செய்யப்பட்டுள்ளன.

1-4-84 முதல் 31-1-85 வரை 114 சிறப்பு லேபராஸ்கோபிக் முகாம்கள் நடத்தப்பட்டு 16,138 தாய்மார்களுக்கு லேப்ராஸ்கோபிக் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**பாரதப் பிரதமரின் இருபது அம்சத்திட்டம், குடும்பநலத் திட்டம், சாண எரிவாயுக் கலங்கள் அமைக்கும் திட்டம் சுய வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம், காச நோய்த தடுப்புப் பணிகள் ஆகியவற்றில் தமிழகத்திலேயே உச்ச அளவு சாதனை நிகழ்த்தி வட ஆர்க்காடு மாவட்டம் முதலிடம் வகிக்கின்றது என்பதைக் குறிப்பிட வேண்டும்.**







# சுற்றுலாப் பெருமைபெற்ற திருநெல்வேலி மாவட்டம்

**வ. இராமதாஸ், இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்.

**வி**டுதலை வீரர்களை வாரி வழங்கிய பெருமை படைத்தது. திருநெல்வேலி மாவட்டம்.

நெல்லைச் சீமையிலே நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளைப் போல, வளர்ச்சிப்பணிகளும் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

**நெல்லைச் சீமையில் அமைந்துள்ள குறிப்பிடத்தக்க தொழில் வளங்கள்:**

இந்தியா சிமெண்ட் (சங்கர் நகர்), தாரங்கதாரா கெமிக்கல்ஸ் (சாகுபுரம்), சன் பேப்பர் மில் (சேரன் மகாதேவி), கணபதி மில்ஸ் (தாழையூத்து), நெல்லை காட்டன் மில்ஸ் (தாழையூத்து), திருமலை மில்ஸ் (பழைய பேட்டை), தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலை (பழையபேட்டை), லட்சுமி மில்ஸ் (கோவில்பட்டி), லாயல் மில்ஸ் (கோவில் பட்டி), மதுரா கோட்ஸ் (விக்கிரமசிங்கபுரம்), மதுரா கோட்ஸ் (தூத்துக்குடி), கோமதி மில்ஸ் (வீரவநல்லூர்), பலராமவர்மா மில்ஸ் (செங்கோட்டை), கூட்டுறவு நூற்பாலை (நாசரேத்), கீதாஞ்சலி (சங்கரன்கோவில்) பெல் மேன்பாக்சரிங் அன்கோ (பாளையங்கோட்டை). தூத்துக்குடி நூற்பாலை (தூத்துக்குடி), துறைமுகத் திட்டம் (தூத்துக்குடி), தூத்துக்குடி ஆல்காலிக் கெமிக்கல்ஸ் (தூத்துக்குடி). ஸ்பிக் (தூத்துக்குடி), சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் (நாங்குனேரி), பம்பாய் பர்மா தேயிலைத் தோட்டம் (மாஞ்சோலை), லட்சுமி பிளவர் மில்ஸ் (கங்கைகொண்டான்).

**நெல்லை மாவட்டத்தில் அரசின் பல்வேறு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதை இக்கட்டுரை படம் பிடித்துக் காட்டுகிறது.**

**சிறுதொழில்கள்:**

புகழ்பெற்ற கோரைப்பாய்கள் பத்தமடையில் பின்னப்படுகின்றன.

செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த விசுவநாதபுரத்தில் மூங்கில் மற்றும் பிரம்புகளைக் கொண்டு அழகிய நாற்காலிகள், கூடைகள் பின்னும் தொழில் நடைபெற்றுவருகிறது. செங்கோட்டை விசுவநாதபுரம் பிரம்பு, மூங்கில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**மண்பாண்டத் தொழில்:**

திருக்குற்றாலத்திற்கு அருகில் தேன்பொத்தை என்ற கிராமத்தில் ஜாடிகள், பொம்மைகள், மண்பாண்டங்கள், தயாரிக்கப்படுகின்றன. மண்பாண்ட உற்பத்தியாளர் தொழில் சங்கம் ஒன்று மண்பாண்டத் தொழிலின் முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டுச் செயல்பட்டுவருகிறது. மேலும் காருகுறிச்சி கிராமத்திலும் மண்பாண்டங்கள் செய்யும் தொழில் சிறப்புற்று விளங்குகிறது.

**தீப்பெட்டித் தொழில்:**

கோவில்பட்டி, கழுகுமலை, எட்டயபுரம் ஆகிய பகுதிகளில் தீப்பெட்டிகள் செய்யும் தொழில் சிறந்து விளங்குகிறது. இத்தொழிலுக்காகத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**பனை ஓலைத் தொழில்**

திருச்செந்தூர், குலசேகரப்பட்டினம் ஆகிய பகுதிகளில் பனை ஓலைகளைக்கொண்டு அழகிய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் இப்பகுதிகளில் துணி பொம்மை செய்யும் தொழிலும் சிறப்புற்று விளங்குகிறது.

அம்பாசமுத்திரத்தில் உள்ள வாகைக்குளத்தில் பித்தளையினால் ஆன விளக்குகள் செய்யப்படுகின்றன.

**கல்வி வளர்ச்சி**

தொடக்கப்பள்ளிகள் 2,461, நடு நிலைப் பள்ளிகள் 676, உயர் நிலைப்பள்ளிகள் 123, மேல் நிலைப் பள்ளிகள் 133, கல்லூரிகள் 27, மருத்துவக் கல்லூரி, 1). அரசினர் மருத்துவக் கல்லூரி,

பாளை. (2) அரசினர் சித்த வைத்தியக் கல்லூரி, பாளை, பொறியியற் கல்லூரி மூன்று

திருக்குற்றாலம் அழகிய அருவிகளைக் கொண்டது. இனிய சுற்றுலாத் தலமாக மட்டுமல்ல இலக்கியச் சிறப்பும் உடையது இது. நெல்லையில் இருந்து 56 கிலோ மீட்டர் தூரத்தில் குற்றாலம் அமைந்துள்ளது. திருக்குற்றால நாதர் திருக்கோவில் மலை அடிவாரத்தில் சங்கு வடிவத்தில் அமைந்துள்ளது. சோழர் பாண்டியர் காலக் கல்வெட்டுக்கள் இக்கோவிலில் அமைந்துள்ளன. மலையிலிருந்து அழகிய பெரிய அருவி விழுகிறது. பருவகாலத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) இந்தியாவின் பலபகுதிகளிலிருந்தும் எண்ணற்ற சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து தங்கி மகிழ்வர். மேலும், சிற்றருவி, சண்பகா தேவி, தேனருவி, ஐந்தருவி, புலி அருவி, பழைய குற்றால அருவி போன்ற பல அருவிகள் பார்ப்போரையும், நீராடுபவரையும் பரவசப்படுத்தும்.

பாபநாசம், மணிமுத்தாறு இரண்டும் அழகிய அணைக்கட்டுகள். பூங்காவும், நீச்சல்குளமும், தேயிலைத் தோட்டமும் உள்ள எழிலார்ந்த இடங்கள்.

**வரலாற்றுப் புகழ் பெற்ற தலங்கள்:**

**பாஞ்சாலங்குறிச்சி:** வெள்ளையரை எதிர்த்து உரிமைக்குரல் எழுப்பிய வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டை பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ளது. இக்கோட்டை நெல்லையிலிருந்து 75 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது.

**எட்டயபுரம்:** பாட்டுக்கொரு புலவன் பாரதி பிறந்த இடம். இங்கே பாரதியின் மணிமண்டபமும் உள்ளது. 1981 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் தொழில்நுட்பப் பயிலகமும் மகாகவி பாரதியார் நூற்பாலையும் அமைக்கப்பட்டுள்ளன. மகாகவி பாரதியார் கலைக்கூடம் ஒன்று அமைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. பாரதியார் வாழ்ந்த இல்லம் நினைவுச் சின்னமாக்கப்பட்டுள்ளது.

சீறாப்புராணத்தை இயற்றிப் புகழ்பெற்ற உமறுப்புலவருக்கு தர்கா இங்குள்ளது. உமறுப்புலவருக்கு நினைவாலயம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது. கர்நாடக சங்கீத மேதை முத்துசாமி தீட்சிதர் இவ்வூரில் வாழ்ந்ததின் நினைவாக அமைந்துள்ள ஆராதனை மண்டபம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளது.

**ஒட்டப்பிடாரம்:** கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்து வாழ்ந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் அரசு சார்பாக நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

**கயத்தாறு:** சுதந்திரத்திற்காக வெள்ளையனை எதிர்த்து வீர முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்ட இடம். இங்கு அவன் நினைவாக, சிலை எழுப்பப்பட்டுள்ளது.

**திருச்செந்தூர்:** வங்கக் கடலின் கரையில் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் இங்கு அமைந்துள்ளது. முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இதுவும் ஒன்றாகும். மக்கள் பெருவாரியாக வருகை தந்து முருகப்பெருமானை வழிபட்டுச் செல்கின்றனர். இங்கு வைகாசி விசாகமும், ஐப்பசி மாதத்தில் கந்த சஷ்டி விழாவும், ஆவணித்திங்களில் ஆவணித் திருவிழா, பங்குனி உத்திரமும் இங்கு சிறப்பான விழாக்களாகக் கொண்டாடப்படுகின்றன.

**சங்கரன்கோவில்:** அருள்மிகு சங்கர நாராயணசுவாமி, கோமதி அம்மாள் கோவில் அமைந்துள்ளது.

**திருநெல்வேலி:** அருள்மிகு நெல்லையப்பர் - காந்திமதி அம்மன் கோவில் இங்குள்ளது.

**தென்காசி:** இதை தென்னாட்டுக்காசி எனவும் வழங்குவர். காசி விசுவநாதர் கோவில் இங்கு அமைந்துள்ளது, 400 ஆண்டுகளுக்கு முந்திய கலையழகு மிக்க சிற்பங்களை இக்கோவிலில் காணலாம்.

**கிருஷ்ணாபுரம்:** அருள்மிகு விஷ்ணு திருக்கோவில் இங்கு அமைந்துள்ளது. திருநெல்வேலியில் இருந்து 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இந்தக் கோவிலில் மிக நுண்ணிய வேலைப்பாடமைந்த கற் சிற்பங்கள் நிறைந்துள்ளன.

**திருக்குறுங்குடி:** அருள்மிகு மலைநம்பித் திருக்கோவில் அமைந்துள்ளது. பழங்காலச் சிற்பங்கள் இங்கு நிறைந்துள்ளன.

**கழுகுமலை:** அருள்மிகு கழுகாசலமூர்த்தி திருக்கோவில் இங்குள்ளது. ஜைனர்களின் முக்கிய தலமாக பண்டைக் காலத்தில் இவ்வூர் விளங்கியது என்பதற்கேற்ப ஜைனர்களின் மலைக்குகைக் கோவில்கள் இவ்வூரில் அமைந்துள்ளன.

**பண்பொழில்:** திருமலைக் குமாரசாமி கோவில் இங்கு இடம் பெற்றுள்ளது.

**ஆழ்வார் திருநகரி:** அருள்மிகு மகர நெடுங்குழைக்காதர் திருக்கோவில் இங்கு அமைந்துள்ளது.

**வனவிலங்கு உய்விடங்கள்**

**முண்டந்துறை:** புலிகள் உய்விடம், புலிகள் தவிர காட்டு எருமைகள், மிளா, கரடி, காட்டுப் பன்றிகள் ஆகியவையும் இங்கு அதிகம். பாபநாசம் வனவிலங்குச் சரகத்தைச் சார்ந்தது.

**களக்காடு:** சிங்கவால் குரங்குகளுக்கு உய்விடம்.

**மூன்றடைப்பு - கூந்தங்குளம்:** பறவைகளின் உய்விடம். பருவகாலங்களில் உலகின் பல பாகங்களிலிருந்தும் இங்கு பறவைகள் வந்து சேருகின்றன.

இவ்வாறு திருநெல்வேலி மாவட்டம் பல்வேறு சிறப்புகளோடு வேகமாய் முன்னேறி வருகிறது.







# கைப்பம்பு கருத்தரங்கு

குடிநீருக்குப் பயன்படுத்தப்படும கைப்பம்புகளைப் பராமரிக்கும் விதம் பற்றிய மாநில அளவிலான கருத்தரங்கும்மூன்று நாட்கள் பயிற்சி முகாமும் சென்னையில் (2-5-85) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

கிராம வளர்ச்சி இயக்குநர் திரு என். நாராயணன் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். அரசு ஆணையர் மற்றும் செயலர் திரு வி. சுந்தரம் இ.ஆ.ப., தலைமையுரையாற்றினார். திரு எஸ். தாஸ் குப்தா (யுனிசெஃப்), திட்ட அலுவலர் திரு. டி. கனகராஜன், குடிநீர் வடிகால் (வாரிய நிர்வாக இயக்குநர் திரு எஸ். கபிலன் ஆகியோரும் சொற்பொழிவாற்றிய இக்கருத்தரங்கின் முடிவில் கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. சோட்டா ஜான் நன்றி கூறினார்.

யுனிசெஃப் நிறுவனமும் அரசு ஊரக வளர்ச்சித்துறையும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கைத் துவக்கி வைத்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''தண்ணீர் எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்கவே 'நீரின்றி அமையாது உலகு' என்றார்கள்.

''கிராமங்கள்தோறும் கைப்பம்புகள் இருப்பதையும் ஆனால் அவற்றுள் பல பழுது பட்டிருப்பதையும் பார்க்கிறோம். இப்படிப்பட்ட அவலங்கள் நீங்கவும், எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தட்டுப்பாடின்றித் தரவும் புரட்சித் தலைவரின் தலைமையிலான இந்த அரசு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

''வற்றாத ஜீவநதி என்று தமிழ்நாட்டில் ஒன்றும் இல்லை; ஆகவே, சிலநேரங்களில் சில இடங்களில் தண்ணீரைக் கண்டு பிடிப்பதே சிரமமாக இருந்து வருகிறது. கைப்பம்புகளின் முக்கியத்வம் கிராமப்புற மக்களுக்குத்தான் அதிகம் தெரியும். அவை பழுதுபடும் நேரங்களில் கிராம மக்கள் படும் அல்லலைச் சொல்லி முடியாது. அத்தகைய நிலையை நீக்குவதில் கைப்பம்புகளைப் பராமரிப்பதில் அரசு மிகவும் கவனமாக உள்ளது.

''குடிநீரைப் பொறுத்த வரை இரண்டு மூன்று மாதங்களில் தட்டுப்பாடு வரக்கூடுமோ என்ற அச்சம் இருந்து வருகிறது. மழை வந்தாலன்றி இந்த அச்சம் நீங்க வகையில்லை. ஆகவே, மழையை நம்பி சும்மா இருந்து விடாமல், அதிகாரிகள் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். இத்தகைய பணிகளில் சமுதாய வளர்ச்சி கருதி, சமுதாய மறுமலர்ச்சி கருதி அதிகாரிகள் தம்மைத் தாமே ஒப்படைத்துக் கொண்டாக வேண்டும்.''

கைப் பம்புகள் பராமரிப்பு குறித்த இந்தக் கருத்தரங்கின் நிறைவு விழா 4-5-85 அன்று சிறப்புற நடைபெற்றது.

அரசு ஆணையர் மற்றும் செயலர் திரு. ஜே. ஆர். இராமநாதன் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'யுனிசெஃப்' திட்ட அதிகாரி திரு. டி. கனகராஜன், ஊரகவளர்ச்சித் தலைமைப் பொறியாளர் திரு. என். வெங்கடாசலம், கிராம வளர்ச்சி இயக்குநர் திருமதி சந்திரலேகா ஆகியோர் உரையாற்றினார்கள்.

கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. சோட்டா ஜான் வரவேற்புரையாற்ற - விழா முடிவில் திரு. வேலாயுத நாயர் நன்றி கூறினார்.

—இராசேந்திரன்

# சுயவேலை வாய்ப்பில் தமிழகத்தின் முன்னேற்றம்

பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தேவையான கடன் உதவி இவ்வாண்டிற்குத் தயாரிக்கப்படும் ஆண்டு செயல்திட்டம் மூலம் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்மையில் தொழிற் பிரிவிற்கு தேவைப்பட்ட நிதி வசதி பற்றிய ஆய்வு மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் தொழிற் பிரிவு நிலைக் குழுவினால் மேற்கொள்ளப் பட்டது. 1984-ம் ஆண்டிற்கான தொழிற் பிரிவுக்குரிய கடனுதவிக் குறியீடு ரூ. 93.44 கோடியாகும். இப்பிரிவில் கைத்தறி, கைவினஞர், மற்றும் சிறுதொழில் ஆகியோருக்கு அளிக்கப்படும் கடன் உதவி அடங்கும். 1984 ஜூன் திங்கள் முடிய இக் குறியீட்டில் 71 விழுக்காடு நிறைவு செய்யப் பட்டுள்ளது என்று தெரிகின்றது. இந்நிலையில் முழு ஆண்டில் சுமார் 120 கோடி ரூபாய் இப்பிரிவிற்குக் கடனுதவி அளிக்கப் படும் அது இவ்வாண்டிற்கு நிர்ணயிக்கப் பட்ட குறியீட்டில் 130 விழுக்காடு ஆகும். எனவே 1984-ம் ஆண்டிற்கு தொழிற் பிரிவிற்கு தேவைப்படும் நிதி உதவி வரவு திருப்திகரமாக உள்ளது என்று கூறலாம். 1985-ம் ஆண்டிற்கு இப்பிரிவிற்கு குறியீடு ரூபாய் 148.93 கோடியாகும்.

படித்து வேலையில்லாதிருப்போருக்கு சுய வேலை வாய்ப்பளிப்பது இப்பிரிவின் முக்கியமான திட்டமாகும். 1984-85-ல் இத்திட்டத்தின் கீழ் 21,700 படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை அளிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இவ்வாண்டில் 22,084 நபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சுய வேலை வாய்ப்பிற்காக நிதி உதவி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொருவருக்கும் வணிக வங்கிகளின் மூலம் அதிகபட்சம் ரூ.25,000 கடன் வழங்கப்படும். இக்கடன் முதலீட்டில் 2.5 விழுக்காடு மத்திய அரசு மானியமாக அளிக்கிறது. இரண்டாவது ஆண்டாக தமிழ்நாடு அரசு இத்திட்டத்தின் கீழ், நிர்ணயம் செய்யப்பட்ட குறிக்கோளை அடைந்துள்ளது.

# அநாதைப் பெண்களுக்கு திருமண உதவி நிதி

ஏழை விதவைகளின் குடும்பத்தைச் சார்ந்த ஒரு பெண்ணுக்கு திருமண உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ரூ. 1,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் 1,000 பேர் பயன் பெற்று வருகின்றனர்.

மேலும் இத்திட்டத்தை அரசு விரிவு படுத்தி தாய், தந்தை இல்லாத அநாதைப் பெண்களின் திருமண உதவிக்காக ஒரு பெண்ணுக்கு ரூ. 1,000 வீதம் ஆண்டுக்கு 1,000 பெண்களுக்கு நிதி வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் உதவி பெறும் அநாதைப் பெண்களின் ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அந்தப் பெண் 18 வயதிலிருந்து 30 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணிற்குத்தான் உதவி கிடைக்கும். அநாதை இல்லத்திலுள்ள அநாதைப் பெண்களுக்கும், இரண்டாம் திருமணங்களுக்கும் இந்த உதவி கிடைக்காது.

படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்கட்கு சுயமாக வேலைவாய்ப்புப் பெற்றுக்கொள்ளும் நிதியுதவித் திட்டத்தின் படி, கடந்த ஆண்டு 21,700 பேர்கள் பயன்பெற வேண்டும் என்று திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இந்த இலக்கைத் தாண்டி 22,084 பேர் பயன பெற்றனர்.

நலிவுற்ற ஏழைக் குடும்பத்தினருக்குத் தொழில் தொடங்க கடந்த ஆண்டு 6 இலட்சம் குடும்பங்களுக்கு நிதியுதவி வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 8 இலட்சம் குடும்பங்களுக்கு நிதியுதவி வங்கிகள் மூலம் கடனாக ரூ. 250 கோடி வழங்கப்படும்.

# மணலியில் புதிய தொழிற்சாலை

தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டம் அருகே செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய பல்தரப்பட்ட உலோகங்களை வெட்டி எடுப்பதற்கும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் சிவகங்கை அருகே கிராபைட் வெட்டி எடுப்பதற்கும், தமிழ்நாடு கனிமப் பொருள் நிறுவனத்திற்கு ஐ.நா. நிறுவனம் உதவி செய்வதாகத் தெரிவித்துள்ளது.

சென்னையை ஒட்டியுள்ள மணலியில் கருங்கல் பாறைகளை வெட்டி எடுத்து கல்பலகைகளாகச் செதுக்கிப் பளபளப்பாக்கி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ரூ.5 கோடி மூதலீட்டில் நிறுவப்படும். இதன் உற்பத்தி ஜூலையில் துவங்கும். இதனால் இப்பொழுது கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் ஏறத்தாழ 6 மடங்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். இப்பொழுது கருங்கற்கள் மட்டும் வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.



# எல்காட்டின் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள்

இங்கிலாந்து நாட்டுத்தொழில் நுட்ப உதவியுடன் துவக்கப் பட்ட தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தில் பெருமை வாய்ந்த வானொலித் தகவல் தொடர்பு சாதனைத் திட்டம் தனது உற்பத்தியைச் சென்னையில் ஆரம்பித்துவிட்டது. சென்னையில் உள்ள சாஸ்திரி நகரில் தற்போது இயங்கி வரும் இந்நிலையம் மிகவும் நவீனமானதும் நுட்பம் வாய்ந்ததுமான வானொலித் தகவல் தொடர்புக் கருவிகளை காவல்துறை, இருப்புப் பாதைத் துறை, நிலவாயு மற்றும் எண்ணெய்க் குழு, பாதுகாப்புப் படைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் ஏனைய துறைகளின் தேவைக்கேற்ப உற்பத்தி செய்து வருகிறது. இந்த மையத்தின் ஆரம்ப முதலீடு ரூ. 2 கோடியாக இருந்த போதிலும், ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பலதிறப்பட்ட கருவிகளுக்கும், அவை சம்பந்தப் பட்ட கருவிகளையும் வழங்குவதற்குமாக இம்முதலீடு ரூ. 30 கோடிக்கு உயர்த்தப்பட்டு அதற்கேற்ப எல்லா உட்தேவைகளையும் ஈந்து, அதன் தொழில் வளம் பரவுவதற்கு உதவியளிக்கிறது.

இந்த மையம் உற்பத்தியைத் துவக்க ஆரம்பித்தவுடன், தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் நான்கு பொதுத்துறை மையங்களைக் கொண்டதாக இருக்கும். ஓசூரில் உள்ள அலுமினிய மின் திறன் கொள்கலன் தொழிற்சாலை, சென்னையில் உள்ள காலங்காட்டும் பொறிகளை முறையாக உற்பத்தி செய்யும் மையம், மின் தொழில் நுட்பவியலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் எண்கள் மூலம் காலமறிவிக்கும் கைக்கடிகாரங்கள், பொதுச் சந்தையில் விற்கப்படும் ஒரே நிலை கொண்ட சுவர்மணிப் பொறிகள், மைய அரசின் நிறுவனங்களான பாரத மின் அணுவியல் நிலையம், இந்துஸ்தான் தொலை நோக்குச்சாதன அச்சு இயந்திரத் தொழிற்சாலை, பாதுகாப்புத் துறை போன்றவற்றின் தனி ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவைகளுக்குத் தேவையானவைகளை உற்பத்தி செய்யும் மற்றும் சமுதாயத் தேவைகளை நிறைவு செய்யும் வானொலிக் கருவிகளை உற்பத்தி செய்யும் ஒப்பந்தப் பிரிவு ஆகியவைகள் ஏனைய மூன்று மையங்களாகும். இவைகளைத் தவிரத் தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் பொதுச் சந்தைப் பிரிவு, சென்னையில் உள்ள சிறுதொழில் பிரிவுகளுக்கு பொதுச் சந்தை சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களிலும் உதவியளிக்கிறது.

நமது அரசு மின் அணுவியல் தொழில் வளர்ச்சியை இம் மாநிலம் முழுவதும் தொழில் அடிப்படையில் விரிவாக்கவும் ஏனைய வளர்ந்து வரும் நாடுகளின் கலை வளர்ச்சிக்கு ஈடாக ஏழாவது திட்ட காலத்தில் இறுதியில் ஆண்டொன்றிற்கு ரூபாய் 1,000 கோடி மதிப்புள்ள மின் அணுவியல் பொருட்களை உற்பத்தி செய்யும் குறியீட்டளவை எட்டவும் முயற்சிக்கிறது. 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 35 லட்சமாக இருந்த மிகக் குறைந்த உற்பத்தி அளவை, மின் அணுவியல் நிறுவனமும் அதனது ஏனைய நிறுவனங்களும், 1984-85 ஆம் ஆண்டில், ரூபாய் 350 லட்சங்களாக உயர்த்தி, இவ்வாண்டு ரூபாய் 1,000 லட்சங்களுக்கு உற்பத்தியை உயர்த்த முனைந்துள்ளன. தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் ஏனைய மையங்கள், அதன் கூட்டு முயற்சிமையங்கள் ஆகும்.

பாரத மின் அணுவியல் நிறுவனத்தின், உதிரி உறுப்புக்களை ஒன்று சேர்த்துக் கருவிகள் உருவாக்கும் பிரிவு, சென்னை சாஸ்திரி நகரில் உள்ள தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் தகவல் தொடர்பு மற்றும் ஒப்பந்தப் பிரிவின் அருகில் நிறுவப் பட்டுள்ளது. பாரத மின் அணுவியல் நிறுவனம் தமிழ்நாட்டில் செயல்படுவது, இம்மாநிலத்தின் மின் அணுவியல் தொழில் வளர்ச்சிக்குப் பல திறப்பட்ட நன்மைகள் பயக்கும். பாரத மின் அணுவியல் நிறுவனமும் இம் மாநிலத்தில் உள்ள அதன் தொழில் பிரிவில் உற்பத்தியைத் துவக்கி விட்டது. தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் பாரத மின் அணுவியல் நிறுவனத்துடன் மிகவும் நெருங்கிச் செயல்பட்டு, அதற்குத் தேவையான எல்லா உட்தேவைகளையும் ஈந்து, அதன் தொழில் வளம் பரவுவதற்கு உதவியளிக்கிறது.

கடந்த 10 மாதங்களில் மாநில அரசு, புதிய 18 கூட்டு முயற்சிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவை ஏற்கனவேயே மதுரையில் கூட்டு முயற்சியில் இயங்கி வரும் மின் அணுவியல் தடைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் ருக்மணி மின் அணுவியல் தொழிற்சாலையைத் தவிர்த்ததாகும். மேற்கூறப்பட்ட ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட 18 கூட்டு முயற்சிகளில் 5 கூட்டுமுயற்சிகள் ஏற்கனவேயே வாணிபத்தினைத் துவக்கி உள்ளன. இவைகளில் நவீன பல்திறன் பொறிகளுக்குத் தேவையான மென்மையான கருவிகளை ஏற்றுமதி செய்யும் சென்னையில் உள்ள அட்வென்ட் பலதிறன் பொறி சேவை நிறுவனம், ஒன்றாகும். கருப்பு, வெள்ளை, மற்றும் வண்ணப் படங்களைக் காட்டும் தொலைக் காட்சிப் பெட்டிகளை உயர் ரகத்தில் உற்பத்தி செய்யும் மையம் மற்றொன்றாகும். ஒளியை ராகம் பதிய வைக்கவும் அவைகளை முறையாகக் கேட்



# பூம்புகார்.... சித்திரை முழு நிலவு விழா!

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பூம்புகாரில் சித்திரை முழுநிலவு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது (4-5-85).

தமிழ்நாடு அரசு செய்தி—மக்கள் தொடர்புத் துறை சார்பில், பூம்புகார் கொற்றப் பந்தரில் நடைபெற்ற இவ்விழாவிற்குத் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. இரா. இராமசாமி இ.ஆ.ப. தலைமையேற்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு தா. வீராசாமி, தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். தமிழ்நாடு சுற்றுலா வாரியத் தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம் எம். எல். ஏ., தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். விஜயபாலன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

**கவியரங்கம் :**

தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவின் முதல் நிகழ்ச்சியாக 'இளங்கோவின் பார்வையில் இயற்கைக்



காட்சிகள்' எனும் தலைப்பில் பாவலரேறு ச. பாலசுந்தரனார் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

கவிஞர் பெருமக்கள் - இர. கங்கைமணிமாறன் (ஞாயிறு), தங்க அன்புவல்லி (திங்கள்), ம.வே. பசுபதி (மழை), ஞானச்செல்வன் (தென்றல்), த. தியாகராசன் (முகில்) ஆகியோர் கவி பாடினர்.

கவியரங்கின் முடிவில், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திரு வி. பழனிக் குமார் நன்றி கூறினார்.



**கருத்தரங்கம் :**

அதன்பின், சித்திரை முழு நிலவு விழாக் கருத்தரங்கம் தொடங்கியது.

தஞ்சை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு) திரு. இரெ. மகாலிங்கம் வரவேற்புரையாற்றினார்.

தலைமையுரையாற்றிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. இரா. இராமசாமி இ.ஆ.ப. அவர்கள், ''இந்தஅரசு தமிழ் மீது கொண்டுள்ள பற்றுக்குச் சிறந்த உதாரணமே இந்த விழா'' என்று குறிப்பிட்டார்.

பூம்புகார் கலைமன்றச் செயலாளர் திரு. என். தியாகராசன், மேலையூர் பத்தினிக்கோட்டக் காப்பாளர் திரு. ஆர். இராசசேகரன் ஆகியோர் சொற்பொழி வாற்றிய பின்னர் - திரு என். விஜயபாலன் எம்.எல்.ஏ. பேசியதாவது:

''அண்மைக் காலத்தில் பூம்புகாரின் வளர்ச்சிப் பணிகளுக்காகத் தமிழக அரசு சுமார் இரண்டு கோடி ரூபாய் வரை செலவிட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் திரு. ஆர்.எம்.வீ. அவர்களின் பெருமுயற்சி காரணமாக ஏழு இலட்சம் ரூபாய் செலவில் இப்பகுதிக்கு நல்ல குடிதண்ணீர் வசதி செய்து தரப்பட்டது. ஒரு காலத்தில் புகழ் பெற்ற துறைமுகமாக இருந்த இப்பகுதியை, இப்போது வர்த்தகத் துறைமுகமாக ஆக்க இயலாவிட்டாலும் மீன்பிடித் துறைமுகமாகவாவது ஆக்குவது பற்றி அரசு பரிசீலித்து வருவதாக அறிகிறேன். இதற்காகவெல்லாம் தொகுதி மக்கள் சார்பில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

இதைத் தொடர்ந்து பேசுகையில் தமிழ்நாடு சுற்றுலாவாரியத் தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம் எம். எல். ஏ., குறிப்பிட்டதாவது:

''யானை வாங்குகிறவர்கள் அங்குசம் வாங்காவிட்டால் பயனில்லை. அதைப்போல முன்பு இந்தப் பூம்புகாரை உருவாக்கியவர்கள் குடிநீர் போன்ற மற்ற அடிப்படை வசதிகளை உருவாக்கத் தவறிவிட்டார்கள். இந்த அரசுதான், இங்கிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தருமகுளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வந்து, மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, அதன் மூலம் இப்பகுதி மக்கள் பயன்பெற வகை செய்தது. யாரோ உருவாக்கியது தானே நமக்கென்ன என்றிருக்காமல், புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த அரசுதான் இலஞ்சி மன்றம், பாவை மன்றம் ஆகியவற்றுக்குச் சுற்றுச் சுவர் எழுப்பவும் இப்பகுதியில் இன்னும் எழில்தேக்கவும் பெருநிதி ஒதுக்கிச் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.''

மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு. தா. வீராசாமி அவர்கள் பேசியதாவது :

'சோழகுல நாட்டின் தலை சிறந்த தலைநகரமாகவும் உலகு போற்றிய துறைமுகமாகவும் காவிரியாறு கடலில் கலக்கும் கவின்மிகு இடமாகவும் திகழ்ந்ததுதான் இந்தப் பூம்புகார். வழங்கக் குறையா வளம்மிகக் கொண்டு விளங்கிய இந்நகரம், காலத்தால் - கடல் சீற்றத்தால் தொல்பொருள் ஆய்வுக்கு இலக்காகிவிட்டது. அந்நாளில் இங்கே சித்திரைத் திருவிழா 28 நாட்கள் நடந்திருக்கிறது. அதன் பின்பு கொடி இறக்கிக் கடல் நீராடுவர் என்பது வரலாறு. அந்த நாள் தான் கோவலன் வாழ்வில் திருப்புமுனை ஆயிற்று. இந்தச் சோழ மண்டலம் அன்றுபோல் இன்றும் சிறக்கவேண்டும் என்ற கருத்திலே திட்டம் பல தீட்டிச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு.''

**அடிகளார் உரை:**

சிறப்புரையாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம் வருமாறு:

''கடவுள் நம்பிக்கை பற்றிச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பல இடங்களிலே வலியுறுத்தியிருந்தாலும் - துவக்கத்தில் இயற்கையை வாழ்த்தித்தான் அவர் சிலம்பைத் தொடங்கினார். இயற்கையைப் போற்றுவதும், நுகர்வதும்,வணங்குவதும் கூட தமிழர் வாழ்வே என்பதால் தான் மாமழையை - ஞாயிற்றை திங்களைப் போற்றிப் பாடினார்



அவர். பழந்தமிழ் நாடு அயல் பகையால் அழிந்ததாக வரலாறில்லை. கடல் கோள்களே அப்போதெல்லாம் பெரிதும் பகையாயிருந்தன. பூம்புகார், தொண்டி, மதுரை, குமரிக் கண்டமெல்லாம் கடல்கோள் களாலேயே அழிந்தன. அண்மையில் தனுஷ்கோடியையும் கடல் சாப்பிட்டிருக்கிறது. இதையெல்லாம் நன்குணர்ந்து, எதிர் காலத்தில் இந்த நினைவுச் சின்னங்களெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு பூம்புகார் கடற்கரையில் தடுப்புச் சுவர் எழுப்ப முன் வந்துள்ள தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.''

**நாவலர் நிறைவுரை:**

சித்திரை முழுநிலவு விழா நிறைவுப் பேருரை ஆற்றுகையில் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''இது இளங்கோ அடிகள் விழா என்பதால் இங்கே குன்றக்குடி அடிகளை அழைத்திருக்கிறோம். அவர் பேசுகையில் இந்த விழா அரசு நடத்தும் விழாவாக மட்டுமே இல்லாமல் இப்பகுதியிலுள்ள மக்களெல்லாம் மகிழ்ந்து கொண்டாடும் விழாவாக மாறவேண்டும் என்றார். அதை நான் வரவேற்கிறேன்.

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே வீரம் செறிந்திருந்த-புகழ் வளம், செல்வம், சிறப்பெல்லாம் தேங்கியிருந்த பூம்புகார் பற்றி-தமிழகம் பற்றி நாம் எண்ணிப்பார்த்தாலே போதும்; அப்படி விழா எடுக்கும் எண்ணம் நம்மெல்லோருக்கும் வந்து விடும். 800 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் இலக்கியமே இல்லை. முந்நூறு, நானூறாண்டுக் காலப் பழமைதான் அந்த மொழிக்கு. 12 ஆம் நூற்றாண்டிலேதான் ஆங்கிலத்தில் முதல் இலக்கியமாக ஷாபர் இலக்கியம் தோன்றியது. அவர்கள் பெரிதாக அந்தப் பழமையைக் கொண்டாடுகிறார்கள். தொல்புகழ் படைத்த நாம் கொண்டாடக் கூடாதா? கடந்த காலத்தைக் கருத வேண்டும்; எதிர்காலத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். 'நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்றுள்ள சொத்துக்கள் கொஞ்ச நஞ்சமல்ல; மறந்துபோன-மறைந்துபோன பழந்தமிழகச் செய்திகளையெல்லாம் நாம் வெளிக் கொணர வேண்டும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே குறிப்பிட்டிருக்கிறார். அதைச் செயல்படுத்த நாம் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

''இந்தக் காவிரிப்பூம் பட்டினத்தில் ஐந்து பெரும் புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் வரலாறு, அவர்கள் எழுதிய நூற்கள், பெற்ற புகழ் ஆகியவை பற்றிய கல்வெட்டு-வரலாற்றுத் தூண் இங்கே நிறுவப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''காவிரிப்பூம்பட்டினத்தின் தொன்மைபற்றி மைய அரசின் ஆய்வாளரும் கோவாவிலிருந்து வந்த ஆய்வாளர்களும் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். விரைவில் அது குறித்த அறிக்கை கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்''.

-இவ்வாறு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

**கலை நிகழ்ச்சிகள் :**

கருத்தரங்கம் முடிந்த பின் பூம்புகார் கொற்றப்பந்தரில் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின.

தையல்நாயகி நர்சரிப் பள்ளி மாணவ மாணவிகள், தருமபுரம் ஞானாம்பிகை கல்லூரியின் மாணவிகள், பூம்புகார் பள்ளி மாணாக்கர்கள் பங்கேற்ற நடனங்கள்-நாடகங்கள் நடைபெற்றன.

லதா மாலினி குழுவினரின் சிலப்பதிகார நாட்டிய நாடகம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த திருச்சி ஜெய்கிஷன் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி ஆகியவை தொடர்ந்து நிகழ்த்தப் பெற்றன.

முதல்நாள் மாலை 5 மணியளவில் தொடங்கிய சித்திரை முழுநிலவு விழா, மறுநாள் அதிகாலை 4 மணியளவில் திரையிடப்பட்ட மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடித்த ''பல்லாண்டு வாழ்க'' திரைப்படக் காட்சியோடு நிறைவுற்றது.

விழா முடிவில் - பூம்புகார் வரவேற்பு அலுவலர் திரு ஆர். தர்மராஜ் நன்றி கூறினார்.

—சோழராஜன்

கும்படிச் செய்யவும் கூடிய கருவிகளையும் இம் மையம் உற்பத்தி செய்கிறது. இவைகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சியர்ஸ்-எல்காட் என்ற உற்பத்திப் பெயருடன் வெளிச் சந்தையில் விற்கப்படுகின்றன.

கோடி - எல்காட் என்ற பெயருடன் இந்தியாவின் தனது இருப்பிடத்தை வைத்துக்கொள்ளாது உள்ள அயல்நாட்டில் உள்ள இந்தியருடன் தொடர்பு கொண்டு உயிரியல் மருத்துவ சாதனங்களை உற்பத்தி செய்யும் கூட்டு முயற்சி ஒன்றும் நிறுவப்பட்டு உள்ளது. இம் மையம் நுண்ணிய ஒலி வாயிலாக நோய்களைக் குறிப்பிட்டுக் காட்டும் சாதனங்களை உற்பத்தி செய்யும். இதற்கென ஆரம்ப கட்ட ஒப்பந்தங்கள் ஓர் அமெரிக்க ஐக்கிய நாட்டு நிறுவனத்துடன் அண்மையில் முடிவாக்கப்பட்டன. இந்த மையம் ஊடுருவிச் செல்லும் எக்ஸ்ரே கதிர்களைக் கொண்ட மருத்துவக் கருவிகள், மானிட உயிர் காக்கும் காற்றோட்ட நோயான நீர் இருக்கைகள், மற்றும் நோயாளிகளை முறையாகக் கவனித்துக் கொள்ள உதவும் மருத்துவக் கருவிகள் ஆகியவைகளையும் உற்பத்தி செய்யும்.

லாம்டா - எல்காட் என்னும் கூட்டு முயற்சி நிறுவனம் நுண்ணிய - முறைப்படுத்தப்பட்ட தொழிற்கருவிகளையும் மின் அணுக் கட்டுப்பாட்டு முறைகள் சம்பந்தப்பட்ட கருவிகளையும் உற்பத்தி செய்கின்றன. இந்த மையம் ஏற்கனவேயே மிகவும் சீரிய தகவல்கள் சேகரிப்புக் கருவிகளின் வடிவமைப்புகளை வடித்துள்ளன. தமிழ்நாடு மின் அணுவியல் சக்திக் கட்டுப்பாட்டு நிறுவனம் என்ற பெயரில் இயங்கும் மற்றொரு நிறுவன்ம் மின்சார சக்தியைக் கட்டுப்படுத்தும் சாதனத்தையும், கட்டுப்பாடு முறைகளையும், மற்றும் மின் சக்தியைச்செலுத்தவும் அதனை நிறுத்தவும் வழிவகை செய்யும் கருவிகளையும் உற்பத்தி செய்து, தனது வாணிபத்தைத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் இவ்வாண்டு கூட்டு முயற்சியில் துவக்க இருக்கும் கருத்துருக்களும் விரைவில் தீர்மானிக்கப்படும். இவைகளில் ஜப்பான் நாட்டுத் தொழில்நுட்பத் திறனுடன், கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்யும் மையமும் இதில் அடங்கும்.



மின் அணுத் தொழில் நுட்பவியலில் பயன் பயக்கும் ஏனைய துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், மிக் நவீன மின் அணுவியல் தொழில் நுட்பத் திறனைப் பயனுள்ள வகையில் உபயோகிக்கவும,சில குறிப்பிட்ட துறையில் குறிப்பாக உதிரி உறுப்புகள், தொழில் அடிப்படையிலான மிள் அணுவியல் நுகர் பொருள் உற்பத்தி செய்வதற்கான மின் அணுவியல் அறிவுத் திறனைப் பயன்படுத்தவும் பல் திறன் பொறி உற்பத்தி செய்ததற்காகவும் மின் அணுவியல் மென் உறுப்புகள் மற்றும் தகவல் தொடர்புக் கருவிகள் உற்பத்தி சம்பந்தப்பட்டவைகளுக்காகவும் பல திட்டங்கள் உருவாக்க இவ்வாண்டில் தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் முயற்சிக்கும்.

தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் தலையாய நோக்கம், இத்துறையில் உள்ள தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு ஒரு வலிமை மிக்க தொழிற்சமுதாயம் அமைப்பதுவே ஆகும். தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் எல்லாக் கூட்டு முயற்சிகளுமே, பல் வகைப்பட்ட மின் அணுவியல் வல்லுநர்களை ஈடுபடுத்தி, புதுவகையான தொழில் முனைவர்களை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மின் அணுவயல் நிறுவனத்தின் அணுகுமுறையானது இத்துறையில் ஒரு புதிய கொள்கையினை உருவாக்கித் தொழில் நுட்ப அறிவு, பயனுள்ள வகையில் வளரச் செய்து, தொழில் திறனையும் வளர்ச்சியுறச் செய்வதும், தொழில் நுட்ப நிறுவனங்களை உருவாக்கச் செய்வதும் ஆகும். தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் தகுந்த தொழில் நுட்ப அறிவும், வல்லமையும் உடைய தொழில் முனைவர்களின் நுட்ப அறிவினைப் பயன்படுத்தி அவர்கள் தொடங்கும் தொழில் முயற்சியில் ரூ. 5 இலட்சம்வரை முதலீடு செய்து, கூட்டு முயற்சி துவக்கும் ஒரு புதிய திட்டத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தத் துறையானது ஏற்கனவே இருந்து வரும் அரசு மூலதனத்தை மாத்திரம் தனியார் துறையில் முதலீடு செய்வதிலிருந்து, தகுந்த தொழில்நுட்ப அறிவு படைத்த தொழில் முனைவர்களுக்கு அவர்களது தொழில் நுட்ப அறிவைப் பயன்படுத்தி தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் அவர்களே தொழில் துவக்கி,முன்னேறுவதன் மூலம் மாறுபட்டுள்ளது. இவ்வாறான முயற்சிகள் முறைப்படுத்தும் தொழில் நுட்பவியலைப் பொறுத்த வரையில் மிகவும் அதிகமாக ஊக்குவிக்கப்படுகின்றது. ஏனைய பிற மின் அணுவியல் தொழில் முன்னேற்றத்திற்காகத் தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனத்தின் சேவைகள் பின்வருமாறு:—

இத்துறையில் வாய்ப்பும் வசதியும் உள்ள துறைகளைக் கண்டறிவதும், பொதுச் சந்தையில் மிகவும் சாதகமாக உள்ளவைகளைத் தெரிந்து கொள்வதும்.

செயலாக்கமுள்ள வற்றை ஆய்ந்து அவற்றிற்குத் தயார் படுத்திக் கொள்ளல்;

முக்கியமான செயற் குறிப்புக்களுக்கு அரசு ஒப்புதல் பெறுவதும் குறிப்பிட்ட சில திட்டங்களைப் பதிவு செய்தல்;

கூட்டு முயற்சியாளர்களைத் தேர்ந்து எடுத்து, திட்டங்களை நிறைவேற்றுதல்;



விரிவான திட்ட அறிக்கைகளைத் தயார் செய்வதும் அவைகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெறுதலும்:

அயல் நாட்டில் உள்ள இந்தியர்களை இந்நாட்டுத் திட்டங்களில் அவர்களது நிதியினையும் தொழில் நுட்ப அறிவினையும் முதலீடு செய்வதற்கான வழி அமைத்தல்:

தொழில்நுட்ப அறிவு இருக்கும் ஆதாரங்களைக் கண்டறிந்து தொழில்நுட்ப அறிவினைப் பரிமாற்றம் செய்து கொள்ளல்.

பொதுச் சந்தையில் இந்நாட்டுப் பொருட்களுக்கு விற்பனை வசதி அமைத்துக் கொடுத்தல்.

தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநருடன் இணைந்து இத்துறையில் தேவையான தொழில் வளத்தை தொழில் முனைவர்களுக்கு வழங்கி தொழில் வளத்தை மேலும் பெருக்குதல்.

தமிழ்நாடு மின் அணுவியல் துறையில் அதிக ஆக்கப்பூர்வமான ஆர்வம் காட்டுவதற்குக் காரணம், இத்துறையில் முதலீடு செய்வதால் தொழில்நுட்ப அறிவை உபயோகித்துக்கொள்ள வாய்ப்பு உள்ளமையாலும், மிக நவீன தொழில்நுட்ப அறிவை இத்துறையில் தொழில்நுட்பத் திட்டங்களில் உபயோகித்துத் திறனாய்வினையும் நாட்டின் வளர்ச்சியையும் பெருமளவில் பயனுள்ள வகையில் ஈடுபடுத்த விழைவதாலும் தான். ஏனைய துறைகளில் இத்தகைய பயனளிக்கும் வாய்ப்பு இன்மையும் இதற்குக் காரணமாகும்.

**முதலீடும் வேலைவாய்ப்பு வசதிகளும் :—**

ஏற்கனவே உற்பத்தி தொடங்கியுள்ள மற்றும் முறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் ரூபாய் 37 கோடி மூலதனத்தில் வருடத்திற்கு ரூ. 140 கோடி பெறுமானமுள்ள பொருட்களை உற்பத்தி செய்வதுடன் சுமார் 3,000 பேர்களுக்கு நேரிடையான வேலைவாய்ப்பினையும் அளிக்கும். தமிழ்நாடு மின் அணுவயல் நிறுவனம் மேலும் பல கூட்டு முயற்சித் திட்டங்களை மின் அணுத் துறையில் கண்டுபிடிக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு மின் அணு நிறுவனம் புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கும், தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் உதவிகளைத தரவல்ல மிக சக்தி வாய்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டுள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எல்காட்டின் கூட்டு முயற்சித் திட்டங்கள் மற்றும் 100 சதவிகிதம் பொதுத்துறை சம்பந்தப்பட்ட திட்டங்கள் ஆகிய வகையில் ரூ. 60 கோடியாக இருக்கும். இத்தகைய தொழில் முதலீடு ஆண்டொன்றிற்கு ரூ. 250 கோடி மதிப்புள்ள மின் அணுக் கருவிகளை உற்பத்தி செய்யும். மீதமுள்ள ரூ. 750 கோடி மதிப்புள்ள பொருள் உற்பத்தி தனியார் முதலீட்டின் மூலம் கிடைக்கும்.

## ரஷ்ய மொழியில் மகாபாரதம்



மாஸ்கோவில் உள்ள பதிப்பகம் ஒன்று ரஷ்ய மொழியில் மகாபாரதத்தை நூலாக வெளியிட்டுள்ளது. வெளியிடப்பட்ட லட்சம் பிரதிகளும் வேகமாக விற்றுத் தீர்ந்துவிட்டன. இதிலே ஒரு சிறப்பு உண்டு. இது இரண்டாம் பதிப்பு என்பதுதான் அந்தச் சிறப்பு. ஏற்கெனவே 1964ல் முதற் பதிப்பு வெளியிடப்பட்டபோது, அப்போதும் லட்சம் பிரதிகள் வெகுவேகமாக விற்பனையாகியிருக்கின்றன.

## மலைகள் நகர்கின்றன

அசையாத பொருள்களுக்கு உதாரணம் சொல்வதென்றால் மலையைத்தான் குறிப்பிடுவார்கள். அதனாலேயே மலைக்கு அசலம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது இப்போது இந்த நவீன காலத்தில் அந்தக் கருத்தும் மாற்றத்திற்குரியதாகிறது.

ரஷ்ய நாட்டில் பாமீர்ஸ் பகுதியில் உள்ள இரண்டு மலைகள் நகர்ந்து சென்று ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

கடந்த 30 ஆண்டுகளில் அவை அரை மீட்டர் தொலைவு நகர்ந்து சென்று நெருங்கியுள்ளன. இந்த உண்மையை சோவியத் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

## இதயத்துடிப்பை அறிய புதிய கருவி

பல்கேரிய நாட்டின் மருத்துவ விஞ்ஞான ஆய்வுக் கழகம் மனிதனின் இருதயத் துடிப்பை அளவிடுவதற்குதவும் நவீன கருவி ஒன்றை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் ஒரு மனிதனின் இருதயத்தை 40 விநாடிகளில் பரிசோதித்துவிடலாம்.

## வலி போக்க உதவும் மூலிகை உடைகள்

சீன நாட்டு நிறுவனம் ஒன்று, புதிய வகையில் சட்டை-பேண்ட் ஆகியவற்றைத் தயாரிக்கின்றது. சட்டையின் தோள்பட்டையிலும் பேண்ட்டின் முழங்கால் பகுதியிலும் சீனநாட்டு மூலிகைகள் உள்ளே வைத்துத் தைக்கப்படுகின்றன. அந்த ஆடைகளை அணிந்து கொண்டால் முதுகு வலி, வயிற்றுவலி ஆகியவை குணமாகிறதாம். ஒரு சட்டை குறைந்தது 2 ஆண்டுகளுக்குப் பயன்படுமாம்.



# திரு நாமதேவன் மறைவு

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் துணை இயக்குநராகப் பணிபுரிந்து வந்த திரு. வி. நாமதேவன் பி.ஏ. அவர்கள், மே மாதம் 8 ஆம் நாளன்று மறைவெய்தினார்.

கடலூரில் நடைபெறவிருந்த மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாநாட்டிலே கலந்து கொள்வதற்காக முந்திய நாள் இரவே கடலூருக்குச் சென்ற திரு. நாமதேவன் அவர்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட உடல் நலிவின் காரணமாகக் கடலூர் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார். மருத்துவர்கள் தீவிர சிகிச்சையளித்தும் பயனின்றி காலை 6 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது. அவருக்கு மனைவியும் இரு பெண் மக்களும் உள்ளனர்.

1964-ஆம் ஆண்டு செய்தித் துறையில் சுற்றுலா அலுவலராகப் பணியில் சேர்ந்த அவர், பின்னர் துணை இயக்குநராகவும், பரிசுச் சீட்டுத் துறையின் இயக்குநராகவும், குடும்ப நலத்துறையின் துணை இயக்குநராகவும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் தலைமை மக்கள் தொடர்பு அலுவலராகவும் பணியாற்றினார். மறுபடியும் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் துணை இயக்குநர் (பொது மக்கள் தொடர்பு) பொறுப்பை வகித்து வந்தார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு



தோற்றம் : 20. 1. 1938

மறைவு : 8. 5. 1985

மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன், சைதாப்பேட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சைதை துரைசாமி, செய்தி, சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ.பி. முத்துசாமி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையினர், பிற அலுவலர்கள், மறைந்த துணை இயக்குநர் அவர்களின் இல்லம் சென்று அண்ணார் உடலில் மலர் வளையம், மாலைகள் வைத்து இறுதி மரியாதை செலுத்தினர் மே 9-ஆம் நாளன்று நாமதேவன் அவர்கள் உடல் எரியூட்டப்பட்டது.

சுறுசுறுப்பும், பிரச்னைகளில் தெளிவான அணுகு முறையும் கொண்ட திரு நாமதேவன் பத்திரிகை அனுபவம் பெற்றவர். பத்திரிகை ஆசிரியராக இருந்தவர். அவருடைய மறைவுக்குத் 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

—ஆசிரியர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.





பாவேந்தர் பாரதிதாசன் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை காமராஜர் சாலையில் உள்ள பாவேந்தர் சிலைக்கு 29-4-85 அன்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சர். பிட்டி, தியாகராயரின் 134வது பிறந்தநாள் விழாவை யொட்டி, சென்னை மாநகராட்சி அலுவலகத்திலுள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு 27.4.85 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.








இந்தியக் கடற்படையின் கிழக்குப் பகுதி அலுவலர் வைஸ் அட்மிரல் திரு. நட்கர்ணி 7.5.'85 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை இராமாவரம் தோட்டத்தில் சந்தித்தார்.

இங்கிலாந்தில் இந்தியத் தூதுவராகப் பதவியேற்க இருக்கும் திரு பி.சி. அலெக்ஸாண்டர் 19.5.'85 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.



# தமிழக முதல்வர் படைக்கும் சாதனைச் சரிதம்



ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்திற்கான திட்ட அளவு குறித்தும் 1985-86 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கீடு குறித்தும் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக மாண்புமிகு முதல்வவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 13.5.85 அன்று மாலை டெல்லிக்குப் புறப்பட்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன், தலைமைச் செயலர் திரு டி.வி.அந்தோணி இ.ஆ.ப., நிதித்துறைச் செயலர் திரு சி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சிச் செயலர் திரு சுகவனேஸ்வர் இ.ஆ.ப, ஆகியோர் உடன் சென்றனர்.

7வது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு ரூ. 6 ஆயிரம் கோடிக்கு வகுக்கப்படடிருந்தது. ஏற்கெனவே நடந்த பேச்சு வார்த்தையின் போது ரூ.4 ஆயிரத்து 800 கோடி அளவுக்குத் தருவதாக மத்திய அரசின் சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

14.5.85 காலை 10.40 மணியளவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சந்தித்துப் பேசினார்.

7வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்குவது சம்பந்தமாக மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் உரையாடினார். இருவரும் இருபது நிமிட நேரம் பேசினர். தமிழகத்தின் கோரிக்கையைப் பரிவுடன் ஆராய்வதாகப் பிரதமர் கூறினார்.

15.5.85 அன்று மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு மன்மோகன்சிங் அவர்களைச் சந்தித்துச் சுமார் 45 நிமிட நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பிற்படுத்தப்பட்ட மாநிலங்களுக்கு என்று மைய அரசு அளிக்கும் தனி நிதி உதவி தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று தமிழக அரசின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் எடுத்துரைத்தார். அவரது கோரிக்கையை திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு மன்மோகன் சிங் ஏற்றுக்கொண்டார்.

தமிழகத்திற்குக் திட்ட ஒதுக்கீட்டிற்கான நிதியைத் தவிர மேற்கொண்டு ரூ.500 கோடிகூடுதலாக நிதி அளிப்பதற்கு திரு மன்மோகன் சிங் ஒப்புக்கொண்டார். அதாவது 7வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.5750 கோடி ஒதுக்கீடு செய்வதற்கு ஒப்புக்கொண்டார்.

6வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.3150 கோடிதான் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகை முன்பு ஒதுக்கப்பட்ட தொகையைவிட 80 சதவீதம் அதிகம் என்பது சாதனைக்குரிய நிகழ்ச்சி.

மலைவாழ் பகுதி வளர்ச்சிக்காக ரூ.54 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டுத் திட்டத்திற்கு மட்டும் ரூ.960 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதி மக்கள் வளர்ச்சிக்காக (ஆண்டுத் திட்டத்திற்கு) ரூ 10 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திட்டங்களுக்கு மத்திய உதவி ரூ.217 கோடியிலிருந்து 392 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

6வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூ.3150 கோடி நிதி ஒதுக்கிய போதிலும், தமிழகம் செலவிட்ட தொகை ரூ.3600 கோடியாகும்.

கூடுதலாக ரூ.400 கோடிசெலவிட்டு, திட்டங்களை நிறைவேற்றிய தமிழகத்தைத் திட்டக்குழு பாராட்டியுள்ளது.

1984-85ல் இருபது அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிப்பதற்காக மத்திய திட்டக் குழு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

நிதி நிர்வாகம் தமிழகத்தில் சிறப்பாக இருப்பதற்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் உணவு உற்பத்தி, வேலை வாய்ப்புப் பெருக்கம், உற்பத்தி அதிகரிப்பு ஆகியவற்றிற்கு முக்கியம் தரப்பட உள்ளது.

மொத்தத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் டெல்லிப் பயணம் வெற்றிப் பயணமாக அமைந்துள்ளது. தமிழகத்தின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் சாதனைக்குரிய பயணமாக அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது!

**முதல் அட்டையில் :**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடன் மைய திட்டக் குழுத்துணைத் தலைவர் திரு மன்மோகன் சிங்.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - வைகாசி 19
மலர் : 15 இதழ் : 23
1-6-1985

# படமும் செய்தியும்



ஸ்ரீலங்கா முன்னாள் இந்தியத்தூதுவர் திரு எஸ். ஜே. எஸ். சத்வால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம் ஜி ஆர். அவர்களை 21.5.85 அன்று அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத்தின் சார்பில் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களுக்குப் பாராட்டுவிழா 13.5.85 அன்று சென்னையில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திரு குமார் நினைவுப் பரிசினை மாண்புமிகு அமைச்சருக்கு வழங்கினார்.





சாத்தூரில் ரூ. 7.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா பவள விழாப் பேருந்து நிலையக் கட்டடத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள், 19.5.85ல் திறந்து வைத்தார். மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை ஏற்றார்.

குடும்ப நலத்திட்டத்திற்குப் பயன்படுவதற்காக வாங்கியுள்ள லேபராஸ்கோப் கருவிகளை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள், குடும்பநலத் துறை இயக்குநர் திருமதி ஓ. பி. சோசம்மா இ.ஆ.ப. அவர்களிடம் 21.5.85 அன்று வழங்கினார்.



தொரப்பாக்கத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ள குடியிருப்பை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் தலைமையில் திரு எஸ் ராகவானந்தம் எம். எல். சி. 6.5.85 அன்று திறந்து வைத்தார்.





# அரசு ஊழியர்களை அகமகிழ வைக்கும் ஊதிய உயர்வு

தமிழக அரசு ஊழியர்களுக்கான 4-வது ஊதியக்குழு, முன்னாள் நீதிபதி என். எஸ். ராமசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்டது. மேற்படிகுழு ஆய்வு செய்து, 10.4.85 அன்று தனது அறிக்கையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தது.

அந்த அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு பரிந்துரைகள் பலவற்றை 26.5.85 அன்று அறிவித்துள்ளது.

அவற்றுள் சில:

அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 450 ஆகவும் அதிகபட்ச சம்பளம் ரூ. 4,050 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சப்பயன் ரூ. 30 ஆகவும் அதிக பட்சப் பயன் ரூ. 150 ஆகவும் இருக்கும்.

இந்த ஊதிய உயர்வு 1.10.1984 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 90 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

புதிய வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப் படி விகிதங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கிராமப்புற ஈட்டுப்படி ரூ. 20ஆக உயர்த்தப் படுகிறது.

ஓய்வூதியம் 7 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை உயர்த்தப்படுகின்றது. குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ. 235ஆக நிர்ணயிக்கப்படுகிறது.

இந்திய மருத்துவத் துறையில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்களின் ஊதிய விகிதங்கள் ஆங்கில மருத்துவத்துறைப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களுக்கு இணையாக உயர்த்தப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கு மேலும் பயன் கிடைக்கும் வகையில் சில பரிந்துரைகளை அமைச்சரவை திருத்தி அமைத்துள்ளது. அவற்றில் சில:

அகவிலைப்படியில் குறைந்த பட்சத் தொகை ரூ. 8 ஆக உயர்ந்தப்புடுகிறது.

தலைமைச் செயலகப் பிரிவு அலுவலருக்கு புதிதாகச் சிறப்புப்படி ரூ. 100 வழங்கப்படுகிறது.

**நான்காவது ஊதியக்குழுவின் தலைவர், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் 10.4.85 அன்று அறிக்கையை வழங்கினார்.**



# அடியவர் பெருமையை உயர்த்திய சேக்கிழார்

**மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு இராம. வீரப்பன்**



ஏறத்தாழ எண்ணூறு அல்லது தொளளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் - தமிழகத்திலே புகழ் பெற்ற சோழ நாட்டில் முதலமைச்சராகப் பணியாற்றி, காலத்தின் கட்டாயத்தாலே சமுதாயத்திற்குத் தனது வாழ்வை ஒப்படைக்க வேண்டுமென்று முடிவெடுத்து - தமிழகத்தின் எதிர்காலச் சந்ததிகளுக்கு மிகச்சிறந்த தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் வரலாற்று இலக்கியத்தை வடித்துத் தந்த மாபெரும் கவிஞரும், தமிழ்ச் சான்றோரும், என்றைக்கும் நினைத்து வணங்குவதற்கு வழிவகுத்துத் தந்த நெறியாளரும் மிகச் சிறந்த புலவருமாக விளங்கிய - தெய்வச் சேக்கிழார் என்று சிறப்போடு அழைக்கப்படுகிற சேக்கிழார் பெருமான் பிறந்த திருமண் இது.

சேக்கிழார் பெருமான் இந்த மண்ணிலேயிருந்து தன்னை மறைத்துக் கொண்ட நாளான வருகிற 25 ஆம் நாளன்று, அறநிலையத்துறை சார்பிலே மிகச் சிறப்பாக இரண்டு நாள் விழா சென்னையில் எடுக்கப்படவிருக்கிறது. இந்த 18 ஆம் தேதி, சேக்கிழார் பிறந்து தவழ்ந்த இந்தத்திருத்தலத்தில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றது சேக்கிழார் விழா.

தஞ்சை மண்டலத்திலே, குடந்தைக்கு அருகிலுள்ள மிகச் சிறந்த திருநாகேஸ்வரம் ஆலயத்தில்தான் முதலமைச்சராக இருந்த அவர் திருப்பணி செய்ததோடு தன்னுடைய அலுவலகத்தையே அந்த ஆலயத்திலே வைத்து நடத்திக் கொண்டிருந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஈஸ்வரனை, அவர் தனது வாழ்வைச் சமுதாயத்திற்கு ஒப்படைத்ததற்குப் பிறகு இந்தக் குன்றத்தூரிலும் அவருக்கோர் ஆலயம் எழுப்ப வேண்டும், திருநாகேஸ்வரத்தை இங்கே உருவாக்க வேண்டும் என்று அவர் அந்த ஆலயத்தை உருவாக்கி, அந்த ஆலயத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்ட ஈசனை வணங்குவதற்காக - முதலமைச்சராக அல்ல; தமிழகத்தினுடைய சமுதாயத் தொண்டராக வந்த நிகழ்ச்சிதான் - இங்கே இப்பொழுது மாலையிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சி.

எந்தச் சேக்கிழார் இந்தத் திருநாகேஸ்வரம் ஆலயத்தை எழுப்பினாரோ அதை வணங்குவதற்காகச் செல்லும் விழாதான் நான்காவது நாள் நடைபெறுகின்ற விழா. ஆனால் அவர் எழுப்பிய ஆலயத்திற்குள்ளே சேக்கிழார் நுழையவில்லை. கடந்த 62 ஆண்டுகளாக அவர் நுழைவதில்லை!

பெரிய புராணம் என்று வழங்கப்படுகின்ற - தமிழ்ப் பெருமையை, பண்பை, நிலை நாட்டிக் கொண்டிருக்கின்ற வரலாற்று நூலை-காப்பியம் என்று சிலர் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் காப்பியத்திற்கான இலக்கண முறையையே மாற்றிக் காட்டி-பெரியபுராணத்தை உருவாக்கிக் காட்டியவனே அந்தக் காப்பிய ஆசிரியன்.

அந்த அருந்தமிழ்க் காப்பியத்தை உருவாக்க, தில்லையிலே தான் இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். இறைவன் எடுத்துக்கொடுத்த அடி, தமிழ்நாட்டுக்கு மாத்திரமல்ல; தமிழ்மொழியைப் பேசுகிறவர்களுக்கு மாத்திரம் அல்ல; எல்லார்க்கும், எந்நாட்டவருக்கும் ஏற்ப 'உலகெல்லாம் என்றுதான் அடியெடுத்துக் கொடுத்தான்!

இதுதான் தமிழ்ச் சமுதாயத்திற்கு இருக்கிற மிகப் பெரிய சிறப்பு!

'யாதும் ஊரே யாவரும்கேளிர்' என்ற உயரிய தத்துவத்தை வழங்கியவனும் தமிழ்ச் சான்றோன் தான்!

உலகத்தை முன்னிறுத்தித் தத்துவத்தை உருவாக்கியவன், வாழ்க்கை நெறியைக் கண்டவன் தமிழன்தான்.

முந்தியவன் கம்பனா, சேக்கிழாரா என்று வரலாற்று ஆசிரியர்கள் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை.

சைவப் பெரியார்களோ - 'சேக்கிழார் பெரியபுராணத்திற்கு அந்த முதலடியை சைவத்திற்கு அடிப்படையாக எடுத்துக் கொண்டார்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு கவிஞர் பெருமக்களும் - மேல்தோற்றத்திலே பாாத்தால் சைவமாகவும் வைணவமாகவும் தெரியுமே தவிர, அவர்கள் இந்தச் தமிழ்ச் சமுதாயத்தின் இரு கண்களாக விளங்கியவர்கள். அவ்விரு கண்களிலே எந்தக் கண் எந்தச் சமயத்தைப் பார்க்கிறது எந்தச் சமுதாயத்தைத் தழுவியது என்பது கூட அல்ல; உலகத்தைப் பாாத்தது. உலகத்தைப் பார்க்க வேண்டுமென்று அவர்கள் உணர்த்தினார்கள்.

ஏழாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை ஐநூறு ஆண்டுகள் எப்படிப்பட்ட தொண்டர்களைத் தேடிப் பிடித்திருக்கிறார் சேக்கிழார்! பெரியபுராணம் என்ற அந்தத் தொன்மை வரலாற்று நூல் ஐநூறாண்டுக்கால வரலாற்றையல்லவா நமக்குத் தருகிறது!

புராணம் என்றால் ஒரு தொன்மையான வரலாறு என்பதை மறந்து, நாம் எங்கேயோ இருந்த கோபததை இந்தப் புராணம் என்ற வார்த்தையிலே காட்டி, அதையெல்லாம் தூக்கியெறிந்து அதற்குள்ளே புதைந்து கிடந்த முத்தை, வைரத்தை, பத்தரை மாற்றுத் தங்கத்தை, இந்த நாட்டின் பண்பாட்டை, அந்தப் பண்பாட்டுக்காக உழைத்த பெருமக்களைத் தெரிந்து கொள்ள முடியாமல் செய்துவிட்டோம்.

சேக்ஷ்பியரினுடைய காலம் எவ்வளவு முந்தியது! நானூறு நானூற்றைம்பது ஆண்டுகளென்றால் -அவனுக்கு எவ்வளவு பெருமையை ஆங்கில நாட்டுக்காரன் தந்துகொண்டிருக்கிறான்! அவன் இலக்கியம் படைத்தானே தவிர, ஒரு நாட்டினுடைய வரலாற்றைப் படைக்கவில்லை.

பெரிய புராணத்தை மறந்து விட்டோம். நம்முடைய பெருமையும் அழிந்தது அல்லது தேய்ந்தது.

சமயம் என்பது சாதியை உருவாக்குகிறது என்றொரு குற்றச்சாட்டு! இல்லை - சமயம் சாதியைக் கொண்டுவரவில்லை. இறைவனுக்கு முன்னாலே எல்லோரும் சமம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று அறிஞர் அண்ணா சொன்னார். அதுவும் அறிஞர் அண்ணா சொன்னார் என்றுதான் தெரியுமே தவிர, திருமூலர் சொன்னாரென்பது பலருக்குத் தெரியாது.

இதுபற்றி ஒருமுறை குன்றக்குடி அடிகளாரே - "அதை நாங்கள் திருமுறை அளவில் தான் வைத்திருந்தோமே தவிர மக்களுக்கு எடுத்துச் சொல்ல அறிஞர் அண்ணாவால் முடிந்தது! இதற்காக நாங்கள் வெட்கப்படத்தான் வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

ஆகவே, அப்படிப்பட்ட உணர்வுகளைத் தமிழன் வளர்க்கவில்லை. அதிலும் சைவ சமயம் வளர்க்கவில்லை; தமிழ்ச் சமயம் வளர்க்கவில்லை.

'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று சொல்லுகிறார்; அடுத்த அடியிலேயே 'எந்நாட்டவர்கரும் இறைவா போற்றி! என்கிறார். இங்கே சிவன் என்று அழைக்கப்படுகிறவனே உலகம் முழுவதும் இறைவன் என்று அழைக்கப்படுகிறான்.

இதைவிட ஒரே கடவுள் தத்துவத்தைச் சொன்ன மதம் எது? சொன்ன சான்றோர்கள் யார்?

சேக்கிழார் ஐநூறாண்டுக் கால வரலாற்றைத் தேடித் தேடி, துருவித் துருவி எடுக்கிறார்.

ஆதி திராவிட சமுதாயத்திலே இருந்து ஒருவர்; சலவைத் தொழிலாளியிலேயிருந்து ஒருவர்; மீன் பிடிப்போரிலேயிருந்து ஒருவர்; அரசனிலேயிருந்து ஒருவர், அந்தணர் என்று அழைக்கப் படுகிற ஒருவர்!- என்று இந்தச் சமுதாயத்திலேயுள்ள அனைத்துப் பெருமக்களும்வருகின்றனர். அவர்கள்தொண்டர்கள். ஆகவே, இறைவன் பாதத்திலே வைத்து வணங்கப்பட வேண்டியவர்கள். இந்தத் தொண்டர்களைத் தேடி இறைவன் வருகிறான். அதுதான் பெரியபுராணம்! இறைவனைத் தேடித் தொண்டர்கள் போகவில்லை. 63 நாயன்மார்களைப் பற்றிய நூலைப் படித்தோமானால்-இறைவன்தொண்டு செய்கின்ற மனிதனைத் தேடி வருவான்; மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்றிருப்பதைக் காணலாம்.



குன்றத்தூர்
அருள்மிகு நாகேச்சுவரர்
திருக்கோயில்

இராமாயணம் ஒன்றையே பார்த்துக்கொண்டிருக்காதீர்கள். எங்கேயோ புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்றன, தமிழ் இலக்கியங்கள், பண்பாடுகள், வரலாறுகள்! இவைகளெல்லாம் சமய நூற்கள் என்ற பெயராலே குப்பைத் தொட்டியில் போடப்பட வேண்டிய நூற்கள் என்று, என்றோ, எந்தக் காரணத்தாலோ, சமுதாயத்திலே நிலவிய சூழ்நிலை காரணமாக உருவாக்கப்பட்ட கருத்துக்கள் இன்று மறைந்துவிட்டன!

சேக்கிழார் பெருமானை மக்கள் மன்றத்திலே கொண்டுவந்து நிறுத்த வேண்டும். அவர் சைவப் புலவர் என்பதனாலே மாத்திரமல்ல; சமயப்புலவர் என்பதாலே மாத்திரமல்ல; தமிழ்ச் சமுதாயத்தை உலகிலே உயர்த்திய மாபெரும் புலமை உள்ளவர் அவர்.

கவிச்சக்கரவர்த்தி என்று கம்பனை அழைக்கிறீர்கள். எனக்குக் கம்பனையும் படிக்கத் தெரியாது; பெரிய புராணத்தையும் படிக்கத் தெரியாது. அதையெல்லாம் படிக்கிற அளவுக்கு எங்களை நீங்கள் ஆளாக்காமல் விட்டுவீட்டீர்கள். எப்படியோ தெரிந்து கொண்ட ஒன்றிரண்டு கருத்துகளிலிருந்துதான் நாங்கள் தொட்டுக் கொண்டிருக்கிறோம்; தொடர்ந்துகொண்டிருக்கிறோம்.

மகாகவி, கவிச்சக்ரவர்த்தி என்று கூட நீங்கள் சொல்லவேண்டாம், ஆனால், சேக்கிழார் உருவாக்கியதைப் போல உலகில் வேறெந்த மொழியிலே இலக்கியம் இருக்கிறது? தயவுசெய்து சொல்லுங்கள்!

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் 2 ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்கிறார்கள்; சீவகசிந்தாமணியைப் பத்து அல்லது பதினோராம் நூற்றாண்டில் பிறந்தது என்கிறீர்கள். அப்படியானால் ஆயிரமாண்டுக் காலத்திலே ஐந்து காப்பியங்கள் தான் தோன்றியதா? இந்த ஐந்து காப்பியங்களிலேயும் சைவ சமயத்திற்குக் காப்பியமே கிடையாதா?

குண்டலகேசி, வளையாபதி ஆகிய இரண்டு காப்பியங்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவை? கிடைக்கவில்லை!

சைவத்திற்குள்ள ஒரு பெரிய சிறப்பே - இதனுடைய ஆசிரியர்களும் இந்த மண்ணிலேயே தோன்றினார்கள். தத்துவங்களும் இந்த மண்ணிலே தோன்றின; அதைச் சொல்லும் மொழி

யும் இந்த மண்ணிலே தோன்றிய மொழி என்பதுதான்! அன்பு கூர்ந்து எண்ணிப்பாருங்கள்.

ஐம்பெருங்கர்ப்பியம் என்றீர்களே ஏன் ஆறாவது பெருங்காப்பியமாகப் பெரிய புராணம் சேர்க்கப்படவில்லை? என்ன காரணம்? கீழ்த்தளத்திலே-அடிமட்டத்திலே இருந்த தொண்டர்களைப் பாடியதனாலா?

மகாகவி பாரதிக்கு எதனாலே பெயர்? எங்கேயோ இருந்த தலைவர்களை அவர் மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவந்தார். அதனால்தானே அவரை மக்கள் கவி என்று அறிஞர் அண்ணாவே பாராட்டினார்! அதற்குப் பிறகு தானே வருகிறார் பாவேந்தர் பாரதிதாசன்? இவர்களுக்கெல்




லாம் வழியமைத்துத் தந்தவர் பெரியபுராணத்தைப் படைத்த சேக்கிழார் அல்லவா?

ஏன் ஆறாவது காப்பியம் வர.வில்லை? ஏன் ராமாயணத்தைக் கூடச் சேர்க்கவில்லை? பன்னிரு திருமுறைகள் வந்தனவே, அதற்குப் பிறகு ஏன் திருமறைகள் தொகுக்கப்படவில்லை?

அந்த இலக்கியங்கள் இல்லையானால் தமிழ் உண்டா? தமிழ் வாழுமா?

நானூறு ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த ஆங்கிலத்தை இன்றைக்கு இருக்கிறவன் தெரிந்துகொள்ள முடியவில்லை என்கிறார்களே! ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே திருவள்ளுவர் தந்த திருக்குறளை இன்றைக்கு இருக்கிற குப்பனும் தெரிந்து கொள்ளுகிற சிறப்புப்பெற்றது தமிழ்மொழி; இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கிற மொழி.

எத்தனையோ பேர் வந்தார்கள், இங்கே மதத்தைப் பரப்ப! அவர்களும், தமிழைக் கற்றுக் கொண்டுதான் பரப்பினார்கள்.

போப் கூட எழுதியிருக்கிறாரே, பெரியபுராணத்தைப்பற்றி! அவர் எழுதியதற்குப் பிறகும் நமக்குப் புத்தி வரவில்லையே!

திருவாசகத்தைப் பற்றி வெள்ளைக்காரப் பாதிரி எழுதுகிறான், அதற்குப் பிறகும் நமக்குப் புத்தி வரவில்லையே!

திருஞான சம்பந்தன் யார்? அவன்தான் தன்னைத் தமிழ்த் தொண்டன் என்று சொன்ன முதல் தமிழன்! 'செந்தமிழன்' என்கிறோமே, அது யார் சொன்னது தெரியுமா? திருஞான சம்பந்தன் என்கின்ற பதினாறு வயது இளைஞனை நாளும் இசை பாடித் தமிழ் பரப்பிய திருஞான சம்பந்தன் என்று எழுபது, எண்பது வயது நிரம்பிய அப்பரடிகள் அல்லவா சொன்னார்?

என்ன செய்தார் திருஞான சம்பந்தர்? சாதியை வளர்க்கவில்லை; சமயத்தை வளர்க்கவில்லை; பேதத்தை வளர்க்கவில்லை; நாளும் தமிழ்பாடி நற்றமிழ் வளர்த்தார்.

42 பாடல்களிலே அவர் தன்னை வெறும் திருஞான சம்பந்தன் என்று கூடச் சொல்லவில்லை. தமிழ்ஞான சம்பந்தன் என்றே குறிப்பிட்டிருக்கிறார். தமிழுக்கு அடைமொழி கொடுத்துப் பாடிய முதல் புலவனே திருஞான சம்பந்தர் தான்.

இந்த அரசு,சேக்கிழாரை யார் என்று தெரிந்து கொண்டிருக்கின்றது. ஆகவேதான் இந்த நாட்டினுடைய நாயகர், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே அவருக்கு இந்த இனிய விழா எடுக்கப்படுகிறது. முதலமைச்சராயிருந்த சேக்கிழாரை, அவர் எழுப்பிய ஆலயத்திற்கு அழைத்துச் செல்லுகிற புனிதப் பணியைத் தான் அறநிலையத் துறை அமைச்சர் என்பதாலே இன்றைக்கு நான் தொடங்கி வைக்கிறேன்.

சிதிலமடைந்து கிடக்கின்ற அவரது இல்லத்தை இன்னும் ஆயிரமாண்டுக்குப் பின்னாலும் இந்தச் சமுதாயம் எண்ணிப் போற்றும்படி, என்ன செலவானாலும் சரி, செம்மைப்படுத்த விருக்கிறோம்.

இதையெல்லாம் விட சேக்கிழாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படவிருக்கிறது; அதற்கு ஆலயங்களின் நிதியிலிருந்து செலவிடப்படும்.

பெரிய புராணம், கம்பராமாயணம், ஐம்பெருங்காப்பியங்கள் 'எல்லாம் தந்த தமிழறிஞர்களிலிருந்து வாழையடி வாழையாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிலிருந்து நம்முடைய காலத்திலே வாழ்ந்து மறைந்த கவிஞர் கண்ணதாசன் வரை பல்லாயிரக் கணக்கான கவிஞர்கள் - தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோர் உருவாக்கித் தந்த கருத்தை வழங்கியவர்கள் சமயப் புலவர்கள்-சமய அறிஞர்கள்!

அவர்களைச் சமயம் என்கிற போர்வையாலே நாம் போர்த்தியதாலே தான் அவர்களுக்குள்ள சிறப்புக்களெல்லாம் குறைக்கப்பட்டுவிட்டன.

இனி நாம் ஆக்க வழியிலே ஈடுபட்டாக வேண்டும். அழிவு வழியிலே போய்ப் பயனில்லை. ஒன்றை வேண்டாம் என்று சொல்லுவதைவிட என்ன வேண்டும் என்று சொல்லியாக வேண்டும்!

வரலாற்றுக் காப்பியம் தந்த சேக்கிழாரை என்றென்றும் நினைத்தால்தான் தமிழ் வாழும்! தமிழர் வரலாறு வாழும்!

தமிழுக்காக வாழ்ந்த சான்றோர் யாராக இருந்தாலும் அவர்கள் இந்த அரசாலே போற்றப்படுவார்கள்; பாராட்டப்படுவார்கள்; உலகிற்கு அறிமுகப்படுத்தப்படுவார்கள்,என்று கூறி இந்தத் திருப்பணியைப் பெரும்பேறாகக் கருதித் தொடங்கி வைக்கிறேன்!

**(குன்றத்தூரில் 18 5.85 அன்று நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)**






# அரும்பணியாற்றும் அமெச்சூர் ரேடியோக்கள்

**அ**மெச்சூர் ரேடியோக்களின் மூலம் தகவல்கள் ஒலிபரப்பப்படும் அதிசய நிகழ்ச்சியை வானொலி ரசிகர்கள் மே மாதம் 17 ஆம் தேதி காலை 8.21 மணிக்குக் கேட்கின்ற வாய்ப்புப் பெற்றார்கள்.

அனைத்துலகத் தகவல் தொடர்பு நாளையொட்டி சென்னை வானொலி நிலையத்தில் மே 17 ஆம் நாளன்று 'ஹேம் மீட் -85' HAMMEET என்னும் அறிவியல் நிகழ்ச்சி நடைபெற்றது.

நேரடியாக ஒலிபரப்பப்பட்ட இந்த நிகழ்ச்சி - அறிவியலின் சாதனைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சென்னை வானொலி நிலையத்தில் பதிவு அறையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மைய அரசின் கம்பியில்லாத் தந்தி ஆலோசனையாளர் திரு ஆர்.ஜி. தியோடர் பங்கேற்றார்.

சென்னை அமெச்சூர் ரேடியோ சங்கத்தின் தலைவர் திரு கே. மகாலிங்கம், இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ளும் வெளியூர் அமெச்சூர் ரேடியோ நண்பர்களைக் குறித்துச் சுருக்கமான முறையில் விளக்க உரை அளித்தார்.

அதன்பிறகு ஒவ்வொருவரையும்ரேடியோ மூலம் அழைத்தார். திருவனந்தபுரத்தில் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றும் வேதபிரகாஷ் சாண்ட்லாஸை அழைத்தார். அவர் பேசினார். அது,நிலையத்தில் பார்வையாளராக அமர்ந்திருந்த அனைவர்க்கும் தெளிவாகக் கேட்டது. டெலிபோனில் உரையாடல் போல மகாலிங்கமும், சாண்ட்லாசும் பேசியது தெளிவாகக் கேட்டது. திருவனந்தபுரத்தில் இருப்பவருடன் ரேடியோ மூலம் தொடர்பு கொண்டு பேசிய நிகழ்ச்சி வியப்பை விருந்தாக்கியது.

அடுத்து, தூத்துக்குடியில் ஸ்பிக் உரத் தொழிற்சாலையில் மேலாளராகப் பணிபுரியும் திரு. கே.சந்தானத்துடன் தொடர்பு கொண்டு பேசினார் மகாலிங்கம்.

அடுத்து மங்களூரில் உள்ள திரு மகாபலா ஹெக்டேயுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. மங்களூர் வானொலி நிலைய இயக்குநர் திரு சலபதிராவ் அவர்களும் தன்னுடன் தனது வீட்டில் அமர்ந்திருக்கிறார் என்ற தக வலை ஹெக்டே தெரிவித்தார்.

அதன்பின்னர் நாகப்பட்டினத்தைச் சேர்ந்த திரு கிருஷ்ணமூர்த்தியுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

பின்னர் பாண்டிச்சேரியில் உள்ள திரு பாபுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

'அமெச்சூர் ரேடியோ அமைப்பதற்கு எவ்வளவு செலவாகும்?' என்று அவரிடம் கேட்டார் திரு மகாலிங்கம்.

''இருநூறு அல்லது முந்நூறு ரூபாய் செலவாகும்! இதனை நன்கு விரிவுபடுத்த விரும்பினால் இரண்டாயிரம் ரூபாயிலிருந்து ஐந்தாயிரம் ரூபாய்க்குள் செலவா கலாம். பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள சில இயந்திரங்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யநேரும்'' என்று பதிலளித் தார் திரு பாபு.

அடுத்து ஐதராபாத்தைச் சேர்ந்த செல்வி பாரதி சென்னையைச் சேர்ந்த திரு ச




LINTAS-L75-2317 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



விழுப்புரத்தையடுத்துள்ள பயத் தம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு சக்கரவர்த்தி ஆகியோருடன் தொடர்பு கொள்ளப்பட்டது.

''அமெச்சூர் ரேடியோவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?'' என்ற கேள்வியை திரு ரவி கேட்டார்.

''எதிர்காலத்தில் 'ஹேம்' பொழுதுபோக்கு, பெரும்புகழ் எய்தும். இன்னும் ஐந்தாண்டுகளில் மாபெரும் வளர்ச்சி அடையும்'' என்று பதிலளித்தார் இந்திய அமெச்சூர் ரேடியோ சங்கத் தலைவர் திரு சாஹுன்.

''இயற்கை உற்பாதங்களின் போது அமெச்சூர் ரேடியோக்கள் பொதுமக்களுக்கு எந்த வகையில் உதவிகரமாக இருக்கும்?'' என்ற கேள்வி ஐதராபாத்தைச் சேர்ந்த செல்வி பாரதியிடம் கேட்கப்பட்டது.

மறுவிநாடியே அவரிடமிருந்து பதில் தெறித்து ஓடிவந்தது.

''1982 ஆம் ஆண்டில் ஆந்திர மாநிலத்தில் புயலினால் சேதம் ஏற்பட்டபோதும், 1984ல் குஜராத்தில் அணைக்கட்டு சேதம் ஆகியபோதும் அமெச்சூர் ரேடியோக்கள் தகவல்களை உரிய நேரத்தில் தெரிவித்துத் தொண்டாற்றின'' என்று அவர் விளக்கமாக எடுத்துச் சொன்னார்.

விநாடி வினா நிகழ்ச்சிக்குப் பின்னர் சென்னை வானொலி நிலையத்தின் இயக்குநர் திரு ஆர். என். நாயர், அமெச்சூர் ரேடியோ பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தினார். அதில் அவர் குறிப்பிட்டார்:

''சாதாரணமாக ரேடியோவில் ஒரு நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது. ஒருவர் பேசுகிறார். அதைப் பார்வையாளர்கள்— கேட்கத்தான் முடியும். அவர்கள் பேசமுடியாது ஆனால் அமெச்சூர் ரேடியோ பயன்படுத்தும் முறையில் பார்வையாளரும் பேசலாம். இது ஒரு வழிப் பாதையல்ல. மகிழ்ச்சியூட்டும் - ஆர்வநிலை ததும்பும் — அறிவியல் பொழுதுபோக்கு இது''

நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த திரு. ஆர். ஜி. தியோடர் குறிப்பிட்டதாவது:

''இது எல்லா வயதினரும் விரும்பி நாடுகின்ற பொழுது போக்கு; அறிவியல் பொழுது போக்கு. இயற்கை அழிவுகள் ஏற்படும்போது தகவல் தொடர்பு கொள்வதற்கு இது ஏற்ற சாதனம். அனைத்துலகமும் அனுமதி அளித்துள்ள ஒப்பற்ற உபகரணம்''

இவ்வளவு செய்திகளைத் தெரிந்து கொண்டதும் 'ஒருவர் அமெச்சூர் ரேடியோ இயக்குநராவது எப்படி?' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அது ஒன்றும் சிரமம் அல்ல.

ஆர்வமுள்ள எவரும் அமெச்சூர் ரேடியோ இயக்குநர் ஆகலாம். அனைத்துலக சங்கேதங்கள் சிலவற்றைக் கற்றுக் கொள்ளவேண்டும். இந்தியாவில் உள்ள கம்பி இல்லாத் தந்தி நிலையங்கள் 21ல் ஏதேனும் ஒன்றில் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்று. அமெச்சூர் ரேடியோ லைசன்ஸ் பெற வேண்டும். அதன் பின்னர் சிறிய வயர்லஸ் செட் ஒன்றைச் சொந்தமாக உருவாக்க வேண்டும். அல்லது விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும். எந்த அலை வரிசையில் தகவல் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதற்குரிய அனைத்துலக விதிமுறை உண்டு. அதனை அறிந்து தகவல் பரிமாற வேண்டும்.

''சென்னை வானொலி நிலையத்தில் நடைபெற்ற ஹேம்மீட் நிகழ்ச்சிக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தது குறிப்பிடத் தக்கதாகும். அதிலே அவர் தெரிவித்திருந்ததாவது:

''அமெச்சூர் ரேடியோ மன்றங்களின் உயிரூட்டமுள்ள பொழுது போக்குப் பணி-சமூகத்திற்கு அதிலும் குறிப்பாக அழிவு நேரங்களில் மிகுந்த தொண்டு செய்கிறது. இயல்பான தகவல் தொடர்புச் சாதனங்கள் செயலற்றுப் போகும் வேளையில் அமெச்சூர் ரேடியோக்களின் சேவை, பெரும் பங்கு வகிக்கிறது. 'ஹேம்மீட் 85க்கு' எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.''

— எஸ். எஸ். சுந்தரம்

## அமெச்சூர் ரேடியோ சில செய்திகள்

*உலகத்தில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட அமெச்சூர் ரேடியோக்கள் உள்ளன.

*இந்தியாவில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட அமெச்சூர் ரேடியோக்கள் உள்ளன.

*தமிழகத்தில் 300க்கு மேற்பட்ட அமெச்சூர் ரேடியோக்கள் உள்ளன.

*அமெச்சூர் ரேடியோவின் உதவியால் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியுடனும் பேச முடியும். ஏனென்றால் அவரும் அமெச்சூர் ரேடியோ ஆர்வலர்.

*ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், ஐரோப்பா ஆகிய நாடுகளில் அமெச்சூர் ரேடியோ நிலையங்கள் 18 உள்ளன. தகவல் தொடர்புக் களத்தில் பெரும்பணி ஆற்றுகின்றன.

*ஆந்திரத்தில் உள்ள ஸ்ரீஹரி கோட்டா விண்வெளி ஆய்வு மையத்தில் அமெச்சூர் ரேடியோ செயல்முறைப் பயிற்சி நடைபெறுகிறது.

* திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்திலும், பெங்களூர் ஐ.எஸ்.ஆர்.ஓ. விண்வெளி மையத்திலும் அமெச்சூர் ரேடியோ சங்கங்கள் இயங்கி வருகின்றன.

# திருக்கோயில் கண்டார்

# தெய்வச் சேக்கிழார்

சோழமன்னன் அநபாயனின் முதலமைச்சராக விளங்கிய சேக்கிழார், சென்னையை அடுத்த குன்றத்தூரில் வேளாளர் மரபில் தோன்றியவர்.

சைவப் பெரியார்களான 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை, திருத்தொண்டர் புராணம் என்னும் தலைப்பில் நூலாக எழுதியவர். இதுவே பெரிய புராணம் என்று வழங்கப் படுகிறது.

தஞ்சை மாவட்டத்துள்ள திருநாகேஸ்வரம் ஆலயத்தைப் போல, தமது சொந்த ஊரிலும் ஓர் ஆலயம் அமைத்து, திருநாகேஸ்வரம் என்று பெயர் சூட்டி வணங்கிவந்தார் சேக்கிழார்.

குன்றத்தூரில் சேக்கிழார் பிறந்த இல்லம் சேக்கிழார் கோயிலாக விளங்குகிறது. இது பழுதடைந்த நிலையில் இருப்பதைப் பார்த்த மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் சேக்கிழார் திருக்கோயில் திருப்பணியை நடத்த வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அதன் விளைவாக, தெய்வச் சேக்கிழார் விழாவும், தெய்வச் சேக்கிழார் திருக்கோயில் திருப்பணித் தொடக்க விழாவும் வைகாசித் திங்கள் 5ஆம் நாளன்று (18.5.85) குன்றத்தூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்குத் தொடங்கிய விழா இரவு 10 மணி வரை உணர்ச்சி மயமாக நடைபெற்றது. தவத்திரு ஊரன் அடிகள், சாயிமாதா சிவ பிருந்தா தேவி அம்மையார், சுகிசிவம் மற்றும் பல பெருமக்கள் காலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மாலையில் நடைபெற்ற திருப்பணித் தொடக்க விழாவிற்கு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. தலைமை வகித்தார்.



அனைவரையும் வரவேற்ற திரு மு.பெ.சத்தியவேல் முருகன் குறிப்பிட்டார்:

"அடியார்கள் கோழைகளல்லர்; வீரம் மிக்கவர்கள். அவர்களின் புகழைச் சேக்கிழார் பாடினார்.

ஆரம் கண்டிகை ஆடை கந்தை
பாரம் ஈசன் பணியலா தொன்றிலர்
ஈரநெஞ்சினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ

என்று பாடினார் சேக்கிழார்."

தலைமை வகித்த திரு கு. ஆளுடைய பிள்ளை இ.ஆ.ப. தெரிவித்ததாவது:








"63 நாயன்மார்களின் வரலாற்றை உலகுக்கு உணர்த்தி, பெரியபுராணம் எழுதி, இறை உணர்வை மக்களிடம் நிலை நிறுத்தியவர் சேக்கிழார். அவரை நாம் எப்போதும் நினைவில் இருத்த வேண்டும்.

"துர்பாக்கியமோ, துரதிர்ஷ்டமோ தெரியவில்லை, மற்ற இலக்கியங்களுக்கு இருக்கின்ற பெருமை இந்த இலக்கியத்திற்குக் கிடைக்கவில்லையே" என்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வருத்தத்துடன் தெரிவித்தார்கள்.

'பெரிய புராணத்தை மக்கள் மன்றத்திற்கு நல்ல முறையில் தெரிவிக்க வேண்டும்'' என்றும் அமைச்சரவர்கள் கருதுகிறார்கள். ஓர் அமைச்சரை மற்றொரு அமைச்சர் மதித்துப் போற்றுகின்ற செயல் இது.''

அடுத்து, சேக்கிழார் அடிப்பொடி திரு டி.என்.இராமசந்திரன் தமது உரையில் தெரிவித்தார்:

"வால்மீகி, வியாசர் போன்ற புலவர்கள் எல்லாம் சேக்கிழாருக்கு ஒப்பிலர். பெரிய புராணத்தில் சாதிவேற்றுமை சொல்லப் படவில்லை. ஆன்மீக உலகில் சாதிப் பெருமை கிடையாது. உமாபதி சிவாசாரியார் சேக்கிழாரை மிகவும் போற்றிப் பாராட்டியிருக்கிறார்.

"வானத்தின் தாரகையைக் கூட எண்ணி விட இயலும். திருத்தொண்டர்கள் குறித்து நூல் எழுதிய சேக்கிழாரின் பெருமையை எடுத்துச் சொல்வது என்பது தேவர்க்கும் அரிதே யாகும்'' என்று உமாபதி சிவாசாரியார் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் சேக்கிழார் எவ்வளவு சிறந்தவர் என்பது எளிதில் விளங்கும்''

அடுத்து உரையாற்றிய திரு எஸ்.டி.காசிராஜன் இ.ஆ.ப. குறிப்பிட்டதாவது:

"பெரியபுராணம் என்றால் பழைய கதை; உண்மைக்குப் புறம்பான கதை என்ற கருத்தெல்லாம் பலருக்குத் தோன்றியது. பெரிய புராணத்தில் கற்பனை உண்டு. வானத்தைப் பற்றிய கற்பனை, மனத்தைப் பற்றிய கற்பனை அதில் இடம்பெற்றிருக்கலாம். ஏனையவை எல்லாம் உண்மையான நிகழ்ச்சிகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது

"மகான்கள் என்று கேள்விப்பட்டதும் அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தம் கிடையாது

என்று நாம் கருதி விடுகிறோம். தொலைவில் வைத்து வணங்கி வருகிறோம். அடியார்கள் செய்த தொண்டுகளை நாமும் செய்ய முடியும். அவர்கள் அடியார்கள் என்பதால் ஆண்டவனே அவர்களிடம் சென்று அவர்களுக்கு உதவி செய்திருக்கிறான்.

''இறைவனை வரவழைக்க - மனம்தான் வேண்டும்; காசு வேண்டாம்; நெஞ்சு இருந்தால் போதும்!

''நான் அண்மையில் போக்குவரத்து விதிகள் சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து கொள்ள டெல்லி சென்றபோது அதில் கலந்து கொண்ட வேற்று மாநிலத்தவர் சிலர், ''உங்கள் மாநிலத்தில் மக்கள் டிரைவர்களுக்கு அதிகத் தொல்லைகள் தருவதில்லை. காரணம் தப்பு செய்யத் தயங்குகிறார்கள் தமிழர்கள். அதற்குக் காரணம் உங்களின் பண்பாடுதான்'' என்று குறிப்பிட்டார்கள். நான் மகிழ்ச்சியுற்றேன். அந்தப் பண்பு எப்படி வரும்? பெரிய புராணம் போன்ற நூல்களைப் படித்தால் வரும்!''

அடுத்து உரையாற்றிய திருக்குறளார் திரு. வி. முனுசாமி தெரிவித்தார்:

''உயர்ந்த சீலத்தை - ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறுகிறது பெரியபுராணம்.

''ராமாயணத்துக்குப் பெரிய புராணம் என்று பெயர் கிடையாது.

''பெரும்பாலும் காவியங்களை எழுதிய கவிஞர்கள், கவிஞர்களாகவே இருப்பார்கள். ஆனால் சேக்கிழார் ஒருவர் தான் முதல் அமைச்சராக இருந்தவர்.

''சேக்கிழார் நற்றிணையை, திருக்குறளை, அகத்தை, புறத்தை, பட்டினப்பாலையை, பதிற்றுப்பத்தை தனது நூலிலே சுட்டிக் காட்டியிருக்கிறார். அவரது பெரிய புராணத்தைப் படித்தால் சங்க இலக்கியத்தைப் படித்த திருப்தி ஏற்படும்.

''தனிப்பட்டவர்களின் வரலாற்றை எழுதுவது கடினம், சேக்கிழார் 63 பேரின் வரலாற்றை எழுதியிருக்கிறார்.

''பெண்களுக்கு முக்தி கிடையாது என்று பல நூல்கள் தெரிவித்துள்ளன. பெண்களின் பெருமையை எடுத்துக் காட்டியிருக்கிறார் சேக்கிழார்.

''சேக்கிழாரின் பெரிய புராணத்தைப் படித்தால், தமிழ், சரிதம், பூகோளம் அனைத்தையும் படித்த திருப்தி ஏற்படும். வரலாறு நிறைந்த பெரிய புதையல் பெரிய புராணம்.''

தொண்டை மண்டல ஆதீன கர்த்தரான தவத்திரு ஞானப்பிரகாச தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

''பன்னிரண்டாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படும் தனிப் பெருங்காப்பியம் பெரிய புராணம். சைவசிந்தாந்தக் கருத்துகள் நிறைந்த சமயநூல் இது. இதனை மேனாட்டர் பலர் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

' சமயம், சரித்திரம் அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய நூல் இது என்று கூறலாம்.

''அரசனின் கடமையையும், பொது மக்களின் கடமையையும் சேக்கிழார் இந்நூலில் உணர்த்துகிறார். சமயத் தலைவர்கள் காப்பியத்தில் அமைக்கப்பட்டது இந்த நூலில்தான்!

## சேக்கிழார் சில செய்திகள்

தெய்வப்புலவர் என்று இருவர் புகழப்பெற்றனர். ஒருவர் திருவள்ளுவர்; மற்றவர் சேக்கிழார்.

சேக்கிழார் என்பது குடிப் பெயர்; அவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர். இராமதேவர் என்றும் அவர் அழைக்கப் பெற்றிருக்கிறார். தொண்டர் சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றார், உத்தம சோழப் பல்லவர் என்னும் பட்டப் பெயரும் உண்டு.

சித்திரை மாதம் திருவாதிரை நாளில் திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றம் செய்யத் தொடங்கி மறுவருடம் சித்திரைத்திருவாதிரை நானன்று முடித்தார் சேக்கிழார். 4253 பாடல்கள் கொண்டது பெரிய புராணம்.

சோழமன்னன் அநபாயனின் வேண்டுகோளின் காரணமாகத் திருத்தொண்டர் புராணத்தை எழுதினார் அவரது அமைச்சராக இருந்த சேக்கிழார்.

''மக்களிடம், அன்பு, பண்பு, வைராக்கியம் போன்ற பண்புகள் வளர வேண்டும் என்பதை வலியுறுத்தும் நூல் பெரிய புராணம்.

''நூலாசிரியர், போதகாசிரியர், உரையாசிரியர், ஞானாசிரியர் என்ற நான்கு வகை ஆசிரியராக ஒரு சேர விளங்கிப் பெருமைபெற்றவர் சேக்கிழார். என்று, மகாவித்வா மீனாட்சி சுந்தரம் பிள்ளை குறிப்பிடுகிறார்.''

இறுதியாக மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பணித் தொடக்க விழாப் பேருரை நிகழ்த்தினார். (உரை பிறிதோரிடத்தில்)

குன்றத்தூர் அருள்மிகு நாகேச்வரர் ஆலயத்தின் உள்ளே சேக்கிழார் உருவச்சிலை கடந்த 62 ஆண்டுகளாக நுழைய முடியாதிருந்த பரிதாபநிலையைத் தாம் அண்மையில் கேள்விப்பட்டதாகவும் அது கேட்டு மனம் வருந்தியதாகவும், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத் தாம் இரு சாரரையும் அழைத்துப் பேசியதாகவும், பேச்சு வார்த்தை பயனளித்துள்ளதாகவும் அதன் காரணமாக சுமுக நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சேக்கிழார் பெருமான் ஆலயத்திற்குள் நுழைகின்ற வாய்ப்பை இன்று பெறுகிறார் என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சரின் பேருரைக்குப் பின்னர் அருண்மொழித்தேவர் நன்றி கூறினார்.

அதன்பிறகு, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் முன்னிலையில், அருள்மிகு நாகேச்வரர் திருக்கோயிலுக்குள் சேக்கிழார் பெருமான் எழுந்தருளும் காட்சி மிகச் சிறப்பாக நடந்தேறியது.

திருப்பணித் தொடக்கவிழா தொடங்குவதற்கு முன்னே, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், சேக்கிழாரின் இல்லத்திற்குச் சென்று அங்கு உருவாக்கப்பட்டிருந்த சேக்கிழார் பிள்ளைத் தமிழ் கல்வெட்டைத் திறந்து வைத்தார்.

இறை உணர்வும், இனிய தமிழ் உணர்வும், போட்டி போட்டு, விழாவைச் சிறப்பித்தன என்றால் அது மிகையாகாது.

நிகழ்ச்சித்தொகுப்பு

**தமிழ்ப்பித்தன்**



# சோழர் காலத்திய சுடுமண் நீர்க் குழாய்கள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, பிற்காலச் சோழர் காலத்தைச் சேர்ந்த சுடுமண்ணாலான தண்ணீர்க் குழாய்களை பெரியார் மாவட்டம், பவானி வட்டம், ஓலகடம் என்னும் ஊரின் ஏரியில் கண்டுபிடித்துள்ளது.

ஓலகடத்தினைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவர் கொடுத்த தகவலின் பேரில் தொல் பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் பூங்குன்றன், காப்பாட்சியர் சுப்பிரமணியன் ஆகியோர் சென்று அங்கு ஆய்வு செய்தனர். அவ்வூரில் உள்ள மக்கள், ஏரியில் உள்ள வண்டல் மண்ணை அள்ளும்போது சுடுமண் குழாய்கள் இருப்பது கண்டறியப்பட்டது. சுடுமண் குழாய்கள் இரு வேறு



இடங்களில் இரு வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. ஒரு வரிசைக் குழாய்கள் சற்றுப் பெரிதாகவும், தமிழ் எண்கள் பொறிக்கப்பட்டும் காணப்படுகின்றன. அடுத்தடுத்துப் பொருத்தப்படக்கூடிய குழாய்களை அறிந்து கொள்ள இவ்வாறு எண் இடும் முறை பின்பற்றப்பட்டிருத்தல் வேண்டும். இது போலவே, திருவெள்ளாறை என்ற ஊரில் உள்ள கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்வஸ்திக் வடிவிலுள்ள கிணற்றின் படிக்கட்டுகளிலும் தமிழ் எண்கள் இடப்பட்டுக் காணப்படுகின்றன. கோயில்கள் கட்டுகையில் கற்களுக்கு எண் இடும் பழக்கம் உண்டு.

செங்கல்பட்டு மாவட்டம், வசவசமுத்திரத்தில் கழிவு நீரகற்றும் சுடுமண் குழாய்கள் கண்டெடுக்கப்பட்டன. நங்கநல்லூருக்கு அருகிலும் சுடுமண் குழாய்கள் பூமிக்கடியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. இவற்றிலெல்லாம் எண்கள் குறிக்கப்படவில்லை. ஓலகடத்திலுள்ள குழாய்களில் மட்டுமே முதன் முறையாகப் பிற்காலச் சோழர் காலத்தின் எண்கள் குறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

இந்த எண்களின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என அதன் எழுத்தமைதியைக் கொண்டு அறிய முடிகிறது. இவ்வூரிலுள்ள சிவன் கோயிலில் காணப்படும் துண்டுக் கல்வெட்டுக்களின் எழுத்தமைதியும் கி.பி. 20-ஆம் நூற்றாண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அக்கல்வெட்டுக்கள் அக்கோயிலை உலகவிடங்கீஸ்வரம் எனக் கூறுகிறது. ஆதலால் ஊரின் பெயர் உலகவிடங்கம் என்று இருந்திருத்தல் வேண்டும். உலகவிடங்கம் என்ற பெயர் ஓலகடம் என மருவி வழங்கப்படுகிறது.

**—பாண்டியராஜன்**

**சாண எரிவாயு அமைப்பில் தமிழகம் 2-ஆம் இடம்**

1984-85 ஆம் ஆண்டில் 10 ஆயிரம் சாண எரிவாயு அமைப்புகளை நிறுவ வேண்டும் என்று தமிழ்நாடு இலக்கு நிர்ணயித்திருந்தது. இலக்கை மீறி மொத்தம் 17 ஆயிரத்து 540 அமைப்புகளை நிறுவி அனைத்திந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது தமிழ்நாடு.

மேற்பார்வையிட ஒரு கோட்டாட்சித் தலைவர் பதவியை உருவாக்கி, சிறப்புடன் செயல்பட அரசு உதவி புரிந்திட வேண்டும்.''

தலைமைப் பொறியாளர் கட்டடப் பொறுப்பில் உள்ள திரு சி. கே. கோபாலகிருஷ்ணன் அறிக்கை வாசிக்கையில், சென்னை நகரில் ரூ. 12 கோடி செலவில் 19 துறைகளைச்சார்ந்த கட்டடங்கள் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும்'' என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''வருவாய்த்துறை புதிய மாறுதலை சமுதாயத்திற்கு ஆற்றி வருகிறது என்றார்.

மயிலாப்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி பா. வளர்மதி உரையாற்றுகையில்,

''இங்கு அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்திற்குப் பொது மக்கள் வருவதற்கு வசதியாகப் பேருந்து வசதி செய்திட வேண்டும்'' என்றார்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. கே. அப்துல் சமது பேசுகையில் ''இவ்வளவு வசதியுடன் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்திற்குப் பர்னிச்சர் வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும். அலுவலர்கள் சிறப்புடன் செயல்படவும் பொதுமக்கள் இதை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவும்வேண்டும்'' என்றார்.

தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு எல். இராஜமணிக்கம் பேசுகையில், ''என்னுடைய தொகுதியின் ஒரு பகுதியும் இவ்வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உட்பட்டுள்ளது. ஆகையால் புதிய கட்டடம் அமைவது சிறப்பானது'' என்றார்.

சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு பா. அங்கமுத்து அவர்கள் பேசுகையில், 'புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்ட பிறகு தான் வாடகைக் கட்டடங்கள் குறைந்து சொந்தக் கட்டடங்கள் மலர்கின்றன'' என்றார்.

வருவாய் நிர்வாக ஆணையர் திரு ஏ. பத்மநாபன் இ.ஆ.ப. அவர்கள் சிறப்புரையாற்றுகையில், ''மேலும் இரண்டு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்படும். அதிக அளவில் மரங்களை நடவேண்டும்'' என்றார்.

## வட்டாட்சியர் அலுவலகத் திறப்பு விழாவில் திரட்டிய தகவல்கள்

**பொதுப்பணித்துறை அரசுக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டி தருகின்றது. அந்தப் பட்டியல் நித்தமும் பெருகி வருகிறது.**

**ரூ. 3,400 கோடி வருமானம் உள்ள அரசுக்கு இன்று ரூ. 25 கோடி வருவாய்த்துறை மூலம் கிடைக்கின்றது.**

**ஒரு மாவட்டம் உருவாக ரூ. 5 கோடி செலவாகும்.**

**600க்கு மேற்பட்ட உதவி ஆய்வாளர்களுக்கு ஒரு பகுதி வீடாகவும் மற்றொரு பகுதி அலுவலக உபயோகத்திற்காகவும் தமிழ்நாட்டில்கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.**

**எழும்பூர் தாய்-சேய் நல மருத்துவமனையில் 500 படுக்கைகள் கொண்ட பகுதி ரூ. 1 கோடி 75 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது.**

**கல்லூரி மாணவிகள் தங்குவதற்கு ரூ.1 கோடி 10இலட்சம் செலவில் விடுதி கட்டப்பட்டு வருகிறது.**

**மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும் அலுவலர்கள் தங்குவதற்கு வசதியாக சிந்தாதிரிப்பேட்டையில் விடுதி கட்ட ரூ. 21 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**பெரம்பூரில் 100 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ரூ. 1 கோடி 70 இலட்சம் செலவில் கட்டப்பட்டுவருகிறது.**

**குழந்தைகள் மட்டும்பயன்பெறும் வகையில் ரூ. 29 இலட்சம் செலவில் காட்சியகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.**

**இலவசச் சீருடைக்காக இந்த ஆண்டு ரூ. 25 கோடி செலவிடப்படும். இச்சீருடையை நெசவாளர், விதவைப்பெண்கள் தைப்பார்கள். கைத்தறி, கதர் துணிகள் தான் வாங்கப்படும்.**

**தமிழகத்தில் 60,000 சமையற் கூடங்கள் சத்துணவுத்திட்டத் திற்காகக்கட்டப்பட்டுள்ளன.**

**மருத்துவத்துறை [illegible] காக ரூ. 1 கோடி 6 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட இருக்கிறது.**

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்கட்டடத்தைத் திறந்து வைத்தும் நலிந்தோருக்கு உதவித்தொகை, மற்றும் கருவிகள் வழங்கியும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''அழகும் அருமையும் உள்ள இக்கட்டடத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இக்கட்டடம், வருவோர் போவோருக்கு நெருக்கடி இல்லாமல் இருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

''ஒரு மரத்திற்கு வேர்பாகம்; தண்டுபாகம் (Trunk) எப்படி முக்கியமோ அப்படி முக்கியம் வருவாய்த்துறையாகும்.

இங்கு அமைந்துள்ள கட்டட நிலத்தைப் பெற ரூபாய் ஏழு இலட்சம்செலவில் இருபத்திரண்டு கிரவுண்டு நிலம் வாங்கி ரூபாய் ஒருஇலட்சத்துமுபபதாயிரம்செலவில் சுற்றுப்புறச் சுவர்அமைக்கப்பட்டு ரூ. 23 இலட்சம் செலவில் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 68 இலட்சம் செலவில் 3 அடுக்குக் கட்டடம் கட்டப்பட உள்ளது. இக்கட்டடத்தில் வணிகவரி அலுவலகமும் இயங்கும்.

''பொதுப்பணித்துறை மூலம் கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 250 கோடியில் பல்வேறு அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

''தலைமைச் செயலகத்தில் தற்பொழுது உள்ளதுபோல் 10 மாடிக் கட்டடம் கட்டி எல்லா அலுவலகங்களையும் ஒன்றாக அமைக்க அரசு பரிசிலனை செய்து வருகிறது.

''டெல்லியில் மாநாடுகள் நடத்துவதற்கும், கருத்தரங்குகள் நடத்துவதற்கும், 'விஞ்ஞான பவன்' இருப்பதுபோல் மயிலாப்பூரில் தந்தை பெரியார் பெயரில், 20 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ. 2.25 கோடி செலவில் மண்டபம் அமைய உள்ளது''.

விழா இறுதியில் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் திரு அ. சுகுமாரன் நன்றி கூறினார்.

அ. மருது


10 ஜூன் 1985

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
சென்னை-600 008


# தென்னைச் சாகுபடியில் தமிழகம் முந்துகிறது



இந்திய நாட்டிலேயே கேரளத்தில்தான் தென்னை வளம் மிகுதி என்றபுகழ் இப்போது மாறி வருகிறது. தென்னைச் சாகுபடி நிலப்பரப்பிலும், தேங்காய் உற்பத்தியிலும் தமிழ்நாடும், கர்நாடகமும் அந்த இடத்தை அடைந்து வருகின்றன.

சென்ற 10 ஆண்டுகளில் கேரள மாநிலத்தில் தென்னைச் சாகுபடிப்பரப்பு 7.45 லட்சம், எக்டேரிலிருந்து 6.58 லட்சம் எக்டேராகக் குறைந்துவிட்டது. தேங்காய் உற்பத்தி 392 கோடியிலிருந்து 244 கோடிக் காய்களாகக் குறைந்துள்ளது.

கொடிய வேரழுகல் நோயும், 1983-ஆம் ஆண்டில் வறட்சியும் தான் இந்தச் சரிவுக்குப் பெருமளவு காரணம் ஆகும்.

தென்னைச் சாகுபடி கட்டுபடியாகவில்லை என்ற காரணத்துக்காகத் தென்னந்தோப்புகளை அழித்துவிட்டு ரப்பர், கோகோ போன்றவைகளைச் சாகுபடி செய்ய முற்பட்டது ஒரு காலம். 1982ல் இவ்வாறு நேர்ந்தது. அப்போது வேர்க்கடலை, எள் முதலிய எண்ணெய் வித்துக்கள் நல்ல விலைக்கு விற்றன.

கேரளத்தில் தென்னை வளர்க்க இனனும் நிலம் இருக்கிறது. ஆனால் விவசாயிகளிடம் இந்தப் பயிர் செய்ய ஆர்வம் அதிகம் இல்லை.

கேரளத்தில் தென்னை ஏழையின் விளை பயிர். மத்திய தர வகுப்பு மக்களுக்குக்கூட தென்னைச் சாகுபடியே வாழ்க்கைக்கு முக்கிய ஆதாரம். தென்னை நோய்களை வெற்றி கண்டு விட்டதாக இந்திய விவசாயக் கவுன்சிலும், மத்திய தோட்டப் பயிர் ஆராய்ச்சி நிறுவனமும் சொல்லி வந்த போதிலும் நோய்ப்பிரச்சினை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. தென்னை நோய் 40 சதவிகித விளை நிலப் பரப்பைப் பாதித்துள்ளது.

கேரளத்தில் நிலைமை இப்படியிருக்க தமிழ்நாடு, கர்நாடகம் இரண்டு மாநிலங்களிலும் தென்னைச் சாகுபடியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1955 - 1983க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் தமிழகத்தில் தென்னைச் சாகுபடிப்பரப்பு 51 ஆயிரம் எக்டேரிலிருந்து 1.43 லட்சம் எக்டேராக அதிகரித்துள்ளது. தேங்காய் உற்பத்தி 41 கோடிலிருந்து 165 கோடியாக உயர்ந்துள்ளது.

# தஞ்சை மாவட்டத்தில்...

## குடிநீர் குறைவின்றிக் கிடைக்க...

தஞ்சை மாவட்டத்தில் குடி நீர்ப்பிரச்சினை வராமல் இருக்க, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் 936 மின் விசைப் பம்புகளும், 1,175 ஆழ்குழாய்க் கிணறுகளும், 26,000 சாதாரண கைப்பம்புகளும் இருக்கின்றன. அவற்றில் 92 விசைப் பம்புகளும், 37 ஆழ்குழாய்க் கிணறுகளும், 1572 கைப் பம்புகளும் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீர்செய்ய விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

20 கிராமங்களில் தண்ணீர் ஊற்று வற்றிப்போன ஆழ்குழாய்க் கிணறுகளுக்குப் பதிலாக, மாற்று ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க 2 இலட்சம் ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ரூ.21 இலட்சம் செலவில் தரங்கம்பாடி குடிநீர்த் திட்டம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

ரூ.33.63 இலட்சம் மதிப்பீட்டில் அம்மாப்பேட்டையில் தொடங்கப்பட்டிருக்கும் குடிநீர்த்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

ரூ.27.90 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்படும் திட்டச்சேரி குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.17.27 இலட்சம் செலவில் பேரளம் குடிநீர்த்திட்டமும், ரூ. 50 இலட்சம் செலவில் திருவையாறு குடிநீர்த்திட்டமும் நிறைவேற்றப்பட உள்ளன.

ரூ.148.85 இலட்சம் மதிப்பீட்டில் சீர்காழி குடிநீர்த்திட்டமும், 21.33 இலட்சம்ரூமதிப்பீட்டில் பெருமகளூர் குடிநீர்த்திட்டமும் உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்பட உள்ளன.

1984-85ஆம் ஆண்டில் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், 166 குடியிருப்புகளுக்கு ரூ. 100 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1985-86ஆம் ஆண்டில் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், 325 குடியிருப்புகளுக்கு ரூ. 294 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## நிலவள வங்கிக் கடன் வசூலில் முதலிடம்

தஞ்சை மாவட்டத்திலுள்ள 17 நிலவள வங்கிகள் 1.7.84 முதல் 31.2.85 வரை 198.42 இலட்சம் ரூபாய் அளவிற்குத் தவணை தவறிய கடனை வசூலித்து, மாநிலத்திலேயே முதலாவது இடத்தினை இம்மாவட்டம் பெற்றுள்ளது.

தவணை தவறிய தொகை மீதான வட்டி, அபராத வட்டி, தள்ளுபடி செய்யும் அரசுத் திட்டத்தின் காரணமாக 9480 நிலவள வங்கி உறுப்பினர்கள் 56.93 இலட்சம் ரூபாய் சலுகை பெற்றுள்ளனர்.

கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் கீழ், 1985-86ஆம் ஆண்டிற்கு, முதற் கட்டமாக ரூ. 61.81 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு அரசாணை பெறப்பட்டுள்ளது.

இதில் ரூ. 29 இலட்சம் கிராம இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காகவும் ரூ. 23.84 இலட்சம், ஆதிதிராவிடர் குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்காகவும், ரூ. 8.97 இலட்சம் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்காகவும் செலவிடப்படும்.

நடப்பாண்டில் (1985-86) தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் 10 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ரூ.60 இலட்சம் மதிப்புள்ள 1000 டன் உளுந்து, பயறு, கடலை ஆகிய வேளாண்மை விளை பொருள்கள் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. ஏப்ரல் 1985 வரை 528 டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 27.55 இலட்சமாகும்.

காவிரி கழிமுகப் பகுதியினைச் சீரமைக்கும் பணிகளுக்காக 1985-86ஆம் ஆண்டில் ரூ. 372.04 இலட்சங்கள் செலவ[illegible]க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் வடிகால் வசதிகளுக்காக ரூ. 75.50 இலட்சமும், வாய்க்கால் சீரமைத்தல்-லைனிங் வேலைகள்-ரெகுலேட்டர்கள் கட்டுதல் போன்ற வேலைகளுக்காக ரூ. 294.54 இலட்சமும் செலவழிக்கப்படும்.

**(தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. து. இரா. இராமசாமி இ.ஆ.ப. 14-5-85 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல்களிலிருந்து.)**



**மருந்து உற்பத்தியில் இந்தியா**

இந்தியா 1947-ஆம் ஆண்டில் ரூ 10 கோடிக்குரிய மருந்துகளை உற்பத்தி செய்து வந்தது. 1984ல் ரூ 2000 கோடி மதிப்புள்ள மருந்துகளை உற்பத்தி செய்துள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் ரூ. 50 கோடி பெறுமான முள்ள மருந்துகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.



# சென்னையில் 3-வது வட்டாட்சியர் அலுவலகம்

சமுதாயத்தில் பலதரப்பட்ட நிலையிலே உள்ளவர்கள் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அல்லது வட்டாட்சியர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய அரசு அலுவலகங்கள் பொதுவான இடவசதியுடன் பொருத்தமான இடங்களில் அமைக்க வேண்டிய அவ்சியமாகிறது. இதை உணர்ந்த அரசு சிறப்புத் திட்டத்தின்கீழ் வாடகைக்கட்டடங்களில் உள்ள அலுவலகங்களைச் சொந்தக் கட்டடத்தில் இருக்க வசதி செய்து கொடுக்கிறது.

சென்னை மாவட்டம், மயிலாப்பூர் - திருவல்லிக்கேணி வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா கிரீன்வேஸ் சாலையில் மே மாதம் 6ஆம் நாளன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஒ.பி. சோசம்மா இ.ஆ.ப. கூறியதாவது:

"சென்னை மாநகரத்தின் நடு நாயகமாக உள்ள பகுதியில் புதிய ஆட்சித் தலைவர் அலுவலகம் ஒன்று அமைக்க வேண்டுகிறேன். சென்னை மாநகர நில உரிமையாளர்கள் 10,000 பேர் பட்டா உரிமை கோரியுள்ளனர். சிறப்புக் கவனம் செலுத்



தியதன் பேரில் இப்பணி இந்த மாத இறுதியில் முடிவு பெறும்.

"இம்மாவட்டத்திற்குக் கோட்டாட்சியாளர், வருவாய் அலுவலர் பதவி இல்லை. ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களையும்






# படிமங்கள் பாதுகாப்பு

**வே. ஜெயராஜ்,**
காப்பாட்சியர்,
இரசாயனப் பாதுகாப்புப் பகுதி,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

இந்தியாவில் மொகஞ்சோதாரோ, அரப்பா நாகரிகக் காலந்தொட்டே படிமக்கலை வளர்ந்து வருகிறது. கி.மு. 2-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆதிச்சநல்லூரில் சில மிகச் சிறிய படிமங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களால் சிறிய அளவாகப் படிமங்கள் உருவாக்கப்பட்டன. 13-ஆம் நூற்றாண்டில் பரவலாகச் சோழர்களால் இக்கலை சிறப்பிக்கப்பட்டு உச்சநிலை அடைந்தது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முற்படாத புத்தருடைய சிலைகள் அமராவதியிலும் அதன் அண்மையிலும் கிடைத்திருக்கின்றன. பிற்பட்ட காலத்தில் கிராமப்புறங்களில்கூட சிறிய சிறிய படிமங்கள் செய்யப்படுகின்றன. எப்படியாயினும் படிமங்கள் என்றதும் சோழர் காலத்துப் படிமக் கலைதான் நினைவுக்கு வருகிறது.

படிமங்கள் இரண்டு முறைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. அவை (1) மெழுகு இழத்தல் முறை (Lost wax Process) (2) வெற்றுக்கூடு முறை ( Hallow Casting Process ). இதுபோக அதிக அளவில் படிமங்கள் அச்சுக் கொண்டு வார்த்தார்கள் இதற்குச் சாதாரண முறை என்று பெயர். மெழுகு இழத்தல் முறையில் செய்யப்பட்டுள்ள படிமங்கள் சிறப்புடையன. பொதுவாகப் படிமங்கள் ஒரே வார்ப்புப்போல் காணப்பட்டாலும் உடல் முழுவதும் தனியாகவும், பீடம் தனியாகவும், பிரபாவளி தனியாகவும், ஆயுதங்கள் தனியாகவும் செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டு, பார்ப்பதற்கு ஒட்டுமொத்தமான உருவங்களாகத் தெரிகின்றன. இன்றும், சுவாமிமலை என்ற இடத்தில் செப்புத் திருமேனிகள் வடிக்கப்படுகின்றன. வெற்றுக்கூடு முறையில் செய்யப்பட்டவை சிறப்புடையன அல்ல. தென்னிந்தியாவில் இவை அதிக அளவில் இல்லை.

பொதுவாகப் படிமங்கள் வார்க்கப் பயன்படுவது பஞ்சலோகம் என்றாலும் எல்லாப் படிமங்களும் பஞ்சலோகத்தால் செய்யப்பட்டவையல்ல. பஞ்சலோகம் என்பது செம்பு, வெள்ளி, தங்கம், பித்தளை, வெள்ளீயம் ஆகிய உலோகங்கள் அடங்கியதாகும். பிற்காலத்திலுள்ள படிமங்களில் பெரும்பாலும் செம்பு, வெள்ளீயம், ஈயம், துத்தநாகம் ஆகிய உலோகங்களே கலந்துள்ளன. சில படிமங்களில் இரும்பும் காணப்படுகின்றது.

இரும்பு, வேண்டும் என்றே கலக்கப்பட்டிருக்க வேண்டும், அல்லது அது பிரிக்க முடியாத அழுக்காகவும் இருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

**படிமங்களின் பாதிப்பு:**

படிமங்கள் அதிகக் காலம் கெடாமல் இருக்கக்கூடியதென்ற எண்ணம் உருவானது இயல்புதான். ஆனால் கற்சிலைகளோடு ஒப்பிடும்போது கற்சிலைகளை விடப் படிமங்கள் சீக்கிரத்தில் பாதிக்கப்படுகின்றன. பூமியில் புதைக்கப்பட்ட படிமங்கள் அதிகக் காலமாகப் பூமிக்குள் இருப்பதால் அவை பூமியிலுள்ள உப்புக்களோடு வினை புரிந்து பாதிக்கப்படக்கூடியவை. வெளியிலுள்ள படிமங்கள் ஆக்ஸிஜன், கார்பன்-டை-ஆக்ஸைடு, கந்தக ஆக்ஸைடுகள், சோடியம் குளோரைடு ஆகியவற்றோடு வினை புரிந்து பாதிக்கப்படக்கூடியவை. இவ்விதமாக உருவாகும் உப்புக்கள் அரிக்கும் தன்மையுடையன. இந்த உப்புக்கள் குப்ரைட், மாலக்கைட், அஸ்ரைட், குளோரைடு போன்றவையாகும்.

குளோரைடு உப்புக்கள் பரவலாகப் பாதிக்கும். இது இளம் பச்சை நிறமுடையது; படரும் தன்மையுடையது. இவ்வித உப்பு பரவலாக உருவாவதை ''வெண்கல வியாதி'' என்று அழைப்பர்: 'கெட்ட பசுங்களிம்பு' என்று கூறுவதுமுண்டு. இந்த உப்பு மற்றைய இடங்களுக்கும் சென்று அரிக்கும் தன்மையுடையதாகையால் இப்பெயர் பெறுகிறது. அரிப்புப் பொருட்கள் அடுக்கடுக்காக இருக்கின்றன. இந்த அடுக்குகள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். இவ்விதமாக பாதிக்கப்பட்ட படிமங்கள் சுத்தம் செய்யப்படாவிடில் இவை கெட்டு அழிந்துவிட ஏதுவாகும். குப்ரைட், அஸ்ரைட், மாலக்கைட், போன்றவை படிமங்களுக்கும் பாதுகாப்பாக இருக்கக்கூடியவை. பார்ப்பதற்கு அழகாக இருக்கும். கார்பனேட் (மாலக்கைட்) 'பசுங்களிம்பு' (Patana) என்று அழைக்கப்படுகிறது.

**படிமங்களின் பாதுகாப்பு:**

படிமங்கள் அவற்றின் நிலைக்கேற்பப் பலமுறைகளில் சுத்தம் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்படலாம். அவை :

(1) இயற்பியல் முறை (Physical Method)
(2) வேதியல் முறை (Chemical Method)
(3) மின் வேதியல்முறை (Electro Chemical Method)
(4) மின் கரைசல் குறைப்பான் முறை (Electrolytic Reduction Method)

# ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் உருவாக்கியுள்ள நன்மைகள்

சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய பிரிவினரின் நலம்பேணும் வகையில் கடந்த பத்தாண்டுகளாகப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல் படுத்தப்பட்டன. சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவை இவற்றில் அடங்கும்.

குறிப்பிட்ட பகுதியை மேம்படுத்துவதையே வரட்சிப் பகுதி முன் னேற்ற திட்டம் குறிக்கோளாகக் கொண்டு இயங்க, இதர திட்டங்கள் மூலம் இதுவரை பயன்பெற்றிராத தனிப்பட்டவர்களின் முன்னேற்றத் தில் சிறு விவசாயிகள் முன்னேற்றத் திட்டம் நாட்டம்கொண்டு திகழ்ந்தது.

வறுமையை வேரோடு அகற்றி,எண்ணற்ற கிராமப்புற மக்கள் பயன் பெறவேண்டும் என்ற பல்லாண்டு முயற்சிக்குப் பிறகு அறிமுகப்படுத்தப் பட்ட திட்டமே "ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்".

இத்திட்டம் 1978—79ம் ஆண்டு 161 வட்டாரங்களிலும்,1979ஆம் ஆண்டு 187 வட்டாரங்களிலும் நிறைவேற்றப்பட்டு 2—10—1980 முதல் தமிழ்நாட்டின் அனைத்து வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படுகிறது.

## நோக்கங்கள்

வறுமைக் கோட்டினைத் தாண்டி வாழ்க்கையில் உயரும் வகையில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள உதவி புரிவதே இத்திட்டத்தின் குறிக்கோள்.

ரூ. 3500/-க்குக் குறைவாக ஆண்டு வருமானம் கொண்ட ஐந்து நபர்கள் அடங்கிய குடும்பம், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பமாகக் கருதப்படுகிறது.

இத்தகைய குடும்பங்களுக்கு மானியமும் கடனும் வழங்கி,அவர்களுக்கு நல்ல வருவாய் தரும் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதே இத்திட்டத்தின் குறிக்கோள்.

இத்திட்டம் பாரதப் பிரதமர் அவர்களின் புதிய 20 அம்சத் திட்டத்தில் ஓர் அம்சமாக விளங்கி, பல்வேறு திட்டங்களுள் சிறப்பிடம் பெற்று,நிறை வேற்றப்படுகிறது.

## பயன்பெறுவோர்.

வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் சிறு, குறு விவசாயிகள் வேளாண்மை தொழிலாளர்கள், கைவினைஞர்கள், தொழிற் கலைஞர்கள் போன்றோருக்கு உதவுவதே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்.

ஒரு வட்டாரத்தில் உள்ள மொத்தக்குடும்பங்களின் எண்ணிக்கை 20,000. சுமார் 50 சதவிகித குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள குடும்பங்கள் ஆகும். நிர்வாக மற்றும் நிதிக் கட்டுப்பாடு காரண மாக ஒரு வட்டாரத்தில் ஓராண்டிற்கு 600 குடும்பங்கள் வீதம் அதாவது ஒரு வட்டாரத்தில் ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் மொத்தம் 3000 குடும்பங்களை இத்திட்டத்தின் கீழ் பயன்பெற நாம் தேர்ந்தெடுத் துள்ளோம். மொத்தத்தில் ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 11,30,100 கிராமப்புற குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவி அளிக்கப் படுவர். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 13188 லட்சம். இதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு வங்கிகளால் அளிக்கப்படும் கடன் தொகை ரூ. 26,376 இலட்சம்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களை இத்திட்டத்தில் பயன் பெறுவதற்காக ஊர் நல அலுவலர் ஆய்வு செய்து தேர்ந்தெடுப்பர். இவ்வாறு ஒவ்வோர் ஊர்நல அலுவலரும் 120 குடும்பங்களைத் தேர்ந் தெடுத்து அதற்கான பட்டியலைத்தயாரித்து அப்பட்டியலின் மீது ஊரில் உள்ள பெரியவர்களின் கருத்துக்களை அவர் கேட்பார். அவர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள், திருத்தங்கள் முதலியவற்றை ஊர் நல அலுவலர் ஊராட்சி ஒன்றிய அலுவலருக்கு அனுப்ப அவர் அவைகளைக் கருத்தில் கொண்டு பட்டியலைச் சரிபார்ப்பார்.

## உதவித் தொகை (மானியம்)

தனிநபர்கள் வாழ்வில் ஒளியேற்றும் எந்தவொரு திட்டமும் அரசின் மற்றும் நிதி நிறுவனங்களின் ஊக்கத்தையும் உதவியையும் பெற்றால்தான் அத்திட்டம் சிறப்பாக வெற்றி பெறும் என்பதை நாம் அறிவோம். இதற்கிணங்க வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்கள் வளமான வாழ்வைப் பெற மானியம் வழங்கும் திட்டம் இதோடு இணைக்கப்பட் டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திற்குரிய திட்டம் தீட்டப்பெற்று முடிவு செய்யப்பட்டதும், சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில் முதலீடுத் தொகையில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. குறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், ஊர்ப்புற கைவினைஞர்களைப் பொறுத்தவரையில் 33⅓ சதவீத மானியத் தொகை வழங்கப்படுகிறது.

அதிக அளவாக ஒரு குடும்பம் ரூ. 3000/- வரை மானியம் பெறலாம். ஆனால் பழங்குடியினரைப் பொறுத்த வரையில் மொத்த முதலீட்டுத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அளிக்கப்படுகிறது. இவ்வகை யினருக்கு ரூ. 5000 வரை உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

## பணிகளின் வகைகள்

வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன் வளம், தொழில், சிறு பாசனம், பட்டுப்பூச்சி வளர்ப்பு மற்றும் இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் என இத்திட்டம் பல்வேறு பிரிவுகளாக,பிரிக்கப் பட்டுள்ளது. அப்பிரிவுகளில் ஒருசில வருமாறு :

1. ஆடு, பன்றி, கோழி, வாத்து வழங்குதல்
2. வண்டிகள், வண்டி மாடுகள், வழங்குதல்
3. தனிப்பட்ட சிறுபாசனப்பணிகள்
4. நில மேம்பாடு மற்றும் மண்வளப் பாதுகாப்பு
5. நீர் நிர்வாகம்.
6. பால்பண்ணை அபிவிருத்தி
7. மீன்வளம்
8. தோட்டக் கலை
9. பட்டு வளர்ப்பு
10. சமுதாயக் காடுகள்
11. கிராமியத் தொழில்கள் மற்றும் கைவினைத் திட்டங்கள் (பனைத் தொழில், கைத்தறி, பாண்டம் உற்பத்தி, தோல் பதனிடு தல், மரப் பொருட்கள் செய்தல், வைரம் வெட்டுதல் முதலியன.)
12. வேலைக்கான முதலீட்டுக் கடன் உதவி
13. அடிப்படை வசதி முன்னேற்றத்திட்டங்கள்

நலிந்த பிரிவினைச் சார்ந்த மக்கள் எவ்வாறு நன்மைகளைப் பெறு கிறார்கள் என்பதை ஒரு சில சான்றுகள் மூலம் விளக்கலாம்.

## ஆடுவளர்க்கும் பேச்சியம்மாள்

மலைவாழ் பெண்ணொருத்தி ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறாள். வானத்தையும் அவ்வப்போது பார்த்துக் கொண்டிருக்கிறாள். தான் மழையில் நனைந்தாலும் ஆடுகள் மழையில் நனையக் கூடாது என்ற கவலை. நாம் அவளைச் சந்திக்கிறோம். ஆனால் அவளோ தன் மாமியாரை உரக்கக் கூப்பிடுகிறாள். மலையிலே அவள் குரல் எதி ரொலிக்கிறது. மாமியார் ஓடோடி வருகிறாள்.

இடம் ஏலகிரி மலை. ஊர் அத்தானாவூர். மலைவாழ் மக்களுக்குரிய அச்சம், கூச்சம், அவளுக்கில்லை. மாமியாரை அறிமுகப்படுத்துகிறாள். அவள் பெயர் பேச்சியம்மாள். கணவரை இழந்த 60 வயதினள். நாம்



85354



அரிப்பினால் படிமத்தில் ஏற்பட்டுள்ள துவாரங்களின் தோற்றம்.

## 1. இயற்பியல் முறை:

இம்முறை எந்த வேதியப் பொருளின் துணையுமில்லாமல் எளிதில் கையாளத் தகுந்தது. உளி, சுத்தி, ஊசி போன்ற சாதாரண உபகரணங்களைக் கொண்டு கவனமாகப் படிமங்களின் மேற்பகுதியைச் சுத்தம் செய்யலாம். எல்லாப் படிமங்களையும் இம்முறையில் சுத்தம் செய்ய முடியாது. பூமியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட சில படிமங்கள் மண்ணால் மூடப்பட்டிருக்கும். உட்பகுதி இளம்பச்சையான நிறத்துடன் நேர்த்தியாக இருக்கும். இந்நிலையிலுள்ள படிமங்களை இம்முறையில் சுத்தம் செய்யலாம். மிகுந்த வேலைப்பாடுகள் நிறைந்த பகுதிகளில் சிறிய ஊசிபோன்ற கருவிகளால் நன்கு சுத்தம் செய்ய வேண்டும். சில பகுதிகளில் கெட்ட பசுங்களிம்பு இருக்கும். அந்தப் பகுதியைச் சிறிய சுத்தியால் தட்டினால் பொறுக்குப் போன்ற பொருள் கீழே விழுவதைக் காணலாம். உட்பகுதியில் இளம் பச்சை கலந்த வெள்ளை உப்பு இருக்கும். இந்த உப்புப் பகுதியும் நீக்கப்பட வேண்டும். நீரைப் பயன்படுத்தவே கூடாது. நீர் வெண்கல வியாதியை எளிதில் பரப்பும். கருவிகள் உட்புகா இடங்களில் நூல் கயிற்றின் உதவியால் சுத்தம் செய்யலாம். இடுக்கமான பகுதிகளில் நூல் கயிற்றைச் செலுத்தி முன்னும் பின்னும் இழுத்தால் அப்பகுதி சுத்தமாகும். கடைசியாக உப்புக்கள் இல்லாதவாறு அசிட்டோன் என்ற திரவத்தால் பஞ்சின் உதவி கொண்டு படிமம் முழுவதும் சுத்தம் செய்யலாம். இம்முறையில் சுத்தம் செய்த பின்பு மேலும் படிமம் கெடாமல் இருக்க 2 சதவிகிதம் பாலிவினைல் அசிட்டேட்டை 1:1 அசிட்டோன் டொலுயீன் கலவையில் கலந்து படிமத்தின்மீது மேற்பூச்சாக [illegible]

## 2. வேதியல் முறை:

பூமிக்குள்ளிருந்து எடுக்கப்படும் படிமங்கள் மண்ணோடு கால்சியம் கார்பனேட் போன்ற பொருட்கள் ஒட்டிக் கொண்டிருக்குமானால், படிமத்தை 10 சதவிகிதம் சோடியம் ஹெக்ஸா மெட்டா பாஸ்பேட் கரைசலில் மூழ்க வைத்தால் கால்சியம் கார்பனேட் போன்ற பொருட்கள் நீக்கப்படுகின்றன.

பசுங்களிம்பு ஒரு படிமத்திற்கு அழகூட்டுகிறது. இது படிமத்தைப் பாதுகாக்கிறது. கெட்ட பசுங்களிம்பு படிமத்தில் இருந்தால் அது கண்டிப்பாக நீக்கப்பட வேண்டும். வேதியல் பொருட்களின் துணை கொண்டு நீக்கப்படலாம். பசுங்களிம்பு நீக்கப்படாவண்ணம் கெட்ட பசுங்களிம்பு மாத்திரம் நீக்க ஒரு முறையும், கெட்ட பசுங்களிம்பு நீக்குங்கால் அத்துடன் பசுங்களிம்பும் அழியக்கூடிய மற்றொரு முறையுமுண்டு.

### பசுங்களிம்பு கெடாமல் சுத்தம் செய்தல்:

மண் போன்றவற்றால் மூடப்பட்ட பசுங்களிம்புடன் கூடிய படிமம் பாதிக்கப்பட்டிருக்குமாயின் அந்தப் படிமத்தை 10சதவிகிதம் சோடியம் செஸ்க்யூ கார்பனேட் கரைசலில் சில நாட்கள் படிமத்தை அமிழ்த்தி வைத்திருந்தால் கெட்ட பசுங்களிம்பு கரைந்து விடுகிறது. இவ்விதமாக, கெட்ட பசுங்களிம்பு நீங்கும் வரை வைத்திருந்து நீரில் சுத்தம் செய்தால் படிமம் சுத்தமாகிறது. இவ்விதமாகச் சுத்தம் செய்த பின்பும் இடைவெளிகளில் பயன்படுத்திய வேதியற்பொருட்கள் தேங்கி நின்று, பிறகாலத்தில் தீங்கிழைக்கக்கூடும். ஆகவே, தீவிர கழுவுமுறையைக் கையாள வேண்டும். படிமத்தை ஒரு கலத்திலுள்ள காய்ந்து வடித்த நீரில் மூழ்க வைத்துச் சூடுபடுத்த வேண்டும். சூடாக்கிய பின் குளிர வைக்க வேண்டும். இவ்விதமாகப் பலமுறை செய்து கழுவிய நீரைச் சோதனை செய்து பார்த்து குளோரைடு என்ற உப்பு நீங்கும் வரை இம்முறையில் சுத்தம் செய்ய வேண்டும். குளோரைடு உப்பு நீக்கப்பட்டதா என்பதைக் கண்டறிய படிமத்தைக் கழுவிய நீரில் சிறிது வெள்ளி நைட்ரேட் கரைசலை ஊற்றும்போது வெண்மையான வீழ் படிவு உண்டாகக் கூடாது.

### பசுங்களிம்புடன் கெட்ட பசுங்களிம்பை நீக்குதல்

கெட்ட பசுங்களிம்பு, படிமத்தின்மீது அதிகமாகப் படர்ந்திருக்குமாயின் அப்படிமத்தைக் காரத்தன்மையுடைய சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட் கரைசலில் மூழ்க வைக்க வேண்டும். ஐந்து பகுதி சோடியம் ஹைட்ராக்ஸைடையும், 15 பகுதி சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட்டையும், 80 பகுதி காய்த்து வடித்த நீரில் கரைத்தால் கிடைப்பது காரத்தன்மையுடைய சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட் கரைசலாகும். இக்கரைசல் கெட்ட பசுங்களிம்பிலுள்ள குளோரைடோடு ஒரு கூட்டுப் பொருளாக மாறி அதனைக் கரைக்கிறது. நிறமற்ற இக்கரைசல் தாமிரக் குளோரைடு உப்போடு கலந்து, அடர்ந்த நீல நிறமாகக் காணப்படும். படிமத்திலுள்ள உலோகத்தோடு வினை புரிவதில்லை. சுத்தமாக்கியபின் சிவப்புநிற குப்ரைட் காணப்படும். அதனை 10 சதவிகிதம் சிட்ரிக் அமிலத்தில் மூழ்க வைத்து அப்புறப்படுத்தலாம். சுத்தம் செய்த பின் தீவிரக் கழுவு முறையைக் கையாண்டு நன்கு சுத்தம்செய்து உலர வைக்க வேண்டும். பின், 1:1 என்ற விகிதத்தில் கலக்கப்பட்ட அசிடோன் டொலுயீன் கலவையில் கரைத்த 2 சதவிகிதம் பாலிவினைல் அசிடேட் கரைசலைப் பூசி பாதுகாக்கலாம்.

கெட்ட பசுங்களிம்பினால் (வெண்கல வியாதி) பாதிக்கப் பட்ட படிமம்.



### மின்வேதியல் முறை :

வேதியல் முறையில் சுத்தம் செய்வது, வேதியற் பொருளையும் காலத்தையும் அதிகம் எடுப்பதால் பொருளாதாரமான முறையன்று, ஆகவே, விரைவில் படிமங்களைச் சுத்தப்படுத்த மின்னாற்றலைப் பயன்படுத்தலாம். ஒரு சில பகுதிகளில் மாத்திரம் படிமம் பாதிக்கப்பட்டிருக்குமாயின் அந்தப் பகுதியில் மாத்திரம் துத்தநாகத் துகள்களைப் பரப்பி அதன் மீது நீர்த்த கந்தக அமிலத்தைத் தெளித்தால் சற்று நேரத்தில் அப்பகுதியில் மாற்றம் ஏற்படுகிறது. பிரஷினால் தேய்த்தால் உப்புக்களும் அழுக்குகளும் நீங்கிச் சுத்தமாகிறது. இவ்விதம் சுத்தம் செய்த பின் நன்கு கழுவி உலர வைத்துப் பின் மேற்பூச்சுப் பூசலாம்.

### மின் கரைசல் குறைப்பான் முறை:

படிமங்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு உருத்தெரியாமல் இருந்தாலும் இம்முறையில் நேர்த்தியாக, குறைந்த காலத்தில் குறைந்த செலவில் சுத்தம் செய்யலாம். இம்முறை அதிகச் செலவற்றது. இதற்காகச் சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உபகரணங்கள் இருக்கின்றன. ( சுத்தஞ் செய்யப்பட வேண்டிய படிமம் எதிர் மின் வாயோடு இணைக்கப்படுகிறது. 5 சதவிகிதம் சலவை சோடாக் கரைசலில் படிமம் மூழ்க வைக்கப்படுகிறது. இருப்புக் கலத்துடன் படிமம் நேரடித் தொடர்பு கொள்ளா வண்ணம் சீனாக் களிமண் தட்டின்மீது வைக்கப்படுகிறது. பொருளின் அளவுக்குத் தக்க 2-15 ஆம்பியர் நேரடி மின்சாரம் பாய்ச்சப்படுகிறது. சில நாட்கள் மின்சாரம் பாய்ச்சினால் படிமத்திலுள்ள கெட்ட பசுங்களிம்பு மற்றும் வேண்டாத மண் முதலியன நீங்குகின்றன. இரும்புக் கலத்திலிருந்து எடுத்தவுடன் பிரஷினால் நன்கு தேய்த்துச் சுத்தம் செய்யப்படுகிறது. தீவிரக் கழுவு முறையைக் கையாண்டு, சுத்தம் செய்து, உலர வைக்க வேண்டும். மின் பாலிவினைல் அசிடேட் மேற்பூச்சுப் பூசிப் பாதுகாக்கலாம்.



சுத்தம் செய்யுமுன் படிமத்தின் தோற்றம்.



சுத்தம் செய்தபின் படிமத்தின் தோற்றம்.

படிமங்கள் சுத்தம் செய்த பின்னும்கூட, சில வேளைகளில் இளம் பச்சை கலந்த வெள்ளைப் பொடி படருவதைக் காணலாம். இதற்குக் காரணம் படிமத்தில் காணப்படும் சிறிய துவாரங்களாகும். இத்துவாரங்களில் தேவையற்ற உப்புகள் நீரோடு கலந்து தங்கி விடுகின்றன. இப்படி அதிக அளவில் துவாரங்கள் இருக்குமாயின் துவாரங்களில் தங்கியுள்ள உப்புகள் முழுவதும் அகற்றப்படவேண்டும். சுத்தமான அமிலக் காரத்தன்மையற்ற காகிதக்கூழ் படிமத்தின் மேல் பூசப்பட்டு, உலர வைக்கப்பட வேண்டும். உலர்ந்த பின் அதனை நீக்கி மேலும் நீரில் கழுவிப் பின்பு படிமத்தின்மீது பூச வேண்டும். காகிதக் கூழ் கழுவிய நீரைச் சோதனை செய்து பாாத்து குளோரைடு உப்பு இல்லாத் வரை இம்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். பின் துவாரங்களில் வெள்ளி ஆக்ஸைடு வைத்து அடைக்க வேண்டும்.

துவாரங்களில் எஞ்சியிருக்கும் குளோரைடு வெள்ளி ஆக்ஸைடோடு வினைபுரிந்து கெட்டியாகி துவாரத்தை அடைக்கிறது. படிமங்களோடு மற்ற உலோகங்களின் தொடர்பு இருந்தால் தொடர்புடைய பகுதிகளில் அரிப்பு ஏற்பட்டுப் படிமங்கள் கெட ஏதுவாகின்றன. ஆகவே மற்ற உலோகங்களோடு படிமம் தொடர்பில்லா வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும். தகுந்த முறையில் பாதுகாக்கப்பட்ட படிமங்கள் பல ஆண்டுகள் கெடாமல் இருக்கின்றன.

இங்கு கூறப்பட்ட முறைகள் அனைத்தும்சென்னை அரசு அருங்காட்சியகத்திலுள்ள இரசாயன பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சிக் கூடத்தில் கையாளப்பட்டுப் படிமங்கள் பாதுகாக்கப்படுகின்றன. படிமங்களைப் பாதுகாப்பதில் தமிழகம் முன்னோடியாக உள்ளது. அரும்பெருஞ்செல்வமாம் படிமங்களைப் பாதுகாப்பது நமது கடமையன்றோ!

அவருடன் உரையாடுகிறோம். பேச்சிலே தெளிவு, நம்பிக்கை தெள்ளெனத் தெரிகிறது. அருகிலிருந்த திருப்பத்தூர் ஒன்றிய அலுவலர்களுக்கு மனதிலே நல்லது செய்தோம் என்ற மனநிறைவு கண்டு அதில் நாமும் பங்கேற்கிறோம். ரூ. 2500/- கடன் அனுமதிக்கப்பட்டு அதிலே பாதித் தொகையான ரூ. 1250/- மானியமும் வழங்கி, 9 ஆடுகளும் ஒரு கிடாவும் கொண்டு 10 ஆடுகள் அவருக்குத் தரப்பட்டுள்ளன. சனவரி 84ல் அவை கொடுக்கப்பட்டன.

மேலும் வினவியதில் ஆடுகள் அனைத்தும் சினையாக உள்ளன, ஆனால் அவற்றை விற்றுவிடக் கூடாதென்று தெரிந்துகொள்கிறோம். மலைப் பகுதியிலே தீனிக்குச் செலவா என்ன? ஒன்றுமில்லை. ஈராண்டுகளுக்குப் பிறகு ரூ. 5000/- மதிப்புள்ள ஆட்டுப்பண்ணைக்குபேச்சியம்மாள் உரிமையாளராகி விடுவார். ஐயமில்லை. ஓராண்டிற்குப் பிறகு பார்த்தால் கூட அவரிடம் 10 ஆட்டுக் குட்டிகள் இருக்கும். அனேகமாக அவற்றில் 5 கிடா, 5 ஆடு இருக்குமென்பது மரபு. 5 கிடாக்களையும் விற்றால்ரூ 900/- கிடைக்குமென்பது உறுதி அல்லவா? வாங்கிய கடனுக்கு ரூ. 300/,- செலுத்தினாலும் ஒரு பெரிய தொகை பேச்சியம்மாளுக்கு ஆதாயமாகக் கிடைக்குமல்லவா?

கணவரை இழந்த அவரை ஊர்நல அலுவலர் அணுகி ''ஆடுகள், பன்றிகள், கோழிகளை வளர்க்க உங்களுக்கு கடனும் மானியமும் தருகிறோம். விரும்பியதைச் சொல்லுங்கள்'' என்றார். பேச்சியம்மாள் ஆடுகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். நம்பிக்கை நிச்சயமாக வீணாகாது. அவரை நாம் வாழ்த்துவோம். ஊரக வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோளையும் போற்றுவோம்.

## பன்றி வளர்க்கும் முன்னாள் இராணுவ வீரர்

பலர் வெள்ளைப் பன்றிகளை வளர்க்க முன்வருவதில்லை. ஆனால் முன்னாள் இராணுவ வீரர் திரு. இராஜமாணிக்கம் அப்படிப்பட்டவரல்லர்

மூன்று பெண், ஓர் ஆண் வெள்ளைப் பன்றிகளை வாங்கிக்கொள்ள ரூ. 1000/-ம் அவற்றின் தீனிச் செலவுக்காக ரூ. 900/-ம் அவருக்கு கடனாக அளிக்கப்பட்டது.

''எல்லாப்பன்றிகளும் கருவுற்று இருக்கின்றன. இன்னும் 6 மாதங்களில் 6 முதல் 10 குட்டிகள் எனக்குக் கிடைக்கும். அவற்றையும் நன்றாக கொழு கொழுவென்று வளர்த்து ஒவ்வொன்றையும் ரூ. 500க்கு விற்பேன் இதில் சந்தேகமில்லை'' என்று இராணுவ சல்யூட் அடித்துச்சொன்னார் திரு இராஜமாணிக்கம்.



பன்றிகளை நாம் பார்க்கும்போது அவை பன்றிகள்தானே என ஒதுக்க முடியவில்லை. தீனி தின்ற பிறகு அவரையே சுற்றிச் சுற்றி விளையாடுகின்றன. இவற்றை சுத்தமாக வைத்திருப்பதுடன் பல சுட்டித்தனமான வேலைகள் செய்யவும் பழக்கியிருக்கிறார் இந்த முன்னாள் இராணுவ வீரர்.

அவருடைய நம்பிக்கை வீண் போகாது. அவரைப்பார்க்கிறோம்: மீண்டும் மிலிட்டரி சல்யூட்-தாறுமாறாக நாமும் ஒரு சல்யூட் அடித்துவிட்டு விடைபெறுகிறோம்.

## இரும்புத் தொழிலக உரிமையாளர் முனுசாமி

இரண்டு அறைகள் கொண்ட ஒரு நீண்ட வீடு. ஓர் அறையில் குடும்பம், இன்னொன்றில் ''வடிவேலன் இரும்புத் தொழிலகம்'' உரிமையாளர் திரு. பி. கே. முனுசாமியுடன் இரண்டுபேர்கள் சுறுசுறுப்புடன் மின் இணைப்பு பெற்ற இயந்திரத்தில் அழகிய இரும்புத் துண்டுகளை ஒன்றிணைத்து, பெரிய நீண்ட இரும்பு கிராதிகளைச்செய்து தள்ளுகிறார்கள் அவருடைய இளம் மனைவி கையில் குழந்தையுடன் கணவரைப் பெருமிதத்துடன் பார்த்த வண்ணமிருக்கிறார்.

''நான் வேலையைத் தேடி அலைந்தேன். இப்போது அது என்னைத் தேடி வருகிறது''. —திரு. முனுசாமியின் அடக்கமான பேச்சு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

அவர்மேலும் கூறுகிறார். ''எங்கள் ஊர்நல அலுவலர் இந்தப்பக்கம் வருவார் போவார். என் நிலைமையைப் பார்த்து உதவி வேண்டுமானால் செய்கிறோம்' என்றார். இரண்டு மூன்று முறை வங்கிக்கும், பி. டி. ஓ



ஆபிசுக்கும் சென்றேன். சில பேப்பர்களில் கையெழுத்துப்போட்டேன் எனக்கு ரூ. 5000/- பணவசதி கிடைத்தது. மானியத் தொகை ரூ. 1666 போக,பாக்கியில் ரூ. 1000 திருப்பிக்கட்டிவிட்டேன்''

மேலும் வினவியதில், ரூ. 300 மட்டுமே சம்பாதித்த அவருக்கு தற்போது ரூ. 500 வரை மாத வருவாய் கிடைக்கிறது. கடந்த 6 மாதங்களில் சிலரிடம் 100 ஆர்டர்களுக்குமேல் கிடைத்து, வாடிக்கைகாரர்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ளார் என்று அறிகிறோம்.

இவரைப் போன்றே, படங்களுக்கு கண்ணாடி பிரேம் செய்பவர், மளிகை வியாபாரிகள், சைக்கிள் கடைகள், ஆடு, கோழி, வாத்து பண்ணைகள் வைப்பது என்பது சமுதாயத்தில் நலிந்தோர் பலருக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் நல்லுதவி செய்துள்ளது. நீங்களும் அந்த தரப்பினரால் இதுபோன்ற உதவிகளைப் பெற்று வாழ்வில் ஏன் முன்னேறக் கூடாது?

## கொளப்பலூர் தொகுதி

## ரங்கசாமி (த/பெ. ராமசாமி), மல்லிபாளையம்

திரு ரங்கசாமி என்பவர் ஒரு சிற்ப கலைஞர் சிறிய மரக்கட்டைகளில் சிறிய சிறிய அழகுப் பொருட்கள் செய்து, தமது குடும்ப வாழ்க்கை நடத்தி, வருகிறார். கடவுள் சிலைகள், மற்றும் புகைப்படங்கள் கொடுத்தால் அதே மாதிரி அழகுடன் சிலை செய்கிறார். இவர் ஒரு சிலை செய்வதற்கு

ஏறத்தாழ ஒருவார காலமாகும். இவருக்கு எந்தவிதமான சொத்தோ, நிலமோ, வீடோ இல்லை. வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறார். இவரது சிற்பக்கலை முன்னேற்றம் அடைய, கடந்த 1981-82ல் ரூ 1000/- கோரியபோது கனரா வங்கியினர் கொடுத்தார்கள். மேலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இவருக்கு மானியம் ரூ. 330/- அளிக்கப்பட்டது. இவர் மானியத்திட்டத்தின்கீழ் கடன் வழங்கிய பிறகு தற்போது அவரது வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. இவருக்கு 2 மகன்கள், ஒரு மகள் இருக்கிறார்கள். இவர் வங்கிக்கடனை முழுமையாக தவணை தவறாமல் செலுத்தியுள்ளார். தற்போது ரூ 500 சேமிப்பில் வைத்துள்ளார். இவர் 8ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் கடன் வாங்கியதற்கு முன்பு, மாத வருமானம் ரூபாய் 150/-ஆக இருந்தது. தற்போது ரூ. 200/-ஆக உயர்ந்துள்ளது.

## அடிப்படை வசதிகள்

இம்மாநிலத்தில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தை நிறைவேற்றும் போது அடிப்படை வசதிகளைச் செய்து தருவது மிகவும் அவசியம் என்பதை அரசு உணர்ந்தது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் வழங்கப்படும், பல்வேறு உதவிகள் மூலம் பெருகும் தொழில்கள் அரசின் பல்வேறு துறைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி உள்ளது. தன் சொந்த நிதியிலிருந்து இதை நிறைவேற்ற அரசு இயலாத நிலையில் உள்ளது. எனவே கடந்த 3 ஆண்டுகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு, பல்வேறு அடிப்படை வசதித்திட்டங்களுக்கு அனுமதி வழங்கி உள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயன்பெறுவோர் பதிவு செய்துள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு 'வேன்' வழங்குதல், பால் எடுத்துச் செல்ல உதவும் பாத்திரங்கள் (Milk cans) வழங்குதல் ஆகியவை இக்குழு அனுமதி அளித்துள்ள வசதிகளில் அடங்கும். மீனவர்களுக்கு விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து இருப்பது மற்றுமொரு குறிப்பிடத்தக்க முக்கியமான, திட்ட



மாகும். வழங்கப்பட்ட கறவை மாடுகள், ஆடுகள் ஆகியவற்றின் உடல் நலம் பேணுவதிலும் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. எண்ணற்ற நடமாடும் கால்நடை மருத்துவமனைகளும், செயற்கைக்கருத்தரிப்பு நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. 1981—82 முதற்கொண்டு கால்நடை முன்னேற்றம் கணிசமான அளவு முன்னேறி உள்ளது. எண்ணற்ற தொழில் மற்றும் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் பலப்படுத்தப்பட்டு, கூட்டுறவுப் பிரிவின் கீழ் தமிழ்நாடு துணித்தயாரிப்புக் கழகம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக்கழகம், ஆதரவோடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்ட ஒதுக்கீட்டில் இருந்து, மின்தறிகள் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழில் புரிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட மாநில அளவான ஒருங்கிணைப்புக் குழு, கடந்த 3 ஆண்டுகளில் அனுமதி அளித்த தொகை ஏறத்தாழ 6 கோடி ரூபாய்.

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் காய்கறி உற்பத்திச் சங்கங்கள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டமும் சத்துணவுத் திட்டமும் ஒன்றுக்கொன்று ஒருங்கிணைந்து செயல்பட ஆவன செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கங்களை நிறுவி, சத்துணவு மையங்களுக்குத் தேவையான காய்கறிகளை வழங்குவதற்காக, சத்துணவுத்திட்டத்தோடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடர்பு படுத்தப்பட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயன் பெறுவோரான சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களுக்குள் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொண்டனர். 25—3—84 வரை சென்னை மற்றும் உதக மண்டலம் தவிர பிற மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உதவியோடு 61 காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

## நிர்வாக அமைப்பு

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அந்தந்த மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் இந் நிறுவனங்களின் தலைவர்களாகச்செயல்படுகின்றனர். திட்ட அலுவலர் இதன் தலைமைச் செயல் அலுவலராக இருப்பார். ஒவ்வொரு தொழிலிலும் உள்ள வல்லுநர்கள் அவருக்கு உதவுகின்றனர். மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் நிர்வாகக்குழுவில் அந்தந்தப் பகுதியின் நாடாளுமன்ற, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஆதி திராவிடர் பழங்குடியினர் உள்ளிட்ட பயன்பெறுவோர் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் வெற்றி அரசின் பல்வேறு துறைகள் மற்றும் நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பில் தான் அடங்கி உள்ளது. எல்லா வற்றிற்கும் மேலாக இத்திட்டத்தின் வெற்றி இத்திட்டத்தால் பயன் பெறுவோர் கரங்களில்தான் அடங்கி உள்ளது.

## சாதனை :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பெற்ற வெற்றிகளைக் கீழ்க்காணும் பட்டியல் காட்டும்:-

| வ. எண் | விவரம் | 1980-81 | 1981-82 | 1982-83 | 1983-84 |
|---|---|---|---|---|---|
| 1. | மொத்த ஒதுக்கீடு (ரூபாய் இலட்சங்களில்) | 1880.00 | 2256.00 | 3008.00 | 3022.00 |
| 2. | மொத்த செலவு (ரூபாய் இலட்சங்களில்) | 1691.09 | 2810 64 | 3416.14 | 3368.96 |
| 3 | ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த கடன் (ரூபாய் இலட்சங்களில்) | 2966 52 | 4736.44 | 6286.87 | 5975.09 |
| 4. | திரட்டப்பட்ட மொத்த முதலீட்டுத் தொகை (ரூபாய் இலட்சங்களில்) | 4657.61 | 7547.08 | 9703.01 | 9344.05 |
| 5. | பயன் பெற்றோரின் மொத்த எண்ணிக்கை | 2,55,323 | 3,58,225 (குடும்பங்கள்) | 2,71,563 | 2,77,641 |
| 6. | பயன் பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் எண்ணிக்கை (குடும்பங்கள்) | 48,511 | 97,417 | 1,02,026 | 1,08,718 |
| 7. | அடைந்த சாதனை சதவீதம் | 113% | 159% | 120% | 122% |
| 8. | ஆதி திராவிடர்களைப் பொறுத்த வரையிலான சாதனை சதவீதம் | 21.5% | 43.2% | 45.2% | ⊛ |

(⊛ மொத்தம் பயனடைந்தோரில் ஆதிதிராவிடர் சதவீதம்)

ஊரக வளர்ச்சித்துறையின் 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் — ஒரு பார்வை' என்னும் வெளியீட்டிலிருந்து தொகுக்கப்பெற்றது.

## ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தோடு பின்னிப்பிணைந்த இன்னொரு திட்டம் தான் 'டிரைசெம்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் ஊரக இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம். சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளக் குடும்பங் களைச் சார்ந்த இளைஞர்களும் இளம் பெண்களும் சுய வேலை வாய்ப்பு பெறும் நோக்கத்துடன் பல் வேறு தொழில்களில் பயிற்சி அளிப்பதே இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத்திட்டமாகும்.

18 முதல் 35வயது வரையிலான ஆண் பெண்அனைவருக்கும் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படும் இத்திட்டத்தில் இடம்பெறும் சில தொழில்கள் வருமாறு:—

1. கருமார் தொழில்
2. குழாய் பழுது பார்த்தல்
3. மின்சார மோட்டார்களுக்கு கம்பி சுற்றுதல்
4. மிதிவண்டி பழுது பார்த்தல்
5. வானொலிப் பெட்டித்தொழில் நுட்பம்
6. கைத்தறி நெசவு
7. விளையாட்டுப் பொருள் செய்தல்
8. தையல் பூ வேலை
9. தையல்

ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற வகையில் தொழில்கள் தேர்தெடுக்கப் பட்டு, வேளாண்மை, சிறு தொழில் மற்றும் அவைகளைச் சார்ந்த இதர பிரிவுகளுக்குப் பயன்பட்டு, சுய வேலை வாய்ப்பு நல்குகின்ற இனங்களில் தக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஊர்நல அலுவலர் பயிற்சி நிலையங்கள், விவசாயப் பயிற்சி நிலையங்கள், வேளாண்மை விஞ்ஞான பயிற்சி நிலையங்கள், வேளாண்மை மற்றும் இதரப் பல்கலைக் கழகங்கள் தொழிற் பயிற்சிக் கூடங்கள் போன்ற தற்போதுள்ள பல்வேறு பயிற்சி நிலையங்களிலும் மாநில, மத்திய அரசுகள் மற்றும் தக்க நற்சேவை அமைப்புக்களின் நிலையங்களிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட தொழிலில் தக்க அனுபவம் பெறும் வகையில் முதலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுய வேலை வாய்ப்பில் இயங்குகின்ற வகையில் போதிய தன்னம்பிக்கையை பயிற்சியாளர்கள் பெற, வேண்டிய அளவில்



செய்முறைப்பயிற்சிகளில் பயிற்சியாளர்கள் பயிற்சி பெற இதில் வாய்ப்பு உள்ளது. பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. எந்தவொரு அடிப்படைக்கல்வித் தகுதியும் குறிப்பிடப்படாமல் பயிற்சி யாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை எளிதாக்கப் பட்டுள்ளது.

ஒரு வட்டாரத்தில் ஓர் ஆண்டில் 40 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்பது சாதனை இலக்கு. பயிற்சி அளிக்கப்படும்போது முதல் ஆறு மாதங்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்பு, நிதி உதவியும், அரசு மற்றும் வங்கிகளிலிருந்து மானியமும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. கடன் வழங்குவதைப் பொறுத்த வரையில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெற்ற இளைஞர் களுக்கு வங்கிகள் முன்னுரிமை அளித்து வருகின்றன. பிற்காலத்தில் ஏதேனும் இடையூறு வராது இருக்க, பயிற்சிக்கு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்தது முதற்கொண்டு அவர்கள் நலனில் வங்கிகள் அக்கறை காட்டத் தொடங்கி விடுகின்றன.

## பேபி சௌந்திரம்மாள்

இவர் 1981—82ம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் தையல் பயிற்சியில் சேர்ந்து, 6 மாத காலம் காட்டி

பாலோயம் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றார். பேபி சௌந்தராம்பாள். ரூ. 150/— படிப்பு உதவித்தொகை பெற்றார். இவர் தந்தை முடி அலங்காரத் தொழில் செய்து வருகிறார் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவர். பயிற்சிக்காலத்தில் வழங்கப்பட்ட உதவித் தொகையை, பாங்க் ஆப் இந்தியாவில் சேமிப்புக்கணக்கில் செலுத்தி வந்து, பயிற்சி முடியும் காலத்தில் தையல் இயந்திரம் ஒன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடனாக ரூ. 950/- விலையில் வாங்கினார். மான்யத் தொகை மூன்றில் ஒரு பங்கான ரூ. 316/- போக மீதத் தொகையை ரூ. 634 தன் சேமிப்பு கணக்கிலிருந்து திருப்பி செலுத்தி கடனை முடித்து விட்டார்.

இவர் தற்போது காரட்டிபாளையம் மெயின்ரோட்டில் பாங்க் ஆப் இந்தியாவுக்கு எதிரில் சிறு பெட்டிக்கடை வைத்து, அதில் தையல் இயந்திரம் வைத்து, துணி தைத்துக்கொடுத்து, நல்ல முறையில் கடை நடத்திவருகிறார். குறிப்பாக - பெண்களுக்கான ஆடைகள் நன்கு தயாரித்து தருகிறார். தினம் சராசரி 7 ரூபாய்க்கு குறையாமல் சம்பாதித்து, தந்தைக்கும் உதவியாக இருந்து வருகிறார்.

## பிளாஸ்டிக் வயர் பின்னும் தட்சிணாமூர்த்தி

எனக்கு நாற்காலிகள், கட்டில்களுக்கு பிளாஸ்டிக் வயர்களை பல வண்ணங்களில் வடிவங்களில் அழகாகப் பின்னத் தெரியும். தொடர்ந்து எனக்கு வேலை கிடைக்காது. 4 குழந்தைகளுடன் சிரமமான வாழ்வை வாழ்ந்து வந்தேன்.'' என்று தம் பழைய வாழ்க்கையை நினைவு கூர்கிறார் திரு ஏ. தட்சிணாமூர்த்தி. இவர் தொரப்பாடி ஊராட்சிப் பகுதியில் (வேலூர் ஒன்றியம்) வசிப்பவர்



ஆனால் இன்று அவர் இரும்பு நாற்காலி, கட்டில் பிரேம்களைத் தயார் செய்து, பிளாஸ்டிக் வயர்களைப் பின்னி நன்றாக தொழில் செய்கிறார். வேலூரிலிருந்து தர்மபுரிக்குச் சென்று அங்கே இத்தொழிலைச் செய்யும் அளவிற்கு அவர் உயர்ந்து விட்டார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தில் ரூ. 1666/- மானியத்துடன் ரூ. 5000/- கடன் அவருக்குத் தரப்பட்டது. ஒரு தவணை கூட பாக்கியில்லாமல் அவர் இதுவரை ரூ. 600 செலுத்துவிட்டார். தினம் அவருக்கு ரூ. 20 வரை வருமானம் தவறாமல் கிடைக்கிறது.

''அரசு அளித்த உதவியினால் என் வாழ்க்கை நல்ல கணிசமாக உயர்ந்துவிட்டது. குடும்பத்திற்காக ஒரு வானொலிப் பெட்டியும் பல எவர்சில்வர் பாத்திரங்கள் ஆகியவை வாங்கிவிட்டேன். அவ்வப்போது கிலோ கணக்கில் அரிசி வாங்கிய நான் இன்று மூட்டைக்கணக்கில் மொத்தமாக நெல் வாங்குகிறேன் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்'' என்கிறார் திரு. தட்சிணாமூர்த்தி.

''இன்னல் எங்களை விட்டது; பிள்ளைகளைப் படிக்க வைக்க, துணி எடுக்க, ஒழுங்காக வீட்டு வாடகை செலுத்த இப்போது எங்களால் முடியுமென்று மன நிறைவுடன் கூறுகிறார் அவர் மனைவி.

## பற்றவைப்பாளர் பாபு

உலோகங்களைப் பற்ற வைக்கும் தொழில் தெரிந்திருந்தும் நிரந்தரமான இடம், போதிய பணம், பொருள், கருவிகள் வசதிகளில்லாததால் போதிய வருவாய் இன்றி வறுமையில் உழன்றுகொண்டிருந்த திரு. பாபுவின் வாழ்க்கையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

வேலூர் ஊராட்சி ஒன்றியத்தின் தொரப்பாடி ஊராட்சியில் வசிக்கும் இவருக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனமும் இந்தியன் வங்கியும் இணைந்து ரூ. 5000/- கடன் வசதி செய்து கொடுத்தது. இதில் ரூ. 1666/- மானியம்.

இத்தொகையைக் கொண்டு திரு. பாபு, பற்றவைக்கும் தொழிலுக்குத் தேவையான தண்டவாளத் துண்டு, இரும்புச் சட்டம், பற்றவைக்கும் கோல், காற்றடிக்கும் கருவி, பெரிய, சிறிய கத்திரிக்கோல், ஈயம், கரி, திராவகம், எல்லாம் வாங்கி, ஓர் இடத்தை வாடகைக்குப் பிடித்து, தொழில் செய்கிறார்.

தினமும் அவருக்கு தற்போது ரூ. 15க்கு குறைவில்லாமல் வருவாய் கிடைக்கிறது. பல நாட்களில் இத்தொகைக்கு மேலேயே வருமானம்



கிடைத்தால் மாதத் தவணையான ரூ. 50க்கு மேல் அதிகப் பணம் கூட வங்கிக்கு கட்டி விடுகிறார். இதுவரையில் 8 மாதத் தவணைகளாக ரூ. 1200/- கட்டிவிட்டார். எஞ்சிய தொகையையும் அவர் செலுத்தி விட்டால், கடையிலுள்ள பொருள்கள் அனைத்தும் அவருக்குச் சொந்தமாகி விடுகின்றன. பிறகு மேலும் அதிகமான வருவாயுடன் அவரால் நிம்மதியாக வாழ, அவருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் உதவியுள்ளது.

## வாடகை சைக்கிள் கடை இராதாகிருஷ்ணன்

தாய், மனைவி, இரண்டு குழந்தைகளுடன் வசதி நிறைந்த மகிழ்ச்சியுடன் வாழும் திரு. இராதாகிருஷ்ணன் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பழைய சைக்கிள்களைப் பழுது பார்த்து, அதனால் கிடைக்கும் சிறு வருமானத்தைக் கொண்டு நாட்களைத் தள்ளிக் கொண்டிருந்தார்.

ஆனால் இன்றோ அவருடைய மாத வருவாய் ரூ. 800/-க்கும் அதிகமாகி விட்டது. ''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நான் பெற்ற நன்மைகளே இவ்வுயர்விற்குக் காரணம்'' என்று முகம் மலர கூறுகிறார் அவர்.

ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இவருடைய ஏழ்மையை அறிந்து, தொழில் திறமையையும் கருத்தில் கொண்டு ''பெடரல் வங்கி'' யின் உதவியுடன் ரூ. 5047/- கடன் அளித்து 10 ஹீரோ சைக்கிள்களை வாங்க உதவியது. இதில் ரூ. 1676-ஐ மானியம்.

''விண்ணப்பம் செய்து கொண்ட ஒரு மாதத்திலேயே எனக்கு கடன் கிடைத்தது. கடன் தொகையான ரூ. 3371-ஐ நான் மாதம் ரூ. 200 வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆனால் சில மாதங்களிலே கட்ட வேண்டிய தவணைக்கு அதிகமாகப்பணம் கட்டிவிட்டதால் நான் ரூ. 100 மட்டுமே தற்போது செலுத்த வேண்டும். அதையும் கட்டிவிட்டால் 10 சைக்கிள்களும் எனக்குச் சொந்தமாகி விடுகின்றன'' என்றார் அவர்.

சைக்கிள்களை வாடகைக்கு விடுவதன் மூலமும் பழுது பார்ப்பதன் மூலமும் இவருடைய மாத வருவாய் ரூ. 810-க்கு உயர்ந்து விட்டது முகத்திலே தெளிவும், வாழ்க்கையில் நம்பிக்கையும் கொண்ட திரு. இராதாகிருஷ்ணன் தன் குடும்பக்கடன் ரூ. 1000/-ஐ முழுவதுமாகத் தீர்ந்து விட்டதாகவும், குடும்பம் முழுவதும் நல்ல உணவுடன் நல்ல உடையணிவதாகவும் கூறுகிறார்.



''ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த நாங்கள் சமுதாயத்தில் மரியாதையுடன் வாழ்கிறோம். பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்கப் போகிறேன்,'' என்கிறார்.

''எங்கள் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. அரசு உதவியால் என் பிள்ளை சைக்கிள் கடை வைத்து எங்களைக் கவனித்துக் கொள்கிறான்.'' என்று மன நிறைவுடன் குரல் தழுதழுக்க நன்றிப் பெருக்குடன் கூறுகிறார் திரு. இராதாகிருஷ்ணனின் அன்னை.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தினால் இவர் குடும்பம் மட்டுமல்ல, இவரைப் போன்ற பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் நன்மைகளைப் பெற்று, வறுமையை விரட்டி, வாழ்வில் வளம்பல பெற்றுள்ளன.

## [illegible]ண்டும் [illegible]ண்டும்

ஆசிரியர் : ஏர்வாடி. எஸ். இராதாகிருஷ்ணன்

வெளியீடு: சுதா பதிப்பகம், 4, முத்துமுதலி தெரு, புரசைவாக்கம், சென்னை-600 007.

பக்கங்கள்: 88 விலை: ரூ 7

இந்நூல், கவிஞர் பலருடைய கவிதை மலர்கள் பூத்துக்குலுங்கும் அழகிய கவிதைப் பூங்கா. கருத்துச் செறிவுடைய பலசிறிய பெரிய தனிப்பாடல்கள் படிப்பவரைப் பரவசப்படுத்துகின்றன.

''பேருழைப்பை நல்கியிந்த பரந்த மண்ணின் மடிநிறைக்கும் வளங்கொழிக்கும் உழைப்பை நாடும் மதிக்கின்றேன், அவர் பெருமை பாடி நிற்பேன்''-ஏர்வாடி.எஸ். இராதாகிருஷ்ணனின் உள்ளம் போற்றும் பேருழைப்பின் திறம் இதன்வழி தெரிகின்றது.

'தீந்தமிழ்க் குழந்தையால் ஆங்கிலச் சிலுவையைச் சுமக்க முடியவில்லையே' என வருந்தும்சரளா இராசகோபாலனின் கவிதை,நயமுடையது.

'ரூபாய்நோட்டு எழுப்பாத ஒலியைக் கீழே விழும் சில்லறைகள் எழுப்புகின்றனவே' என்கிறார் அமுதபாரதி.

நாட்டுப் பற்றுநமக்குத் தேவை என்பதை, 'ஓ! இந்திய தேசமே' என்ற த. க. இராமசாமியின் கவிதை வலியுறுத்துகின்றது. இக் கவிதை மாலையை அணிவதில் தமிழன்னை பெருமையும் மகிழ்வும் கொள்வாள்.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

## நாங்களும் வாழ்கிறோம்

ஆசிரியர்:ஜோதிர்லதா கிரிஜா.

வெளியீடு: வளர்மதி பதிப்பகம். 8-2 இராணி அண்ணா நகர், கே.கே.நகர், சென்னை 600078.

விலை ரூ.25. பக்கம் 340.

'பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா' என்று மகாகவி பாரதி பாடினார். பெண்களைப் பெருமைப் படுத்தினார். ஆனால், இன்னும் நாட்டில் பல இடங்[illegible]

[illegible] மதிக்கப்படுகிறார்கள். இந்த உண்மையை எடுத்துக் காட்டுகிறது இந்த நவீனம்.

ஏழைப்பெண்கள் சமுதாயத்தால் எந்த அளவு அலைக்கழிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெளிவாக ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். ராஜம் அவள் தங்கை விசாலம் இருவருக்கும் ஆண் இனம் தருகின்றகொடுமைகளைப் படிக்கும்போது இது ஒரு நவீனம் என்பதையே மறந்து கண் எதிரில் நடைபெறும் நிகழ்ச்சி என்றே எண்ணிடத் தோன்றுகிறது.

அதிகமான பாத்திரங்கள் இந்த நவீனத்தில் காட்சி தராவிட்டாலும், குறைவான பாத்திரங்களைப் படைத்து அவர்களைக் கொண்டே மிகப்பெரும் நாவல் ஒன்றை எளிய இனிய நடையில், விரசம் எதுவும் இல்லாத முறையில் உருவாக்கியுள்ள ஆசிரியரைப் பாராட்ட வேண்டும். டமால் டுமீல் இல்லையே தவிர, பல திருப்பங்கள் இந்த நவீனத்தில் இருக்கத்தான் செய்கின்றன. விசாலமே கதையைச் சொல்வது போல அமைத்திருக்கும் ஆசிரியர், பெண்களின் மனநிலையையும் அவர்களுக்கு ஏற்படும் அவல நிலையையும் மனத்தில்பதியுமாறு தெரிவித்து, படிப்போரிடம் சபாஷ் பெற்றுவிடுகிறார்.

## நெருப்பு நினைவுகள்

ஆசிரியர்: முத்து எத்திராசன்
வெளியீடு: மும்மணிப் பதிப்பகம், 128, காமராசர் காலனி, தெற்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 600017.

விலை ரூ.6.50 பக்கம் 84.

ஏறக்குறைய எழுபது கவிதைகள் கொண்டது இந்நூல். மரபுக் கவிதை மலர்களும், புதுக் கவிதைத் தோரணங்களும் கொண்ட இந்நூலில் உள்ள கவிதைகள் சுருக்கமாகவும் சுவையாகவும் திகழ்கின்றன.

கசங்கிய முல்லை மலர், கடற்கரை, உள்ளமே..., உண்மை மகிழ்ச்சி, வெற்றி பெறுவாய், அல்லிக்குளம் ஆகிய மரபுக் கவிதைகள் பொருள் பொதிந்தவையாக உள்ளன. தற்பெருமை, பட்டுப்போன மரம், வானம், காளான், தீக்குச்சி, வானவில், புத்தகம் ஆகிய புதுக்கவிதைகள் பாராட்டுக்குரியன.

செத்தபின் வயிற்றுள் சுமப்பதால் மண்ணுக்குப் பெயர் தாய்நாடு' என்ற வரிகள் ஆசிரியரின் சிந்[illegible]

[illegible] இன்றன.

எளிய, இனிய நடை இந்நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

—சுந்தர்

# நூல் நயம்

## பாடுவோம் திராவிடப்பண்

ஆசிரியர்: தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து

வெளியீடு: சிந்தனையாளர் பதிப்பகம், சென்னை-28.

விலை: 600 காசுகள், பக்கம்: 92

நான்கு ஏடுகளில் எழுதிய 19 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். ஒவ்வொரு கட்டுரையும் பிரச்சினையை அலசிப் பார்க்கும் ஆய்வுக் கட்டுரையாக விளங்குகிறது. கனலின் தெறிப்பு, புனலின் ஓட்டம்—தென்றலின் தழுவல்—புயலின் பாய்ச்சல் இப்படிப் பல்வேறு உணர்வுகளைக் கட்டுரைகளில் கொட்டியிருக்கிறார் நூலாசிரியர். ஆசிரியர் தலைசிறந்த பேச்சாளர் மட்டுமல்லர், தலைசிறந்த எழுத்தாளரும் ஆவார் என்பதை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது.

மொழி வரலாறு, இன வரலாறு, இயக்க வரலாறு எனப் பல்வேறு வரலாறுகளை வார்த்தைக் கோலங்களின் வாயிலாக இச்சிறு நூலில் தீட்டியிருக்கிறார் ஆசிரியர். துள்ளு நடை நெஞ்சை அள்ளுகிறது; சொல்லியுள்ள கருத்துகள் அறியாமையை அகற்றுகின்றன. புள்ளி விவரங்களும் இதில் உண்டு; போர்க் குரலும் காணப்படுகிறது. நூல் சிறிதெனினும் இதில் தொகுத்திருக்கும் [illegible]லாற்றுச் செய்தி பெரிது! நூலின் புகழும் [illegible] குறிப்பிடலாம்.

## சாதனைகள்

| விவரம் | 1981—82 | 1982—83 | 1983—84 |
|---|---|---|---|
| 1. பயிற்சி அளிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை | 61,117 | 40,468 | 30,970 |
| 2 சுயவேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை | 36,376 | 28,343 | 15,830 |
| 3. சம்பள அடிப்படையில் வேலை பெற்றவர்கள் | 11,558 | 13,946 | 13,673 |

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தினால் ஆயிரக்கணக்கானவர் பயன்பெற்றனர். மேலும் சிலர் பெற்ற நன்மைகள் இங்கு விளக்கப் படுகின்றன.

## பால் விற்கும் திருமலையான்

ஆடிசைக்கு அருகிலிருந்த நிலத்தில் சாகுபடி செய்தார் அவர். அதனால் அவருக்கு ஆண்டுக்கு ரூ 200/- தான் கிடைத்தது. வருமானம் போதவில்லை. கூலி வேலையும் செய்தார். நாளொன்றுக்கு ரூ 5/- மட்டுமே பெற முடிந்தது. மொத்த வருமானம் சுமார் ரூ 2060 - வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர் அவர். யார் அவர்? 24 வயதான இளைஞர் திருமலையான் என்பவரே அவர். இவருக்கு இரண்டு பசுமாடுகள் ஊரக வளர்ச்சித் திட்டத்திலே அளிக்கப்பட்டன. இரண்டிற்கு தலா ரூ 2500/- கடன் ஏற்பாடு செய்து தரப்பட்டது. ரூ 1250 - வீதம் மானியமும் அளிக்கப்பட்டது. முதல் பகுதியாக, கடன் முழுவதையும் அவர் செலுத்திவிட்டார். நாளொன்றுக்கு 7 லிட்டர் பால் கிடைக்கிறது. இரண்டு பசுவிற்கும் தீனிச்செலவு ரூ 7 - போக மீதம் ஆண்டுக்கு ரூ. 7560 இவருக்குக் கிடைக்கிறது. ரூ 2060 எங்கே? ரூ. 7560 எங்கே? ஒப்பிட்டுப் பார்க்கிறோம்.

மனைவி மூன்று குழந்தைகளுடன் வேளாண்மைத் தொழிலோடு விடாமல் பசுவையும் பேணிக்காத்து பாலும் விற்று மகிழ்வுடன் வாழ்கிறார் திருமலையான்.



## வீரப்பன் (த/பெ. அர்த்தனாரி)

இவர் ஒரு ஏழை சவரத் தொழிலாளி. இவருக்கு எந்தவிதமான சொத்துமில்லை. இவர் முன்பு சிறிய சவரத் தொழில் கடை வைத்து இருந்தார். இவரது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற இவருக்கு சவரத் தொழில் சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 1500/— தொழில் பணி, வியாபாரத் திட்டத்தின் கீழ் 1982—83ல் கோவைப்புதூர் கனரா வங்கியில் கடன் தரப்பட்டது. இவருக்கு ரூ 500/— மானியம் தரப்பட்டுள்ளது. இவருக்கு கடன் வழங்கப்பட்ட பிறகு தனது கடையை விரிவு படுத்தி பெரிய அளவில் ஆரம்பித்தார். தற்போது இவரது வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. முன்பு செலவு போக மாத வருமானம் இவருக்கு ரூ 100க்குள் தான் வரும். தற்போது செலவு போக மாத வருமானம் சுமார் 200 ரூபாய் வரை கிடைக்கிறது. இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் மனைவியும் இருக்கிறார்கள். இவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார். ரூ. 700 - சேமிப்பில் வைத்துள்ளார். இவர் கடன் முழுவதும் திருப்பிச் செலுத்திவிட்டார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் வலுவான கொள்கையைக் கொண்டதோடு இலட்சக் கணக்கான கிராமப்புற ஏழைகளின் வாழ்வில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் வல்லமையைக் கொண்டு திகழ்கிறது. உண்மையில் கிராமப்புற வறுமையை அகற்றுவதில் இத்திட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது.

## பொன்னுலகம் நோக்கிப் போகிறார்கள்

ஆசிரியர்:ஜோதிர்லதா கிரிஜா.
வெளியிடுவோர்:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:176 விலை ரூ.8.

தமிழில் நாடக நூல்கள் மிக அரிதாகவே வெளி வருகின்றன. இது ஒரு நாடக நூல். சராசரி, எளிய தமிழகக் குடும்பங்களைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை, எனவே அவர்களது பிரச்சனைகளும் அவற்றைத் தீர்க்க அவர்கள் படும் அவஸ்தைகளும் மனதில் படும்படி சொல்லப்பட்டிருக்கின்றன.

லட்சிய வாழ்வு, என்று துவங்குபவர்களில் லட்சத்தில் ஒரிருவரே தங்கள் லட்சியப் பாதையில் வீறுநடை போடுகிறார்கள். ஏனையோர் ராஜாவைப் போல் கால வெள்ளத்தில் திக்கு, திசை மாறி அடித்துச் செல்லப்பட்டு விடுகிறார்கள் என்பதை அழகாகச் சொல்லி இருக்கிறார் ஆசிரியை.

சிறு குறைகள் இருந்தாலும் தனக்கே உரிய பாணியில் இந் நாடகத்தை, சுவை குன்றாமல் எழுதி இருக்கிறார்.

- அ. மருதவிநாயகம்

## பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் முதுமைத்தமிழ்

ஆசிரியர்:டாக்டர்த.வேதராசன்.
பதிப்பித்தோர்: வளர்தமிழ் பதிப்பகம், 3 மோதிலால் நேருதெரு,
நீடாமங்கலம்,தஞ்சை மாவட்டம்
பக்கம்: 115 விலை ரூ.7

இலக்கியத்தில் சிறந்த பிள்ளைத் தமிழுக்குரிய இலக்கணத்தின் தடம் ஒற்றிச் சில மாற்றங்களோடு இந்த முதுமைத் தமிழைப் படைத்திருக்கிறார் நூலாசிரியர். அதிலே பத்துப் பத்துப் பாடல்கள் உடைய பத்துப் பருவங்கள் உள்ளதெனில், இதிலும் அப்படி, காப்புப் பருவம், பிள்ளைக் கனியமுதுப் பருவம், வருகைப்பருவம், நரைமுடிப் பருவம், கண்ணாடிப் பருவம், பேரர் மகிழ் பருவம், வழுக்கைத் தலைப் பருவம், பொக்கை வாய்ப் பருவம், கைத்தடிப் பருவம், கைக்கொட்டுப் பருவம் எனப் பத்துப் பருவங்கள் ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களோடு காணப்படுகின்றன.

'மக்கள் கவிஞர்'எனக் குறிப்பிடப்பட்ட பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இளமையிலேயே மறைந்து விட்டவரானாலும், முதுமைத் தமிழ் எழுதி அவர்தம் கொள்கைகளை-குணச் சிறப்புகளை இந்த நூலில் இனிக்கும் கவிதைகளிலேயே நாம் உணரக் காட்டியிருக்கிறார் .ஆசிரியர் மருத்துவராயினும் (டாக்டர்) தமிழின் மீதுள்ள இவர்தம் பற்று வியக்கத்தக்கதாக இருக்கிறது.

கவிதை ஆர்வலர்கள், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களிலே ஈடுபாடு கொண்டவர்கள், பொதுவுடைமைப் பிரியர்கள் எல்லோரும் படிக்க ஏற்ற நூலிது.

- இந்திரன்.

## உள்ளம் கவர்ந்திடும் உலக உண்மைகள்

ஆசிரியர்: ஆர்.மோகனா
வெளியீடு: சோமு புத்தக நிலையம், 42, அப்பர்சாமி கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-4

விலை ரூ. 7.75 பக்கம் 96.

உலகத்தில் பல நாடுகளிலும் இடம் பெற்ற அறிவியல் செய்திகளையும் அதிசய நிகழ்ச்சிகளையும் இந்நூலில் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

பெருமக்கள், விலங்குகள், விஞ்ஞானப்புதுமைகள், செடி, கொடி தாவரங்கள், கனிகள், விஷஜந்துக்கள், புத்தகங்கள் ஆகியவை பற்றித் திரட்டித் தந்துள்ள ஒவ்வொரு செய்தியும் சுவையாக உள்ளது. மாணவர்களுக்கும் பொது அறிவுச் செய்திகளை அறிந்து கொள்ள விரும்புவோர்களுக்கும் இந்நூல் பெரும் பயன் தருவது உறுதி.

புத்தகம் மற்றவர்களை நீங்கள் புரிந்துகொள்ளும்படி செய்ய வல்லவை; அது போலவே, உங்களை நீங்களே அறிந்து கொள்ளவும் செய்யும்

—எட்வர்டு பிரேக்கர்

பழைய காலத்தையும், நிகழ் காலத்தையும் ஒருவன் புரிந்து கொள்ள வேண்டுமானால், அவன் ஐந்து வண்டிப் புத்தகங்களைப் படிக்க வேண்டும்.

—சீனா

புத்தகங்கள் இளமையில் வழிகாட்டி; பருவத்தில் பொழுது போக்குபவை; நாம் தனிமையிலிருக்கும்போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன் நாமே நமக்கு ஒரு பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு [illegible]

—[illegible]

## எல்லாம் இன்பமயம்

ஆசிரியர்: தாமரைக் கண்ணன்,
வெளியீடு: பராசக்தி பதிப்பகம்,
31, சீனிவாசப் பெருமாள் கோயில் தெரு, ராயப்பேட்டை,
சென்னை-600014.

விலை ரூ. 20 பக்கம்: 236

பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பா, பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்ட தோடர்கதையா என்று எண்ண வைக்கும் மயக்க உருக்கொண்டது இந்நூல்.

பன்னிரண்டு கதைகளிலும் நாயகன், நாயகியாக மாதவனும், மாதவியும் வந்தாலும் ஒவ்வொரு கதையிலும் வேறு சில பாத்திரங்களும் உண்டு.

குடும்பநலம், விருந்தோம்பல், சிக்கனம், நட்பு என்று ஒவ்வொரு கதையிலும் சிறந்த பல கருத்தை விளக்கி இருக்கிறார் ஆசிரியர்.

பரம்பரையாக இருந்து வரும் சில பழக்க வழக்கங்களைக் கதைகளில் இணைத்து விளக்கி இருப்பதும், கருக் கொண்ட பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், குழந்தைக்குத் தாய்ப் பால் எவ்வளவு முக்கியம், குடும்பப் பெண்கள் அரட்டை, நண்பர்களின் நடவடிக்கை, பெண்ணாசையால் மோசம் போதல், விருந்துமுறை போன்ற பயனுள்ள படிப்பினைகளை மாதவன் மாதவி தம்பதிகள் அடையும் அனுபவங்களாக விவரித்து இருக்கிறார் ஆசிரியர்.

அவர்களைப் புதுமணத் தம்பதிகளாய்,முதல் அத்தியாயத்தில் அறிமுகப்படுத்தி, எல்லாம் இன்பமயமாக வாழ்வதோடு இறுதி அத்தியாயத்தைை முடித்திருப்பது சுவையாக இருக்கிறது.

- ந. குமாரசாமி



துணை [illegible] (தமிழ்நாடு [illegible])

1 ஜூன 1985

தமிழ்நாடு [illegible]
[illegible]



# ஊட்டியில் பெருகிவரும் பால் உற்பத்தி

பால் உற்பத்தியாளர்களுக்கு முக்கியமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை, எளிய விவசாயக் குடும்பங்களுக்கு லாபகரமான விலையில் பால் கொள் முதல் செய்யவும் அதே நேரத்தில் மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பால் வழங்கும் நோக்கத்துடனும் நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. கிரியப்பக் கவுடர் தலைமையில் 355 உறுப்பினர்களைக் கொண்டு 1946ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14ஆம் தேதி தொடங்கப்பட்டது. அப்போதையமூலதனம்10,275ரூபாய். ஆரம்ப காலத்தில் ஊட்டி நகரைச் சுற்றிப் பால் கொள் முதல் செய்து விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

1960ல் செயல்பாட்டை விரிவு செய்து 20 கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களை உருவாக்கியது. 1962ஆம் ஆண்டிலிருந்து சுமார் 10,000 லிட்டர் பால் பதனம் செய்யப்பட்டது. சிறப்பான சேவையினால் 1975ல் இச்சங்கம் 35 லட்ச ரூபாய்க்குச் சொத்துக்களைச் சேர்த்தது. இதில் பெரும் பங்கு டாக்டர் பசவய்யாவின் ஈடுபாடுதான். 1975-76 ல் அறிமுகம் செய்யப்பட்ட தீவிர பால் பெருக்குத் திட்டம் மூலம் பால் உற்பத்தி அதிகமாயிற்று. நடமாடும் கால்நடை மருந்தகங்கள்6, அவசரக்காலச் சிகிச்சைப் பிரிவுகள் 6, மற்றும் செயற்கை முறை இனவிருத்தி நிலையம் ஆகியன அமைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 'கருலூல ஜெர்சி பண்ணை' போதுமான அளவிற்கு இன விருத்திப் பணிக்கு உதவி வருகிறது. 1976ல் 90 சங்கங்களாக விரிவுபடுத்தப்பட்டு பால் கொள் முதல் சுமார் 15,000 லிட்டராக உயர்ந்தது. இதனால் சுமார் 7,000 விவசாயிகள் பயனடைந்தனர்.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசு உதவியுடன் மாநில அளவில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு பால்வள நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த பால்வள அபிவிருத்தித் திட்டம் இம் மாவட்டத்திற்கு நீட்டப்பட்டது. கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தவும், பால் கொள்முதல், விநியோகம், வாகன வசதி, பால் பண்ணைக் கருவிகள் ஆகிய வசதிகள் பெற்று, பண்ணைத் தொழிலை ஊக்குவிக்க இதுநாள் வரை 3 கோடியே 71 லட்சத்து 76 ஆயிரத்து 800 ரூபாய் கடனாகப் பெறப்பட்டது. இதில் 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கடனாகவும் பெறப்பட்டது. இதனால் பால் உற்பத்தி உயர்ந்துள்ளது. 25,000 விவசாயக் குடும்பங்கள் நிரந்தர கூடுதல் வருவாய் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவ மையங்கள் 5, அவசர கால சிகிச்சைப்

பிரிவுகள் 6, நடமாடும் கால்நடை மருந்தகங்கள் 6, கால்நடை சிகிச்சை வழித்தடங்கள் 30, பால் வழித்தடங்கள் 34, சங்கங்கள் 95 மற்றும் நவீன உறை விந்துத் திட்டம் போன்றவை இம்மாவட்டத்தில் பால் உற்பத்திக்கு உதவி புரிகின்றன.

இவை தவிர பால் சேகரம் செய்யும் வண்டிகள், பதப்படுத்தும் கருவிகள், பாலைச் சேகரித்து வைக்கத் தேவையான சேமிப்புக் கிடங்குகள், பதனப் பாலை ஏற்றிச் செல்லும் லாரிகள் உள்ளன. இவை மட்டுமல்லாமல் கூடலூர், வாழைத்தோட்டம், கோத்தகிரி போன்ற 3 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையமும் இந்த மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாகச் செயல்பட்டு வருகிறது.

எதிர்காலத்தில் கொள்முதல் செய்யப்படும் அதிக அளவு பாலைப் பதனப்படுத்தவும், பாலாடைக்கட்டி தயாரிக்கவும் புதிய பால் பண்ணை துவங்கப்கப்பட உள்ளது. நீலகிரி நகரின் நுழைவுப் பகுதியில் சுமார் 11 ஏக்கர் 35 செண்ட் நிலப்பரப்பில் 1981ஆம் ஆண்டு பால் பண்ணை கட்ட துவங்கப்பட்டது. சுமார் ரூ.3கோடியே 30லட்சம் திட்ட மதிப்பீட்டில் துவங்கப்பட்டது. இது விரைவில் துவங்கப்பட உள்ளது. இதற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசு 3 கோடி ரூபாய் கடனாக வழங்கியுள்ளது. இத்திட்டம் 1990-ஆம்ஆண்டில் முடிவடையும். இதுவரை ஒரு கோடியே 35லட்ச ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் மானியம் 50 சதவீதம் கடன், படிப்படியாக முழுத் தொகையும் பெறப்பட்டு விடும். இது மட்டுமன்றி தீவிர பால் பெருக்குத் திட்டத்தின் கீழே ஒரு கோடியே 89 லட்சம் கடனாக மாநில அரசு வழங்கியுள்ளது. 6 வருட காலத் திட்டம். 1988ல் முடிவடையும். இதுவரை 40 லட்ச ரூபாய் பெறப்பட்டுள்ளது. இதில் 30 சதவீதம் மானியம், 70 சதவீதம் கடன். இப்போது கட்டப்பட்டுள்ள இந்தப் பால் பண்ணையில் இயந்திரங்களுக்கு மட்டும் ஒரு கோடியே 20 லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. கட்டட வகைகளுக்கு ஒரு கோடியே 50 லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க ஒரு கோடியே 96 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டுப் பரிசிலனையில் உள்ளது..

பசும் புல் உற்பத்தித் திட்டத்தின் கீழ், வரும் 5 ஆண்டுகளுக்கு 36 லட்ச ரூபாய் செலவிடப்படும். பசும் புல், வாழைத்தோட்டம் என்ற பகுதியில் 14 ஏக்கரிலும், புதிய பண்ணை கட்டும் இடத்தில் 5 ஏக்கரிலும் பயிரிடப்பட்டு லாபநோக்கமின்றி பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1,300 டன் பசும்புல் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அரசு உதவியுடன் பெக்காபுரம் என்ற பகுதியில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 60 ஏக்கர் நிலம் கூடுதலாகப் பெற்று மிகப்பெரிய அளவில் ஆண்டுக்கு 2500 டன் புல் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தவிர பால் பெருக்குத் திட்டம் 2ன்படி உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். மிகப் பெரிய அளவில் நவீன உறைவிந்துத் திட்டம் செயல்பட உள்ளது. இதனால் உருவாகும் பசுக்கள் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஏற்கனவே உள்ள 120 சங்கங்கள் 150 சங்கங்களாக அதிகரிக்கப்படும். பால் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை 40 ஆயிரமாகிறது. கால்நடைகளின் எண்ணிக்கை 51 ஆயிரமாக உயருகிறது. தற்போது 24,000 லிட்டர் தினசரி கொள்முதலாகிறது. இந்தத் திட்டத்தின் முடிவுக் காலத்தில் 35,000 லிட்டராக உயர்த்தப்படும். இதற்கான முதலீட்டுத் தொகை ஒரு கோடியே 87 லட்சத்து 37 ஆயிரமாகும்.

கோடை காலத்தில் பால் உற்பத்தி குறைந்த அளவு16,000 லிட்டரும் அதிக அளவு 18,000 லிட்டருமாகும். இது 4 மாத காலம் இருக்கும். குளிர்காலங்களில் அதாவது 8 மாதங்கள் 40,000 லிட்டர் வரை கொள்முதலாகிறது. நீலகிரி மாவட்ட மக்களுக்குத் தினசரி தேவைப்படுவது 20,000 லிட்டர்தான். உபரியாகும் பால், ஈரோடு பால் பண்ணைக்கு லாரிகள் மூலம் பதப்படுத்தி அனுப்பப்படுகிறது.

புதியதாகத் துவங்கப்பட உள்ள கட்டடத்தில் பால்பதப்படுத்தும் தொழிற்சாலை, பாலாடைக்கட்டி தொழிற்சாலை உள்ளன. தினசரி 50,000 லிட்டர் பாலை இதில் பதப்படுத்தலாம். பாலாடைக் கட்டி தினசரி உற்பக்கி 1 டன் இருக்கும். ஒரு டன் பாலாடைக் கட்டி தயாரிக்க 20,000 லிட்டர் பால் தேவை. உற்பத்தியாகும் பாலாடைக்கட்டிகள் 20 கிராம் சிறிய பாக்கட்டுகளிலும், 200 கிராம், 500 கிராம், ஒரு கிலோ போன்றவை டின்களிலும் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வரும். பாலைவிட பாலாடைக்கட்டிகள் தயாரித்து விற்பதில் அதிக லாபம் கிடைக்கும். இதனால் பால் உற்பத்தியாளர்களுக்கு அதாவது கிராம மக்களுக்கு வருவாய் பெருகும். கிராம முன்னேற்றமே அரசின் குறிக்கோள். ஆலைக்குத் தேவையான 50 ஆயிரம் லிட்டர் உற்பத்தி 5 ஆண்டிற்குள் எட்டிவிடும்.

இப்போதுள்ள பால்பண்ணையில் 240 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். மறைமுகமாக 16,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. புதிய பால் பண்ணை தொடங்கினால் மேலும் 100 பேருக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், மறைமுகமாக 32 ஆயிரம் குடும்பங்களுக்குப் பயனும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலை துவங்கப்பட்ட நாளிலிருந்து லாபம் ஈட்ட முடியவில்லை. 1981-82ஆம் ஆண்டு 50 ஆயிரம் ரூபாய் இலாபம் கிடைத்தது. 1982-83, 1983-84, 1984-85 ஆகிய3 வருடங்களில் பண்ணைக்கு வாங்கிய கடன்களுக்கு வட்டியும் அசலும் 3 லட்ச ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. கடன் முழுவதும் கட்டிமுடிக்க 10 வருடங்கள் ஆகும். அதற்குப் பின்தான் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியும்.

—அ. மருதவிநாயகம்

## பசுப்பால் அதிகரிக்க...



அமெரிக்கா - டென்மார்க்கு ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய ஊசி மருந்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இதனைத் தினந்தோறும் பசுமாடுகளுக்குச் செலுத்துவதன் மூலம் 20 சதவிகிதம் முதல் 40 சதவிகிதம் வரை பால் உற்பத்தி அதிகரிக்கிறது. இந்தப் பாலை அருந்துபவர்களுக்குத் தீமை எதுவும் ஏற்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# உணவு உற்பத்தியில் மகத்தான சாதனை



தமிழ்நாட்டில் 1984-85ஆம் ஆண்டில் உணவு உற்பத்தி 78 லட்சம் டன்னை மிஞ்சி, புதிய சாதனை உருவாகியுள்ளது.

இதுவரையில் உள்ள உற்பத்தியில் சாதனை நிகழ்ந்த 1977-78ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி 77 லட்சத்து 45 ஆயிரம் டன்னாக இருந்தது.

நெல், சிறுதானியம், பயறு வகை, கரும்பு, பருத்தி ஆகிய அனைத்திலும் கூடுதலான உற்பத்தித்திறன் கிடைத்துள்ளது. இதுவரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ஒவ்வொரு துறையிலும் உற்பத்தித் திறன் அதிகமாகியுள்ளது.

நெல்லைப் பொறுத்தவரை சிறந்த உற்பத்தி ஆண்டான 1979-80ஆம் ஆண்டில் ஒரு எக்டேருக்கு (ஒரு எக்டேர் என்பது சுமார் இரண்டரை ஏக்கர்) 1,905 கிலோ நெல் உற்பத்தி இருந்தது. தற்போது இது 2,150 கிலோவாக உயர்ந்துள்ளது. சிறுதானிய உற்பத்தியில் சிறந்த உற்பத்தி, ஆண்டில் 939 கிலோவாக இருந்தது. இப்போது 1,010 கிலோவாக உயர்ந்துள்ளது.

இதைப்போலவே பயறு வகைகள் உற்பத்தியில்1983-84ஆம் ஆண்டு எக்டேருக்கு 316 கிலோவாக இருந்தது; தற்போது 340 கிலோ அளவுக்கு அதிகரித்துள்ளது.

''கரும்பு, பருத்தி உற்பத்தியிலும் உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது. ஒரு எக்டேரில் 10,203 கிலோ, வெல்லம் உற்பத்தி செய்வதற்குத் தேவையான கரும்பு உற்பத்தி சிறந்த ஆண்டாக 1981-82 இருந்தது. தற்போது 11,956 கிலோவாக அதிகரித்து இருக்கிறது. பருத்தியைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பான வகைப் பருத்தியை இந்த ஆண்டு உற்பத்தி செய்துள்ளது. முன்பு எக்டேருக்கு 278 கிலோ உற்பத்தி இருந்தது. தற்போது 411 கிலோவாக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு பருவ மழை அளவு குறைந்துவிட்ட சூழ்நிலையால் நெல் உற்பத்திநிலை அளவு, கடந்த ஆண்டை விட 2 லட்சம் ஏக்கர் குறைவாகிவிட்ட சூழ்நிலையிலும் அதிக உற்பத்தித்திறன் காரணமாக உற்பத்தியின் அளவு 56 லட்சம் டன்களை எட்டியுள்ளது. 1983-84ஆம் ஆண்டு 27.40 லட்சம் எக்டேரில் 44 லட்சத்து 47 ஆயிரம் டன் உற்பத்தி இருந்தது. இந்த ஆண்டு 25.10 லட்சம் எக்டேரில் 56 லட்சம் டன்னாக இருந்தது.

குறைவான மழை, தட்ப வெப்ப நிலையில் மாறுபாடு ஆகியவை காரணமாக, பூச்சிகள் பயிரைத் தாக்கி ஓரளவுக்குச் சேதத்தை ஏற்படுத்தின. இருந்தாலும் உற்பத்தி அதிகமாகி உள்ளது.

எந்த விதத்திலும் பயன்படுத்த முடியாத நிலங்களைப் பயன்படுத்தி, விளைநிலங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் 22 ஆயிரம் எக்டேர் நிலம் விளை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஒரு கோடியே 80 லட்ச ரூபாய் மதிப்புள்ள 6 கோடி பழம் மற்ற மரக்கன்றுகள் 2 லட்சம் விவசாயிகளுக்குத் தரப்பட்டுள்ளன.

உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் விநியோகத்திலும் கடந்த ஆண்டு புதிய சாதனை உருவாக்கப்பட்டுள்ளது.

(வேளாண்மைத் துறை இயக்குநர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து )

## அதிகம் பெறாதே : அவதிப் படாதே!

இருவரைப் பார்த்து-இந்த நிலம் யாருடையது' என்று கேட்டால், "நானே உழைத்துச் சம்பாதித்து வாங்கினேன்" என்பார்; "இந்த வீடு யாருடையது" என்றால், "கையிலிருந்த பணத்தோடு, பாங்கில் கொஞ்சம் கடன் வாங்கி நானே கட்டினேன்'' என்பார். "இந்த சைக்கிள் ஏது" என்றால், "என்னுடைய வருமானத்தில் நானே வாங்கியது" என்பார். "வாசலில் ஏழெட்டுக் குழந்தைகள் விளையாடுகிறதே, அவை யாருடைய குழந்தைகள்" என்று கேட்டால் "கடவுளார் பார்த்து எனக்குக் கொடுத்தது" என்று சொல்லி விடுவார்!

அவைகளை மட்டும் இவரே செய்தாராம்; இதைமட்டும் கடவுள் கொடுத்தாராம்! இதெப்படிச் சரியாகும்?

சரி. கடவுள் கொடுத்ததாகவே இருக்கட்டும். அளவோடு பெற்றுக்கொண்டு மீதத்தை தவிர்த்துவிடக் கூடாதோ?

கடவுள் படைத்த கொசுதானே நம்மைக் கடிக்கிறது என்று அடிக்காமல் விடுகிறோமா? கடவுள் படைத்த ஜுரம்தானே தொல்லை தருகிறது என்று, மருந்து சாப்பிடாமல் இருந்து விடுகிறோமா?

இதையெல்லாம் தவிர்க்க விரும்புகிற நாம், கடவுள் தலையில் பாரத்தைப் போட்டு விட்டு, நம் குடும்பத்தை மட்டும் கட்டுப் படுத்தத் தவறிவிடுகிறோம். இதனாலேயே ஒளிமயமான எதிர்காலத்தைப் பலபேர்களால் காணமுடிவதில்லை.

இந்த நிலை மாறியாக வேண்டும். "அதிகம் பெறாதே அவதிப்படாதே!'' என்பதன் பொருளை அவரவரும் உணர்ந்தாக வேண்டும்!

—தமிழ்நாடு கலைமன்றச் செயலாளர் திரு. டி. கே. [illegible] அவர்கள் பத்திரிகை நிருபர்கள் சங்கப் பாராட்டுக் கூட்டத்தில் (9.5.85) பேசுகையில் குறிப்பிட்டது.

# அறிவுச் சுடர்

மதுரையில் உள்ள பெரும்பாலான கிணற்றுநீரில் புளோரைடு அதிகமாகக் காணப்படுகிறது. இங்குள்ள பொறியியல் கல்லூரி மாணவர்கள் கிணறுகளிலிருந்து நீரைப் பரிசோதனை செய்து பார்த்ததில் புளோரைடு அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இப்புளோரைடு பற்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடியது. 6 வயதிலிருந்து 15 வயது வரையிலான சிறுவர்களின் பற்களைப் பரிசோதித்ததில் அவர்களின் பற்களில் எனாமல் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இப்பகுதியில் வாழும் பெரியவர்களும், சிறுவர்களும் அடிக்கடி தலைவலி மற்றும் உடல்வலியால் அவதியுற்றனர்.

ஆறு பொறியியல் இறுதியாண்டு மாணவர்கள், நீரில் புளோரைடு இல்லாமல் செய்வதற்கான சாதனம் ஒன்றை வடிவமைத்தனர். இச்சாதனம் மூலம் 1 லிட்டர் நீரில் 1 மில்லிகிராம் அல்லது அதற்கும் குறைவாகப் புளோரைடு குறைக்கப்பட்டது.

இச்சாதனம், 2 மணி நேரத்தில் 200 லிட்டர் நீரைச் சுத்தம் செய்யக்கூடியது. இச்சாதனத்தில் சுண்ணாம்பு, படிக்காரம் பயன்படுத்தப்பட்டன. நபர் ஒருவர்க்கு ஆண்டொன்றுக்கு 31 காசுகளே இம்முறைக்குச் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இச்சாதனம் வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்யவும், நீண்ட காலத்திற்குப் பயன்படவும் கூடியது. இதன் மூலம் இப்பகுதி மக்களின் நீண்ட காலப் பல்நோய் நீக்கப்பெற்று அவர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



எம். அகிலா

அனைத்திந்திய முதுநிலை, இளநிலை பள்ளிச் சான்றிதழ்த் தேர்வில் ஆங்கிலப் பாடத்தில் சென்னை செயின்ட் ஜான் இளநிலை மேநிலைப் பள்ளியைச் சார்ந்த மாணவி எம். அகிலா 93 சதவிகித மதிப்பெண் பெற்று, இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளார்.

## மாணவர் பக்கம்

"அண்டார்டிகா" ஒரு ஆராய்ச்சிக்குரிய இடமாக விளங்குகிறது. இதன் பழைய பெயர் ஆர்க்டிகோஸ், அவ்வாறுதான் ஆர்க்டிக்கின் எதிர்ப்பக்கப் பகுதிகளை கிரேக்கர்கள் அழைத்தார்கள்.

அண்டார்டிகாவில், கிடைத்த சில தாதுப் பொருள்களும், படிவங்களும், இலத்தீன் அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும், கிடைத்தவற்றோடுமிகுந்த ஒற்றுமையாக இருக்கின்றன. 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாடுகள் எல்லாம் ஒரே நிலப்பரப்பாக இருந்தன.

அண்டார்டிகா 14 மில்லியன் சதுர கி.மீ. பரப்பளவு உடையது. உலக நிலப்பரப்பில் இது, பத்தில் ஒரு பகுதியாகும்.

அண்டார்டிகாவில் தங்கி ஆராய்ச்சி நடத்தும் அறிவியல் அறிஞர்களைத் தவிர, வேறு எந்த மனித இனமும் அங்கே இல்லை. கோடைக் காலத்தில் அங்கு இருப்பவர்களின் எண்ணிக்கை 2000 ஆகும். மழைக் காலத்திலோ இந்த எண்ணிக்கை 750 ஆகக் குறைந்து விடும்.

900-க்கும் மேற்பட்ட பெரிய தாதுப் படிவங்கள் அண்டார்டிகாவில் இருக்கக்கூடும் என அறிவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். புவியியல் வல்லுநர்கள் இரும்பும், நிலக்கரியும் அண்டார்டிகாவில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகின்றனர். உலகின் மிகப்பெரிய நிலக்கரிச் சுரங்கமும் அங்கே இருக்கக்கூடும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

வேல்ஸ் வளைகுடாவிலிருந்து நாய்கள் இழுத்துச் சென்ற ஸ்லெட்ஸ் வண்டியில் 53 நாட்கள் பயணம் செய்து 1911-ஆம் ஆண்டு டிசம்பர் 16-ஆம் தேதி படைத்தலைவர்தோல்டுஅமுலண்ட்சேன் தலைமையிலான நார்வே நாட்டுக்குழு ஒன்று, தென் துருவத்தை அடைந்தது.

1935-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் தேதியில் அண்டார்டிகாவில் காலடி வைத்த முதல் பெண்மணியின் பெயர் திருமதி கரோலின் மிக்தெல்சன்.

1982-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதி அண்டார்டிகாவில் டாக்டர் எஸ். இசட். காசிம் தலைமையிலான இந்திய அறிவியல் அறிஞர்கள் கொண்ட முதல் குழு காலடி எடுத்துவைத்தது.

மழைக்காலத்திலும் ஆய்வ[ு]களைத் தொடர்ந்து நடத்து[ம்]வதற்காக 12 பேர் கொண்ட குழுவினர் அண்டார்டிகாவி[ல்] இந்திய நிலையமொன்றை நிறு[வி]னர். அந்த நிலையான நிலை[ய]த்தில் தங்கி ஆய்வு நடத்து[]வதற்காக 12 பேர் கொண்ட குழுவினர் அங்கேயே தங்கிவிட்டனர்.

1984-ஆம் ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதி பின்லாந்து நாட்டிற்குச் சொந்தமாக 'பின் பொலாரிஸ்' என்ற கப்பலில் கோவாவிலிருந்து டாக்டர் பி.பி. பட்டாச்சாரியா தலைமையிலான 82 உறுப்பினர் கொண்ட இந்தி[]யாவில் நான்காவது குழு புறப்பட்டுச் சென்றது.

1820-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி ரஷியாவைச் சேர்ந்த படைத்தலைவர் எப். எப். பெலின் ஹாஸன், முதன் முதலாக அண்டார்டிகா பனிப் பிரதேசத்தைக் கண்டு வந்தார். அதே ஆண்டு ஜனவரி 30-ஆம் தேதி அண்டார்டிகா கண்டத்தைப் படைத்தலைவர் வில்லியம் சுமித்தும், எட்வர்டு பிரான்ஸ்பீல்டும் கண்டுபிடித்தனர்.



## சர்க்கஸ் தோன்றிய விதம்

பண்டைய காலத்தில் கிரேக்க நாட்டில் இரத ஓட்டம் (Chariot Race) சிறப்புற்றிருந்தது. சீனாவில் அப்போது உடலை வளைத்து வித்தை செய்வது பிரபலமாயிருந்தது. எகிப்தியர்கள் விலங்குகளைப் பழக்கி வித்தை காட்டுவதில் வல்லவர்களாயிருந்தனர்.

இந்த வேடிக்கைகளையெல்லாம் ஒன்று சேர்த்து, ரோமானியர்தான் "சர்க்கஸ்" என்னும் நிகழ்ச்சியாக நடத்தினார்கள்.

"Circus" என்பது பிரெஞ்சுச் சொல். அதற்கு Races என்று பொருள். சர்க்கசில் அப்போதெல்லாம் Races தான் முதன்மையான நிகழ்ச்சியாதலால் Races என்ற சொல்லின் பிரெஞ்சு வடிவமான 'சர்க்கஸ்' என்று பெயரிட்டு அழைத்தனர்.

கி.மு. 3-ல் நடந்த 'மேக்ஸிமஸ்' (Maximus) என்ற சர்க்கஸ்தான் முதன் முதலில் மிகப்பெரிய அளவில் நடந்த சர்க்கஸ் ஆகும். அதில் 1,50,000 (ஒன்றரை லட்சம்) மக்கள் அமர்ந்து பார்க்கும் அளவில் அரங்கு அமைக்கப்பட்டிருந்தது.

ஆரம்ப காலத்தில் சர்க்கஸ் இலவசமாகக் காண்பிக்கப்பட்டது. ஒவ்வொரு திரையரங்கில் ஒவ்வொரு நிகழ்ச்சி வீதம் காட்டப்பட்டது. கயிற்றின்மீது நடத்தல், மிருகங்களை அடக்குதல், குத்துச் சண்டை, ஜிம்னாஸ்டிகஸ் போன்றவை இவற்றில் அடங்கும்.

இரண்டு குதிரை மீது ஒரே சமயத்தில் சவாரி செய்தல், ஓடிக்கொண்டிருக்கும் ஒரு குதிரையிலிருந்து மற்றொரு குதிரை மீது தாவுதல் போன்ற வித்தையும் செய்து காட்டப்பட்டது.

1768-ல் தான் முதன் முதலில் இப்போது உள்ளது போன்ற சர்க்கஸ் நடைபெற்றது. அது 'பிலிப் ஆண்ட்லே' என்னும் ஆங்கிலேயரால் நடத்தப்பட்டது. சர்க்கஸில் சிரிப்பூட்டும் கோமாளிகள் இவரது சர்க்கஸிலிருந்துதான் முதன் முதலில் தோன்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி: தினசரி



## பழக வேண்டும்!

கல்லையே எறிந்தாற் கூடக்
கனிதரும் மரத்தைப் போலத்
தொல்லையே புரிந்தாற் கூடத்
தோழனாய்ப் பழக வேண்டும்!

முள்ளிலே படர்ந்தாற் கூட
முல்லைகள் சிரித்தாற் போலக்
கொள்ளியாய்ச் சினந்தாற் கூடக்
குளிர்ச்சியாய்ப் பழக வேண்டும்!

தன்னையே அகழ்ந்தாற் கூடத்
தாங்கிடும் நிலத்தைப் போலப்
புண்பட இகழ்ந்தாற் கூடப்
பொறுத்திடப் பழக வேண்டும்!

நன்மையே விளைந்தாற் கூட
நடுங்கியே பொய்மை ஓட
உண்மையே தொடர்ந்து பேசி
உயர்ந்திடப் பழக வேண்டும்!

—தளவை இளங்குமரன்



# குழந்தைகள் புத்தகக்கடை



கதைகள் கேட்பதென்றால் மழலையருக்குக் கொள்ளை ஆசை. பாட்டிமார் கதை சொல்ல, இன்னும் சொல்லு, இன்னும் சொல்லு என்று கேட்டுக் கொண்டே அவர்கள் உறங்கி விடுவர்.

மழலைப் பருவம் தாண்டிய சிறார்களுக்குக் கதைப் புத்தகமோ தெவிட்டாத இன்பம். வண்ணப்படங்கள் கொண்ட கதைப் புத்தகங்கள் 'காமிக்' புத்தகங்கள் என்று எத்தனை எத்தனை புத்தகங்கள்! கையில் எடுத்தால், உணவு வேண்டாம், உறக்கம் வேண்டாம்; தன்னை மறந்து அதில் லயித்து விடலாம்.

அமெரிக்காவில் இப்பொழுது குழந்தைகளுக்கென்றே 75 புத்தகக் கடைகள் இருக்கின்றன. இந்தியாவைப் போல அங்கும் 'குழந்தை எழுத்தாளர்கள்' இருக்கின்றனர். அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் குழந்தைப் புத்தகக் கடைகள் இரண்டு இருக்கின்றன.

ஒரு புத்தகக் கடைக்காரர் சொல்கிறார்: "எங்களிடம் 15,000 புத்தகங்கள் இருக்கின்றன. சாதாரணமாகக் கடைகள் தர முடியாத பல வகைப் புத்தகங்கள் எங்களிடம் உள்ளன. இவை அனைத்தையும் நாங்கள் படித்திருக்கிறோம். மேன்மேலும் வருவனவற்றையும் படித்து வருகிறோம். அந்தக் காலத்தில் வெளிவந்த குழந்தைகள் புத்தகங்களையும் நாங்கள் படித்துள்ளோம்".

குழந்தைகள் பலர் இக்கடைகளை நூலகம் என்றே கருதுகின்றனர். தமக்கென்றே எழுதப்பெற்ற இத்தனை நூல்களை வேறு எங்கும் கண்டதில்லை. கடையில் ஒரு மூலையில் தனி இடம் ஒதுக்கியுள்ளோம். இதற்கு 'முயல் வளை' என்று பெயர் வைத்திருக்கிறோம். அதில் பொம்மைகளும் புத்தகங்களும் குவிந்திருக்கும். குழந்தைகள் தாமே எடுத்துப் பயன்படுத்திக் கொள்வர். எப்பொழுதுமே குழந்தைகள் கூட்டம் அங்கு இருக்கும்.

—அமெரிக்கத் தகவல்நிலையம்

## விளையும் பயிர் :



பெரியார் மாவட்டம், அந்தியூர் அரசு மேநிலைப் பள்ளியில், மேநிலை—இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் அ. பழனிச்சாமி.

இவர் கதை, கட்டுரை, கவிதைகள் பல எழுதியுள்ளார். பள்ளியில் நடந்த கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகளில் பரிசுகளும் பெற்றுள்ளார். வானொலியிலும் இவரது படைப்புகள் ஒலி பரப்பாகியுள்ளன. இம் மாணவர் மேலும் வளர நாமும் வாழ்த்துவோம்!

## இது உங்கள் பக்கம்

மாணவ மணிகளே!
இது உங்கள் பக்கம்
பள்ளி – கல்லூரி மாணவர்கள்
இப்பகுதிக்கு எழுதலாம்.

கதை, கட்டுரை, கவிதை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். பொது அறிவுக் கட்டுரைகள், துணுக்குகளுக்கு ஆதாரம் குறிப்பிட வேண்டும். பள்ளிப் படிப்போடு பிற துறைகளில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய சிறுகுறிப்புடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்துத் தலைமை ஆசிரியர் கையெழுத்துடன் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்

# ஊரக வேலைவாய்ப்பினால் 14 லட்சம் பேர் பலன் பெறுகிறார்கள்!



கிராமப்புறங்களில் நடப்பு ஆண்டில் 20,000 சாண எரிவாயுத் தொட்டிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாண எரிவாயு அமைத்திருப்பதில் கடந்த ஆண்டு இந்தியாவில் 2 வது இடத்தைத் தமிழகம் பிடித்துள்ளது. இதற்காக மத்திய அரசு தமிழக அரசுக்கு 1 லட்சம் ரூபாய் பரிசு வழங்கியிருக்கிறது.

கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 20,000 சாண எரிவாயுத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

6 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 4 மாடுகள் இருந்தால் சாண எரிவாயு உற்பத்தி செய்து அதனைப் பயன்படுத்திட முடியும். இதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.4,500



இந்தச் சாண எரிவாயுத் தொட்டிகளை அமைக்கச் சிறிய விவசாயிகள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைஜாதியினர் ஆகியோருக்கு 2,860 ரூபாய் மானியம் தரப்படுகிறது. மற்றப் பிரிவினருக்கு 1,900 ரூபாய் மானியம் தரப்படுகிறது.

இதனால் ஓராண்டுக்கு ஒரு குடும்பத்துக்கு விறகு, மண்ணெண்ணெய் ஆகிய செலவுகளில் 1,800 ரூபாய் மிச்சமாகும்.

இப்போது தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் 43,855 வானொலிப் பெட்டிகளும் 1,838 தொலைக்காட்சிப் பெட்டிகளும் இயங்கி வருகின்றன.

பழுதடைந்து இருக்கும் வானொலிப் பெட்டிகளை எடுத்துவிட்டு அவற்றுக்குப் பதில் புதிய வானொலிகள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் 900 புதிய வானொலிப் .பெட்டிகள் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 7 இடங்களில் குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் தமிழகக் கிராமப்புறங்கள் அனைத்திலும் 4,892 தொலைக்காட்சிப் பெட்டிகள் பொருத்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கு ரூபாய் 1 கோடியே 52 இலட்சம் செலவிடப்படும்.

கடந்த ஆண்டில் 1,100 தொலைக்காட்சிப் பெட்டிகள் கிராமங்களில் பொருத்தப்பட்டன.

ஒருங்கிணைந்த கிராமப்புறத் திட்டங்கள் மூலம் சொந்தத் தொழில்கள் தொடங்கக் கடனுதவி அளிக்கப்பட்டு வருவது நினைவிருக்கலாம். இந்தக் கடன் தொகையில் ஒரு பகுதி 3,000 ரூபாய் வரை மானியமாகத் தரப்படுகிறது. ஒரு வட்டாரத்தில் ஓர் ஆண்டுக்கு 600 குடும்பங்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

கடந்த 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த ஊரக வேலை வாய்ப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 14 இலட்சம் பேர் வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டு நற்பலன் பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டில் 2 இலட்சத்து 34,000 பேர் பலனடைந்துள்ளனர்.

சொந்தத்தில் தொழில்களைத் தொடங்குவதற்காக ரூபாய் 100 கோடி வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 33 இலட்சத்து 75,000 ரூபாய் அரசு மானியம் ஆகும்.

கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயம் இல்லாத நேரத்தில் வீடுகள் கட்டும் தொழிலிலும், கசிவுநீர்க் குட்டைகள் தோண்டும் பணியிலும் விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் 1984-85 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 19,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1,100 கசிவுநீர்க் குட்டைகள் தோண்டப்பட்டுள்ளன. இப்போது தமிழ்நாட்டில் கிராமப்பகுதிகளில் மொத்தம் 15,912 விசைப்பம்புகள் மற்றும் 53,429 கைப்பம்புகள் உள்ளன.

(10.5.1985 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் டி. வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.)

# நோய் தடுக்கும் சத்துணவுத்திட்டம்

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக 2 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகள் 24 லட்சத்து 34 ஆயிரம் பேரும், 5 வயது முதல் 9 வயதுவரைஉள்ள குழந்தைகள் 38 லட்சத்து65ஆயிரம் பேரும் 10 முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் 16 லட்சத்து 72 ஆயிரம் பேரும் பயனடைகின்றனர் ஒய்வூதியம் பெறுவோர், முதியோர், முன்னாள் இராணுவத்தினர் என 2 லட்சத்து 63 ஆயிரத்து 112 பேர் பயனடைகின்றனர். மொத்தம் 65, 344 மையங்கள் உள்ளன.

இத்திட்டத்திற்காக 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 164.74 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 252 பேர் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் 45,596 பேர் கைம்பெண்கள், ஆதரவற்றோர் என்ற வகையில் உள்ளவர்கள். 31,675 பேர் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்.

புதுமையும் முற்போக்கும் கொண்டு விளங்குகிறது இத்திட்டம். கோவை அவினாசிலிங்கம் மனையியற் கல்லூரிப் பேராசிரியர்களும் முதுகலை மாணவியரும் 1983 ஜூன் மாதத்திலிருந்து 1984 மே முடிய ஓராண்டுக்கால அளவில் இத்திட்டத்தினால் பயனடைந்த சிறுவர்களின் உடல் நலத் தேர்ச்சி குறித்து ஆய்வு நடத்தியிருக்கின்றனர்.

கோவை நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமப் புறத்திலும் உள்ள பாலர்பள்ளி சத்துணவு மையங்கள் 31, நகர்ப்பகுதி மையங்கள் 8, கிராமப்பகுதிகளில் தொடக்கப்பள்ளிகள் 28, நகர்ப் பகுதிகளில் தொடக்கப்பள்ளிகள் 9 ஆகியவற்றைச் சேர்ந்த 3857 சிறுவர்களின் உடல் நலம்குறித்து, விவரங்களைச் சேகரித்துஆராய்ந்திருக்கிறார்கள்.

ஆராய்ச்சி விவரங்கள் வருமாறு:

''சிறுவர்களின் எடை 1.50 கிலோகிராம் முதல் 2.63 கி.கி. வரை கூடியுள்ளது.

சிறுமியரின் எடை 1.54 கி.கி முதல் 2.75 கி.கி. வரை அதிகரித்திருக்கிறது.

நான்கு வயதுச் சிறுவர், சிறுமியர், 7வயதுச் சிறுமியர் ஆகியோரைத் தவிர ஏனைய சிறுவர்களின் உயரம் அதிகமாகி உள்ளது.

முன்பெல்லாம். 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களின் தலை முடி,பழுப்பு நிறம் உடையதாக இருந்ததுடன் முடிவளர்ச்சியும் குறைவாக இருந்தது. இந்தத் திட்டத்தின் காரணமாக 302 சிறுவர்களைத் தவிர, ஏனைய சிறுவர்களுக்கு இயல்பான முடி வளர்ச்சி கருமையாகவும் செழுமையாகவும் ஏற்பட்டுள்ளது.

திட்டம் தொடங்கப்படும் போது 1131 சிறுவர்கள் கண் பார்வை சரியில்லாமல் இருந்தனர். கண்களில் நீர் வடிந்தநிலையும் இருந்தது. இத்திட்டத்தின் விளைவால், இத்தகைய குறைபாடுகளுடைய சிறுவர்களின் எண்ணிக்கை 634 ஆகக் குறைந்துள்ளது.

திட்டத்தின் தொடக்கத்தில் 1210 சிறுவர்கள் மட்டுமே வலுவான பற்கள் பெற்றிருந்தனர். இத்திட்டத்தின் காரணமாக1500 சிறுவர்களுக்கும் மேல் சீரான பற்கள் பெற்றவர்களாகவும், ஈறுகள், உதடுகள் உறுதிவாய்ந்தவர்களாகவும் விளங்குகிறார்கள்.

கோவையில் நான்கு தொடக்கப்பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள அறிவு மேம்பாடு குறித்து 120 சிறுவர்களிடையே ஆய்வு நடத்தப்பட்டது. சத்துணவுத் திட்டத்தில் கலந்து கொள்ளாத சிறுவர்களை விட, இத்திட்டத்தால் பயன் பெறும் சிறுவர்கள், எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும், பேச்சுத் தெளிவும், பிரச்சினைகளை எளிதில் தீர்க்கும் திறனும் பெற்றுத் திகழ்கிறார்கள்''.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள், குழந்தைகள் நலக்காப்பு மையங்களாக உருப்பெற வேண்டும் என்பதில் அரசு அக்கறை செலுத்தி வருகிறது. இந்த அடிப்படையில், 1983-84, 1984-85 ஆண்டுகளில் சமூக நலத்துறை 10,000 சத்துணவு மையங்களில் பாலர் கல்வியைத் தொடங்கியது.



இன்றுள்ள 27,897 பாலர் சத்துணவு மையங்களில் 3689 மையங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு ஊசி போடுதல், பாலர் பள்ளிக் கல்வி, பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு மருத்துவப் பணி, சத்துணவுக் கல்வி போன்றவை கொண்ட விரிவான குழந்தைகள் நலப் பணிகள் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்திற்கு உலக வங்கி அளித்து வரும் உதவி 1986 ஜூன் திங்களோடு முடிவுற்றுவிடும். ஆகவே, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், வடஆர்க்காடு, செங்கல்பட்டு, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய எட்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம் 7வது ஐந்தாண்டுத் திட்டக்கால இறுதிக்குள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமாக மாற்றப்படும்.

இதன் விளைவாக இந்த எட்டு மாவட்டங்களிலுள்ள பாலர் சத்துணவு மையங்கள் அனைத்தும் குழந்தைகளுக்கான விரிவான மருத்துவப் பணிகளைச் செயல்படுத்தும் மையங்களாக உருவாகும்.

1985-86ல் வட்டாரந்தோறும் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் சுகாதாரப்பணியாளர்களின் உதவியோடு, கோவை, தர்மபுரி, பெரியார், மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களிலுள்ள சத்துணவு மையங்களில்இளம்பிள்ளைவாதம், கக்குவான், இருமல், தொண்டை அடைப்பான், இசிவு ஆகிய நோய்களுக்கான தடுப்பு ஊசி போடும் பணியைச் சிறப்பாகவும் முனைப்பாகவும் செயலாற்றத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் சத்துணவுத்திட்டம் இந்நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்விற்குச் சீரிய அடித்தளத்தை அமைக்கும் சிறப்பான திட்டமாக விளங்குகிறது.

இத்திட்டம் மனித ஆற்றலின் வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குவதால், நாடளாவிய தேசிய முழு வளர்ச்சிக்கு இன்றியமையாததாகத் திகழ்கிறது.

இந்தத் திட்டம் குறித்துச் சிலர் அரசியல் நோக்கத்துடன் கருத்துரை கூறுகிறார்கள். அது தவறு.

சத்துணவு தராவிட்டால் குழந்தைகளுக்கு அதிலும் கிராமப்புற குழந்தைகளுக்கு பலவகை நோய்கள் ஏற்பட்டு விடும். சத்துணவு கொடுக்கப்படும் குழந்தைகளை அம்மைநோய் கண்ட குழந்தைகளின் இடையே கொண்டுபோய் விட்டால் கூட அவர்கள் தாக்கப்படுவதில்லை.

மூன்று மாதக் குழந்தைக்குக் காய்ச்சல் 2 அல்லது 3முறை ஏற்பட்டால், அது அந்தக் குழந்தையின் ஓராண்டு வளர்ச்சியை பாதிக்கும். இது உடல் நலத்தை மட்டுமல்ல மனநலத்தையும் தாக்கிவிடுகிறது.



தம்மைப் போன்ற பெரியவர்களே ஜுரம் போன்ற நோய்களால் தாக்கப்பட்டால் திண்டாடி விடுகிறோம்.

ஜுரம் போன்ற நோய்களால் குழந்தைகள் தாக்கப்படும்போது அவர்களுக்கு மருந்து, ஊசி ஆகிய வசதிகள் அளிக்கும் வகையில் ஆயிர ரூபாய்க்கு மேல் செலவாகலாம். ஆனால் வியாதிக்கு மருந்து போன்றவற்றை அளிப்பதைவிட,வியாதி வராது தடுப்பதே மேல்.

சீனாவில் வியாதிகள் அதிகமானால் டாக்டரின் சம்பளம் குறைக்கப்படுகிறது.

சத்துணவு மையத்தில் சோற்றில் பல்லி விழுந்தது என்றெல்லாம் சொல்லி, சிலர் பயமுறுத்தி வருகிறார்கள். இந்த விஷயத்தை அனுதாப உணர்வுடன் நோக்க வேண்டும்.

சாதாரணமாக நாம் வீட்டை விட்டு வெளியே வந்துவிடுகிறோம். நமது வீட்டுச் சமையலில் என்ன விழுந்தது என்பது நமக்குத் தெரிய முடிவதில்லை. ஒரு நாளைக்கு நமது வீட்டில் 3முறை அடுப்பு ஏற்றுகிறோம். 10 ஆண்டு வாழ்க்கையில் நமது வீட்டில் குறைந்தபட்சம் 10 ஆயிரமுறை சமையல் நடந்திருக்கும். ஆனால் எத்தனை முறை பல்லி விழுந்திருக்கும்? நினைத்துப் பார்க்க வேண்டும். நாள் முழுவதும் 60,000 சத்துணவு மையங்களில் உள்ள சமையல் கூடங்களில் எங்கேயோ ஒன்றிரண்டு விழுந்திருக்கலாம். அதைப் பெரிதாகப் பிரச்சாரம் செய்து அச்ச உணர்வை ஏற்படுத்தக் கூடாது.

இந்தியா முழுமையும் பாராட்டும் இந்தத் திட்டத்திற்கு மைய அரசின் உதவி கிடைத்திருக்கிறது.

எதிர்காலத்தில் இந்தத் திட்டம் மென்மேலும் நலமானமுறையில் செயலாக்கப்படுவதற்கு அனைவரின் ஆலோசனைகளும் தேவை. எதிர்காலத்தில் நாட்டு நலத்திற்குரிய முதலீடாகஇந்தத் திட்டம் திகழும். அரசின் ஏனைய நலத் திட்டங்களைப் போலவே இதுவும் முக்கியமாகக் கருதப்படுகிறது.

(தலைமைச் செயலர் திரு. டி.வி அந்தோணி இ.ஆ.ப.அவர்கள். 17.5.85 அன்று பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து)



# மீனவர் சங்க மாநில மாநாடு

தமிழ்நாடு மீனவர் சங்கத்தின் 32-வது மாநில மாநாடு, சென்னை-தேனாம் பேட்டையில் உள்ள காமராசர் திடலில் நடைபெற்றது (12.5.85). மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு. கோவேந்தன் அவர்கள் இம் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

சங்கத் தலைவர் திரு. கே. மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கே. ஆர். நாராயணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியோரும்—மற்றும், டில்லியில் உள்ள தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி.ஆர். எட்மண்ட், மாண்புமிகு புதுவை மாநில மீன் வளத் துறை அமைச்சர் திரு. வி. வைத்தியலிங்கம், தமிழக மேலவைக் கொறடா திரு. ஜேப்பியார், தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டி, அனைத்திந்திய மீனவர் சங்கத் தலைவர் திரு. இராமச்சந்திரராவ் எம்.பி., இராமேசுவரம் கடற்கரை மீனவர் சங்கத் தலைவர் திரு. அருளானந்தம், நிதிக்குழுத் தலைவர் திரு. ஜி. அப்பாராஜ், மற்றும் சட்டப்பேரவை-மேலவை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில்—இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இராமேசுவரம் மீனவர்கள் ஐவரின் குடும்பத்தாருக்கும் தலா இரண்டாயிரம் ரூபாய் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மூலம் வழங்கப்பட்டது.

தமிழக மீனவர் சங்கத்தின் சார்பில், இம் மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் மருத்துவச் செலவு நிதிக்கென ஐயாயிரம் ரூபாய்-மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கோவேந்தன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

திரு. இ. சாமிக்கண்ணு வரவேற்புரையோடு தொடங்கிய இந்த மாநாட்டின் முடிவில், பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

—பி.எல்.ஆர்.

## உள்ளாட்சி ஊழியருக்கு ஓய்வூதியம்

அரசு அலுவலாளர்களுக்கு வழங்கப்படும் தாராளமான ஓய்வூதியத் தொகை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலாளர்களுக்கும் வழங்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் ஏறத்தாழ 5,000 பேர் பயன் அடைவார்கள். மாநகராட்சி, நகராட்சிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் எந்த ஆண்டில் அவர்கள் ஓய்வு பெற்றிருந்தாலும் அவர்களுக்கு இந்த வசதியை அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் நகராட்சிகளின் துறைத் தனிச் செயலர் திரு. ஜே. ஆர். இராமநாதன், இ.ஆ.ப. அவர்கள் 19.4.85 அன்று தெரிவித்தார்

# பாவாணர் அகரமுதலியைப் பயன்படுத்துக

பேராசிரியர் இரா. மதிவாணன்

செந்தமிழின் நலங்காக்க நாளெல்லாம் அயராதுழைத்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தொகுத்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதன்மடல் முதற்பகுதி (Tamil Etymological Dictionary Vol.I Part I) திருவள்ளுவர் திருநாளன்று (15.1.1985) வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் திருசெ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் நடந்த தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் திருவள்ளுவர் நாள் விழாவில் சிறப்புடன் வெளியிடப் பட்டது.

அகராதிக்குப் பாவாணர், 'அகரமுதலி' எனப் பெயரிட்டார். பாவாணர் வகுத்த கொள்கைகளின்படி 12 மடலங்களில் மொத்தம் 32 பகுதிகளைக் கொண்டதாக வெளியிடத் திட்டமிடப்பட்டது. முதன்மடல் முதற் பகுதியில் அகரம் ஓரெழுத்தில் தொடங்கும் 6,500 சொற்களின் விளக்கம் வண்ணப்படங்களுடனும், இனச்சொல் எடுத்துக்காட்டுகளுடனும், வேர்ச்சொல் விளக்கங்களுடனும் தரப்பட்டுள்ளது. இதுவரை தமிழில் வெளிவந்துள்ள அனைத்து அகரமுதலிகளிலும் இது பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டது.

தமிழின் தூய்மையையும் தொன்மையையும் நிலைநாட்டுவதோடு - தாய்மையும், தலைமையும் தகைபெறக் காட்டிச் செந்தமிழ் நலங்காப்பதே இவ்வகரமுதலியின் தலைமையான நோக்கம். பாவாணரின் ஞால முதன் மொழிக்கொள்கை, தனித்தமிழ்க் கொள்கை, சொற்பிறப்பு நெறிகளுக்கு மூலமான சுட்டடிக் கொள்கை ஆகியவற்றின் விளக்கமாக இது திகழும்.

இங்கிலாந்துப் பேராசிரியர் பரோவும், அமெரிக்கப் பேராசிரியர் எமனோவும் முப்பத்துமூன்று ஆண்டுகளாக உழைத்து வெளியிட்ட திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியில் (Dravidian Etymological Dictionary) அகரத்தில் தொடங்கும் தமிழ்ச் சொற்கள் 240 உள்ளன என்பதும், பாவாணர் அகரமுதலியில் அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் உள்ளன என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது.

பாவாணர் அகரமுதலி சிறப்புற வெளிவர ஆவன செய்து பாவாணர் பெயரை மாவட்டப் பொதுநூலகத்திற்கு இட்டுப் பாவாணர் குடும்பத்திற்கும் தக்காங்கு உதவி, பாவாணரைப் பெருமைப்படுத்திய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் தமிழகம் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

தமிழ் கற்கும் மாணவர் முதல் ஆராய்ச்சியாளர் வரை பயன் கொள் நிற்கும் பாவாணர் அகரமுதலியின் தனித்தன்மைகள் இவண் தரப்படுகின்றன.



**பாவாணர் அகரமுதலியின் தனித் தன்மைகள் :**

- தனித்தமிழ் அகரமுதலியாக அமைதல், கொச்சைத் தமிழ், கொடுந்தமிழ்ச் சொற்களுக்குச் செந்தமிழ் வடிவம் மீட்டமைத்தல்,

எ-டு:

கொச்சை: ராவடி

செந்தமிழ்: அடாவடி (அடாவடி—டாவடி—ராவடி)

கொச்சை: மணத்தக்காளி

செந்தமிழ்: மணித்தக்காளி (மணி-சிறியது)

2. பெரும்பாலான சொற்களுக்கு மொழிநூன்மரபும் ஏரண (Logic) நெறியும் தழுவி, வேரும் வரலாறும் வரைதல். வேர் காணும்போது பாவாணர் புதிதாகக் கண்டறிந்த வேர்மூலச் சொற்பிறப்பியல், பொருட்பாட்டு வடிவ மீட்டமைப்புச் சொற்பிறப்பியல் (Root tracing Etymology and Reconstucted Etymology on semantic basis நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்றுதல்.

எ-டு:

(1) விரல்—விள் - விரி-விரல் (விரல்-விரிக்கக் கூடியது)—வேர் மூலச் சொற்பிறப்பு

(2) தாத்தா-அத்தன் + அத்தன்—அத்தத்தன் - தாத்தன் — தாத்தா (அத்தன் = தந்தை) — வடிவ மீட்டமைப்புச் சொற்பிறப்பு.

3. சொற்களுக்கு அரைக் கலைக் களஞ்சிய அமைப்பில் விளக்கம் தருவதோடு சொற்களின் சரியான பலுக்கத்தைக் (Pronounciation ) குறிக்க எழுத்துப் பெயர்ப்பு தராமல் முதன்முதலாக ஆங்கிலத்தில் ஒலி பெயர்ப்பு தரப்படல்

எ-டு:

எழுது - eludu · ஓங்கு - ongu.

- பிற அகரமுதலிகளிலுள்ள பிழைகளைத் திருத்துதல், ஒரு பொருளின் வகைகளை ஒரே இடத்தில் குறித்தல். சான்றாக, 'அவரை' என்னும் சொல்லின் கீழ் 2 வகை அவரைகளின் பெயரும் தரப்படும். ஏரண (logic) முறைப்படி சொற்பொருள் குறித்தல்.

எ-டு:

பள்ளி-படுக்கை (முதற் பொருள்).
பள்ளி-இடம் (இறுதிப்பொருள்)

- பெரும்பாலான திராவிட மொழிகளிலிருந்து இனச் சொற்கள் குறிக்கப்படுவதோடு அகரமுதலி வரலாற்றிலேயே முதன் முதலாக உலகிலுள்ள வேற்றுக் குடும்ப மொழிகளிலிருந்தும் ஏற்ற இனச்சொற் காட்டுதல், தமிழில் கலந்துள்ள அனைத்துப் பழமொழிச் சொற்களுக்கும் தூய தமிழ்ச் சொற்காட்டுதல்.

# நவயுகா

## சிக்கன் ஃப்ரை

### எங்கள் தரத்தின் சிகரம்

| | |
|---|---|
| எடுப்பு சாப்பாடு | |
| 2 பீஸ் மீன் கறியுடன் | |
| அல்லது | |
| 2 முட்டை மசாலாவுடன் | 12.00 |
| நவயுகா சிக்கன் | 10.00 |
| நவயுகா மீன் | 6.00 |
| சிக்கன் ஃப்ரை | 6.00 |
| மட்டன் ஃப்ரை | 6.00 |
| மீன் கறி | 3.00 |
| மீன் ஃப்ரை | 3.00 |
| சிக்கன்/மட்டன் பிரியாணி | 9.00 |
| ப்ரான் மசாலா | 7.00 |

மற்றும் பல படைப்புகள்



லஞ்ச் 11 am to 3 pm
டின்னர் 7 pm to 11 pm

நவயுகா-ஆந்திர உணவின் உருவகம்

**நவயுகா**

அசைவம்-ஏர்கண்டிஷன்

புது உட்லண்ட்ஸ் எதிரில்
மைலாப்பூர், சென்னை-4. போன் : 76164

national



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




● ஞால முதன்மொழியின் தோற்றம், எம்மொழிச்சொல் எம்மொழிக்குச் சென்றுள்ளதென்பதைக் கண்டறிதற்கான வரையறை, சொற்களின் காலவரையறை, தமிழ்ச் சொற்களின் திரிபுகள் ஆகிய ஆராய்ச்சி விளக்கம் கொண்ட சொற்பிறப்பு நெறிமுறைகளை (Principles of Etymology) தனி மடலமாக வெளியிடுதல்.

●. தமிழில் கலந்துள்ள வேற்றுமொழிச் சொற்கள் தாய்நூலான அகரவரிசையில் இடம்பெறாமல் அயற்சொல் மடலமான பத்தாம் மடலத்தில் தனியாக அகரவரிசைப்படுத்தப்படல்.

● மொழியகழ்வாராய்ச்சிஎனப் புகழப்படும் சொற்பிறப்பு வளர்ச்சி வரலாறு விளக்கும் இவ்வகரமுதலி, மாந்தநூலார், மன்பதைநூலார், தொன்முதுவரலாற்று நூலார், மொழிநூலார் உள்ளிட்ட பல்வேறு அறிவியல் ஆராய்ச்சியாளர்க்கு அரிய கருவி நூலாக அமையும். தமிழில் கலைச்சொற் படைப்பாளர்க்கு ஏற்ற துணை நூலாகும்.

● உலகமொழிகளிடை ஊட்டம் பெற்றுள்ள தமிழ்ச் சொற்களை இனங்கண்டறிதற்கு எளிதில் உதவும் வகையில், ஆணிவேர்ச் சொற்களும் அடிப்படைச் சொற்களும் பெருந்தலைப்புச் சொற்களாக, தடித்த எழுத்தில் தரப்பட்டிருத்தல்.

● முந்து திரவிடச் (Proto-Dravidian) சொற்களை வடிவமீட்டமைக்கும்போது மேனாட்டாரைப்போல், ஒலியனியலை (Phonology) அடிப்படையாகக்கொள்ளாமல் பொருட்பாட்டை (Semantics) நிலைக்களனாக் கொள்வது, தமிழில் புதுக்கப்படும் படைப்புச் சொற்களுக்குச் சிலுவைக் குறியிட்டுக் காட்டுவதோடு படைத்தவர் பெயரும் குறிப்பிடப்படும். முந்து திரவிடச் சொற்களுக்கு உடுக்குறியிடப்படும்.

●. ஓரிலக்கம் சொற்களை மட்டும் கொண்டுள்ள சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி வெளிவந்து அரை நூற்றாண்டாகியும் பல இலக்கம் சொற்களைச் சேர்த்து, தமிழில் சொல்வளத்தைப் பெருக்காத குறையைப் போக்க, முதன் முறையாக, கல்லாத, மக்களிடை வழங்கும் வட்டார வழக்குகள், நாட்டுப்புறத் தொழிற்சொற்கள் ஆகியவற்றை முறையாகத் தொகுப்பது, நூல்களிலிருந்து இதுவரை தொகுக்கப்படாத கூட்டுச் சொற்கள், மரபுவினைகள், இணைமொழிகள் ஆகியவற்றைச் சேர்த்தல். ஆங்காங்கே வண்ணப்பட விளக்கங்கள் சேர்க்கப்படுதல். பாவாணரின் சொற்பிறப்பியல் நெறிமுறைகளைப் பின்பற்றிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மறைந்துபோன தமிழ்ச் சொற்களையும், பிறமொழிகளில் திரிந்தும் திரியாமலும் வழங்கி, தமிழில் வழக்கற்றுப்போன சொற்களையும் வடிவமீட்டமைத்தல். இம்முயற்சி, இவற்றை உலகின் பல்வேறு தொன்முதுமொழிகளின் எழுத்துச் சான்றுகளோடு ஒப்பிட்டு, அறப் பழங்காலத்தில் அவற்றுக்கும் தமிழுக்குமிடையிலான கொள்கொடைகளை நிறுவத் துணை செய்யும்.

எ-டு:

(1) ஆன்-அவ்விடம்
ஈன்-இவ்விடம்
ஊன்-முன்னிடம், நீ.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மறைந்துபோன தமிழ்ச் சொற்கள். (பாவாணர் மீட்டமைத்தவை).

; தமிழுக்கு 4 இலக்கம் சொற்களையாவது இவ்வகரமுதலியில் சேர்ப்பதோடு, தமிழ் திரவிடத்திற்குத் தாய், ஆரியத்திற்கு மூலம், ஞாலமுதற்றாய் மொழி என்னும் கருத்துக்கு அரணாக ஞாலத் தொன்மொழிகள் பலவற்றிலிருந்தும் தக்க சான்றுகளைத் திரட்டித் தருதல்.

சொற்களுக்குச் செந்தமிழ் வடிவம் காட்டுதலாலும், சொற்பிறப்பியல் கூறுதலாலும், தமிழுலகில் வழங்கும் இந்தச் சொல் இடம் பெறவில்லை என்று சுட்டிக் காட்ட முடியாத வகையில் அனைத்துச் சொற்களையும் முயன்று திரட்டித் தருதலாலும், படவிளக்கம் சேர்த்தலாலும், பொதுமக்கள் முதல் ஆராய்ச்சியாளர் வரை பயன்கொள நிற்றலாலும் இதற்குச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பொதுப்பயன்பாட்டுப் பொது வகை இருமொழிப் பேரகரமுதலி (Comprehensive general purpose bilingual Illustrated Etymological Dictionary of the Tamil language எனப் பெயரிடத் தகினும், பரோ எமனோவர் அகரமுதலி D.E.D. தி.சொ.பி., (திரவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலி) எனக் குறிக்கப்படுவதுபோல், சுருக்கமாக, செ.சொ.பி. (செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி) T. E. D. (Tamil Etymological Dictionary) என்றே இது பொதுவாக வழங்கப்படும்.

● மறைந்த மொழிஞாயிறு பாவாணர், முதன்மடலத்தின் முதற்பகுதி மட்டும் எழுதிமுடித்திருப்பினும், வேர்ச்சொல் கட்டுரைகளிலும், ஒப்பியன் மொழி நூல், முதல் தாய்மொழி, தமிழ் வரலாறு, சுட்டுவிளக்கம்போன்ற நூல்களிலும், பிற கட்டுரைகளிலும் அனைத்து மடலங்களுக்கும் தேவையான அடிப்படைச்செய்திகளனைத்தும் தந்திருப்பதால் அகரமுதலியின் அனைத்து மடலங்களும் முட்டின்றி வெளிவர வாய்ப்புள்ளது. The Linguist has to tell the historians a lot என்று உருசிய அறிஞர் கோந்தரதோவ் கூறிய பொன்மொழிக்கு இவ்வகரமுதலி தக்க எடுத்துக்காட்டாக விளங்கும் என்பது உறுதி.

● உலக மொழிகளிலேயே தமிழ் ஒன்றுதான் பிறமொழிச் சொற்களை அறவே நீக்கி எழுதவும் பேசவும் வல்ல சொல்வளம் பெற்றுள்ளது. இத்தகு உயர்தனிச்செம்மொழியின் தனித்தன்மையைக் காக்கவே இந்த அகரமுதலி உருவாகிறது.

● ஆங்கிலம் உள்ளிட்ட மேலைநாட்டு மொழிகளிலுள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகளில் சொல்மூலம் காட்டுவார்களேயன்றி அச்சொல் மூலத்திற்கும் மூலச்சொல் காட்டும் வழக்கமில்லை. Kind, King என்னும் சொற்களுக்கு Kin (family, related by blood) என்பது மூலமாகக் காட்டப்படுகிறது. ஆயின், Kin எப்படிப் பிறந்தது, அதன் வேர்ச்சொல் என்ன என்பதை ஆராயும் முயற்சியில் மேனாட்டு வல்லுநர், இதுகாறும் இறங்கவில்லை. அம்மொழிகளும் அத்தகு ஆய்வுக்கு இடந்தரா. ஆயின், இத்துறையின் முயன்று முழுமையான வெற்றி பெற்றவர் பாவாணர் ஒருவரே. ஒளிர், ஒளி என்பவற்றுக்கு 'ஒள்' என்பதே வேர்ச்சொல் எனக் கூறும் பாவாணர் உல்(வெப்பம்)-உள்-ஒள் எனத் திரிந்ததாக வேர்ச்சொல்லுக்கும் வேர்ச்சொல் காட்டுகிறார். தமிழிலுள்ள ஆணிவேர்ச் சொற்களே உலகத் தொன்மொழிகளிலும் ஆணிவேர்ச் சொற்களாக இருக்கின்றன என்பது பாவாணரின் கொள்கை.

எ-டு:

குல்-குலம் (குடும்பம்). குல்-குன் - Goth. kun — OS Kun —OE cymn — E. Kin (family)

வேர்ச்சொல்லுக்கும் வேர்ச்சொல் கண்டுபிடித்து, எல்லாச் சொற்களுக்கும் அடிவேர்ச்சொற்களைக் (விதைச்சொல்-Seed word முளைச்சொல் - (Sprout word) கண்டு, ஆணிவேர்ச்சொல், பக்கவேர்ச்சொல், சல்லிவேர்ச்சொல் என வகைப்படுத்திய பாவாணரின் கொள்கைப்படி இந்த அகரமுதலி வெளிவருவது சொற்பிறப்பு ஆராய்ச்சியில் உலகிற்கே வழிகாட்டியாக அமையும்.





# காஞ்சியில் ஆலயம் காசியில் ஆய்வு!

தென்னிந்திய ஆலயக் கட்டடக் கலையை ஆராய்ச்சி செய்து, இந்திய-அமெரிக்க நூல் ஒன்று அண்மையில் வெளிவந்திருக்கிறது. காஞ்சியில் பல்லவர்கள் கட்டிய கோயில்களும் மதுரையில் பாண்டியர்கள் அமைத்த ஆலயங்களும், தமிழக ஆலய நிர்மாணக் கலை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பல கட்டங்கள்:

தஞ்சையில் 40க்கும் மேற்பட்ட சோழர் காலத்துக் கோயில்களின் பாணி-மதுரையில் ஆலய நிர்மாணக் கலையில் சோழர் விமானப் பங்கு – இவற்றை ஆய்வு செய்து விளக்கும் வகையில் இந்நூல் வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் மைக்கேல் டபிள்யூ. மீஸ்டர், இணையாசிரியர் எம்.ஏ.தாக்கே; வாரணாசி எனப்படும் காசி மாநகரில் உள்ள அமெரிக்கன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இண்டியன் ஸ்டடீஸ். என்ற கல்வி நிலையத்தைச் சேர்ந்தவர்கள்'

இந்திய ஆலய நிர்மாணக் கலைக்கு விளக்கம் தரும் வகையில் இந்த ஆய்வு நூலை முழுமைப்படுத்தி நான்கு தொகுதிகளாக வெளியிடத் திட்டமிட்டுள்ளது இந்தக் கல்வி நிலையம்.

அண்மையில் வெளிவந்திருப்பது முதல் தொகுதி. இந்த ஆய்வு நூலின் பெயர்; இந்திய ஆலய நிர்மாணக் கலைக் களஞ்சியம்: தென் இந்தியா; தென் திராவிட தேசம் ; கி.மு. 20. கி.பி.1324.

முதல் தொகுதியில் அமராவதி, நாகார்ஜுனகொண்டா ஆகியவற்றின் கோபுரங்களை ஒப்பிட்டுத் தென்னகத்து ஆலய நிர்மாணக் கலையின் வளர்ச்சியை ஆய்ந்துள்ளனர். ஆதி கால ஆலயங்கள் செங்கற்களால் கட்டப்பட்டு வந்தமைக்கு இந்தக் கோபுரங்கள் சான்று பகர்கின்றன.

பல்லவர் காலத்துக் கோயில் கட்டடக் கலை பிற கோயில்கள் உள்ள இடங்களைக் குறிப்பிடும் ஒன்பது வரைபடங்களும், கோவில்களின் கட்டட அமைப்பை விளக்கும் 122 படங்களும் இந்நூலில் உள்ளன.



# இதய இரத்த ஓட்டத்தைப் படம் பிடிக்கும் கம்ப்யூட்டர்....

இதய நோயின் கூறுகளைக்கண்டறியும் கம்ப்யூட்டர் ஒன்றை விஞ்ஞானிகள் வடிவமைத்து இருக்கின்றனர்.

இந்தப் புதுமைக் கம்ப்யூட்டர் நோயாளியின் இதய இரத்த நாளங்களின் எக்ஸ்-ரே படங்களை ஆராய்ந்து பதிவு செய்து கொள்கிறது. ஒவ்வொரு இரத்த நாளமும் இதயத் தசைகளுக்கு எவ்வளவு செம்மையாக இரத்தம் வழங்குகிறது என்பதை அளவிட்டு ஒவ்வொரு இதயத் துடிப்பையும் கவனித்து மருத்துவர்களுக்கு உணர்த்துகிறது.

இதயத் தசைகளுக்கு இரத்தம் வழங்கும் நாளங்கள் மிகவும் மெல்லியவை; கிளைத்துப் பரவியவை. கொழுப்பு, இந்த நாளங்களின் சுவர்களில் ஒட்டிக் கொள்கிறது. இது அளவுக்கு அதிகமானால் மார்புவலி, மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. கொழுப்பு இரத்த நாளத்தை அடைத்துக் கொண்டு விட்டால் மாரடைப்பு ஏற்படுகிறது.

கம்ப்யூட்டர் இரத்த ஓட்டத்தைப் பல பல வண்ணங்களில் காட்டுகிறது. ஒவ்வொரு இதயத் துடிப்பிலும் வண்ணம் மாறும். இதயத் தசைகளினூடே இரத்தம் எவ்வாறு பரவுகிறது என்பதை இந்தக் கம்ப்யூட்டர் தெளிவாகக் காட்டுகிறது.

கம்ப்யூட்டர் வழியாக இரத்த ஓட்டத்தை அளவிட முடிவதனால், இரத்த நாளங்கள் எவ்வளவு அடைபட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு கிடைக்கும் துல்லியமான விவரத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு நோயாளிக்கும் தகுந்த சிகிச்சை முறையை வரையறுக்க முடியும். இந்தக் கம்ப்யூட்டரை அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளார்கள்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்.



குன்றத்தூரில் சேக்கிழார் விழாவையும் சேக்கிழார் திருக்கோயில் திருப்பணி தொடக்க விழாவையும் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 18-5-85 அன்று தொடங்கி வைத்தார். சேக்கிழார் உருவச்சிலை அருள்மிகு நாகேஸ்வரர் ஆலயத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டது.



தமிழகத்திற்கு வருகை புரிந்த மாண்புமிகு மலேசிய வீட்டு வசதி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களை மாண்புமிகு தமிழக வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. த. கல்லுசாமி அவர்கள் 8-5-85 அன்று வரவேற்றார். வீட்டு வசதி வாரியத் தலைவர் திருப்பூர் திரு மணிமாறன் உடன் உள்ளார்.

15-5-85 ல் சென்னை அண்ணாநகர் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி கிளையில் சுயசேவைப் பிரிவை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ் ஆர். இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டார்.





மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 30.5.85 அன்று காலை டெல்லியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அவரை வரவேற்றனர்.



சென்னை அடையாறு புற்றுநோய் நிலையத்தில் உள்ள சிகிச்சை ஆய்வுக்கூடக் கட்டடத்தை, மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 1.6.85 அன்று திறந்து வைத்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் ஆகியோர் உடனிருக்கின்றனர்.





# மூர் அங்காடியில் தீவிபத்து முதல்வர் எடுத்த துரித நடவடிக்கை

**முதல் அட்டை சொல்லும் செய்தி**

வரலாற்றுச் சிறப்பு மிக்க சென்னை மூர் அங்காடி தீப் பிழம்புகளுக்கு ஆளாகி பெருத்த சேதமுற்றது நமக்கெல்லாம் வேதனை தரும் செய்தியாகும்.

29.5.85 புதன் நள்ளிரவில் மூர் அங்காடியில் தீ மூண்டது, இத் தீ விபத்தில் பிளாஸ்டிக் கடைகள், புத்தகக் கடைகள், பொம்மைக் கடைகள், காலணி, தோல், தொப்பிக் கடைகள் முதலானவை அடியோடு எரிந்து போயின.

தீயை அணைப்பதில் 20க்கும் மேற்பட்ட தீயணைக்கும் என்ஜின்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. 'ஸ்னார்கல்' என்னும் நவீன தீயணைக்கும் இயந்திரமும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

இந்தத் தீ விபத்தில் ரூ.10 கோடிக்குச் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. மூர் அங்காடிப் பகுதியில் எரிந்து கிடந்த மாதிரிகளை எடுத்து, தடய பரிசோதனைக்காகப் போலீசார் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

'இந்தத் தீ விபத்து தொடர்பாக வழக்கு ஒன்றைப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறோம்' என்று காவல்துறை ஆணையாளர் திரு எஸ்.ஸ்ரீபால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1.6.85 அன்று மூர் அங்காடிக்குச் சென்று எரிந்து போன கடைகளைப் பார்வையிட்டார். அப்போது சில வியாபாரிகள் மனுக்களைக் கொடுத்தனர். சில பெண்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் காலில் விழுந்து கதறி அழுதனர். அவர்களைப் பார்த்து அவர் கண்கலங்கினார். கடைகளை இழந்து தவிக்கும் வியாபாரிகளுக்கு ஆறுதல் கூறினார். மூர் அங்காடி வியாபாரிகளின் துயரைப் போக்க, சில அவசர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார்.

இதுபற்றி, தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி.அந்தோணி, இ.ஆ.ப., செய்தியாளர்களிடம் கூறியதாவது:

''சென்னையில் தீபிடித்த மூர் அங்காடிப் பகுதிகளை முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர்.





# இதன் வயது 87

**1898** ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு 1900ஆம் ஆண்டில் சென்னையில் கட்டி முடிக்கப்பட்ட மூர் அங்காடி பிரிட்டிஷ் இந்திய சாம்ராஜ்யத்தின் மிகப் பெரிய அங்காடிகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. அதற்கு முன் இந்த இடம் 'குஜிலி பஜார்' என்று வழங்கப்பட்டது.

மூர் அங்காடிக்கான வடிவமைப்பைத் தயாரித்தவர் ஆர். இ.எல்லீஸ் என்னும் ஆங்கிலேயராவார். கர்னல் சர் ஜார்ஜ் என்பவர் சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்தபோது பிராட்வே பகுதியில் இருந்த அங்காடிக்குப் பதிலாக இந்த அங்காடியைக் கட்டினார். அவரது பெயராலேயே இந்த அங்காடி வழங்கப்பட்டது. சென்னை ஆளுநராக இருந்த சர் ஆர்தர் ஹாவ்லக் இந்த அங்காடியை 1900ல் திறந்து வைத்தார்.

மூர் அங்காடி விரைவிலேயே புகழ் பெற்றது. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சென்னை வருபவர்கள் அனைவரும் இதைச் சுற்றிப் பார்க்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அந்தக்காலத்தில் இந்த அங்காடியில் இங்கிலாந்தில் செய்யப்பட்ட பொருட்கள் ஏகமாக விற்கப்பட்டன. விதவிதமான பொம்மைகள், மூன்று சக்கர சைக்கிள்கள், சாவி கொடுத்தால் ஓடக்கூடிய ரயில் பொம்மைகள் ஆகியவற்றை இங்கு வாங்கிச் செல்வதைப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளும் பழக்கம் இருந்தது.

விளையாட்டுச் சாமான்கள் மட்டுமல்லாமல் ஏராளமான புத்தகங்களும் இங்கு விற்கப்பட்டன. பழைய புத்தகங்களை வாங்கும் கடைகளும் இருந்தன. 100 ஆண்டுப் பழமை வாய்ந்த அரிய புத்தகங்கள் இங்குள்ள கடைகளில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வாங்க வருபவர்கள் அதிகரித்துக் கொண்டே வந்தனர். ஆங்கிலம், தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், சமஸ்கிருதம், துளு, மராத்தி, கொங்கணி, அரபு மொழிப் புத்தகங்கள் இங்குக் கிடைத்துவந்தன. இதன் காரணமாகப் பல்வேறு மாநிலங்களிலிருந்து சென்னைக்கு வருபவர்களும் மூர் அங்காடி சென்று புத்தகங்கள் வாங்கினர். இந்த அரிய கருவூலங்களையெல்லாம் தீப்பிழம்பு விழுங்கிவிட்டது.

சுற்றிப் பார்த்தார். அவருடன் சட்ட அமைச்சர் பொன்னையன், ஆதிதிராவிட நல அமைச்சர் அருணாசலம் ஆகியோர் சென்றார்கள். நான், சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு மாதவ சர்மா, ஆணையாளர் திரு கே. மலைச்சாமி, தென்வட்டார ஸ்டேட் வங்கித் தலைமை மேலாளர் மற்றும் அரசு அலுவலர்களும் சென்று பார்த்தோம்.

''மருந்து ஆய்வுத்துறை இயக்குநரும் அங்கு வந்து தீ பிடித்ததற்கான காரணங்களை முதலமைச்சரிடம் விளக்கினார்.

''மூர் அங்காடிப் பகுதியில் கடைகள் வைத்திருந்தவர்கள், அதில் இருந்த வேலையாட்களின் பிரதிநிதிகளையும் முதலமைச்சர் சந்தித்துப் பேசினார்.

''கடைகளை இழந்த 857 பேர், அதில் வேலை செய்தவர்கள் ஆகியோருக்கும் தீயினால் சொத்தை இழந்து வருமான வாய்ப்புகளை இழந்து இருப்பவர்களுக்கும் முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். முதலமைச்சர் அங்கிருந்து வடக்கில் உள்ள அல்லிக்குளம் பகுதி, கண்ணப்பர் திடல் மற்றும் அதையொட்டியுள்ள பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார். அங்கிருந்து தலைமைச் செயலகத்துக்கு வந்து அலுவலர்களையும், அமைச்சர்களையும் அழைத்துப் பேசினார்.

''மூர் அங்காடியில் கடைகள் வைத்து இருந்த 857 பேர்களுக்கும் இனிமேல் அல்லிக்குளம் பகுதியில்தான் நிரந்தரக் கட்டடம் அமைய வேண்டும். அந்தப் பகுதியில்தான் தற்காலிகக் கடைகளும் அமைய வேண்டும் என்று முதலமைச்சர் முடிவு செய்திருக்கிறார்.

''இந்த முடிவு எடுத்ததற்குக் காரணம், வரப்போகும் அல்லிக்குளக் கடைகள் பூங்கா ரெயில் நிலையத்துக்கும், மத்திய ரெயில் நிலையத்துக்கும் ஒட்டினாற்போல இருப்பதால் அவர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும் என்பதோடு, கடைச் சொந்தக்காரர்களில் பெரும்பாலோரின் விருப்பத்திற்கேற்பத் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.



''தற்போது மிஞ்சி இருக்கும் மூர் அங்காடிக் கட்டடமும், பொதுப்பணித் தலைமைப் பொறியாளர் கருத்துப்படி, திரும்பக் கட்ட இயலாத அளவுக்கு அபாயகரமாக இருக்கிறது. அதையொட்டி இருக்கும் கடைகளும் இந்தத் தீயினால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் மூர் அங்காடிப் பகுதி முழுவதையுமே உடனே தரைமட்டமாக இடித்துத் தள்ளிவிட்டு, அந்தக் கல்லையும் மண்ணையும் போட்டு அல்லிக் குளத்தில் நிரப்புவது என்று முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். முடிவு செய்திருக்கிறார்.

''ரெயில்வே துறையைக் கலந்து கொண்டு சென்னை மாநகராட்சியினர் இடிக்கும் வேலையை உடனே தொடங்கிவிடுவார்கள். அல்லிக் குளத்தை நிரப்பிய பிறகு, அதன் அமைப்புகளைப் படம் வரைந்து எடுத்து அந்த 857 கடைக்காரர்களுக்கும் தற்காலிகக் கடைகள் கட்டும் வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

''சென்னை மாநகராட்சியினர் இந்த வேலைகளைச் செய்து முடித்து தற்காலிகக் கடைகளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்வார்கள். இடித்துக் காலிசெய்யப்பட்ட மூர் அங்காடிப் பகுதி ஏற்கெனவே ஒப்புக் கொண்டபடி நகர்ப்புற மின்சார ரெயில் விரிவாக்கத்துக்காக ரெயில்வே துறையிடம் ஒப்படைக்கப்படும்.

''ஏற்கெனவே ரெயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியில் ஒரு பேருந்து நிலையத்தை அமைத்து ரெயிலில் இருந்து வரும் பயணிகளுக்கு வசதி செய்ய மாநில அரசு தீர்மானித்துள்ளது. மூர் அங்காடியை ஒட்டியுள்ள இடத்தை சாலையின் இருபுறத்திலோ அல்லது அல்லிக்குளப் பகுதியிலோ அல்லது தந்தை பெரியார் நெடுஞ்சாலையிலோ யாரும் தற்காலிகக் கடைகள் போட விடாமல் மாநகராட்சியினர் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள்.

''தங்கள் சரக்குகளையும் இழந்து வருமானத்துக்கு முழுவதும் வழியில்லாமல் இந்தத் தீயினால் பாதிக்கப்பட்ட ஏழைக் கடைக்காரர்களின் மன வேதனையைக் கண்டு மனம் உருகி, அந்த 857 பேருக்கும் உதவிப்பணமாக தலா ரூ. 2000 கொடுக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். உத்தரவிட்டிருக்கிறார்.

''தமிழக அரசின் நிதி நிறுவனங்கள் துறைச் செயலாளரையும் அழைத்து பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு வங்கிகளிடம் கடன் கிடைக்க வழிசெய்யும்படி சொல்லி உள்ளார். மற்ற வங்கிகளும் தங்களிடம் ஏற்கெனவே கணக்கு வைத்துள்ளவர்களுக்குக் கடன் கொடுக்கும்படி நிதி நிறுவனங்களுக்குத் துறைச் செயலாளர் ஏற்பாடு செய்வார்.''



மூர் அங்காடிப் பகுதியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சுற்றிப் பார்த்து, உடனடியாக நிவாரணத் தொகையாக ஒவ்வொரு கடைக்காரருக்கும் தலா ரூபாய் இரண்டாயிரம் அளித்தமைக்கு, வியாபாரிகள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் குடியரசுத் துணைத் தலைவர்

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 30.5.85 அன்று விமானப்படை தனி விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்தார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அவரை அன்புடன் வரவேற்றார்கள்.

அன்று மாலை சென்னை பம்மலில் உள்ள வித்தியாலயா வளாகத்தில் ஸ்ரீசந்திரசேகரேந்திரசரஸ்வதி கட்டடத்தைத் திறந்துவைத்தும், ரூ. 25 இலட்சம் மதிப்புள்ள ஸ்ரீசங்கர சுகாதார மையக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தும் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் பேசினார்.

''உலகில் வேறெந்த நாட்டு மருத்துவர்களைக் காட்டிலும் இந்தியாவில் தான் நோயாளிகளை மிகப் பரிவுடன் கவனித்துச் சிகிச்சை அளிக்கும் டாக்டர்கள் உள்ளனர். வெளிநாட்டு மருத்துவர்களைப் போல ஒரு நோயாளிக்குச் சிகிச்சை அளித்தால் எவ்வளவு பணம் வரும் என்று கணக்குப்பார்க்கும் மனோபாவம் இந்திய மருத்துவர்களுக்கு இல்லை. அதற்கு உதாரணமாக டாக்டர் ரங்காச்சாரி, டாக்டர் குருசாமி ஆகியோரைக் குறிப்பிடலாம்'' என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு.வி.வி. சுவாமிநாதன் அவர்கள், மாநில அவை உறுப்பினர் திரு ஆர்.மோகனரங்கம், சட்டப்பேரவை உறுப்பினர் திரு எல்லராஜமாணிக்கம், தொழிற்சங்கத் தலைவர் திரு டி. வி. ஆனந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.ஏ.மாத்யூ ஆகியோர் பேசினர்.

ஸ்ரீ சங்கர வித்யாலயா செயலாளர் திரு எஸ். விசுவநாதன் பேசுகையில், ''மூன்று லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்தப் பள்ளியில் மொத்தம் 550 மாணவர்கள் ஏழாவது வகுப்பு வரை பயிலுகிறார்கள். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகள் கற்பிக்கப்படுகின்றன'' என்றார்.

அன்று இரவு, சென்னையை அடுத்த மாங்காட்டில் உள்ள அருள்மிகு காமாட்சி அம்மன் கோவில் அர்த்தமேரு ஸ்ரீசக்கரத்துக்குப் புதிய வெள்ளிக் கவசம் அணிவிக்கும் விழாவில் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், கோவில்களில் இதுபோன்ற சிறப்பான பணிகளைச் செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல், ஆன்மீகத்துறையை வளர்க்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மூன்று இலட்ச ரூபாய் செலவில் 64 கிலோ எடை வெள்ளியில் உருவாக்கப்பட்ட இந்த வெள்ளிக் கவசத்தை, இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் திரு கு.ஆளுடையபிள்ளை பெற்றுக்கொண்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள், அறங்காவலர் திரு மணலி ராமகிருஷ்ணன், சட்டப்பேரவை இ.காங்கிரஸ் துணைத்தலைவர் திருமதி டி.யசோதா, திரு சிவகணேசன் ஆகியோர் பேசினர்.






சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில்,நோய் கண்டறியும் ஆராய்ச்சிப் பிரிவுக் கட்டடத்தை 1.6.85 அன்று மேதகு குடியரசுத் துணைத்தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், ''சமூக சேவைத் திட்டங்கள் எல்லாவற்றையும் அரசாங்கமே ஏற்று நடத்துவது இயலாத காரியம். தொண்டு நிறுவனங்கள் மக்களின் நல்லெண்ணத்தையும், உதவியையும் பெற்று இவற்றை நிறைவேற்ற வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். புற்றுநோய் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டாக்டர் வி.சாந்தா அறிக்கை படித்தார்.

அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த தமிழ்நாடு பொறியியல் சங்கப் (பொதுப் பணித்துறை) பவளவிழா நிகழ்ச்சிகளை மேதகு குடியரசுத்துணைத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், ''ஒரு பொறுப்புக்கு ஒருவரை நியமிக்கும்போது, அதற்கான தேவைகளைப் பார்த்து அதற்கேற்ப நியமிக்க வேண்டுமேயல்லாது, விண்ணப்பதாரரின்கல்வி தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டு நியமிக்கக்கூடாது'' என்றார்.



மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 30-5-1985 அன்று மாங்காடு காமாட்சி அம்மன் கோவிலில் வெள்ளிக் கவசத்தை வழங்குகிறார். அருகில் மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள்.

பிறகு, பவளவிழா மலரை மேதகு குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் வெளியிட, அதனை மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

விழாவில் திரு சி.ப.சண்முகம், திரு.ஆர்.டி.குல்கர்னி, திரு எம். ராகவன், திரு ஆர்.வெங்கடசுப்பு, திரு பி.சீனிவாசன், திரு. எஸ்.சி.சி. அந்தோணிப்பிள்ளை, மாண்புமிகு மத்திய மகளிர் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர், மேகாலயா மாநில மாண்புமிகு நிதியமைச்சர் திரு டி.டி.அபரங், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி ஹண்டே, மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.ந. நல்லுசாமி ஆகியோர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

சென்னை அருகில் பாடியில் உள்ள லூகாஸ் டி.வி.எஸ்.கம்பெனியில் மிக அதிகமான அளவு கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப் பெற்றதைப் பாராட்டி மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், அந்தக் கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.எஸ்.சுந்தரேசனிடம் எப்.ஐ.சி.சி.ஐ.விருதை வழங்கினார்.

மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் 2.6.85 அன்று புதுடெல்லி திரும்பினார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. க. இராசாராம், திரு எஸ். திருநாவுக்கரசு, திரு.வி.வி. சுவாமிநாதன் மற்றும் தலைமைச் செயலர் திரு டி.வி.அந்தோணி இ.ஆ.ப. ஆகியோர் அன்புடன் வழியனுப்பி வைத்தனர்.



# தமிழகத்தில் குடும்ப நலத் திட்டம்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

**டாக்டர் எச். வி. ஹண்டே**

**இ**ந்தியா போன்ற வளர்ச்சி பெற்றுவரும் நாட்டிற்குக் குடும்ப நலத் திட்டம் அத்தியாவசியம் என்பதை உணராமல் இருக்க முடியாது. குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரம் ஆகவும் பலன் தரத்தக்கதாகவும் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.

**1985-86ஆம் ஆண்டுக்கான விளம்பர உத்தி**

1985-86ம் ஆண்டில் புதுமையான குடும்ப நல விளம்பர உத்திகளை அடிப்படையாகக் கொண்டு குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்படும். விவசாயிகள், அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள், தாய்மார்கள் முதலிய குறிப்பிட்ட பல்வேறு வாழ்க்கை முறையிலுள்ள-சமுதாயத்திற்குஏற்றாற்போல குடும்ப நல மக்கள் தொடர்பு உத்திகள் செயல்படுத்தப்படும். அந்தந்தக் குழுவினருக்கு விளங்கும் வகையிலானதும், மன நிறைவளிக்கத்தக்கதுமான குடும்ப நலச் செய்திகள் தந்து ஊக்குவிக்கப்பட இருப்பதே அந்த புதிய உத்தியாகும். இப்புதிய விளம்பர உத்திகளின் அடிப்படையில் விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

முதல் கட்டமாக, இப்புதியஅணுகுமுறைப்படி பத்துத் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குடும்ப நலத் திட்டக் கருத்துக்கள் அடங்கிய செய்திகளைப் பரப்புவதில் வேளாண்மைத்துறை, போக்குவரத்துத் துறை முதலிய எல்லாத் துறைகளும் ஈடுபட்டுள்ளன.

**விரிவாக்கப்பணிகள்**

குடும்பநலத் திட்டம் ஏற்பதற்கான கருத்தடை முறைகள் பற்றியும், பல்வேறு குடும்ப நல நடவடிக்கைகள் குறித்தும் புத்தகம் ஒன்று தயாரிக்கப்பட்டு, குடும்ப நல விரிவாக்கப் பணியாளர்களுக்கு வழிகாட்டி நூல் ஆக வழங்கப்பட இருக்கிறது.

தகுதி வாய்ந்த தம்பதியர் குறித்த பதிவேடுகளில் பதிவு செய்யும் பணிகளை இவ்வாண்டு முழுமையாக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

**தாய்-சேய்ப் பணிகளுடன் குடும்ப நலத்திட்ட ஒருங்கிணைப்பு**

குடும்ப நலத்திட்டம் ஒரு நல வாழ்வுத் திட்டம் என்ற நிலையை உருவாக்க, பல்வேறு குழந்தைகள் நலத் திட்டங்களையும் குடும்ப நலத் திட்டத்துடன் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையிலேயே 1985-86க்கான கருத்தடை வளையம் பொருத்தும் திட்டமும் வலியுறுத்தப்படுகிறது. காரணம் கருத்தடை வளையம் பொருத்தும் திட்டம், குழந்தைகளைத் தக்க இடைவெளியில் பெற்றுக் கொள்ள உதவுகிறது. இதனால், பிறக்கும் குழந்தைகளை நல்ல உடல் நலத்துடனும், எல்லா வாய்ப்பு வசதிகளுடனும் வளர்க்க முடியும். தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் முழுமையாகத் தடுப்பு மருந்துகள் வழங்கவும் நல வாழ்வுச் சேவைகள் கிடைக்கச் செய்யவும்எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**மரபு மருத்துவத் தாய்மார்கள் பயிற்சி**

இந்த வகையில் மரபு மருத்துவத் தாய்மார்கள் பயிற்சித் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்றும் கூட கிராமப்புறங்களில் பரம்பரையாகச் சில தாய்மார்கள் பிரசவம் பார்க்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தாய்மார்களுக்குப் பிரசவம் பார்ப்பதில் முறையான பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை மரபு மருத்துவத் தாய்மார்கள் 31744 பேருக்குப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ஆயிரம் தாய்மார்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். அவர்களுக்குரிய உபகரணங்களும் வழங்கப்படும்.

**குடும்ப நலத்திட்ட நிலையங்களில் வசதிகளைப் பெருக்குதல்**

நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள மருத்துவ மனைகளும், சிறந்த குடும்ப நலச் சேவைப்பணிகளை வழங்கும் நிலையை உருவாக்க, பலநோக்குச் செயல்முறைத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. மருத்துவப் பணிகளுக்குத் தேவையான கருவிகள், மேஜை நாற்காலி, துணி முதலானவை வழங்குவதும் இதில் அடங்கும். இந்த நிலையங்களுக்கு வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவற்றை நன்கொடையாக வழங்கத் தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

முதல் நடவடிக்கையாக 'லேப்ராஸ்க்கோபிக்' கருவிகள் இல்லாத தாலுகா மருத்துவ மனைகள், பிற மருத்துவமனைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு 'லேப்ராஸ்கோப்பிக்' கருவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருவிகளை வழங்குவதின் மூலம் தாலுகா மருத்துவமனைகளும், பிற மருத்துவமனைகளும் 'முகாம்' காலங்களில் மட்டுமே இவ்வகைச் சிகிச்சை செய்ய இயலும் என்ற நிலை மாறி, ஆண்டு முழுவதும் தொடர்ந்து இச்சிகிச்சை செய்வதற்கான வசதி ஏற்படும்.

மாநிலத்தின் வெவ்வேறுஇடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு இதுவரை 96 'லேப்ராஸ்கோப்பிக்'கருவிகள் வழங்கப்பட்டுள்ளன மாநிலம் முழுவதும் உள்ள வேறு பல நிலையங்களுக்கும் இன்று 140 லேப்ராஸ்கோப்பிக் கருவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் 50 கருவிகளை மத்திய அரசு நேரடியாக வழங்குகிறது. ஏனையவற்றைத் தமிழக அரசு விலைக்கு வாங்கியுள்ளது. ஒரு கருவியின் விலை சுமார் ரூ. 57,000 ஆகும். இன்று வழங்கப்படும் 140 கருவிகளின் மொத்த விலை கிட்டத்தட்ட ரூ.79 இலட்சமாகும். நடப்பாண்டில் திட்ட நிறைவேற்றத்திற்குஇது மிகுந்த ஊக்கம் அளிக்கும்என நம்பப்படுகிறது ஒரு சில நிமிடங்களிலேயே லேப்ராஸ்கோப்பிக் முறையில் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்து முடிக்கப்படுகிறது. போதுமான மருத்துவக் கவனிப்பு கிடைக்கும் என்பது உறுதியானால் இவ்வகையில் சிகிச்சை பெற்றவர் உடனே வீடு திரும்பலாம்.

தற்போது லேபராஸ்கோப்பிக் சிகிச்சை முறைக்குரிய பயிற்சி நிலையங்கள் தமிழகத்தில் மூன்றுதான் உள்ளன. இவற்றை அதிகரிக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பெல்லாம் இந்த சிகிச்சை முறையை அறிந்து கொள்வதற்காக நமது டாக்டர்கள் பம்பாய்க்கு அனுப்பப்பட்டு வந்தார்கள்.

பயிற்சி பெறும் டாக்டர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முயன்று வருகிறோம். இன்றைய நிலையில் இந்தப் பயிற்சி பெற்ற டாக்டர்கள் 200 பேர் இருக்கின்றனர்.

ஏனைய நாடுகளில் எல்லாம் குடும்ப நலத் திட்டத்தைப் பொதுமக்களே உணர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள். நமது நாட்டில்தான் இந்தத் திட்டம், குடும்பநலத்துறையால் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

பிறக்கப்போகும் குழந்தையைப் பிறக்க விடாமல், இரக்கமற்ற முறையிலே நரம்பை அறுத்து விடுகிறார்கள் என்ற தவறான கருத்து நிலவி வருகிறது.

குழந்தை நலத்திலே நமக்கு நம்பிக்கை உண்டு. ஒரு தாய்க்கு ஒரு குழந்தை பிறக்குமானால், அந்தக் குழந்தையைப் பற்றிய பிரச்சினை அந்த மாநிலத்தைச் சேர்ந்ததாகி விடுகிறது.



குடும்பநலத் திட்டத்தின் காரணமாக- கருத்தடை முறைகளின் பயனாக, 1977ல் தமிழ்நாட்டில் 29.3 என்று இருந்த பிறப்பு விகிதம் 26.4 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, குடும்ப நலத்திட்டத்தால் பாதுகாக்கப்பட்ட தம்பதியரின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் 1971ல் 22.4 சதவிகிதமாக இருந்தது. 1984ல் இது 39 சதவிகிதத்திற்கும் மேல் ஆகியுள்ளது. 1984ல் அனைத்திந்திய அளவில் இது 29.4 சதவிகிதம்தான்.

உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளில் இறப்புக்குள்ளானவை 113.5 என்ற நிலை 1977ல் இருந்தது. 1980ல் இது 77.2 எனக் குறைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில் குடும்பநலத் திட்டத்தையும், ஆரம்ப சுகாதார சேவைகளையும் மேம்படுத்துவதற்கான திட்டம்.**

தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டப் பணிகளையும் ஆரம்ப சுகாதார சேவைப்பணிகளையும் முனைப்பாகச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. துவக்கத்தில் இத்திட்டம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 15 நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்படும். நகரங்களில் உள்ள மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதிகளுக்கும், குடிசைப் பகுதிகளுக்கும் அடிப்படை நல்வாழ்வுப் பணிகளை விரிவுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆறு நகராட்சிகளிலும் சென்னை நகரின் ஒரு பகுதியிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மேற்சொன்ன இடங்களில் முழுமையாகச் செயல்படுத்தப்படும்பொழுது, 236 நிலையங்கள் ( health posts ) அவ்விடங்களில் இயங்கும் 1665 பேர்களுக்கு இதன் மூலம் பல்வேறு வேலை வாய்ப்புகள் உருவாகும். அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 3289 பெண்களுக்கு ( Voluntary Women Health Workers ) தொண்டாற்றும் வாய்ப்பும் கிடைக்கும். குடும்பநலத் திட்டம்,, தாய்சேய் நலப்பணிகள்

# சென்னையில் சேக்கிழார் விழா

விழா, சென்னை-மயிலாப்பூர் கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமணக் கூடத்தில் இரண்டு நாட்கள் சிறப்புற நடைபெற்றது.

25.5.85 அன்று காலை 8மணியளவில் முதல்நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின.

குருஜி சுந்தர ராமசுவாமி தலைமையில், கபாலீச்சுரம் திருக்கோயில் தக்கார் சிவநெறிச் செம்மல் திரு.மா.து.குப்புசாமி முன்னிலையில் திருமயிலை கபாலீச்சுரம் திருக்கோயிலிலிருந்து திருமுறைப் பாராயண ஊர்வலம் புறப்பட்டு, சேக்கிழார் விழா நிகழுமிடமான கற்பகாம்பாள் திருமண மண்டபத்தை அடைந்தது.

இந்த ஊர்வலத்தில் கலைமாமணி லால்குடி எம்.சுவாமிநாதன், கலைமாமணி சைதை நடராசன், கலைமாமணி வடபழனி பி.ஆறுமுக ஓதுவார் ஆகியோரும் - மற்றும் சைதை ஆர்.பாலசுந்தரம், தருமபுரம் எஸ்.ஞானப்பிரகாசம், திருக்களர் சு.நாகநாதன், தருமபுரம் எஸ்.தண்டபாணி, தருமபுரம் வேலாயுத ஓதுவார், குடந்தை வெ.லட்சுமணன், மயிலை சி.கபாலி ஓதுவார், மயிலை சி.பொன்னுவேலு ஓதுவார், திருத்தணி என்.சாமிநாதன் முதலான பலரும் பங்கேற்றார்கள்.

காலை 9.30 மணியளவில், தருமபுரம் ப.சாமிநாதன் தொண்டர் மாமறை பண்ணிசையோடு விழா தொடங்கியது.

அமுதமொழியரசு எம்.என்.சங்கரநாராயணன் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர்''என்னை நன்றாக இறைவன் படைத்தான், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்றார் திருமூலர். அப்படி வாழ்ந்த பெருமையாளர் தான் சேக்கிழார்'' என்றார்.

தொடக்க உரையாற்றிய டாக்டர் என்.மகாலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''தமிழைப் பரப்பவேண்டும் என எண்ணுகிற அன்பர்களின் குழந்தைகளே ஆங்கிலப் பள்ளிகளில் படிக்க வைக்கப்படுகிற இந்நாளில் தமிழைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். இந்நிலையில், இந்தவிழா பயன்மிக்கதாகும். இவ்விழா இந்தியா முழுவதும் நடத்தப்படுமானால் தமிழின் தொன்மை-பெருமை பற்றி எல்லாரும் உணரச் சாத்தியப்படும்!''



விழாத் தலைமையேற்ற முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''யார் யாரோ தமிழகத்தை ஆண்டார்கள்; எனினும் தெய்வச்



ஜி.ஆர். அவர்களின் அரசுதான் விழாவெடுக்கிறது. இதற்காகச் சைவப் பெருமக்கள் - தமிழ்மக்கள் பெருமைப்பட வேண்டும். அநபாய சோழன், பெரிய புராணத்தையும், அதை இயற்றிய சேக்கிழாரையும்யானை மீதேற்றி தானும் அமர்ந்து வீதி உலாவந்து பெருமை செய்தான். அந்த அளவிற்கு இலக்கிய நூலாக, காப்பிய நூலாக, அறநெறி நூலாக, வரலாற்று நூலாக, வாழ்வு நூலாக விளங்குவது பெரியபுராணம். தமிழும் சைவமும் தழைத்தோங்க வேண்டுமானால், நாமெல்லாம் கூட்டு வழிபாட்டு முறையைப் பழங்காலம் போலப் பின்பற்ற வேண்டும்''.

பேராசிரியர் திரு பெ.திருஞான சம்பந்தன் அவர்கள் தனது சிறப்புரையில்-''பக்திச் சுவை சொட்டப் பாடிய தெய்வச் சேக்கிழார் பெருமை சொல்லி முடியாது'' என்றார்.

பேராசிரியர் திரு மொ.அ.துரை அரங்கனார் அவர்கள்-''உலகம் யாவையும்என்னும் அடியெடுத்துத் தந்தான் இறைவன், அதையொட்டி தனது பெரியபுராணத்தை எழுதி முடித்தார் சேக்கிழார். உலகெங்கும்சைவத்தைப் பின்பற்றும் தமிழர்கள் இருப்பதால், உலகு முழுவதும் பரவியுள்ளது சைவம் என நாம் பெருமைப்படலாம்'' எனத் தமது சிறப்புரையிலே குறிப்பிட்டார்.

டாக்டர் தெ.ஞானசுந்தரம் அவர்கள்-''ராமாயணமும் மகாபாரதமும் வடக்கிலிருந்து தெற்கே வந்த கதைகளாகும்; பெரிய புராணமோ தெற்கிலிருந்து வடக்கே சென்ற சிறப்புடையது. பெரியபுராணம்என்ற தன் பெயராலேயே மற்றவற்றை சிறுமைப் படுத்தாமல் உயர்ந்து நிற்கும் பெருமை பெரிய புராணத்திற்கு உள்ளது'' என்றுஉரை நிகழ்த்திச் சிறப்பித்தார்.

புலவர் திரு மா.வே. பசுபதி அவர்கள் ''பெரிய புராணம் சைவச் சமநீதி இலக்கியம் மட்டுமல்ல; தமிழக வரலாற்று நூலாகவும் திகழுவதாகும்'' என்றார் தமது சிறப்புரையில்.

தமிழ்ப் பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் நன்றியுரையாற்றுகையில்-''திருக்குறள் வாழ்க்கை இலக்கியம்; சிலப்பதிகாரம் கற்பிலக்கியம் என்போமானால் - பெரிய புராணத்தை அறநெறிக் காப்பியம்என்று குறிப்பிடலாம்'' என்றார்.

சேர்ந்த ஒருங்கிணைப்புப் பணிகளை இவர்கள் ஆற்றுவார்கள். இத்திட்டத்தால் தமிழ்நாட்டில் 68 இலட்சம் மக்கள் பயனடைவார்கள், என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் குடும்பநலத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட சாதனைகள் வருமாறு.

| ஆண்டு | நிரந்தரச் சிகிச்சை ஏற்ற தந்தைமார்கள் | நிரந்தரச் சிகிச்சை ஏற்ற தாய்மார்கள் |
|---|---|---|
| 1980—81 | 8,916 | 1,29,915 |
| 1981—82 | 14,935 | 1,71,767 |
| 1982—83 | 15,696 | 2,50,583 |
| 1983—84 | 23,629 | 4,73,151 |
| 1984—85 | 56,655 | 4,67,195 |

1980-81ல் 32597 பேருக்கும், 1981-82ல் 34427 பேருக்கும், 1982-83ல் 37297 பேருக்கும், 1983-84ல் 55877 பேருக்கும், 1984-85ல் 85642 பேருக்கும் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது.

குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் நிறைவேற்றத்தில் தமிழ்நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது குறிப்பாக தகுதிவாய்ந்த தாய்மார்கள் அதிக அளவில் இத்திட்டத்தை ஏற்றுள்ளார்கள் குடும்பநலத் தற்காலிக முறைகளை ஏற்றிருப்போரின் தொகையும் கூடியுள்ளது.

## 1985-86ஆம் ஆண்டுக்கான இலக்கு

இந்திய அரசு 1985-86ஆம் ஆண்டுக்கென்த் தந்துள்ள இலக்கு விவரம் வருமாறு:

| திட்டம் | இலக்கு |
|---|---|
| குடும்பநல நிரந்தர சிகிச்சை | 475000 |
| கருத்தடை வளையம் | 168000 |
| வழக்கமான கருத்தடைச்சாதனங்களைப் பயன்படுத்துவோர் | 200000 |
| உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்துவோர் | 76000 |

கடந்த ஆண்டுகளில் தமிழ்நாடு குடும்பநலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியிருப்பதாலும் தகுதி வாய்ந்த தம்பதியர் திட்டமிட்ட குடும்பத்தின் அவசியத்தை வெகுவாக உணர்ந்திருப்பதாலும், 1985-86ஆம் ஆண்டில், தமிழ்நாடு, இந்திய அரசு தந்துள்ள இலக்கையும் விஞ்சிய வகையில் சாதனை ஏற்படுத்தும் என எதிர்நோக்கப்படுகிறது.

(21.5.85 அன்று
செய்தியாளர்களுக்கு
அளித்த பேட்டியிலிருந்து)

## அரசு ஊழியர்களுக்கான தற்செயல் விடுப்பு குறைப்பு

இதுவரை அரசுப் பணியாளர்களுக்கு ஓர் ஆண்டிற்கு மொத்தம் இருபது நாட்கள் தற்செயல் விடுப்பு எடுக்க அனுமதிக்கப்பட்டது.

நான்காம் ஊதியக் குழு தன்னுடைய அறிக்கையில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த தற்செயல் விடுப்பு நாட்களைப் பிற மாநிலங்களில் உள்ளது போலவும் முன்னதாக அனுமதிக்கப்பட்ட நாட்களின அடிப்படையிலும் 12 (பன்னிரண்டு) நாட்களாகக் குறைக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது

மேற்குறிப்பிட்ட பரிந்துரையை அரசு ஏற்று, தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த தற்செயல் விடுப்பு வரம்பினை ஓர் ஆண்டிற்கு 20 (இருபது) நாட்களிலிருந்து 12 (பன்னிரண்டு) நாட்களாகக் குறைத்து ஆணையிடுகிறது.

இவ்வாணை 1.6.1985 முதல் அமலுக்கு வரும். ஓர் அரசு அலுவலர் அதிகபட்சமாகத் தொடர்ந்து பத்து நாட்களுக்கு (விடுமுறை நாட்கள் உள்பட) தற்செயல் விடுப்பு எடுக்கலாம்.

ஓர் அரசு ஊழியர் இனி எடுக்கத் தகுதியுள்ள தற்செயல் விடுப்பு நாட்கள் பின்வருமாறு கணிக்கப்பட்டுள்ளன :-

| 1985ஆம் ஆண்டில் ஏற்கெனவே எடுத்த தற்செயல் விடுப்பு நாட்கள் | 1985ஆம் ஆண்டில இனி எடுக்கத் தகுதியுள்ள நாட்கள் |
|---|---|
| 1 | 11 |
| 2 | 11 |
| 3 | 10 |
| 4 | 10 |
| 5 | 9 |
| 6 | 8 |
| 7 | 8 |
| 8 | 7 |
| 9 | 7 |
| 10 | 6 |
| 11 | 5 |
| 12 | 5 |
| 13 | 4 |
| 14 | 4 |
| 15 | 3 |
| 16 | 2 |
| 17 | 2 |
| 18 | 1 |
| 19 | 1 |
| 20 | |

காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவின் முதல்நாள் மாலை நிகழ்ச்சிகள் 5 மணியளவில் தொடங்கின.

பிற்பகல் நிகழ்ச்சிக்குப் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமை ஏற்றார். இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. கு. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப. வரவேற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டின் வரலாற்றுக் களஞ்சியம் பெரிய புராணம். இறையருள்பெற்ற 63 நாயன்மார்களின் தூய தொண்டு குறித்துச் சீரிய வகையில் செந்தமிழ் மொழியில் எடுத்துச் சொன்னவர் சேக்கிழார்.''

தலைமை வகித்த தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தெரிவித்ததாவது:

''புலவர்கள் மத்தியில் சேக்கிழாரின் பெருமை பரவியிருக்கிறது. ஆனால் பொது மக்கள் மத்தியில் பரவவில்லை. அதற்கு இதுபோன்ற விழா உதவி செய்யும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் பற்றிப் பெரிய புராணம் கூறுகிறது. அரசன்-அடிமை, கற்றார்-கல்லாதவர், துறவி-இல்லறத்தார், ஆண் -பெண்-இப்படி பல்வேறு பட்டவர்கள் குறித்தும் இந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. சேக்கிழார்க்கு சென்னைக் கடற்கரைச் சாலையில் சிலை வைக்க வேண்டுமென்று 2வது உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற காலத்தில் கேட்டோம். இந்த அரசு அதனை நிறைவேற்றும் என்று நம்புகிறேன்''

'சேக்கிழார் -ஒன்பான் சுவை அறி புலவர்.' என்னும் தலைப்பில் உரையாற்றிய தவத்திரு சுந்தரசுவாமிகள் தெரிவித்தார்:

''கி.பி. முதல் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டுவரை எந்தத் தொழில்கள் நாட்டில் இருந்தனவோ, அவற்றையெல்லாம் சேக்கிழார் தமது நூலில் சொல்லியிருக்கிறார். 20-ஆம் நூற்றாண்டில் உள்ள விஞ்ஞானக் கருத்தையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

''தம்முடைய உயிரை விட அன்பைப்பெரியதாகக்கருதுவதே வீரம்; பிறரைக் கொல்வதல்ல வீரம். தன்னை இழப்பதே வீரம். என்கிறார் சேக்கிழார். ஒன்பது சுவைகளுக்கு மேற்பட்ட சுவைகளையும் வழங்கியிருக்கிறார் சேக்கிழார்.''

'சேக்கிழார்-தமிழ் அமைச்சர்' என்னும் பொருளில் உரையாற்றிய திருமதி சௌந்தரா கைலாசம் குறிப்பிட்டார்—

''முத்தர் மனமிருக்கும் மோனத்தே என்பதைமொழிவது தான் பெரியபுராணம். எக்குடிப் பிறப்பினும்ஆண்டவனை நினைந்துருகினால் அவன் அருள் கிடைக்கும் என்பதை உணர்த்த வந்தது பெரிய புராணம்.

''பார் முழுவதையும் அன்பினால் நோக்கும் பார்வை தமிழ் மரபுக்கு உண்டு. அதனால்தான் உலகெலாம் எனத் தொடங்கியிருக்கிறார். சேக்கிழார். அன்பே சிவம் என்பது தான் சேக்கிழார் நெறி''.

திருக்கோயில் இதழின் ஆசிரியராகப் பணிபுரிந்து, கடந்த திங்களில் மறைந்த திரு ந.ரா.முருகவேள் அவர்களின் திருவுருவப் படத்தை மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

# சேக்கிழார் விழா



அதன் பின்னர், சமயச் சான்றோர்களான, திருமுருக கிருபானந்தவாரியார், டாக்டர் மொ. அ. துரை அரங்கனார், தருமபுரம் ப.சாமிநாதன், மகாவித்துவான் பண்டித வி.நடேசனார் ஆகியோருக்குப் பாராட்டு வழங்கிச் சிறப்பித்தார் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்.

சென்னை பி. ஏ. கன்ஸ்ட்ரக்சன் அதிபர், சேக்கிழார் விழாவுக்காக ரூ. 15 ஆயிரத்தை மாண்புமிகு அமைச்சரிடம் நன்கொடையாக வழங்கினார்.

அதன்பின்னர், திருமுருக கிருபானந்தவாரியார்'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் தலைப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''சேக்கிழாருக்கு இணையாக வேறொருவரை நினைத்தாலே பாவம். அவர் பரமஞானி! உலகம் உய்ய அவதரித்தார். எந்தச் சொல்லை எங்கே வைக்க வேண்டும் என்பதை உணர்ந்தவர்.சிறுத்தொண்டர் தன் மகனை வெட்டி சிவனடியார்க்கு உணவாக்கினார் என்ற செய்தியைச் சொல்லவரும் போது, வாளால் அறுத்து என்று சொல்லவில்லை சேக்கிழார். தாதை அரிய என்று குறிப்பிடுகிறார். அதாவது காய்கறிகளை நறுக்குவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். அறுப்பது என்பது கொலை; அரிவது என்பது கொலையாகாது!''

திரு கோ. சண்முகம் நன்றி கூற, முதல்நாள் நிகழ்ச்சி முடிவுற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி காலை 9 மணியளவில் திருவாளப் புத்தூர் திரு டி.எஸ்.பாலு குழுவினரின் நாயன இன்னிசையுடன் தொடங்கியது.

வரவேற்புரையாற்றிய காயிதே மில்லத் கல்லூரி பேராசிரியை டாக்டர் இராசலட்சுமி குறிப்பிட்டார்:

''இறைவனை-அரசனை தலைவனாகவைத்துக் காவியம்படைப்பர் புலவர்; ஆனால் இறைவனின் அடியார்களைத் தலைவர்களாக ஆக்கிப் புரட்சி செய்திருக்கிறார் சேக்கிழார், இந்த அடியார்கள் ஓர் இனத்தை -ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஆனால் அனைவரும் சிவநேசச் செல்வர்கள் என்ற ஒரே மரபைச் சேர்ந்தவர்கள். உலகத்து மக்கள் அனைவரையும் நல்ல பாதைக்கு அழைத்துச் செல்வதற்குப் பெரிய புராணம் செய்தார் சேக்கிழார்.

'சேக்கிழார் போற்றிய சேயிழையார்' என்ற க த்தரங்க நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற புதுக்கோட்டை திலக வதியார் திருவருள் ஆதீனம் தவத்திரு டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி அம்மையார் தெரிவித்தார்:

''சேக்கிழார் தெரிவிக்கும் 63 நாயன்மார்களில் மூவர் பெண்பாலர் ஆவர். ஏனைய 60 நாயன்மார்களும் ஆடவர் எனினும், அவர்களை நாயன்மார்களாக்கிய பெருமை அவர்களது மனைவியரான மாதர்களையே சாரும்.

''வாழ்க்கையில் சோதனைகள் ஏற்பட்டபோது, அவற்றை வேதனைகளாகக் கொள்ளாது சாதனைகள் புரிந்து, நாதனைக் கண்டவர்கள் நாயன்மார்கள். பெண்கள் ஆண்களின் அருள் வாழ்க்கைக்கு மனப்பூர்வமாக இடம் கொடுத்து அதரவு தந்திருக்கிறார்கள். சிவபெருமானே காரைக்கால் அம்மையாரை 'அம்மையே' என்றழைத்திருக்கிறார். இவளுக்குக் கிடைத்த பெருமை யாருக்குக் கிடைத்தது? சேக்கிழார் சிந்தனை பரவுவதற்குத் துணையாகஇருக்கும் இந்த அரசுக்கு வாழ்த்து-பாராட்டு.''

அடுத்து உரையாற்றிய பேராசிரியர் இந்திரா சோமசுந்தரம் தெரிவித்தார்:

''இறைவனின் தொன்மைக் கோலம் அர்த்தநாரீஸ்வரர் வடிவம் தான். அதனால்தான் ஞானசம்பந்தர் தோடுடைய செவியன் என்று பாடினார்.

''63 நாயன்மார்களை ஈன்றெடுத்தவர்கள் பெண்கள்தான். தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண் என்னும் குறள் கருத்தை சேக்கிழார் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்.''

அடுத்து உரையாற்றிய திருமதி சாரதா நம்பியாரூரன் குறிப்பிட்டதாவது:

''பெண், சில நேரத்தில் ஓர் அமைச்சரைப் போல யோசனை சொல்ல வேண்டும் கணவனுக்கு. சேக்கிழார் காப்பியத்தில் வரும் மங்கையர்க்கரசி - தன் கணவனான பாண்டிய மன்னனுக்குத் தக்க நேரத்தில் சரியான யோசனையைக் கூறினாள். மதிமந்திரியாக அமைந்தார். சைவ சமயத்தின் இருபெரும் கண்களாகத் திகழ்கிறார்கள் மங்கையர்க்கரசியும் திலகவதியும்''.

அடுத்து தவத்திரு ராஜம்சங்கரன் அம்மையார் உரையாற்றுகையில் தெரிவித்தார்:

'ஆண்டவனைப் பாடிய நாட்களில், அவனது அடியார்களை பாடிய-அதிலும் பெண் இனத்தைப் பாடிய பாங்கு சேக்கிழார் ஒருவருக்கே உரியது.''

தலைவர் சிவபிருந்தா தேவி அம்மையார் முடிப்புரையாகக் கூறியவை வருமாறு:

''இசையில் 3 ஆயிரம் ராகங்கள் உள்ளன. அவற்றில் முக்கால் பாகம் பெண்களின் பெயர்தான் உள்ளது. வசந்தா, கல்யாணி, சரஸ்வதி, மனோகரி... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். நதிகளின் பெயர்கள் எல்லாம் பெண்களின் பெயர்கள் தான். கங்கை, காவிரி, சரஸ்வதி, நர்மதை, என்று அடுக்கலாம். ஒரே ஒரு பிரம்ம புத்திராதான் உண்டு ஆண் பெயர் சொல்ல!

''பெண்களைத்தான் பெண்மணிகள் என்று குறிப்பிடுகிறோம்.



ஆணுக்கு அந்தப் பெருமை கிடையாது. ஆண்களின் வாழ்க்கையில் கைகொடுத்து உதவும் பெண்மணிகள்—கண்மணிகள் ஆவர்.''

அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் தக்கார் திரு மா.து. குப்புசாமி முதலியார் நன்றியுரை கூற முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் நிகழ்ச்சி, மாலை5.30 மணியளவில் சென்னைப் பல்

கலைக் கழக இசைத்துறையைச் சேர்ந்த செல்வி பிரமீளா குழுவினரின் இன்னிசையோடு துவங்கியது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நிகழ்ச்சிகள் தொடங்கின.

வணிகவரி-அறநிலையத்துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு ஆர்.சண்முகசிகாமணி இ.ஆ.ப., வரவேற்புரையாற்றுகையில், ''சேக்கிழாருக்கு உத்தம சோழ பல்லவன் பட்டமும் உண்டு'' எனக் குறிப்பிட்டார்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு.கு. ஆளுடையபிள்ளை இ.ஆ.ப., தருமை ஆதீனம், குன்றக்குடி அடிகளார் போன்றோரின் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்.



தொடக்கவுரையாற்றுகையில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு.ஆர் நாகசாமி கூறியதாவது:

''பெரிய புராணத்திற்கு சுபபிரமணிய முதலியார் எழுதிய உரை மட்டுமே உள்ளது. அதன் ஏழுதொகுதிகள் எழுநூறு ரூபாய் என்பதால் பலரும் வாங்கிப் படிக்க முடியாத நிலை இருக்கிறது. வரலாற்றுச் சான்றாக விளங்கும் பெரியபுராணத்தை எல்லோரும் படிக்க வேண்டுமானால் மிகக் குறைந்த விலையில் உரைநூல் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.''

சிறப்புரையாற்ற வந்த டாக்டர் செல்வகணபதி குறிப்பிட்டதாவது:

''சமயச் செய்திகள் கூறும் நூலானாலும் பெரிய புராணம் ஒரு தமிழ்ப் பண்பாட்டு நூலாகும். தமிழர் குல ஆண்கள் பெண்கள் வாழ்க்கை முறைபற்றி அறிய பழந்தமிழகம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அறிய பெரிய புராணத்தை விட்டால் வேறுநூல் இல்லை. இது சேக்கிழாருக்கு எடுக்கப்படுகிற விழா மட்டுமல்ல; தமிழுக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்கு எடுக்கப்படுகிற விழாவுமாகும். இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வருக்கும், அறநிலையத் துறை அமைச்சருக்கும் தமிழ்நாடே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது''.

பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தன் அவர்களின் சிறப்புரைச் சுருக்கம் வருமாறு:

''63 நாயன்மார்களைப் பற்றி பெரிய புராணத்தில் 4563 பாடல்கள் உள்ளன. அதில் அவ்வளவு பெருக்கும் விகிதாச்சாரப்படி பாடல்கள் இல்லை. ஞான சம்பந்தரைப் பற்றி மட்டும் ஆயிரத்திற்கும் மேலான பாடல்கள் உள்ளன. இதற்குக் காரணம்-ஞானப்பால் உண்டவர், 16வயதிலேயே அரியது செய்தவர் அவர் என்பது மட்டுமல்ல; தான் எழுதிய நானூற்றுச் சொச்சம் பதிகங்களிலும் தன்னைத் தமிழ் ஞான சம்பந்தன் என்று சொல்லிக்கொள்கிறார் அவர். வேதத்திற்கு மேலே எதுவுமே இல்லை எனக் கூறப்பட்ட அந்நாளில் வேதத்திற்கு மேலே விளங்குவது நாதன் நாமமே என்றவர் ஞான சம்பந்தர் ஒருவரே! அதுமட்டுமல்ல; தமிழாலேயே வீடுபேற்றை அடைய முடியும், அதற்கு நானே சான்று என்றவர் ஞானசம்பந்தர். அதனால்தான் தமிழ்வாழக் காரணமான அவன்மேல் அவ்வளவு பாடல்! சமுதாயப் பண்பாட்டு நூலான பெரிய புராணத்திற்கு எளிய உரை நூல்கள் வெளிவர அரசு உதவினால் தமிழ் வளரும் - வாழும்''.

மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''சமுதாயத்தில் பண்பாடுகள் ஓங்க, சைவம் வளர, தமிழ்வளர உழைத்த ஒரு பெரிய சாம்ராஜ்ய முதல்வருக்கு இந்த விழா எடுக்கப்படுகிறது. சரித்திரம் சரியான திசையில் திரும்புகிறது என்பதற்கு இவ்விழா ஓர் உதாரணம். இப்படிப்பட்ட விழாவெடுக்கும் இந்த அரசைத் தமிழரல்லாதார் அரசு என்றால் என்ன அர்த்தம்? ஐம்பெருங் காப்பியங்களெல்லாம் இயற்றியவர்களைப் பொறுத்து தமிழ்த்தாய்க்கு இரவல் என்ற நிலையில், இதோ எங்கள் அணிகலன் என்று தமிழுக்குச் சொந்தமாக - தமிழ்த்தாயின் அரிய அணிகலனாகப் பெரிய புராணத்தைத் தந்தவர் தான் சேக்கிழார். தொண்டை மறந்திருந்த சமுதாயத்தை, அந்தத் தொண்டின் தத்துவத்தை நினைவுகூரச் செய்வதற்காகவே சேக்கிழார் தோன்றினார். இந்தப் புராணம் கிடைத்திராவிட்டால், தமிழ் எவ்வளவு தொன்மையானது என்பது தெரியாமலே போயிருக்கும். பெரிய புராணத்தைச் சமய நூலென ஒதுக்குவது அறிவுடைமையாகாது சமயப் பற்று இல்லாதவர்களிடம் தமிழ்ப்பற்று மேம்படும் எனக் கூறமுடியாது!''

சேக்கிழார் விழாவின் நிறைவுரையாற்றினார் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள். அதன் விவரம் வருமாறு:

''குன்றத்தூரில், தானே முன்னின்று எழுப்பிய ஆலயத்திற்குள்ளேயே சேக்கிழாரைப்போகவிடாமல் வைத்திருந்தார்கள். தமிழகத்தின் தனதாயகர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் காலத்தில் தான் அவரே அந்த ஆலயத்தினுள்புகும் விழா சென்றவாரம் நிகழ்த்தப்பட்டது. 'சேக்கிழார் விழாவாமே? யார் அந்த சேக்கிழார்?' என்று கேட்டதாக இங்கே சொன்னார்கள். அப்படிக் கேட்கிற அளவுக்குத்தான் இன்று நாம் சேக்கிழாரை வைத்திருக்கிறோம்; இந்த நிலை மாறவேண்டும். தமிழ் உணர்வும், தமிழ்ப் பண்பாட்டு உணர்வும் காப்பாற்றப் படவேண்டும். என்பதற்காகத் தான் வகித்த முதலமைச்சர் பொறுப்பையே உதறித்தள்ளிவிட்டு நாடெங்கும் சுற்றித் திரிந்தவர்தான் சேக்கிழார். அப்படிப்பட்ட அறிஞர் பெருமகனுக்கு-புலவர் பெருமானுக்கு இவ்வாறு விழா எடுப்பதன் மூலம், இறந்து போன உணர்வுகளை நாம் திரும்பக் கொண்டு வந்தாக வேண்டும்.

''சைவம் வளரப் பாடுபட்டார் சேக்கிழார். சமணம் பௌத்தம் பரவிய இடமெல்லாம் அமளிக்காடாகியுள்ள இந்நாளில் தமிழ்நாடு அமைதியின் நிலைக்களனாக விளங்குகிறது.

''சேக்கிழாரைப் போலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு உழைத்த பெரியார்களின் பெயரால் நினைவுச் சின்னங்கள் எழுப்புவது குறித்து இந்து சமய அறநிலையத் துறை சார்பில் குழு அமைக்கப்படும். இந்த நினைவுச் சின்னங்கள் சமுதாயத்திற்கு உதவுவதாக இருக்கும். பெரிய புராணத்திற்கு சி.கே.சுப்பிரமணிய முதலியார் எழுதிய உரை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் புதுப்பிக்க தமிழக அரசு ஆவன செய்யும். அந்த உரையைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படி ஒரு குழு அமைத்து எளிதாக்கி வெளியிடவேண்டுமென்று இங்கே பேசிய பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தன் அவர்கள் குறிப்பிட்டார். குழு அமைக்க அரசு தயார்; அக் குழுவில் அறிஞர் பெருமக்கள் யாரெல்லாம் இடம் பெறுவதென்று அவரே தெரிவிக்கட்டும்.

''சேக்கிழாருக்கு விரைவிலேயே ஒரு நினைவுக் கோட்டம் அரசு மூலம் அமைக்கப்படும். அது, என்றைக்கும் சேக்கிழாரை நினைவு கூரும் காட்சிக் கூடமாக விளங்கும். அரசின் இத்தகைய முயற்சிகளுக்கெல்லாம் அறிஞர் பெருமக்கள் துணைநிற்க வேண்டும்.''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச திரு.இராம.வீரப்பன் அவர்க தமது நிறைவுரையில் குறிப்பி டார்.

அருள்மிகு கபாலீசுவர திருக்கோயில் தக்கார் திரு மா. குப்புசாமி முதலியார், விழாவுக் வருகை தந்தோருக்கு நன்றி கூ னார்.

சேக்கிழார் விழாவில் ப கேற்ற அனைவருக்கும் விழா குழு சார்பில் அறநிலையத்து துணை ஆணையர் திரு எ சுவாமிநாதன் அருள்மிகு கபா சுவரர் கோயில் உதவி ஆணை திரு எஸ்.கனகையா இருவரு மாலைகள் அணிவித்தனர்.

இதன்பின் — கலைமாம சுவாமிமலை திரு.எஸ்.கே.இரா ரத்தினம் குழுவினரின் 'ரா ராஜேஸ்வரி விஜயம்' நாட்டி நாடகம் நடைபெற்றது.

நிகழ்ச்சித்தொகுப்
—தமிழ்ப்பித்த
—சோழராஜ

# வன வளம்

தமிழ்நாடு அரசின் வனத்துறை சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ், ஊராட்சி மன்றங்களுக்குக் கிராமப்புறக் காடுகளின் வருவாயிக் பங்குத் தொகை வழங்கும் விழா மதுரையில் (31.5.85) சிறப்புற நடைபெற்றது.

விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு செய்திஅறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் கலந்து கொண்டார்.

வனத்துறைத் தலைவர் திரு. கொண்டாஸ் தலைமையேற்றார். சமூக வனவியல் கூடுதல் வனத்துறைத் தலைவர் திரு.வில்சன் வரவேற்புரையாற்றினார்.

திரு ஏ.ஜி.சுப்புராமன் எம்.பி., திரு செல்வேந்திரன் எம்.பி., தேனி திரு ஜெயராமன் எம்.எல்.ஏ., பெரியகுளம் திரு சலீம் எம்.எல்.ஏ., திரு. பாலுசாமி எம்.எல்.ஏ., முதலானோரும்-வேளாண்மை விளைபொருள் வாரியத் தலைவர் மதுரை திரு. எஸ்.பாண்டியன், முன்னாள் துணைமேயர் திரு.சந்தானம், விவசாயப் பெருமக்களான திரு. சீனிவாசன், திரு பெருமாள் ஆகியோரும் இவ்விழாவில் பேசினர்.

மதுரை-பழனி கோட்டத்தில் உள்ள ஊராட்சி மன்றங்களுக்குப் பங்குத் தொகையாக 7 இலட்சத்து 27 ஆயிரத்து 191 ரூபாய் 40 பைசாவை வழங்கி, மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தான், தமிழ்நாட்டில் வனத்துறை வளம் பெற்றிருக்கிறது. வன வளம் பாதுகாக்கப்படவேண்டுமென்ற உணர்வு உலகெங்கும் பரவி வருகிறது. சுவீடன்நாடு வனச்செல்வம் மிகுந்த நாடு. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயர்ந்த நோக்கோடு அவர்கள் உலக நாடுகளிலெல்லாம் வனவளம் காண எண்ணி இந்தியாவைத் தேர்ந்தெடுத்தனர். அதிலும் குறிப்பாகத் தமிழ்நாடு அவ்வாய்ப்பைப் பெற்ற தலை சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

''ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கென 45 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. தமிழகத்தில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் எக்டேர் நிலத்திலும், ஆறாயிரத்து 700 கிலோ மீட்டர் தூரம் சாலை ஓரங்களிலும் 9 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதற்கென 32 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 72 லட்சத்து 6 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழ் 2,500 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். 172 இலட்சம் மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

''வரவு செலவுத் திட்டத்தில் 25 கோடி ரூபாய் வனத்துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம.வீரப்பன் அவர்கள் உரையாற்றினார்.

தமிழ்நாடு வனத்துறை ஊழியர்கள் சார்பில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிகிச்சை நிதிக்கென ரூ.80 ஆயிரம் வழங்கப்பட்டது.

—இந்திரன்

# புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை



'நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை!' என்பது ஆன்றோர் வாக்கு.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 5.6 இலட்சம் கைத்தறிகள் கைத்தறித் துணி உற்பத்தியிலே ஈடுபட்டுள்ளன. அவைகளிலே ஏறக்குறைய 2.89 இலட்சம் கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் பல கைத்தறிகளைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொணர்ந்து நான்கு இலட்சத்திற்குக் குறையாத கைத்தறிகளை இந்த இயக்கத்தின் கீழே செயல்பட வைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பல்கிப் பெருகிவரும் கைத்தறி நெசவாளர்களின் நூல் தேவையினை நிறைவேற்றிடும் வகையில் இப்போது இயங்கி வருகின்ற 12 கூட்டுறவு நூற்பாலைகளுடன் மேலும் 5 கூட்டுறவு நூற்பாலைகளை அமைப்பதெனத் தமிழக அரசு தீர்மானித்தது. அதன்படி தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை, மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரம், இராமநாதபுரம்மாவட்டத்தில் உள்ள அச்சன்குளம் ஆகிய நான்கு இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது கூட்டுறவு நூற்பாலை 1.6.85 அன்று, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கியில் தொடங்கிவைக்கப்பட்டது.

இந்த ஐந்து ஆலைகள் மூலமும் மாதம் ஒன்றுக்கு 10 ஆயிரம் பேல்கள் நூல் உற்பத்தியாகி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் திறந்து வைக்கப்பட்ட அறந்தாங்கியிலுள்ள புதுக்கோட்டை மாவட்டத் கூட்டுறவு நூற்பாலை ரூ. 750 இலட்சம் முதலீட்டில் 25,080 கதிர்களுடன் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாலைக்குத் தமிழ்நாடு அரசு ரூ. 310.35 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கியது. ரூ. 15 இலட்சம் 'சிப்காட்' நிறுவனத்தின் மூலம் மான்யமாக வழங்கப்பட்டிருக்கிறது. தொழில் வளர்ச்சி நிதி நிறுவனங்கள் (ஐ.சி.ஐ.சி.ஐ., ஐ.டி.பி.ஐ., ஐ.எஃப். சி.ஐ.)கூட்டாக ரூ. 375 இலட்சம் கடனாக வழங்கியுள்ளன. கைத்தறி நெசவாளர் சங்கங்களிடமிருந்துரூ.34 இலட்சம் பங்குத்தொகையாகவும், இதர நிறுவனங்களிடமிருந்து ரூ. 14.65 இலட்சம் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆலையின் கட்டடப் பணிகள் மார்ச் 1983 இல் தொடங்கப் பெற்று, 1984ஆம் ஆண்டே பெரும் பகுதி முடிவுற்று 1985ல் முழுமை பெற்றது. இதற்கென நிலம், கட்டடங்கள் ஆகியவற்றின் திட்ட மதிப்பு மட்டும் ரூ.104 இலட்சமாகும்.

ஆலைக்குத் தேவையான இயந்திரங்கள், தளவாடங்கள் அனைத்தும் கோவை, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் மத்திய இயந்திரங்கள் கொள் முதல் குழு மூலம் ரூ. 522 இலட்சத்திற்கு வாங்கப்பட்டன. கடந்த ஆண்டுக் கடைசியில் மின் இணைப்புத் தரப்பட்டு, சோதனை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை சுமார் ரூ.600 இலட்சம் மதிப்புள்ள ஏறத்தாழ 23 இலட்சம் கிலோ அளவில் நான்கு ரக நூல்களைத் தயாரித்து விற்பனை செய்யும். இந்த நூல் 'கோ ஆப்டெக்ஸ்' நிறுவனம் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்படும்.

இவ்வாலை மூலம் தொழிலாளர்கள், அலுவலர்கள் என 600 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர்.

அவர்களில் 225 பேர் ஆதி திராவிடர்கள். 201 பேர் இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்தோராவர்.

## திறப்பு விழா

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையைத் திறந்து வைத்து இயந்திரங்களை இயக்கிவைத்தார் (1.6.85)

இவ்விழாவுக்கு, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில் வரவேற்புரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கூட்டுறவுநூற்பாலையின் தலைவர் திரு. பிரிஜேசுவர்சிங்



இ.ஆ.ப. தனது வரவேற்புரையில்:—

''புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலாவதாக அமையும் இந்தக் கூட்டுறவு நூற்பாலையால் இம் மாவட்டத்தில் மேலும் வளம் தேங்கும். இவ்வாலை அமைய அனுமதி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறி விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

ஆலையின் அமைப்பு-செயல் முறைபற்றிய அறிக்கையைக் கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை இயக்குநர் திரு.இரெ.ஆறுமுகம் இ.ஆ.ப.படித்தார். ''இந்த ஆலை இம் மாவட்டத்தில் இனி வரவிருக்கும் ஆலைகளுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழும்'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் விழாவுக்கு வர இயலாத நிலையில் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியினைக் கூட்டுறவு நூற்பாலையின் மேலாண்மை இயக்குநர் திரு.இரா.சுப்பையா படித்தார்.

மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்களான திரு ஜெ.முகமதுகனி, திரு.அ.வெங்கடாசலம், திரு.த. புஷ்பராஜ், திரு. த.மாரிமுத்து புதுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.என்.சுந்தரராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

''இப்படி இன்னும் பல ஆலைகள் இம் மாவட்டத்தில் அமைய அரசு உதவவேண்டும். வறட்சி நீங்கி வளம் தேங்கும் மாவட்டமாக இம்மாவட்டம் மாற வகை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பாலைவனமாகக் காட்சி தந்த இப்பகுதி இனி சோலைவனமாகக் காட்சிதருவது உறுதி. மாண்புமிகு முதல்வர் அவர்களின் பின்னால் மக்கள் நிற்கிறார்கள் என்றால், இப்படிப்பட்ட நற்பணிகளை மக்களுக்காகத் தொடர்ந்து அவர் ஆற்றிவருவதால்தான். புதுக்கோட்டை மாவட்டத்தில் இப்படிப் பல ஆக்கப் பூர்வமான பணிகள் தொடர்ந்து நடைபெறப் பாடுபட்டுவரும் மாவட்ட அமைச்சர்களான மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்களும், மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களும் பெரிதும் பாராட்டத் தக்கவர்கள்...'' என்றெல்லாம் அவர்கள் தங்கள் வாழ்த்துரைகளிலே குறிப்பிட்டார்கள்.

வாழ்த்துரைகளின் பின்னர், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலையைத் திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து மாவட்ட மக்கள் சார்பிலும் பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சருக்கும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சருக்கும் ஏராளமான கைத்தறிஆடைகளும் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

இதன் பின் தலைமையுரையாற்றத் தொடங்கிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள், முதலாவதாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்த்துச் செய்தியைப் படித்தார்.

''கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் தரமான நூல் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், ஆதிதிராவிடர், இலங்கை அகதிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் நான் இந்த ஆலையைத் துவக்க ஏற்பாடு செய்தேன். இன்றைய தினம் என்னுடைய கொள்கைகளைத் திறம்பட வெற்றிகரமாக முடித்துக் கூட்டுறவு ஆலையைத் திறக்கும் இந் நாளில் என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்'' என்று மாண்பு





மிகு முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் பேசுகையில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டதாவது: ''நாங்களெல்லாம் இத்தகைய திட்டங்களை நிறைவேற்றியதாக இங்கே எல்லோரும் பாராட்டினார்கள். நாங்கள் வெறும் கருவிகள்தானே தவிர, எங்களையெல்லாம் இயக்குபவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர்தான்; ஆகவே, இந்த வாழ்த்துக்கள் அவரையே சேரும். 1977க்குப் பின்னால் தமிழகத்தில் அரிசி விலை ஏற்றப்படவேயில்லை. அரசு மூலம் அதிக விலைக்கு வாங்கப்பட்டாலும், குறைந்த விலைக்கே ஒரு மாதத்திற்கு 80 ஆயிரம் டன் அரிசி மக்களுக்கு வழங்கப்படுகிறது. 25 ஆயிரம் டன் அரிசி சத்துணவுத் திட்டத்திற்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இப்படி எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும்மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையிலே தமிழகம் விளங்கி வருகிறதென்றால், இதற்கெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் நிர்வாகத் திறமையே காரணம்.''

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது சிறப்புரையின் போது தெரிவித்ததாவது:

''தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் நாடெங்கும் விரைந்து முன்னேற்றம் கண்டு வருகிறது. காலத்தே பெய்ய வேண்டியமழை கூட இந்த அரசு அமைந்தபிறகு காலத்தோடு வந்து கொண்டிருக்கிறது. வறட்சி மிகுந்த இம் மாவட்டத்தில் இரண்டு நாட்களாக மாமழை பெய்திருப்பது இதற்கு உதாரணமாகும்.

''புதுக்கோட்டை மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்று பழிக்கப்பட்ட நிலை மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியிலே இத்தகைய அரிய பெரிய திட்டங்கள் நிறைவேற்றுப்படுவதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறது. நம்முடைய மாநிலம்தான் உலகிலேயே கூட்டுறவுத் துறையின் கீழ்கைத்தறித் தொழிலைக் கொண்டு வந்திருக்கிற முதல் மாநிலம் ஆகும்.

''தனியார் தொடங்கும் ஆலைகள் சில மூடப்படும் அபாயம் இருக்கிறது. சட்டம் தான் காரணம் என்கிறார்கள். அது உண்மையானால் அவர்களே வேறோர் இடத்தில் இன்னொரு ஆலை தொடங்க ஏற்பாடு செய்கிறார்களே, அதெப்படி? இது பற்றி மத்திய அரசும் அதிகாரிகளும் கடுமையாகப் பரிசீலிக்க வேண்டும்.

''அரிய பல பொருளாதாரத் திட்டங்கள் இந்த அரசில் எல்லாரும் வியக்க நிறைவேற்றப்படுகின்றன என்றால் இந்தப் பொருளாதாரத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழைகளிடமிருந்து கற்றுக் கொண்டவர்—ஏழையாயிருந்து கற்றுக் கொண்டவர் என்பது தான் காரணம்''

—இவ்வாறு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

விழா முடிவில் புதுக்கோட்டை மாவட்டக்-கூட்டுறவு நூற்பாலையின் மேலாண்மை இயக்குநர் திரு இரா. சுப்பையா நன்றி கூறினார்.

—'இந்திரன்'





# கல்வி சிறந்த தமிழ்நாடு

**1985-86ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு வரவு செலவுத் திட்டத்தின் மொத்தச்செலவான ரூ. 2,315 கோடியில் கல்வி மானியத்துக்காக மட்டும் ரூ.468 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை வரவு செலவுத் திட்டத்தில் 20 விழுக்காட்டுக்கும் அதிகமாகும்.**

பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய இருபது அம்சத் திட்டத்தில் 16-வது அம்சம் ஆகும். இந்த அம்சத்தில் தமிழ்நாட்டின் சாதனை பெருமை தரக்கூடியதாக விளங்குகிறது.

அனைத்து இந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 1984-85ஆம் ஆண்டு இறுதியில் வயதுத் தொகுதி ஆறு முதல் 11 வயது வரையுள்ள சிறுவர் சிறுமியர்களில் 95 சதவீதம் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் அந்த வயதுத் தொகுதியில் உள்ள சிறுவர் சிறுமியர்களில் 1984-85 ஆம் ஆண்டில் 98.66 சதவீதத்தினர் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

வயதுத் தொகுதி 11 முதல் 14 வயது வரையிலுள்ள சிறுவர் சிறுமியர்களில் 50 சதவீதத்தினர் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் என்று அனைத்து இந்தியாவிலும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் அந்த வயதுத் தொகுதியினரில் 72.18 சதவீதத்தினர் பள்ளியில் (6 முதல் 8ஆம் வகுப்புவரை) பயின்று வருகின்றனர்.

இப்படிக்கல்வித் துறையில் மகத்தான சாதனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் அரும்பணிகள் பற்றிச் சில விவரங்கள் வருமாறு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் தமிழ்நாடு சட்டப் பேரவையில் 11.4.85 அன்று கல்வி மானியக் கோரிக்கை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில், ''இந்த மானியத்தோடு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கச் செலவிடுவது பிற செலவினங்கள் உட்பட மொத்தம் ரூ.558 கோடி அளவுக்கு நம்முடைய கல்விச் செலவு ஆகிறது. இது மொத்தச் செலவில் 24 சதவீதம் அளவுக்கு இருக்கும்'' என்று தெரிவித்தார்கள்.

கல்வி மானியமான ரூ.468 கோடியில் மேல்நிலைப் பள்ளிக்

**சிறப்புக் கட்டுரை**





கல்வி உட்பட பள்ளிக்கல்விக்கே ரூ. 384 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்த தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 28,847 ஆகும். இவைகளில் கல்வி கற்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை 48 இலட்சத்து 92 ஆயிரம் ஆகும். இங்கு பணியாற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 16 ஆயிரம்.

கடந்த ஆண்டில் இருந்த நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 5,691 ஆகும். இவைகளில் பயின்ற மாணவ, மாணவியர் எண்ணிக்கை 28 இலட்சத்து 27 ஆயிரம் ஆகும். இப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 67 ஆயிரம் ஆகும்.

கடந்த ஆண்டில் இருந்த உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 3,950 ஆகும். இவைகளில் பயின்ற மாணவ மாணவியர் எண்ணிக்கை 28 இலட்சத்து 27 ஆயிரம் ஆகும். இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் எண்ணிக்கை ஓர் இலட்சத்து ஆயிரம் ஆகும்.

1984-85ஆம் ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டுக்குக் கூடுதலாக இரண்டு லட்சத்து 98 ஆயிரம் மாணவ மாணவியர் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் 13 இலட்சத்து 67 ஆயிரம் குழந்தைகள் பள்ளிகளில் புதியதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.)

பள்ளிகளில் சேரும் மாணவ மாணவியருள் தொடர்ந்து 5-வது வரையில் படிக்காமல், இடையிலேயே பள்ளியில் இருந்து நின்றுவிடுவோர் எண்ணிக்கை 1977-78ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது. 1983-84 இல் 26 சதவீதமாகக் குறைந்து உள்ளது. இந்த மாற்றத்திற்கு முதல் அமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் முக்கிய காரணமாகும்.

குழந்தைகள் காப்பகங்கள் 4,140ல், ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஓர் இளஞ்சிறார் பள்ளி வகுப்பு நடத்தப்படுகிறது. இளம் வயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்ப்பதாலும் சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக் கொள்ள வீட்டில் நிறுத்துவதைத் தவிர்ப்பதாலும் இவ்விளஞ்சிறார் பள்ளிகளும், இடையில் நின்று போகும் மாணவியர் எண்ணிக்கையைக் குறைக்க வருங்காலத்தில் பயன்படும்.

இளஞ்சிறார் பள்ளி வகுப்புகளை மேலும் 10,000 குழந்தைகள் காப்பகங்களில் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 1.7.82 முதல் துவக்கப்பட்டது. 15.9.1982 இது மேலும் விரிவாக்கப்பட்டது. 1 முதல் 5 வகுப்பு வரை உள்ள பள்ளிகளில் அமலாக்கப்பட்ட இத்திட்டம் 15.9.1984 முதல் 6 முதல் 10வது வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கும் விரிவாக்கப்பட்டது. 1 முதல் 10வது வகுப்பு வரை படிப்பவர்களில் 55 இலட்சம் மாணவ மாணவியர் 37,447 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகின்றனர்.

1 முதல் 5 வது வகுப்பு வரையில் பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்களில் (ஆண்டுக்கு ஏறத்தாழ 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலம் முதல் நாளன்றே தரப்படுகிறது.

6 முதல் 10வது வகுப்பு முடிய பயிலும் மாணவமாணவியருக்குப் பள்ளி வேலை நாட்களில் சத்துணவு வழங்கப்படுகிறது.

**இலவசச் சீருடை:**

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள் முதல் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் தகுதியுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

முன்பே 1 முதல் 3வது வகுப்பு முடிய பயிலும் ஏழை மாணவ மாணவியர்களுக்குப் பாடப் புத்தகங்களும், சிலேட்டும் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. இவ்வாண்டிலிருந்து இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டம் 1 முதல் 8 வகுப்புகளில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணவ மாணவியர் அனைவர்க்கும் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வி பொதுவாக 1 முதல் 12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்புப்படிப்பு உதவித் தொகைளையும் இதர வசதிகளையும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர்.

அதே போன்ற வசதிகளைப் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர்.

தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் செய்து வருகிறது. 1979-80 முதல் 1983-84 முடிய மலிவு விலை நோட்டுப் புத்தகங்கள் ரூ.12 கோடிக்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட இருக்கும் நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ.2 கோடியாகும்.





# பெரியார் மாவட்டத்தில்

**பெரியார் மாவட்டத் தலைநகரான ஈரோட்டில் இருந்து திருத்தணி மற்றும் பல முக்கிய கோவில்களுக்குச் செல்ல ஜீவா போக்குவரத்துக் கழகம் புதிய பேருந்துகளை விட ஏற்பாடு செய்திருக்கிறது. மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் இருந்தும் கோவில்களுக்குச் செல்வதற்குப் புதிய பேருந்துகள் விடப்படும்.**

**விவசாயிகளுக்கு எவ்விதக் குறையும் இருக்கக் கூடாது என்பதற்காக தமிழக அரசு குறுகிய காலக் கடனாக ரூ. 135 கோடி அளித்துள்ளது. மத்திய காலக் கடனாக 20 கோடி ரூபாயும் நீண்டகாலக் கடனாக 20 கோடி ரூபாயும் கொடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது. வங்கிகள் அரசுக்கு மட்டும் சொந்தமில்லை. மக்களுக்கும் சொந்தமானதாகும். எனவே வங்கிகள் மக்கள் வங்கிகள் ஆகும்.**

**ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி மட்டும் 30 கோடி ரூபாயை டெபாசிட்டாகப் பெற்றுள்ளது.**

உயர்நிலைப் பள்ளி நிலையில் பள்ளிசாராக் கல்வியினை விரிவாக்கும்பொருட்டு அனைவருக்குமான (அஞ்சல்முறைப்) பள்ளியை மாநிலக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் தொடங்கியுள்ளது.

**மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள்**

மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

1984-85ல் மொத்தம் 969 மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

**மைய அரசு நாடெங்கும் அமல் படுத்திவரும் ஒரு திட்டத்தின்கீழ் மின்கணிப்புப்பொறியைப் பற்றிய பாடம 1984-85 தமிழ்நாடுமுழுவதும் 10 மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது.**

644 அரசு மேல்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பையும் ஓர் ஆய்வுக் கூடத்தையும் கட்ட ரூ.12 கோடிக்கு மேல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் 582 கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுவிட்டன.

**வாழ்க்கைக் கல்விக்கான முதல் அமைச்சர் திட்டம் :**

பள்ளிகளில் தற்பொழுது குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும் பாடங்கள் பெரும்பாலும் ஏட்டறிவு சார்ந்தவையாகவே உள்ளன. அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் இக் கல்வி முறை உதவுவதாக இல்லை. தொடர்ந்து படிக்காமல் பல்வேறு கட்டங்களில் பள்ளி வாழ்க்கையைநிறுத்திவிடுபவர்களுடைய தேவைகளை இம்முறை கணக்கில் கொள்ளுவதேயில்லை. வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் பள்ளிக் கல்வியானது அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலை வாய்ப்போடு இணைந்ததாக ஆக வேண்டும் என்பதேயாகும்.

மாணவ மாணவியருக்கு பள்ளிகளில் கற்றுத்தரப்படும் திறன்கள் பிற்காலத்தில் அவர்கள் பொருத்தமான வேலையில் சேரவோ, சுயமாகத் தொழில் நடத்தவோ ஆற்றல் வாய்ந்தவர்களாக உருவாக்க வேண்டும். உழைப்பின் கௌரவத்தைக் குழந்தைகள் உணரும்படியான மனநிலையை உருவாக்க வேண்டும். கல்வி முறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளி குறைக்கப்பட்டு வாழ்க்கைப் பிரச்சினைகளைச்சமாளிக்க வல்லவர்களாக குழந்தைகள் ஆக வேண்டும். இத்திட்டத்திற்கு மிகப் பெரும் முதலீடு தேவை. அண்மைக் காலமாக கல்வியைத் தொழில் மயமாக்குவதன் இன்றியமையாமையை மைய அரசும் வலியுறுத்தி வருகிறது. எனவே, இம்மாபெரும் திட்டத்திற்கு கணிசமான மைய அரசு நிதியுதவி ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிட்டும் என்று இவ்வரசு நம்புகிறது. மேலும் மைய அரசின் ஆதரவுடன் உலக வங்கி உதவியும் இத்திட்டத்திற்குக் கிடைக்கும் என்று நம்பிக்கையும் உள்ளது.

இத்திட்டத்தைச்செயற்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் 1984-85லேயே தொடங்கப்பட்டுவிட்டன. தற்பொது 1-12 வகுப்புகளில் கற்றுத்தரும் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள் ஆகியவற்றை புதிய கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப, திருத்தியமைக்க அரசு குழுக்களை அமைத்துள்ளது. அவை தயாரிக்கும் புதிய பாடத் திட்ட வரைவுகள் வெளியிடப்பட்டு கல்வியாளர்களுடைய கருத்துகளும் மற்றவர்களின் கருத்துகளும் கோரப்படும். இதுவரை தொழிற்பாடவகுப்புகள் தொடங்கப்பட்டிராத பல மேல்நிலைப் பள்ளிகளில் 1984-85 முதல் தொழிற் பாட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப் பாடங்களைப் பயில்பவர்கள் படிக்க வேண்டியுள்ள விருப்பப் பாடங்கள் நான்கில் ஒன்றுக்கு பதிலாக தொழிற்பாடம் ஒன்றைக் கற்றுத்தர 1984-85 ஆம் ஆண்டு முதல், வகை செய்யலாமென்று விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. மேலும் சுமார் 750 உயர் நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தங்கள் விருப்பத்தின் மேல் 1984-85ஆம் ஆண்டு முதல் 9-10 வகுப்பு மாணவர்களுக்கும் தொழிற்பாடம் ஒன்றைக்கற்றுத்தர அனுமதிக்கப்பட்டன. ஆங்காங்கு கருத்தரங்குகள் பலநடத்தி வாழ்க்கைக்கல்வியின் கோட்பாடுகள் ஆசிரியர்களிடையேயும், தலைமையாசிரியர்களிடையேயும் பரப்பப்பட்டுள்ளன.

**ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்கள் :**

புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள், மீண்டும் பழையபடி எழுத்தறிவற்ற நிலைக்குப் போய் விடாமல் தடுப்பதற்காக அவர்களுக்குத் தக்க புத்த...

சஞ்சிகைகளும் அளிப்பது, ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். 1983-84ல் தொடங்கிய இத்தகைய மையங்கள் 1984-85ல் தொடங்கிய 1,000 மையங்களும், செயல்பட்டு வருகின்றன. இவைபோக ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி மையங்கள் தவிர பிற 13 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 மையங்கள் வீதம் மொத்தம் 1,300 ஏட்டறிவுத் திட்ட மையங்கள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

**பள்ளி சாராக் கல்வி :**

பள்ளிக்கே செல்லாதவர்களும், சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1984-85ல் 150 மையங்கள் செயல்பட்டு வந்தன. இம்மையங்கள் ஒவ்வொன்றும் 3 ஆண்டுகள் வேலை செய்யும். வெவ்வேறு தொகுதியைச் சார்ந்த (பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிட்ட) மாணவர்களுக்கான பத்து மாத வகுப்புகளை இம்மையங்கள் நடத்துகின்றன. பள்ளிக் கட்டடங்களில் இம்மையங்கள் நடைபெறுகின்றன. பள்ளி ஆசிரியர்யர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு மாத மதிப்பூதியமாக ரூ.50- பெறுகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் ஏறத்தாழ 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளிக்கல்வி சாராக் கல்வி மையங்கள்1980-81ல்தொடங்கப்பட்டன. இம்மையங்கள் ஒரு தொகுதியினருக்கு கல்வி புகட்டும் பணியை 1983ல் நிறைவேற்றி முடித்துள்ளன. தற்பொழுது வேறு இடங்களில் இந்த 30 மையங்களும் செயல்பட்டு அப்புதிய இடங்களில் உள்ள அத்தகைய சிறுவர்களுக்கு கல்விபுகட்டி வருகின்றன. வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக பள்ளி சாராக்கல்வி மையங்கள் 10 விரைவில் திறக்கப்படவிருக்கின்றன. ''யூனிசெப்'' உதவியுடன் சாத்தூர், வெம்பக்கோட்டைப் பகுதிகளில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் மேலும் 70 திறக்கப்படவிருக்கின்றன.

**பல்கலைக் கழகங்கள் :**

பாரதியார் பல்கலைக் கழகத்துக்கு கோயம்புத்தூரில் ஆயிரம் ஏக்கர் வளாகமும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு திருச்சிராப்பள்ளியில் ஆயிரம் ஏக்கர் வளாகமும் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கீழ் உள்ள சிறப்புக் கட்டடப் பிரிவுகள் இவ்வளாகங்களில் கட்டட வேலைகளை விரைந்து நிறைவேற்றி வருகின்றன.

பாரதியார் பல்கலைக் கழகம் வகுத்துக் கொண்டுள்ள தொலை நோக்குத் திட்டத்திற்கேற்ப அப்பல்கலைக் கழகத்தின் கீழ் பின்வரும் புது ஆய்வு மையங்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன.

1. மின் கணிப்புப் பொறி மையம்.
2. நிருவாக மற்றும் தொழிலதிபர் திறன் வளர்ச்சிப் பள்ளி.
3. மொழிகள் பள்ளி.
4. கல்வி பயிற்றுவிப்பு ஆதாரங்கள் பள்ளி.
5. சுற்றுப்புறச் சூழ்நிலை மையம்.
6. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மையம்.

பாரதிதாசன் பல்கலைக் கழகம் குறிப்பிட்ட படிப்புகள் மற்றும் ஆய்வுக்கான சிறப்பு மையங்களைத் தொடங்கும் தன் கொள்கையின் அடிப்படையில் முக்கியமாக பாரத கன மின்தொழில் நிறுவனத்துடன் இணைந்த கூட்டு முயற்சியாலும் நெய்வேலி லிக்னைட் நிறுவனம், தமிழக மின் வாரியம் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் பின்வரும் இரு சிறப்புப் பிரிவுகளை, அதாவது, 1. நிருவாகப் பயிற்சிக்கான பாரதிதாசன் நிறுவனம் 2. ஆற்றல் ( Energy ) பற்றிய ஆய்வுக்கான பாரதிதாசன் பள்ளி ஆகியவற்றை நிறுவியுள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப்படிப்பு 1983-84 இல் தொடங்கப்பட்டது. 1984-85 இல் இரண்டாமாண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டன, 1985-86 இல் மூன்றாமாண்டு வகுப்புகள் தொடங்கப்பெறும். இக்கல்லூரிகளில் மூன்றாண்டு சட்டப்படிப்பும் ஐந்தாண்டு சட்டப்படிப்பும் ஒருங்கிணைந்து நடைபெறுகின்றன. மூன்றாண்டு சட்டப்படிப்பிற்கு சட்டக் கல்லூரிகளில் 1984-85 ஆம் ஆண்டு வரையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள இந்திய வழக்கறிஞர் மன்றம் அனுமதித்துள்ளது. இந்தியாவின் பிற மாநிலங்கள் மூன்றாண்டு சட்டப்படிப்பை முழுமையாக நிறுத்தும்வரை இங்கும் தொடர்ந்து நடத்திவர, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்:**

கொடைக்கானலில் தொடங்கப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின்



நோக்கங்களும் குறிக்கோள்களும் தனித்தன்மைவாய்ந்தவை. அதன் பணி மற்றைய பல்கலைக் கழகங்களுடைய பணியிலிருந்து மாறுபட்டது. மகளிர் பல்கலைக் கழகத்தின் முக்கிய பணி, மகளிரைப் பற்றியும் மகளிர் பல்கலைக் கழகத்தின் மகளிரின் நலனைப் பற்றியும் ஆய்வுகளைச் செய்வதும், ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் அரசு மற்றும் தனியார் துறைகளில் அமைந்துள்ள மகளிர் நல நிறுவனங்களுக்கு அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதும் ஆகும். (ஆண்களோடு பெண்கள்) ''சரிநிகர் சமானம்'' என்னும் குறிக்கோளை அடைவதற்கான சரியான வழிமுறைகளை மகளிருக்குக் காட்டி அவர்கள் வளர்ச்சிக்கு உதவி செய்வதே மேற்சொன்ன ஆய்வுகள், அறிவுரைப் பணிகள் ஆகியவற்றின் முடிவான பயனாகும். ஆழ்ந்த ஆய்வுகளைமேற்கொள்ள வேண்டிய துறைகள், புலங்கள், ஆகியவற்றை அடையாளம் கண்டுகொள்ளும் நோக்குடன் தமிழகத்திலுள்ள மகளிர் கல்லூரிகள் அனைத்தின் முதல்வர்கள் மாநாடு, மகளிர் நல அமைப்புகளின், மாநாடு மகளிர் கல்வி பற்றிய கருத்தரங்கு ஆகியவற்றை இப்பல்கலைக் கழகம் நடத்தியுள்ளது. இப்பல்கலைக் கழகம் தன் சிறந்த குறிக்கோளை நோக்கி நேரிய பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே அறிவித்துள்ள காரைக்குடி பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான சட்ட முன்வடிவம் விரைவில் சட்டமன்றத்தின் முன் வைக்கப்படும். சேலத்தில் சென்னைப் பல்கலைக் கழகமும் திருநெல்வேலியில் மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் பட்ட மேற்படிப்பு மையங்களை ஏற்படுத்தியுள்ளன. உரிய காலத்தில் சேலத்திலும் திருநெல்வேலியிலும் தொடங்கவிருக்கும் பல்கலைக் கழகங்களுக்கு அப் பட்ட மேற்படிப்பு மையங்கள் நிலைக்களன்களாக இருக்கும். அவ்விரு மையங்களிலும் கூடுதல் வசதியைச் செய்ய 1985-86ஆம் ஆண்டில் சிறப்பு மானியங்கள் வழங்கப்படும்.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்:**

தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் கண்டறிந்து நிறுவவும், புதுமைக் கருத்துக்களும் பூத்துக் குலுங்கும் வளமிக்க மொழியாக அதனை வளர்க்கவும் உதவும் உயர்நிலை ஆய்வு மையமாக தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் அப்பல்கலைக் கழகத்தில் 50-க்கும் மேற்பட்ட பேராசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் இருந்தனர். டி.லிட். பட்டத்திற்கான உயர் ஆய்வில் ஈடுபட்டிருந்தவர்கள் 12பேர்களாவர்.

இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு புலங்களும் மற்றும் நூலகம், அருங்காட்சியகம், மின்கணிப்புப்பொறிமையம் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டு ஆராய்ச்சி வசதிகள் அதிகப்படுத்தப்படுகின்றன. இப்பல்கலைக் கழகம் பின்வரும் ஐந்து விரிவுப் பணி மையங்களையும் -அதாவது பழங்குடிகள் பண்பாட்டு ஆய்வு மையம், உதமகமண்டலம்: தத்துவ ஆய்வு மையம், காஞ்சிபுரம் தமிழ்க் கலைக் களஞ்சியம், மற்றும் தமிழ்ப் பேரகராதி மையம் (இரண்டும் தஞ்சாவூரில்); கடலடியில் தொல்பொருளாய்வு குறித்த மையம், மண்டபம் ஆகியவற்றை நடத்தி வருகிறது. சிறந்த புத்தகங்கள் பலவற்றை வெளியிட்டு வருவதுடன் இப்பல்கலைக் கழகம் ''தமிழ்க்கலை'' மற்றும் இரண்டு முத்திங்கள் ஆராய்ச்சி இதழ்களையும் வெளியிட்டு வருகிறது.

மதுரை காமராசர், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்திவரும் அஞ்சல் முறை வகுப்புகளில் 1984-85ல் பட்ட வகுப்புகளிலும் பட்ட மேற்படிப்புவகுப்புகளிலும் 12.6 இலட்சம் பேர் பயின்று வந்தனர். மேலும் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் நடத்தி வந்த ''அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக'' வகுப்புகளில் ஏறத்தாழ 13,540 பேர் பயின்று வந்தனர். கடந்த மூன்றுஆண்டுகளில் அரசுக் கல்லூரிகள் 12ல் பிகாம் மாலைநேர வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசியப் பணித்திட்டம் மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசியப் பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ.80ல் சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு நபருக்கு ரூ.100ம் செலவிடப் படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும் மைய அரசும் 5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக் கொள்ளுகின்றன. இதற்காவ 1985-86 மாநில அரசு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ.92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1985-86இல் மேலும் 10,000 மாணவர்கள் தேசியப் பணித் திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## முத்துக்காடு படகு குழாம்

**மாமல்லபுரம் செல்லும் வழியில் முத்துக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திவரும் படகுக் குழாம் மிகவும் பிரபலமாகி வருகிறது. படப்பிடிப்புகளும் இங்கே அதிகரித்து வருகின்றன**

**இயற்கையெழில் நிறைந்த இந்த இடத்தில் ஜூலை மாதம் முதல் தேதி முதல் ஏழாம் தேதி வரை ஒன்பதாவது தேசிய படகுப் போட்டியும் நீர் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும். இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அடுத்து அகில உலக நீர்விளையாட்டுப் போட்டிகளை இங்கே நடத்தும் வகையில் இந்த இடம் தேர்தெடுக்கப் படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது? சென்ற ஓராண்டுக் காலத்தில் சுமார் ஒரு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து மகிழ்ந்தனர்.**

கடந்த ஐந்து ஆண்டுகளில் 73 புதிய பல்தொழில் பயிலகங்கள் (மகளிருக்கென்று 7 உள்பட) திறக்கப்பட்டதால் பல்தொழில் பயிலகங்களில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1981-82இல் பல்தொழில் பயிலகங்கள் இரண்டில் புகுத்தப்பட்ட ஷிப்டு முறை 1983-84இல் மேலும் 5 பல்தொழில் பயிலகங்களுக்கு விரிவாக்கப்பட்டது.

**தற்சார்பு (Self Financing) தொழிற் கல்வி நிறுவனங்கள் :**

பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் மாணவமாணவியர் எண்ணிக்கையோ ஏராளமாகப் பெருகிக் கொண்டு வருகிறது. ஆனால் அத்தேவையை ஈடு செய்யும் அளவுக்கு அரசு அல்லது அரசு மானியம் பெறும் தொழிற் கல்வி நிறுவனங்களைத்தொடங்கி நடத்த அரசு நிதி நிலை இடம் தராததால் கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்கள் ஏற்கெனவே தற்சார்பு தொழிற் கல்வி நிறுவனங்களைத் தொடங்க அனுமதித்துள்ளன.

உதாரணமாக கர்நாடகத்தில் 1982-83லேயே 44 பொறியியல் கல்லூரிகள் இருந்தன. அவற்றில் பயின்ற மாணவர் மொத்த எண்ணிக்கை 28,000 (கர்நாடகத்தில் மக்கள் தொகை 3.71 கோடி: தமிழகத்தின் மக்கள் தொகை 4.84 கோடி) வேலைவாய்ப்புக்குகந்த கைத்திறன்களையும் தொழிற் திறமைகளையும் மாணவர்களிடையே உருவாக்கும் நோக்குடன் இவ்வரசு வாழ்க்கையோடு இணைந்த கல்வியைப் பள்ளிகளில் புகுத்தவிருக்கிறது. பொறியியல் கல்வியானது அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைத் தருவதோடு மட்டுமின்றி சுயமாகத் தொழில் தொடங்கி நடத்தவும் வகை செய்வதேயாகும்.

வளரும் பொருளாதாரத்தின் தொழில் நுட்பத் தேவைகளை நிறைவேற்றத் தக்கதாக தொழில் நுட்பக் கல்வி முறை இருக்க வேண்டும் என்று மைய அரசும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசுக்கு தொடராச் செலவோ தொடரும் செலவோ ஒரு காலத்திலும் ஏற்படாத வகையில், தனியார் தொழில்கல்வி நிறுவனங்களை தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனுமதிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தத் தனியார் தொழிற் கல்வி நிறுவனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்கப்படுகிறது. அந் நிபந்தனைகளில் முக்கியமானவை வருமாறு:

போதுமான நிலத்தை தனியார் நிருவாகம் தரவேண்டும்; ரொக்க வைப்புத்தொகையாக பல்தொழில் பயிலகமானால் ரூ. 10 இலட்சமும் பொறியியல் கல்லூரியினால் ரூ. 30 இலட்சமும் ஏற்படுத்தவேண்டும். அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு மாணவர்கள் சேர்க்கப்படவேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய தனிக்கட்டணமும் வசூலிக்கக் கூடாது; நிபந்தனை மீறப்பட்டால் தொழிற் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக் கொள்ளலாம், என்று முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தரவேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார் பாலிடெக்னிக்குகள் 53 தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 1984-85ல் இத்திட்டத்தின் கீழ் 17 பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

**அண்ணா பல்கலைக் கழகம**

பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் இசை சார்பான அறிவியல் புலங்களின் வளர்ச்சிக்காகவும், அவற்றில் மேற்படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும் அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பர் 4 ஆம் நாள் நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பொறியியல், தொழில்நுட்பவியல்; கட்டட அமைப்பும் வட்டார அமைப்புத் திட்டமும், செயல்முறைப் பொறியியல்; அறிவியலும் கலைப்பாடங்களும் ஆகிய புலங்களில் மொத்தம்பட்டப் படிப்புகள் 20ம் பட்டமேற்படிப்பு 29ம் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் 1983-84ல் படித்து வந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 4,525 ஆகும்.

மொத்தத்தில் தமிழகத்தில் கல்வி மெத்தவும் வளர்ச்சி பெற்று வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

**தொகுப்பு :**
**—மாமூலன்**

## சென்னை மாநகராட்சியின் சீரிய பணிகள்

குப்பை லாரிகள் 176 'குப்பை' அள்ளப் பயன்படும் 700-க்கும் மேலான மாட்டுவண்டிகள் ஆகியவைகளின் பணித் திறனை அதிகமாக்கி, ஒவ்வொரு நாளும் 2,500 டன்னுக்கும் அதிகமான அளவுக்குக் குப்பை அகற்றும் பணியில் சென்னை மாநகராட்சி முனைந்துள்ளது.

சென்னை மாநகரில் நாள்தோறும் இரண்டாயிரம் டன்னுக்கு மேல் குப்பை குவிகிறது. ஆங்காங்கே நகரில் இதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் இன்னும் இரண்டு மூன்று மாதத்தில் அடியோடு நீக்கப்பட்டு விடும்.

முதல் 'ஷிஃப்டில்' பயன்படுத்தப்படும் 150 குப்பை லாரிகளும் குப்பை அகற்றும் பணியில் நாள்தோறும் இருமுறை பயன்படுத்தப்படும். இரண்டாவதுமூன்றாவது 'ஷிஃப்ட்டு'களில் ஓடுகின்ற முப்பது நாற்பது லாரிகள் இந்தப் பணியிலே ஒரு முறை ஈடுபடுத்தப்படும்.

மாநகரப் பிரச்னைகள்குறித்து அண்மையில், தலைமைச் செயலகத்தில் சட்டப் பேரவை - மேலவை உறுப்பினர்கள் உயர் அதிகாரிகளோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்திய ஆலோசனையின் விளைவாகவே சென்னை மாநகராட்சிப்பணிகள் இவ்வாறு வேகப்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் இப்போது 800 பொதுக் கழிப்பிடங்கள் உள்ளன. தலைமைச் செயலாளரின் ஆலோசனைப்படி சிறுவருக்கான புதுமுறைச் சிறு கழிப்பிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

200 பொதுக் கழிப்பிடங்களில் 18 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப் பட்டது. அதன் கீழ், இதுவரை 167 இடங்களில் பணி முடிந்திருக்கிறது.

சென்னை மாநகரில் நிரந்தரமாகக் கொசுத் தொல்லையை ஒழிக்கும் திட்டப்படி, தேவையான இடங்களில் 460 கிலோ மீட்டர் நீள மழைநீர் வடிவாய்க்கால்கள் அமைக்கப்படும். இருக்கிற கால்வாய்கள் செப்பனிப்படும். இந்தப் பணியில் 547 தொழிலாளர்களும், 52 மலேரியா ஆய்வாளர்களும், 10 மலேரியா தடுப்பு உதவியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாநகராட்சி நிதிக்கணக்குகள் சொத்து வரி கணக்கீட்டுப் பட்டியல், பணியாளர்கள் சம்பளப் பட்டியல் தயாரித்தல் ஆகியபணிகளைக் கம்ப்யூட்டர் மூலம் மேற்கொள்ள எண்ணி - அதற்கான முன் பரிசோதனையாக அண்ணா சாலையில் ஸ்பென்சர் அருகிலிருந்து அண்ணா மேம்பாலம் வரையுள்ள பகுதிகள் வரை உள்ள சுமார் பத்தாயிரம் பேர்களுடைய சொத்து வரிக்கணக்கீடு இப்போது கம்ப்யூட்டர் மூலம் செய்யப்படுகிறது. இதற்காக எட்டு லட்சம் ரூபாய் உலக வங்கி நிதி உதவியுள்ளது.

ராயபுரம் பகுதியிலுள்ள பாலம் எட்டு லட்ச ரூபாய் செலவில் அகலமாக்கப்படும்; இதனால் அப்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசல் என்பது சதவிகிதம் சீராகும்.

குடியிருப்புப் பகுதிகளில் உரிமம் பெறாமலே வர்த்தகம் செய்வோர் மீது நடவடிக்கை எடுத்து - அவர்களும் உரிமம் பெறச் செய்ய வேண்டும் என்பது பரிசீலனையில் உள்ளது.

**[சென்னை மாநகராட்சி ஆணையர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., செய்தியாளர் கூட்டத்தில் (16-5-85) தெரிவித்த கருத்துக்கள்.]**

**—ராஜா**


# வளமான வாழ்வுக்கு மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப் பெற, தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களையும் கொண்ட விஜய் உரங்கள் தேவை.
மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள்.
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால், கீழ்க்கண்ட பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.





நெல் — ஏக்கருக்கு/கிலோ

| ரகங்கள் | அடியுரம் | மேலுரம் | அடியுரம் | | | மேலுரம் |
|---|---|---|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| உயர்விளைச்சல் ரகங்கள் - குறுகிய கால ரகம் | 90 | 35 | 55 | 15 | 10 | 30 |
| - நடுத்தர/நீண்ட கால ரகம் | 120 | 45 | 70 | 20 | 15 | 40 |
| சாதாரண ரகங்கள் | 80 | 15 | 50 | — | — | 15 |

வாழை — ஏக்கருக்கு/கிலோ

| காலம் | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
|---|---|---|---|---|---|---|
| நட்ட 90-வது நாள் | 200 | 45 | 220 | 125 | 80 | 250 |
| நட்ட 150-வது நாள் | — | 120 | 275 | — | 120 | 275 |

மேலும் விவரங்களுக்கு :
வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001

VIJAY
MADRAS FERTILIZERS

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
மணலி
சென்னை 600 068




சமச்சீர் உரமி
விஜய



# எல்லோருக்கும் சாண எரிவாயு!

மழை வளம் பெருக்கும் காடுகளையும், கிராமங்களிலுள்ள செழிப்பான மரங்களையும் கூட விறகுக்காக நாம் கண்மூடித்தனமாக அழிக்கத் தலைப்பட்டு விட்டோம்.

வனவளம் குறைவதனால், நாட்டில் மழை வளம் பெரிதும் குறைந்துவிடுவதுடன் வறட்சியும் நம்மை பாதிக்கத் தொடங்கி விட்டதை நாம் அடிக்கடி காண்கிறோம். இந்நிலை தொடர்ந்தால், மழை குன்றி, மரங்கள் வளர்வது அகன்று எரிபொருள் கிடைப்பது அரிதாகிவிடுமென்பதில் சிறிதும் ஐயமேயில்லை. நாட்டிற்கு ஏற்படும் இந்த மகத்தான இழப்பை ஈடுசெய்வதுதான் சாண அல்லது கரிம எரிவாயுத் திட்டம்.

நம்நாட்டில் கால்நடைகளுக்குப் பஞ்சமா என்ன? உலகக் கால்நடைகளில் பெரும் பகுதி நம் நாட்டில்தான் உண்டு. சாண எரிவாயுவை அமைப்பதன் மூலம் கால்நடைகளின் சாணத்திலிருந்து சிறந்த எரிவாயு பெறவும், அதே நேரத்தில் உபயோகப்படுத்திய சாணத்திலிருந்து சத்து மிகுந்த உரத்தினைப் பெறவும் நல்ல வாய்ப்பு உள்ளது.

வீட்டிற்கு விருந்தாளிகள் திடீரென்று வருவதைப் பற்றி நாம் கொஞ்சமும் பயப்படவோ, கவலைப்படவோ தேவையில்லை. சாண எரிவாயு தயாரில் இருப்பதால் விரைவில் சமையலை முடித்து, விருந்தினர்களை மகிழ்விக்கலாம்.

பாத்திரங்களில் புகைபிடிக்காததால் மூச்சைப் பிடித்து, கஷ்டப்பட்டு துலக்க வேண்டிய அவசியமேயில்லை; எளிதாகக் கழுவி விட்டு மீண்டும் சமைக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பெண்கள் சமையலுக்கென்று அதிக நேரத்தை ஒதுக்கி சமையலறையில், ஈர, உலர்ந்த விறகுகளினால் புகையுடன் கண்ணீர் உகுத்து, மூக்கை உறிஞ்சிப் போராடிக் கொண்டிருக்க வேண்டாம். சில பெண்கள் 'இன்டேன்' சமையல் எரிவாயு கிடைத்தால் கூட வேண்டாம் என்று மறுக்கும் நிலைக்கு வந்துள்ளனர். காரணம் 'இன்டேன்' வாயுவைவிட இது அதிக

**வி. சுந்தரம் இ.ஆ.ப.**

**ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை**

வெப்பத்தைத் தருகிறது என்பதால்தான். தவிர தீ விபத்துக்களுக்குக் கொஞ்சமும் வாய்ப்பே இல்லை.

சாணத்தில் களை விதைகள் காணப்படுவதால் அதை வயலிற்கு உரமாக இடும்போது, களைகள் தலைகாட்டுகின்றன. ஆனால், சாண எரிவாயுக் கலத்திலிருந்து வெளியாகும் சாணத்தை உரமிடுவதால் களைகள் காணப்படுவதில்லை. தவிர இது மிகவும் சத்தான எருவாகி விடுகிறது. இதில் 'நைட்ரஜன்' சத்து அதிகம். கலத்திலிருந்து வெளியாகும் சாணத்தை மூட்டையாகக் கட்டி வயலிற்கு எளிதாக எடுத்துச் சென்றுவிட முடியும். இதுவன்றி வெளியாகும் சாணத்தை மக்க வைத்து கூடுதல் விலைக்கு விற்றுவிடலாம்.

இவ்வாயு சமையலுக்கு மட்டும்தான் பயன்படுத்த முடியுமென்ற எண்ணம் பரவலாக நிலவுகிறது. இதைக்கொண்டு விளக்குகள் எரிக்கவும், என்ஜின்கள் கூட இயக்கவும் முடியும். நீர் இறைக்க, கரும்புச்சாறு பிழிய, தற்போது கையாளப்பட்டு டீசல் என்ஜின்கள் சாண எரிவாயுவினால் அதே திறமுடன் ஓட்ட முடியும். மேலும் தொழிற்சாலை இயந்திரங்களை இயக்கவும் இதற்குச் சக்தியுண்டு. பல நூற்பாலைகளில், நூற்கும் இயந்திரங்கள் சாண எரிவாயுவினால் இயக்கப்படுவதை நாம் இங்கு சான்றாகக் கூறலாம்.

சாண எரிவாயுக் கலன்கள செல்வந்தர்களும், நடுத்தர மக்களும்தான் சில ஆண்டுகள்வரை அமைத்துப் பயனடைந்தனர். ஆனால் இன்றைய நிலை என்ன?

விவசாயக் கூலிகளும்கூட கலன்களை அமைத்துக் கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கறவை மாடுகளைப் பெற்றவர்களில் பெரும்பான்மையினர் இன்று கரிம எரிவாயுக் கலன்களுக்கு உரிமையாளர்களாகி விட்டனர். இது ஒரு மகிழ்ச்சி தரும் வளர்ச்சியாகும். இவர்களில் பலர் வங்கிகளிடமிருந்து கடன் பெறாமலேயே கலன்களை அமைத்துக் கொண்டுள்ளது மேலும் சிறப்புடையதாகும்.

''நாங்கள் விறகுக்காக அலைந்தோம். அவற்றைப் பொறுக்கி சேகரித்து விறகாக எரித்தோம். மழைக்காலங்களில் சுள்ளிகளைச் சேகரித்து சமைப்பதென்பது தொல்லையோ தொல்லை! விறகை விலைக்கு வாங்கும் நிலையிலும் நாங்கள் இல்லை. விலையோ அதிகம்! ஆனால் சாண எரிவாயு அமைந்த பிறகு இவ்விதத் தொல்லைகள் ஒரே மூச்சில் ஓடிப்போய்விட்டன'' என்று இத்தகையோர் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.



நிலமற்ற விவசாயிகள் விவசாயக் கூலிகள் போன்றோருக்கு எரிவாயு வசதிகள் செய்து தருவது ஒரு பயனுள்ள காரியமே யாகும். அதிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் வாயிலாகக் கறவை மாடுகள் அடைந்தோர் இரட்டிப்பு வசதிகளைப் பெற்றவர்களாகின்றனர். இவர்கள் வீட்டிலிருக்கும் எரிவாயுக் கலத்திற்கு நாள்தோறும் சாணம் தேவைப்படுகிறது. அதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்பட்ட கறவை மாடுகளை அவர்கள் நிச்சயம் விற்றுவிட மாட்டார்கள். இந்த ஏற்பாட்டால் மாடுகளும், கலனும் ஒன்றுக்கொன்று பிணைத்துக் கொள்கின்றன.

சாண எரிவாயு அமைப்பதற்கு முதலீடு சற்று அதிகமே என்றாலும், அரசு அளிக்கும் மானியமும் வங்கிகளின் கடனுதவியும் இணைந்து செலவையும் முதலீட்டையும் எளிதாக்கிவிடுகின்றன. இவற்றால் கிடைக்கும் எண்ணிறந்த நன்மைகளைப் பொருளாதாரக் கண்ணோட்டத்திலே நோக்கினால், செலவிட்ட தொகை சில ஆண்டுகளிலேயே திரும்பக் கிடைத்துவிடுவதுடன் வரும் ஆண்டுகளில் அது நமக்கு இலவசமாகவே அமைந்துவிடுகிறது.

புதிய 20 அம்சத் திட்டத்தில் 12 (பி)வது அம்சமாகச் சாண எரிவாயுத் திட்டம் இடம்பெறுகிறது. இதனை முனைப்புடன் செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். 1983-84ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 5,000 கலன்கள்.



ஆனால் நாம் இவ்வாண்டில் 6750 கலன்களை மாநிலமெங்கும் அமைத்துத் தந்துள்ளோம். 1984-85-ஆம் ஆண்டிற்காக மைய அரசு ஒதுக்கித் தந்த இலக்கு 10,000. 1985 மார்ச் முடிய அமைக்கப்பட்ட மொத்த சாண எரிவாயுக் கலன்கள் 17,549! இவ்வாறு மைய அரசு நிர்ணயித்த இலக்குகளை ஈராண்டுகளிலும் தாண்டி பாராட்டுக்களைப் பெற்றுள்ளது தமிழ்நாடு அரசு. அகில இந்திய ரீதியில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

வசதி படைத்தவர்கள் மட்டுமே சாண எரிவாயுக் கலன்களை அமைத்துக் கொள்ளமுடியுமென்பதை, தஞ்சை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நாஞ்சிக் கோட்டை ஆதி திராவிடக் குடியிருப்போர் பொய்யாக்கி விட்டனர்.

விவசாயக் கூலிவேலைசெய்து மாதம் ரூ. 150 வரை சம்பாதித்து வரும் 52 குடும்பங்கள் எரிவாயுவை அமைத்துக்கொண்டுள்ளனர். இவர்களில் ஆதி திராவிடர் குடும்பங்கள் 28. இவர்களில் திரு ஆறுமுகம் முத்துவேல் என்ற ஆதிதிராவிடர் தாம் முதலில் எரிவாயு அமைக்க முன்வந்தார். அரசு இவருக்கு ரூ. 3,300 கடனளித்து, ரூ.1,560 மானியமும் தந்தது. மானியம் போக எஞ்சிய தொகையை 36 எளிய தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். விறகுக்காகும் செலவைவிட இது மிகவும் குறைந்த செலவே என்று திரு ஆறுமுகம் முத்துவேல் கூறுகிறார்.

இதே மாவட்டத்திலுள்ள அம்மாப்பேட்டைஊராட்சிஒன்றியத்திலுள்ள காந்தி கிராமம் ஆதி திராவிடர் குடியிருப்பு எங்கு நோக்கினும் 'காங்கிரீட்' உறைகளும், இருமபு மூடிகளுமே பரவலாகக் காணப்படும் காட்சி. இவையெல்லாம் எதற்கு? இங்குள்ள 70 வீடுகளில் 50 வீடுகளுக்குக் கறவை மாடுகள் கடனாகத் தரப்பட்டன. இந்த 50 வீட்டாரும் சாண எரிவாயு அமைக்க முன்வந்துவிட்டனர். கலன் அமைக்க 2 அடி உயரத்தில் 3 உறைகளும் 1.5 அடி உயரத்தில் ஓர் உறையும் தேவை. 6.5 அடி விட்டத்தில் 7 அடி ஆழம் வெட்டப்பட்டு; அதில் இவ்வுறைகள் இறக்கப்பட்டு, இரும்பு மூடி பொறுத்தப்படுகிறது.

கலன் அமைப்போர் மாதத்திற்குச் செலுத்தும் தவணைத் தொகை ரூ. 20-க்கு மேற்படாதது குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, கிராமங்களில் கால்நடைகளுடன் வசிக்கும் அனைவரும் சாண எரிவாயுக் கலன் அமைத்துக் கொள்ள முன்வருவோம்!





# குருவி

—பழனிபாரதி

சின்ன குருவி வானிலே
சிங்கா ரமாய்ப் பறக்குது
என்ன வியப்பு அப்பப்பா!
எப்ப டித்தான் சொல்லுவேன்!

கணத்தில் கூட்டைக் கட்டு து.
கட்டி முடித்துக் கூட்டிலே
இணக்க மாகக் குஞ்சினை
இன்பத் தோடு காக்குது!

உண்ணும் உணவைத் தேடுது
ஓட்ட மாகத் திரும்புது
கொண்டு வந்த உணவினைக்
குஞ்சின் வாயில் ஊட்டுது!

சின்ன குருவி போலநாம்
சுறுசுறுப்பாய் உழைத்தாலே
நன்மை பெற்று வாழலாம்
நாட்டில் உயர்ந்து சிறக்கலாம்!



# அற்புத வால் நட்சத்திரம்!

ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு 1985 நவம்பரில் மீண்டும் வானில் அற்புதமாகத் தோன்றப் போகும் "ஹாலி வால் நட்சத்திரம்" பற்றிப் புதிய தகவல் ஒன்று தற்போது கிடைத்துள்ளது.

பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ள பாபிலோனிய களிமண் துண்டங்களில் இந்த வால் நட்சத்திரம் கி. பி. 164-ஆம் ஆண்டிலேயே தோன்றியதைக் குறிப்பிடும் எழுத்துக்கள் காணப்படுகின்றன. இப் பிரபல வால் நட்சத்திரம் பற்றி கி.மு. 12-ஆம் ஆண்டுக்கு முன் இது வரை எந்த வரலாறுமே கிடையாது.

பிரிட்டிஷ் மற்றும் ஆஸ்திரிய விஞ்ஞானிகள் இம் மண் துண்டங்களை ஆய்வு செய்ததில், இந்த வால் நட்சத்திரத்தின் இன்னும் தொன்மையான வரலாறு தற்போது தொடங்கியுள்ளது.

இந்த வால் நட்சத்திரத்தின் சுழற்சி வளர்ச்சியை ஆராய்ந்து வரும் வான ஆராய்ச்சியாளர்களுக்கு இப்புது கண்டுபிடிப்பு ஆவணங்கள் உதவக்கூடும் என்று அந்த விஞ்ஞானிகள் "நேச்சர்" என்கிற ஆங்கில இதழில் எழுதியுள்ளனர்.

இந்த வால் நட்சத்திரத்தின் தனிச் சிறப்பு என்ன? ஒவ்வொரு முறை அது மீண்டும் தோன்றும்போதெல்லாம் அது பழைய ஒளியுடன் விளங்குவதேயாகும். வேறு வால் நட்சத்திரத்தில் இந்த மாதிரி ஒளி நீடித்திருப்பதில்லை.

பிரிட்டிஷ் தகவல் நிலையம் இவ்விவரங்களை வெளியிட்டுள்ளது.

## சக்கரமில்லாத இரயில்



ஜெர்மனி நாட்டில் சக்கரமில்லாமலேயே அதிவேகமாகச் செல்லக்கூடிய இரயிலைக் கண்டுபிடித்துள்ளனர். "டிரான்ஸ்ரேபிட்-06" (Transrapid - 06) என்ற இந்த இரயிலின் வேகம் ஒரு மணிக்கு 400 கிலோ மீட்டர்கள். அதோடு இரயிலின் கான்கிரீட் பாதையில் இதனுடைய சக்கரமில்லாத பக்கவாட்டு அமைப்புகள் படியாமல் அதனைத் தொடாமலேயே 15 மி.மீட்டர் மேலே எழும்பியவாறு மிக வேகமாகச் செல்லக்கூடியது. இதற்குக் காரணம், இரயிலின் மின் காந்த சக்தியும், அதன் வடிவ அமைப்பும் தான். கணிப்பி நிலையத்தைப் போல ஓட்டுநரின் அறை அமைந்திருக்கும் இந்த இரயிலின் நீளம் 54 மீட்டர்; எடையோ 120 மெட்ரிக் டன்னாகும். இந்த இரயிலின் என்ஜினும் சத்தமில்லாமல் செயல்படக் கூடிய ஒன்று. விஞ்ஞானச் சாதனையில் மற்றொரு மைல் கல் என்று இதனைப் போற்றுகிறார்கள்.

# சீராக வளரும் சிறுதொழில்கள்

சிறுதொழில் பிரிவு மத்திய மாநில அளவில் மிக முக்கியத்துவத்தைத் தொடர்ந்து பெற்று வருகிறது. இந்தப் பிரிவின் வளர்ச்சி பெரும்பான்மையாக தனியார் முயற்சிமற்றும் துணிவாண்மையைச் சார்ந்திருந்த போதிலும், மாநில அரசு அதன் தொடர்ந்த வளர்ச்சியின் சூழ்நிலைக்கான முயற்சியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இப் பிரிவின் வளர்ச்சி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள், இது முன்னேற்ற அளவில் ஊக்கமளிப்பதாக உள்ளது.

| ஆண்டு | நிரந்தரமாகப் பதிவு செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை | வேலை வாய்ப்பு. |
|---|---|---|
| 31.3.1978 | 18,789 | 2,60,836 |
| 31.3.1983 | 46,378 | 5,30,985 |
| 31.3.1984 | 49,920 | 5,70,002 |
| 31.3.1985 | 60,259 | 7,23,108 |

1978ஆம் ஆண்டு மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டதிலிருந்து எளிய பதிவு முறைகளும் மற்றும் சிறுதொழில் வளர்ச்சியின் முன்னேற்ற வேகத்தைத் துரிதப்படுத்த எடுக்கப்பட்ட சிறப்பு வழிமுறைகளும், சமீப ஆண்டுகளில் நிரந்தரப் பதிவு அலகுகளின் எண்ணிக்கையை அதிக அளவில் உயர்த்தியுள்ளன.

1978ஆம் ஆண்டிலிருந்து அனைத்து இந்திய மற்றும் தமிழ்நாடு அளவிலான தொழில் வளர்ச்சியின் குறியீட்டு எண்கள் கீழேகொடுக்கப்பட்டுள்ளன.

| | இந்தியா | | தமிழ்நாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டு | குறியீட்டு எண் | வளர்ச்சி விகிதம் | குறியீட்டு எண் | வளர்ச்சி விகிதம் |
| 1978 | 148 | 6.8 | 164.1 | 14.7 |
| 1979 | 150 | 1.2 | 172.7 | 5.2 |
| 1980 | 151 | 0.7 | 182.5 | 5.7 |
| 1981 | 165 | 9.3 | 201.7 | 10.5 |
| 1982 | 172 | 4.2 | 213.3 | 5.8 |

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, அனைத்திந்தியாவின் புள்ளி விவரங்களைவிட நிலையாகத் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு வருவதைக் காணலாம்.

மேலும், நாம் தொழில் வளர்ச்சியில் ஒருமுனை வழிமுறையைப் பலப்படுத்தியிருப்பதால், அதன்மூலம் மாவட்டத் தொழில் மையங்கள் தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்துவதில் ஏற்படும் பிரச்னைகளையும் அவைகளைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளையும் வழங்கி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகயில் ஈடுபட்டு வருகின்றது. மேற்கண்ட வழிமுறை சென்ற மே மாத கடைசியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

கடந்த ஓராண்டுக் கால அளவில் 1611 செயல்களில், 906 செயல்களுக்கு குறித்துக் காட்டுகின்ற அளவு வழிமுறைகள் காணப்பட்டுள்ளன. மேலும், இது தவிர, எஞ்சிய செயல்களுக்கு வெகுவிரைவில் தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை அமலாக்குவதற்கான செயல் மாவட்டத் தொழில் மையங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அம்மையங்கள் 1983-84 மற்றும் 1984-85 ஆண்டுகளில், மேற்சொன்ன சுய வேலைவாய்ப்புத் திட்ட அமலாக்கச் செயலில் நன்மதிப்பைப் பெற்று வருகின்றன. இரண்டு ஆண்டுகளில் குறியீடு மற்றும் வளர்ச்சி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | குறியீடு | அலகுகள் | வளர்ச்சித் தொகை இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1983-84 | 17,500 | 21,247 | 3,315.50 |
| 1984-85 | 21,700 | 22,425 | 4,233.20 |

அனைத்திந்திய அளவில், தமிழ்நாட்டின் செயலாக்கம் பாராட்டத்தக்கதாக உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டின் இருபது அம்சத் திட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 10,000 அலகுகளுக்கு எதிராக, 11,700 அலகுகள் முடித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆண்டில் (1985-86), இம்மாநிலத்தில், புதிதாக இயங்கவிருக்கின்ற அதிக எண்ணிக்கையான அலகுகளுக்குத் தரம் மிகுந்த புத்தறிவுப் பயிற்சி அளிக்க முயற்சி எடுக்க இருக்கும் நிலையில், அதன் கீழ் 6,000 புதிய சிறுதொழில் அலகுகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்கள் வாரியான குறியீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர் பக்கம்

# ஆணவம் கூடாது

—பி. வி. கிரி

அந்தக் கிராமத்துக்கு ஒதுக்குப் புறத்தில் ஒரு குட்டை இருந்தது. அதில் நிறைய மீன்கள் இருந்தன. பெரிய மீன்களோடு குட்டி குட்டி மீன்களும் இருந்தன.

கிராமத்துச் சிறுவர்கள் அந்தப் பக்கமாக வரும்போது மீன்களைப் பார்த்து மகிழ்வார்கள். மாடு மேய்க்கும் சிறுவர்களும் மீன்களைப் பிடிக்க முயற்சி செய்வார்கள். சிலர் தூண்டிலோடு கரையில் உட்கார்ந்து கொண்டு மீன் சிக்குமா என்று தவம் கிடப்பார்கள்.

மனிதர்களால் எந்த நேரத்திலும் மீன்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருந்தது.

அந்தக் குட்டையில் பெரிய மீன் ஒன்று இருந்தது. அதுதான் நீண்ட நாட்களாக அந்தக் குட்டையில் வசித்து வருகிறது. குட்டி மீன்களெல்லாம் இடையில் வந்தவை.

ஒரு காலத்தில் மழை நிறைய பெய்ததால், குட்டையில் தண்ணீர் நிறைந்திருந்தது.

ஆனால் இன்று கடுமையான வெயில் காலம். வெப்பத்தின் கடுமையைத் தாங்க முடியாமல் மனிதர்களே ஓடினார்கள். குளத்திலுள்ள தண்ணீரோ கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டு வந்தது. ஆம். குட்டை வற்றிக் கொண்டே வந்தது.

குட்டி மீன்கள் சில வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் இறந்தன. இப்போது பெரிய மீனோடு ஒரு சில சிறிய மீன்களே குட்டையில் இருந்தன.

தண்ணீர் நிறைந்து இருந்து, மீன்களும் துள்ளிக் குதித்தபோது வந்த மனிதர்கள், இப்போது வற்றிவிட்ட குட்டையை ஏறெடுத்துக் கூடப்பார்க்கவில்லை!

குட்டைக்குப் பக்கத்தில் வயல் இருந்தது. வயலுக்குப் பக்கத்தில் வரப்பையொட்டிக் கால்வாய் இருந்தது. அதில் சலசல வெனத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது.

குட்டையிலிருந்து கால்வாய்க்கு ஒரு சிறு வழி இருந்தது. அது எலி வளையாகக் கூட இருக்கலாம். அந்த வழியாகக் குட்டைக்குக் கொஞ்சம் நீர் கசிந்து கொண்டிருந்தது.

குட்டையிலுள்ள பெரியமீன் அதைப் பார்த்ததும் துள்ளிக் குதித்தது.

'இன்னும் கொஞ்சநாள் போனால் குட்டையிலுள்ள தண்ணீரெல்லாம் வற்றிப்போய்விடும். நாமெல்லாம் சாக வேண்டியது தான்' என்று அது நினைத்துக் கொண்டது.

கடைசியில் ஒரே ஒரு சிறிய மீன் மட்டும் மிஞ்சியது. உடனே பெரியமீன் சின்ன மீனைப் பார்த்து, "குட்டையிலுள்ள தண்ணீரெல்லாம் வற்றிவிடும் போலிருக்கிறது. நாம் இங்கேயே இருந்தால் இறக்க வேண்டியது தான்! ஆகவே, அதோ தெரிகிறது பார்! அந்த எலி வலை வழியாகத் தப்பிச் சென்றுவிடு. பாவம்! நீ குழந்தை. ஆதலால் முதலில் நீ தப்பிச்சென்று விடு. பிறகு நான் எப்படியும் 'வந்துவிடுவேன்'' என்றது.

அதற்குச் சிறிய மீன், ''நீ ஒண்ணும் எனக்குப் புத்தி சொல்ல வேண்டாம். எல்லாம் எனக்குத் தெரியும். வேணும்னா நீ தப்பிச்சுப் போ!'' என்றது அலட்சியமாக.

அதற்குப் பெரிய மீன், 'நான் சொல்றதைக் கேள். புத்திசாலித்தனமா தப்பிச்சிக்கிட்டா நல்லா இருக்கலாம். பிறகு உன் இஷ்டம்' என்றது.

சிறிய மீன் கேட்பதாக இல்லை. அது ஆணவமாக இப்படியும் அப்படியுமாக ஆட்டம் போட்டது. அதைப் பார்த்துப் பெரிய மீன் பரிதாபமாகச் சிரித்தது.

மறுநாள் காலை.

குட்டையில் மேலும் தண்ணீர் வற்றிக் கொண்டிருந்தது. வெய்யிலோ 'சுள்'ளென்று தாக்கிக் கொண்டிருந்தது.

சிறிய மீன் இப்படியும் அப்படியும் பார்த்தது. பெரிய மீனைக் காணவில்லை! அதற்கு ஒரே அதிர்ச்சி. அங்கும் இங்கும் ஓடியது. தண்ணீரோ வற்றிக் கொண்டே வந்தது. எலி வளையைப் பார்த்தது. அது மண்ணால் அடைந்து கிடந்தது.

''பெரிய மீன் பேச்சைக் கேட்காமல் ஆணவமாகப் பேசினேன். இப்போ, அழியப் போறேன்'' என்று வருந்தி கடைசியில் அந்தச் சின்ன மீன் வெய்யிலின் தகிப்பைத் தாங்கமாட்டாமல் இறந்தே போனது. பெரிய மீன் என்ன ஆச்சு? அதுதான் தப்பிக் கால்வாய்க்கு ஓடிவிட்டதே!

இந்தக்கதையின் மூலமா, ''பெரியவங்க பேச்சைக் கேக்கணும்; ஆணவம் கொள்ளின் அழிவு தொடரும்!'' என்பதை நாம் தெரிஞ்சிக்கிறோம் இல்லையா?

நன்றி : சென்னை வானொலி



# பள்ளிக்கூடம் திறந்தாச்சு!

—கலைப்பொழிலன்



பள்ளிக் கூடம் திறந்தாச்சு
பாடப் புத்தகம் வந்தாச்சு
சொல்லி வைத்த பைகூட
நல்ல நிறத்தில் தைத்தாச்சு!

காலை விடிந்து எழுந்ததுமே
காலைக் கடனை முடித்திடுநீ!
தோளில் பைதான் தொங்கிடவே
துடிப்பாய்ப் பள்ளி சென்றிடுநீ;

உயர்வு தாழ்வு பாராமல்
ஒன்றாய்க் கூடி ஆடிடுநீ!
அயர்வு கொள்ளா மனத்தோடு
அன்பு கொண்டே பழகிடுநீ!

வாத்தி யாரைப் பார்க்குங்கால்
வணக்கம் சொல்லிப் பணிந்திடுநீ!
ஏத்திப் படிப்பை அறிவுக்கு
ஏற்றம் கொடுக்கத் துடித்திடுநீ!

மாலை வீட்டை அடைந்ததுமே
மகிழ்ச்சி யாக ஆடிடுநீ
நாளை என்று இருக்காமல்
நன்கு பாடம் படித்திடுநீ!

என்றும் நன்மை செய்திடுநீ!
ஏற்றம் பெறவே முயன்றிடுநீ!
குன்று போல உறுதியுடன்
கடமை செய்து சிறந்திடுநீ!



# பாட்டும் நானே பாடுவதும் நானே!

கம்ப்யூட்டர் இயந்திரம்தானே பாடல்களை இயற்றிப் பாடுகிறது;

பிறர் பாடல்களையும் இசைக்கிறது.

நாம் விரும்பும் வண்ணம் பாடல் இயற்றிப் பாடியும் காட்டுகிறது!

பாட்டும் நானே; பாடுவதும் நானே என்கிறது இந்தக் கம்ப்யூட்டர்!

ஜப்பான் நாட்டில் த்ஸுகுபா நகரில் நடக்கும் 'எக்ஸ்போ 85' என்ற அனைத்துலகக் கண்காட்சியில் அமைந்திருக்கும் அமெரிக்க அரங்கில் இந்த அதிசய கம்ப்யூட்டர் இடம் பெற்றிருக்கிறது.

அமெரிக்க அரங்கில்—

மனிதர்களைப் போலவே சிந்திக்கும், பணியாற்றும் ஆற்றல் கொண்ட இயந்திரங்கள் உள்ளன.

ரகசியத் தகவல்கள் அறியும் அமைப்பில் 'ரோபோ' எனப்படும் இயந்திர மனிதன் குரலை அடையாளம் கண்டு கொள்ளும் பொறியும், உருவங்களைப் பாகுபடுத்தி அறிந்து கொள்ளும் பொறியும் உள்ளன.

கண்காட்சியில் உள்ள இன்னொரு கம்ப்யூட்டர் நாம் அணையிடும் பாடல்களைப் பாடுகிறது. இதனை உருவாக்கியவர் லெஜரன் பில்லர் என்னும் விஞ்ஞானி ஆவார்.

மக்கள் விரும்பும் மெட்டில் சில நொடிகளில் கம்ப்யூட்டர் பாடல் இயற்றுகிறது.



## கண்ணிமைக்கும் நேரம்

மனிதன் ஆறு வினாடிகளுக்கு ஒரு முறை இமைக்கிறான் என்றும் அவனது வாழ்நாளில் 250 மில்லியன் தடவைகள் இமைக்கிறான் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

சோமுவின் கதையோவியங்கள் அனைத்தும் கவினுறத் திகழும் இந்நூல் சிறுகதையுலகில் சிறப்புறும் என்பது உறுதி.

**- இந்திரன்.**

## 14000 போர்களுக்குப் பின்னர்

ஆசிரியர்: யூ.காஸ்வெவ்,
வெளியிட்டோர்: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098,
பக்கம்.324 விலை ரூ.9.

ஆசிரியர் மாஸ்கோ, பெல்கிரேட், நைரோபி, பாரிஸ் மற்றும் பல இடங்களில் நடைபெற்ற மாறுபட்ட பல சர்வதேச மாநாடுகளில் பங்கு பெறும் வாய்ப்புப் பெற்றவர்.

லெனின் வகுத்த வழி துவங்கி போர் நெருப்பைக் கொழுந்து விட்டெரியச் செய்யும் அம்சங்களை அகற்றுவது பற்றிச் சொல்லி, வரலாற்றுப் புகழ் மிக்க ஹெல்சிங்கி மாநாடு, பெல்கிரேட் மாநாடுகளைத்தொட்டு, அனைத்து நாடுகளின் நலன்களும் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டுமென்பதைக் கூறி, ஜனநாயகத்தின் உண்மையான பாதுகாவல்களைப் பற்றித் தெரிவித்து போலிப் பாதுகாவலர்களின் முகமூடியைக் கிழித்து, இளைய தலைமுறையினரின் இதயங்களையும் ஆன்மாக்களையும் வெல்லுவதற்கான வழிகளையும் விவரித்து இருக்கிறார்.

வேலை இல்லாத் திண்டாட்டம் முதலாளித்துவ நாடுகளிடையே தான் கடுமையாக இருக்கிறது என்பது வியப்பாக இருக்கிறது.

அமெரிக்க டி.வி, பத்திரிகைகள் அந்நாட்டுக் குழந்தைகளை எத்தகைய சீரழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றன என்பதை அறியும்போது அதிர்வுறுகிறோம்.

மனித வரலாற்றில் 14000க்கு மேற்பட்ட சிறிய, பெரிய போர்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 4000 000 000 மக்கள் பலியாகி இருக்கிறார்கள் என்பதை அறிந்து திடுக்கிடுகிறோம்.

உண்மை ஆதாரங்கள் புள்ளி விவரங்களோடு படிக்க ஆர்வமூட்டும் வண்ணம் மிகக் கவனமாக எழுதப்பட்டுள்ளது இந்நூல் மனிதகுல உயர்வுக்கான சிந்தனையோடு எழுதப்பட்டதாகும்.

**அ. மருதவிநாயகம்.**

## எங்க டீச்சர் ரொம்ப நல்ல டீச்சர்

ஆசிரியர் : வேலை வாணன்,
வேளியீடு : அமிழ்தம் பதிப்பகம்,
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி.நகர்
வேலூர்-632001.
விலை ரூ.6.00 பக்கம் 80

ஒவ்வொரு சிறு கதையின் முடிவிலும் அக்கதையின் கருவை விளக்கும் செய்யுளைக் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

சிறு குழந்தைகளுக்கு எளிதில் புரியும் இனிமையான நடை.

இதில் வரும்பாடல்கள் அனைத்தும் பள்ளிப் பாடப் புத்தகங்களில் இருப்பதால் குழந்தைகள் அப்பாடல்களை எளிதில் புரிந்து கொள்ள இக்கதைகள் பெரிதும் உதவும்.

'குருடர் இல்லத்து வாழை', 'சுண்டலும் கொழுக்கட்டையும்', 'அடை மழையில் ஒரு குடிசை' நெஞ்சைத் தொடுகின்றன.

குழந்தைகள் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

## நான் கண்ட அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி வரலாறு

ஆசிரியர் : எஸ்.வி.லிங்கம்,
வெளியீடு : அமிர்தலிங்கசாமி சந்நிதி தெரு, வேலூர் வ.ஆ.
விலை ரூ.7.00 பக்கம் 101

ஆசிரியர் திராவிட நாடு இதழில் எழுதிய பதினோரு கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

அழகிரிசாமியின் வரலாற்றுச் சுருக்கம், கலைவாணர் அவர்களின் நன்கொடை விவரம். அழகிரிசாமியைப் பற்றித் தலைவர்கள் கூறியவை.

..அஞ்சா நெஞ்சன், அதிர் இடி
போன்றவன், பேச்சொவ்
வொன்றும், பெருங்காட்டு
வெள்ளம், கூட்டத்துப் பேச்சு
கோடை மாரி...
..எனக்கொரு மனக் குறை அழ
கிரி தனக்கொரு தம்பிடி
சேர்த்தானிலையே...

என்று அழகிரியின் தன்னலங் கருதாத் தன்மைக்குப் புகழ் மாலை சூட்டி மகிழ்கிறார் பாவேந்தர்.

..சீர்திருத்தச் செம்மல்,
சொற்செல்வன்
சோர்வற்ற உழைப்பாளி,
தன்னலம் மறந்து தன் நாட்டு
பணியாற்றிய பண்புடையோர் என்று புகழ்கிறார் பேரறிஞர் அண்ணா.

கைம்மாறு கருதாது கடமையைச் செய்த கர்ம வீரர் அழகிரிசாமியைப் பற்றி மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவும் நூல் இது.

**— விநாயகம்.**

## காணிக்கை

ஆசிரியர்: ஸ்ரீமகாலட்சுமிதாசன்,
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்,
15, முத்துப்பிள்ளைத் தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-632001
விலை: ரூ.6 பக்கம்: 80

குழந்தைகளை நல்வழிப்படுத்தும் பதினாறு சிறுகதைகள் இத்தொகுப்பில் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நீதியைப் போதிக்கின்றது. அன்பு, அறிவு, பண்பு, படிப்பு, நேர்மை, ஒழுக்கம் முதலான கருத்துக்கள் கதைகளில் பொதிந்துள்ளன. மாணவ மணிகள் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய இனிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

## அதிர்ஷ்டமாக வாழ '

ஆசிரியர்: டாக்டர் வி.ஆர். தியாக மூர்த்தி,
வெளியீடு: மதி பதிப்பகம்,
38-40, கண்ணகி ரோடு,
பூம்புகார், கொளத்தூர்,
அஞ்சல், சென்னை-600099.
விலை: ரூ.10 பக்கம்: 64

அதிர்ஷ்டமாக வாழ வழி சொன்னால் யாருக்குத்தான் ஆசை வராது? இந்நூல் அதற்கு வழி வகுக்கிறது. அதிர்ஷ்டமான பெயர், எண்கள் என்னென்ன? துரதிர்ஷ்டமான பெயர்கள் எவையெவை என்பதை ஆசிரியர் ஆய்ந்து எழுதியுள்ளார்.

பெயர்-எண்-பலன், அழைக்கக் கூடாத- சோதனைமிகுந்த துரதிருடப் பெயர்கள் என்னும்அத்தியாயங்களில் பல உண்மைகளைத் தெரிந்துகொள்கிறோம்.

**பி. வி. ஜி.**

## "ட்ரெக்கிங்" சுற்றுலா வழி [illegible] பயணங்கள்

சர்வதேச இளைஞர் ஆண்டையொட்டி, இயற்கை யெழில் நிறைந்த மலைப்பகுதிகளிலும் பிற இடங்களிலும், "ட்ரெக்கிங்" நிகழ்ச்சிகளை சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்து வருகிறது.

இயற்கையின் அதிசயங்களைக் காணவும், தீரம் நிறைந்த அனுபவங்களைப் பெறவும் இளம் உள்ளம் படைத்த அனைவர்க்கும் இந்தப் பயணங்கள் பயன்படும். ஆங்காங்கே உள்ள பள்ளிக் கூடங்கள், இப்பயணங்களில் பங்கு பெறும் இளைஞர்களுக்கு இடவசதி செய்து தரும்; மற்றபடி முகாமில் வசதி, முதலுதவி, உணவு தயாரித்தல் முதலிய வேலைகளில் இக்திப் பயணங்களை வெற்றிகரமாக நடத்த உழைப்பவர்களுக்கு பயிற்சி தரப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வனத்துறை ஆங்காங்கே அதிசயமான மலை வழித் தடங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. தாவர, விலங்கியல உயிரினங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளும் வகையிலும் இயற்கை வளம் பேணுவது பற்றியும், ட்ரெக்கிங் போகும் வழியருகே யெலலாம் புதிய மரங்கள் நடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு ட்ரெக்கிங் குழுவில் சுமார் 50 பேர் இருப்பார்கள். சாதாரணமாக ஒரு பயணம் ஏழு நாள் பிடிக்கும்.

உதகையிலும், கொடைக்கானலிலும், கொல்லிமலையிலும் முண்டந்துறைப் பகுதியிலும், மணிமுத்தாறு பகுதியிலும், ஏலகிரியிலும், ஆனைமலையிலும், அமிர்தி பகுதியிலும் வழித் தடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஆர்வம் கொண்ட அனைவரும் ட்ரெக்கிங் டைரக்டர், சுற்றுலாத் துறை, புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009 அவர்களோடு தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| மின்சாரம் மற்றும் மின்னணுவியல் | ... 600 |
| இரசாயனம், மருந்தியல் மற்றும் பிளாஸ்டிக்ஸ் | ... 400 |
| மோட்டார் துணைக்கருவிகள் | ... 600 |
| பொறியியல் | ...1400 |
| இதர வகைகள் | ...3000 |

நாம் சில பகுதிகளை நவீனமாக்க முயற்சி எடுத்துக்கொண்டுள்ளோம். இது குறித்து இந்திய அரசின் தொழில் வளர்ச்சித் துறையால் அமலாக்கப்பட்டு திட்டக் குழுவால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நீரிறைக்கும் பம்புகளுக்கான சில முன்மாதிரி செயல்முறை வளர்ச்சி மையம் ரூபாய் 160 லட்சம் செலவில் கோயம்புத்தூரில் அமைக்கும் திட்டத்தைக் குறிப்பிடலாம்.



ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் மூன்றாவது நாடுகளின் உதவி சம்பந்தப்பட்ட பிரிவில் கீழ்கண்ட இரண்டு திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

ரூ. 520 இலட்சம் செலவில் புதிய ஆட்டோ பாகங்களை வடிவமைத்து உற்பத்தி செய்து மற்றும் பயன்படுத்தப்பட்டு வரும் பாகங்களின் தன்மையை உயர்த்துவதற்கும், சென்னையிலோ அல்லது அதன் அருகாமையிலோ ஆட்டோ பாகங்கள் வளர்ச்சி மையம் அமைத்தல்—

ரூபாய் 660.55 இலட்சம் செலவில் சென்னையில் மின்னணுவியல் வளர்ச்சி நிலையம் ஏற்படுத்துதல்.

கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும், கிராமத் தொழில் வளர்ச்சியின் தனித்துவத்தை மேம்படுத்தச் செய்யவும், தொழில் கூட்டுறவுப் பிரிவு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தகைய கூட்டுறவு அமைப்புகள், 1978 மார்ச்சுத் திங்களில் 297 ஆக இருந்தது, 1985 மார்ச்சுத் திங்களில் 723 ஆக எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது. அவைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை 1977-78ஆம் ஆண்டில் முறையே ரூ.15.09 மற்றும் 17.65 கோடிகளாக இருந்து முறையே, ரூ.79.93 கோடி மற்றும் ரூ.88.34 கோடியாக 1984-85ஆம் ஆண்டில் உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு விற்பனை ரூ.100 கோடி அளவினை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இயங்குகின்ற கூட்டுறவு சொசைட்டிகளில், ரூ.1 கோடி செலவில் வாணியம்பாடி திண்டுக்கல், பெரம்பூர் மற்றும் இராணிப் பேட்டையில் அமையப்பெற்றுள்ள நான்கு பொது தோல் முடிவாக்கப்பணி சொசைடிகள் குறிப்பிடத்தக்கனவாகும். அவைகள், குறைந்த விலையில் தேவைப்படும் பொருட்களை வழங்கி, சிறிய தோல் பதனிடுவோருக்கான வருமானத்தை உயர்த்துகின்ற செயலில் ஈடுபட்டுள்ளன.

நீலகிரியில் சிறு தேயிலைப் பயிரிடுவோரின் வாழ்வில் முதன்மையான வளம் சேர்க்கும் தேயிலைக் கூட்டுறவுக் கழகங்கள் அதிக பயனுள்ளவையாக இருக்கின்றன என்பது நிரூபணமாகியுள்ளது. அக் கூட்டுறவுக் கழகங்களில் உற்பத்தி மற்றும் விற்பனை 1977-78ஆம் ஆண்டு முறையே 787 இலட்சம் மற்றும் 729.88 இலட்சத்திலிருந்து, முறையே ரூ. 1749.91 மற்றும் ரூ. 1989.53 இலட்சங்களுக்கு 1984-85ஆம் ஆண்டில் உயர்ந்துள்ளது.

இந்த ஆண்டில்-குறிப்பாக மகளிர் பயன் பெறுவதற்காக, மின்னணுவியல் வளர்ச்சியை ஏற்படுத்துவது போன்ற புதிய துறையில் நம்மை ஈடுபடுத்த இருக்கின்றோம். மின்னணுவியல் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு மூலப்பொருட்கள் வங்கியை (Raw Material Bank) ஏற்படுத்தவும் நாம் முடிவு செய்துள்ளோம்.

**[31—5—85 அன்று தலைமைச் செயலகத்தில் அரசு தலைமைச் செயலர் திரு டி. வி. அந்தோணி இ.ஆ.ப., தொழில்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு வி. செல்வராஜ், தொழில்துறை இயக்குநர் திரு. டி. சி சவுகான் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல்கள்].**






## எம்.ஜி.ஆர். என் இதயக் கனி.

**தொகுப்பாசிரியர்: ஆர்.சீனிவாச மூர்த்தி.**
**வெளியீடு: சத்தியத்தாய் பதிப்பகம், 48, டி.பி.கோயில் தெரு, சென்னை-600005**
**விலை: ரூ.10.** பக்கம்:62

பொன்மனச்செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் சூட்டிய புகழ் மாலைகளின் அழகிய தொகுப்பே இந்நூல்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் குண நலன்கள், சிறப்பியல்புகள், பண்புகள் முதலான தன்மைகளை 1955ஆம் ஆண்டு முதற்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்து வந்தார்கள். அவ்வாறு அவர் கண்டு உணர்ந்த உரை மணிகளே - உணர்ச்சிக் குவியல்களே - உண்மை வரிகளே இந் நூலின் முழு வடிவம்.

"எம்.ஜி.ஆருக்கும், எனக்கும் இருக்கிற தொடர்பை நாடு அறியும். எம்.ஜி.ஆரைப் பாராட்டுவது என்னை நானே பாராட்டிக் கொள்வதாகக் கருதப்படும். உண்மைதானே! எம்.ஜி.ஆர். என்றால் அவர் தாங்கியுள்ள கொள்கை எது என்பதை நாடு அறியும். முல்லைக்கு மணம் உண்டு என்பதைக் கூறவா வேண்டும்? இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலர் எதிர் பார்த்தனர். அது என் மடியில் வந்து விழுந்தது. என் இதயத்தில் எடுத்து வைத்துக் கொண்டேன்!"

— என்று பேரறிஞர் அண்ணா அவர்களே மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி, தம் இதயத்திலிருந்து எழும் உணர்ச்சிகளை எழுத்து வடிவமாகக் காட்டியிருக்கிறார்.

நூல் முழுவதும் புரட்சித் தலைவரின் புகழ்க்கொடி பட்டொளி வீசிப் பறக்கின்றது; பல்வேறு கோணங்களில் வருணிக்கும் அறிஞர் அண்ணாவின் வைர வரிகள் மின்னித் தெறிக்கின்றன.

அது மட்டுமா? நாம் இதுவரை பார்த்திராத அற்புதமான படங்கள்-அறிஞர் அண்ணாவும் டாக்டர் எம்.ஜி.ஆரும் கண் முன்னே அல்லவா நிற்கிறார்கள்.

இந்நூலுக்குப் பாராட்டுரை நல்கிய மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கூறியதுபோல, "பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் அரும்பெரும் சிறப்புக்களைப் பற்றித் தெளிவாக அறியாதவர்கள் அறிந்து கொள்ளவும், தெரியாதவர்கள் தெரிந்து கொள்ளவும், புரியாதவர்கள் புரிந்து கொள்ளவும், உணராதவர்கள் உணர்ந்து கொள்ளவும் இந்தநூல் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்" என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம்.

அழகிய முகப்பு-அருமையான அச்சமைப்பு-அரியதொரு உரைத் தொகுப்பு. இந்நூலை உருவாக்கிய திரு ஆர்.சீனிவாசமூர்த்தியைப் பாராட்ட வேண்டும்.

**பி. வி. கிரி.**

## ஒரு மனிதன் தெய்வமாகிறான்

**ஆசிரியர்: தாமரைக் கண்ணன்,**
**வெளியீடு: பராசக்தி பதிப்பகம், 31, சீனிவாசப் பெருமாள் கோயில் தெரு, சென்னை-600 014.**
**விலை ரூ. 12 பக்கம் 147**

ஒரு மனிதன் தெய்வமாகிறான் என்பது நூலின் தலைப்பு என்றாலும், இரு மனிதர்கள் தெய்வங்களாகிய வரலாறு இந் நூலில் சொல்லப்பட்டிருக்கிறது.

அண்ணல் காந்தியடிகளின் உயர்ந்த இல்வாழ்க்கை, பிறரிடம் அன்பு செலுத்தும் பாங்கு ஆகியவற்றையும், சித்தார்த்தரின் துறவு உள்ளம் ஆகியவற்றையும் திருக்குறள் கொள்கைகளை அடித்தளமாக வைத்து இந்நூலில் விரிவாக எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

நூலின் கருப்பொருள், ஏற்கெனவே அனைவராலும் அறிந்து கொள்ளப்பட்டதுதான் என்றாலும், அதனை எடுத்துச் சொல்லும் வகையிலே புதுமை மிளிர்கிறது. சுவை ததும்புகிறது.

அண்ணல் காந்தியின் அன்பு நெறி படிப்போரை வியக்க வைக்கிறது. புத்தராக மாறிய சித்தார்த்தரின் வாழ்வில் மூன்று கட்டங்களில் இடம் பெற்ற வைகாசி நிறை நிலவு குறித்துத் தெரிந்து கொள்ளும்போது, படிப்போர் நெஞ்சில் புதுமை உணர்வு மின்னுகிறது. எளிய ஆரவாரமில்லாத நடை இந் நூலின் சிறப்பம்சமாகும்.

**—தமிழ்ப்பித்தன்**

## நமக்கென்றொரு பூமி

ஆசிரியர் மாத்தளை சோமு.
வெளியீட்டோர்: மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1.
பக்கம்:127 விலை ரூ.8.75

சமுதாயத்தில் மேல் மட்டத்திலிருப்பாரைப் பற்றிய கதைகளும் திரைப்படங்களும் வருவது சகஜமாகிவிட்ட இந்நாளில், அடிமட்ட மக்கள் படும் அவதிகளையே கருப்பொருளாக்கிச் சிறு கதைகளை உருவாக்கி வெற்றி கண்டிருக்கிறார் நூலாசிரியர். பன்னிரண்டு சிறுகதைகள் இந் நூலில் உள்ளன. அத்தனையும் அவரது தித்திக்கும் எளிய-இனிய நடையிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையிலிருந்தவர் நூலாசிரியர் என்பதை - மலையகத்து மண்வாசமிக்க சில கதைகள் நமக்குத் தெரிவிக்கின்றன. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய இழிநிலைகளின் படப்பிடிப்பாகச் சில கதைகள் விளங்குகின்றன.

'நாய்கள் மனிதராவதில்லை' என இதில் உள்ள ஒரு சிறுகதை மிக அற்புதமானது. மனிதரால், உயர்வு தாழ்வு பேதம் நாய்கள் வரை கொண்டு திணிக்கப்பட்டிருப்பதைக் கண்டிக்கிறது இக் கதை. ஆனாலும்-வேறு ஏதோ தொகுப்பில் இதனைப் படித்ததாக நினைவு. தவிர்த்திருக்கலாம்.

கதை என்றாலே கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதுதான் என்றாகிவிட்ட இந்நாளில் - அந்த வளையத்திற்குள் சிக்காமல் வெளியே நின்று வாழப் போராடும் மக்களைக் கருவாகக் கொண்ட கதைகளை உருவாக்கியிருக்கும் திரு. மாத்தளை

# புதிய மாவட்டங்கள்

நிர்வாக வசதிக்காகத் தமிழக அரசு பெரிய மாவட்டங்களைப்படிப்படியாக இரண்டாகப் பிரித்து வருகின்றது. இதற்கு முன் இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாக்கப் பட்டு நிர்வாகப் பணிகள் தொடக்கம் ஆகியுள்ளன.

நிபுணர் குழுவின் முடிவுப்படி 1985 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்நாள் (செப்டம்பர் 15) அன்று மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிய அண்ணா மாவட்டம் மலர உள்ளது. புதிய மாவட்டத்தின் தலைநகரமாக திண்டுக்கல் செயல்படும்.

பழனி, கொடைக்கானல் ரெவின்யூ டிவிஷன்களில் இரண்டு, புதிய அண்ணா மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும்.

மதுரை மாவட்டத்தில் இப்போதுள்ள நிலக்கோட்டை வட்டம், இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிதாக வாடிப்பட்டி வட்டம் ஏற்படுத்தப்படும். நிலக்கோட்டை வட்டம் அண்ணா மாவட்டத்திலும், வாடிப்பட்டி வட்டம் மதுரை மாவட்டத்திலும் இயங்கும்.

இரண்டு புதிய மாவட்டங்கள் அமைக்கப் பட்ட பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கப் போகும் ரெவின்யூ டிவின்ஷகளும் அவற்றில் அடங்கும் மாவட்டங்களும் வருமாறு:

**அண்ணா மாவட்டம்:**

திண்டுக்கல் ரெவின்யூ டிவிஷன் (திண்டுக்கல், நத்தம், நிலக்கோட்டை வட்டங்கள்)
பழனி ரெவின்யூ டிவிஷன் (பழனி, வேடசந்தூர் வட்டங்கள்)
கொடைக்கானல் ரெவின்யூ டிவிஷன் (கொடைக்கானல் வட்டம்.)

**மதுரை மாவட்டம்:**

மதுரை ரெவின்யூ டிவிஷன் (மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், வாடிப்பட்டி ஆகிய வட்டங்கள்).

உசிலம்பட்டி ரெவின்யூ டிவிஷன் (உசிலம்பட்டி, திருமங்கலம் வட்டங்கள்)

பெரிய குளம் ரெவின்யூ டிவிஷன் (பெரிய குளம், உத்தமபாளையம் வட்டங்கள்)

புதிதாக அமைக்கப்படும் அண்ணா மாவட்டத்திற்குத் தனி அலுவலராக திரு. எம். மாதவன் நம்பியார் இ.ஆ.ப.செயல்பட்டு வருகிறார்.



உமா ராணி



ஆர். ஜகதீஸ்

முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவ.மாணவியர்களில் ஐவர் மாணவர்கள். ஐவர் மாணவியர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்த ஆண்டு தேர்வு முடிவின் படி அறுபது சதவிகிதம், அதற்கு மேல் பெற்றவர்களின் எண்ணிக்கை 59,819 என்பதாகும்.

பாடங்கள வாரியாக நூற்றுக்கு நூறு மதிப்பெண் எடுத்தவர்களின் விவரம் வருமாறு:

கணிதம் 678 பேர், வணிகவியல் 133 பேர், அக்கவுண்டன்சி 93 பேர், வேதியல் 40 பேர், இயற்பியல் ஒருவர்.

மொத்தம் தேர்வில் கலந்து கொண்டவர்களில் (1,81,486) பிரைவேட்டாக எழுதியவர்கள் 42,670 பேர் ஆகும். பள்ளிகளின் மூலம் எழுதியவர்கள் 1,38,816 பேர்.

பள்ளிகளில் படித்தவர்களில் பொதுக்கல்விப் பிரிவில் 1,11,323 பேரும், தொழில் கல்விப் பிரிவில் 27,493 பேரும் படித்துள்ளனர்.

தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களில் (ஆண்கள்) 66.1 சதவிகித மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதே நேரத்தில் தேர்வு எழுதிய மாணவியர்களில் 75.7 சதவிகிதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்வு எழுதியவர்களில் மாணவர்களைக் காட்டிலும் மாணவியர்கள் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாநிலத்திலேயே முதலாவதாகத்தேறியஎம்.டி.யதீந்தர் எந்திரப் பொறியியல் (மெக்கானிகல் எஞ்சினியரிங்) துறையில் படித்து முன்னேற இருப்பதாகத் தெரிவித்தார். மூன்றாவது வகுப்பிலிருந்து அவ்வப்போது தொடர்ந்து பள்ளியில் முதலாவது இடத்தைப் பெற்று வருவதாகவும், தன்னுடைய முன்னேற்றத்திற்குப் பெற்றோரும் பள்ளி ஆசிரியர்களும் காரணமென்றும் தெரிவித்தார்.

இரண்டாவதாகத் தேர்ச்சி பெற்ற தீபா, ஆயிரம் விளக்கு குட்ஷெப்பர்டு பள்ளியில் படித்தவர். தான் கம்ப்யூட்டர் சயன்ஸ் அல்லது பொறியியல் துறையில் தொடர்ந்து படிக்க விரும்புவதாகக்கூறினார். தன்னுடைய இந்த உயரிய தகுதிக்குப் பள்ளி ஆசிரியர்கள் ஒருபுறம் மூல காரணமாக இருந்தாலும், பெற்றோரின் உதவியை மறக்க முடியாதென்றும் அவர் கூறினார்.



# மாந்தோப்பில் வீட்டு வசதி வாரியவிழா!

சென்னை அசோக் நகரின் உள்ள மாந்தோப்புப் பகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 302 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது.

அண்மையில் (27-5-85) இந்தக் குடியிருப்பை மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு. ந. நல்லுசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு மராட்டிய மாநில வீட்டுவசதித் துறை அமைச்சர் டாக்டர் வி. சுப்பிரமணியன் அவர்கள் திறந்து வைத்தார்.

சிறப்புற நடைபெற்ற இந்த விழாத் தொடக்கத்தில் தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு வி. ஆர். மணிமாறன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இத்திட்டம் குறித்த விவர அறிக்கையை வீட்டுவசதி வாரியத் தலைமைப் பொறியாளர் திரு எல். ஆர். சாஸ்திரி படித்தார்.

அதைத் தொடர்ந்து,தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கே. சவுரிராஜன் சொற்பொழிவாற்றினார்.

விழாத் தலைமையேற்று உரையாற்றுகையில், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு ந. நல்லுசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:

"வீடற்றோருக்கு வீடுகட்டி உதவும் இந்த உன்னதத் திட்டத்திற்கென 1984-85 ஆம் ஆண்டில் இத்துறை மூலம் 40 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 85-86ஆம் ஆண்டில் 55 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருக்கிறோம்.

"வரும் ஆண்டில் நலிவுற்ற பிரிவினருக்கென 2,488 வீடுகளும், உயர்வருமானம் உள்ளவர்களுக்காக 3,846 வீடுகளும் கட்டித்தரவிருக்கிறோம்."

-இவ்வாறு மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைத் திறந்து வைத்து மாண்புமிகு மராட்டிய மாநில வீட்டு வசதித் துறை அமைச்சர் டாக்டர் வி. சுப்பிரமணியன் பேசியதாவது:

"தமிழ்நாட்டில் குடிசைப் பகுதி மாற்று வாரியமும் வீட்டு வசதி வாரியமும் ஆற்றிவரும் அரிய பணிகளுக்காக நான் எங்கள் அரசின் சார்பில் மனந்திறந்து பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

"இவ்வகையில் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு வழிகாட்டியாக உள்ளது.

"இந்தியாவில் உள்ள யாரும் எந்த மாநிலத்திலும் சென்று குடியேற உரிமை உண்டு என்று நமது பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கூறியிருக்கையில் பம்பாயிலிருந்து தமிழர்களை வெளியேற்ற வேண்டும் என்று 'சிவ சேனா' இயக்கம் கூறியிருப்பது வருந்தத்தக்கது. பம்பாயில் தமிழர்கள் குடியேறுவதை யாராலும் மறுக்க முடியாது. எங்கு இருந்தாலும் நாமெல்லாம் இந்தியர்களே!"

—இவ்வாறு, மாண்புமிகு மராட்டிய வீட்டுவசதித்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்தார்.

விழா முடிவில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமேற்பார்வைப் பொறியாளர் திரு வி. செல்வராஜ் நன்றியுரையாற்றினார்.

—இல. இராசேந்திரன்





# முதலிடம் பெற்ற மாணவர்கள்

எம். டி. யதீந்தர்

**பி**ளஸ் 2 தேர்வு முடிவுகளில் சென்னையைச் சேர்ந்த எம்.டி. யதீந்தர் (17) என்கிற மாணவர் 1150 மதிப்பெண் (95.8 சதவிகிதம்) பெற்று மாநிலத்திலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். அதைத் தொடர்ந்து சென்னையைச் சேர்ந்த தீபா ஹரிஹரன் என்கிற மாணவி 1142 மதிப்பெண் பெற்று இரண்டாவது இடத்தை வகிக்கிறார்.

முதல் பத்து இடத்தை வகிக்கும் மாணவியர்களில் ஆறு பேர் சென்னையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்-மாணவியர் பெற்ற மதிப்பெண் விவரம் வருமாறு:



தீபா ஹரிஹரன்



ஜி.எஸ்.பிரவீன்

1. யதீந்தர் எம்.டி. 1150 மதிப்பெண், டான்பாஸ்கோ மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, எழும்பூர், சென்னை.

2. தீபா ஹரிஹரன்-1142 குட்ஷெப்பர்ட் மேல்நிலைப் பள்ளி, ஆயிரம்விளக்கு, சென்னை.

3. அழகுசுந்தரம் 1141 விகாஸா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை.

4. முருகன், எஸ்-1140 கார்மல் மேல்நிலைப்பள்ளி, கோட்டார், நாகர்கோயில்.

5. சுஜாதா ஆர்-1139 பிஎஸ்ஜி ஆர்கே பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பீளமேடு.

6. பிரவீன் ஜி.எஸ். - 1138 டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, எழும்பூர், சென்னை.

7. ரவி, ஆர்-1136 ஹோலிகிராஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம் மற்றும் ரேவதி சேஷாத்திரி 1136, ரோஸரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சாந்தோம், சென்னை.

8. ஜெயஸ்ரீ, ஜி.1134 வெள்ளா ளர்மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு.

9. உமா முரளி-1133 ரோஸ மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளி, சாந்தோம், சென்னை.

10. ஜெகதீஷ், ஆர்-1132 கி ஆதர்ணா மெட்ரிகுலேஷன் மே நிலைப்பள்ளி, ராயப்பேட்டை சென்னை.



ரேவதி சேஷாத்ரி

# படமும் செய்தியும்



மாண்புமிகு மத்திய உருக்கு மற்றும் சுரங்க அமைச்சர் திரு. வசந்த் சாத்தே அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை 9-6-85 அன்று அவரது இல்லத்தில் சந்தித்தார்.



மாண்புமிகு மத்திய கிராம வளர்ச்சித் துறை இணை அமைச்சர் திரு. சாந்துலால் சந்திரகார் அவர்கள் 10-6-85 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்களைச் சந்தித்து, கிராம வளர்ச்சிப் பணிகள் பற்றி விவாதித்தார்.




7-6-85 அன்று சென்னை தேனாம்பேட்டை மருத்துவ நலத்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் ஓமியோபதி புற நோயாளர் பிரிவு களைத் திறந்து வைத்தார். மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.



மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்களை, 5.6.85 அன்று சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு வாட்டர்மன் சந்தித்தார்.



கோவை அரசு வெள்ளிவிழாப் பொருட்காட்சி நிறைவு விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலை யத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., பரிசு பெற்றார்.



கேளம்பாக்கம்-கோவளம் பகுதிகளில் உள்ள இலங்கை அகதிகளுக்கு வேட்டி-சட்டைகளை மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்கள் 7.6.85 அன்று வழங்கினார்.




"தொழில்கள் மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலைகளுக்கு மாசு ஏற்படுகிறது. இத்தகைய மாசு உண்டாக்கும் வட்டாரம் எண்ணிக்கை அளவில் மிகக் குறைந்ததுதான், இருந்த போதிலும் இந்த வட்டாரத்தின் சக்தி பலம் வாய்ந்தது'' என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள் குறிப்பிட்டார். சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு மாசு ஏற்படுத்தும் எந்தச் செயலுக்கும் தமிழக அரசு தாட்சண்யமோ, தயவோ, சலுகையோ காட்டாது என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

இத்தகைய துறைகள் மூலம் ஏற்படும் மாசு 95 சதவிகித மக்களைப் பாதிக்கிறது. பாதிப்புக்கு ஆளாக மாட்டோம். எத்தகைய மாசும் ஏற்பட விட மாட்டோம் என்னும் உணர்வும், சுற்றுப்புறச் சூழ்நிலை சீர்கெடாமல் பாதுகாப்போம் என்கிற எண்ணமும் மக்களிடையே ஏற்பட வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார்.

உலகச் சுற்றுப்புறச் சூழல் தினத்தை ஒட்டி, சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பை வலியுறுத்தி, சென்னையில் 5.6.85 அன்று இரண்டு நாள் கருத்தரங்கை மாண்புமிகு அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இயற்கை வளங்களின் அழிவு, மாசு கலந்த சுற்றுப்புறச் சூழ்நிலை போன்ற எல்லாப் பிரச்னைகளுக்கும் மூல, முக்கிய காரணம் மக்கள் தொகைப் பெருக்கம்தான் என்றும் குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் மக்கள் தொகைப் பெருக்கத்தில் கட்டுப்பாடு இல்லாவிட்டால் என்ன நடவடிக்கை மேற்கொண்டாலும் பயனளிக்காது என்றார்.

மேற்கு ஜெர்மன் போன்ற நாடுகளில் ஒரு தொழில் அமைக்கும் போது அதற்கு ஆகும் செலவைப் போன்று ஏறத்தாழ ஒன்றரை மடங்கு அதிகமாக மாசுகட்டுப்பாட்டிற்காகத் தொழில் முனைவோர் செலவிடுகிறார்கள். ஆனால் இங்கே ஐந்து சதவிகித அளவிற்குக் கூட செலவிட முன்வருவதில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சுந்தரேசன் உலகச் சுற்றுச் சூழல் தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசுகையில், சுற்றுப்புறச் சூழ்நிலை மாசற்ற தன்மையில் பாதுகாக்கப்பட, பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

தொழிற்சாலை நிறைந்த இடத்துக்கு மத்தியில் குடியிருப்புகளோ அல்லது மக்கள் வாழும் பகுதியில் தொழிற்சாலையோ இல்லாமல் ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்தியாக வேண்டும் என்றும் வலியுறுத்திய துணைவேந்தர், சென்னை நகரத்தைச் சுற்றிப் பசுமையாக்க அனைவரும் முயல வேண்டும் என்றார்.

சுற்றுப்புறச் சூழல் மாசு கட்டுப்பாட்டுத் துறை ஆணையர், மற்றும் செயலாளரான திரு என். கிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப. தலைமை வகித்துப் பேசுகையில், சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கப் பொது மக்களின் ஒத்துழைப்பை ஈர்க்கும் வகையில் சென்னைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ள பணியைப் பாராட்டினார்.



## சென்னையில் சுற்றுப்புறச் சூழல் கருத்தரங்கு



## பார்த்தோம் படித்தோம்

1.5.85 தமிழரசு இதழ் கண்டேன். 'அறிவியல் சாளரம்' படித்தபோது என் மனம் பெரும் மகிழ்ச்சி அடைந்தது. ஏனெனில் 'கன்வர் கம்பர்' இந்தியர் என்பதால்' மேலும் தேரெழுந்தூரில் 'கம்பர் புகழ் பாடும் கலைக் கோட்டம்'பற்றிய செய்திகளைப் படித்தேன். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு பல இன்னல்களுக்கு இடையில் அக்கட்டடத்தைக் கட்டிமுடித்த பெருமை டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையே சாரும்.

எஸ்.பி.சந்தானராஜகோபால்
களப்பாள்

திரையுலகுக்கு ஒரு திருவிழா விழாவை நேரில் காண்பதுபோல் புகைப்படங்களைத் தந்தது குறித்து உங்களைப் பாராட்டுகிறோம். புதுமைகள் செய்த புரட்சியாளர் தியாகராயரின் அருமை பெருமைகளைத் தெரிந்து கொள்ள வழிகாட்டிய தமிழரசின் பணி தொடரட்டும்.

சு.மேரிகாந்தி,
புட்பவனம்

''இந்தியாவை வளர்ச்சியுறச் செய்வோம்'' என்னும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தியின் உரையைப் படிக்கப் படிக்கப் பரவசமூட்டியது. அடுத்து, ஒரு இந்திய மருத்துவரின் கண்டுபிடிப்பும் (அறிவியல் சாளரம்) அருமை.

—எச்.சுந்தரராஜன்
மன்னார்கோயில்

''தீண்டாமையை ஒழித்திடப் போராடி அவர்களுக்குச் சமுதாயத்தில் சம உரிமை அளிக்கப்பட வழிவகை செய்த சமுதாயச் சிற்பி டாக்டர் அம்பேத்கார் பற்றிய கட்டுரைகளைப் படித்தவுடன் என் கண்கள் பனித்தன.

எம்.எஃப்.ஷர்புதீன்,
திட்டச்சேரி.

1.5.85 இதழில் கவிஞர் சாமி. பழனியப்பன் எழுதிய 'மே நாள் வாழ்க' கவிதை, உழைப்பவர் உரிமையை உன்னதமாக எடுத்து விளம்பியது.

பெ.சு.தியாகராசன்,
வேலாயுதபுரம்.

16.5.85 இதழில் ரா.பொன்ராசனின் 'வாழ்க்கை இனிக்க' கவிதை நன்று.

வாசகர்களின் சில ஐயங்களைப் போக்கும் வண்ணம் 'கேள்வி-பதில்' பகுதி ஆரம்பிக்கப்பட்டால் வெகு அருமையாக இருக்கும் என்பது எனது எண்ணம்.

—எஸ்.பி.இளங்கோ,
கவுந்தப்பாடி.

பாரதி நூற்பாலை பற்றிச் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி எழுதிய வரிகள் இதயத்தை ஈர்த்தன; பாரதிக்குத் தமிழக அரசு வழங்கியுள்ள கௌரவம் நன்றியோடு நினைக்கக்கூடியது.

வி.ஆர்.பாலசுப்பிரமணியன்,
நரிக்கல்பட்டி.

வளரும் தமிழகம் பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தின் சுற்றுலாத் தலங்களையும் சிறு தொழில்களையும் குறிப்பிட்டதற்கு நன்றி.

செந்தூர் மணியன்.
திருச்செந்தூர்

## ரூ. 1 கோடி செலவில் நெசவாளர்களுக்கு வீடுகள்



பெரியார் மாவட்டம் சென்னிமலையில் ஏழை நெசவுத் தொழிலாளர்களுக்கு 1கோடியே 25 லட்ச ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டப்படுகிறது. இத் தகவலைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு மணிமாறன் தெரிவித்துள்ளார்.

சென்னிமலையில் 25 ஏக்கர் பரப்பில் 400 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

காங்கேயம், காளியூர் ஆகிய இடங்களில் 500 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக 33 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# மலைகளின் இளவரசி....



**ம**லைவாழ் இடங்களின் இளவரசி' என்றழைக்கப்படும் கொடைக்கானல் தரை மட்டத்திலிருந்து சுமார் 2,343 மீட்டர் உயரத்திலிருக்கிறது. இங்கு இந்தியாவிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் கோடைக்காலத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவார்கள். மக்களைமகிழ்விப்பதற்கு அரசு சார்பில் கோடை விழா நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 20.5.1985 அன்று நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கலையரங்கில் கோடை விழா தொடங்கியது.

விழாவிற்கு வந்திருந்தோரை மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு கி.இராசமாணிக்கம் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:

''கொடைக்கானல் வளர்ச்சிக்காக இரண்டு திட்டங்களை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளோம். அவைநிறைவேற்றப் பட்டவுடன் கொடை எழில்மிகு நகரமாக மிளிரும்''.

கொடைக்கானல் நகரியத் துணைத் தலைவர் திரு.பண்ணை சேதுராமன் அவர்கள் பேசுகையில், ''இந்நகரம் வளர்ச்சி பெறதுப்புரவு வசதி மற்றும் ஒளி விளக்கு போன்ற வசதிகளைச் செய்திட வேண்டும்'' என்றார்.

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு டி.முகம்மது சலீம் அவர்கள் பேசுகையில், ''இயற்கையின் சூழ்நிலை அழிந்துவிடாமல் இந்நகரைப் பாதுகாக்க வேண்டும்'' என்றார்.

தேனீ சட்டமன்ற உறுப்பினர் திரு சி.செயராமன் அவர்கள் பேசுகையில், ''தமிழகத்தின் ஸ்விட்சர்லாந்துஆக கொடைக்கானலை மாற்ற வேண்டும். கும்பக்கரையிலிருந்து கொடைக்கு இழுவை இரயிலும், பழனியிலிருந்து கொடைக்கும் இழுவை ரயிலும் விட வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

பெரியகுளம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு பி. செல்வேந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில். ''ஆண்டுக்கொரு முறை வருகிற கோடைவிழா வசந்த நாளாகும். மலையின் அரசியாகிய கொடையை அலங்காரம் செய்ய அரசைக்கேட்டுக்கொள்கிகிறேன். இந்நகரத்திற்கு வருகை

# வீட்டுச்சேவை மையம்

வளர்ந்து வரும் சென்னை நகரில் மின்சாரப் பணியாளர், மர வேலை செய்பவர், குழாய் பழுது பார்ப்பவர் போன்ற தொழில்களில் பயிற்சி பெற்றவர்கள் பெரிதும் தேவைப்படுகிறார்கள்.

வீடுகளிலுள்ள மின் விசிறி போன்ற மின் சாதனங்களைப் பழுது பார்க்க அல்லது சிறு தச்சு வேலை செய்ய அல்லது தண்ணீர்க்குழாய்களைப் பழுது பார்க்க இவர்கள் அடிக்கடி தேவைப்படுகின்றனர். ஆனால், தேவைப்படும் நேரங்களில் இவர்கள் உடன் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் குறைந்த நேர வேலைக்கு இவர்கள் அதிகத் தொகை கேட்கின்றனர். ஆகவே, இப்பிரச்சினையைத் தீர்க்க, தமிழக அரசு வீட்டுச் சேவை மையங்களை நிறுவியுள்ளது.

இம்மையங்கள் சென்னை நகரில் உள்ள முக்கியமான 50 இடங்களில் நிறுவப்பட உள்ளன. ஒவ்வொரு மையமும் சுமார் ரூ.20,000 செலவில் அரசால் தயார் செய்யப்படுகின்றது. ஒவ்வொரு மையத்திலும் ஒரு மின்சாரவேலை செய்பவர், ஒரு தச்சு வேலை செய்பவர், மற்றும் ஒரு குழாய் பழுது பார்ப்பவர் ஆகிய மூவர் உள்ளனர். இவர்கள் அரசுத் தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் அடையாள அட்டை அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் சென்னை நகர வாசிகள் அவர்கள் வீட்டுக்கு அருகாமையிலுள்ள வீட்டுச் சேவை மையத்தை அணுகி இப்பணியாளர்களின் சேவையைப் பெறலாம். இந்த மையங்களை அணுகும்போது குறிப்பிட்ட பணியாளர் இல்லாமலிருந்தால் அங்கு இதற்காக அச்சடித்து வைக்கப்பட்டுள்ள சிறு படிவங்களைப் பூர்த்தி செய்து கொடுத்து விட்டால் இப்பணியாளர்கள் விரைவில், தேவைப்படும் இடத்திற்கு வந்து சேருவார்கள்.

தமிழக அரசால் செய்யப்பட்டுள்ள இந்த வசதி சென்னை நகர வாசிகளுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்குமென்று கருதப்படுகிறது.

பெசன்ட் நகர், தியாகராய நகர், டவுட்டன், அறிஞர் அண்ணா நகர் (கிழக்கு) மற்றும் அறிஞர் அண்ணா நகர் (மேற்கு) ஆகிய இடங்களில் முதல்படியாக ஐந்து வீட்டுச்

சென்னை பெசன்ட் நகரில் ''வீட்டுச் சேவை மையத்தை'' மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 3.6.85 அன்று துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''தொழில் நுட்ப அறிவு தான் இன்று நாட்டிற்குத் தேவை. இதன் மூலமே இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள முடியும். பெண்களுக்கெனத் தனியாகவே தொழிற்பேட்டை துவக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு உள்ளது. இவர்களுக்கும் கடனுதவி தர அரசு திட்டமிட்டுள்ளது. வீட்டுச் சேவை மையங்களின் மூலம் பொதுமக்களுக்குச் சேவை செய்ய வந்திருப்பவர்கள் மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நாணயத்துடன் பணியாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் மையத்தில் பணிபுரிவோருக்குத் தேவையான கருவிகளை வழங்கிப் பேசுகையில், ''இந்தப்பணியில் ஈடுபட்டிருப்போருக்கு மக்களின் நல்லெண்ணம்தான் மூலதனம்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு வேலை வாய்ப்பு மற்றும் மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்—

ஒவ்வொரு மையமும் 20 ஆயிரம் ரூபாய் செலவில் அரசால் தயார் செய்யப்படுவதாகவும், இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மின்சார வேலை செய்பவர், ஒரு தச்சுவேலை செய்பவர், ஒரு குழாய் பழுது பார்ப்பவர் ஆகிய மூவர் இருப்பர் என்றும், வீடுகளில் மின்விசிறி போன்ற மின்சாதனங்கள் பழுது பார்க்க, சிறு தச்சுவேலை செய்ய, தண்ணீர்க் குழாய்களைப் பழுது பார்க்க இவைபோன்ற காரியங்களுக்காகப் பொதுமக்கள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றும் கூறினார்.

வேலைவாய்ப்புப் பணிகள் துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு. சி.செல்லப்பன் இ.ஆ.ப. வரவேற்றுப் பேசுகையில், இத்தகைய மையங்கள் சென்னையில் கூடியவரை ஊனமுற்றோரால் நடத்தப்படும் தொலைபேசி ''பூத்துகளுக்கு'' அருகே அமைக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அந்தந்த வேலைகளுக்கேற்ப மையத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு நியாயமான ஊதியத்தை இவர்களது சேவையைப் பயன்படுத்திக் கொள்வோர் தரவேண்டும் என்றும் சேவை செய்யச் செல்லும்மையத்துப் பணியாளர்களும் நியாயமான ஊதியத்தையே கேட்டுப் பெற வேண்டும் என்றும் விழாவில் பேசிய மாநகராட்சி ஆணையர் திரு மலைச்சாமி, சட்டமன்ற உறுப்பினர் வளர்மதி ஆகியோர் குறிப்பிட்டனர்.

மையத்தைச் சேர்ந்த 15 பேருக்குக் கருவிகள் வாங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ரூ. 50 ஆயிரம் அளித்துள்ளது. இந்த வங்கியின் உதவிப் பொதுமேலாளர் திருகே.நாராயணன் விழாவில் பேசுகையில் சுயவேலைவாய்ப்பிற்காக வங்கிகள் உதவ எப்பொழுதும் தயார் என்று குறிப்பிட்டார். கருவிகளுடன் இந்தப் பணியாளர்களுக்கு மிதிவண்டியும் வழங்கப்பட்டது. வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திரு சீனிவாசன், நன்றி கூறினார்.

**அறிவியல் சாளரம்:**

# மனிதர்கள் படைத்த 'மனிதர்கள்'



தீச்சுடர்கள் பறந்து வெப்பம் கக்கிப் புகை எழுப்பும் அந்தத் தொழிற்சாலைப் பகுதிகளில் நெருப்புக்கு நெருக்கமாகப் பணியாற்றுகிறார்கள் ஏறத்தாழ 100 பேர் அவர்களும் மனிதர்கள்தான். ஆனால், சாதாரண மனிதர்கள் தாக்குப் பிடிக்க முடியாத கடினமான பணிகளை வெகு எளிதில் அதி விரைவில் முடித்துவிடும் ஆற்றல் பெற்ற அவர்கள் மனிதர்களால் படைக்கப்பட்ட மாமனிதர்கள். பொசுக்கும் சூட்டையும் உறைய வைக்கும் பனியையும் பொருட்படுத்தாமல் பணியாற்றும் அவர்களே ''ரோபோ'' என்று அழைக்கப்படும் இயந்திர மனிதர்கள்.

ஒரு காலத்தில் விஞ்ஞானக் கதாசிரியர்களின் கற்பனைகளிலும் அதற்கும் முன்னால் புராணங்களிலும் உலாவிய இந்தக் கற்பனை இயந்திர மனிதர்கள் இப்பொழுது அமெரிக்காவிலும் வேறு சில மேலை நாடுகளிலும் பல்வேறு தொழிலகங்களில் பணியாற்றுகிறார்கள். கம்ப்யூட்டரே இவர்களது மூளை. சாதாரண மனிதர்களால் செய்ய இயலாதனவற்றை இவர்கள் மிக எளிதாகச் செய்யும் வல்லமை பெற்றவர்கள்!

முதல் இயந்திர மனிதன் பிறந்தது 1968ல். தாயகம் அமெரிக்கா. கலிஃபோர்னியா மாநிலத்தில் ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக் கழகம் உருவாக்கிய அந்த முதல் இயந்திர மனிதனின் பெயர் ''சிக்கி''. அவன் எட்ட இருந்து ''ரிமோட் கண்ட்ரோல்'' என்ற கருவியின் மூலம் இயக்கினார்கள். அடுத்த தலைமுறை இயந்திர மனிதனைப் படைத்த விஞ்ஞானிகள் கம்ப்யூட்டர் மூளையை அவனுக்குள்ளேயே பொதிந்து வைத்து, குறிப்பிட்ட வேலைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து செய்யும்படி அமைத்தனர். ஆனால் கடந்த 16 ஆண்டுகளில் இயந்திர மனிதன் பெற்றுள்ள வளர்ச்சி மகத்தானது.

சாவி கொடுக்கப்பட்ட கடிகாரங்கள் போல் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும் இந்த இயந்திர மனிதர்களால் திடீரென்று ஏற்படும் சிக்கல்களைச் சமாளிக்க முடியாது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும் முடியாது. இனி அடுத்த இரண்டு ஆண்டுகளில் இயந்திர மனிதர்களிடம் இப்படிச் செய், அப்படிச் செய் என்று உத்தரவுகள் பிறப்பிக்க முடியும். நம்மிடம் பதிலுக்குப் பேச முடியா விட்டாலும் இயந்திர மனிதர்கள் பிறர் சொல்வதைக் கேட்டு அதன்படிச் செயலாற்றுவர் என்கிறார் பீட்டர் பிளேக் என்ற விஞ்ஞானி. எலக்ட்ரானிக் கண்கள், காதுகள் இயந்திர மனிதர்களுக்கு உண்டு. இத்துடன் தொட்டு உணரும் திறனும் இவர்களுக்கு இப்பொழுது கிடைத்திருக்கிறது!

தொழில் துறையில்தான் இயந்திர மனிதர்கள் பணிபுரிவர் என்றில்லை. மருத்துவத்துறையிலும் அவர்கள் மகத்தான பணி புரிய வாய்ப்புகள் உள்ளன. முப்பரிமான எக்ஸ்ரே எடுக்கும் 'கேட்-ஸ்கான்' என்ற கருவியுடன் இணைக்கப்பட்டால் மூளையில் நுணுக்கமான அறுவைச் சிகிச்சைக்கும் இயந்திர மனிதர்கள் உதவ முடியும். இந்த இடத்தில் 'ஆபரேஷன்' செய்ய வேண்டும் என்பதை இயந்திர மனிதனால் கோடிட்டுக் காட்ட முடியும். இதனால் டாக்டர்கள் மூளையில் அதிக அளவு துளையிட வேண்டாம்.

இவ்வளவு பயன் உடைய இயந்திர மனிதர்கள் ஆண்டாண்டுதோறும் தம் பணித் திறத்தால் வளர்ந்து வரும்படிப் படைக்கப்படுவதால் சில தொழிலகங்கள் சற்றே பொறுத்துப் பார்த்து அதிகச் செயலாக்கம் உள்ள இயந்திர மனிதர்களை விலைக்கு வாங்கக் காத்திருக்கின்றன.

''ரோபாடிக்ஸ்'' என்ற பெயருடன் இயந்திர மனித அறிவியல் ஒரு தனித்துறையாகவே வளர்ந்து வருகிறது. அண்மை





தமிழ்ப் பத்திரிகைத் துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காக, 'தமிழரசு' நிருபர் திரு பி.வி. கிரி அவர்களுக்கு 1984-ஆம் ஆண்டுக்கான வி. ஜி. பி. தமிழ் இலக்கியச் சிறப்பு விருதினை, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 11.5.85 அன்று வழங்கினார். அருகில் பன்னீர்தாஸ் சகோதரர்கள்.

ஆண்டுகளில் இயந்திர மனிதர்கள் விற்பனை 50 சதவிதம் கூடியுள்ளது என்று அமெரிக்க இயந்திர மனிதர்கள் தொழில் துறைக் கழக உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள்.

1983ல் 194.4 மில்லியன் டாலர் மதிப்புள்ள 'ரோபா'க்கள் அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ஆனால் 1984 முற்பகுதியில் மட்டும் 148 மில்லியன் டாலர் மதிப்புள்ள 'ரோபா'க்கள் ஏற்றுமதியாயின. 1984ன் ஒட்டு மொத்தமான ஏற்றுமதி 300 மில்லியன் டாலருக்கும் அதிகமாக இருந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

விலை 20 சதவிகிதம் இறங்கி இருக்கிறது-அதாவது ஒரு இயந்திர மனிதனின் விலை 74,000 டாலரிலிருந்து 59,200 டாலராகக் குறைந்திருக்கிறது! விலை 20 சதவிகிதம் குறைந்துள்ள அதே நேரத்தில் இவற்றின் செயல்திறனோ 20 சதவிகிதம் கூடியுள்ளது. இவை தொழிலகங்களின் உற்பத்தித் திறனையும் 20 முதல் 30சதவிகிதம் கூடுதல் ஆக்கியுள்ளன என்று அமெரிக்க இயந்திர மனிதர்கள் தயாரிப்பாளர்கள் கழகத் தலைவர் வால்ட்டர் வெய்யில் கூறியிருக்கிறார்.

மோட்டார் வாகனத் தொழிற்சாலைகள், வீட்டு உபயோகச் சாதனத் தயாரிப்புக்கூடங்கள் விண்வெளியியல், மின்னணுவியல் தொழிலகங்கள் ஆகிய இடங்களில் இயந்திர மனிதர்கள் பணிபுரிகிறார்கள்.

அமெரிக்காவில் மட்டும் தற்பொழுது 13,000 இயந்திர மனிதர்கள் பல்வேறு தொழிலகங்களில் பணியாற்றி வருகிறார்கள். ஜப்பானில் இந்த எண்ணிக்கை 50,000, இயந்திர மனிதர்கள் உருவாக்கும் தொழில் நுட்பத் திறனில் அமெரிக்கா முன்னணியில் இருந்தாலும் இயந்திர மனிதர்களைப் பலவகைகளில் திறம்படப் பணிபுரிய வைப்பதில் ஜப்பான் சிறந்து விளங்குகிறது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் அங்கே இப்பொழுதுள்ள அதிக ஆதரவு தரப்படுகிறது.

அமெரிக்கத் தயாரிப்பாளர்கள் குறைந்த வட்டிக்குக் கடன் வசதி, வரி செலுத்துவதில் கடன் வசதி, ஏற்றுமதிக்கு ஊக்கத் தொகை, தொழில் நுட்பத்தைக் கல்விக் கூடங்கள் வாயிலாக வளர்ப்பதற்கும் இயந்திர மனிதர்களை வெவ்வேறு துறைகளில் இயங்க வைக்கும் ஆய்வு முனைவுகளுக்கும் அமெரிக்க அரசின் ஆதரவை நாடியுள்ளனர்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

தரும் ஏழை, நடுத்தர மக்கள் தங்குவதற்குக் குறைந்தவாடகை யில் விடுதிகள் கட்ட அரசைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருஇரா.வரதராஜுலு இ.ஆ.ப. அவர்கள் தலைமை உரையாற்றிப் பேசுகையில், ''கொடை வளர்ச்சிக்காக மேற்கு தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ரூ.1849 இலட்சத்தில் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் இந்நகரம் தன்னிறைவு பெறும். குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.30 இலட்சம் செலவில் பாம்பார் நீர்த்தேக்கப் பணி நடைபெற்று வருகிறது.'' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் கோடை விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:





''இந்த ஆண்டு கோடை விழா சிறந்த முறையில் அமைந்துள்ளது. கொடைக்கானல் வளர்ச்சி பெறவேண்டுமென்று பல கோரிக்கைகள் வருகிறது. அதைப் படிப்படியாகப் புரட்சித் தலைவர் அரசு செய்து வருகிறது. குறிப்பாக மலைவாழ் மக்களுக்குப் பல சலுகைகளை வழங்கிச் செயல்பட்டு வருகிறது.

''இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மாமல்லபுரம் வளர்ச்சி பெற மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் இன்று ரூ. 19 கோடி திட்டத்தில் கொடைக்கானல் வளர்ச்சி பெற மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால்இத்திட்டத்தைப் பொது நிறுவனங்களிடம் ஒப்படைத்து அறிவியல்அணுகுமுறையில் நிறைவேற்றலாமா என்று சுற்றுலாத் துறை ஆலோசித்து வருகிறது. இத்திட்டம் ஏறத்தாழ 5 ஆண்டுகளில் முடிவுபெற்றால் கொடைக்கானல் உலகப் புகழ் பெறும்.

''புதிய அண்ணா மாவட்டம் அமைக்கப்பெற்றபிறகுகொடைக்கானல் ரெவின்யூ டிவிஷனுக்கு ஐ.ஏ.எஸ்., அந்தஸ்தில் அலுவலர் நியமிக்கப்படுவார்.

''தமிழகத்தில்தான் மாவட்டங்கள் பெரிதாக உள்ளன. உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் மாவட்டங்கள் மிகச் சிறிய அளவில் உள்ளன. மாவட்டங்கள் பிரிப்பது நிர்வாகம் செம்மையாக நடைபெறவும், வளர்ச்சி பெறவும்தான்.

''கொடைக் கானலைப் பொறுத்தவரையில் சில விதிமுறைகளைக் கடுமையாக அமல்படுத்த அரசு திட்டம் தீட்டி வருகிறது. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடம் தனியார் விடுதி நடத்துவோர் அதிக அளவில் கட்டணம் வசூலிக்கிறார்கள். அதைப் போக்கிட சுற்றுலாத் துறை சார்பிலும், குறிஞ்சி ஆண்டவர் கோவில் சார்பிலும் தலா 100 பேர் தங்கக்கூடிய வகையில் விடுதிகள் விரைவில் கட்டப்படும். இதனால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பயனடைவார்கள்.

''மக்களைப் பாதிக்காத வகையில் ஏரியைச் சுற்றி கட்டடங்கள் அமைய வேண்டும். இதற்குரிய நடவடிக்கையை நகரியம் மேற்கொள்ளவேண்டும். கொடைக்கானலில் தொழிற்சாலைகள் அமைவது தவிர்க்கப்படவேண்டும்.

''இந்தியாவிலேயே அதிக அளவிலான சுற்றுலாத் தலங்களைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ் நாடுதான். மைய அரசிற்கு சுற்றுலாத்துறை மூலம் ஆண்டிற்கு ரூ.1,600 கோடி வரை அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இந்தியாவிலேயே தமிழகம்தான் சுற்றுலா வளர்ச்சி பற்றி திட்டம் தீட்டி மைய அரசுக்குக் கொடுத்துள்ளது.

''இருபது அம்சத் திட்டமானாலும், ஊரக வளர்ச்சித் திட்டமானாலும் தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது. இந்த அரசு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும்,வளர்ச்சித் திட்டங்களையும், ரயில் ஓடும் இரண்டு தண்டவாளங்களைப் போல் கருதிச் செயல்பட்டு வருகிறது.

''மாமல்லபுரத்தில் வெளிநாட்டில் வாழும் தமிழர்களும் சுற்றுலாத்துறையினரும் சேர்ந்து ரூ. 26 கோடி திட்டத்தில் ஒரு திட்டத்தை உருவாக்கி அமலாக்க உள்ளார்கள்.

''மாண்புமிகு கர்நாடக முதல்வர் ஹெக்டே அவர்களைச் சந்தித்துப் பேசினேன். அவர்களிடம் பேசும்போது, 'இங்கு அமைந்துள்ள கோல்ப் (Golf) மைதானம் சிறந்ததாக உள்ளது. உலகப் போட்டியை இங்கு நடத்துங்கள், அதன் மூலம் உலகமக்கள் கொடைக்கானலைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்'' என்றார். கோல்ப் அமைப்பாளர்கள் அரசுக்குத் தங்களுடைய தேவையைப் பற்றித் தெரிவித்தால் உதவி செய்யும்.

''எதிர்காலச் சிந்தனை அடிப்படையிலும் இயற்கை அழியாமலும் திட்டம் தீட்டி கொடைக்கானல் அழகு படுத்தப்பட்டு அடுத்த கோடை விழா அண்ணா மாவட்டத்தில் நடைபெறும்''.

விழா இறுதியில் சுற்றுலா அலுவலர் (பொறுப்பு) திரு தா.பாலபாரதி நன்றி கூறினார்.





குமாரி மஞ்சு பார்கவி நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழா ஆரம்பிப்பதற்கு முன்னர் அரசு நாதசுரக் கலைஞர்கள் திரு எம்.பி.என். சேதுராமன், திரு எம்.பி.என். பொன்னுசாமி ஆகியோரின் நாயன இசை நடைபெற்றது.

அ. மருதவிநாயகம்

யிருக்கிறேன். இப்படி எல்லோரும் முன்வர வேண்டும்.

**திரு. ந. நல்லுசாமி**
மாண்புமிகு வீட்டுவசதித்துறை
அமைச்சர்.

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படத்தை இங்கே திறந்து வைத்ததில் நான் மிகவும் பெருமை கொள்கிறேன். இப்படிப் பட்ட அறிஞர்களுக்கு விழா எடுப்பதாலேயே-விழா நடத்தும் அரசு இது என்று சிலர் கேலி பேசுகிறார்கள். ஆம், விழா நடத்தும் அரசு தான் இது; அதனால்தான் விழாத அரசாக இருக்கிறது. இந்த அரசுதான் டாக்டர் அம்பேத்காரின் நூறாவது பிறந்தநாள் விழாவையும் நான்காவது முறையாக ஆட்சிக்கட்டிலில் ஏறி எல்லோரும் வியக்கும்படி கொண்டாடவிருக்கிறது. இணையற்ற தலைவர்களின் லட்சியங்களை இன்றைய சமுதாயம் ஏற்றாகவேண்டும் என்கிற குறிக்கோளில்தான் இப்படிப் பட்ட விழாக்கள் நடத்தப்படுகின்றன.

டாக்டர் அம்பேத்கார் பெயராலே இப்போது இயக்கம் நடத்துகிறவர்களைவிட 42 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நாட்டில் அம்பேத்காரின் புகழ்பரப்பிய தொண்டன் நான். ஆனால் அதைச் சொல்லி அரசியல் லாபம் பெற முனைபவன் அல்ல.

அவர் பெயரால் இயக்கம் நடத்தாவிட்டாலும் நாங்கள் தான் -மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களின் கீழான இந்த அரசுதான் ஆதிதிராவிட மக்கள் மேன்மைக்காக ஒரு ஐந்ததாண்டுத் திட்டத்தையே அறிவித்திருக்கிறது.

டாக்டர் அம்பேத்கார் பெயரால் தனி மாவட்டம் அமைக்கவேண்டும், அதற்காகப் போராடி தீக்குளிக்கவும் தயார் என்றெல்லாம் இங்கே பேசினார்கள். உயிர்த்தியாகம் செய்ய இளைஞர்களைத் தூண்டிவிட்டு, அரசியல் ஆதாயம் தேட முனைவது அறிவுடைமையாகாது. வக்கீலுக்குப் படிக்கப்போன காந்தியடிகளுக்குத் தேசப்பற்றை-சுதந்திர தாகத்தை உண்டாக்கி, இந்தியாவுக்குத் திரும்பச் செய்த - தமிழகத்தில் பிறந்த தில்லையாடி வள்ளி பெயரால் மாவட்டம் அமைப்பதா? மராட்டிய மாநிலத்தில் பிறந்த டாக்டர் அம்பேத்காருக்குத் தமிழகத்திலே மாவட்டம் அமைப்பதா? நீங்களே சிந்தியுங்கள். ஓட்டையை அடைப்பதென்றால் முதலில் அது எங்கேயிருக்கிறதென்று கண்டு பிடியுங்கள்; நல்ல கப்பலை ஓட்டையாக்க முயலாதீர்கள். இளைய தலைமுறையினரைத் தூண்டிவிட்டு அவர்களைப் பலிகொடுக்கிற சண்டாளத் தனத்தை யாரும் செய்யாதீர்கள்.

**திரு. இராம. வீரப்பன்**
மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை
அமைச்சர்.

உரைத்தொகுப்பு: **இல. இராசேந்திரன்**




**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆனி 2
மலர் : 15 இதழ் : 24
16-6-1985

5354

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# திருச்சியில்
# அம்பேத்கார் பிறந்தநாள் விழா

**டாக்டர் அம்பேத்கார் 95-வது பிறந்த நாள் விழா திருச்சிராப்பள்ளியில் (29.5.85) நடைபெற்றது. தியாகராஜ பாகவதர் மன்றத்தில் நடந்த அவ்விழாவிற்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. அ. அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ந. நல்லுசாமி அவர்களும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டனர். அதில் பங்கேற்றோர் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம் வரிசையுற இங்கே தொகுத்தளிக்கப்படுகிறது:**

டாக்டர் அம்பேத்கார் போன்ற மேதைகளின் அறிவை, வாழ்ந்த வாழ்வை, பெற்ற பெருமையை எடுத்துச் சொல்லுவதன் மூலம் இன்றைய இளைஞர்கள் ஒளிமயமான எதிர்காலம் காண வாய்ப்பேற்படும். இந்த வகையிலேயே தமிழக அரசு இப்படிப்பட்ட பேரறிவாளர்களுக்கு விழா எடுத்து வருகிறது.

**—திரு. நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி மக்கள்தொடர்புத்துறை

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டுமல்ல; ஒடுக்கப்பட்ட - பின்தங்கிய -நசுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகவும், பெண்கள் எழுச்சி பெறவும் கூட அயராது பாடுபட்டவர்தான் டாக்டர் அம்பேத்கார். அவரது அன்றைய கனவுகளை-எண்ணத்தை ஈடேற்றும் வகையிலேயே இன்றைய தமிழக அரசு அரிய பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

**—திரு. வி. விஸ்வநாதன் இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சி

தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று தலை நிமிர்ந்து நடக்க டாக்டர் அம்பேத்கார் பிறந்தது தான் காரணம். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் பீமன்; ஆனால் அவரோ தனது ஆசிரியர் பெயரான அம்பேத்கார் என்ற பெயரையும் தன் பெயரோடு இணைத்துக்கொண்டார். அந்தப் பெயரே நிலைத்தது.

**—செல்வி கங்கா.**

டாக்டர் அம்பேத்கார் போல எங்கள் சமூகத்தில் வேறொருவர் பிறந்ததுமில்லை; பிறக்கப்போவதுமில்லை. அவர் ஒரு தனி மனிதரில்லை- ஒரு சகாப்தம்-விடிவெள்ளி. பல கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பில் அவருக்கு விழா வெடுக்கும் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

**திரு. தமிழரசன் எம்.எல் ஏ.,**
பேரணாம்பட்டுத் தொகுதி.

நத்தையில் முத்தாய்ப் பிறந்தவர் டாக்டர் அம்பேத்கார். ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை; அதைப் போல, யார் எப்படி மறைக்க முயற்சி செய்தாலும் அம்பேத்கார் புகழ் மறையப் போவதில்லை! பள்ளி வாசலை மட்டுமே பார்த்திருந்த தாழ்த்தப்பட்ட இனத்தைப் பள்ளிக்கூட வாசலைப் பார்க்க வைத்தவர் அவர்!

**—சிறுமி சாரமணி**



சென்னை தலைநகராக இருந்தபோதிலும், தமிழகத்தின் மையப்பகுதி திருச்சிதான் என்று அன்றே சொன்னார் டாக்டர் அம்பேத்கார். அந்தக் காரணத்தாலேதான், திருச்சியைத் தலைநகராக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களும் கூறினார்கள். டாக்டர் அம்பேத்கார் எழுதிய விதிகளையெல்லாம் அப்படியே தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகளாக வழங்கி வரும் தமிழ்நாடு அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**திரு. தங்கவேல், எம். எல்.ஏ.,**
வால்பாறைத் தொகுதி.

மெத்தப் படித்தவர், மேனாடு சென்றவர், மேலான பணிகளிலெல்லாம் ஈடுபட்டவர் என்பதனால் டாக்டர் அம்பேத்காருக்குப் பெருமை இல்லை; தன்னை ஏசியவர்கள், தனக்கு இன்னல் கொடுத்தவர்கள் பற்றியெல்லாம் ஒரு சுடுசொல் சொல்லாத சிறந்த மனிதாபிமானி அவர். அதனால்தான், நரேந்திரரை விவேகானந்தர் எனப் பாராட்டுவதைப் போல, ஈ.வெ.ராமசாமியைப் பெரியார் எனப் பாராட்டுவதைப் போல, மோகன் தாசைக் காந்தி என்று பாராட்டுவதைப் போல பீமாராவான அவர் அம்பேத்கார் என்ற அளவிலேயே பெருமையாகப் பேசப்படுகிறார்!

**—பேராசிரியர் அ. வெ. இராசகோபால்**

பேரறிஞர் அண்ணா அவர்களும் பிரிவினை கோரினார், டாக்டர் அம்பேத்காரும் பிரிவினை கோரினார். பிறகு இருவருமே கைவிட்டு விட்டனர். அண்ணாவைப் புரிந்து கொண்ட நான், டாக்டர் அம்பேத்காரையும் அறிந்துகொண்டவன். தமிழகத்தின் ஞானத் தலைவன் அண்ணா என்றால், இந்தியாவின் ஞானத் தலைவன் அம்பேத்கார்!

**—திரு. எஸ். தங்கராசு எம். பி.,**
பெரம்பலூர்.

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்று வள்ளுவர் கூறியதுபோலத் தோன்றிய டாக்டர் அம்பேத்கார், என்னென்ன கொள்கைகளை-குறிக்கோள்களை நிறைவேற்றப் பாடுபட்டாரோ அதையெல்லாம் மக்கள் நெஞ்சிலே நிலைநிறுத்த இந்த அரசு பாடுபட்டு வருகிறது. உலக வரலாற்றிலே இடம்பெறும் அளவிற்கு வாழ்ந்த, வளர்ந்த, பாடுபட்ட அவர், தனிப்பட்ட சமூகத்திற்கு மட்டுமே சொந்தக்காரராக இல்லை; உலகிற்கே சொந்தக்காரராக உயர்ந்தார்!

**திருமதி கோமதி சீனிவாசன்**
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

டாக்டர் அம்பேத்காரின் பிறந்தநாள் விழா, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் தமிழகத்திலே சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சென்னையில் கொண்டாடப்பட்டு வந்த இவ்விழாவை, அப்படி நடத்துவது தலைநகர மக்களோடு முடிந்துவிடும் என்பதால் மாவட்டத் தலைநகரில் நடத்தப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொண்டேன். இதற்கு அனுமதியளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சருக்கும் திருச்சி மாவட்ட மக்கள் சார்பில் பெரிதும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. அ. அருணாசலம்**
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

பலத்த எதிர்ப்பிருந்தபோதிலும், டாக்டர் அம்பேத்கார் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர் கருத்துக்களைப் புத்தகமாக வெளியிட்ட பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு; அதனால், பெரியார் அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழ்ந்த திருச்சி மாநகரில் இவ்விழா நடத்தப்படுவது மிகவும் பொருத்தமுடையதாகும். பெரியார் வழிவந்த பேரறிஞர் அண்ணா வழி நடக்கும் இந்த அரசுதான் டாக்டர் அம்பேத்கார் படத்தைச் சட்டமன்றத்திலே வைத்துப் பெருமைப்படுத்தியது. அமெரிக்க நாட்டிலே கூட கறுப்பரை வேலைக்கமர்த்தும் நிலையிருக்கையில் - இங்கே நம்மில் பலர் தாழ்த்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்புத்தர யோசிக்கும் நிலை இருப்பது வருந்தத்தக்கது. நான் இந்தச் சமூகத்தைச் சேர்ந்த மூவரை என்னிடம் வேலைக்கமர்த்தி

[illegible]

திருச்சிராப்பள்ளியில் [illegible] நடைபெற்ற டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள் விழாவில் சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்கு இலவசத் தொழிற்கருவிகள், வீட்டு மனைப் பட்டா, வீடு கட்ட நிதியுதவி ஆகியவை வழங்கப்பட்டன.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வழங்கிய அவை பற்றிய விவரம் வருமாறு.

சமூகநலத்துறை மூலம் அளிக்கப்பட்ட தையல் இயந்திரங்கள் — 48

[illegible] அளிக்கப்பட்ட [illegible] — 10

[illegible]

இலங்கைக்கு இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள திரு ஏ. என். தீட்சித், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி ஆர் அவர்களை 26·5·85 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.





சென்னை பெசன்ட் நகர் வீட்டு வசதி வாரிய அங்காடி வளாகத்தில் 3.6.85 அன்று வீட்டுச் சேவை மையத்தை, மாண்புமிகு வேலை வாய்ப்பு மற்றும் மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு டி. இராமசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.



திருச்சிராப்பள்ளியில் (29.5.85) நடைபெற்ற டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் நலிந்தோருக்குத் தொழிற் கருவிகள் வழங்கினார். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு ந. நல்லுசாமி அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்களும் உடன் உள்ளனர்.

"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது

